T.3983

சேக்கிழார் அடிச்சுவட்டில்

சேக்கிழார் அடிச்சுவட்டில்

அறுபத்துமூவர் வரலாறும் யாத்திரையும்

OFFICE OF THE CURATOR
27 மே. 1975
GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY
T. 3983

சோ. சிவபாத சுந்தரம்

Acc. 21393

வானதி பதிப்பகம்
தி.நகர் · சென்னை-17

First edition, January, 1978

IN THE STEPS OF SEKKIZHAR
A Pilgrim's Progress
By
S. SIVAPATHA SUNDARAM

© Author

விலை ரூ. 25-00

VANATHI PATHIPPAKAM
10, Deenadayalu St.,
MADRAS — 600 017

Metropolitan Printers, Madras-600 002 — 1978

இந்நூல் கருவிலிருக்கும்போதே செவி மடுத்தும், பின்னர் கையெழுத்துப் பிரதியாக உருப்பெற்ற போது தமது திருக்கரங்களில் ஏற்றும் ஆசீர் வதித்து, நூல் அச்சாகி நிறைவு பெறும் சமயத் திலும் அதனை ஞாபகத்தில் வைத்திருந்து விசாரித்து, என்னையும் ஒரு பொருட்டாக ஆட்கொண்ட காஞ்சி முனிவர் ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள் பாத கமலங்களில் இந்நூலை சமர்ப்பிக்கின்றேன்.

Acc. 21393

பதிப்புரை

மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில், கௌதம புத்தர் அடிச்சுவட்டில் என்ற அற்புதமான பயண இலக்கியங்களைப் படைத்து வெற்றி கண்ட ஆசிரியர் சிவபாத சுந்தரம் இப்போது அவரது சாதனையின் சிகரமாக சேக்கிழார் அடிச்சுவட்டில் என்ற இந்த நூலைப் படைத் திருக்கிறார். பல ஆண்டுகள் சேகரித்த ஆராய்ச்சிக் குறிப்புக்களை வைத்துக்கொண்டு நூற்றுக் கணக்கான சிவஸ்தலங்களைத் தரிசித்து, நூற்றுக்கு மேற்பட்ட புகைப்படங்களைத் தாமே பிடித்து, மிக அருமையாக ஆக்கிய இந்த நூலை வானதி பதிப்பக வெளியீடாக வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம்.

இந்தத் தெய்வீக மணம் கமழும் நூலை வானதி பதிப்பக வெளியீடாக வெளியிட வேண்டுமென்று என்னைக்கேட்டுக் கொண்டு ஊக்கப்படுத்திய அறநெறிச் செல்வர் திரு. நா. மகாலிங்கம் அவர்களுக்கு எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கி றேன். தமிழ் மொழியிலும், சைவ இலக்கியத் திலும், சமய இயக்கங்களிலும் பேரார்வத் தோடு உழைத்து மற்றவர்களையும் ஊக்கு விக்கும் தொண்டில் படாடோபமின்றி ஈடுபாடு கொண்டவர் மகாலிங்கம் அவர்கள். அன்னூர் கனவில் உதயமாகி, சமய அறிவிலும், இலக்கிய அறிவிலும், ஆராய்ச்சித் துறையிலும் யாவராலும் மதிக்கப்படும் ஆசிரியர் திரு. சோ. சிவபாத சுந்தரத்தின் கைவண்ணமாக வெளி வரும் இவ்வரிய நூலை தமிழ் மக்கள்எல்லோருமே படித்துச் சுவைப்பார்கள், போற்றுவார்கள் என்ற முழு நம்பிக்கையுடன் இதனை வெளியிட்டு மகிழ்கிறேன்.

ஏ. திருநாவுக்கரசு
வானதி பதிப்பகம்

அணிந்துரை

மதுரைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர்

டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் வழங்கியது

திருவாளர் சிவபாதசுந்தரம், லண்டன்மாநகர பி. பி. சி வானொலியில் பயிற்சி பெற்றவர்; அதனால் மக்கள் மனத்தைக் கவரும் வகையில் பேசவும் எழுதவும் ஆற்றல் நிறைந்தவர். விடாத உழைப்பாளி. பழைய ஆவணக் களரிகளிலும் (archives), நூல் நிலையங்களிலும் சென்று ஆராய்ந்து உண்மை காண்பதில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர். தமிழன்னைமேல் உள்ள அன்பால் தமிழை இந்த நாளைக்கு ஏற்ப வளர்க்கும் ஆர்வமும், திறமையும் படைத்தவர். இவற்றின் பயனாக இவர் எழுதிய ''மாணிக்க வாசகர் அடிச்சுவட்டில்'' என்ற அழகிய நூலைக் கண்டோம். அதனிலும் விரிந்த நிலையில் ''சேக்கிழார் அடிச்சுவட்டில்'' என்ற நூலை நண்பர் இப்பொழுது எழுதியுள்ளார்.

ஓட்டக்கூத்தரின் நடையின் பயனாக அவரையும் அறியாமல், தமிழை மேலுலகம் அனுப்பிவிடக் கூடிய நிலை ஏற்பட்டு வரும்போது எளிய, இனிய, ஆழமான செந்தமிழ் நடையைப் பரப்பித் தமிழை இந்த உலகிலேயே காத்த பெருமை சேக்கிழாருக்கு உண்டு. அவர் எழுதிய பெரியபுராணம் தமிழ்த் தேசிய இலக்கியம். தமிழ் நாட்டில் பல மூலை முடுக்குகளில் பிறந்த தமிழர்கள் எந்த நிலையில் இருந்தாலும், தம் குறிக் கோளுக்காக வாழ்வது, அல்லது சாவது என்ற கடைப்பிடியோடு வாழ வருவார்களானால், அவர்கள் உயர முடியும் என்பதை நிலை நாட்டுகிற அவர்களுடைய வாழ்க்கைகளைச் சுந்தரர் கண்டார்; தம் வாழ்க்கைப் போக்கையே உருவாக்கும் வகையில் அவர் கண்டு பாடினார். ஆனால் அதன் உள் ஆழம் விளங்காமலே இருந்தது. அது முழுமையும் விளங்க எழுந்த ஒரு பெருங்காப்பியமே சேக்கிழார் எழுதிய பெரியபுராணம். தமிழர்கள் எவரேயானாலும் அவர்களுக்கு ஊக்கம் தரும் நற்செய்தியல்லவா இது?

சேக்கிழார் எழுதிய புராணத்தை நாம் படிக்கும்போது அவர் கூறும் இடங்களையெல்லாம் நேரில் கண்டு அங்கு வாழ்பவரோடும் பழகிய பின், தாம் எழுத வந்த அடியவர்களின் நிலையை ஒருவாறு உய்த்துணர்ந்து அகக்கண்ணுற் கண்டு, கவித்திறத்தால் நமக்கும் விளங்கும்படி எழுதியுள்ளார் என்பது தெளிவாகிறது.

இந்த உண்மையை அறிந்துணர வேண்டும். இதற்கு அவர் சென்ற அடிச்சுவட்டைப் பின்பற்றி அடியார்கள் ஊர்களுக் கெல்லாம் போகவேண்டும். அடியார்கள் வரலாறு நம் மனத்தில் தேங்கி நின்று இன்பம் தரும் நிலையில் நாம் போகவேண்டும். அடியார்களின் வாழ்க்கைக் காட்சியால் சுந்தரரது வாழ்வு உருவானதை சுந்தரர் சென்ற அடிச் சுவட்டிலும் சென்று காண வேண்டும். அப்படித்தான் சேக்கிழார் கண்டு பாடினார்.

அக்காட்சியை நாம் காண்பதற்கு எத்தனை நாளாகும், எவ்வளவு அருமை, எவ்வளவு பணச்செலவு. நம்மால் முடியுமா? ஆனால் அஞ்சவேண்டாம். நம் அன்பர் சிவபாதசுந்தரம் நமக்கு எல்லாருக்குமாக இவர்கள் அடிச்சுவட்டிலெல்லாம் சென்று, சேக்கிழார் கண்டு காட்டிய காட்சியைக் கண்டார். அடியவர்கள் வாழ்வு சுந்தரர் வாழ்வை உருவாக்கிய நுட்பத்தை, சுந்தரர் சென்ற வழியெல்லாம் சென்று கண்டும், அடியவர்கள் வழியெல் லாம் சென்று கண்டும், தெள்ளத்தெளிய விளக்கியுள்ளார். இந்த நூல் பெரியபுராணத்துக்கே ஒரு சிறந்த உரை விளக்கம். ''சுந்தரர் வாழ்வின் திறவுகோல்''. ''அடியவர்களின் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடி''. தமிழ் நாட்டையும் தமிழ்க் கோயில்களையும் கொண்டு சென்று காட்டும் வழிகாட்டி. தமிழ் வரலாற்றையும், தமிழ் இலக்கிய வரலாற்றையும், தமிழ்க்கலை களின் வரலாற்றையும் கூறிவரும் பிரமாண்ட புராணம்.

இது ஓர் சிறந்த பயண இலக்கியம்; தூய தெய்வ மணம் கமழும் பயண இலக்கியம். இந்தப் பயணத்தில் தமிழ் நாட்டின் இக்காலப் போக்கையும் மக்களது வாழ்வையும் தம்மோடு பிணைத்துக் கூறி வருவதால் இது ஒரு வாழ்க்கை வரலாறுகவும் இருக்கின்றது. அடியார்களுக்குப்போல இவருக்கும் சில அற்புதங்கள் நிகழ்வதுபோலத் தோன்றுகிறது. அடியவர் கதை உயிர் பெற்று முன் நிற்கிறது. கோயில்கள் இடிபட்டுக் கிடந் தாலும் அந்த இடிபாடெல்லாம் மறைந்து பழம் பெருமையோடு இவர் நூலில் காட்சியளிக்கின்றன. காரோட்டியும் குறிப்பெழுதி வைத்து உதவுகின்ற நண்பரும் அங்கங்கு வரும் குருக்கள்மாரும் பிறரும் சேர்ந்து பல பல நாடகங்களையே உருவாக்குகிறார்கள்.

இவையெல்லாம் சிவபாதசுந்தரம் செய்யும் செப்பிடு வித்தை. அதனால் இந்த நூல் முதலிலிருந்து முடிவு வரை சுவை நிறைந்தே செல்கிறது.

இது வெறும் கதையல்ல. அவர் அங்கங்கே பிடித்த படங்களே இந்த உண்மையை நிலைநாட்டும். இவர் கண்ட புதுமைகளும் பலப்பல. ஆதனூரைக் கண்டு பிடித்தார். இளையான்குடியை நிலைநாட்டியுள்ளார். கோவை சுப்பிரமணிய முதலியாரைத் துணை கொண்டு இவர் சென்றாலும் அவருக்கும் வழிகாட்டுகிறார். பழைய குணபரவீச்சுரத்தையும் புதியதாகப் படம் பிடித்து வந்துள்ளார். இப்படி எத்தனை எத்தனையோ ஆராய்ச்சி முடிவுகள் வெளியாகின்றன.

இப்படியெல்லாம் சிறந்த ஒரு நூலை நான் படிக்கும்படி செய்த சிவபாத சுந்தரனாருக்கு நான் என்ன கைமாறு செய்ய முடியும்? வாழ்க அவர் நூல். தமிழர் ஒவ்வொருவர் கையிலும் இது கூத்தாடுவதாக.

''கண்ணகி அடிச்சுவட்டில்'' என்ற நூலை எழுதும் எண்ணமும் இவர் உள்ளத்தில் கருக்கொண்டு வருவதை இந்த நூலிலேயே பார்க்கலாம். நாம் காணுத அடிச்சுவடுகளெல்லாம் காணும் கண்ணும் கருத்தும் இவருக்கு இருக்கின்றன. ஆதலால் பல அடிச்சுவடுகளைக் கண்டு கண்டு நமக்குக் காட்டி வருவாராக.

மதுரை
1-1-78

தெ. பொ. மீனாட்சிசுந்தரன்

பூர்வ கதை

சைவசிந்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் பொன் விழா நடந்த சமயத்தில், 1971ல், ஆரம்பித்த கதை இது. விழா முடிந்த அன்றிரவு நண்பர் பகீரதன் தொலைபேசியில் என்னை அழைத்து, ''கௌதமபுத்தர் அடிச்சுவட்டில் என்று நீங்கள் எழுதிய நூலைப் போல, சேக்கிழாரின் பெரியபுராணத்தை ஆதாரமாக வைத்து, நமது சைவ நாயன்மார் வரலாற்றையும் எழுத வேண்டும் என்று பெரியார் மகாலிங்கம் அவர்கள் விரும்புகிறார்கள். இன்று நடந்த கழகப் பொன் விழாவில் இந்த அபிப்பிராயத்தை அவர்கள் தெரிவித்தார்கள்'' என்றார். இந்த அற்புதமான செய்தியைக் கேட்டவுடன் எனது உள்ளம் மகிழ்ச்சியில் பொங்கிய போதும், அது சமாளிக்க முடியாத பெரிய முயற்சி என்று சொல்லி விட்டேன். சில நாட் செல்ல, தமிழ் வரலாற்றுக் கழகக் கூட்டம் ஒன்றில் நண்பர் மகாலிங்கம் அவர்களை நேருக்கு நேர் சந்தித்த போது, அவர்களே என்னிடம், ''உங்கள் கௌமத புத்தர் அடிச்சுவட்டில் என்ற நூலைப் படித்தேன். மிகவும் சிறந்த முறையில் எழுதியிருக்கிறீர்கள். அது போல சைவ நாயன்மார் வரலாற்றையும் எழுதுங்கள். உங்களால் முடியும். யோசித்துச் சொல்லுங்கள்'' என்று கேட்டுக்கொண்டார். நானும் யோசித்துச் சொல்கிறேன் என்று அந்தச் சமயத்தில் தப்பித்துக்கொண்டேன். பின்னொரு நாள் அவரை நான் ஒரு பொதுக் கூட்டத்தில் சந்தித்த போது அவர் என்னை விட்டுவிடுவதாயில்லை. ''சக்தி அறக்கட்டளையினர் உங்கள் பிரயாண வசதிகளுக்கெல்லாம் ஏற்பாடு செய்கிறார்கள். உங்கள் வேலையைத் தொடங்கலாம்'' என்று சொல்லி மகாலிங்கம் அவர்கள் என்மீது ஒரு பெரும் பொறுப்பைச் சுமத்திவிட்டார்கள். அதன் மேலும் நான் யோசிக்க இடம் வைக்கவில்லை.

சமண இலக்கியமான சீவகசிந்தாமணியைப் படித்த அநபாயச் சோழன் குன்றத்தூர் சேக்கிழாரிடம் அறுபத்து மூவர் வரலாற்றைக் காவியமாக எழுதச் சொன்னதாக நாம் படித்திருக்கிறோம். அதே வகையில் பௌத்தத்தின் பெருமையை விளக்கும்

கௌதமபுத்தர் அடிச்சுவட்டில் என்ற நூலைப் படித்த மகாலிங்கம் அவர்கள் சைவத் திருத்தொண்டர் வரலாற்றை இன்றைய இருபதாம் நூற்றாண்டு பாணியில் எழுதிச் சைவத்துக்கு மேன்மை யளிக்கவேண்டுமென்று என்னிடம் கேட்டுக்கொண்டதை நினைக்கும்போது அற்புதங்கள் இன்றும் நடைபெற்றுக்கொண்டு தான் இருக்கின்றன என்பதை நம்புகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் என் வாழ்க்கையில் மறக்க முடியாத மற்றொரு அற்புத நிகழ்ச்சியை எண்ணிப் பார்க்கிறேன். 1941ல் ஈழகேசரியில் நான் ''சென்னையும் தமிழும்'' என்ற வரிசையில் எழுதிய தொடர் கட்டுரைகளைப்படித்த எனது மணிக்கொடிகால நண்பன் புதுமைப்பித்தன் எனக்கு எழுதிய ஒரு கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது ஒரு தீர்க்க தரிசனமாகிவிட்டது: ''நான் ரசித்துப் படிக்கும் இரண்டொரு கைகளில் உங்க ளுடையதும் ஒன்று...எவ்வளவு அநாயாசமாக சில மூர்ச்சனைகளைப் பிடித்து எழுதியிருக்கிறீர்கள். என் ஆசையெல்லாம் உங்கள் கையில் நிறையப் பணத்தைக் கொடுத்து உலகம் முழுவதிலும் சுற்றித் திரிந்துவிட்டு வாருங்கள் என்று அனுப்பவேண்டும் என்பதே. வந்த பிறகு உங்கள் கை சும்மா உட்கார்ந்திராது. பிறக்கும் புஸ்தகமும் அனுபவம் பதியாத அம்மிக்குழவி திக்விஜயத்தின் தன்மை பெற்றிராது. டிராவலோக் (Travelogue) படம் போல புஸ்தகங்கள் உங்கள் கையிலிருந்துதான் பிறக்க வேண்டும்...'' புதுமைப்பித்தன் அன்று இந்தக் கருத்தைச் சொன்ன போது நான் இம்மாதிரியான யாத்திரை நூல் எழுதுவேன் என்று கனவிலும் நினைக்கவில்லை. ஆனால் அந்த நண்பனின் அற்புத வாக்கு 1947ல் மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில் என்ற நூலில் உண்மையாகி, பின்னர் கௌதமபுத்தர் அடிச் சுவட்டிலும், இப்போது அன்பர் மகாலிங்கம் அவர்கள் மூலம் சக்தி அறக்கட்டளையின் கைங்கரியத்தில், சேக்கிழார் அடிச்சுவட்டிலும் அவர் ஆசைபோல் நிறைவேறியிருக்கிறது.

நண்பர் மகாலிங்கம் அவர்கள் சுமத்திய பொறுப்பில் எனது கடமையை உடனே ஆரம்பித்தேன். இளமைக் காலத்தில் என் தந்தையார், ஆறுமுகநாவலரின் மாணாக்கரின் மாணாக்கராகிய சைவப் புலவர் சோமசுந்தரம்பிள்ளை அவர்களிடம் பாடம் கேட்ட பெரியபுராணத்தையும் திருமுறைகளையும் மறுபடியும் துருவிப் பார்த்தேன். கோவை சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியார் ஏழு தொகுதிகளில் எழுதிய திருத்தொண்டர்புராண உரையையும் படித்தேன். சென்னை அரசினர் ஆவணக்களரி, மறைமலையடிகள் நூலகம், மதுரைத் தமிழ்ச்சங்க நூலகம், கும்பகோணத்திலுள்ள

பழைய நூலகம் ஆகியவற்றில் தேடித் தலங்களைப் பற்றிய வரலாறுகளையும் சரித்திரச் சான்றுகளையும் பல மாதங்களாகக் குறிப்பெடுத்தேன். பின்னர் புகைப்படக் கருவிகள், ஒலிப்பதிவுக் கருவிகள் சகிதம் தமிழ்நாட்டில் திருநாவலூர் முதல் கேரளத்தில் திருவஞ்சைக்களம் வரை சுமார் நூறு தலங்களைத் தரிசித்து ஒரு மாத காலம் தகவல் சேகரித்தேன். அங்கங்கு ஆலய நிர்வாகிகளும் அர்ச்சகர்களும் மற்றும் உள்ளூர் வாசிகளும் தந்த, புத்தகங்களில் காணப்படாத, கர்ணபரம்பரையான சுவை மிக்க பல செய்திகளையெல்லாம் பதிவு செய்து, நாயனார் வாழ்க்கை வரலாற்றுடன் சம்பந்தமான கோயில்களையும் சிற்பச் சின்னங்களையும் புகைப்படம் பிடித்துக்கொண்டேன்.

தகவல்களைச் சேகரித்த பின் நூலை ஒரே மூச்சில் எழுத முடியவில்லை. புதிதாகக் கிடைத்த செய்திகளில் தெளிவு பெறச் சில ஊர்களுக்கு மறுபடியும் சென்று பார்த்து வர வேண்டியிருந்தது. புகைப்படங்கள் சிலவற்றையும் பிடிக்கவேண்டியிருந்தது. இதற்கிடையில் நண்பர் மகாலிங்கம் அவர்கள், சேக்கிழாரிடம் அநபாயன் விசாரித்ததுபோல, நூல் எவ்வளவில் இருக்கிறது என்று அடிக்கடி கேட்டுக்கொண்டு, ''அவசரப்பட வேண்டாம். உங்களுக்குத் திருப்தியான முறையில் எழுதுங்கள். சிறப்பாக வரும் என்று எனக்கு நம்பிக்கையிருக்கிறது'' என்று ஒரு உண்மையான நண்பரின் உற்சாகத்தை வழங்கி வந்தார்கள். இப்படியான நூல் எழுதுவதற்கு என் அனுபவத்தில் மதுரை மீனாக்ஷி அனுக்கிரகத்தை நாடுவதால், அந்த ஸ்தலத்துக்குச் சென்று அமைதியான ஓரிடத்திலிருந்து ஐந்து வார காலத்தில் எழுதி, 1975 ஜூன் மாதம், இறுதி அத்தியாயத்தை முடித்த அன்று சேக்கிழாரின் திருநட்சத்திரம் பொருந்தியிருக்கக் கண்டு உள்ளம் நிறைந்தேன்.

ஐந்து ஆண்டுகளாக முயன்று ஆராய்ந்து வெளியிடப்படும் இந்த நூல் நண்பர் மகாலிங்கம் அவர்களின் இதயத்தில் உதயமாகி அவர் வள்ளன்மையின் சின்னமாக மிளிருகிறது. அவர்களது நிறைந்த உள்ளத்தையும், பண்பாட்டுச் சிறப்பையும், சைவத்தின் மீதும் தமிழின் மீதும் அவர்கள் அடக்கத்துடன் கொண்டிருக்கும் ஆழ்ந்த பற்றையும், இத்துறையில் ஈடுபட்டவர்களைத் தேடிப் பிடித்து ஊக்குவித்து உழைக்கச் செய்யும் பேருபகாரச் சிந்தையையும் வாயால் பேசியும் எழுத்தால் எழுதியும் பிரகடனம் செய்தல் அமையாது. உள்ளத்தால் உணரும்போதுதான் அது பேரொளியாய்த் திகழ்வதைக் காணலாம். அவர்களது முயற்சியின் பேரூக சக்தி அறக்கட்டளையினர் தந்த ஆரம்ப உதவிகள்

கிடைக்கப்பெறுவிட்டால் இத்தகைய நூலை எழுதியிருக்க முடியாது. அவர்களுக்கு எனது நன்றி.

இந்த நூல் முற்றுப்பெறுவதற்கு மூலகாரணரான அன்பர் மகாலிங்கத்தைத் தவிர பல சந்தர்ப்பங்களில் துணை நின்றவர்கள் பலர். முக்கியமாக, வழித்துணை நண்பராக இருந்து அவ்வப் போது ஆலோசனைகள் தந்த எனது ''இலக்கிய இரட்டையர்'' சிட்டி சுந்தரராஜன், எங்கள் பிரயாணத்தில் காரியதரிசியாகவும் கணக்கப்பிள்ளையாகவும் பதவிகளைச் சுமந்து கொண்ட வேணு என்ற வேணுகோபாலன், எங்கள் நீண்டநாள் யாத்திரையில் உடலோ உள்ளமோ சிறிதும்சோராமல், தமது தொழிலை ஒரு சிவ தொண்டாகப் பாவித்து மோட்டார் ஓட்டிய ''சேரன்'' ராதாகிருஷ்ணன் — இவர்கள் எனது முயற்சியில் ஒன்றிப் போனவர்களாகையால் நன்றி என்று சொல்லவேண்டிய அவசிய மில்லை என்கிறார்கள்.

நாங்கள் யாத்திரை செய்த சமயத்தில் (1972) செங்காட்டங் குடியில் நிர்வாக அதிகாரியாயிருந்த ஜயச்சந்திரனைப் போன்ற அறிவாளிகள் சிலரைச் சந்தித்தது போல, சமயத்துறையிலோ இறைவழிபாட்டிலோ வழிபடுபவர்களிடமோ நம்பிக்கையில்லாத சில நிர்வாக அதிகாரிகளையும், தர்மகர்த்தாக்களையும், சைவ மடத்து காரியஸ்தர்களையும் சந்தித்த அனுபவத்தையும் இங்கு பதிவு செய்து வைக்க விரும்புகிறேன். இந்த சந்தர்ப்பத்தில், ஆலய நிர்வாகத்திலும் தர்மகர்த்தாக்கள் நியமனத்திலும் பொறுப்பேற்றிருக்கும் நமது தமிழ் நாட்டு அரசாங்கம், குருவாயூர் தேவஸ்தானம் கொண்டிருக்கும் சட்ட நியதி போல, மதச் சின்னங்களை அணிபவர்களாகவும், கடவுள்மீது நம்பிக்கையுள்ள வர்களாகவும், ஆசார சீலர்களாகவும் உள்ளவர்களையே சைவ வைஷ்ணவ ஆலயங்களுக்கு நிர்வாக அதிகாரிகளாகவும் தர்மகர்த்தாக்களாகவும் நியமிக்கச் சட்டபூர்வமான ஏற்பாடு செய்யுமாஞல், ஆயிரம் ஆண்டுகளாக வளர்ந்திருக்கும் நமது புராதன கோயில்கள் மக்களின் இறையுணர்வையும் கலை யுணர்வையும் சாத்வீகப் பண்பையும் பெருக்க உதவும் என்று சொல்லி வைக்க விரும்புகிறேம். அத்துடன், தருமபுர ஆதீனம் போன்ற மடங்களின் பரிபாலகர்கள், தமது காரியஸ்தர்களும் மற்றும் ஆலயப் பணியாளர்களும் சிவசின்னங்களை மாத்திரம் அணிவது போதாது, வழிபாடியற்ற வருகிற அடியார்களுக்கு அடியவர்களாக, தொண்டர்சீர்பரவுவாராக, நடந்துகொள்வார் களாஞல், அந்த ஆதீனங்களின் சேவையை சைவ உலகம் போற்றும் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த நூல் உருவாகும் சமயத்தில் தமது நூல் நிலையத்தையே என்னிடம் ஒப்படைத்த சகோதர உள்ளம் படைத்த மறைமலையடிகள் நூலகர் முத்துக்குமாரசுவாமிக்கும், கையெழுத்துப் பிரதி தயாராகத் துணைநின்ற மதுரை லக்ஷ்மி சரஸ்வதி சகோதரிகளுக்கும், அச்சுப்பிரதியைத் திருத்தியுதவி நன்றி தெரிவிக்க வேண்டாம் என்று சொன்ன நல்லவருக்கும், தமது சொந்த ஊரைப்பற்றியெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறதென்ற பெருமையோடும் மகிழ்ச்சியோடும் நூலைப்பக்குவமாக அச்சிட்டுக் கொடுத்த சென்னை மெட்ரோபாலிடன் அச்சக உரிமையாளர் நடராஜனுக்கும் எனது நன்றி.

சமய விஷயத்தில் உற்சாகத்துடனும் பக்தி இலக்கியத்தில் பூரண ஈடுபாட்டுடனும் பிரசுரத் துறையில் தைரியத்துடனும் செயல்புரியும் வானதி பதிப்பக உரிமையாளர் நண்பர் திருநாவுக்கரசு இந்நூலைப் பிரசுரிக்க ஆர்வத்தோடு முன் வந்தமைக்கு எனது மனப்பூர்வமான நன்றி. ஆரம்பத்திலிருந்தே எனது உற்சாகத்தை வளர்த்து, ஊக்கத்தில் உறுதுணையாக இருந்து வந்த வள்ளலார் பணிமன்றச் செயலாளர் நண்பர் பகீரதனுக்கு இந்த நூல் வெளிவருவதில் பெரும்பங்குண்டு என்பதை நன்றியுடன் குறிப்பிடுகிறேன்.

பல ஆண்டுகளாகவே எனது இலக்கிய முயற்சிகளையெல்லாம் தொடர்ந்து கவனித்து அவ்வப்போது அன்புடன் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தி வரும் தமிழ்ப் பேரறிஞர் டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் இந்த நூலுக்கு அளித்திருக்கும் அணிந்துரை ஒரு பெறற்கரிய பேருக்கு கருதுகின்றேன்,

"சிராவஸ்தி"
19, காமராஜ் அவென்யூ,
அடையாறு, சென்னை-20.
14—1—78

சோ. சிவபாத சுந்தரம்

பொருளடக்கம்

அணிந்துரை	...	vii
பூர்வகதை	...	x
மாப்பிள்ளை அழைப்பு	...	1
நம்ம சுந்தரம்	...	6
விநோத வழக்கு	...	13
தத்தா நமர்	...	20
திருவடியே சிவலோகம்	...	28
சமணத் துறவி	...	33
பாடலி புரத்திலே	...	39
குணபரவீச்சுரம்	...	44
தில்லை தரிசனம்	...	48
காணுமற்போன ஓடு	...	60
தோடுடைய செவியன்	...	65
ஆதனூர் கண்டது	...	72
இயற்கையின் தியாகம்	...	81
பூம்புகார் போற்றுதும்	...	88
குங்கிலியச் சேவை	...	94
ஆயிரத்தில் ஒருவர்	...	100
கூந்தலழகி	...	103
கற்பகத்தின் பூங்கொம்பு	...	109
திருவாரூர்ப் பிறந்தார்கள்	...	115
குண்டையூர்க் கிழார்	...	123
தூது நடந்த தெரு	...	129
பாணர் திருப்பதி	...	133
தாகம் தீர்த்த ஈஸ்வரர்	...	139
சண்டேசுரர் கதை	...	144
திருமூலர் மந்திரம்	...	149
கோவண ஆண்டி	...	154
ஏனநல்லூரிலே	...	161
செல்லாக்காசு	...	166
மத்தியானப் பறையர்	...	170

புகலூர் பாடுமின்	...	175
சனீஸ்வரன் தரிசனம்	...	179
காரைக்கால் யாத்திரை	...	183
ஆயிரங்காளி	...	190
பிள்ளைக்கறி	...	195
பொன்மீன் கதை	...	201
கதவு திறந்தது	...	206
பெரியவர் தரிசனம்	...	213
சப்த ஸ்தானம்	...	218
மூத்த திருநாவுக்கரசு	...	224
பொதி சோறு பெற்றது	...	234
சிலந்தியமைத்த பந்தர்	...	238
யானை கைப் பூமாலை	...	244
பெருமிழலைக் குறும்பர்	...	252
இளையான்குடி சாமியார்	...	259
மதுரை அற்புதங்கள்	...	264
பாண்டியர் தலைநகர்	...	274
மும்மையால் உலகாண்ட மூர்த்தி	...	279
போதியோ பூம்பாவாய்	...	284
பெருமணத்தில் திருமணம்	...	291
பாடுவார் பசி தீர்ப்பார்	...	297
ஒற்றியூரில் ஒரு காதல்	...	301
பாசுபதரும் காலாமுகரும்	...	308
சூதாடும் திருத்தொண்டர்	...	313
ஆண்டி கட்டின ஆலயம்	...	317
வெள்ளத்தில் மூழ்கிய கோயில்	...	320
பழையனூர் நீலி	...	325
காளத்தி வேடன்	...	333
கற்றூர் தொழும் காஞ்சி	...	340
பூலோக கைலாயம்	...	347
தொண்டர்நாதன் தூது	...	355
வேடுபறி	...	366
அஞ்சைக்கள யாத்திரை	...	374
பிரியாவிடை	...	381
பிற்சேர்க்கை	...	389
துணை நூல்கள்	...	395
பெயர் அகர வரிசை	...	397

குறிப்பு: இந்நூலில் சேர்க்கப்பட்டிருக்கும் 105 புகைப்படங்களும் ஆசிரியரின் உரிமை.

1. மாப்பிள்ளை அழைப்பு

மாப்பிள்ளை அழைப்பு நடந்து கொண்டிருக்கிறது.

புத்தூர் வாசிகளுக்கு அன்று ஒரு பெருமை மிக்க நாள். அந்தணச் சிறுவன்தான், ஆனால் ராஜா வீட்டில் வளர்ந்த பிள்ளை, இந்தச் சின்னஞ்சிறு கிராமத்துப் பெண்ணை மணக்க வருகிறான் என்றால் கேட்க வேண்டுமா? சகலவித ஆடை ஆபரணங்களோடு வெள்ளைக் குதிரையின் மீது கம்பீரமாக வீற்றிருந்து, வாத்ய கோஷம் முழங்க, பாலிகையும் பூவும் பழவர்க்கங்களும் நிறைந்த வெள்ளித் தட்டுகளை ஏந்திய சுமங்கலிப் பெண்கள் பின் தொடர, குடை கொடி ஆலவட்டம் முதலிய விருதுகள் சகிதம் வரும் ஊர்வலத்தைக் கண்டு களிக்க வந்த மக்கள் வெள்ளத்தை அந்தச் சிறிய புத்தூர் அணைகொள்ள முடியாமல் தவித்தது. ஆனால் பெண் வீட்டுக்காரர் முன் எச்சரிக்கையாக அக்கிரகாரத் தெருவுக்கு வெளிப்புறத்திலேயே பெரிய மணப்பந்தர் அமைத்து அலங்கரித்து வைத்திருந்தார்கள்.

ஊர்வலம் பந்தரை நெருங்குகிறது. வெண்பரிதியிலிருந்து இறங்கிய மாப்பிள்ளைக்கு ஆரத்தி எடுக்கிறார்கள். பந்தரினுள்ளே மண வினைக்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் வைதிகர்கள் விதிமுறைப்படி செய்து வைத்துக் காத்திருக்கிறார்கள். வேத கோஷம் முழங்க, மங்கல வாத்தியங்கள் ஒலிக்க, மாப்பிள்ளை வலக்கால் எடுத்து வைத்து மணப்பந்தருள் நுழைகிறார். அந்தச் சமயம் பார்த்து எங்கிருந்தோ வந்து எதிர்கொள்கிறார் ஓர் ஒற்றைப் பிராமணர்!

படு கிழம். பஞ்சத்தில் வாடிய உடல். கக்கத்தில் மடிசஞ்சி. கையில் ஒரு பழங்குடை. இந்த வேஷத்தில் வந்த அந்தப் பிராமணர் மிகுந்த கஷ்டப்பட்டுக் கூட்டத்தை விலக்கிக்கொண்டு பந்தருக்குள் நுழைந்து, ''எல்லாரும் கொஞ்சம் நில்லுங்கோ. நான் சொல்லப்போவதைக் கேளுங்கோ'' என்று தமது தேய்ந்த குரலை உயர்த்திக் கத்தினார். இந்த அபசகுனத்தைப் பார்த்த எல்லாரும் திகைப்படைந்தனராயினும், ஒரு சிலர் சமாளித்துக்

கொண்டு, ''வரணும் வரணும் பெரியவாள்! உங்கள் ஆசீர்வாதம் தான் முதல்லே'' என்று பக்குவமாய் வரவேற்றார்கள். அந்தக் கிழவர் ஆசீர்வதிக்கவா வந்தார்? அடிமை கொள்ள வந்தவர், ''இந்தக் கல்யாணம் நடக்க முடியாது. இப்பிள்ளையாண்டான் எனக்கு அடிமை. நிறுத்துங்கள் கல்யாணத்தை!'' என்று போட்டார் ஒரு போடு.

மாப்பிள்ளை சிரித்தார். ஆனால் பார்த்து நின்றவர்களோ பதறினார்கள். கிழவர் மிக்க நிதானத்துடன், ''சிரிக்காதேடா தம்பி. இது வெறும் வேடிக்கையல்ல. கொஞ்சம் பொறு'' என்று சொல்லிக்கொண்டே தமது மடிசஞ்சியை அவிழ்த்தார். அதிலிருந்து ஒரு பழுத்த ஓலையை எடுத்தார். ''இதோ பார், உன் பாட்டனார் வழி வழி அடிமை என்று எழுதித் தந்த ஓலை இருக்கிறது. சபையோரே, நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று அறிவித்தார். யாவரும் வாயடைத்து நின்றாலும் மாப்பிள்ளைக்கு ஆத்திரம் பொங்கியது. ''யாரையா நீர்? அந்தணனுக்கு அந்தணன் அடிமையென்று சொல்ல உமக்கென்ன பைத்தியமா?'' என்று கடிந்தார்.

கிழவரோ இந்த வார்த்தைகளால் கோபமடையவில்லை. கொஞ்சமும் நிதானத்தையிழக்காமல் சொன்னார், ''துள்ளாதே தம்பீ. நான் பித்தனுமிருக்கலாம், பேயனுமிருக்கலாம். வேறு என்ன வசை பாடினாலும் நான் அதற்காக வெட்கப்படப் போவ தில்லை. என்னைப் பற்றி நீ இன்னும் சரியாகப் புரிந்து கொள்ள வில்லை. ஏன் வீணாக வாதாடுகிறாய்? நீ என் அடிமைதான். இப்போதே வா என் பின்னால்'' என்று கண்டிப்புடன் அழைத்தார் அந்தக் கிழவேதியர். இதென்ன வேடிக்கையா யிருக்கிறதென்று கருதிய மாப்பிள்ளை, கோபத்தை மறைத்துக்கொண்டு சாதுரிய மாக, ''எங்கே அந்த ஓலையைக் கொஞ்சம் கொடும், உண்மைதானா என்று பார்க்கலாம்'' என்று நெருங்கினார். ஆனால் கிழவரோ சமர்த்தர். ''சின்னப் பையன் நீ. உனக்கென்ன புரியுமென்று கேட்கிறாய்? சபையிலுள்ள பெரியவர்கள்தான் பார்த்துச் சொல்ல உரிமையுள்ளவர்கள். அவர்கள் தீர்ப்பளித்ததும் நீயாகவே வந்து எனக்கு அடிமைத் தொழில் செய்யப் போகிறாய்'' என்றதும் மாப்பிள்ளை தமது கௌரவம் பொருந்திய மணக்கோலத்தையும் மறந்து, திடீரெனக் கிழவர் மேற் பாய்ந்தார். ஓலையைப் பறித்தார். கிழித்தெறிந்தார். அந்தணக் கிழவர் நடுக்கமுற்று, ''அந்தோ! கேள்வி முறையில்லையா? இந்தப் பிள்ளையாண்டான் செயலைப் பார்த்தீர்களா?'' என்று கூக்குரலிட்டபடி மாப்பிள்ளை யின் கைகளைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டார்.

மணப்பந்தரிற் கூடியிருந்தவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மாப்பிள்ளை வீட்டார் கொதித்தனர். பெண் வீட்டார் கண்கலங்கினர். இடையிலிருந்த சில பெரியவர்கள் ஓடிச் சென்று கிழவரையும் பிள்ளையையும் கைகலக்க விடாமல் பிரித்து விட்டு, அந்தண முதியவரைப் பார்த்து, ''இதென்ன ஸ்வாமி, வழக்கமில்லாத வழக்கா யிருக்கிறது! நாங்கள் கேள்விப் படாத ஒரு வழக்கம். நீர் எங்கே இருப்பது?'' என்று கேட்டனர்.

''நான் இப்போது இங்கேதான் இருக்கிறேன். ஆனால் நான் குடியிருப்பது அதோ பக்கத்திலிருக்கிற திருவெண்ணெய்நல்லூராக்கும். அதெல்லாம் உங்களுக்கு எதற்கு? வழக்கமில்லாத வழக்கு என்று சொன்னீர்களே, இவன் என் கையிலிருந்த ஓலையைத் திருட்டுத் தனமாகப் பிடுங்கிக் கிழித்தெறிந்த போதே என் கட்சி உண்மையென்பது நிரூபிக்கப்பட்டுவிட்டதல்லவா?'' என்றார். உடனே மாப்பிள்ளை இந்தக் கிழவர் வழக்காடுவதில் பழைய பெருச்சாளிதான் என்று தீர்மானித்துக் கொண்டு, ''திருவெண்ணெய்நல்லூர்க்காரர் இந்தப் பேட்டையில் வந்து எதற்காக வாதாட வேண்டும்? எல்லை தாண்டி வழக்காடலாமா?'' என்றார். கிழவர் உடனே மடக்கினார். ''அதிகம் தெரிந்துவிட்டதாகக் கர்வம் கொள்ளாதே. நான் வெண்ணெய்நல்லூர்க்காரன் தான். ஆனால் நீ ஆரூரான் என்பதை மறந்துவிடாதே. உன் பாட்டன் வழியெல்லாம் அந்த ஊர்தான். ஆகையால் இங்கே புத்தூரில் நின்று நாம் வாதாட வேண்டாம். வெண்ணெய்நல்லூரிலேயே போய் பஞ்சாயத்து வைத்து நமது வழக்கைத் தீர்த்துக் கொள்வோம், வா'' என்றார்.

மாப்பிள்ளைக்கு ஒரே திகைப்பு. பைத்தியம் என்று பரிகாசம் செய்த இந்தக் கிழவரோ சட்டம் பேசும் பிடிவாதக்காரராயிருக்கிறார்! திருமணப் பந்தரிலே இப்படியொரு எதிர்பாராத தடை ஏற்பட்டதை நினைத்துக் கவலைப்பட்டார். இவரிடம் என்னதான் அற்புத கவர்ச்சி இருக்கிறதோ! அங்கு நின்ற அத்தனை பேரும் சும்மா நிற்கிறார்களே. இந்தப் பைத்தியத்தை அதன் வழியில் விட்டுத்தான் சாதுர்யமாகத் தப்பித்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்த மாப்பிள்ளை, ''சரிதான், அப்படியே வாரும், திருவெண்ணெய்நல்லூரில் இந்த வழக்கைத் தீர்த்துக் கொள்ளலாம்'' என்று சொன்னார். எல்லோரும் ஒப்புக் கொண்டனர். கிழவனார் தமது தோளிலிருந்து நழுவிய உத்தரீயத்தைச் சரி செய்து கொண்டார். மடிசஞ்சியை ஒரு தரம் சோதித்துப் பார்த்தார். நிமிர்ந்து கைத் தடியை ஊன்றிக்கொண்டு பக்கத்திலுள்ள ஊராகிய

திருவெண்ணெய்நல்லூரை நோக்கி நடந்தார். மாப்பிள்ளையும் மற்றவர்களும் பின் தொடர்ந்தனர்.

* * *

இந்த அதிசயமான அடிமை வழக்கில் சம்பந்தப்பட்ட மாப்பிள்ளை வேறுயாருமல்ல, சைவ உலகம் போற்றிப் பாராட்டும் அறுபத்து மூன்று அடியார்களில் ஒருவரான சுந்தரமூர்த்திநாயனார் தான். சுந்தரர் என்பது பிற்காலத்தில் யாரோ இட்ட பெயர். ஆரூரர் என்றுதான் பெற்றோர் பெயரிட்டழைத்தனர். இவருடைய தந்தையார் சடையர் என்பவர் திருநாவலூரில் கோயில் அர்ச்சகர். தாயார் இசைஞானியார் திருவாரூரைச் சேர்ந்த காரணத்தால் அந்த ஊர் ஸ்வாமியின் பெயராலேயே பிள்ளையை ஆரூரன் என்று அழைத்தார்கள்.

குழந்தை ஆரூரன் மிக அழகாயிருப்பான். சுறுசுறுப்பும் குறும்பும் நிறைந்த பருவத்தில் ஒரு நாள் கோயில் வீதியில் விளையாடிக் கொண்டிருந்த போது அவ்வூர் ராஜா பார்த்து விட்டான், அவ்வளவுதான். எப்படியாவது ஆரூரனை எடுத்துக் கொண்டு போய்த் தன் குழந்தையாக வளர்க்க வேண்டுமென்ற ஆசை பிறந்துவிட்டது அந்த அரசனுக்கு. கூட வந்த சேவகர் மூலமாகக் குருக்கள் வீட்டுக்குச் சொல்லியனுப்பினான். ஆனால், பெற்றவர்களுக்கு அது ஒரேயொரு தவக்கொழுந்து. எப்படி உடனே சம்மதிப்பார்கள்? தயங்கினார்கள். இருந்தும் அரசன் விருப்பத்தை மறுக்க முடியாமல் ஒப்புக்கொண்டனர். அரசன் மகிழ்ச்சியோடு எடுத்துச் சென்று குழந்தை ஆரூரனைத் தன் மகனுகப் பாவித்து அந்தணனுக்கும் அரசனுக்கும் வேண்டிய எல்லாக் கல்வியையும் போதிக்க ஏற்பாடு செய்து அருமையாக வளர்த்து வந்தான் என்று சேக்கிழார் தமது பெரியபுராணத்தின் மூலமாக நமக்குச் சொல்கிறார். இது நிகழ்ந்தது சுமார் ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர்—கி.பி. எட்டாம் நூற்றாண்டில் என்று சரித்திர ஆசிரியர்கள் மதிப்பிட்டிருக்கிறார்கள்.

சரித்திரத்தையும் புராணத்தையும் நாம் படித்திருந்தாலும், பன்னிரண்டு நூற்றாண்டுக் காலமாக மக்கள் மத்தியில் செவி வழிச் செய்திகளாக இந்தக் கதைகளெல்லாம் எப்படி யெப்படிப் பல கிளைகள் விட்டு வளர்ந்தன; அந்தக் காலத்துச் சரித்திரச் சின்னங்களும் கோயில்களும் அடியார் மரபுகளும் எப்படியெப்படியெல்லாம் இன்று மாற்ற மடைந்துள்ளன என்று நேரிலே கண்டறிவதற்காகப் புறப்பட்டுச் செய்த யாத்திரை அனுபவம்தான் நாம் சொல்லப் போகும் நீண்ட கதை.

சென்னை நகரத்தை யடுத்த குன்றத்தூரிலே பிறந்த புலவர் சேக்கிழார், சோழப் பேரரசன் அநபாயன் என்ற இரண்டாம் குலோத்துங்கனுக்கு மந்திரியாகத் திருவாரூரிலே கடமையாற்றினர். அரசன் வேண்டுகோளுக்கிணங்கி சிவனடியார்கள் அறுபத்துமூவரின் வரலாற்றைப் பாடுவதற்காக அந்தப் பெருமகன் தமிழ் நாட்டிலுள்ள சிவஸ்தலங்களை யெல்லாம் நேரில் சென்று தரிசித்து, தாம் கண்டதையும் கேட்டதையும் வைத்துத் தமது அரும் பெரும் காப்பியமாகிய பெரியபுராணம் என்ற திருத்தொண்டர் புராணத்தைப் பாடினார். அந்தச் சேக்கிழார் அடிச்சுவட்டில் சென்று, அவர் அனுபவத்தையும் அறுபத்துமூவர் அனுபவத்தையும் நாம் பெற வேண்டு மென்ற ஆசையால் தூண்டப்பெற்ற யாத்திரைதான் இது. இதில் நாம் முதலில் சேக்கிழாரின் கதாநாயகனாகிய சுந்தரமூர்த்தியைச் சந்தித்து, அவர் யாத்திரையில் நாமும் பின்தொடர்ந்து, மற்றைய அறுபத்திரண்டு சிவனடியார்களையும் சந்திப்போம். இடையிலே பல அரசர்களைப் பார்ப்போம். அவர்கள் கட்டியெழுப்பிய கோயில்களையும் வானளாவிய கோபுரங்களையும் சிற்பச் செல்வங்களையும் பார்த்து மகிழ்வோம்.

2. "நம்ம சுந்தரம்!"

இரவு ஏழு மணியிருக்கும் நாங்கள் திருநாவலூர் போய்ச் சேரும்போது. அங்கு சப்ரிஜிஸ்திரார் உத்தியோகம் பார்த்த நண்பர் ராஜு, ஏற்கெனவே எமது வரவை அறிவித்திருந்தோ மாகையால், எங்களுக்காகக் காத்திருந்தார். அவரோடு உள்ளூர் நண்பர்கள் சிலரும் இருந்தனர். காமெரா, டேப் ரிகார்டர் முதலிய உபகரணங்கள் சகிதம் நாங்கள் தடபுடலாகப் போயிறங்கியவுடன் அந்தச் சின்னஞ்சிறிய ஊர் மக்கள் அதிசயப் பார்வையுடன் சூழ்ந்து கொண்டனர். ஊரைப்பற்றிப் பொது வாகப் பேசிக்கொண்டிருந்தபோது, கோயிற் குருக்களும் தர்மகர்த்தாக்கள் முதலியோரும் வந்து சேர்ந்துகொண்டனர். இது நண்பர் ராஜுவின் முன்னேற்பாடுகள் என்று தெரிந்தது. குருக்கள் எங்களைப் பார்த்து, "அர்த்தஜாமப் பூஜையின்போது சுவாமி தரிசனத்தை முடித்துக்கொண்டு, நாளைக்காலையில் கோயிலைச் சுற்றிப் பார்க்க வசதியாயிருக்கும். எதிர்பாராத விதமாக இன்று நீங்கள் வந்த சமயம் ஊருக்குள் மின்சார இணைப்புத் தடைபட்டுவிட்டது" என்றார். ஆம், அன்று நாங்கள் போய்ச் சேர்ந்தபோது மின் விளக்குகள் எரியவில்லை. அரிக்கன் விளக்கு வெளிச்சத்தில்தான் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந் தோம்.

திருநாமநல்லூர் என்றுதான் ஊரவர்கள் வழங்குவார்கள். எழுத்திலும் அப்படித்தான் வெகுகாலமாக வழங்கி வந்தது. தமிழுக்காக உழைத்த திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் இந்த ஊரில் ஒரு வித அபிமானங்கொண்டு, திருநாவலூர் என்ற பழமை யான திருப்பெயரையே பத்திரங்களிலும் தபால் முதலிய உத்தியோகத் துறைகளிலும் உபயோகிக்க வேண்டுமென்று பிரசாரம் செய்தபின், இப்போது திருநாவலூர் என்ற பெயர் வழக்கில் வந்துவிட்டது என்று விளக்கினார் மணியகாரர் ராம கிருஷ்ணபிள்ளை. (விழுப்புரத்திலிருந்து உளுந்தூர்ப்பேட்டை செல்லும் பெரிய சாலையில் பரிக்கல் என்ற இடத்திலிருந்து கிழக்கே பண்ருட்டிக்குச் செல்லும் பாதையிலுள்ளது திருநாவலூர்).

சாதாரண விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் ராம கிருஷ்ணபிள்ளை சமயத் துறையிலும் பெரியபுராணக் கதைகளிலும் ஈடுபாடுள்ளவராகக் காணப்பட்டார். ''ஒரு காலத்தில் இந்தக் கோயில் நல்ல நிலையில்தானிருந்தது. ஆனால் இப்போது ரொம்ப ஏழ்மை நிலையை அடைந்துவிட்டது. தருமபுரம் போன்ற மடங்கள் இதற்கு ஒன்றும் செய்வதாகக் காணவில்லை'' என்றார் அவர்.

சுந்தரமூர்த்தி நாயனார் பிறந்த ஊராச்சே, விசேஷமாக ஏதாவது உற்சவமுண்டா என்று கேட்டேன். மணியகாரர் குரல் நெகிழ்ந்தது. ''ஏதோ எங்களால இயன்றளவு நம்ம சுந்தரத்தைக் கவனித்துக்கொண்டுதான் வருகிறோம்'' என்றார்.

எனக்கு அப்படியே தூக்கி வாரிப்போட்டது. ''நம்ம சுந்தரம்'' என்று அந்த ஊர் மக்கள் எத்தனை உரிமையோடு அழைக்கிறார்கள்! பல ஆண்டுகளுக்கு முன் நான் **மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில்** என்ற நூல் எழுத யாத்திரை செய்த போது அறந்தாங்கியிலிருந்து ஆவுடையார் கோயிலுக்கு என்னை ஏற்றிச் சென்ற வண்டிக்காரக் கிழவர் கறுப்பையாபிள்ளையும் மாணிக்கவாசகரை ''நம்ம மாணிக்கம்தானே!'' என்று சொந்தம் கொண்டாடியது எனது ஞாபகத்துக்கு வந்தது.

ராமகிருஷ்ணபிள்ளை சொல்ல ஆரம்பித்தார்: ஆடிப் பூரத்தில் இங்குள்ள அம்பாளுக்கு விசேஷ உற்சவம் முடிந்தவுடன், உத்தரம், அத்தம், சித்திரை, சுவாதி ஆகிய நாட்களில் சுந்தரருக்கு உற்சவங்களுண்டு. அவர் வாழ்க்கை வரலாற்றோடு சம்பந்தமான பரவை கல்யாணம், சங்கிலிநாச்சியார் கல்யாணம், முதலையாய்ப் பிள்ளையை மீட்டுக்கொடுத்த அற்புதம், சேரமான் பெருமாளோடு திருக்கைலாயம் சென்ற காட்சி—இவையெல்லாம் சிறப்பாக இந்த உற்சவங்களில் காண்பிக்கப்படும்.

''பல ஆண்டுகளுக்கு முன்னர் திருநாவலூரிலிருந்த சுந்தரமூர்த்தி விக்கிரகத்தை திருவாரூருக்குத் தமது காதலி பரவையாரைப் பார்க்கச் செல்வதாகப் பாவித்து, விசேஷ வைபவத்தோடு கொண்டு போய் வருவது வழக்கமாயிருந்தது. ஆனால் இதில் சில தகராறுகள் காரணமாக அந்த வழக்கம் நிறுத்தப்பட்டு விட்டது'' என்று சொன்னார் ராமகிருஷ்ணபிள்ளை.

என்ன தகராறு என்று கேட்டதற்கு அவர் சொன்னார்: ''திருவாரூரிலுள்ளவர்கள் ஒருமுறை எங்கள் சுவாமியைத் திருப்பி அனுப்பாமல் நிறுத்தி வைத்துவிட்டார்கள். எங்களூர் செம்பட

வர்கள் இரவோடிரவாக அந்த விக்கிரகத்தை எடுத்து வந்து விட்டார்கள். சிவனுக்குக் காவல்காரர் என்ற பொருளில் இவர்களுக்கு ''சிவன் படையர்'' என்றுதான் பெயர். அது செம்படவர் என்று திரிந்து விட்டது. இன்றைக்கும் இவர்களுக்குப் பரிவட்டம் கட்டி, சுவாமி எழுந்தருளப்பண்ணும்போது தூக்கிச் செல்லும் கைங்கரியம் கொடுக்கப்பட்டிருக்கிறது'' என்றார்.

அர்த்தஜாமப் பூஜையின்போது சுவாமி தரிசனம் செய்தோம். சுவாமியின் பெயர் பக்தஜனேஸ்வரர், நாவலேசுவரர். அம்பாள் பெயர் மனோன்மணி, சுந்தராம்பிகை. வெளிப் பிராகாரத்தில் அம்மனுக்குத் தனிக் கோயிலுண்டு. வரதராஜப் பெருமாளுக்கும் ஒரு தனிக் கோயில் கட்டி வைத்திருக்கிறார்கள். உட்கோயிலுக்குப் பெயர் திருத்தொண்டீச்சுரம் என்று பழைய கல்வெட்டுகளில் காணப்படுகிறது. இங்குள்ள சுந்தரமூர்த்தி உற்சவ விக்கிரகம் பிரமாத அழகுள்ளது. அவரது இரு மனைவியரான பரவையும் சங்கிலியும் இருபக்கங்களிலும் ஒரே பீடத்தில் அமர்ந்திருக்கிற காட்சி ஒப்பற்றது. பரவையின் சரித்திரம் தெரிந்தவர்கள் அந்த உருவத்திலுள்ள திரிபங்க நிலையைக் கவனிக்காமலிருக்க முடியாது. சேரமான் பெருமாளுக்கும், பெற்றூர் சடையர் இசைஞானி யருக்கும் சுந்தரரை வளர்த்த நரசிங்க முனையருக்கும் அழகான உற்சவ விக்கிரகங்கள் வைத்திருக்கிறார்கள். எங்களுக்காக நடந்த விசேஷ பூஜையின்போது நண்பர் ராஜு மிக உருக்கமாகவும் பண்ணோடும் சில தேவாரங்கள் பாடினார். அமைதியான அந்த வேளையில் தெய்வ சந்நிதியில் அவரது சுத்தமான சங்கீதம் மெய்ம்மறக்கச் செய்தது.

மறுநாட்காலை கோயில் அமைப்பைச் சுற்றிப் பார்த்தோம். சோழர் காலத்துக் கல்வெட்டுகள் பல இருக்கின்றன. தெற்குப் பிராகாரச் சுவரில் சண்டேசநாயனார் சரித்திரச் சிற்பம் காணப் படுகிறது. நவக்கிரகங்களுக்கு எதிரில் சூரிய விக்கிரகம் ஒன்று உள்ளது. கிரகங்களின் மத்தியிலுள்ள சூரிய விக்கிரகம் மற்றைய கோயில்களில் கிழக்கே பார்த்திருக்கும். ஆனால் இங்கே மேற்குப் பார்வையிலிருக்கிறது. கோயிலின் சந்நிதிக்கு எதிராக ஒரு சிறு கட்டிடம் சமீப காலத்தில் கட்டி வைத்துள்ளனர். ஒரு மடமாக உபயோகப்படுத்தப்படும் இக்கட்டிடம் இருக்கும் இடத்தில்தான் முன்னொரு காலத்தில் சுந்தரமூர்த்தி நாயனாரின் பெற்றூர் குடி யிருந்தார்கள் என்று ஊரில் ஓர் ஐதிகம் வழங்குகிறது. சுந்தரர் வளர்ந்த நரசிங்கமுனையர் மாளிகை எங்கிருக்கலாம் என்ற பேச்சு வந்த போது நண்பர் ராஜு சொன்னார்: ''பக்கத்தில் இரண்டு மைல் தூரத்திலே சேந்தமங்கலம் என்ற ஓர் ஊர் இருக்கிறது.

அங்கே பழைய ராஜாக்கள் ஆண்டதற்கு அடையாளமாக இடிந்து போன கோட்டையொன்று காணப்படுகிறது. நரசிங்கமுனையர் என்ற அரசனும் ஒரு காலத்தில் இங்கிருந்துதான் அரசாட்சி செய்து வந்தான் என்று சொல்லிக்கொள்கிறார்கள்'' என்றார்.

இந்தச் செய்தி எனக்கு அளவற்ற மகிழ்ச்சியைத் தந்தது. சேந்தமங்கலத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். தமிழ் நாட்டில் எண்ணற்ற கோயில் திருப்பணிகள் செய்து அழியாப் புகழ் பெற்ற காடவ மன்னன் கோப்பெருஞ்சிங்கன் இங்கிருந்து ஆட்சி செலுத்தினான் என்று சரித்திரத்தில் படித்த ஞாபகம் வரவே அந்தச் சேந்தமங்கலத்தைப் பார்த்துவிட வேண்டுமென்று தீர்மானித்து விட்டோம்.

பரந்த நெல்வயல்களைத் தாண்டி, கச்சா ரோடு வழியாகச் சேந்தமங்கலம் கிராமத்தை யடைந்தோம். இப்போது அது கிராமம்தான். ஆனால் முன்னொரு காலத்தில் அது ராஜதானியாக இருந்ததென்பதற்கு அடையாளங்கள் இன்றும் காணப்படுகின்றன. பாழடைந்த பெருங்கோட்டை; அதைச் சுற்றிலும் கொத்தளம். அதற்கடுத்து அகழி. இந்தச் சின்னங்களெல்லாம் கோப்பெருஞ்சிங்கனும் அவனுக்கு முந்தியவர்களும் ஆட்சி செலுத்திய பெருநகரம் என்பதற்குச் சாட்சி சொல்லுகின்றன. கோட்டை வாயிலைத் தாண்டி உள்ளே சென்றால் சிதைவுற்ற கர்ப்பக்கிருகமும் அதனுள் ஒரு லிங்க மூர்த்தியும் இருக்கக் கண்டோம். அந்த நிலையிலும் ஒரு விளக்கேற்றிக் கர்ப்பூர தீபம் காண்பிக்க ஓர் அர்ச்சகர் இருக்கக் கண்டு மகிழ்ச்சியடைந்தோம். நாங்கள் போய்ச் சேர்ந்த சமயத்தில் எங்கள் மோட்டார் வண்டியைச்சுற்றி ஒரு பெரிய கூட்டமே சூழ்ந்து விட்டது! வேடிக்கை பார்க்கச் சிறுவர்கள் மொய்த்துவிட்டனர். இந்த நெருக்கடியிலிருந்து எங்களைக் காப்பாற்ற வந்தார் ஒரு முதியவர். வெங்கடேசப் படையாச்சி என்று தம்மை அறிமுகப்படுத்திக்கொண்டார். ''பெரியவருக்கு இந்த ஊர்தானா?'' என்று முகமனுக்காக ஒரு கேள்வியைப் போட்டு வைத்தேன், அவ்வளவுதான், கிழவர் ஒரு குட்டிப் பிரசங்கமே செய்துவிட்டார். சேந்தமங்கலத்தின் பழம்பெருமை பற்றியும், மூன்றாவது ராஜராஜனைக் கோப்பெருஞ்சிங்கன் சிறை பிடித்து வைத்தது பற்றியும், வீரநரசிம்மன் உதவிக்கு வந்து ராஜராஜனை விடுவித்ததுபற்றியும் கதைகதையாக அந்தக் கிராமவாசி சொன்ன விவரங்களைக் கேட்ட நாங்கள் ஆச்சரியப் பட்டோம். புராதன சரித்திரத்திலும் புதைபொருளாராய்ச்சித் துறையிலும் அதிக ஈடுபாடுகொண்ட நண்பர் சிட்டி அந்தக் கிழவனின் சரித்திர அறிவைக் கண்டு திகைத்துப்போனார்.

விஜயாலயன் காலத்திலிருந்து நாநூறு ஆண்டுகள் ஒல்காப் பெருமையுடன் ஓங்கியிருந்த சோழசாம்ராஜ்யம் பதின்மூன்றும் நூற்றுண்டிலே நலியத் தொடங்கியது. சேந்தமங்கலத்தில் அப்போது பல்லவ பரம்பரையைச் சேர்ந்த காடவர் கோப்பெருஞ் சிங்கன் சோழரின் ராஜப் பிரதிநிதியாக ஆண்டுவந்தான். சோழமன்னன் மூன்றும் ராஜராஜன் அப்போது சுந்தரபாண்டிய னிடம் தோல்வியுற்று அடிபணிந்து கப்பம் கட்டி வந்தான். இதை அனுகூலப்படுத்திக்கொண்டு கோப்பெருஞ்சிங்கன் சுந்தர பாண்டியனின் நட்பைப் பெற்று, அவனுடன் உடன்பாடு செய்து கொண்டு, ராஜராஜனைப் புறக்கணித்து, தானே தனியரசன் என்று சேந்தமங்கலத்திலிருந்து ராஜ்யாதிகாரம் செய்தான். சோழர் வசமிருந்த தொண்டைமண்டலத்தின் பெரும்பகுதியும் கோப்பெருஞ்சிங்கனின் ஆட்சிக்குட்பட்டது. இந்தச் சமயத்தில் சோழமன்னன் புதிதாகக் கிடைத்த போசளரின் வலிமையை நம்பி, சுந்தரபாண்டியனுக்குக் கொடுக்க வேண்டிய கப்பத்தைக் கொடுக்காது உதாசீனம் செய்தான். பாண்டியன் போர் தொடுத்தான். ஈடுகொடுக்க முடியாத சோழன் வடக்கு நோக்கிப் போசள நரசிம்மனை அடையலாம் என்று ஓடிச் சென்றபோது வலியிழந்து கோப்பெருஞ்சிங்கன் கையில் அகப்பட்டுச் சேந்த மங்கலத்தில் சிறை வைக்கப்பட்டான். இதையறிந்த போசள மன்னன் வீரநரசிம்மன் தனது சேனைத் தலைவர் இருவரை யனுப்பிக் கோப்பெருஞ்சிங்கன் மீது போர் தொடுக்க ஏவினான். ஆனால் ராஜராஜனே கோப்பெருஞ்சிங்களோடு சமாதானம் பேசித் தன்னை விடுவித்துக் கொண்டான் என்று சொல்லப்படுகிறது. இந்தக் கதையெல்லாம் **கத்யகர்ணமிர்தம்** என்ற ஒரு பழைய நூலில் காணப்படுகிறது. கடலூரையடுத்துள்ள திருவேந்திபுரக் கோயிலில் காணப்படும் ஒரு கல்வெட்டிலும் மேற்சொன்ன சம்பவம் எழுதப் பட்டிருக்கிறது.

கோப்பெருஞ்சிங்கன் அரசாண்ட இடம்தான் இப்போது சேந்தமங்கலத்தில் இடிந்து போன கோட்டை கொத்தளங்களாகக் காணப்படுகிறது. அவன் அளவிறந்த சிவபக்தன். சிதம்பரம், திருவண்ணுமலை, விருத்தாசலம் முதலிய கோயில்களில் அவன் முயற்சியில் நடந்துள்ள சிற்ப வேலைப்பாடுகள் கொஞ்சநஞ்சமல்ல. ''சகலபுவனச் சக்கரவர்த்தி அவனியாளப் பிறந்தான் கோப்பெருஞ் சிங்கதேவன்'' என்ற பெயர் சிதம்பரம் கோயில் சுவர் ஒன்றிலுள்ள கல்வெட்டில் காணப்படுகிறது. கோப்பெருஞ்சிங்கன் இசை, நாட்டியம் முதலிய நுண்கலைகளிலும் வல்லவன் என்று சொல்லப் படுகிறது. சிதம்பரம் கிழக்குக் கோபுரவாயிலிலுள்ள நடன சிற்பங்களைச் செதுக்கி வைக்கச் செய்து, நமது புராதனமான

பரதநாட்டியத்தின் தாண்டவ லக்ஷணங்களை அழியவிடாமல் காப்பாற்றி வைத்த பெருமை கோப்பெருஞ்சிங்கனைச் சாரும்.

சேந்தமங்கலத்தில் சிலநேரம் வெங்கடேசப் படையாச்சியுடனும் மற்றவர்களுடனும் பேசிக் கொண்டிருந்தபோது படையாச்சியின் கதைமெருகை மறந்துபோகாமலிருக்க நாங்கள் டேப் ரிகார்ட் செய்து கொண்டோம். கிழவருக்கு ஒரே ஆனந்தம். பேச்சு சூடு பிடித்துப் பல உபகதைகளையும் தமது கற்பனையில் வந்த தொடர்கதைகளையும் பிரவாகமாக அளந்துவிட்டார். சாளுக்கிய அரசன் வீரநரசிம்மனை ''நரசிம்ம பல்லவன்'' என்று சொன்னார். ''அவனியாளப் பிறந்தான்'' என்ற கல்வெட்டு வாசகத்தை வெங்கடேசப் படையாச்சி தமது சொந்த வாசகத்தில் ''நானே உலகாளப் பிறந்தவன்'' என்று வியாக்கியானப்படுத்திக் கொண்டு கதை சொன்னதை நினைத்துப் பார்க்கும்போது அந்தக் கிராமப்புறக் கிழவரின் அனுபவ ஞானத்தை மெச்ச வேண்டியிருக்கிறது. இந்தச் சம்பாஷணையின் போது கிழவர் வேறு பல தகவல்களையும் சொன்னார். சேந்தமங்கலக் கோட்டையிலும் பக்கத்தில் புதையுண்டு கிடக்கும் கட்டிடங்களிலுமிருந்து கருங்கற்களை எடுத்து அவற்றை உடைத்து ஜல்லியாக்கி அரசாங்கத்துக்குத் தெரியாமல் பெரிய வியாபாரம் செய்யும் சிலரைப்பற்றி விவரித்தார். நாங்கள் கிழவரின் பேச்சை ரிகார்ட் செய்கிறோமென்பதை அந்த வழியே சைக்கிளில் வந்து கொண்டிருந்த கிராமத்து நாகரிக இளைஞன் ஒருவன் கவனித்ததும், இடையில் வந்து குறுக்கிட்டு, ''தாத்தா, உனக்கேன் இந்த வம்பு? தெரியாத விஷயங்களைச் சொல்லி மாட்டிக்கொள்ளாதே'' என்று சொல்லித் தடுத்தான். அது கிழவருக்கு ஆத்திரத்தை மூட்டியது. அவர் திருப்பிப் பேச, கூட நின்றவர்கள் ஆரவாரிக்க, ஒரு பிரளயமே ஆகிவிடும்போலிருந்தது. சைக்கிள் வாலிபன் ஓசைப்படாமல் நழுவிவிட்டான். கிழவர் வெங்கடேசப்படையாச்சி ஒரு கலைக்களஞ்சியம். எத்தனையோ அருமையான தகவல்களை ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கிறார். அந்த மறக்கமுடியாத அனுபவத்தைப் பெற்ற பின்னர் நாங்கள் சேந்தமங்கலத்திடமும் படையாச்சியிடமும் விடை பெற்றுக்கொண்டு மறுபடியும் திருநாவலூருக்குத் திரும்பினோம்.

திருநாவலூரில் பிறந்த சுந்தரர் நரசிங்கமுனையர் என்ற அரசனால் வளர்க்கப்பட்டார் என்று முன்பு கண்டோம். அவருக்கு மணப்பருவம் வந்தபோது பக்கத்திலே புத்தூரில் வசித்த சடங்கவி சிவாசாரியார் என்ற அந்தணரின் பெண்ணை முறைப்படி பேசி, திருமண ஓலை அனுப்பி, மணநாளையும் நிச்சயித்தார்கள். நரசிங்க

முனையரும் சுந்தரரின் பெற்றோரும் எல்லா ஏற்பாடுகளையும் செய்து மாப்பிள்ளையைப் புத்தூருக்கு அழைத்துச் சென்றனர். அங்கு போனதும் நடந்த கதையைத்தான் முதல் அத்தியாயத்தில் கேட்டோம். கிழ வேதியர் வந்து தடுத்த இடத்தைத் தடுத்தாட் கொண்ட ஊர் என்று சொல்வார்கள். இப்போது கிராமத்தவர்கள் தடுத்தாவூர் என்று சொல்கிறார்கள். திருநாவலூரிலிருந்து திருவெண்ணெய் நல்லூருக்குப் போகும் வழியிலுள்ள ஒரு குக்கிராமம் இது. லிங்கம் வைத்த ஒரு குட்டிக் கோயில் மாத்திர முள்ளது.

சுந்தரருக்குப் பெண் பேசிய ஊர் புத்தூர் என்பது. முன்பு இதற்கு மணம் வந்த புத்தூர் என்று பெயர் இருந்தது. அது திரிந்து மணம் தவிர்ந்த புத்தூர் என்று மாறியது. இப்போது அந்தப் பகுதி மக்கள் 'மணமந்தபுத்தூர்' என்று வழங்குகிறார்கள். இது தடுத்தாவூருக்கு வடமேற்கே சிறிது தூரத்திலுள்ளது.

திருவெண்ணெய் நல்லூருக்கு வா, வழக்குப் பேசலாம் என்று கிழ வேதியர் சுந்தரரையும் மற்றவர்களையும் அழைத்துச் சென்றாரல்லவா? அங்கே நடந்த மற்றொரு நாடகத்தைப் பார்க்க நாமும் திருவெண்ணெய் நல்லூருக்குப் போவோம்.

3. விநோத வழக்கு

திருவெண்ணெய் நல்லூரிலே சொல்லி வைத்தாற் போல் சில பெரிய மனிதர்கள் கூடிப் பஞ்சாயத்து வைத்தார்கள். அவர்கள் முன்னிலையில் கிழ வேதியர் தமது வழக்கை எடுத்துரைத்து, ''முதியோர்களே! இந்தப் பையன் பெயர் ஆரூரன். இவன் பாட்டனுர் பெயரும் ஆரூரன். அவன், தானும் தன் சந்ததியாரும் எனக்கு அடிமையென்று உறுதிப்பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தான். அந்த ஓலையைக் காட்டி இவனிடம் நீ எனக்கு அடிமையென்றவுடன், இவன் அநியாயமாக ஓலையைப் பறித்துக் கிழித்தெறிந்து விட்டான். இது முறையா என்று நீங்கள்தான் தீர்ப்புக் கூறவேண்டும்'' என்று முறையிட்டார். இந்த வார்த்தைகளைக் கேட்ட முதியவர்கள் ஆச்சரியமடைந்து, ''அந்தணனுக்கு அந்தணன் அடிமையாவது நாங்கள் இதுவரை கேள்விப்படாத செய்தியாச்சே. நீர் சொல்வதில் ஏதாவது உண்மையுண்டா?'' என்று கேட்டனர். வேதியர் உடனே, ''நான் வீணாக உங்கள் முன்னால் பொய் வழக்கு ஏதும் கொண்டு வரவில்லை. இவன் பறித்துக் கிழித்த ஓலை இவன் பாட்டன், தானும் தன் சந்ததியும் எனக்கு அடிமையென்று எழுதித்தந்த அடிமைப் பத்திரம் என்பது உண்மை. அந்தப் பத்திரத்தைத்தான் இந்தப் பையன் கிழித்தெறிந்தான். இங்குள்ளவர்கள் எல்லாரும் பார்த்தார்கள், கேட்டுப் பாருங்கள்'' என்றார். பஞ்சாயத்தாருக்குச் சந்தேகம் தோன்றியது. அவர்கள் பிரதிவாதியாகிய ஆரூரன் என்ற சுந்தரரைப் பார்த்து, ''உமது பாட்டனுர் தன்னையும் தன் சந்ததியையும் சேர்த்து அடிமை செய்வதற்கு இசைந்து எழுதிக்கொடுத்த ஓலை என்று இவர் சொல்கிறார். அதை நீர் அவசரப்பட்டுக் கிழித்து விட்டதால் அது உமக்குச் சாதகமாக முடியாது. நீர் என்ன சொல்ல விரும்புகிறீர்?'' என்று கேட்டார்கள். அதற்கு சுந்தரர், ''நீங்களெல்லோரும் ஆகம சாஸ்திரங்களைக் கற்றறிந்தவர்கள். நான் ஆதி சைவ அந்தணன் என்பது உங்களுக்குத் தெரியும். அப்படியிருக்க இந்தப் பிராமணர் தமக்கு நான் அடிமையென்று

சாதித்தால் எப்படி நம்புவது? நடைமுறைக்கு மாறான ஒரு மாயைதான் இது. இதற்குமேல் நான் என்ன சொல்ல முடியும்?'' என்றார்.

பஞ்சாயத்து முதியவர்கள் யோசித்துப் பார்த்தார்கள். வழக்கமில்லாத ஒரு வழக்கென்று அவர்கள் உணர்ந்த போதிலும், சுந்தரர் கிழவரிடமிருந்த ஒரு பத்திரத்தை அவசரப்பட்டுக் கிழித்தெறிந்து விட்டதால், இதில் ஏதோ விஷயமிருக்கிறது; ஆகையால் தீரவிசாரித்து முடிவு சொல்லவேண்டுமென்று எண்ணியவர்களாக, கிழவேதியரைப் பார்த்து, ''நீர் இவர் உமக்கு அடிமையென்று சொல்வதை உறுதிப்படுத்த வேண்டும். இந்த நாட்டு முறைப்படி ஒரு வழக்கை நிரூபிப்பதற்கு ஆட்சி, ஆவணம், காட்சியென்ற மூன்று வகையான சாட்சிகளில் ஒன்றுயினும் வேண்டும். ஆட்சியென்பது உலகவழக்கு. அப்படியொரு வழக்கம் இருப்பதாக நாம் அறியமாட்டோ மாகையால், அதைத் தவிர்த்து ஆவணமிருக்கிறதா என்று பார்க்கவேண்டும். ஆவணமென்பது எழுத்து மூலமான சாட்சி. அதுதான் உமது கட்சியென்று தெரிகிறது. அதை இந்தப் பிள்ளை கிழித்தெறிந்து விட்டான் என்று சொல்கிறீர். அப்படியானால், காட்சி என்ற மூன்றுவது சாட்சி தேவை. அதாவது, உமது பத்திரம் எழுதப்பட்ட சமயத்தில் நேரில் கண்டவர்கள் சாட்சி ஏதாவது உண்டா?'' என்று கேட்டார்கள். கிழவேதியர் சாமானியர் அல்லர். பஞ்சாயத்துக் காரரைவிட அதிகம் தெரிந்த, அனுபவம் நிறைந்த மகாசமர்த்தர். அவர் சொன்னார், ''நீங்கள் சொல்வது அத்தனையும் எனக்குத் தெரிந்த விஷயந்தான். உலக வழக்கில்லை என்று நீங்கள் சொல்வதை ஏற்றுக்கொள்கிறேன். நேரில் கண்டவர்கள் தானும் இப்போது உயிரோடில்லை. நான் ஒருவன்தான் நீண்டநெடுங் காலம் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். எழுத்துமூலமான சாட்சி ஒன்றுதான் எனக்குண்டு. இந்தப் பிள்ளையாண்டான் கிழித்த ஓலை படியோலை. இப்படி ஏதாவது நடக்கும் என்று தெரிந்து தான் மூல ஓலையைக் காட்டாமல் நகல் ஓலையைக் காட்டினேன். மூல ஓலை என்னிடம் பத்திரமாக இருக்கிறது. அதுதான் எனக்கு முக்கிய சாட்சி'' என்றார். இதைக் கேட்ட பஞ்சாயத்தார், ''அப்படியானால் அதைக்காட்டும். அதன் உண்மையை நாங்கள் ஆராய்ந்து முடிவு சொல்கிறோம்'' என்றனர். கிழவனார் சிறிது தயங்கினார். சுற்றும் முற்றும் பார்த்தார். மடிசஞ்சியை ஒருதரம் தடவிக்கொண்டு, சிறிது சந்தேகம் தொனிக்க, ''இந்தப்பத்திரம் தான் எனக்கு ஆதாரம். இதையும் இவன் என் கையிலிருந்து பறித்துக் கிழித்துவிட்டால் என்ன செய்வது?'' என்று ஒரு குட்டி நாடகம் ஆடினார். ''அப்படி ஏதுவும் நடவாமல் நாங்கள்

பார்த்துக் கொள்கிறேம்'' என்று பஞ்சாயத்தார் உறுதி கொடுத்த பின், கிழவர் தமது மடிசஞ்சியிலிருந்து மற்றொரு ஓலைச்சுருளை எடுத்துக் கொடுத்தார். பஞ்சாயத்தாரின் கணக்கர் ஒருவர் அந்த ஓலையை வாங்கிப் பிரித்து அதிலிருந்த வாசகத்தைப் பின்வருமாறு யாவரும் கேட்கப் படித்துக் காண்பித்தார்:

> ''திருநாவலூரிலிருக்கின்ற ஆதிசைவனுகிய ஆரூரன் என்கின்ற நான், திருவெண்ணெய் நல்லூரிலிருக்கின்ற பித்தனுக்கு, நானும் என் சந்ததியாரும் வழிவழித் தொண்டு செய்வதற்கு உள்ளும் புறமும் ஒப்ப உடன் பட்டு எழுதிக்கொடுத்த அடிமைப் பத்திரம் இது. இப்படிக்கு ஆரூரன்''

இந்த வாசகத்தைப் படிக்கக் கேட்டவுடன் சபையிலுள்ள அத்தனே பேரும் ஆச்சரியப்பட்டனர். ஓலையில் ஆரூரன் கையெழுத்தும் சாட்சிகள் கையெழுத்தும் காணப்பட்டன. பஞ்சாயத்தார், மேலும் உறுதிப்படுத்துவதற்காக, அந்தப் பத்திரத்தை வாங்கிப் பார்த்து, அதிலிடப்பட்டிருந்த கையெழுத்து ஆரூரர் பாட்டனூர் எழுத்துத்தானு என்று தீர்மானிக்குமாறு சுந்தரரை அழைத்தனர். உடனே கிழவேதியர், ''இந்தச் சிறு பிள்ளைக்கு அவன் பாட்டனூர் கையெழுத்து எப்படித் தெரியவரும்? நமது ஊரின் ஆவணக்காப்பு நிலையத்திலேயுள்ள ஓலைகள் பலவற்றினுள் ஆரூரன் கையெழுத்திட்ட ஓலைகள் இருக்கும். அவற்றை யெடுத்து ஒப்பிட்டுப் பாருங்கள்'' என்று வழிசொல்லிக் கொடுத்தார். அவ்வாறே வரவழைத்துப் பார்த்ததில் இரு எழுத்துக்களும் பொருந்தியிருந்தன! அது மாத்திரமல்ல, சாட்சிக்குக் கையெழுத்துப் போட்டவர்களின் எழுத்தும் பொருந்தியிருக்கக் கண்டார்கள். கிழவனூர் முகத்தில் வெற்றிப் புன்னகை தவழ்ந்தது. ஓலையைத் திருப்பி வாங்கிப் பத்திரமாய் மடிசஞ்சியில் அடக்கி வைத்துக் கொண்டார். கூடியிருந்த பஞ்சாயத்தாரை, இப்பொழுது என்ன சொல்கிறீர்கள் என்ற பாவனையில் நிமிர்ந்து பார்த்தார். பஞ்சாயத்தார் தமது தீர்ப்பை யளித்தார்கள்: ''வேதியர் கட்சி உண்மையானதென்று நிரூபிக்கப் பட்டுவிட்டது. ஆரூரர் என்ற சுந்தரர் இவருக்கு அடிமையே'' என்று சொல்லிவிட்டு, சுந்தரரைப் பார்த்து, ''நீர் வேறு ஏதாவது சொல்லவேண்டியுள்ளதா?'' என்று கேட்டனர். சுந்தரர் சொல்லவோ செய்யவோ ஒன்றும் தோன்றுதவராய், ''அப்படி யானுல் நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை. தீர்ப்பில் நிரூபிக்கப் பட்ட ஒப்பந்தப்படி நடக்கக்கடவேன்'' என்றார். சபையார் கொஞ்சம் யோசித்து, இதில் தம்மையுமறியாமல் ஏதோ மர்மம்

இருக்கிறதென்று உணர்ந்து, கிழவரைப் பார்த்து, "பெரியோரே! உமது கட்சியை நீர் நிரூபித்துவிட்டீர், சரி. ஆனால், உமது ஊர் திருவெண்ணெய் நல்லூர்தான் என்று சொன்னீரே. உம்மை நாங்கள் இதுவரை அறிந்திருக்கவில்லையே. உமது வீடு எங்கே யிருக்கிறது என்று தெரியலாமா?" என்று கேட்டார்கள். கிழவர் உடனே, "இதுவரை நீங்கள் தெரிந்துகொள்ளாம விருப்பது ஆச்சரியம்தான். வாருங்கள் காட்டுகிறேன்" என்று சொல்லி எல்லாரையும்அழைத்துக் கொண்டு, திருவெண்ணெய் நல்லூரி லுள்ள அருள்துறை என்ற ஆலயத்தினுள் நுழைந்தவர்தான், திரும்பி வரவில்லை!

இந்த அதிசயத்தைக் கண்டவர்கள் திகைத்தனர். என்ன அற்புதம் என்று மெய்ம்மறந்தனர். உடனே அசரீரி ஒன்று கேட்டது: "ஆரூரா, நீ முன்னே எமக்குத் தொண்டனையிருந்தாய். பெண்கள் மேல் நீ இச்சை வைத்ததினால் நம்முடைய ஆஞ்ஞை யினால் பூமியிலே பிறந்தாய். இப்பொழுது துன்பத்தைத் தருகின்ற சம்சாரபந்தம் உன்னைத் தொடராதபடி நாமே வலிய வந்து உன்னைத் தடுத்தாட் கொண்டோம்" என்றது அந்த அசரீரி.

சுந்தரர் மெய்சிலிர்த்து ஆனந்தக் கண்ணீர் பொழிய, அருள்துறை மூலஸ்தானக் கடவுளை விழுந்து நமஸ்கரித்து, "அடியேனை ஆட்கொண்ட பெருமானே! உன் கருணைதான் என்னே" என்று தேம்பி அழுதார். அசரீரி மேலும் கேட்டது: "நீ நம்மோடு வன்சொற்களைச் சொல்லி வாதாடினாய். ஆகையால் நீ வன்றொண்டன் என்ற பெயரைப் பெறுவாய். நீ நமக்கு அன்போடு செய்யத்தக்க அருச்சனை, இன்னிசைத் தமிழ்ப்பாடலே யாம். ஆதலால் பாடிக்கொண்டே வாழ்ந்து திரும்பி நம்மிடம் வரக்கடவாய்" என்றார் இறைவன். சுந்தரர் உளம் நெகிழ்ந்துருகி, "ஒன்றும் அறியாத சிறியேனுக்கு நல்லறிவைப் புகட்டி உய்விக்க வேண்டும். அடியேன் தேவீருடைய அநந்த குணங்களில் எதைத் தான் அறியவல்லேன்? என்ன சொல்லிப் பாடுவேன்?" என்றார். உடனே இறைவன் பதிலளித்தார், "நீ என்னை நன்றாக அறிவாய் நம்பி. சற்று முன்தான் நீ என்னைப் 'பித்தன்' என்றழைத்தாய். ஆகையால், பித்தனென்றே சொல்லிப்பாடு" என்றார், பிச்சமூர்த்தி யாகிய பரம்பொருள். சுந்தரர் உளம் குளிர்ந்தது. அவர் நாவில் தண்டமிழ்க் கவிதை கடல்போல் பெருகியது. மடை திறந்து திருவாய் பாடியது:

பித்தா பிறை சூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
அத்தா வுனக் காளா இனி அல்லேன் எனலாமே

கடவுள் நம்பிக்கை யுள்ளவர்களுக்கு இறைவனுடைய திருவிளையாடல்கள் எத்தனையோ நடக்கும். என்னென்ன காட்சிகளோ தோற்றும். ஆனால் அவன் அருள் எல்லார்க்கும் கிட்டுமா? சுந்தரர் அவனுல் ஆட்கொள்ளப்பெற்றார். ஆளுடைய நம்பியாகி, அந்த இடத்திலிருந்தே, எங்கெல்லாம் இறைவன் கோயிலுண்டோ அங்கெல்லாம் சென்று செந்தமிழ்ப் பாசுரங்கள் இன்னிசையுடன் பாடிப் பரம்பொருளுக்கு அர்ப்பணம் செய்யப் புறப்பட்டார்.

ஆரூரனைப் பார்த்து இறைவன் அசரீரியாக, ''நீ முன்னே எனக்குத் தொண்டனுயிருந்தாய்'' என்று சொன்னதில் ஒரு தனிக் கதையிருக்கிறது. சுந்தரர் தமது முற்பிறவியில் ஆலாலசுந்தரர் என்ற பெயரோடு சிவனது அடியார்களில் ஒருவராயிருந்தார். ஒருநாள் அவர் பூப்பறிப்பதற்காக நந்தவனத்துக்குச் சென்ற போது அநிந்தை கமலினி என்ற இரு பெண்களைக் கண்டு அவர்கள் மேல் ஆசை கொண்டார். அந்தத் தெய்வ மாதர்களும் ஆலால சுந்தரரால் கவரப்பெற்றார்கள். இதையுணர்ந்த இறைவன் சுந்தரரை அழைத்து, ''நீ இங்கே இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டியதில்லை. பூமியிலே மானிடனுய்ப் பிறந்து அங்கேயே இவர்களோடு இன்பமனுபவிப்பாய்'' என்று சொல்லிவிட்டார். ஆலாலசுந்தரர் பரிந்து வேண்டிக்கொண்டு, ''அடியேன் மனிதப் பிறப்பை யெடுத்து மயங்கும் சமயத்தில் தேவரீரே வந்து என்னைத் தடுத்து ஆட்கொண்டருளவேண்டும்'' என்று பிரார்த்தித்தார். இறைவனும் அதற்கிணங்கி ஆசீர்வதித்தார் என்பதும், அநிந்தை கமலினி என்பவர்களே சங்கிலியாகவும் பரவையாகவும் பூமியில் அவதரித்துச் சுந்தரர் வாழ்க்கையில் பங்கு கொண்டனர் என்பதும் புராண வரலாறு.

* * *

திருநாவலூரிலிருந்து ஒரு சில மைல் தூரம் கிழக்கே, கடலூர்-திருக்கோவலூர் முக்கிய சாலையிலுள்ளது திருவெண்ணெய் நல்லூர். சைவத்துக்கும் தமிழுக்கும் பெருமை தேடித்தந்த ஊர் திருவெண்ணெய் நல்லூர். மகாகவி கம்பனுக்கு ஆதரவளித்த வெண்ணெயூர்ச் சடையன் என்ற சடையப்ப வள்ளல் வாழ்ந்த இடம் இது. உறையூர், சேய்ஞலூர் போன்று, சோழருக்கு முடி சூட்டும் தகுதி பெற்ற வேளாளப் பெருமக்கள் வாழ்ந்த பெரும் பதி. உமாதேவியார் வெண்ணெயினுல் கோட்டை கட்டி அதனிடையே பஞ்சாக்கினியை வளர்த்து தவம் புரிந்த காரணத்தினுல் வெண்ணெய் நல்லூர் என்ற பெயர் பெற்றதாக ஒரு கதை. பதின்மூன்றும் நூற்றாண்டிலே சிவஞான போதம் என்ற சைவ சித்தாந்த சாத்திர நூலைச் செய்த மெய்கண்ட தேவர் என்ற

மகான் இங்கிருந்துதான் பரஞ்சோதி முனிவரின் ஆசி பெற்று அந்த நூலைச் செய்தார். அவர் சமாதியடைந்த இடத்திலே இப்போது ஒரு மடம் கட்டி வைத்துள்ளார்கள். கோயிலுக்குள்ளேயும் மெய்கண்டாருக்கு ஒரு தனிச் சந்நிதி அமைத்து வைத்துள்ளார்கள்.

திருவெண்ணெய்நல்லூர் கோயிலுக்கு அருள்துறை என்று பெயர். சுந்தரர் பாடலில் அவர் ''நல்லூர் அருட்டுறை'' என்றே குறிப்பிடுகிறார். கோயிலின் சுவர்களில் காணப்படும் கல்வெட்டுக்களில் தடுத்தாட்கொண்ட தேவர், ஆளுடைய நம்பி, வழக்கு வென்ற திருவம்பலம், ஆவணங்காட்டி யாண்டான் என்பன போன்ற சொற்கள் காணப்படுகின்றன. இவை சுந்தரருடைய வரலாற்றோடு சம்பந்தப்பட்ட பொருள் நிறைந்த சொற்கள். கர்ண பரம்பரையாக வழங்கி வந்த செய்திகளை, சோழர் காலத்துச் சிற்பிகள் கல்லிலே எழுதி வைத்துவிட்டனர். இங்குள்ள சுவாமியின் பெயர் தடுத்தாட்கொண்ட தேவர் அல்லது கிருபாபுரீசுரர். வேற்கண்ணிநாயகி அல்லது மங்களாம்பிகை என்பது அம்பாள் பெயர். பங்குனியில் பன்னிரண்டு நாட்கள் பிரம்மோற்சவம் நடைபெறும். இதில் ஒன்று, ஐந்து, ஏழாவது நாட்களில் தடுத்தாட்கொண்ட உற்சவம் நடக்கும். இக்கோயிலில் அர்த்தஜாமக் கட்டளை என்ற ஒரு விசேஷமுண்டு. இவ்வூரிலிருந்த ஒரு தனவந்தருக்கு நிரந்தரமாகத் தூங்க முடியாத ஒரு வியாதி இருந்ததாகவும், இதற்கு அவர் கிருபாபுரீசரை வணங்கி மங்களாம்பிகைக்கு விசேஷ அலங்காரம் செய்து பள்ளியறை ஊஞ்சலில் வைத்து, கிருபாபுரீசருக்கும் அலங்காரம் செய்து பாலமுது படைத்து பள்ளியறை நடை சாத்தி, மறுநாள் காலை விக்கிரகங்களை எடுத்து உரிய இடங்களில் சேர்க்க, ஒரு கட்டளை ஏற்படுத்தினர் என்றும், தனவந்தருக்கிருந்த நோய் நீங்கியதாகவும் சொல்வார்கள்.

கோயில் பிராகாரத்தின் வடகிழக்கில் நூற்றுக்கால் மண்டபம் என்று ஒன்றிருக்கிறது. இதுவே 'வழக்கு வென்ற திருவம்பலம்' என்றும் சொல்லப்படுகிறது. இங்குதான் இறைவன் சுந்தரர் மீது தொடுத்த வழக்கு விசாரிக்கப்பட்டதாக ஐதிகம். இங்குள்ள ஒரு கல்வெட்டிலே இரண்டாம் குலோத்துங்க சோழன் ஆட்சி இருபத்தொன்பதாம் ஆண்டில், ''வழக்கு வென்ற அம்பலம் கல்மண்டபமாகக் கட்டுவதற்குச் சில குடிகளின் வீடுகளை எடுத்துக்கொண்டு அவர்களுக்கு வேறு இடம் தந்ததாகச்'' செய்தி காணப்படுகிறது. கிழக்குக் கோபுர வாயிலையொட்டி சுந்தரமூர்த்திக்கு ஒரு தனிச் சந்நிதி இருக்கிறது. இறைவன் அவரைத் தடுத்தாட் கொண்ட காட்சி, கோயில் விமானத்தில் சுதையில் வடிக்கப்பெற்றுள்ளது.

சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளின் முன்னர் மாணிக்கவாசகர் சம்பந்தமாக யாத்திரை செய்தபோது நான் திருவெண்ணெய் நல்லூரைத் தரிசித்திருக்கிறேன். மீண்டும் இப்போது அங்கு போனபோது கோயில் மிகவும் சீர்கெட்டுப் போயிருப்பதைப் பார்த்து வருந்தினேன். ஒழுங்கான பராமரிப்பில்லை. முள்ளும் புதரும் வளர்ந்து பிராகாரம் எல்லாம் ஒரே காடு. சோழர் காலத்துச் சிற்பச் செல்வங்களில் ஒன்றுகிய திருவெண்ணெய் நல்லூரை இப்போது யாரும் கவனிப்பதாகத் தெரியவில்லை.

திருவெண்ணெய் நல்லூர் அருட்டுறையை வணங்கிய சுந்தரர் அங்கிருந்தபடியே ஸ்தல யாத்திரையில் புறப்பட்டார் என்று சேக்கிழார் சொல்கிறார். அவருக்குப் பேசப்பட்ட சடங்கவி சிவாசாரியார் பெண் வேறு மணம் செய்யாமலே காலம் கழித்து இறந்துபோனார் என்று தெரிகிறது. சுந்தரரின் தந்தை சடையனாரும் தாயார் இசைஞானியாரும், ஒரு தவக்குழந்தையைப் பெற்ற காரணத்தால் நாயனார் பதவியைப் பெற்றனர். சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையில் அவர் மறவாமல் இவ்விரு வரையும் தமது பாசுரத்தின் இறுதியில் வைத்து, ''என்னவனும் அரனடியே அடைந்திட்ட சடையன் இசைஞானி'' என்று பாராட்டுகின்றார். ஆகையால் தொண்டர் அறுபத்து மூவரில் இவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். சுந்தரரை வளர்த்தெடுத்த நரசிங்க முனையருக்கும் இந்த அறுபத்து மூவரில் ஓரிடம் கொடுக்கப் பட்டு நாயனார் பதவி கிடைத்திருக்கிறது. சுந்தரர் இவரை, ''மெய்யடியன் நரசிங்க முனையரையற்கடியேன்'' என்று பணி கின்றார். அவருடைய சிவபக்தியைப் பற்றி சேக்கிழார் தமது பெரியபுராணத்தில் ஒரு கதை சொல்கிறார்.

நரசிங்க முனையரையர் என்பது அவரது இயற்பெயர். அவர் திருமுனைப்பாடி நாட்டின் குறுநில மன்னர். முனையரையர் என்பது முனை நாட்டுக்கு அரசன் என்று பொருள். இவர் பல சிவாலயங் களுக்குச் சென்று திருவாதிரை நாளில் விசேட பூசை செய்து, அடியார்களுக்கு நூறு பொன் கொடுத்து அனுப்புவது வழக்கம். ஒருநாள் அவர் இவ்வாறு பொன் கொடுத்து அனுப்பும்பொழுது, தீய ஒழுக்கமுள்ள ஒருவர் தேகம் முழுவதும் விபூதி யணிந்து கொண்டு வந்து அடியார் கூட்டத்தில் ஒருவராக நின்றார். அவரைத் தெரிந்த மற்றவர்களெல்லோரும் வெறுத்து ஒதுங்கி நிற்கவும், நரசிங்க முனையர் அவரை வரவேற்று உபசரித்து, நூறு பொன்னல்ல, இருநூறு பொன் கொடுத்து அனுப்பினார்! சீலமில் லாதவராயினும் விபூதி யணிந்த மகிமைக்கு அவர் மரியாதை செலுத்தினார் என்பது காண்பிக்கப்பட்டது. அதனால் நரசிங்க முனையரையர் சிவகதி பெற்ற நாயனார்களில் ஒருவராயினார்.

4. தத்தா, நமர்!

திருவெண்ணெய் நல்லூரி லிருந்து புறப்பட்ட சுந்தரர் திருவதிகை என்ற தலத்தை நோக்கிக் கிழக்கே சென்றதாகக் கேள்விப்படுகிறோம். அவரைப் பின்பற்றிச் செல்வதற்கு முன்னால் மேற்கே பதினான்கு மைல் தூரத்திலுள்ள திருக்கோவலூர் என்ற தலத்தில் மெய்ப்பொருள் நாயனார் என்ற பெயருடையவர் ஆட்சி செய்தார் என்று நாம் சேக்கிழாரிடம் படித்திருப்பதால் அறுபத்து மூவரில் ஒருவராகிய அவரையும் தரிசித்துவிட்டுப் போகலாம் என்று வண்டியை அந்தத் திசையில் திருப்பச் சொன்னோம். எங்கள் யாத்திரையின் போது கார் ஓட்டி வந்த சாரதி ராதாகிருஷ்ணன் ஒரு பரம பக்தன். திருக்கோவலூரில் துறவு பூண்டிருந்த ஞானானந்தகிரி சுவாமிகளிடத்தில் அளவிறந்த பக்தியுள்ள சீடன். நாங்கள் திருக்கோவலூர் போகிறோம் என்ற வுடன் அவர் உற்சாகத்தைச் சொல்லி முடியாது. ஆனந்த பரவசத்தோடு காரை ஓட்டினார்.

பெண்ணையாற்றின் தென்கரையி லிருக்கிறது திருக்கோவலூர். இது ஒரு காலத்தில் திருமுனைப்பாடி அல்லது மிலாட நாட்டுக்குத் தலைநகரா யிருந்தது. முனையதரையர் என்ற அரசர்கள் இங்கிருந்து ஆட்சி புரிந்தார்கள். சுந்தரமூர்த்தி நாயனாரை இளமைப் பருவத்தில் வளர்த்த நரசிங்க முனையரையரும் இந்த வர்க்கத்தைச் சேர்ந்தவரே. இவர்களில் ஒருவர்தான் மெய்ப்பொருள் நாயனார். இவர் நிறைந்த சிவபக்தர். வேதாகமங்களிலே மிகுந்த பற்றுள்ள வராகையால் ஆகமஞானத்தில் சிறந்த கல்விமான்களுக்குச் சன்மானங்கொடுத்து ஆதரித்து வந்தார். இவரது ராஜ்யத்தைக் கைப்பற்றத் துணிந்த ஒரு பகையரசன், முத்திநாதன் என்பவன், தன் சேனையுடன் வந்து போரிட்டுத் தோற்றவன், தந்திரமாக மாறுவேடத்தில் வந்து அரசனைக்கொல்ல எத்தனித்த கதைதான் மெய்ப்பொருள் நாயனாரின் பெருமையை உணர்த்துகிறது.

மெய்ப்பொருளார் சிவனடியாரிடம் பற்றுள்ளவரென்றும், விபூதி தரித்தவர்களுக்கு மரியாதை செய்பவரென்றும் தெரிந்த தால், முத்திநாதன் ஒருநாள் உடல் முழுவதும் விபூதி பூசி முழு

ஞானிபோல் வேடம் தரித்துக்கொண்டு, அரசன் மாளிகைக்கு வந்தான். வெளி வாயில் காப்பவன் வணக்கம் செலுத்தி உள்ளே அனுப்பினன். அரசன் பள்ளியறைக்கு வந்தபோது அங்கு நின்ற அபிமான காவலாளியாகிய தத்தன் என்பவன், ''அரசர் தூங்கிக் கொண்டிருக்கிறார். அன்றியும், அரசியாரும் பக்கத்திலிருக் கிறார்கள். இப்பொழுது உள்ளே எவரும் செல்ல முடியாது'' என்றான். ஆனால் முத்திநாதன், ''நான் அவசியம் அரசனுக்கு ஆகமோபதேசம் செய்ய வந்திருப்பதால் தடுக்காதே'' என்று சொல்லிவிட்டுத் தானகவே உள் நுழைந்தான். சந்நியாசி ஒருவர் உள்ளே வருவதைக் கண்ட அரசி அரசனைத் தட்டி எழுப்ப, மெய்ப்பொருளார் கண் விழித்து, வந்தவரை வணங்கி, ''சுவாமி! தேவரீர் இங்கு எழுந்தருளக் காரண மென்னவோ?'' என்று கேட்டார். சந்நியாசி, ''நமது சமயத்திலே இறைவன் அருளிய ஆகமங்களில் இதுவரையிலும் காணப்படாத ஓர் ஆகமத்தை உமக்குப் போதிக்கும்படி கொண்டு வந்திருக்கிறேன்'' என்றார். அரசன் மனமகிழ்ந்து, அதனைக் கேட்க, ''பெண்கள் இருக்கு மிடத்தில் குரு உபதேசம் செல்லாது. ஆகையால் அரசியார் இங்கிருக்கும்போது அதனைச் சொல்லலாகாது. நாம் இருவரும் தனிமையிலிருந்தால்தான் அது முடியும்'' என்று சந்நியாசி சொன்னார். இதைக் கேட்ட அரசி தாமாகவே வேறிடத்துக்குச் சென்றதும், இதுதான் சமயமென்று கண்ட போலிச் சந்நியாசி முத்திநாதன், தான் கொண்டு வந்திருந்த புத்தகக் கட்டுப் போன்ற கட்டை அவிழ்த்து அதனுள் மறைத்து வைத்திருந்த கட்டாரியை எடுத்து அரசனைக் குத்தினன். ஏற்கெனவே கொஞ்சம் கடைக்கண் வைத்திருந்த வாயிற்காவலன் தத்தன் உள்ளே பாய்ந்து தன் கைவாளினால் முத்திநாதனை வெட்டப் போனன். அந்தச் சமயத்திலும் மெய்ப்பொருளார், ''தத்தா! இவர் நம்மவர், சிவனடியார். தீங்கு செய்யாதே'' என்று தடுத்து நிறுத்தினர். அத்துடன் நில்லாது, ''இவருக்கு எவரும் எத்தகைய தீங்கும் செய்ய விடாது, பக்குவமாய் அழைத்துக்கொண்டு போய் ஊரைத் தாண்டி அனுப்பிவை'' என்றும் ஆக்ஞாபித்தார். அவ்வளவு தீவிர சிவபக்தியும் சிவசின்னமாகிய விபூதிமேல் பற்றுதலும் கொண்ட அரசன், மெய்ப்பொருள் நாயனார் என்று, அறுபத்து மூவரில் ஒருவராக இறைவனடி சேர்ந்தார். ''வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கடியேன்'' என்று சுந்தர மூர்த்தி நாயனார் தமது திருத்தொண்டத் தொகையில் பாடி வைத்தார்.

* * *

திருக்கோவலூர் வீரட்டானம் என்ற சிவஸ்தலத்திலே மெய்ப் பொருள் நாயனாருக்கு ஒரு சந்நிதி யிருக்கிறது. திருக்கோவலூர் மிகப் புராதனமான இடம். இது கீழூர் மேலூர் என்ற இரு பகுதிகளையுடையது. மேலூர் புகழ் பெற்ற வைஷ்ணவ ஸ்தலம். திரிவிக்கிரமர் அல்லது உலகளந்த பெருமாள் கோயில் மிகப் பெரியது. இங்குதான் முன்னொருகால் முதல் மூவர் என்று வணங்கப்படும் வைஷ்ணவ ஆழ்வார்கள் சந்தித்ததாக ஒரு கதை யுண்டு. ஒருநாள் இரவு திருக்கோவலூருக்கு வந்த பக்தர்களில் ஒருவர் மழை காரணமாக ஒரு வீட்டுத் தாழ்வாரத்தில் ஒதுங்கி நின்றார். வீட்டுச் சொந்தக்காரர் இதைக் கண்டு, அவரை உள்ளே அழைத்து, ''இதோ திண்ணையில் ஒருவர் படுக்க இடமிருக்கிறது. இங்கேயே படுத்திருந்து காலையில் போகலாம்'' என்று சொன்னார். யாத்திரிகர் நல்லதென்று திண்ணையில் படுத்துக்கொண்டார். சிறிது நேரம் கழித்து மற்றொரு யாத்திரிகரும் வந்து மழைக்கு ஒதுங்கி நின்று. ''இங்கே ஒதுங்கக் கொஞ்சம் இடமுண்டா?'' என்று கேட்டார். படுத்திருந்தவர் எழுந்து, ''உள்ளே வாருங்கள். இங்கே ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம்'' என்று அழைத்தார். சற்று நேரம் கழித்து,இன்னொரு யாத்திரிகரும் வந்து ஒதுங்க இடம் கேட்டபோது முன்னிருந்த இருவரும், ''இங்கே ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம்'' என்று சொல்லி மூன்றுமவரையும் உள்ளே அனுமதித்தார்கள், இடமோ மிகவும் குறுகியது. மூவரும் ஒருவழியாக நெருக்கிக் கொண்டு நின்றபோது நான்காவதாக ஒருவர் வந்து நுழைந் தாராம். முதல் மூவரும் பொய்கை யாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்ற வைஷ்ணவ குருபரம்பரையில் முதலாழ் வார்கள் என்று வைத்தெண்ணப்படுபவர்கள். நாலாவதாக வந்தவர்தான் இவர்களை ஆட்கொண்டருளிய பரம்பொருளாகிய திருமால் என்று கர்ணபரம்பரைக் கதையொன்றுண்டு. வில்லி புத்தூரரின் புதல்வர் வரந்தருவார் இதையொரு அழகான பாட்டில் குறிப்பிடுகிறார்:

பாவரும் தமிழால் பேர் பெறு பனுவல் பாவலர் பாதிநா ளிரவில்
மூவரும் நெருக்கி மொழிவிளக் கேற்றி முகுந்தனைத்
தொழுதநன் னூடு

கோவல் வீரட்டானம் என்ற மிகப் பழமையான சிவஸ்தலம் கீழூர் என்ற பகுதியி லிருக்கிறது. பக்கத்திலே தெளிந்த நீருடன் பெண்ணையாறு ஓடுகிறது. நல்ல மத்தியான வெயிலில் ஆற்று நீரில் கால்களை அலசி நடந்தபோது ஆற்றின் மத்தியில் ஒரு பெரிய குன்றையும் அதன்மேல் ஒரு சிறு கோயிலையும் கண்டோம். இந்தக் குன்று கபிலக்கல் அல்லது கபிலக்குன்று என வழங்கப்படுகிறது.

அது ஒரு சுவையான சரித்திரத்தையே நமக்கு ஞாபகமூட்டு கிறது.

இந்தப் பிரதேசம் ஒருகாலத்தில் மலையமான் என்ற குறுநில மன்னர் பரம்பரையின் ஆட்சியி லிருந்தது. கடையெழு வள்ளல் களில் ஒருவனை மலையமான் திருமுடிக்காரி யென்பவன் இந்தத் திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தான். பறம்புமலை அரசனுகவும் முல்லைக்கொடிக்குத் தேர் ஈந்த வள்ளலாகவும் புகழ்பெற்ற பாரி மன்னனிடம் நெருங்கிய நட்புரிமை கொண்டிருந்த புலவர் கபிலர், பாரி இறந்தபோது அவனது இரு புதல்வியரையும் அழைத்துக்கொண்டு வந்து திருமுடிக்காரிக்கு மணஞ்செய்து வைத்ததின், இவ்வுலகில் பாரியின்றித் தனித்து வாழ விரும்பாமல், திருக்கோவலூரில் பெண்ணையாற்றின் நடுவிலுள்ள குன்றின் மீது தீ மூட்டி உயிர் நீத்தார் என்று சொல்லப்படுகிறது. இதற்கு ஆதாரமாக திருக் கோவலூர் வீரட்டானேசுரர் கோயிற் கல்வெட்டொன்று பின் வருமாறு கூறுகிறது:

வன்கரை பொருது வருபுனல் பெண்ணை
தென்கரை யுள்ளது தீர்த்தத் துறையது
மொய்வைத் தியலும் முத்தமிழ் நான்மைத்
தெய்வக் கவிதை செஞ்சொல் கபிலன்
மூரிவண் தடக்கைப் பாரிதன் அடைக்கலம்
பெண்ணை மலையற்கு உதவி
மினல் புகும் விசும்பின் வீடுபேறு எண்ணிக்
கனல் புகும் கபிலக்கல்

இந்தக் குன்றின்மீது இப்போது ஒரு சிறிய கோயிலும் கட்டி வைத்திருக்கிறார்கள். ஆற்றுக்கு வடகரையில் தேவாரப்பாடல் பெற்ற திரு அறையணி நல்லூர் என்ற சிவஸ்தலம் இருக்கிறது. திருக்கோவலூர் வீரட்டானக் கோயில் மிகப் புராதனமானது. தமிழ்நாட்டிலுள்ள அட்டவீரட்டம் என்று சொல்லப்படும் எட்டு விசேட ஸ்தலங்களில் இதுவு மொன்று. வீர ஸ்தானம் என்பது வீரட்டானம் என வழங்குகிறது. சிவபெருமான் நிகழ்த்திய சில வீர நிகழ்ச்சிகளுக்கு அடையாளமாக இந்த எட்டு வீரட்டானக் கோயில்களும் நிலவுகின்றன. கண்டியூரில் பிரமனின் தலையைக் கொய்தது; திருவதிகையில் திரிபுரத்தை யெரித்தது; திருப்பறிய லூரில் தக்கனின் சிரசைக் கொய்தது; திருவிற்குடியில் சலந்தரன் என்ற அசுரனைக் கொன்றது; வழுவூரில் யானையை உரித்தது; திருக்குறுக்கையில் மன்மதனை எரித்தது; திருக்கடவூரில் யமனைச் சங்காரம் செய்தது; இங்கு திருக்கோவலூரில் அந்தகாசுரன் என்ற அசுரனைக் கொன்றதாகப் புராணமுள்ளது.

மத்தியான வேளையில் நாங்கள் இந்த ஸ்தலத்தை யடைந்ததால் உடனே உள்ளே போக முடியவில்லை. தென்னாட்டுக் கோயில்களில் பெரும்பான்மையும் மத்தியானம் பன்னிரண்டு மணியிலிருந்து பிற்பகல் நான்கு மணி வரையும் நடையைச் சாத்தி வைத்துவிடுகிறார்கள். இதனால் என்னைப் போல் யாத்திரை செய்பவர்களுக்குச் சங்கடந்தான். இருந்தபோதிலும் நிர்வாக அதிகாரியைத் தேடிப்பிடித்து அவருடைய உதவியைக்கொண்டு வீரட்டானேசுரர் கோயிலுட் சென்று தரிசனம் செய்தோம். மேற்குப் பார்த்த சந்நிதி. மூலவர் ஏழு அடி உயரமுள்ள சுயம்புலிங்கம். சுவாமி பெயர் வீரட்டேசுரர்; அம்பாள் பிருஹந்நாயகி. இங்குள்ள உற்சவ மூர்த்திதான் அந்தகாசுர சம்ஹார மூர்த்தி. இவருக்குப் பக்கத்தில் இருபுறமும் சுந்தரமூர்த்தி நாயனாரதும் மெய்ப்பொருள் நாயனாரதும் திருவுருவங்கள் இருக்கின்றன. இங்குள்ள கணபதி ஔவையாரால் வழிபாடு செய்யப்பட்டவர் என்று ஐதிகம். கபிலரைப் போலவே ஔவையாருக்கும் இந்தப் பறம்புமலைப் பிரதேசத்தில் நெருங்கிய தொடர்பு இருந்திருக்கிறது. இந்தக் கோயிலில் மாசி மாதத்தில் நடக்கும் பிரம்மோற்சவத்தில் ஆறாம் நாள் அந்தகாசுரமூர்த்தி திருவீதியுலா வருவார் என்றும் சொன்னார்கள்.

தேவாரம் பாடிய மூவரைப் போலத் திருக்கோவலூரில் வாழ்ந்த மெய்ப்பொருள் நாயனாருக்கு இந்த ஊரில் என்ன சிறப்பு என்று விசாரித்தபோது உள்ளூர் ஆசிரியர் ஒருவர், சில ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு வழங்கிய பாடப்புத்தகமொன்றிலே இந்த நாயனார் சரித்திரமும் சேர்க்கப்பட்டிருந்தது என்று சொன்னார். மெய்ப்பொருள் நாயனார் சரித்திரத்திலே ஒரு முக்கிய அம்சம், அவர் கொல்லப்படும் சமயத்திலும் எதிரியின் சிவ வேடத்துக்கு மதிப்புக் கொடுத்து, அவனைத் துணிக்க வந்த தமது காவலாளியிடம், ''தத்தா, இவர் நம்முடையவர். ஆகையால் கொல்லாதே'' என்று சொல்லித் தடுத்த காட்சிதான். இந்தப் பெருமையான வார்த்தைகள் சேக்கிழார் பெரிய புராணத்திலே, ''தத்தா நமர் எனத் தடுத்து வீழ்ந்தார்'' என்றுள்ளது. தஞ்சைப் பெரிய கோயிலில் இராஜேந்திர சோழன் காலத்தில் செதுக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றில், ''தத்தா நமர் காண் என்ற மிலாடுடையாருக்கு'' செப்புப் படிமஞ் செய்து வைத்த ஒரு செய்தி காணப்படுகிறது. மெய்ப்பொருள் நாயனாரது வரலாறு எத்தனையோ நூற்றாண்டுகளாகப் போற்றப்பட்டு வந்திருக்கிறது.

திருக்கோவலூருக்குச் சென்ற நாங்கள் அந்தப் புனித ஸ்தலத்தில் எழுந்தருளியிருந்த ஞானானந்தகிரி சுவாமிகளின் தரிசனத்தையும் பெற்று மகிழ்ந்தோம். நானும் என்னுடன் வந்த எனது

இணைபிரியா இலக்கிய நண்பர் ''சிட்டி'' சுந்தரராஜனும் சில விஷயங்களில் பிடிவாதமான கொள்கையுடையவர்கள். மடங்கள் சந்நியாசிகள் என்றால் கண்ணை மூடிக்கொண்டு அங்கீகரிக்க மாட்டோம். திருக்கோவலூரர் சுவாமிகளைப் பார்க்க எங்கள் கார் சாரதி ராதாகிருஷ்ணன்தான் துடித்துக் கொண்டிருந்தார். அவர் திருப்திக்காகவே நாங்களும் சுவாமிகளைத் தரிசிக்க இசைந்து புறப்பட்டோம். வழியிலே கடைத் தெருவில் ராதாகிருஷ்ணன் புஷ்பம் பழம் முதலிய பொருள்களை எமக்காகவும் வாங்கிச் சேமித்துக் கொண்டார். சற்று நேரத்தில் நகரின் வெளிப் புறத்தில் அமைதியுடன் நிலவும் ஞானானந்தகிரி சுவாமிகளின் ஆசிரமத்தையடைந்தோம். ஆசிரமம் முழுவதும் சாந்தம் பரவி நின்றது. சுவாமிகளைத் தரிசிக்கவும் பாதபூஜை செய்யவும் பக்தர்கள் பலர் அங்கங்கே அமைதியாகக் காத்திருந்தனர். சடைத்துப் படர்ந்து வளர்ந்திருந்த ஒரு மாமரத்தின் நிழலிலே நாங்களும் காத்திருந்தோம். தரிசனம் கிடைக்க இரண்டு மூன்று மணியாகலாம் என்ற செய்தி கிடைத்ததும் எங்களுக்குக் கொஞ்சம் சங்கடமாயிருந்தது. எப்படியாவது சுவாமிகளைப் பார்த்துவிட்டுத்தான் போகவேண்டுமென்ற ராதாகிருஷ்ணன் வேண்டுகோளையும் மறுக்க முடியவில்லை. விரைவிலே சுந்தரமூர்த்தி நாயனாரைத் தேடித் திருவதிகைக்குப் போக வேண்டுமேயென்ற கவலையொரு பக்கம். இந்தச் சங்கடமான நிலைமையில் ராதா கிருஷ்ணன் சளைக்காமல் அங்கும் இங்கும் தாவினார். ஏற்கெனவே இவர் ஆசிரமத்துக்கு மிக நெருங்கிய அறிமுகம் பெற்றவர். எப்படியோ எங்கோ நுழைந்து போய்த் திரும்பி, ''சுவாமிகள் இன்னும் ஐந்து நிமிஷத்தில் பின் வாயிலுக்கு எழுந்தருளுவார்கள். அப்போது நாம் தரிசனம் செய்ய அனுமதி கிடைத்துவிட்டது'' என்ற அற்புதமான செய்தியைக் கொண்டு வந்தார். அவர் சொன்னபடி சற்று நேரத்தில் அந்த மகானின் புண்ணிய தரிசனம் எமக்குக் கிடைத்தது. பழுத்த உடல். உருக்கி வார்த்த தங்கம் போன்ற மேனி. பால் வடியும் குழந்தையின் முகம். தீட்சண்யம் நிறைந்த கண்கள். உண்மையான ஞானியின் சொரூபத்தையே நாங்கள் அங்கு கண்டு எம்மையுமறியாமல் விழுந்து நமஸ்கரித்தோம். சுவாமிகள் வாய் திறந்து, ''தங்கிச் செல்லலாம்!'' என்றார்கள். எங்களுக்குத் திக் திக் என்றிருந்தது! ஏற்கெனவே ஒரு நேர அட்டவணையை வகுத்துக்கொண்டு யாத்திரையில் வந்த எங்களுக்கு அங்கே தங்கி மறுநாள் செல்வது பல ஏற்பாடுகளுக்கு இடைஞ்சல் செய்யுமாகையால், சுவாமிகளின் அன்புக் கட்டளையைக் கேட்டுத் திணறிவிட்டோம். மறுபடியும் அடியார் ராதாகிருஷ்ணனின் உதவியை நாடி, இந்தச் சங்கடத்தினின்றும் மீள வழி தேடினோம். முடிவில் சுவாமிகளிடம் எமது யாத்திரையின்

நோக்கத்தையும் திட்டத்தையும் ராதாகிருஷ்ணன் மூலமாகவே தெரிவித்தவுடன் அந்த மகான் மழலைப் புன்னகையுடன் எங்கள் கையில் சில பழங்களைத் தந்து, ''சென்று வரலாம்'' என்று விடை கொடுத்தனுப்பினர்! ஒரு பெரியவரின் ஆசீர்வாதம் கிடைத்ததே யென்ற நிறைந்த மனத்துடன் அங்கிருந்து புறப்பட்டோம்.

தமிழ்நாட்டு ஐதிகத்திலே சித்தர்கள் என்ற மகாபுருஷர்கள் பரம்பரையொன்று தொன்று தொட்டு வருவதாக ஒரு நம்பிக்கை யுண்டு. மனித சக்திக்கு அப்பாற்பட்ட பல சக்திகளை அவர்கள் பெற்றிருந்தார்கள் என்றும், இந்த மண்ணிலேதான் நடமாடி னாலும் புறவுலக அறிவும் நடமாட்டமும் அவர்களிடமுள்ளன என்றும் கருதப்படுகிறது. பதினெண் சித்தர்களைப் பற்றித் தமிழிலக்கியங்கள் உள்ளன. அவர்கள் பாடல்கள் என்று சொல்லப் படும் மறைமுகக் கருத்துக்கள் கொண்ட பாடல்கள் வழங்கு கின்றன. திருமூலர் திருமந்திரம் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தோன்றியது. பிற்காலத்திலே பாம்பாட்டிச் சித்தர், அகப்பேய்ச் சித்தர் முதலியவர்களின் பாடல்களையும் தமிழ்நாடு முழுவதும் கேட்டிருக்கிறது. சித்தர்கள் காயகல்பம் முதலிய சாதனைகளில் தேர்ச்சியடைந்தவர்கள் என்றும் பலநூறு ஆண்டுகள் நோய் நொடியின்றி வாழக் கற்றவர்கள் என்றும் சொல்வார்கள். திருமூலர் மூவாயிரம் ஆண்டு வாழ்ந்தார் என்று நம்பிக்கை நிலவுகிறது. திருக்கோவலூர் ஞானானந்தகிரி சுவாமிகளின் வயதைப் பற்றியும் எவரும் திட்டமாகச் சொல்ல முடியவில்லை. நாலைந்து தலைமுறையினருக்கு மேல் அவர்களை அறிந்துள்ளார்கள். சுவாமிகளை நாங்கள் தரிசித்த பின் சில மாதங்கள் கழித்து அவர்கள் சமாதியடைந்தார்கள். நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேல் இம்மண்ணில் நடமாடினார்கள் என்று விஷயமறிந்த பல அறிஞர்கள் சொல்கிறார்கள். அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. முழுமதி போன்ற அந்த முக விலாசத்தை மறக்க முடியாது. பல நூறு ஆண்டுகள் வளர்ச்சி பெற்ற பேரொளி அது.

பசியெடுக்க ஆரம்பித்தது எங்களுக்கு. போகுமிடமெல்லாம் சுத்தமான நல்ல சாப்பாடு எங்கே கிடைக்கும் என்று விசாரித்த பின்தான் ஏதாவது ஹோட்டலுள் நுழைவது எங்கள் வழக்கம். அப்படி விசாரித்தபோது, ''பட்டம்மாள் ஹோட்டலுக்குப் போங்கள். வீட்டுச் சமையல் மாதிரியிருக்கும்!'' என்று யாரோ ஒருவர் சொல்லி வைத்தார். கடைவீதியில் அந்த ஹோட்டலைத் தேடிக் காரைச் செலுத்திக்கொண்டு போகையில், தெருவோரத் தில் குழாயடியில் தண்ணீர் பிடித்துக்கொண்டிருந்த பத்து வயதுச் சிறுமி யொருத்தி, சிரித்த முகத்துடன், ''ஸார், ஹோட்டல் தேடுறீங்களா? வாங்கோ இங்கே, இதோ இருக்கு பட்டம்மாள்

ஹோட்டல். படியேறி மாடிக்குப் போங்கோ. நல்ல சாப்பாடு. நெய் போடுவாங்க'' என்று சிபார்சு செய்து வழிகாட்டினுள். அவளுக்கு நன்றி தெரிவித்துவிட்டு, நாங்கள் அந்த ஹோட்டலை நோக்கிச் சென்று கைகால் அலம்பிச் சாப்பிட உட்கார்ந்தோம். ஏதோ பரிமாறினுர்கள். ஆனல் நெய் இல்லை! சிறிது நேரத்தில் அந்தச் சிறுமியே நேரில் தோன்றினுள். அங்கே ''டேபிள் கிளீன்'' செய்யும் பெண் அவள் என்பது பின்புதான் தெரியவந்தது. பக்கத்தில் அவள் எதிர்ப்பட்டபோது, ''நெய் போடுவாங்க என்று சொன்னுயே, பரிமாறவில்லை'' என்று கேட்டோம். பதிலுக்கு அவள் ஒரு சிறு புன்னகை வீசிவிட்டுச் சிட்டுப் போல் பறந்தாள். சாப்பாடு முடிந்தபின் அவளையழைத்து, ''இந்தா உனது நெய்க் காசு'' என்று சொல்லி அவள் கையில் ஒரு பத்துப் பைசா வைத்தோம். நாணிக் கோணி அதை வாங்கிக்கொண்டு, தன் பெயர் புஷ்பவதி என்பதையும் தெரிவித்து ஓடிவிட்டாள். அந்தச் செல்வச் சிறுமியின் குறுகுறுத்த பிஞ்சு முகத்தை மறக்க முடியாது. நெடும் பயணம் செய்யும் போது இத்தகைய சிறிய அனுபவங்கள் நமது அலுப்பைத் தீர்த்து உள்ளத்திலே ஒரு புத்துணர்ச்சியைத் தருகின்றன.

5. திருவடியே சிவலோகம்

திருவெண்ணெய்நல்லூரில் தடுத்தாட் கொள்ளப்பட்ட சுந்தரர் 'வன்தொண்டர்' ஆகி, இறைவனின் நெருங்கிய தோழமையைப் பெற்று, செந்தமிழ்ப் பாமாலை பாடப் புறப்பட்டார். காலம் காலமாகவே நமது நாட்டில் இறைவனுக்குக் கோயில்கள் அமைக்கப்பட்டு வந்திருக்கின்றன. சாதாரணமாக ஒரு மரத்தடியில் குடிசை போட்டு இறைவன் வடிவத்தை அங்கு வைத்தார்கள். மண்ணுலும் சுதையாலும் மரத்தாலும் கோயில் கட்டினார்கள். பின்னர் கல்லைக் குடைந்து குகைக் கோயில் சமைத்தார்கள். அதன் பின்னர் கற்றளி என்ற கருங்கல் கோயில்களையும் கட்டினார்கள். சுந்தரமூர்த்தி நாயனார் காலத்திலேதான் கற்றளி என்ற கற்கோயில்கள் கட்ட ஆரம்பித்த நிலையென்று சரித்திரத்தில் படிக்கிறோம். ஆனால் சுதையாலும் மண்ணுலும் மரத்தாலும் கட்டிய கோயில்கள் பல அதற்கு முன்னரே இருந்தன. சுந்தர மூர்த்தி ஒவ்வொரு கோயிலாகத் தரிசித்து, அங்கங்குள்ள மூர்த்தியை வணங்கி, தேவாரம் சூடி அருச்சித்தார். திருவெண்ணெய்நல்லூரிலிருந்து திரும்பி வந்து தமது பிறப்பிடமாகிய திருநாவலூரைத் தரிசித்துவிட்டு, மேலே திருத்துறையூரில் ஒரு பதிகம் பாடிக்கொண்டு, தில்லையை நோக்கி நடந்தார். போகும் வழியில் பெண்ணையாற்றைக் கடந்து திருவதிகை என்ற ஸ்தலத்தின் எல்லைக்கு வந்தபோது அஸ்தமன வேளையாகிவிட்டது. திருவதிகை திருநாவுக்கரசு நாயனார் என்ற அப்பர் சுவாமிகளோடு தொடர்பு கொண்ட புண்ணிய ஸ்தலம். அத்தகைய மகத்துவம் பொருந்திய பூமியில் தாம் கால் மிதிப்பது தகாது என்று அஞ்சிய சுந்தரர், பக்கத்திலிருந்த ஒரு மடத்திலே போய்த் தங்கினார். அந்த மடம் சித்தவடமடம் என்று சொல்லப்படுகிறது.

சித்தவடமடத்தில் போய் சுந்தரர் தம்முடன் தொடர்ந்து வரும் அடியார் கூட்டத்தோடு அன்றிராப் பொழுதைக் கழிக்கத் துயில் கொள்ளலானார். சிறிது நேரம் சென்றபின் யாரோ ஒரு கிழ சந்நியாசியும் அந்த மடத்திலே வந்து படுத்தவர், சுந்தரர் தலைமாட்டில் காலை நீட்டி அடிக்கடி அவர் தலையைத் தம் காலால்

உதைத்துக் கொண்டிருந்தார். திடீரென விழித்துக்கொண்ட சுந்தரர், ''யாரப்பா நீ? உன் கால் என் தலைமேல் இருக்கிறதே. பார்த்துப் படுக்கக்கூடாதா?'' என்று கண்டித்தார். சந்நியாசி அடக்கமாகவே, ''கோபித்துக்கொள்ள வேண்டாம். அறியாமல் நடந்துவிட்டது. வயசான காலத்தில் கனப்பு மிகுதியால் ஒன்றும் தெரியவில்லை'' என்று சொல்லிக்கொண்டு கால்களை இழுத்து மடக்கிப் படுத்தார். சுந்தரரும் வேறு திசையில் தலையை வைத்து உறங்கத் தொடங்கினர். சற்று நேரம் கழித்து மறுபடியும் அவர் தலைமீது அந்தத் துறவியின் கால் உதைக்கத் தொடங்கியது. சுந்தரருக்கு அசாத்திய கோபம் வந்துவிட்டது. ''என்னய்யா நான் சொல்லச் சொல்ல நீ பாட்டுக்கு உதைக்கிறாய்?'' என்று சீறி விழுந்தார். துறவி மெதுவாக எழுந்து நின்றார். புன்னகை புரிந்தார். ''நான் யாரென்று இன்னுமா நீ தெரிந்துகொள்ள வில்லை?'' என்று கேட்டவர் அப்படியே மாயமாய் மறைந்தார்.

சுந்தரர் தேகம் முழுவதும் புல்லரிக்கத் தொடங்கிவிட்டது. இறைவனின் சோதனை எப்படியெப்படி யெல்லாம் நடக்கிறது! ''என்னையாட்கொண்ட பெருமான் இங்கே வந்து எனக்குத் திருவடி தீட்சை தந்த பெருமையை நான் என்னென்று சொல்வேன்?'' என்று நினைந்து, திருவதிகையில் எழுந்தருளி யிருக்கும் வீரட்டானேசுவரரைத் துதித்துப் பாடினார்:

எம்மான்தன் னடிக்கொண்டென் முடிமேல்வைத் திடுமென்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை யெறிகெடில வடவீரட்டானத்து
உறைவானை யிறை போதும் இகழ்வன் போலியானே.

''தாமே வலிய வந்து எனது முடிமேற் பல முறையும் திருவடி சூட்டிய தலைவனை அறியாது இறுமாப்படைந்து மதிக்காமல் ஏசி இகழ்ந்தேனே'' என்று பாடிய தேவாரத்தில் அந்தச் சம்பவத்தைக் குறிப்பிடுகிறார் சுந்தரர். திருவடி சூட்டும் பெருமை மிகப் பழுத்த ஞானிகளுக்குத்தான் கிடைக்கக்கூடிய பேறு. சைவசித்தாந்தக் கொள்கையின்படி இறைவன் திருப் பாதங்களில் பணிந்து சரணடைவது சிறந்த முத்தியின்பத்தின் அடையாளமாகும். ஞானமார்க்கத்தில் ஒருவர் பிரவேசித்து விட்டார் என்பதற்கு அறிகுறி. திருவடிப் பெருமையைப் பற்றித் திருமூலர் தமது திருமந்திரத்தில் சொல்கிறார்:

திருவடியே சிவமாவது தேரிற்
திருவடியே சிவலோகம் சிந்திக்கிற்
திருவடியே செல்கதி அது செப்பிற்
திருவடியே தஞ்சம் உள் தெளிவோர்க்கே

சித்தவட மடத்தில் நிகழ்ந்த இந்த நிகழ்ச்சி சுந்தரமூர்த்தி நாயனுருக்கு ஒரு புதிய உணர்ச்சியைத் தந்தது. இறைவனோடு நேருக்கு நேர் கலந்துகொண்ட அனுபவமும், இனிமேல் வரப் போகும் வாழ்க்கை யனுபவங்களும் எல்லாமே சாதாரண மக்கள் வாழ்க்கை அனுபவங்களாயில்லாமல் ஈஸ்வரனுக்கு அர்ப்பண மாகும் அனுபவங்களாயிருக்கப்போகின்றன. ஏசலும் பேசலும், இச்சித்தலும், வெறுத்தலும், பின்னல் நிகழவிருக்கும் காதல் வாழ்க்கையும், எல்லாமே ஈஸ்வரார்ப்பணம் என்ற நிலையைப் பெறுகின்றன. ஆகையால், திருவெண்ணெய் நல்லூரில் பித்தன் என்று ஏசியபின் தடுத்தாட்கொண்ட நிகழ்ச்சியைப் பார்க்கிலும் இங்கே சித்தவட மடத்து நிகழ்ச்சிதான் ஆரூரர் வாழ்க்கையில் முக்கிய திருப்பம் என்று சொல்லவேண்டும். பரிபக்குவம் என்ற ஞானத்தின் முழுமையைப் பெற்ற திருப்பம் இது.

* * *

திருக்கோவலூரிலிருந்து திருவதிகையை அடைந்த எங்களுக்கு இந்தச் சித்தவடமடத்தைத் தேடிக் கண்டுபிடிக்க எவ்வளவோ சிரமமாயிருந்தது. பழைய புராணங்களிலும் வரலாற்று நூல்களி லும் காணப்படும் இடப்பெயர்கள் காலகதியில் சில மறைந்தும், மற்றும் சில திரிந்தும் போய்விடுகின்றன. இந்தச் சித்தவடமடம் என்ற பெயரும் அப்படித்தான். திருவதிகைக்குப் பக்கத்தில்தான் எங்கேயோ ஒரு சின்னமாகவாவது இருக்கக்கூடும் என்ற நம்பிக்கை யில் எத்தனையோ பேரிடம் விசாரித்துப் பார்த்தோம். எவராவது திருப்தியான பதில் சொல்லக் காணோம். கடைசியாக ஒரு வழிப் போக்கர், ''புதுப்பேட்டைப் பக்கம் போய் விசாரித்துப் பாருங்கள். அங்கே வயதான குருக்கள் இருக்கிறார். ஒருவேளை அவருக்குத் தெரிந்திருக்கலாம்'' என்று சொன்னார். திருவதிகைக்குப் பக்கத் திலுள்ளது புதுப்பேட்டை. அங்கே போய்க் குருக்கள்வீட்டை விசாரித்துக் கண்டுபிடித்தோம். மோட்டாரில் போயிறங்கிக் குருக்களைப் பார்க்க வேண்டுமென்று சொன்னவுடன் வாசலுக்கு வந்த பெண்கள் அவ்வளவாக எங்கள் வருகையை வரவேற்றார்கள் என்று சொல்வதற்கில்லை! என்னவோ ஏதோ, எந்த அதிகாரிகளோ என்று சந்தேகப்பட்டார்கள். நல்ல வேளையாக உள்ளேயிருந்து ஓடி வந்த ஒரு சிறு பையன், ''தாத்தா, தாத்தா! யாரோ வந்திருக்கா'' என்று தாத்தா உள்ளேதான் இருக்கிறார் என்ற உண்மையை வெளிப்படுத்திவிட்டான். தாத்தாவும், உடை விஷயத்தில் எவ்வித முன்னேற்பாடுமில்லாமல், அரையில் கட்டிய சிறு முண்டோடு வந்து இன்முகத்துடன் ''வாருங்கள்!'' என்று வரவேற்றார். எழுபத்தைந்து வயது மதிக்கக்கூடிய பெரியவர். கூர்ந்த பொருந்திய முகம். பரம வைதிகச் சாயல். அவர்

பேச்சிலிருந்து, நிறைந்த கல்விமான் என்பதைத் தெரிந்து கொண்டோம். ராஜாக் குருக்கள் என்று பெயர். உண்மையில் ராஜகுரு போல்தான் தோற்றமளித்தார். சிறந்த பண்பாடுள்ள மனிதர். சித்தவடமடம்பற்றிய எங்கள் பிரச்னையைச் சொன்னோம். அவர் சிறிதும் சந்தேகத்துக்கிடமில்லாமல், ''சித்தவடமடமா? அது இங்கேதான் பக்கத்திலிருக்கிறது. முன்பொரு காலத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு இறைவன் திருவடி சூட்டிய இடம். இப்போது அங்கே ஒரு ஈஸ்வரன் கோயிலிருக்கிறது. சோழர் காலமோ பாண்டியர் காலமோ என்று நிச்சயமாகத் தெரியாது. நித்திய பூஜை நடைபெற்று வருகிறது. நான்தான் அதைப் பார்த்துக்கொள்கிறேன், போய்ப் பார்த்து வரலாமா?'' என்று மூச்சுவிடாமல் எல்லாவற்றையும் தெளிவாகச் சொல்லிவிட்டார். தேடிய பூண்டு காலில் மிதிபட்டதுபோல், சித்தவடமடத்தைத் தேடியலைந்த எங்களுக்கு அது தானாகவே வந்து எதிர்ப்பட்டது எல்லையற்ற மகிழ்ச்சியைத் தந்தது. ராஜாக் குருக்களுக்கு நன்றி தெரிவித்து அவரையும் அழைத்துக்கொண்டு சித்தவடமடம் என்று சொல்லப்படும் இடத்துக்குச் சென்றோம். பழைய கோயில். அழகுபட அமைந்த நெடிய விமானம். குருக்கள் சொன்னது போல, பிற்காலச் சோழர் அல்லது பாண்டியர் காலத்து அமைப்பு என்று கருதலாம். விமானம் முழுவதும் பௌராணிக சிற்ப வடிவங்கள் மிக்க எழிலுடன் காணப்படுகின்றன. கோயிலுக்கு சிதம்பரேஸ்வரம் என்று பெயர். பிற்காலத்தில் சித்தவத்தை மடம், சித்தாத்த மடம், சித்தாண்டி மடம் என்றெல்லாம் திரிந்து பெயர் வழங்கியதாம். இப்போது இந்தப் பகுதி கோட்லம்பாக்கம் (கோடாலம்பாக்கம்) என்று உள்ளூர் மக்களால் வழங்கப்படுகிறது என்று அந்தப் பெரியவர் ராஜாக் குருக்கள் விளக்கினார்.

சித்தவடமடத்து சிதம்பரேஸ்வரரைத் தரிசித்து உளமார வணங்கினோம். எங்கள் யாத்திரை எவ்வித தடையுமின்றி நிறைவேற வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டோம். சுந்தரருக்குத் திருவடி சூட்டிய பெருமான் போலவே, வழி தெரியாது திகைத்த எங்களுக்கு வழிகாட்டியாக வந்த சிறந்த மனிதர் ராஜாக் குருக்களுக்கு எங்கள் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துவிட்டுப் புறப்பட்டோம். அந்தக் குருக்களின் ஆசீர்வாதம் எங்களுக்கு நிறைவைத் தந்தது.

சுந்தரமூர்த்தி இங்கிருந்து தில்லைக்குப் போகிறார். அவரைப் பின் தொடர்ந்து நாமும் அங்கே போகலாம். ஆனால் திருவதிகைப் பக்கமுள்ள சித்தவடமடத்திலிருக்கும் நாம் திருநாவுக்கரசர் என்ற

அப்பர் சுவாமிகளுக்கு மிகவும் சம்பந்தமுள்ள திருவதிகையைப் பார்க்காமல் போகமுடியாது. அதற்கு முன் அப்பர் அவதாரம் செய்த திருவாமூர் என்ற ஸ்தலமும் சமீபத்திலேதான் உள்ளது. ஆகையால் செந்தமிழிசையில் திருத்தாண்டகம் என்ற மகோன்னத மான பாமாலை பூண்ந்த நாவுக்கரசரையும் அவர் வரலாற்றையும் தொடர்ந்து பார்க்கவேண்டிய ஆசை ஏற்படுமல்லவா? அதற்குச் சந்தர்ப்பமும் வாய்ப்பாயிருக்கிறது. திருவாமூரில் அவர் பிறந்தார். பக்கத்திலுள்ள திருப்பாதிரிப்புலியூரில் சமண சந்நியாசியாக இருந்து தருமம் கேட்டார். பின்னர் வயிற்று நோயால் கஷ்டப் பட்டுத் திருவதிகை வந்து தமக்கையாரின் வேண்டுகோளின்படி சைவரானார். இறைவனருள் கிடைத்து தேவாரம் பாடி, ஸ்தல யாத்திரை செய்தார் என்ற செய்தியை நாம் கேட்கிறோம். ஆகையால், சுந்தரரைத் தில்லைக்குப் போகவிட்டு, இப்போது திருநாவுக்கரசரைச் சந்திக்கத் திருவாமூருக்குப் போவோம்.

6. சமணத் துறவி

திருமுனைப்பாடி நாட்டை சேக்கிழார் தமது காவியத்திலே வருணிக்கும்போது மருத நிலத்துக்குப் பெருமை தரும் கரும்புத் தோட்டங்களைப்பற்றிப் புகழ்ந்து பாடுகிறார். தென்னாற்காடு மாவட்டத்தில் கரும்புத்தோட்டங்கள் இன்றைக்கும் செழிப்பைத் தந்து வருகின்றன. பெண்ணையும் கெடிலமும் இன்று அவ்வளவாகப் பெருக்கெடுத்து வளமளிக்கவில்லையானாலும், எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த சேக்கிழார் காலத்தில் அவை உண்மையிலேயே பொங்கிப் பாய்ந்து செந்நெல்லும் செழுங் கரும்பும் தேங்கதலியும் கமுகும் பலாவும் செழித்து வளர்ந்து நாட்டுக்கு வளமூட்டின என்பதை நம்பத்தான் வேண்டும். ''ஊர்களிலெல்லாம் மள்ளர்கள் வெட்டிப்போட்ட கரும்பிலிருந்து சாறு ஒழுகி, அந்தக் கரும்புகளிலே கட்டியிருந்த தேன்கூடுகளிலிருந்து சிதறிய தேனுடன் கலந்து வெள்ளமாய்ப் பாய, மள்ளர்கள் கருப்பஞ்சாற்றிற் காய்ச்சிய வெல்லக்கட்டிகளால் அந்த வெள்ளத்தைத் தடுத்தார்கள்'' என்று வருணிக்கிறார் சேக்கிழார். இப்போது வானம் பொய்த்து மழை பெய்யாவிட்டாலும், ஆற்று வெள்ளம் அருகினாலும், மனித முயற்சியில் கிணறுகள் தோண்டி, எந்திரம் வைத்து நீர் பாய்ச்சி வளர்க்கப் படும் கரும்புத் தோட்டங்களைப் பார்க்கும்போது, அந்தக்காலத்து வளமையைச் சேக்கிழார் சொல்வதுபோல் ஒப்புக்கொள்ளத் தடையில்லை.

பண்ருட்டியிலிருந்து செல்லும் சாலையில் திருவாமூரை நோக்கிச் செல்லும்போது பல கரும்புத் தோட்டங்களையும், மா, பலா, கமுகுத் தோட்டங்களையும் கண்டோம். பரந்த நெல் வயல்களின் மத்தியில் ஓர் ஏரிக்கரையில், திருவாமூர் என்ற அடையாளத்தைக் காண்பிக்க, தன்னந்தனியாக வீற்றிருக்கும் சிவன்கோயிலின் பக்கத்தில் நாங்கள் போயிறங்கினோம். கோயிலின் மேற்கு வாயில் வழியே நுழைந்து உள்ளே போகலாம். சந்நிதி தெற்குப் பார்த்தது. கிழக்குத் திசையில் ஏரி. கோயிலுக்கு மேற்கேயிருந்த குருக்கள் வீட்டில் விசாரித்து சில தகவல் தெரிந்து

கொண்டோம். இந்தக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் சுவாமியின் பெயர் பசுபதீஸ்வரர். அம்பாள் திரிபுரசுந்தரி. சோழர் காலத்திலேயே இந்தக் கோயில் நிலைத்திருக்க வேண்டும். ஏனெனில், இங்குள்ள கல்வெட்டு ஒன்றில் பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த முதலாம் குலோத்துங்க சோழன் ஆட்சியில் ''திருநாவுக்கரைய தேவர்க்கு படித்தரமும் நுந்தா விளக்கும்'' அளித்த செய்தி காணப்படுகிறது.

திருவாமூரிலே பரம்பரையாக சைவ வேளாளர் அதிகம். அத்தகைய ஒரு குடும்பத்தில்தான் திருநாவுக்கரசர் பிறந்தார். தந்தையார் பெயர் புகழனார். தாயார் மாதினியார். முதற் குழந்தையாக இவர்கள் குடும்பத்தில் திலகவதி என்ற பெண் பிறந்தாள். இவளுக்குப் பிறகு பிறந்தவர் நாவுக்கரசர். இந்தப் பெயர் பின்னால் வந்தது. மருள்நீக்கியார் என்பதுதான் குழந்தையில் இவருக்கு இடப்பட்டிருந்த பெயர்.

அக்காள் திலகவதியாரைப்பற்றியே முதலில் நாம் அறிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. இந்தப் பெண்ணுக்குப் பன்னிரண்டு வயது வந்ததும் திருமணம் பேசினார்கள். நெருங்கிய பந்துக்களில் ஒருவராகிய கலிப்பகையார் என்பவர் அந்தக் காலத்திலிருந்த அரசனிடத்திலே போர்வீரனாக உத்தியோகம் பார்த்தவர். இவருக்குத் திலகவதியாரைப் பேசி இருதரப்பாரும் ஒப்பநிச்சயதாம்பூலம் பரிமாறி, பின்னால் ஒரு நல்ல முகூர்த்தத்திலே திருமணத்தை நடத்தலாமென்று வைத்திருந்தார்கள். ஆனால், எதிர்பாராதவிதமாக வடநாட்டரசன் யாரோ போர் தொடுத்து விட்டான். கலியாணத்துக்குக் காத்திருந்த கலிப்பகையார் கட்டாயம் போருக்குப் போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. அதைத் தொடர்ந்து, பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்ற பழமொழிப்படி, ஒன்றுக்குப்பின் ஒன்றாக இந்தக் குடும்பத்தில் பல துரதிர்ஷ்டங்கள் நேரத் தொடங்கின. திலகவதியின் தந்தை புகழனார் நோய்வாய்ப்பட்டு இறந்தார். தாயார் மாதினியாரும் கணவனைப் பின்பற்றி மரணமடைந்தார். பாவம், இரண்டு குழந்தைகளும், அக்காளும் தம்பியும் தனித்து விடப்பட்டனர். ஏதோ கொஞ்சநாள் சமாளித்துப் பார்த்தார்கள். திடீரென ஒருநாள், யுத்தத்துக்குச் சென்ற கலிப்பகையாரும் போர்க்களத்திலே இறந்துபட்டார் என்ற செய்தி கிடைத்தது. அவ்வளவுதான், மணம் பேசி நிச்சயித்திருந்த திலகவதியாருக்கு சகலமும் சூனியமாகிவிட்டது. பெற்ற தாயும் தந்தையும் போய்விட்டனர். முறைப்படி கைப்பிடிக்காவிட்டாலும் திருமண நிச்சயம் செய்யப்பட்ட கணவனையும் பறிகொடுத்த

கைதவ்ய நிலை ஏற்பட்டுவிட்டது, இனிமேல் இவ்வுலகில் இருந் தென்ன பயன் என்று தற்கொலை செய்ய முயன்றுள் அந்தப் பத்தினிப்பெண் திலகவதி. ஆனால், தம்பி மருள்நீக்கியார் பணிந்து விண்ணப்பித்தார். ''அக்கா, தந்தையும் தாயுமற்ற அனுதையான எனக்கு நீதான் தாய்போல் இதுவரை நாளும் ஆதரவு தந்து வந்தாய். நீயும் என்னை விட்டுப் போய்விட்டால் எனக்குத் துணை ஏது? நானும் கிணற்றிலோ குளத்திலோ விழுந்து மடிந்துவிட வேண்டியதுதான்'' என்று இரங்கினார். திலகவதியார் பார்த்தார். மிகவும் புத்திசாலியான தம்பியை இழந்துவிடத் துணிவில்லை. அன்றியும் குடும்பத்துக்கு இவன் ஒருவனே வாரிசு. குடும்பம் அழியாதிருக்க தம்பியின் உயிர் காப்பாற்றப்பட வேண்டும். கல்வி கேள்விகளில் திறமைசாலியாயிருக்கும் தம்பி ஒரு பெரும் புலவனாக வரலாம். ஆகையால், இவனது வருங்கால வளர்ச்சிக்காக நாம் வாழ வேண்டியதுதான் என்று தீர்மானித்தவ ராய், இனிமேல் நமது சேவையெல்லாம் ஆண்டவனுக்கே அர்ப்பணமாகுக என்று, தம்பியையும் அழைத்துக்கொண்டு, திருவதிகை என்ற ஸ்தலத்தில் போய்க் குடியேறினார். அங்கே வீரட்டானேசுவரர் ஆலயத்தில் நித்திய திருப்பணிகள் செய்து கொண்டு காலத்தைக் கழித்தார்.

திருவாமூரில் திலகவதியார் மரபில் வந்த வேளாளர், இப்போது திருமணம் நிச்சயித்த அன்றே திருமணச் சடங்கையும் நடத்திவிடுகின்றனர். திலகவதிக்கு ஏற்பட்ட நிலை தமது மக்கட்கும் ஏற்படலாகாது என்று அவர்கள் கருதுகின்றனர்.

திருவதிகை அந்த நாளில் கற்றவர்கள் பலர் வாழ்ந்த நகரம். அன்றியும் சைவ மதத்தவர்களைத் தவிர சமணரும் பௌத்தரும் பலர் தத்தம் சமயவாதங்களைப் பரப்பிக்கொண்டிருந்தனர். காஞ்சியிலிருந்த சமண மன்னன் மகேந்திரவர்மனின் ஆட்சி தொண்டை மண்டலம் முழுவதும் பரவியிருந்ததால் சமணரின் செல்வாக்கும் சமணசாஸ்திரங்களின் பாதிப்பும் தலைநிமிர்ந்த காலம் அது. நீதிநூற் பயிற்சியும் தமிழ் இலக்கணப் பயிற்சியும், தர்க்கம் முதலிய சாஸ்திரத் திறமையும் வாய்க்கப்பெற்றவர்கள் சமணர்கள். ஆகையால், கல்வித்துறையிலும் சாஸ்திர ஆர்வத் திலும் விருப்புள்ள மருள்நீக்கியார் சமண சித்தாந்திகள் கூடுமிடங் களிலெல்லாம் கலந்து அவர்கள் பிரசங்கங்களைக் கேட்கத் தலைப் பட்டார். வாழ்க்கையில் வழிகாட்ட வேண்டிய பெற்றோர் இருவரும் போய்விட்டனர். ஒரேயொரு பற்றுக்கோடாயிருக்கும் தமக்கையாரோ திருவதிகை ஈஸ்வரனின் சேவையிலீடுபட்டுத் தம்பியைக் கவனிக்க முடியாமலிருக்கிறார். மருள்நீக்கியாருக்கு

வேறு கதியில்லாமல் அறிவுப்பசி தீர்க்க சமணர் வழியொன்று தான் உகந்ததாய்த் தெரிந்தது. மிகச்சிறந்த மதிநுட்பமுள்ள ஒரு இளைஞன் தமது சமய சித்தாந்தங்களில் ஆர்வம் காட்டுவதைக் கண்ட சமண சந்நியாசிகள் மிக விரைவிலே மருள்நீக்கியாருக்குத் தம் சமய நெறிகளைப் புகட்டி ஆருகத சித்தாந்தத்தில் தலைசிறந்த பண்டிதராக்கிவிட்டார்கள். அது மாத்திரமல்ல, தமது சமயப் பிரசார சேவைக்கு மிக உன்னத பாத்திரமென்று கண்டு, தருமசேனர் என்ற பெயர் தந்து, மேன்மை தங்கிய குருப்பட்டமும் கொடுத்து அளவிறந்த மதிப்பளித்தார்கள்.

தொண்டைமண்டலத்தின் கீழ்க்கரைப் பட்டினமாகிய திருப்பாதிரிப்புலியூர், பாடலிபுரம் என்ற பெயரில், தமிழ்நாட்டு சமணரின் குருபீட ஸ்தானமாக நிலவியது. சமணப்பெரும் பள்ளிகள், கல்வி நிலையங்கள், மடங்கள் எல்லாம் இந்தப் பாடலி புரத்தில் நிரம்பியிருந்தன. தருமசேனரும் தமது சந்நியாச வாழ்க்கையை அங்கேயே கழித்தார்.

தம்பி மருள்நீக்கியார் சமணத்தைச் சார்ந்து பெரிய மடத்தில் ஒரு சந்நியாசியாகிவிட்ட செய்தியை அறிந்த திலகவதியார் அளவற்ற துயருற்றார். இத்தனை மதிநுட்பமுள்ளவர் ஆராயாமல் போய் சைவத்தை விட்டுச் சமணத்தில் சேர்ந்தாரே என்று வருந்தினர். இதற்கு அவரை மாத்திரம் குறை சொல்லிப் பய னில்லை. தாமே இதற்குக் காரணமென்று தம்மையே நொந்து கொண்டார். பெரியவளாகிய தான் தாய்க்குச் சமானமா யிருந்து தம்பியின் நல்வாழ்வுக்குத் துணைநிற்காமல், தன்பாட்டிலே கோயில் தொண்டையே தஞ்சமென்று புறம்போந்திருந்ததுதான் மருள்நீக்கியார் வழி தவறிப்போனதற்கு முக்கிய காரணம் என்று அவர் உணர்ந்தார். திருவதிகைத் தெய்வத்தை அல்லும் பகலும் வேண்டி, அருமைத் தம்பியின் மாயையைத் துடைத்து மறுபடியும் தம்மிடம் கொண்டுவந்து சேர்ப்பிக்க வேண்டுமென்று பிரார்த்தித் தார். இடைவிடாது செய்த பிரார்த்தனையில் மருள்நீக்கியார் திரும்பி வந்துவிடுவார் என்ற நம்பிக்கையும் பிறந்தது.

இதே சமயத்தில் பாடலிபுரத்திலிருந்த தருமசேனருக்கு எதிர்பாராத விதமாக சூலை என்ற கொடிய வயிற்றுநோய் உண்டாயிற்று. இதைக் கண்ட சமண சந்நியாசிகள் இது தொற்றுநோய் என்று சொல்லித் தருமசேனரை மடத்திலுள்ள ஒரு தனி அறையில் இருக்கச் செய்தனர். முதலில் நோய் போய் விடும் என்ற நம்பிக்கையில் அவர்கள் மணிக்கணக்காக மந்திரங் களை ஜெபித்தனர். ஆனால் நோய் தீரவில்லை. குண்டிகை நீரை மந்திரித்துக் குடிக்கக் கொடுத்தனர். அதற்கும் வலி குறையு

வில்லை. மயிற்பீலி கொண்டு உடலைத் தடவினர். நோய் குறைவ தற்குப் பதிலாக மேலும் அதிகரிக்கத் தொடங்கியது. இப்படி யாக சமண சந்நியாசிகள் தம்மாலியன்ற எத்தனையோ பரிகாரங்களை—மந்திரம், மாயம், தந்திரங்களை—உபயோகித்துப் பார்த்தும், எதற்கும் அந்தப் பொல்லாத நோய் அகலமாட்டேன் என்றது. சோர்வடைந்த சமணர்கள் இனித் தம்மால் ஒன்றும் முடியாதென்று கைவிட்டனர். இந்த நிர்க்கதியை உணர்ந்த தருமசேனர் என்ன செய்வதென்றறியாது, தமது இறுதி முடிவு நெருங்கிவிட்டதோ என்று அஞ்சினர். அப்போதுதான் தன் உடன்பிறப்பாகிய திலகவதியம்மையாரின் ஞாபகம் வரவே, தமக்கு ஊழியம் செய்த நம்பிக்கையான பணியாளனை அழைத்து, எவருமறியாமல் தமது துன்பத்தை அக்காளிடம்போய்த் தெரிவித்துவிட்டு, அவர் சொல்வதைக் கேட்டுவந்து இரவோடிர வாகத் தம்மிடம் அறிவிக்குமாறு வேண்டிக்கொண்டார்.

திருவதிகையில் கோயில் திருப்பணி செய்துகொண்டிருந்த திலகவதியாரைத் தருமசேனர் அனுப்பிய பணியாளன் வந்து சந்தித்தான். ''அம்மா! நான் தங்கள் அருமைத் தம்பியிட மிருந்து வருகிறேன். திடீரென்று அவருக்கு வயிற்றிலே கொடிய சூலைநோய் கண்டுவிட்டது. மடத்திலிருக்கும் சமண சந்நியாசிகள் எவ்வளவோ முயன்றும் இந்த நோயைத் தீர்க்க முடியாமல் கைவிட்டுவிட்டார்கள். அதனால் தமக்கு உதவி செய்யுமாறு கேட்டு, என்னைத் தங்களிடம் அனுப்பினர். தங்கள் ஆலோசனை யைக் கேட்டு மற்றவர்கள் அறியாமல், இரவிலே வந்து தன்னிடம் தெரிவிக்குமாறு பணித்தார்கள்,'' என்றான். தம்பி மிகவும் தகாதவழியில் சென்றுவிட்டார் என்று கோபங்கொண்டிருந்த திலகவதியார், ''எல்லா வகையிலும் எமக்கு விரோதமான சமணப்பள்ளிக்கு நான் வரேன்'' என்று பதிலளிக்கும்படி சொல்லியனுப்பிவிட்டார்.

திருவதிகையிலிருந்து இவ்வாறு பதில் வந்ததைக் கேட்ட தருமசேனர் என்ன செய்வதென்று தெரியாது வருந்தினர். அன்றிரவு முழுவதும் குடல்நோய் மாத்திரமல்ல, மனநோயும் சேர்ந்து கொடுத்த உபாதையைப் பொருதாராய், விடிய முன்னரே எழுந்து உடுத்த பாயையும் உறியில் உற்ற கமண்டலத் தையும் மயிற்பீலியையும் களைந்து வைத்துவிட்டு, வேறுடை உடுத்திக்கொண்டு, மற்றெவர் கண்ணிலும் காணுதபடி, சமணத்தில் பிரவேசித்ததின் பலனுகக் கிடைத்தவைகளில் சூலை நோய் ஒன்று மாத்திரம் பின்தொடர, திருவதிகையை நோக்கிச் சென்றார். தமக்கையார் திலகவதி ஏற்றுக்கொண்டாலும்

விலக்கினாலும், மறுபடியும் சைவத்தில் சேர்ந்து அதிகை வீரட்டானேஸ்வரரை வழிபட வேண்டும் என்றும், அந்த வழிபாட்டில் தமது நோய் நீங்கலாம் என்றும் நம்பினார் தருமசேனர் என்ற பெயரை அப்போது கைவிட்ட பழைய மருள்நீக்கியார்.

அதிகாலையில் வெற்று மேனியும் முகத்தில் அழுத கண்ணீருமாக எதிர்வந்து நின்ற தம்பியைப் பார்த்தார் திலகவதியார். இதுவென்ன கனவா நினைவா என்று தடுமாறிப் பேச நா வெழாமல் ஸ்தம்பித்து நின்றார். தம்பி மருள்நீக்கியார், ''அக்கா தாயே'' என்று கதறிக்கொண்டு விழுந்து தமக்கு ஒரேயொரு பற்றுக்கோடாயிருக்கும் தமக்கையின் பாதங்களைக் கட்டிக் கொண்டார். திலகவதியார், ''யான் செய்த தவம் பலித்ததடா தம்பி. அதிகைப் பெருமான் உன்னைத் திருப்பிக் கொண்டுவந்து விட்டார். இதோ இந்த விபூதியைப் பூசிக்கொள்'' என்று தம் கையிலிருந்த சிவசின்னத்தைக் கொடுத்தார். தம்பியும் ஆவலோடு அதை வாங்கித் தரித்துக்கொண்டார். என்னே அற்புதம்! குடரோடு தொடக்கி முடக்கிய அந்தப் பொல்லாத சூலை நோய் மாயமாய் மறைந்தது. ஆனந்த பரவசத்தராய் அழுதார், விழுந்தார், அதிகைப் பெருமான் சந்நிதியில் புரண்டெழுந்தார். பின் எழுந்து நின்று அந்த இறைவன் அருள் கூட்ட அழகிய தமிழில் பாடினார்:

கூற்றுயினவாறு விலக்ககிலீர் கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றுய் அடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றுதென் வயிற்றின் அகம்படியே குடரோடு தொடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில வீரட்டானத்துறை அம்மானே

மற்றொரு சிவனடியாராகிய மாணிக்கவாசகர் சொன்னார் ''அழுதாலுன்னைப் பெறலாமே'' என்று. அந்த மாதிரி அடியார்கள் அழுதால் இறைவன் மனங்கசிந்து கிருபை செய்வார். மருள் நீக்கியாரும் ''அம்மானே நான் ஆற்றேன், உன் திருவடியே தஞ்சம் என்று திரும்பி வந்துவிட்டேன். என்னை யாட்கொண் டருள்வாய்'' என்று கதறினார். சூலை நோய் நீங்கிற்று. இறும்பூ தெய்திய மருள்நீக்கியார் நாவிலிருந்து சரமாரியாக இன்னிசைத் தமிழ் பிறந்தது. அன்றிலிருந்து அவர் நாவுக்கரசர் என்ற பெயரைப் பெற்றார்.

7. பாடலிபுரத்திலே

திருவதிகை ஒரு காலத்தில் அதிகமான் என்ற பட்டப்பெயர் பெற்ற நெடுமான் அஞ்சி என்னும் குறுநில மன்னர் ஆட்சியி லிருந்தது. மூனையரையர் என்பது போல அதியரையர் என்பது அதிகமான் பெயர். கல்வெட்டுச் சாசனங்களில் இந்தக் கோயில் அதியரையமங்கை என்று பெயர் கொண்டிருந்தது. பல்லவ நிருபதுங்கவர்மன் கல்வெட்டொன்றில் அதிராஜமங்கல்யபுரம் என்றுள்ளது. பிரமாண்டமான கோயில்தான். ஆனால் நாங்கள் போன சமயம் என்னவோ, ஒரு வைகாசிமாதம், அங்கே ஒரு காக்கை குருவியைக்கூடப் பார்க்கவில்லை. வானளாவிய எழுநிலை மாட ராஜகோபுரம். அதன் முன்னால் இடிந்துபோய்க் கிடக்கும் ஓர் பாழ்மண்டபம்தான் முன்பு அப்பர் சுவாமிகள் மடம் என்று வழங்கியதாம். ராஜகோபுர வாயிலில் இருபக்கமும் சிதம்பரம் கிழக்குக் கோபுரம்போல, பரதசாஸ்திரத்தில் சொல்லப்பட்ட நூற்றெட்டுக் கரணங்களை விளக்கும் சிற்பங்கள் காணப்படு கின்றன. பிராகாரத்தில் ஒரு பெரிய புத்தர் சிலை இருக்கிறது. பௌத்தர்களும் சமணர்களும் ஒரு காலத்தில் இந்தப் பிரதேசத்தில் செல்வாக்குட னிருந்தார்கள். இன்றும் அகழ்வாராய்ச்சி செய்தால் பௌத்த சமணச் சின்னங்கள் பல கிடைக்கலாம். தென்புறத்திலே ஒரு குளம். அந்தக் கோயிலின் கர்ப்பக்கிருகம் காஞ்சி கைலாச நாதர் ஆலயத்தின் அமைப்பைக் கொண்டிருக்கிறது. பல்லவ நரசிம்மவர்மனின் புதல்வன் இரண்டாம் பரமேஸ்வரவர்மன் காலத்தில் கட்டப்பட்டது என்பதற்கு ஒரு கல்வெட்டுச் சான்று இங்கே யுள்ளது. அதே பல்லவ சிற்ப முறையில்தான் மூலஸ் தானத்திலுள்ள பதினாறுபட்டை சோடச லிங்கத்தின் பின்னால், சுவரில், சோமாஸ்கந்த மூர்த்தம் புடைச்சிற்பமாக அமைக்கப் பட்டிருப்பதைப் பார்த்தோம். லிங்க மூர்த்திக்குப் பின்னால் சோமாஸ்கந்தர் இவ்வாறு அமைந்திருப்பதைப் பல்லவர் கட்டிய கோயில்களில் காணலாம்.

உட்பிராகாரத்தில் தென்திசையில் திருநாவுக்கரசர் சந்நிதியும் திலகவதியார் சந்நிதியுமுள்ளன. திருவதிகை அட்டவீரஸ்தலங்களில் ஒன்றாகையால் இங்குள்ள சுவாமி பெயர் திரிபுராந்தகேசுவரர்; திரிபுரம் எரித்த வீரம் இங்கு நிகழ்ந்ததாக ஐதிகம். அம்பாள் திரிபுரசுந்தரி. சித்திரை சுவாதி முதல் பத்து நாள் அப்பர் திருவிழா நடக்கும். இந்த விழாவில் அப்பர் திலகவதியாரிடம் வந்து திருநீறு பெறுவது முதலிய சரித்திரக்காட்சிகள் நடக்கும் என்று அர்ச்சகர் ஒருவர் விளக்கினர். அப்பருக்கு தெற்குப் பிராகாரத்தில் தனியாக ஒரு சந்நிதி இருக்கிறது. உட்கார்ந்த நிலையிலுள்ள சிலாவிக்கிரகம். திலகவதியாருக்கும் ஒரு சந்நிதி உண்டு. சைவசித்தாந்த சாத்திரத்தில் ஒன்றான உண்மை விளக்கம் என்ற நூலின் ஆசிரியர் மனவாசகம் கடந்தார் இதே திருவதிகையைச் சேர்ந்தவர் என்று சொல்லப்படுகிறது. கடந்த பதினெட்டாம் நூற்றாண்டில் முகம்மதியர், பிரெஞ்சுக்காரர், மராட்டியர், ஆங்கிலேயர் மாறி மாறித் திருவதிகைக் கோயிலைத் தமது போருக்குக் கோட்டையாக உபயோகித்தனர். தென்னாட்டிலுள்ள பல கோயில்கள் இவ்வாறு கோட்டையாக மாறியது சமீபத்திய சரித்திரம்.

திருநாவுக்கரசர் திருவதிகைவந்து சூலைநோய் நீங்கப்பெற்று மறுபடியும் சைவனாகிய செய்தி பாடலிபுரத்திலிருந்த சமணர்கள் மடத்துக்கு எட்டிவிட்டதும் அவர்கள் அளவற்ற ஆத்திரம் கொண்டனர். மந்திரத்தாலும் தந்திரத்தாலும் தம்மால் குணப்படுத்த முடியாத சூலைநோயைச் சைவர்கள் எப்படியோ அகற்றி விட்டார்கள் என்பதைச் சமண மன்னன் கேள்விப்பட்டால் தமக்கு அவமானம் மாத்திரமல்ல, தம்மேல் பெரும் பழி விழுமே என்று சமண முனிவர்கள் திகிலடைந்தனர். ஆகவே, எப்படியாவது திருநாவுக்கரசர்மீது பழிசுமத்த வேண்டுமென்ற சூழ்ச்சியோடு அரசனிடம் போய் முறையிட்டனர். ''அரசே! நமது மடத்தின் தலைவராயிருந்த தருமசேனர் தமது தமக்கையார் சைவசமயத்திலிருப்பதால் தாமும் அவ்வாறே சேர விரும்பி, தமக்குச் சூலை நோய் வந்ததாக வேடம்போட்டு, அது நம்மாலே குணப்படுத்த முடியவில்லை என்று பாவனை செய்து, தமக்கையிடம் சென்று சைவத்தைத் தழுவிக்கொண்டார்'' என்று அரசனிடம் புகார் செய்தனர்.

சமண பௌத்த மன்னர்கள் ஆண்ட நாடுகளில் ஒரு முக்கிய அம்சம் என்னவெனில் சந்நியாசிகளுக்கும் அவர்கள் மடங்களுக்கும் அளவற்ற அதிகாரங்கள் இருந்தன. அரசனாயிருந்தாலும் பொது மக்களாயிருந்தாலும் அவர்கள் பௌத்த பிக்ஷுக்களுக்கும் சமணத்

துறவிகளுக்கும் தலைமை அந்தஸ்து அளித்துவந்தனர். கி. பி. ஆரும் ஏழாம் நூற்றாண்டுகளில் பல்லவர்களில் பலர் சமணத்தைச் சார்ந்திருந்த காரணத்தால் அவர்களது மடங்களின் செல்வாக்கு மேலோங்கி யிருந்தது. பாடலிபுரம் என்ற திருப்பாதிரிப்புலியூரி விருந்த அவர்கள் குருபீடம், நினைத்ததைச் செய்து முடிக்கும் அதிகாரம் பெற்றிருந்தமையால், தருமசேனர் என்ற அவர்கள் தலைமைத் துறவி சைவனாகி, திருநாவுக்கரசர் என்ற பெயர் தாங்கி சிவத்தொண்டு செய்ய முற்பட்டதை எப்படியாவது நிறுத்தவேண்டுமென்று முடிவுசெய்தது. தருமசேனரின் மதிநுட் பத்தையும் பேராற்றலையும் சமணர்கள் அறிவார்கள். அவரே சமணத்தை விட்டுச் சைவத்தில் சேர்ந்ததால் எதிர்க்கட்சி எவ்வளவோ பலப்பட்டுவிடும் என்பதையும் உணர்ந்தார்கள். அன்றியும் தமது மதத்திலுள்ள குறைபாடுகளை உள்ளிருந்தே கண்டறிந்த தருமசேனரால் எந்தவித ஆபத்துக்கள் விளையும் என்பதையும் கண்டு திகிலுற்றனர், இந்தக் காரணங்களினால் சமணத் துறவிகள் தமது அரசனிடம் முந்திக்கொண்டு சென்று முறையிட்டனர்.

அரசன் உடனே திருநாவுக்கரசரை அழைத்து வரும்படி ஆணையிட்டான். அந்த ஆணையைக் கொண்டு வந்த தூதுவர் களிடம் நமது வாக்கு மன்னன், ''நாமார்க்கும் குடியல்லோம்; யமனுக்கும் அஞ்சமாட்டோம்; நமக்கு அரசன் சிவபெருமானைத் தவிரவேறு யாருமில்லை'' என்று சொல்லிப் பல்லவ மன்னனின் கட்டளைக்குப் பணிய மறுத்தார். அவ்வளவுதான், அரசனுக்கும் ஆத்திரம் பொங்கியது. கொடிய பாபமாகிய மதமாற்றம் செய்து கொண்டது மாத்திரமல்ல, அரசன் ஆணையையும் புறக்கணிக்கத் துணிந்த துரோகியைத் தண்டிக்க வேண்டுமென்று சமணர்கள் சூழ்ச்சி செய்தனர். அது பலித்தது.

நாவுக்கரசரைச் சேவகர்கள் பலவந்தமாகப் பிடித்துச் சென்றனர். முதலில் அவரை வெந்துகொண்டிருக்கும் சுண்ணும்புக் காளவாயி லிட்டுப் பூட்டினர். ஆனால் இறைவனுக் காட்பட்ட உத்தமராகிய நாவுக்கரசரை அந்த நீற்றறை ஒன்றும் செய்யவில்லை. ''மாசில் வீணையும் மாலை மதியமும் வீசு தென்றலும் போன்றது இறைவன் அடி நீழல்'' என்று பரம்பொருளையே தியானித்தவருக்கு சுண்ணும்புக்காளவாய் தென்றல் போல் தண்மை கொடுத்தது. சமணர்கள் தம் முயற்சி பலனளிக்கவில்லை என்று கண்டதும் நஞ்சூட்டிப் பார்த்தார்கள். பலிக்கவில்லை. சமணமுனிவர்களுக்குத் தெரிந்த மந்திர தந்திரங்கள் அவர்கள் குருவாயிருந்தவருக்குத் தெரியாதா என்ன? பின்பு ஒரு மத

யானையை ஏவி விட்டுக் கொல்ல முயன்றார்கள். அந்த யானையும் நாவுக்கரசர் முன் அடி பணிந்தது. கடைசியாக ஒரு பெரிய கல்லைக்கட்டி அவர் உடலைக் கடலில் எறிந்துவிட்டுத் தொலைந்தார் என்று திரும்பினார்கள். ஆனால், பிறவிப் பெருங்கடலையே நீந்தும் இறையருளைப் பெற்ற மகாத்மாவுக்கு சாதாரண திருப்பாதிரிப் புலியூர்க்கடல் ஒரு பொருட்டா? ''கற்றூணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே'' என்று சிவனது நாமத்தை உச்சரித்தவாறு அந்த மகான் கல்லையே தெப்பமாகப் பாவித்து அலைகடலில் மிதந்து வந்து கரையேறினார். சமணர் திகைத்தனர். இதற்குமேல் அவர்களுக்கு உபாயம் ஒன்றும் தோன்றவில்லை. தலைகுனிந்து நின்றனர். எல்லாம் ஈசன் அருள் என்று நம்பிய நாவுக்கரசர் அந்த ஸ்தலத்திலே கோயில் கொண்டிருக்கும் தோன்றுத்துணை நாதரை வணங்கிவிட்டு, அடியார் திருக்கூட்டமொன்று பின்தொடர, திருவதிகையை நோக்கிப் புறப்பட்டார்.

நாவுக்கரசரைத் தருமசேனர் என்ற முனிவராக வளர்த்த பெருமை பாடலிபுரம் என்ற திருப்பாதிரிப்புலியூருக்குண்டு. அதே பாடலிபுரம்தான் அம்முனிவருக்கு அளவற்ற இம்சையைக் கொடுத்து, அவர் வெறுப்போடு பிரியச் செய்தது. அந்தக் காலத்தில் இந்நகரம் பெருமைப்படத்தக்க நிலையிலிருந்ததாக நாம் சரித்திரத்திலேதான் பார்க்கிறோமல்லாமல், இன்று அந்த நிலையைக் காணமுடியவில்லை. திருப்பாதிரிப்புலியூர் ஆலயம் சோழ மன்னர்களால் மிக அழகான முறையில் கட்டப்பட்டுள்ளது. நாங்கள் போன சமயத்தில் ராஜகோபுரம் புனருத்தாரண வேலைகளுக்காக மறைக்கப்பட்டிருந்தது. கோயில் முன்னுள்ள மண்டபத்தில் சிற்ப வேலைகள் சிறப்பாயுள்ளன. வைகாசி மாதத்தில் இங்கு பிரமோற்சவம் நடைபெறுகிறது. திருநாவுக்கரசு நாயனார் சம்பந்தமாக ''கரையேறவிட்ட விழா'' மிக விமரிசையாக, சித்திரை அனுஷ நாளன்று, கரையேறவிட்ட குப்பம் என்ற இடத்தில் கொண்டாடப்படுகிறது. இந்தக் கரையேறவிட்ட குப்பம் திருப்பாதிரிப்புலியூர் என்ற கடலூர் புதுநகரிலிருந்து ஒன்றரை மைல் தூரத்திலுள்ளது. முன்பு கெடில நதி இந்த வழியாகத்தான் பாய்ந்தது என்றும், பின் வழிமாறிப் போனது என்றும் சொல்வார்கள். கரையேறவிட்ட குப்பம் என்பதை வண்டிப் பாளையம் என்றும் வழங்குகின்றனர். இங்கே நாவுக்கரசரின் ஞாபகமாக ஒரு குளமும் படித்துறையும் மண்டபமும் இப்போது புதிதாக அமைத்துள்ளார்கள். இது ஒன்றுதான் திருப்பாதிரிப் புலியூரில் நாவுக்கரசருக்கு ஞாபகச் சின்னமாக உள்ளது.

இந்த நகரம் கடலூர் என்று இப்போது வழங்கினாலும் முன்னெல்லாம் கூடலூர் என்றே வழங்கியது. துறைமுகப் பட்டினமாயிருப்பதால் அந்நிய நாட்டினரும் மதத்தினரும் அடிக்கடி நுழைந்து பூசல் விளைத்தனர். சமணர் வந்து குடியேறிப் பாடலிபுரம் என்று பெயரிட்டது போல, பதினேழாம் நூற்றாண்டிலே வடக்கேயிருந்து வந்த முகம்மதியர் இஸ்லாமாபாத் என்று பெயரிட்டனர். பின்பு டச்சுக்காரர், பிரிட்டிஷார், பிரெஞ்சுக்காரர்—இப்படிப் பலர் மாறி மாறிக் குடியேறிப் பழைய பண்பையும் நாகரிகத்தையும் கரைத்துவிட்டார்கள். மகதநாட்டுப் பாடலிபுரம் மறைந்தது போலவே தமிழ்நாட்டுப் பாடலிபுரமும் மறைந்துவிட்டது. திருப்பாதிரிப்புலியூர் என்ற பெயர் ரெயில் நிலையத்தோடு நின்றுவிட்டது. மற்றும்படி எல்லாருக்கும் அது இப்போது கடலூர்.

8. குணபரவீச்சுரம்

பாடலிபுரத்தை விட்டுத் திருவதிகை திரும்பிய திருநாவுக்கரசரை வரவேற்க அந்த நகரமே திரண்டெழுந்தது. இந்தக் காட்சியை வருணிக்கும் சேக்கிழார் தமது இலக்கியப் புலமையின் பேரழகைக் காண்பிக்கிறார்:

''திருவதிகை நகரில் வாழ்கின்றவர்களெல்லாம் இந்தப் பெரும் சிவதொண்டரை வரவேற்க முரசறைந்து ஊருக்கறிவித்தார்கள். வாழை கமுகு முதலிய மரங்களை நட்டனர். எழுநிலைக் கோபுரங்களில் மலர் மாலைகளைத் தொங்கவிட்டனர். தோரணங்களை அமைத்தனர். தொண்டர் வரும் வழியெங்கும் சுண்ணப்பொடியும் மலரும் பொரியும் தூவி இறைத்தனர். அப்போது, தூய வெண்ணீறு அணிந்த திருமேனியும், உருத்திராக்க வடங்கள் நிறைந்த கோலமும், சிவனது சேவடிகளையே வருடிய சிந்தையும், ஆனந்த பாஷ்பம் பொழியும் கண்களும், பண்ணிசை பாடும் வாயும் உடையவராய், திருநாவுக்கரசர் திருவீதியில் புகுந்தார்.''

இந்தப் புண்ணியவானையா மிண்டர்களாகிய சமணர்கள் துன்புறுத்தினர் என்று மக்கள் கவன்றனர். நாவுக்கரசர் நேரே அதிகை வீரட்டானத்துக்குள் நுழைந்து இறைவனைத் துதித்துப் பாடினார். அன்று உதித்தது அவர் நாவில் தாண்டகம் என்ற செந்தமிழ் இசைமலர். ஓசையின்பமும் பொருளின்பமும் சொல்லின்பமும் ஒருங்கே கூடிய இந்தத் தாண்டக வடிவத்தை, அவர் சமகாலத்தவராகிய சம்பந்தரோ, அல்லது பின் வந்த சுந்தரரோ கையாளவில்லை.

உறிமுடித்த குண்டிகைதங் கையில் தூக்கி ஊத்தைவாய்ச்
சமணர்க்கோர் குண்டாக்கஞ்ஞ்க்
கறிவிரவு நெய்சோறு கையிலுண்டு கண்டார்க்குப் பொல்லாத
காட்சியானேன்
மறிதிரைநீர்ப் பவ்வநஞ் சுண்டான்தன்னை மறித்தொருகால்
வல்வினையேன் நினைக்க மாட்டேன்
எறிகெடில நாடர் பெருமான்தன்னை ஏழையேன் நான் பண்டு
இகழ்ந்தவாறே

அன்று தொட்டு நாயனூர் திருவதிகையில் தங்கிச் சிலநாள், ''சலம் பூவொடு தூபம் மறந்தறியேன், தமிழோடிசை பாடல் மறந்தறியேன், நலந் தீங்கினும் உன்னை மறந்தறியேன், உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்'' என்று அவரே தம் வாயால் கூறியதுபோல, வீரட்டானத்துறையும் அம்மானைச் சேவித்து வந்தார்.

திருவதிகையையும் பாடலிபுரத்தையு மடக்கிய பல்லவ நாட்டின் அதிபதி காடவர்கோன் என்ற சமணமன்னன் மகேந்திர வர்மன், முனிவர் தருமசேனருக்கு இழைக்கப்பட்ட துன்பங்களை யெல்லாம் நினைத்துப் பார்த்தான். அவற்றிலிருந்தெல்லாம் விடுபட்டு, நாடு மதிக்கும் பெரும் புகழோடு திருவதிகையில் சைவம் பரப்பி வருகிறார் என்று கேள்விப்பட்டவுடன் பலவாறு சிந்திக்க லானான். ''இவ்வளவு மகத்துவம் பொருந்திய ஒரு மகாபுருஷரை, சமணமுனிவர்களின் சொற்கேட்டுத் துன்புறுத்த உடந்தையா யிருந்தேனே நான்'' என்று வருந்தி, உடனே தனது பரிவாரம் சூழ, திருவதிகை வந்து சேர்ந்தான். திருநாவுக்கரசரைப் பணிந்து வணங்கி, விபூதி வாங்கித் தரித்து அன்றே சைவத்தில் புகுந்தான். அது மாத்திரமல்ல, அந்த அரசன், பாடலிபுரத்திலிருந்த சமணப் பாழிகளையும் பள்ளிகளையும் இடித்து, அவற்றிலிருந்த கட்டிடப் பொருள்களையெல்லாம் கொண்டுவந்து திருவதிகையில் சிவனுக்கு ஒரு கோயில் எழுப்பினான். மகேந்திர பல்லவனுக்கு குணபரன் என்ற ஒரு பெயருண்டு. அந்தப் பெயரால் இங்கு கட்டப்பட்ட புதிய கோயிலுக்கு குணபரவீச்சுரம் என்ற பெயர் வழங்கிற்று.

திருவதிகைப் பெரிய கோயிலில் தரிசனம் முடித்துக்கொண்ட நாங்கள் இந்த குணபரவீச்சுரம் என்ற மகேந்திர பல்லவன் கட்டிய கோயிலைப் பார்க்க விரும்பி அங்குள்ள பலரிடம் விசாரித்துப் பார்த்தோம். இப்போது திருவதிகையிலிருக்கும் கோயில்தான் மகேந்திரன் கட்டியதென்று பொதுவாக நம்பப்படுகிறது. இப்போதிருப்பது பிற்காலத்தில் பாண்டியர்களால் எழுப்பப் பட்டது என்பது சரித்திரத்தில் நாம் அறிவோம். அதற்கு முன் மகேந்திரன் கட்டிய சிறு கோயில் இருந்த இடத்தில்தான் பாண்டியர்கள் பெருங்கோயிலைக் கட்டினார்கள் என்று சிலர் சமாதானம் சொல்வதையும் நாம் நம்பவில்லை. ஆகையால், குணபரவீச்சுரம் என்ற பழைய ஸ்தானத்தை எப்படியாவது தேடிப் பார்க்கலாம் என்று கிளம்பினோம். வழித்துணைப் புத்தகங்களிலோ மற்றும் ஏடுகளிலோ இதைப் பற்றிய தகவலைச் சேகரிக்க முடியவில்லை, திருவதிகையில் பலரிடம் சொல்லிக் கேட்டும் பலனளிக்கவில்லை. சுமார் ஒன்றரை மணி நேரம் திருவதிகை

முழுவதும் அலைந்தும் எவ்விதக் குறிப்பும் கிடைக்கவில்லை. சோர்வுற்று ஒரு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருக்கும்போது எங்கள் அவல நிலையை உணர்ந்துகொண்ட ஒரு விவசாயப் பெண்மணி, ''அசலூரா?'' என்று கேட்டார். போகிற போக்கிலே உபசாரத்துக்காகக் கேட்கிறார் என்று நாங்களும் ஆமா என்று விடையளித்துவிட்டு, எல்லோரிடமும் விசாரித்தது போலவே இந்தப் பெண்ணிடமும், ''ஏம்மா, இங்கே குணபரேச்சுரம் என்ற கோயில் ஏதாவது இருக்கிறதா?'' என்று கேட்டு வைத்தோம். என்ன ஆச்சரியம்! அந்த அம்மாள் சற்றும் தயங்காமல், ''அதோ திரும்பிப் பாருங்கள், மேற்கே பெரிய ரோடுக் கரையிலே இருக்கிறது ஆதிமூல குணபரேச்சுரன் கோயில்'' என்று சொல்லிவிட்டுத் திரும்பியும் பார்க்காமல் தன் வழியே சென்றுள். அப்போதுதான் எங்களுக்கு வெளிச்சம் தெரிந்தது! ஆதிமூல குணபரேஸ்வரர்! சற்றும் தாமதியாமல் உடனே அந்த இடத்தைச் சேர்ந்தோம். வீரட்டானேசுவரர் கோயிலுக்கு கால் மைல் தூரத்தில், சாலையோரமாக ஒரு சிறுகட்டிடம். இடிந்த நிலை. இருபக்கமும் செங்கல்லும் சாந்தும் கொண்டு கட்டப்பட்ட திருச்சுற்று மாளிகை. பிராகாரத்தில் பின்னமுற்றிருந்த ஒரு நந்தி. அதன் பக்கத்தில் இனந்தெரியாது உடைந்துபோன ஒரு படிமம். எல்லாம் பல்லாண்டுகாலம் இயற்கையின் உற்பாதங்களால் தாக்கப்பட்ட சின்னங்களாய்க் காட்சியளித்தன. பல்லவ மகேந்திரவர்மன் காலத்திலும் அதற்கு முந்தியும் பல கோயில்களிருந்தன. அப்பரும் சம்பந்தரும் அவற்றைப் பாடினர். அக்கோயில்களெல்லாம் மரத்தாலும் செங்கல்லாலும் சுதையாலுமே அமைக்கப்பட்டிருந்தன. மழையிலும் காற்றிலும் தாக்குண்டு நெடுங்காலம் தாங்கமாட்டாமல் சிதைவுறக்கண்ட பல்லவ மன்னன் மகேந்திர வர்மனே முதன்முதல் பாறைகளைக் குடைந்து குடைவரைக் கோயில்களைக் கட்ட ஆரம்பித்தான் என்பது வரலாறு. எனவே பாடலிபுரத்திலிருந்த சமணப் பாழிகளும் அக்காலத்தில் செங்கல்லாலும் சுதையாலும் ஆனவையே என்று நம்பலாம். அவற்றை அழிப்பதும் சுலபமே. அதே சமயம் குணபரேச்சுரம் என்ற புதிய கோயிலும் செங்கல்லும் சுதையும் கொண்டு கட்டப்பட்ட தென்பதற்கு நாங்கள் பார்த்த ஆதிமூல குணபரேஸ்வரன் கோயில் நல்ல சாட்சி. வீரட்டானேஸ்வரம் சோழர்களாலும் பாண்டியர்களாலும் கருங்கற் கோயிலாகக் கட்டப்பட்ட பின்னர்தான் அதற்குக் கட்டிடப் பெருமை ஏற்பட்டது. அதனை மக்கள் புதிய கோயில் என்று கொண்டு பழைய குணபரேஸ்வரத்தை ''ஆதிமூல குணபரேஸ்வரம்'' என்று வழங்கினர் போலும் என்று நாங்கள் புரிந்துகொண்டோம். இந்தக் கோயிலைக் கண்டு பிடித்ததில் எங்களுக்கு ஒரு புதையல்

கிடைத்தது போலாயிற்று. இந்தப் புதையல் கிடைக்கக் காரணமாயிருந்த அந்த ஊர் பேர் தெரியாத பெண், எங்கிருந்தோ வந்தவர், எல்லாம் வல்ல பராசக்திதான் என்று நம்பினோம். சிவனடியார்களைத் தேடிச் சென்ற எங்களுக்கு இப்படி எத்தனையோ தெய்வானுகூலமான அனுபவங்கள். அப்படியானால், நாயனார் வாழ்க்கையில் நிகழ்ந்த அற்புதங்களையும் நம்பாதிருக்க முடிய வில்லை.

திருநாவுக்கரசர் திருவதிகையிலிருந்து சில நாட்கள் திருப்பணி செய்துவிட்டுப் புறப்பட்டவர், மற்றும் சில தலங்களை வழிபட்டுப் பெண்ணாகடம் என்ற கோயிலுக்குப் போனார் என்றும் அங்கே அவருக்கு இறைவன் இடபம் சூலம் ஆகிய இலச்சினைகளை யளித்தார் என்றும் சேக்கிழார் சொல்கிறார். பெண்ணாகடத்தை யடுத்து வேறு பல முக்கியமான ஸ்தலங்களிருக்கின்றன. அவற்றுடன் தொடர்பு கொண்ட மற்றும் சில நாயன்மாரையும் நாம் சந்திக்க இருக்கிறோம். ஆகையால் நாம் அந்த யாத்திரையைப் பின் ஒரு நாள் வைத்துக்கொண்டு இப்போது தில்லைக்குப் போய், சுந்தர மூர்த்தியைத் தொடருவோம்.

9. தில்லை தரிசனம்

சுந்தரமூர்த்தி நாயனாரைத் திருவதிகைக்குப் பக்கத்திலுள்ள சித்தவடமடத்தில் நாம் சந்தித்தபின் அவர் தில்லையை நோக்கிச் சென்றார் என்று சொல்லியிருந்தோம். சேக்கிழார் தரும் வரலாற்றுப்படி அங்கே தில்லையில் விசேஷமாக எந்த நிகழ்ச்சியும் நிகழவில்லை. தில்லையிலுள்ள நான்கு வாயில்களில் வடக்கு வாயில் வழியாக அவர் உள்ளே சென்று, தில்லையம்பலத்தானை வணங்கி விட்டுத் தெற்கு வாயில் வழியாக வெளியே புறப்பட்டு வீதி வலம் வரும்போது, ''திருவாரூருக்கு வா'' என்று ஓர் அசரீரி கேட்டதாம். திருவாரூர் சுந்தரரின் தாயார் இசைஞானியார் பிறந்த ஊர். அன்றியும் அவர் வாழ்க்கையில் நிகழவிருக்கும் முக்கிய சம்பவங்களுக்கெல்லாம் திருவாரூர் நிலைக்களமாயிருக்கப் போவதால் அவர் முதலில் திருவாரூருக்குப் போவது பொருத்தமென்று தான் இந்த அழைப்பு வந்தது போலும்.

தில்லையைத் தரிசித்த சுந்தரமூர்த்தி அந்தத் தலத்திலிருந்தே இறைவனைத் துதித்துப் பாடியதாக ஒரு பதிகமாவது தேவாரத்தில் இல்லாதது ஆச்சரியம்தான். சேக்கிழார் தமது பெரியபுராணத்தில் சுந்தரர் இங்கு இரண்டு பதிகங்கள் பாடினார் என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அவை தேவாரத் தொகுப்பில் காணப்படவில்லை. செல்லரித்துவிட்ட ஏடுகளில் ஒருவேளை அவை மறைந்து போயிருக்கலாம். ''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்றே திருத்தொண்டத் தொகையை ஆரம்பித்து, முதலிலே வணக்கம் செய்த தில்லையை எப்படிப் பாடாமலிருக்க முடியும்? இப்போதுள்ள தேவாரத் தொகுப்பில் கோயில் என்ற தலைப்பில் ''மடித்தாடும்'' என்ற பதிகத்தைச் சேர்த்திருக்கிறார்கள். ஆனால் இந்தப் பதிகம் பேரூரில் வைத்துப் பாடியதாகச் சேக்கிழார், ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்தில் தெளிவாகக் கூறுகிறார். சுந்தரர் தமது யாத்திரையில் பல தடவை தில்லைக்கு வந்திருக்கிறார் என்று தெரிகிறது. அவர் அங்கே பதிகம் பாடினாரோ அல்லது பாடவில்லையோ, இப்போது அவர் மிக அவசரமாகத் திருவாரூர் போகவேண்டியிருக்கிறது. ஆகையால்

அவரைத் தடைசெய்யாமல் அங்கே போகவிட்டு, நாம் சிதம்பர க்ஷேத்திரத்தைச் சுற்றிப் பார்த்து அந்தத் தலத்தோடு தொடர்பு கொண்ட திருநீலகண்ட நாயனார், கணம்புல்ல நாயனார், திருநாளைப் போவார் என்ற நந்தனார் முதலியவர்களைச் சந்தித்து விட்டு அப்பால் நமது யாத்திரையைத் தொடருவோம்.

பொழுது சாய்ந்து இருட்டிவிட்டது நாங்கள் சிதம்பரம் போய்ச் சேரும்போது. எத்தனை தடவைதான் இந்தப் பெரிய கோயிலைத் தரிசித்தாலும் முற்றும் முழுவதும் அதைப் புரிந்து கொள்ள முடியாது. ஆகையால், கோயில் வீதியிலேயே நெடுங் காலமாக வசிக்கும் ஒரு பழைய இலக்கிய நண்பர் வீட்டுக்குச் சென்று அவர் மூலமாக மறுநாட்காலை கோயில் வட்டத்தைப் பார்க்கலாம் என்ற நோக்கத்தோடு அந்த நண்பரைச் சந்தித் தோம். ஆனால் அந்த நண்பர், தம்மைவிட அதிகமாகப் பழக்க முள்ள, கோயிலுடன் தொடர்புள்ள நண்பர் ஒருவர் இருக்கிறார்; அவர் மூலமாகப் பல தகவல்களை அறியலாம் என்று சொல்லித் தெற்கு வீதியில் வசித்த அந்த நண்பர் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அங்கே நான் நேருக்கு நேர் சந்தித்தது பல ஆண்டு களுக்கு முன்னரே எனக்கு அறிமுகமாயிருந்த நண்பர் சம்பந்தம் பிள்ளையைத்தான்! சிதம்பரத்திலே மிகவும் செல்வாக்குள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர். பெரியபுராணத்தைப் பாராயணம் செய்பவர். எங்கள் யாத்திரையின் நோக்கத்தைக் கேட்டவுடன் அளவற்ற மகிழ்ச்சியோடு உபசரித்தார். மறுநாள் காலை தமது வீட்டிலேயே பலகாரம் சாப்பிட்டுவிட்டு, சிதம்பரம் கோயிலைச் சுற்றிப் பார்த்து, மற்றும் இடங்களுக்கும் அழைத்துச்செல்ல ஏற்பாடுகள் செய்தார்.

காலை ஆறு மணிக்கெல்லாம் சம்பந்தம்பிள்ளை வீட்டுக்குப் போனேம். அவரும் அவர் குடும்பத்தினரும் உபசரித்த பாங்கை இங்கு சொல்லாமலிருக்க முடியாது. உப்புமா, சர்க்கரை, இட்டலி, நெய், துவையல், மிளகாய்ப் பொடி, நல்லெண்ணெய், தயிர், வாழைப்பழம், காப்பி, இத்தனை வரிசையுடன் அவரது பெண் களின் இன்முகமும், சம்பந்தம்பிள்ளையின் பெரியபுராணப் பேச்சும் மறக்க முடியாத அனுபவம். எமது யாத்திரையில் சிற்சில சம்பவங்கள் பிரயாணத்தின் அலுப்பை மறக்கச்செய்து, இலக்கியத்தில் நிலைத்து நிற்கவேண்டிய அனுபவங்களாகிவிட்டன. சிதம்பரத்தில் இந்த அனுபவமும் ஒன்று.

நண்பர் சம்பந்தத்தின்மீது சிதம்பரம் கோயில் தீக்ஷிதர்கள் மிகுந்த அபிமானமுள்ளவர்கள் என்பதைத் தெரிந்து கொண் டோம். முதலில் அவர் எங்களை அழைத்துக்கொண்டு போய்

கோயில் நிர்வாகக் குழுவின் செயலாளராயிருந்த ராஜாமணி தீக்ஷிதரிடம் அறிமுகப்படுத்தி வைத்தார். இளம் வயது. கவர்ச்சி கரமான தோற்றம். விவேகி. இவர் தில்லைவாழந்தணர் மூவாயிரத் தில் ஒருவர். ''முன்னெரு காலத்தில் மூவாயிரவர் என்ற கணக்கு சரியாயிருந்திருக்கும். ஆனால், இன்று நாங்கள் சுமார் இருநூறு குடும்பத்தினர்தான் கோயிலோடு சம்பந்தப்பட்டிருக்கிறோம். விவாகமான ஆண்கள் எல்லோருக்கும் கோயிலில் உரிமையுண்டு. இந்தக் காலத்தில் சிலர் ஆங்கிலம் படித்து வெளியூர்களில் போய் உத்தியோகம் பார்ப்பதால் அந்த உரிமையை இழந்து விடுகிறார்கள்'' என்றார் ராஜாமணி தீக்ஷிதர்.

இந்தத் தில்லை மூவாயிரவர் எப்பொழுது எங்கிருந்து வந்தார்கள் என்று சொல்ல வரலாறு காணப்படவில்லை. சோழர் காலத்திலே ராஜராஜ சோழன் சில சிவாசாரியர்களை வடக்கேயிருந்து கொண்டுவந்து பல கோயில்களில் ஆகம விதிப்படி பூஜை செய்ய நியமித்தான் என்று தெரிகிறது. அப்படி நியமிக்கப்பட்டவர்கள் இவர்கள் என்று சொல்ல முடியாது. ஏனெனில், ராஜராஜனுக்கு முன்னே எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்திநாயனார் இவர்களை, ''முட்டாத முச்சந்தி மூவாயிரவர்'' என்று ஒரு தேவாரத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அவர் சமகாலத்தவரான திருமங்கையாழ்வாரும், ''மூவாயிர நான்மறையாளர் நாளும் முறையால் வணங்க'' என்று தில்லை வேதியரைக் குறிப்பிடுகிறார். ஆனால் இவர்களுக்கு முன்பு ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த நாவுக்கரசர் இந்த அந்தணர்களை மூவாயிரவர் என்று சொல்லவில்லை. சம்பந்தரும் மூவாயிரம் என்ற எண்ணிக்கை குறிப்பிடாமல், ''கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே செற்றார் வாழ் தில்லை'' என்றும், ''பசுவேட்டு எரியோம்பும் சிறப்பர் வாழ் தில்லை'' என்றும் அக்கினி வளர்த்து வேள்வி செய்யும் வேதியர்களைக் குறிப்பிடுகிறார். இந்தச் சந்தர்ப்பத்தில் புராதன கோயில் கட்டடங்களையும் சைவ மரபை யும் ஆராய்ந்த ஒரு பேராசிரியர் சிதம்பரத்தைப் பற்றிய தமது ஆராய்ச்சியில் குறிப்பிடும் சில தகவல்கள் பொருத்தமாயிருப் பதைக் காணலாம்.

சிதம்பரம் கனகசபையைப் பிரதக்ஷணம் வருபவர்கள் ஒரு விசித்திரமான உண்மையைச் சாதாரணமாய் கவனிக்க மாட்டார்கள். கூர்ந்து நோக்கினால் தெரியும். நடராஜப் பெருமான் சந்நிதியில் நின்று வழிபட்ட பின் கனகசபையை வலம் வந்தால் முதலில் திருக்களிற்றுப்படி எதிர்ப்படும். அந்த இடத்தி லிருந்து பார்த்தால் மேடையில் நடராஜ மூர்த்தி எழுந்தருளி யிருக்கும் இடத்துக்குப் பின்னால் சுவர் தெரியும். திருக்களிற்றுப்

படியைத் தாண்டி வலம் வரும்போது மேற் சொன்ன சுவர் சாதாரண அகலமுள்ள சுவரா யிருந்தால், இரண்டடி அல்லது மூன்றடி தாண்டியவுடன் வடக்குப் பிராகாரத்துக்கு நாம் வந்து விடலாம். அப்படியில்லாமல், சுவர் ஆறு அல்லது ஏழு அடி அகலமாயிருப்பதுபோல் தெரிகிறது. ஆகையால், அங்கிருப்பது வெறும் சுவரல்ல, நான்கு புறமும் மூடப்பட்ட ஒரு அறை என்பது நமது ஆராய்ச்சி நண்பரின் ஊகம்.

பல்லவர் காலத்திலே சைவ நெறியைப் பரப்பியவர்கள் பாசுபத துறவிகள் என்றும் பசுபதி வழிபாட்டினர் என்றும் பல்லவ சரித்திரத்தைப் பார்க்கும்போது தெரிகிறது. இவர்களில் சிலர் சிதம்பரத்தில் குடியேறி அங்கிருந்த கோயிலில் யாகம் முதலிய செயல்களில் ஈடுபட்டிருந்திருக்கலாம். ''பசுவேட்டு எரியோம்பும் சிறப்பர்'' என்று ஞானசம்பந்தர் சுட்டிக் காட்டு பவர்கள் இவர்களா யிருக்கலாம். இவர்களே பெருகி மூவாயிரவர் என்ற குழுவாக ஏற்பட்டிருக்கக்கூடும். பிற்காலத்தில் சோழ மன்னர்கள் குடியேற்றிய வைதிக பிராமணர் கலப்பால் பாசுபதர் தில்லை மூவாயிர தீக்ஷிதர்களாகி யிருக்கலாம் என்று ஒரு கருத்து நிலவுகிறது.

தீக்ஷிதர் வரலாறு எப்படியாயினும், சிதம்பரம் கோயில் உரிமையும் பரிபாலனமும் இந்தத் தில்லைமூவாயிரவர் என்ற தீக்ஷிதர் கையில்தான் தொன்றுதொட்டு இருந்து வருகிறது, தமிழ்நாட்டில் வேறு எந்தக் கோயிலும் இந்த மாதிரியான உரிமையைப் பெறவில்லை. முதலாம் ராஜராஜன் காலத்தில், கி. பி. பத்தாம் நூற்றாண்டிலே, கோயில் சொத்துக்கள் வாங்கு வதும் கொடுப்பதும், மற்றும் சாசனங்கள் எழுதப்படுவதும், இறைவனின் பிரதிநிதியான ''திருப்புலியூர் சண்டேசுவர தேவனுர்'' பெயரிலேயே நடந்து வந்தன. பன்னிரண்டாம் நூற்றாண்டில், விக்கிரமசோழன் காலத்தில், ஓர் உரிமைப் பிரச்சினை எழுந்து உட்பூசல்கள் ஏற்பட்டன. இந்த வழக்கில் அரசன் தலையிட்டு தில்லைக் கோயில் நடவடிக்கைகளும் கண் காணிப்பும் ''பொது தீக்ஷிதர்'' குழுவின் பெயரில் இருக்கவேண்டு மென்று தீர்ப்பளித்து, அதற்கென சில விதிகளும் ஏற்படுத்தி வைத்தான். அந்த விதிகளே இன்றும் கைக்கொள்ளப்பட்டு வருகின்றன. கோயில் நிர்வாகம் ஒன்பது பேர் கொண்ட ஒரு சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொது என்பது மன்றம் அல்லது சபை. ஆகவே இவர்களை 'பொது தீக்ஷிதர்' என்று சொல்வார்கள். எந்தக் காரியமானாலும் இவர்களே முடிவுசெய்ய வேண்டும். ஆனால் இவர்கள் கூடும் கூட்டங்களில் தலைமை வகிப்பவர் தீக்ஷிதரல்ல, ஒரு பண்டாரம். இந்தப் பண்டாரத்தின்

மூலமாகத்தான்—சண்டேசுரருக்கு இணையாக—எல்லாத் தீர்ப்புக்களும் வழங்கப்படும்.

சிதம்பரம் கோயில் தொகுப்பு ஐந்து சந்நிதிகளைக் கொண்டது. இந்த ஐந்துக்கும் நான்கு நான்கு பேராக இருபது பேர் பூஜை முறை வைத்துக் கொள்வார்கள். இருபது நாட்களுக்கு ஒரு முறை இடம் மாறுவார்கள். ஆனால் நடராஜர் சந்நிதியில் பூஜை செய்ய எல்லாரும் தகுதி பெற்றவர்களல்ல என்றும், ''பூஜை எடுத்தவர்'' என்ற அந்தஸ்தைப் பெற்ற மூன்று நான்கு பேர்தான் நடராஜ மூர்த்தியைத் தொட உரிமையுள்ளவர்கள் என்றும் ராஜாமணி தீக்ஷிதர் விளக்கினர்.

தில்லைவாழந்தணர்களைப்பற்றி இப்படியான செய்திகளையெல்லாம் ராஜாமணி தீக்ஷிதரோடு பேசிக்கொண்டிருந்தபின் அவருடைய அனுமதியோடு சம்பந்தம்பிள்ளை எங்களை உள்ளே அழைத்துச்சென்று பொன் வேய்ந்த கனகசபை முதலிய முக்கியமான இடங்களைப் புகைப்படம் பிடிக்க உதவினர். அதன் பின் சிற்சபையில் ஸ்படிக லிங்க அபிஷேக தரிசனமும், நடராஜர் திருவுருவக் காட்சியும், பின்னல் சிதம்பர ரகசியமாய் ஒளிந்திருக்கும் ஆகாச லிங்கக் கற்பனைக் காட்சியும் கிடைக்கப் பெற்றோம்.

இந்த நடராஜ வடிவத்தை யார் எப்பொழுது வடித்துத் தந்தாரோ சரித்திரம் இல்லை. ஆனால் இப்போது நாம் நினைத்துப் பார்த்தால் இவ்வளவு பெரிய தத்துவத்தைச் சிற்ப வடிவத்தில் வடிக்கக் கருத்து வழங்கிய மேதையையும், அக்கருத்துக் கையை உருவம் வார்த்த சிற்பியையும் தொழவேண்டும் போல் இருக்கிறது. இன்று நாம் காணும் நடராஜ வடிவம் பத்தாம் நூற்றாண்டுக்குப் பின்னர் உருப்பெற்று வழக்கில் வந்தது. அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே நடராஜ வடிவம் சிலையிலிருந்தது என்பதைக் காரைக்காலம்மையாரின் வாயிலாகவும் திருநாவுக்கரசுநாயனார் தேவாரத்திலும் காண்கிறோம்.

நாவுக்கரசரை நாம் பழையபடி ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது. திருவதிகையிலிருந்து புறப்பட்ட இவர் சில தலங்களைத் தரிசித்த பின் சிதம்பரத்துக்கு வந்தார். சுந்தரமூர்த்தி வடக்கு வாயிலால் உட்புகுந்தார் என்று சொல்லும் சேக்கிழார், நாவுக்கரசர் மேற்கு வாயிலால் வந்தார் என்று சொல்லி வைக்கிறார். இதுபோல், சம்பந்தர் தெற்கு வாயிலாலும், மாணிக்க வாசகர் கிழக்கு வாயிலாலும் உள்ளே சென்று வணங்கினர் என்று நால்வருக்கும் நான்கு வாயில்களையும் ஏற்றிச் சொல்வது கர்ணபரம்பரை. நாவுக்கரசர் தில்லைக்கு வந்து

இறைவனைத் துதித்துப் பாடிய சில பாசுரங்களில் நடராஜ வடிவத்தின் லட்சணத்தை மிக அற்புதமாக வருணித்துள்ளார்.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிழ் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறும்
இனித்தம் முடைய எடுத்தபொற் பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே

''எடுத்த பொற்பாதத்துடன் ஆடுகின்ற இந்த வடிவத்தைக் காண வாய்ப்பிருந்தால் மனிதப் பிறவி எடுப்பதும் விரும்பத்தக்கது தான்'' என்கிறார் அப்பர் சுவாமிகள். நடராஜ தரிசனத்தைக் கண்டுகொண்ட அப்பர் திருஞானசம்பந்தரைத் தேடிச் சீர்காழிக்குப் போகிறார். அவரை நாம் பின்னொரு நாள் அங்கு சந்திப்போம்.

நடராஜ வடிவத்தைப்பற்றிச் சொல்லிக்கொண்டு வந்தோ மல்லவா? மிகப் பழைய காலத்திலேயே இறைவனின் கூத்தாடும் நிலையைப்பற்றி யாரோ ஒருவர் கற்பனையில் உதயமாகி யிருக்க வேண்டும். வழிவழியாகச் சிற்பிகள் அதற்கு மெருகு கொடுத்து உருப்படுத்தி வந்தார்கள். பத்தாம் நூற்றாண்டுச் சோழ சிற்பியின் கையில் உருவான நடராஜ வடிவம்தான் முழுமை நிறைந்தது, அதற்குப் பிறகு மேலும் அழகு கொடுக்க இடமில்லை என்ற நிறைவு. இந்த வடிவம் பல நூற்றாண்டுகளாகவே நம் முன்னோரால் பக்தியுடன் வழிபாட்டுக்குரிய வடிவமாக மாத்திரம் போற்றப்பட்டு வந்ததல்லாமல் அதிலடங்கிய கலைத் தத்துவத்தை நாம் இந்த இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில்தான் தெளிவுற அறியக் கூடியதாயிற்று. இதனை எடுத்து முதன்முதலில் விளக்கிய பெருமை இலங்கைத் தமிழர் ஆனந்த குமாரசுவாமி அவர்களைச் சாரும். இந்தியக் கலையின் தத்துவத்தையும் அழகையும் உலகத்துக்கு எடுத்துக்காட்டிய அந்தக் கலாயோகி, நடராஜ வடிவத்தில் அடங்கிய அழகையும் பொருளையும் ஒரு வெண்பா மூலமாக எடுத்துக்காட்டி அதற்குச் சிறந்த வியாக்கியானமும் எழுதி, சிவநடனம் என்ற பெயரில் நூல் வெளியிட்டார்.

தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்ற திரோத முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு

இது உமாபதி சிவாசாரியார் என்ற அறிஞர் ஒருவர் பாடிய 'உண்மை விளக்கம்' என்ற நூலில் உள்ளது. சைவசித்தாந்த நெறியின்படி இறைவன், ஆன்மாக்களைப் பொறுத்த மட்டில்,

ஐந்து வகைத் தொழில்கள் புரிபவன் என்பது மரபு. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன அந்த ஐந்தொழில்கள். நடராஜ வடிவத்தில் துடி என்ற டமருகம் கொண்ட கை படைத்தலையும். அபயகரம் காத்தலையும், அங்கி ஏந்திய கை அழித்தலையும், ஊன்றிய பாதம் ஆன்மாக்களைப் பாசத்திலிருந்து மறைத்தலையும், தூக்கிய பாதம் அருளலையும் காட்டுகின்றன என்பது தத்துவம். சிவபிரானுக்கு மூன்று வகையான நடனங்கள் கூறப்பட்டுள்ளன. திருக்கயிலாய மலையில் தேவர்கள் நடுவில் ஆடுவது பிரதோஷ நடனம். இது ஊழிக்காலம் முடிய உலகத் தோற்றம் உண்டாக ஆடும் சிருஷ்டி நடனம். இரண்டாவது ஊர்த்துவ தாண்டவம். இது வைரவ அல்லது வீரபத்திர மூர்த்தத்தில் நின்று ஆடுவது. திருவாலங் காட்டில் காளியுடன் ஆடியது இந்த நடனம். தில்லையிலும் ஆடியதாக ஐதிகம் உண்டு. கனகசபைக்கு எதிரிலுள்ள நிருத்த சபையில் காணப்படும் சிற்பம் ஊர்த்துவ தாண்டவம். மூன்றுவது ஆனந்த தாண்டவம். இதுவே சிதம்பரத்தில் சிற்சபையில் நித்தியமாய் நிரந்தரமாய் ஆடிக்கொண்டிருக்கும் அற்புத நடனம். இதைப்பற்றி எத்தனையோ நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. உலகத்தின் பல கலைஞர்கள் தேடிவந்து பார்த்துப் பரவசமடைந்து அதே போல நகல் உருவங்கள் செய்துகொண்டு செல்கின்றனர். ஒரு சிலர் பழைய சோழ சிற்பிகள் வார்த்துக் கோயில்களில் பிரதிஷ்டை செய்த சிலைகளையே திருடிச்சென்று பிறநாட்டாருக்கு விற்கின்றனர். இத்தகைய ஒரு சிலை கும்பகோணத்துக்குப் பக்கத்திலுள்ள சிவபுரம் கோயிலிலிருந்து திருடப்பட்டு அமெரிக்காவில் கோடி ரூபாய்க்கு விற்கப்பட்ட வரலாற்றை நாம் அறிவோம்.

கனகசபையில் நடராஜப்பெருமான் காட்சி அளிக்க, அவருக்கு எதிர்ப்புறத்தில் கிழக்குப் பார்த்தபடி கிடந்த திருக்கோலத்துடன் காட்சியளிக்கிறார் கோவிந்தராஜப் பெருமாள். இது சிதம்பரத்துக்கு ஓர் அபூர்வ ஏற்பாடு. கி. பி. எட்டாம் நூற்றாண்டில் நந்திவர்ம பல்லவன் பிரதிஷ்டை செய்து வைத்ததாகத் தெரிகிறது. குலசேகர ஆழ்வாரும் திருமங்கையாழ்வாரும் இந்தக் கோவிந்தராஜப் பெருமாளைப் பாடியிருக்கிறார்கள். அவர்கள் காலத்தில் தில்லை மூவாயிரவரே பெருமாளுக்கும் பூஜை செய்தார்கள். திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில்,

மூவாயிர நான்மறையாளர் நாளும்
முறையால் வணங்க அணங்காய சோதி
தேவாதி தேவன் திகழ்கின்ற தில்லைத்
திருச்சித்திரகூடஞ் சென்று சேர்மின்களே

என்று பாடுகிறார். திருச்சித்திரகூடம் என்பதே வைஷ்ணவர்கள் தில்லையைக் குறிக்கும் பெயர். இந்த கோவிந்தராஜப் பெருமாள் அடிக்கடி பல அவதிக்குள்ளானார் என்று தெரிகிறது. பன்னிரண்டாம் நூற்றாண்டில், இவர் நடராஜர் முன்னிலையில் இருக்கலாகாதென்று சொல்லி சோழமன்னன் இரண்டாம் குலோத்துங்கன் பெருமாள் விக்கிரகத்தைக் கொண்டுபோய், கடலில் போட்டுவிட்டான் என்று ஒரு கதையுண்டு. இன்னொரு கர்ணபரம்பரைக் கதையின்படி சித்திரகூடத்தை எவரோ அழித்த போது இராமானுஜர் பெருமாள் விக்கிரகத்தை எடுத்துச் சென்று கீழைத்திருப்பதியில் பிரதிஷ்டை செய்துவைத்தார் என்று சொல்லப்படுகிறது. பின்னர் பதினாலாம் நூற்றாண்டிலே முகம்மதியப் படைகள் பல கோயில்களை இடித்து அட்டூழியம் செய்தபோது, இவர்களுக்குப் பயந்து பல விக்கிரகங்கள் மறைத்து வைக்கப்பட்டன. செஞ்சியில் ஆண்ட விஜயநகர வீரர்களான கோபண்ணராயனும் கம்பண்ணனும் முஸ்லீம் படைகளை அழித்து அமைதி கண்டபோது, இந்துக் கோயில்கள் திறக்கப்பட்டன. அந்தச் சமயத்தில் கோவிந்தராஜப் பெருமாளையும் சிதம்பரத்தில் பிரதிஷ்டை செய்ய வேதாந்ததேசிகர் ஏற்பாடு செய்துவைத்தார். இதற்குப் பிறகும் பெருமாளுக்கு நிம்மதி ஏற்படவில்லை. மேலும் ஒரு தடவை இடம் மாறியபின் முடிவிலே பதினேழாம் நூற்றாண்டு முதல்தான் இன்று வரையிலும் அவர் நிம்மதியாக அநந்த சயனத்தில் வீற்றிருக்கிறார். இதற்கு வழி செய்து வைத்தவர் 1539ல் ஆண்ட விஜயநகர மன்னர் அச்சுதராயர். நடராஜர் சந்நிதிக்கு எதிரே துவஜஸ்தம்பத்தடியில் நின்றால் ஏக சமயத்தில் தில்லையம்பலத்தானையும் கோவிந்தராஜனையும் வழிபடலாம். இந்த அனுபவத்தை நந்தன் சரித்திரக் கீர்த்தனை பாடிய கோபாலகிருஷ்ண பாரதியார்,

தில்லையம்பலத்தானை கோவிந்தராஜனைத்
தெரிசித்துக் கொண்டேனே...
தும்பைப்பூ மாலைகள் தொட்டுக் கொடுப்ப திங்கே
துளசிக் கொழுந்தெடுத்து தொட்டுக் கொடுப்ப தங்கே...

என்று இரு கடவுளரையும் விளித்துப் பாடியிருப்பதில் காணலாம்.

இந்த நடராஜ தரிசனத்தின் பின் சம்பந்தம்பிள்ளை தில்லையின் மற்றைய கோயில்களுக்கும் அழைத்துச்சென்றார். எல்லாக் கோயில்களிலும் இறைவன் எழுந்தருளியிருக்கும் கர்ப்பக்கிருகத்தை மூலஸ்தானம் என்பர். ஆனால் சிதம்பரத்திலும் திருவாரூரிலும் லிங்கப் பிரதிஷ்டை செய்யப்பட்ட தனிக் கோயிலை திருமூலட்டானம் என்ற சிறப்புப் பெயரால் அழைப்பர்.

இவ்விரு தலங்களிலும் முக்கிய வழிபாட்டுக்குரியவர்கள் சிதம்பரத்தில் நடராஜரும், திருவாரூரில் தியாகராஜரும். ஆகையால் மூலவராக, அருவமாகிய லிங்க வடிவத்தில் இருக்கும் கோயிலே திருமூலட்டானம் என்று வழங்குகின்றனர். சிதம்பரம் திருமூலட்டானத்தருகே உள்ளது சிவகாமி சந்நிதி. இங்கிருந்து நாங்கள் ஆயிரக்கால் மண்டபத்துக்கு வந்தோம்.

இந்த ஆயிரக்கால் மண்டபம்தான் சேக்கிழாரின் பெரிய புராண அரங்கேற்றத்துக்கு உபயோகப்பட்டது என்று சொல்வார்கள். பெரிய புராணம் பிறந்த கதையும் ஒரு ருசிகரமான வரலாறு. திருவாரூரில் அநபாய சோழனின் மந்திரியாயிருந்தவர் சேக்கிழார். அரசன் சமண இலக்கியம் ஒன்றில் ஈடுபாடு கொண்டிருந்ததைக்கண்ட சேக்கிழார், சிவனடியார்களின் வரலாற்றைச் சொல்லிச் சைவத்தின் பெருமையை விளக்கியபோது, அந்த வரலாற்றைக் காவியமாகப் பாடச் சொன்னான் அரசன். அந்த ஆணையை மேற்கொண்டு சேக்கிழார் சிதம்பரம் சபாநாயகரை வந்து வணங்கி, தில்லையம்பலவாணனே ''உலகெலாம்'' என்ற முதல் அடி எடுத்துக் கொடுக்க, ''உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்'' என்ற காப்புச் சொல்லுடன் தொடங்கி பெரியபுராணம் என்ற மகா காவியத்தை எழுதி முடித்தார். அரசனே முன்வந்து பெரிய புராணத்தை அரங்கேற்ற ஏற்பாடு செய்து சேக்கிழாரையும் பெருமைப்படுத்தினான். இது நடந்தது கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில். இந்தச் சம்பவத்தைப் பதினாலாம் நூற்றாண்டில் தில்லையில் வசித்த மகாஞானியாகிய உமாபதி சிவாசாரியார், 'சேக்கிழார் புராணம்' என்ற நூலிலே மிக விரிவாகச் சொல்லியிருக்கிறார்.

உமாபதி சிவாசாரியார் சிதம்பரம் பெற்ற மற்றொரு பேரறிஞர். தில்லைவாழந்தணர்கள் என்ற தீக்ஷிதர்களில் ஒருவரான இவர் அளவுகடந்த இறுமாப்புடனும் கல்விச் செருக்குடனும் வாழ்ந்தவர். ஆடையாபரண வகையுடன் எப்பொழுதும் பல்லக்கிலேதான் பிரயாணம் செய்வார். ஒரு நாள் இவர் சிதம்பரம் வீதியொன்றில் சிவிகையில் ஏறிச் செல்லும்போது வழியிலே ஒரு பரதேசி இவரைப் பார்த்து, ''பட்ட கட்டையிற் பகற் குருடு போகுது பாரீர்!'' என்று ஏளனமாகச் சொன்னார். அந்தப் பரதேசி சிதம்பரத்தைச் சார்ந்த திருக்களாஞ்சேரியிலிருந்த சைவசித்தாந்த ஞானசிரியர் மறைஞான சம்பந்த சிவாசாரியார். இவர் இன்னார் என்றுணர்ந்ததும் உமாபதி சிவாசாரியார் உடனே சிவிகையிலிருந்து இறங்கி வந்து, மறைஞானசம்பந்தரின் திருவடிகளில் விழுந்து வணங்கி உபதேசம் பெற்றார்.

மறைஞான சம்பந்தர் சகலமும் துறந்த ஞானி. உமாபதியும் தீக்ஷிதர்களுக்குள்ள ஒழுக்கங்களைத் துறந்து தமது குருவுண்ட எச்சில் உணவையே தாமும் உண்டு மெஞ்ஞானம் வரப்பெற்றார். இவர் நடத்தையை வெறுத்த தில்லைவாழந்தணர்கள் உமாபதியைத் தங்கள் குலத்துக்குரியவர் அல்லர் என்று தள்ளி வைத்து விட்டனர். உமாபதி தனிமையில் பக்கத்திலுள்ள கொற்றவன்குடி என்ற பகுதியில் உறைந்துவந்தார். ஒரு நாள் சிதம்பரம் கோயிலில் பிரம்மோற்சவம் ஆரம்பமாகும்போது கொடிமரத்தில் கொடியேற முடியாமல் தடைபட்டது. எல்லோரும் எவ்வளவோ பிரயத்தனப்பட்டும் அது ஏற மறுத்துவிட்டது. உமாபதியை அழைத்து வாருங்கள் என்று அசரீரி பிறந்ததாகவும், அவர் வந்து தரிசனம் கொடுத்ததும் கொடி தானாகவே ஏறியது என்றும் சொல்வார்கள். அந்தச் சமயத்தில் அவர் பாடியதுதான் 'கொடிக்கவி'. இது சைவ சித்தாந்த சாஸ்திரம் பதினான்கில் ஒன்று. சைவர்கள் போற்றும் சித்தாந்த சாஸ்திரங்களில் முதல் நூல் சிவஞானபோதம். இதற்கு வழிநூல் சிவஞான சித்தியார். இந்தத் தொடரில் உமாபதிசிவாசாரியார் எட்டு நூல்கள் செய்துள்ளார். இந்த நூல்கள் வெளிவந்த பின்னர் சைவசித்தாந்த இலக்கியம் அளவற்ற பெருமதிப்பைப் பெற்றது என்று சொல்வார்கள்.

சிதம்பரத்துக்கு மற்றொரு மதிப்பைக் கொடுக்கும் சம்பவம் தேவார ஏடுகள் கண்டுபிடிக்கப்பட்ட வரலாறு. சிதம்பரம் கோயில் தென்மேற்குப் பிராகாரத்தில் நூற்றுக்கால் மண்டபம் இருக்கிறது. இது தேவார மண்டபம் என்றும் வழங்கப்படும். இங்கேதான் மூவர் தேவாரப் பதிகங்களையும் விக்கிரம சோழனுக்கு மந்திரியாயிருந்த காளிங்கராயன் (பன்னிரண்டாம் நூற்றாண்டு) செப்பேட்டில் எழுதிப் பாதுகாப்பாக வைத்தான் என்று கல்வெட்டுச் சான்றுள்ளது. கி.பி. ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிச்சென்ற பல்லாயிரக்கணக்கான தேவாரப் பாடல்களும் அவ்வப்போது சிலரால் ஏட்டில் எழுதப்பட்டன. அவை செவிவழிப்பாடமாகவும் பாராயணம் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. ஞானசம்பந்தர் வரலாற்றைப் பார்க்கும் போது அவர் பின்னால் சம்பந்தசரணாலயர் என்பவர் எப்போதும் யாத்திரையில் தொடர்ந்து சென்றார் என்றும், சம்பந்தர் அவ்வப் போது திருத்தலங்களில் பதிகம் இயற்றிப் பாடும்போது அதை உடனுக்குடன் சரணாலயர் ஏட்டில் எழுதினார் என்றும் தெரிகிறது. அதேபோல்தான் அப்பரும் சுந்தரரும் தல யாத்திரை செய்து தேவாரப் பாடல்களை இயற்றிப் பாடும்போதெல்லாம்

அவர்களோடு பின் சென்ற சீடர்கள் சிலர் ஏட்டில் எழுதி வந்திருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது. இப்படியாக எழுதப் பட்ட சில ஏட்டுச் சுவடிகள் அங்கங்கே சேமித்து வைக்கப்பட்டிருந்தன. பெரும்பாலானவை அழிந்து போய்விட்டன.

இரண்டு மூன்று நூற்றாண்டுகள் சென்றபின் தமிழ்நாட்டுக் கோயில்களில் திருமுறை பாடுவதைக் கட்டாய நியதியாக்க வேண்டுமென்று விரும்பிய ராஜராஜ சோழன், தேவார ஏடுகள் கிடைக்கப் பெருமல் மனம் நொந்தான். எங்கும் தேடியும் கிடைக்கவில்லை. அந்தச் சமயத்தில் சிதம்பரத்துக்கு மேற்கேயுள்ள திருநாரையூர் என்ற தலத்தில் ஒரு சிறு பிள்ளை, நம்பியாண்டார் நம்பி என்ற பெயரில், தாம் வணங்கும் விநாயகருடன் பேசு கின்றான் என்ற அற்புதத்தைக் கேள்விப்பட்ட மன்னன் அங்கே போய், தேவார ஏடுகள் கிடைக்கும் மார்க்கத்தை விநாயகரிடம் கேட்டுச் சொல்லுமாறு வேண்டினான். திருவருளால் நம்பி அறிந்து, சிதம்பரம் கோயிலுள், வடமேற்குப் பிராகாரத்து மூலையில் ஓர் அறை பூட்டப்பட்டிருக்கிறதென்றும் அதனுள்தான் தேவார ஏடுகள் வைக்கப்பட்டுள்ளன என்றும் சொன்னார். அந்தச் செய்தியைக் கேட்ட ராஜராஜன் சிதம்பரத்துக்கு வந்து விசாரித்தபோது தீக்ஷிதர்கள் அந்த அறைக் கதவைத் திறக்க மறுத்துவிட்டார்கள். கதவின் பூட்டிலே நாயனூர் மூவரதும் முத்திரை பொறிக்கப்பட்டிருக்கிற தென்றும், அவர்கள் நேரில் வந்து அனுமதி கொடுத்தாலல்லாது திறக்க முடியாதென்றும் சொன்னார்கள். அரசன் உடனே நாயனூர் மூவரின் விக்கிரகங்களை அலங்கரித்து எழுந்தருளச்செய்து தேவார ஏடுகள் பூட்டியிருந்த அறையின் முன் நிறுத்தி, தீக்ஷிதர்களிடம், ''நாயன்மார்களே நேரில் இங்கே எழுந்தருளிவிட்டனர். இனி நீங்கள் அறையைத் திறக்கலாம்'' என்றான்.

தில்லைவாழந்தணர்கள் கதவுகளைத் திறந்துவிட்டனர். உள்ளே ஒரே கறையான் புற்றாயிருந்தது. அதை அகற்றிப் பார்க்கும்போது பல ஏடுகள் தென்பட்டன. அவற்றின்மீது எண்ணெயைச் சொரிந்து ஏடுகளை உடையாமல் வெளியே எடுத்து, செல்லரித்துப் போனவற்றை நீக்கி, எஞ்சிய ஏடுகளிலுள்ள தேவாரப் பதிகங்களை நம்பியாண்டார் நம்பியே ஒரு வரலாற்று ஒழுங்கின்படி திருமுறைகள் என்ற பெயரில் ஏழு திருமுறைகளாக வகுத்துக்கொடுத்தார் என்பது கர்ணபரம்பரையாக வழங்கும் கதை.

இந்தத் தேவார ஏடுகளை வெளிக்கொணரச் செய்த ராஜராஜ சோழன் எல்லாக் கோயில்களிலும் இவற்றைத் 'திருப்பதியம்'

என்ற பெயரில் நித்தியமும் பாடவேண்டும் என்று சட்டம் பிறப்பித்திருந்தான். பல கோயில்களில் திருப்பதியம் பாடுவதற் கென்றே சில பாடகர்களை நியமித்திருந்தான். அந்தப் பரம்பரை யில் இன்றும் தமிழ்நாட்டுக் கோயில்கள் பலவற்றில் தேவாரம் பாடுவதற்கென்றே ஓதுவார்கள் இருப்பதைக் காணலாம்.

தில்லை நடராஜர் கூத்துகந்த பெருமான் என்ற காரணத்தால் கோயிற் சிற்ப வேலைகளிலெல்லாம் நடனக்கலையின் வடிவங்களைச் சேர்த்திருக்கிறார்கள். கிழக்குக் கோபுர வாயிலிலும் மேற்குக் கோபுர வாயிலிலும் பரத சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட நூற்றெட்டு வகைக் கரண பேதங்களைப் புடைச் சிற்பங்களாக அமைத்து, அவற்றின் பெயர்களையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். கி.பி. பதின்மூன்றும் நூற்றாண்டில் தொண்டைமண்டலத்தில் தனியரசு நடத்திய காடவ மன்னன் கோப்பெருஞ்சிங்கன் ஒரு பரதக்கலை வல்லவன் என்பதையும் அவனே இந்தத் தாண்டவ லக்ஷண சிற்பங்களை ஏற்படுத்தியவன் என்பதையும் முன்பு நாம் சேந்தமங்கலத்தைப்பற்றிச் சொல்லும்போது குறிப்பிட்டிருக் கிறோம். இந்த நடன சிற்பங்களைப் பற்றிப் பல அறிஞர்கள் பல நூல்கள் எழுதியுள்ளனர்.

10. காணமற்போன ஓடு

"அடுத்தாற்போல் சிதம்பரத்தில் என்ன பார்க்க வேண்டும்?" என்று கேட்டார் சம்பந்தம்பிள்ளை. "சிதம்பரத்தைப் பொறுத்த வரையில் நாட்கணக்காகத் தங்கியிருந்தாலும் எல்லாவற்றையும் பார்த்துவிட முடியாது. ஆனால் நாங்கள் வந்த நோக்கத்துக்கு வேண்டிய இடங்களையும் அவற்றுடன் தொடர்புள்ள ஐதிகங்களையும்தான் முக்கியமாக நாங்கள் கவனிக்க வேண்டியிருக்கிறது. திருநீலகண்ட நாயனார் இந்தத் தில்லையைச் சேர்ந்தவர்தானே?" என்று கேட்டோம். "அவர் சம்பந்தப்பட்ட தலம் திருப்புலீச்சரம், சிதம்பரம் கோயிலுக்கு மேற்கிலிருக்கிறது. போய்ப் பார்க்கலாம் வாருங்கள்" என்று சொல்லி சம்பந்தம் பிள்ளை எங்களை அங்கே அழைத்துச்சென்றார்.

திருநீலகண்ட நாயனார் கதை தமிழ் நாட்டில் பலருக்கு நன்கு தெரிந்த கதை. மண்பாண்டம் செய்து விற்கும் குயவ சாதியைச் சேர்ந்தவர் திருநீலகண்டர். இறைவனிடத்திலே நிரம்பிய பக்தி கொண்டவர். சிவபெருமானுக்குக் கண்டத்திலே நீலம் இருப்பதால் நீலகண்டன் என்ற பெயர் வந்தது. அந்தப் பெயரையே கொண்ட நமது அடியாரும் சில வாழ்க்கை நடத்தி வந்தார். இளம் வயதினரான இவரும் இவர் மனைவியும் ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியோடும் வாழ்ந்தனர். ஒரு நாள் ஏதோ விதி வசத்தால் இவர் ஒரு தாசி வீட்டுக்குப் போய்த் திரும்பியதும், மனைவி அதனைத் தெரிந்துகொண்டு, கணவனின் உடலைத் தீண்ட மறுத்துவிட்டார். திருநீலகண்டர் எவ்வளவோ முயன்றும் மனைவி இடம் கொடாமல் திருநீலகண்டத்தின் மேல் ஆணையிட்டு, மறுத்துவிட்டார். இறைவன் ஆணைக்குக் கட்டுப்பட்ட திருநீலகண்டரும் சரி என்று அன்று தொட்டு மனைவியையோ அல்லது வேறு பெண்ணையோ உடலால் மாத்திரமல்ல, மனத்தாலும் தீண்டாமல் இருந்து விட்டார். கணவனுக்கும் மனைவிக்கும் இந்த ஒரு விஷயத்தைத் தவிர மற்றும் இல்வாழ்க்கையில் எவ்வித பேதமும் இல்லாமல் நடந்துவந்தது. இவர்களின் உறுதியையும் உடலுறவற்ற நிலையையும் ஊரவர்கள் அறியாமல் நடந்து கொண்டதுதான்

இவர்களின் உயர்வுக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. வருடங்கள் பல சென்றன. இவர்கள் இளமைப் பருவம் கழிந்து முதுமையேற்பட்டது. அப்படியும் அவர்கள் விரதம் தடைப்பட வில்லை. ஒரு நாள் இறைவனே இந்தத் தம்பதியைச் சோதிக்க வந்துவிட்டார்.

திருநீலகண்டர் பானை முதலிய பாத்திரங்களை வனைந்து கொடுப்பதோடு சிவனடியார்களுக்குத் திருவோடு செய்து கொடுத்தும் வந்தவர். ஒரு நாள் சிவபெருமான் ஒரு காபாலிக சந்நியாசி வேடத்தில் கையில் ஒரு திருவோட்டுடன் வந்து, திருநீலகண்டரைப் பார்த்து, ''பக்தா, இந்தத் திருவோட்டைக் கொஞ்சநாள் பத்திரமாக வைத்திருந்து திருப்பிக்கொடு. நான் வேறூர் ஊருக்குப் போய்விட்டு வந்து வாங்கிக்கொள்கிறேன்'' என்றார். நீலகண்டரும், ''அப்படியே ஆகட்டும் சுவாமி'' என்று சொல்லி காபாலிகர் கொடுத்த ஓட்டை வாங்கித் தம் வீட்டில் பாதுகாப்பான இடத்தில் வைத்திருந்தார்.

சில நாட் சென்றபின் காபாலிகர் வந்தார். நீலகண்டரிடம் தாம் கொடுத்துவைத்திருந்த ஓட்டைக் கேட்டார். திருநீலகண்டர் தாம் பாதுகாப்பாக வைத்திருந்த இடத்தில் பார்த்தால் ஓட்டைக் காணோம்! மனைவியாரைக் கேட்டார். அவருக்கும் தெரியவில்லை. ஓடோ மாயமாய் மறைந்துவிட்டது! காபாலிகரின் திருவிளையாடல்களில் இதுவுமொன்று என்பதையறியாத திருநீலகண்டர் திகைத்து நின்றார். காபாலிகரோ தமது ஓட்டைத் தாவென்று பிடிவாதம் பிடிக்கிறார். திருநீலகண்டர் சமாதானம் சொல்லி, ''சுவாமி, ஏதோ நடந்தது நடந்துவிட்டது. எங்கு தேடியும் அந்த ஓடு அகப்படவில்லை. அதற்குப் பதிலாக நான் புதிதாகவே ஒரு சிறந்த திருவோடு தயாரித்துத் தருகிறேன். பொறுத்தருள்க'' என்றார். காபாலிக சந்நியாசியோ வெகுண்டெழுந்தார். ''நான் கொடுத்த ஓடு சாமானிய ஓடென்று நினைத்துக் கொண்டாயா? நீ புதிய ஓடல்ல, பொன்னுலிழைத்த ஓடு தந்தாலும் எனது ஓட்டுக்கு இணையாகாது! என் திருவோட்டையே நான் கேட்கிறேன். உன்னிடத்தில் நான் வைத்த அடைக்கலப் பொருளை அபகரித்து விட்டாய்! நீ திருடன்!'' என்று குற்றம் சுமத்தினார். திருநீலகண்டர் ''சிவ! சிவ! நான் திருடவில்லை என்பதை எப்படித் தங்களுக்குத் தெரிவிப்பேன்,'' என்று வருந்தவும், காபாலிகர், ''அப்படியானால் உன் புத்திரனைக் கையில் பிடித்துக்கொண்டு குளத்திலே மூழ்கி, நான் திருடவில்லை என்று சத்தியம் பண்ணிக்கொடு'' என்றார். நீலகண்டர், ''அப்படிச் சத்தியம் செய்வதற்கு எனக்குப் புத்திரன் இல்லையே சுவாமி'' என்றார். ''அப்படியானால் உன் மனைவியைக் கைபிடித்து முழுகிச் சத்தியம் பண்ணித்தா'' என்றார் காபாலிகர்.

இதைக்கேட்ட திருநீலகண்டர் கவலைப்பட்டார். மனைவியைத் தீண்டலாகாது என்று சபதம் செய்தவர் இப்போது தர்மசங்கடமான நிலைமையில் மாட்டிக்கொண்டார். காபாலிகரைப் பார்த்து, ''சுவாமி, நானும் என் மனைவியும் ஒரு சபதம் காரணமாக ஒருங்கே முழுகுதல் கூடாது. நான் மாத்திரம் முழுகிச் சத்தியம் பண்ணித்தருகிறேன்'' என்றார். காபாலிகர் கோபங் கொண்டு, ''நான் அடைக்கலம் வைத்த திருவோட்டைத் தராமலும், திருடவில்லை என்று சத்தியம் பண்ணித் தராமலும் ஏமாற்றுகிறாயா?'' என்று சொல்லி, நீலகண்டரை அழைத்துப் போய்த் தில்லைவாழந்தணர்கள் முன்னிலையில் நிறுத்தி முறையிட்டார். அந்தணர்கள் அந்த முறையீட்டைக் கேட்ட பின், ''சிவயோகியார் கேட்பது நியாயம்தானே? ஒடு இல்லையென்றால் சத்தியம் செய்து கொடும்'' என்றார்கள். நீலகண்டர் சிறிது யோசித்துவிட்டு, ''சரி, தகுந்தபடி குளத்திலே முழுகிச் சத்தியம் செய்து தருகிறேன்'' என்று சொல்லித் தம் மனைவியை அழைத்து வந்து திருப்புலீச்சரத்துக்கு முன் இருக்கிற குளத்திலே, ஒரு மூங்கில் தண்டை, ஒரு புறத்திலே மனைவியும் மறுபுறத்திலே தாமும் பிடித்துக்கொண்டு இறங்கினார். காபாலிகர் உடனே, ''என்ன ஏமாற்றப் பார்க்கிறாயா? மூங்கில் தண்டை விட்டு உன் மனைவியின் கையைப் பிடித்துக்கொண்டு மூழ்கு''என்று பிடிவாதம் பிடித்தார். திருநீலகண்டர் அப்போதுதான் தமது இரகசியத்தை வெளிப்படுத்தி, தாம் பரத்தையர் வீட்டுக்குப் போனதும், அதனாலுண்டாகிய சபதமும் உலகத்தார் அறியும்படி சொல்லி, மனைவியின் கையை இப்பொழுதும் பிடித்தல் முடியாது என்று மறுத்து நீரில் மூழ்கி எழுந்தார். என்ன ஆச்சரியம்! காபாலிகரைக் காணவில்லை. திருநீலகண்டரும் மனைவியும் தாம் இழந்த யௌவனப் பருவத்தை மீண்டும் பெற்று இளம் தம்பதிகளாகக் காட்சி தந்தனர். அங்கு கூடியிருந்தவர் யாவரும் ஆச்சரியத்தில் மூழ்கினர்.

திருப்புலீச்சரத்து சந்நிதியிலிருக்கும் குளம் இளமையாக்கினர் குளம் என்று வழங்கப்படுகிறது. திருநீலகண்டர் வரலாற்றை நினைவுபடுத்த இந்தக் குளத்தின் படிக்கரைச் சுவரில் இவர்களின் முதுமை இளமை வடிவங்கள் சிற்பமாகக் காட்சியளிக்கின்றன.

புலிக்கால் முனிவராகிய வியாக்கிரபாதர் வழிபட்ட காரணத்தால் இந்தத் தலம் திருப்புலீச்சரம் என்ற பெயர் பெற்றதாம். குளத்தின் பெயரும் வியாக்கிரபாத தீர்த்தம். சிதம்பரம் கோயிலுக்கு அபிஷேக தீர்த்தம் எடுக்கும் பத்து தீர்த்தங்களில் இந்த வியாக்கிரபாத தீர்த்தமும் ஒன்று. திருநீலகண்டர்

வரலாற்றையொட்டி இளமையாக்கினர் குளம் என்றும் சொல்லப்படுகிறது.

திருப்புலீச்சரத்துடன் தொடர்புடைய மற்றொரு நாயனர் பெயர் கணம்புல்ல நாயனர். இவர் தமது சொந்தச் செலவிலே திருப்புலீச்சரத்தில் விளக்கேற்றித் தொண்டு செய்துவந்தார். வறுமையெய்தியதும் கணம்புல் என்ற புல்லை அரிந்து அதை விற்று வரும் பொருளைக்கொண்டு நெய் வாங்கி விளக்கேற்றினர். அதனால் அவருக்கு கணம்புல்லர் என்ற பெயர் ஏற்பட்டது. பின்னர், புல்லும் விலைப்படாமையால், நெய் வாங்கப் பண மில்லாமல், அப்புல்லையே விளக்காயெரித்தார். சோதனை மேல் சோதனையாக, பாவம், புல்லும் விளக்கெரிக்கப் போதவில்லை. உடனே கணம்புல்லர் சிறிதும் தயங்காமல், தமது முடியையே விளக்காயெரித்தார். இறைவன் இதைப் பொறுக்காமல் தடுத்தாட்கொண்டார் என்பது பெரிய புராணத்திலுள்ள வரலாறு. திருப்புலீச்சரத்தினுள்ளே தெற்குப் பிராகாரத்தில் இவரது சிலை வைத்து வணங்கப்படுகிறது.

சுவாமி தரிசனம் செய்துகொண்டு வெளியே வந்தோம். எங்கள் கார் சாரதி ராதாகிருஷ்ணனைக் காணவில்லை. சிறிது நேரம் காத்திருந்தபோது அவர் இளமையாக்கினர் குளத்திலிருந்து எழுந்து வரக்கண்டோம். ''இவரும் பத்து இருபது வயதைக் குறைத்து இளமை தேடுகிறார்'' என்று பரிகசித்தார் சிட்டி. ராதாகிருஷ்ணன் ஓர் அபூர்வ பேர்வழி. நாங்கள் தரிசித்த எந்தக் கோயிலானாலும், குளமோ ஆறோ பக்கத்தில் இருந்தால், உடனே அதில் குளித்துவிட்டு, விபூதிப் பூச்சுடன் சுவாமி தரிசனம் செய்து கொள்வார். நாங்கள் புகைப்படம் பிடித்துக்கொண்டோ, கோயில் நிர்வாகிகள் அல்லது அர்ச்சகர்களுடன் பேசிவிட்டோ வரும்போது நல்ல சிவப்பழமாகக் காட்சி தருவார். எங்கள் யாத்திரையின்போது ராதாகிருஷ்ணனின் இறை பக்தியும் ஒத்துழைப்பும் எவ்வளவோ துணை செய்தது.

திருப்புலீச்சரம் என்ற தலத்துக்கு இளமையாக்கினர் கோயில் என்றும் ஒரு பெயர் வழங்குகிறது. நண்பர் சம்பந்தம்பிள்ளைக்கு இங்கு தெரியாத குருக்கள் இல்லை. நாங்கள் உள்ளே சென்று எல்லா இடங்களையும் சிற்பங்களையும் பார்ப்பதற்கு அர்ச்சகர் ஒருவரை அழைத்து அவர் துணையோடு போய்ப் பார்க்க ஏற்பாடு செய்து தந்தார். ''இனி நீங்கள் முக்கியமாகப் பார்க்கவேண்டியது திருநாளைப் போவார் என்ற நந்தனார் சம்பந்தப்பட்ட இடங் களைத்தான். இங்கு நந்தனருக்கு ஒரு சிறு கோயில் இருக்கிறது. அவர் தீக்குளித்த இடம் ஓமகுளம் என்ற பெயரில் ஒரு குளமாக

இருக்கிறது'' என்று சொல்லி எங்களை மேலும் அழைத்துச் சென்றார். நந்தனார் பிறந்த ஆதனூரும் அவர் வழிபட்ட திருப்புன்கூரும் எங்கள் யாத்திரையில் பின்னல் பார்க்கவேண்டிய தலங்கள். ஆகையால் சிதம்பரத்தில் நந்தனார் சம்பந்தப்பட்ட இடங்களை இப்பொழுதே பார்த்துப் போக விரும்பினோம். முதலில், சிதம்பரத்திலே செங்காட்டன் தெரு என்ற பகுதியில் நந்தனாருக்குள்ள ஒரு சிறு கோயிலைப் போய்ப் பார்த்தோம். செங்காட்டன் தெரு என்பது கைத்தறி நெசவாளர் வசிக்கும் பகுதி. இங்கேயுள்ள சிறு கோயிலில் நந்தனார் விக்கிரகம் வைத்துப் பூஜையும் வழிபாடும் நடந்துவருகிறது. அங்கிருந்து ஓம குளம் என்ற இடத்துக்கு அழைத்துப்போய்க் காண்பித்தார் சம்பந்தம் பிள்ளை. இந்த இடத்தில்தான் நந்தனார் தீக்குளித்துத் தில்லைப் பெருமானுடன் இரண்டறக் கலந்தார் என்பது ஐதிகம். தில்லை வாழந்தணர்கள் மூட்டி வைத்த தீயில் நந்தனார் புகுந்தார். அது அவருக்குத் தண்ணென்றிருந்த காரணத்தால், குளமாக வெட்டி வைத்திருக்கிறார்கள். மிகப் பெரிய குளத்துக்குப் பக்கத்திலே நடராஜர் கோயில் என்ற பெயரில் ஒரு புதிய கோயில் இருக்கிறது. ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த சகஜானந்தா என்பவர் இந்தக் கோயிலை ஹரிஜனங்களுக்காகக் கட்டி வைத்து அவர்கள் சமூக முன்னேற்றத்துக்குப் பல சேவைகள் செய்தார் என்று சொல்லப் படுகிறது.

தேவாரத் திருமுறைகள் கண்டது சிதம்பரம். திருவாசகம் தந்த மாணிக்கவாசகரை வரவேற்றது சிதம்பரம். திருவிசைப்பா பாடிய சேந்தனார், திருமாளிகைத் தேவர், கருவூர்த்தேவர், கண்டராதித்தர் முதலியவர்களை ஏற்றுக்கொண்டது சிதம்பரம். சைவசித்தாந்த சாத்திரங்களில் பெரும்பகுதியை வரைந்த உமாபதிசிவத்தைத் தந்தது சிதம்பரம். இறையருளும் கல்வியும் வளரக் காரணமாயிருந்த சிதம்பரம் நகரத்தைச் சுற்றிப் பார்த்தோம். ஞானப்பிரகாசர் மடம், சேக்கிழார் கோயில், ஆறுமுக நாவலர் வித்தியாசாலை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்—இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு நமது கதாநாயகன் சுந்தரமூர்த்தியை நினைவுகொண்டோம். திருவாரூரை நோக்கிச் செல்பவர் பக்கத்திலுள்ள சீர்காழி வழியாகச் செல்கிறார் என்று தெரிகிறது. திருநாவுக்கரசரும் அங்கேதான் சென்றிருக்கிறார். ஆகையால் நாமும் சீர்காழிக்குச் செல்வோம். சிதம்பரம் நண்பர் சம்பந்தம் பிள்ளையிடம் விடை பெற்றுக்கொள்கிறோம்.



திருநாவலூர் பக்தஜனேஸ்வரம் - பக். 6

சேந்தமங்கலம் கோட்டை - பக். 7

திருநாவலூர் சுந்தரர் தம்பதிகள் – பக். 8

திருவதிகை கோபுரம் - பக். 39



திருவெண்ணெய் நல்லூர் – பக் 18



வழக்குவென்ற திருவம்பலம் - பக் 18



திருக்கோவலூர் வீரட்டானம் - பக். 22



மெய்ப்பொருள் நாயனார் (தாராசுரம்) - பக். 21



சித்தவடமடம் சிதம்பரேஸ்வரம் - பக். 30



திருவாமூர் பசுபதீஸ்வரம் - பக். 34



கரையேறவிட்ட குப்பம் - பக். 42



குணபர வீச்சுரம் - பக். 46



தில்லை, கனகசபை - பக். 50



சிதம்பரம் தேவாரமண்டபம் – பக். 57



இளமையாக்கினர் கோயிலும் குளமும் - பக். 63



திருநீலகண்டரும் மனைவியும் (தாராசுரம்) - பக். 62

11. தோடுடைய செவியன்

அழுகின்ற குழந்தையைக் கரையில் நிறுத்திவிட்டுத் தந்தை குளத்திலிறங்கி நீராடுகிறார். சற்று நேரத்தில் அழுகையும் நின்றது. குளித்துவிட்டு வெளியே வந்த தந்தை பார்க்கிறார், குழந்தையின் வாயில் யாரோ கொடுத்த பாலின் எச்சம் வடிந்திருக்கிறது. ''யாருடைய எச்சில் பாலை அருந்தினாய்?'' என்று கோபத்துடன் தந்தை ஒரு கோல் கொண்டு குழந்தையை அடிக்கிறார். பிள்ளை சிறிதும் தயங்காமல் மலைமீது அமர்ந்திருக்கும் தோணியப்பராகிய சிவனது உருவத்தைச் சுட்டிக் காண்பிக்கிறான். காண்பித்தது மாத்திரமல்ல, அந்த மூன்று வயதுப் பச்சிளம் பாலகன் ஒரு பாட்டே பாடுகிறான்.

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந் தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே

தேவாரம் பாடிய நாயனார் மூவரில் திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்டதாகச் சொல்லப்படும் காட்சி இது. சீர்காழியிலே கவுண்டின்னியப் பிராமணர் குலத்திலே சிவபாத விருதயர் என்பவரின் குழந்தையாகப் பிறந்த இந்த அபூர்வப் பிறவி மூன்று வயதிலேயே செந்தமிழ்ப்பாக்கள் பாடித் தமிழ் உலகத்தையும் சைவ உலகத்தையும் ஒரு கலக்குக் கலக்கிவிட்டது. மூன்று வயதிலாரம்பித்து, பதினாறு வயது வரை தமிழ் நாட்டிலுள்ள சிவத்தலங்களுக்கெல்லாம் சென்று இசைத்தமிழ்ப் பாடல்கள் இயற்றிப் பதினாறும் ஆண்டில் மறைந்த இந்த ஞான சம்பந்தர் நிகழ்த்திய அற்புதங்கள் கொஞ்சமல்ல. தமிழ்நாட்டிலே அப்போது கவ்விப் பிடித்திருந்த சமண மதத்தின் செல்வாக்கைத் தகர்த்தெறிந்த பெருமையும் இந்த இளம் சிங்கத்துக்குக் கிடைத்தது. அப்பரும் சுந்தரரும் இந்த ஞானக் குழந்தைக்குக் காட்டிய மரியாதை சொல்லுந்தரமல்ல. எத்தனையோ ஆண்டுகள் மூத்தவரான அப்பர் சுவாமிகள் இந்தக் குழந்தையைக் காண

எங்கிருந்தோ தேடி வந்தார். தில்லையிலிருந்து திருவாரூர் நோக்கிச் சென்ற சுந்தரமூர்த்தி நாயனார் சீர்காழிக்கு வந்ததும், சம்பந்தர் பிறந்த புண்ணிய பூமியில் தமது கால் படுதலாகாது என்ற மரியாதையுடன் நகரின் புறத்தே நின்று வணங்கிவிட்டுச் செல்கிறார். அத்தகைய பெரும்புகழைக் கொண்டவர் ஞான சம்பந்தர்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள பல கோயில்களில் ஒரு சில தருமபுர ஆதீனத்தின் மேற்பார்வையிலும் ஆட்சியிலுமிருக்கின்றன. இவற்றிற்கு ஏராளமான சொத்து வசதியுமுண்டு. சீர்காழிச் சட்டைநாதர் தேவஸ்தானமும் அப்படியான ஒன்று. தருமபுர ஆதீனத்துக்குள்ள கோயில்களெல்லாம் நிர்வாகத் திறமைக்குப் பேர் போனவை. கோயில் வீதியிலோ பிராகாரங்களிலோ மண்டபங்களிலோ ஒரு தூசி துரும்பைப் பார்க்க முடியாது. வெகு சுத்தமாயிருக்கும். பூசைக் கிரமங்கள் மிக ஒழுங்காக நடைபெறும். இதை அவர்கள் பரிபாலனத்திலுள்ள எல்லாக் கோயில்களிலும் பார்க்கலாம்.

சீர்காழி கோயில் மற்றைய கோயில்களைப் போலல்லாது சிறிது வேறுபட்டது. மூலஸ்தானத்து மூலவர் லிங்க வடிவான பிரம்மபுரீஸ்வரர். கர்ப்பகிருகத்தின் விமானம் இரண்டு கட்டுக்களைக் கொண்டது. இரண்டாவது கட்டை 'மலை' என்று சொல்வார்கள். இங்கு பிரதிட்டை செய்யப்பட்டிருப்பவர் தோணியப்பர். உலகமெல்லாம் ஒரு காலத்தில் பெருவெள்ளத்தில் மாள, நோவா என்பவனது தோணி மாத்திரம் மிதந்த கதை விவிலிய நூலில் கூறப்பட்டிருக்கிறது. அதுபோல் நம்முடைய ஐதிகத்திலும், சகல லோகங்களும் அழிந்துபோகும் பிரளய காலம் ஒன்றுண்டு. அப்போது உலகம் முழுவதும் ஒரே வெள்ளப் பெருக்கில் அழிந்து போக இறைவன் ஒருவனே ருத்ர மூர்த்தியாக நின்று சுடுகாட்டில் நர்த்தனம் புரிவான்.

பெருங்கடல் மூடிப் பிரளயங்கொண்டு பிரமனும் போய்
இருங்கடல் மூடி இறக்கும் இறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபரமுங் கொண்டு கங்காளராய்
வருங்கடல் மீளாநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே

பிரமனும் விஷ்ணுவும் இறந்து போவார்கள். படைத்தலும் காத்தலும் உலகத்தில் அற்றுப்போக, ருத்ர மூர்த்தியே மீண்டும் உலகம் தோன்றுதல் வேண்டி நின்று சிருஷ்டி நடனம் புரிவான். அப்படிப்பட்ட பிரளய வெள்ளத்திலே நோவாவின் கலம்போல இந்த சீர்காழி என்ற தலம் தோணியாக மிதந்ததென்று சொல்வர். அதனாலேயே தோணிபுரம் என்ற பெயர் பெற்றது.

திருநாவுக்கரசு நாயனார் ஒரு தேவாரத்தில் ''அலையும் பெரு வெள்ளத் தன்று மிதந்ததித் தோணிபுரம்'' என்று பாடிவைத் திருக்கிறார்.

தோணியப்பர் சந்நிதிக்கு மேலே இருப்பவர் சட்டைநாதர். மாவலியைத் தமது காலால் ஊன்றிச் செருக்கடக்கிய மகாவிஷ்ணு வுக்கு அகங்காரம் ஏற்பட்டதாம். உடனே சிவன் பைரவ வேடம் பூண்டு விஷ்ணுவை அடக்கி அவர் தோலை உரித்துச் சட்டையாகப் போர்த்திக்கொண்டார் என்று ஒரு புராணக் கதையுண்டு. இதனால் அவர் சட்டைநாதர் என்ற பெயரில் சீர்காழிக் கோயில் மலைமீது ஒரு பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறார். வெள்ளிக்கிழமை நடு இரவில் இந்தச் சட்டைநாதருக்குப் பூசை நடைபெறும். புனுகு சாத்துவார்கள். இவரைத் தரிசிக்கப் பெண்கள் பொழுது சாய்ந்தபின் போகலாகாதென்று சொல்வார்கள்.

சித்திரை மாதத்தில் நடக்கும் உற்சவத்தில் ஞானப்பால் உற்சவம் விசேஷமாயிருக்கும். ஞானசம்பந்தருக்கு அன்று விசேஷ அபிஷேகம். திருக்குளத்தின் பக்கத்தில் ஒரு வேலவு கட்டப் பெற்றிருக்கிறது. அந்த இடத்தில் காலையிலே சம்பந்தர் திருவுரு வைக் கொண்டுவந்து நிறுத்தி உமாமகேசுவரரையும் அம்பாளை யும் எழுந்தருளச் செய்து, தங்கக்குடத்திலே பாலைக் கொண்டு வந்து, ஞானப்பால் ஊட்டுவதாகப் பாவனை செய்து, பொற்கிண் ணத்தில் எடுத்துப் புகட்டுவார்கள். உடனே அம்மனைத் திருப்பி உள்ளே கொண்டுவந்து விட்டு, ரிஷப வாகனத்தில் சுவாமியும் அம்மனும் வந்து ஞானசம்பந்தருக்குக் காட்சி கொடுப்பதாகக் காண்பிப்பார்கள். அச்சமயத்தில் ஓதுவாருக்குப் பரிவட்டம் கட்டி, ''தோடுடைய செவியன்'' என்ற திருப்பதிகம் பாடி, வீதி வலம் வந்து, வாகனத்திலிருந்து இறக்கி விக்கிரகங்களை மலைக்குக் கொண்டு போவார்கள். ஞானசம்பந்தரின் இந்த நிகழ்ச்சி, அதாவது ஞானப்பால் உண்ட நிகழ்ச்சி, புராணக்கதை என்னும் சம்பந்தரின் தேவாரத்திலேயே ஒரு சான்றிருப்பதாகத் தெரிகிறது.

போதையார் பொற்கிண்ணத் தடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத் தான் எனை ஆண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையார் அவளொடும் பெருந்தகை யிருந்ததே

சீர்காழி ஒரு கோயில் நகரம் என்பதைத்தவிர வேறு முக்கியத்துவம் எதுவும் பெறவில்லை. அங்கிருந்து பக்கத்திலுள்ள திருக்கோலக்கா என்ற தலத்தைத் தரிசித்தோம். ஞானசம்பந்தர் உமாதேவியின் வரப்பிரசாதம் பெற்று இன்னிசைப் பாடல்

பாடத் தொடங்கியதும், தம் தந்தையின் தோள்மீது அமர்ந்து வந்து இங்குதான் முதன் முதல் கைகொட்டித் தாளத்துடன் பாடினர் என்று சொல்லப்படுகிறது. சீர்காழிக்கு அரை மைல் மேற்கிலுள்ளது திருக்கோலக்கா. இங்குள்ள சுவாமியின் பெயர் திருத்தாளமுடையார். அம்பாள் பெயர் ஓசை கொடுத்த நாயகி. ஞானசம்பந்தருடைய தேவாரப் பதிகங்கள் யாவும் சந்தப் பாடல்கள். அதனால் அவர் கையிலே தாளம் போட்டுப் பாடுவார். இங்கே கோலக்காவில் வந்து, ''மடையில் வாளை பாய'' என்ற தக்கராகப் பாசுரத்தைக் கைகொட்டிப் பாடியதைக் கண்ட இறைவன், இந்தப் பிஞ்சுக்கை தாங்கமாட்டாதென்று பஞ்சாட் சரம் பதித்த பொற்தாளம் கொடுத்துதவினர். அம்பாள் உடனே அந்தத் தாளத்துக்கு ஓசை கொடுத்தார். அதனாலேயே இங்குள்ள சுவாமிக்கும் அம்மனுக்கும் திருத்தாளமுடையார், ஓசைகொடுத்த நாயகி என்ற பெயர்கள் ஏற்பட்டன.

சம்பந்தருக்கு சுமார் நூறு ஆண்டுகள் பின் வந்த சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்கு இந்தப் பொற்றாளம் கோலக்காவில் கொடுத்த செய்தி தெரிந்திருக்கிறது. அவர் இந்த மார்க்கமாக வந்தபோது, திருக்கோலக்கா இறைவனைக் கண்டு தரிசித்து, ''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தனுக்கு உலகவர் முன் தாளம் ஈந்து அவன் பாடலுக்கிரங்கும் தன்மை யாளன்'' என்று தெளிவாகப் பாடி வைத்தார். சீர்காழியில் திருமுலைப்பால் உற்சவத்தன்று ஞானசம்பந்தரை திருக்கோலக்கா வுக்கு எழுந்தருளச்செய்து தாளம் வாங்கிச்செல்வதாக உற்சவம் நடந்து வருகிறது.

ஞானசம்பந்தர் காலத்தில் சீர்காழியில் வசித்த மற்றொரு நாயனார் கணநாதநாயனாரைப் பற்றியும் சேக்கிழார் ஒரு வரலாறு தருகிறார். தோணியப்பருக்குத் தினந்தோறும் திருப்பணி செய்து வந்த கணநாதர் ஞானசம்பந்தரையே குருவாகக்கொண்டு பூசை செய்துவந்தவர். இவர் சைவசமயப் பிரச்சாரகராயிருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. சம்பந்தரின் தேவாரப் பதிகங்களை எழுதுவதிலும், அவற்றை மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுப்ப திலும், சரியை மார்க்கத்தில் நந்தவனம் வைத்தல், மாலை தொடுத்தல் முதலிய கைங்கரியங்களை மற்றவர்களுக்குப் பழக்கு வதிலும் கணநாதர் ஈடுபட்டிருந்தார். இந்த வகையில் தொண்டு செய்து இறைவனடி சேர்ந்த காரணத்தால், கணநாதரும் ஒரு நாயனார் பதவியைப் பெற்றார்.

சம்பந்தர் வாழ்க்கையைப் படிக்குங்கால் மற்றைய நாயன்மார் களைக்காட்டிலும் இவர் ஒருவரே சமண எதிர்ப்பில் ஈடுபட்டுச்

சோழநாட்டிலும் பாண்டி நாட்டிலும் தொண்டை நாட்டிலும் அவர்கள் மதத்தின் குறைபாடுகளை எடுத்துச் சொல்லி, அவர்களைப் போல் அற்புதங்கள் நிகழ்த்திக்காட்டி, மக்களை முன்போல் சைவத்துக்குத் திருப்பியவர் என்ற உண்மையைப் பார்க்கலாம். ஆகையால், இவருடன் கூட, இவருக்குக் கருவியாகப் பல போதகர்கள் சென்றிருக்க வேண்டும். அவர்களை சம்பந்த சரணுலயர் என்று சொல்வார்கள். அவர்களில் மூத்தவர்தான் கணநாதநாயனர் என்று நாம் கொள்ளலாம்.

திருக்கோலக்காவி லிருந்து திரும்பிய சம்பந்தர் சீர்காழிக்கு வந்ததும் அவரது இசைப் பெருமை பல இடங்களுக்கும் பரவியது. திருவதிகையிலிருந்து தில்லைக்கு வந்த நாவுக்கரசருக்கும் எட்டியது. தொண்டை நாட்டில் எருக்கத்தம்புலியூரைச் சொந்தமாகக் கொண்ட யாழ் மன்னன் திருநீலகண்ட யாழ்ப்பாணர் காதிலும் எட்டியது. பக்கத்திலுள்ள நனிபள்ளி கிராமத்தின் மக்களுக்கும் எட்டியது. இந்தக் கிராமம் சம்பந்தரின் தாயார் பகவதியார் ஊர். ஆகையால் தாயாரின் உறவினரும் மற்றவர்களும் சீர்காழிக்கு வந்து தமது கிராமத்தையும் புனிதப்படுத்த வேண்டு மென்று சம்பந்தரை வேண்டிக்கொண்டனர். அப்படியே ஞானசம்பந்தரும் வழக்கம்போல் தமது தந்தையார் தோளில் ஏறிக்கொண்டு நனிபள்ளிக்குப் போய்த் தரிசனம் கொடுத்துத் திரும்பினர்.

சீர்காழியிலிருந்து நாங்கள் உடனே இந்த நனிபள்ளிக்குப் போகவில்லை. பின்னல் சாய்க்காடு, பல்லவனீச்சரம் போகும் போது நனிபள்ளியைத் தரிசித்தோம். அந்தக் கதை அப்புறம். இங்கே சீர்காழிக்கு வந்த மற்றும் இரு நாயன்மார்களையும் பார்த்து விட்டுச் செல்வோம்.

சீர்காழியிலே பிறந்த பச்சிளங்கன்று ஒன்று இசைத்துறையில் மேதையாகிச் செந்தமிழ்ப் பண்களை வாரியிறைத்துக் கொண் டிருந்ததை மற்றைய ஊர்களில் வசித்த சில இசைக்கலைஞர்கள் கேள்விப்பட்டனர். பழந்தமிழ் இசையாகிய பண் முறையில் பாடல் இயற்றும் கலைஞர்கள் அருகிய காலத்தில் ஞானசம்பந் தரின் தேவாரப் பதிகங்கள் ஒரு புதுமையைத் தந்தன. சம்பந் தருக்குப் பல ஆண்டுகள் மூத்தவராகிய திருநாவுக்கரசர் பாடிய நூற்றிருபத்தாறு பதிகங்களில் ஐந்தே ஐந்து இடங்களில் மாத்திரம் காந்தாரம், குறிஞ்சி, சீகாமரம், பழந்தக்கராகம், இந்தளம் ஆகிய பண்களை உபயோகித்திருக்கிறார். மற்றும் அவர் பாடிய பதிகங்கள் யாவும் விருத்தம், நேரிசை, குறுந்தொகை, தாண்டகம் என்ற பாவினங்களாகவே இருந்தன. ஞானசம்பந்தர்

பதிகங்களில் அவர் மொத்தம் இருபத்திரண்டு பண்களை உபயோகித்திருக்கிறார். இவற்றுள் சில பண்கள் அபூர்வமான அமைப்புக் கொண்டவை. யாழ்மூரி என்பது அவரே இட்டுக் கட்டிக்கொண்ட பண். இவற்றைத் தவிர, சக்கரமாற்று, கோமூத்திரி, எழுகூற்றிருக்கை, மொழிமாற்று முதலிய பல வகை யாப்பமைதிகளையும் ஞானசம்பந்தர் தமது தேவாரப் பதிகங்களில் உபயோகித்திருக்கிறார். ஆகையால், இவரது இசைப்புலமை தமிழ்நாடெங்கும் ஒரு பெரிய புரட்சியை ஏற்படுத்திவிட்டதில் வியப்பில்லை.

எருக்கத்தம்புலியூரில் பிறந்து, தமது குலத்தொழிலுக்குரிய யாழ் வாசித்துப் பிழைத்துவந்த பாணர் ஒருவர், மதுரைச் சொக்கநாதர் சந்நிதியில் ஒரு நாள் யாழ் வாசித்தபின் அந்தத் தெய்வத்தின் அருள் கிடைத்தது. அன்றிலிருந்து திருநீலகண்ட யாழ்ப்பாணர் தமது யாழ் வாசிப்பை இறைவனுக்கே அர்ப்பணம் செய்து வந்தார். அவர் மனைவி மதங்கசூளாமணி அந்த யாழுக்குப் பொருந்தப் பாட வல்லவர். இருவரும் பல தலங்களைத் தரிசித்து வரும் நாளில், ஞானசம்பந்தருடைய அபூர்வ இசை ஞானத்தைக் கேள்வியுற்று சீர்காழிக்கு வந்தார்கள். ஏற்கெனவே பாணருடைய கீர்த்தியைப் பற்றி ஞானசம்பந்தரும் கேள்விப்பட் டிருந்தாராகையால் அவரை எதிர்கொள்ள, பாணர் உடனே சம்பந்தரின் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து நின்றார். பின்னர் இருவரும் சுவாமி தரிசனம் செய்து முடித்ததும், வழக்கம்போல மதங்கசூளாமணியார் பாட, பாணர் யாழ் வாசிக்கக்கேட்டு ஞானசம்பந்தர் பாணரின் வாசிப்பை மெச்சினார். உடனே பாணர், ''சுவாமி! தங்கள் இசைப்பாட்டுக்கு அடியேன் யாழ் வாசிக்கும் பணியை வேண்டுகிறேன்'' என்று இறைஞ்சி நின்றார். ஞானசம்பந்தரும் அந்த வேண்டுகோளுக்கிணங்கி, அப்படியே ஆகட்டும் என்று அங்கீகாரம் கொடுத்தார். அன்றிலிருந்து அவர்கள் சென்றவிடமெல்லாம் சம்பந்தர் பாடல்களுக்கு யாழ்ப்பாணரே யாழ்வாசிக்கும் வழக்கமாகிவிட்டது.

திருஞானசம்பந்தர் சில நாட்கள் பல தலங்களையும் தரிசித்து விட்டுச் சீர்காழிக்குத் திரும்பியதும் ஒரு நாள் திருநாவுக்கரசு நாயனார் அங்கு வந்தார். உடல் முழுவதும் திருநீற்றுப் பொலிவும், மேலே ஒரு கந்தைத் துண்டும், கையில் உழவாரமும், கண்ணீர் மழையும், நடுங்கும் உடம்புமாக வரும் வாக்கின் மன்னரைக் ''கவுணியக் கன்று'' ஓடிச்சென்று வணங்கி, ''அப்பரே!'' என்றார். நாவுக்கரசரும் உடனே எதிர் வணங்கி, ''அடியேன்!'' என்றார். அன்றிலிருந்து ஆரம்பித்த நட்பு வெகு நாள் நீடித்தது. நாவுக்கரசருக்கும் அப்பர் என்ற திருநாமம் நிலைத்துவிட்டது.

ஞானசம்பந்தர் ஏற்றி வைத்த இசைவிளக்கு அணையாத் தீபமாகச் சீர்காழியில் நிலைபெற்றது போலும். தில்லையம்பலத் தாடனைப் பாடிய இசைப் புலவர் முத்துத்தாண்டவர் சீர்காழியிலே வாழ்ந்தார். இராமநாடகம் தந்த அருணாசலக்கவிராயரும் சீர்காழியில்தான் வாழ்ந்தார். இவரைத் தில்லையாடி அருணாசலக் கவிராயர் என்பர். தில்லையாடியில் பிறந்து கவி பாடுவதில் நிகரற்றவராயிருந்த இவர் சீர்காழியில் குடியேறியது ஒரு விசித்திரமான கதை. சீர்காழியில் தருமபுர ஆதீன நிர்வாகியா யிருந்த சிதம்பரநாத முனிவர் பூர்வாசிரமத்தில் அருணாசலக் கவிராயருடன் கல்வி கற்றவர். கவிராயர் ஒரு நாள் வியாபார நிமித்தமாகத் தில்லையாடியிலிருந்து வரும் வழியில், சீர்காழியில் சிதம்பரநாத முனிவர் கட்டளை சுவாமியாக இருப்பதை அறிந்து போய்ப் பார்த்து மகிழ்ந்தார். சிதம்பரநாத முனிவர் தாம் சீர்காழிமேல் ஒரு பள்ளுப் பிரபந்தம் பாடத் தொடங்கியிருப்ப தாகவும், அதைத் தொடர்ந்து பாடி முடிக்கச் சமயமில்லை யென்றும், கவிராயர் அங்கே தங்கியிருந்து முடித்துச் செல்ல வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். மறுத்துச்சொல்ல முடியாத கவிராயர், சரி என்று சொல்லி ஒரே மூச்சில் பிரபந்தத்தை எழுதி முடித்தார். மறுநாள் இரவு புறப்பட வேண்டியவர் தாம் எழுதிய பிரபந்த ஏட்டை மடத்துப் பணியாளர் ஒருவர் கையிற் கொடுத்து, முனிவர் கையில் ஒப்படைக்குமாறு சொல்லிவிட்டு, புதுவைக்குப் பிரயாணமாகி விட்டார்.

மறுநாட்காலை சிதம்பரநாத முனிவர் தமது நண்பர் புறப் பட்டுச் சென்றுவிட்டார் என்று அறிந்ததும், அவரை எப்படியா வது சீர்காழிக்கு வரவழைத்துவிட வேண்டுமென்று திட்டம் போட்டார். கவிராயரே அழைப்பதுபோன்று ஒரு கடிதம் எழுதி, தில்லையாடியிலிருந்த கவிராயரின் குடும்பத்தை வரவழைத்து, சீர்காழியில் வீடொன்று வாங்கி அதில் அவர்களை இருக்கச் செய்தார். புதுவை சென்ற கவிராயர் திரும்பிச் சீர்காழி மார்க்க மாக வரும்போது முனிவரைச் சந்தித்தார். இருவரும் பேசிக் கொண்டே வீதியில் நடந்து வரும்போது, வடக்கு வீதியில் ஒரு வீட்டில் கவிராயர் தமது குடும்பம் இருப்பதைக்கண்டு அதிசயித்தார்! ''உம்மை எப்படியாவது இங்கே என் பக்கத்தில் வைத்திருக்க வேண்டியே உமது குடும்பத்தை இங்கே வரவழைத்து விட்டேன்'' என்றார் சிதம்பரநாத முனிவர். அருணாசலக் கவிராயர் மிக மகிழ்ந்து அன்று முதல் சீர்காழியில் தமது குடும்பத்தோடு வசித்துவந்தார். சீர்காழி வாசிகள் அவரைத் தில்லையாடி அருணாசலக் கவிராயர் என்றே அழைத்து வந்தனர்.

12. ஆதனூர் கண்டது

சிதம்பரத்திலே நந்தனார் தீப்பாய்ந்த ஓமகுளத்தைப் பார்த்த போதே அவர் பிறந்த ஆதனூரையும், திருப்பணி செய்த திருப்புன்கூரையும் பார்த்துவிடவேண்டுமென்று தீர்மானித்தோம். ஆதனூரைப்பற்றிப் பலருக்குத் தெரியாது. கொள்ளிடத்துக்கு வடக்கே காட்டுமன்னார் கோயில் பக்கமாயுள்ள ஆதமங்கலம்தான் ஆதனூர் என்று சிலர் எங்களுக்கு வழிகாட்டினார்கள். கொள்ளிடம் தாண்டாமல் திருப்புன்கூருக்கு மேற்கிலுள்ளது இந்தக் கிராமம் என்று வேறு சிலர் சொன்னார்கள். எப்படியாயிருந்தாலும் முதலில் திருப்புன்கூருக்குப் போனால் ஆதனூரையும் கண்டு பிடித்துவிடலாம் என்ற நம்பிக்கையோடு புறப்பட்டோம்.

மணி பன்னிரண்டிருக்கும் நாங்கள் சீர்காழியிலிருந்து நான்கு மைல் தூரத்திலிருக்கும் வைத்தீஸ்வரன் கோயிலைப் போய்ச் சேர்ந்தபோது. இந்தத் தலத்தில் நிர்வாகஸ்தராயிருந்தவர் எனது நெருங்கிய நண்பர் ஒருவரின் சொந்தக்காரர். முன்பே எனக்கு அறிமுகமான தம்பு என்று அழைக்கப்படும் சீனிவாச ஐயங்கார். வைஷ்ணவராயிருந்தபோதிலும் தருமபுர ஆதீனத்திலே மிகுந்த செல்வாக்குள்ள, திறமைசாலியான உத்தியோகத்தர். எங்களைக் கண்டவுடன் இனித்த முகத்துடன் வரவேற்று, ''மணி பன்னிரண்டாகப் போகிறது, முதலில் தரிசனம் பண்ணிவிட்டு வாருங்கள்'' என்று சொன்னவர் பக்கத்தில் நின்ற ஒரு பணியாளனுக்குத் தலையசைத்து மாத்திரம் ஏதோ உத்தரவு கொடுத்தார். அவ்வளவுதான். அந்தப் பணியாளன் எங்களுக்கு வழி காட்டினார். ஒவ்வொரு சந்நிதியாகத் தரிசனம், அர்ச்சனை, தீபாராதனை எல்லாம் நடந்தது. அங்கங்கு நாங்கள் மடியிலே கை வைக்கும் போதெல்லாம், ''வேண்டாம். அதெல்லாம் மேலிடத்து உத்தரவு'' என்று பதில் சொல்லிவிட்டார் பணியாளன்! கடைசியாக தேவஸ்தானக் காரியாலயத்துக்கு வந்தபோது தம்பு விசாரித்தார். ''தரிசனம் முடித்துக் கொண்டீர்களா? சரி, கெஸ்ட் ஹவுஸுக்குப் போங்கள், சாப்பாடு அங்கே வந்து சேரும். சாப்பிட்ட பின் சிறிது நேரம் இளைப்பாறிவிட்டு, திருப்புன்கூரையும் ஆதனூரையும்

போய்ப் பார்த்து வரலாம். ஆதனூர் என்ற பெயர் இப்போதில்லை. அதற்கு மேலாநல்லூர் என்று சொல்வார்கள். திருப்புன்கூருக்குப் பக்கத்திலேதானிருக்கிறது அந்தக் கிராமம்'' என்று சொன்னவர் பக்கத்திலே நின்ற பணியாளனைப் பார்த்தார். எல்லாம் புரிந்து கொண்டவரைப் போல் அந்தப் பணியாளன் எங்களை யழைத்துக்கொண்டு சென்றார்.

திறமை என்றால் இப்படியல்லவோ இருக்கவேண்டும்! திடீரென வந்த எங்களைச் சாப்பிட்டீர்களா என்று ஒரு வார்த்தை கேட்காமல், மானசீகமாக நிலைமையை மதிப்பிட்டு, சுவாமி தரிசனம் செய்வித்து, அந்த இடை நேரத்திலேயே தங்குவதற்கு இடவசதியும் பகல் உணவும் ஏற்பாடு செய்து எங்களுக்கு அன்புக் கட்டளை பிறப்பித்த அந்த நண்பரை மறக்க முடியுமா?

பகல் உணவருந்திச் சிறிது நேரம் அங்கேயே இளைப்பாறி விட்டுத் திருப்புன்கூருக்குப் போய்ச் சேர்ந்தோம். வைத்தீஸ்வரன் கோயிலிலிருந்து தென்மேற்கே இரண்டு மைல் தூரம்தான். கோயில் திறந்திருந்தது. முதல் மண்டபத்துப் படிக்கட்டில் ஓதுவார் ஒருவர் உட்கார்ந்து அபிராமி அந்தாதி பாடிக்கொண் டிருந்தார். திருநாளைப்போவார் என்ற நந்தனார் வரலாறு சம்பந்தமாகச் சில தகவல் சேகரிக்க வந்தோம் என்றவுடன் ஓதுவாரே முன்வந்து நந்தன் சரித்திரத்தைக் கதை கதையாகச் சொல்ல ஆரம்பித்தார்.

நந்தனார் சரித்திரத்தைத் தெரியாத தமிழர்களில்லை. ஆனந்த தாண்டவபுரம் கோபாலகிருஷ்ண பாரதியார், சென்ற நூற்றாண் டில் பாடி வைத்த நந்தனார் சரித்திரக் கீர்த்தனை, இசைக் கச்சேரி களிலும், நாடக மேடைகளிலும், திரைப்படங்களிலும் பிராபல்ய மாகிவிட்டதல்லவா? இருந்தாலும் ஓதுவார் நமக்குக் கதை சொன்னார். கேட்டோம். பெரும்பாலும் சேக்கிழார் சொன்ன பெரியபுராணத்தையொட்டியே சொன்னார். சிறிது கோபால கிஷ்ணபாரதியாரையும் சேர்த்துக்கொண்டார். அவருடைய உதவியைக்கொண்டு திருப்புன்கூர் கோயிலைச் சுற்றிப்பார்த்தோம். பழமையான கோயில். சோழர்கள் திருப்பணியுடன் பிற்காலத் திருத்தங்களும் சேர்ந்துள்ளன.

ஆதனூர் என்ற கிராமத்தில் பிறந்து, அங்கே பயிர்த்தொழில் செய்துகொண்டு, தமது குலத்தொழிலாகிய தோற்கருவிகள் செய்துகொடுத்து வந்த நந்தன் என்ற ஹரிஜனப் பெரியார் எந்நேரமும் சிவபெருமானையே நினைந்து இறையருள் பெற்று வாழ்ந்தார். ஆதனூருக்குச் சமீபத்திலுள்ளது திருப்புன்கூர்

சிவஸ்தலம். நந்தன் அடிக்கடி அங்கு சென்று கோயிலின் வெளிப்புறத்திலேயே நின்றபடி, உள்ளே எழுந்தருளியிருக்கும் சிவலோகநாதனை மனக்கண்ணால் கண்டு தரிசித்து மகிழ்வார். கோபுர வாயிலில் நின்று பிரார்த்திக்கும் நந்தனுக்கு மூலவர் தரிசனம் கிடைக்கவேண்டுமென்று ஆசை. ஆனால் எதிரேயிருந்த பெரிய நந்தி விக்கிரகம் அதற்குத் தடையாயிருந்தது. ஒரு நாள் நந்தன் மனமுருகி வேண்டிக்கொண்டபோது நந்தி விலகி வழி விட்டுக் கொடுக்கும்படி இறைவன் அருள் செய்ய, நந்தன் உளமகிழ்ந்து சிவலோகநாதனைத் தம் கண்களால் ஆசை தீரக் கண்டு வணங்கினார். இந்த அற்புதத்தை ஞாபகமூட்ட, திருப்புன்கூர் சிவலோகநாதன் கோயில் நந்தி மூலஸ்தானத்துக்கு நேர் எதிரில் இல்லாமல், ஒரு பக்கமாய்த் தள்ளி இருப்பதைப் பார்க்கலாம். மிகப்பெரிய நந்தி.

திருப்புன்கூர் சிவலோகநாதனுக்குப் பணி செய்த நந்தனார் அந்தக் கோயிலின் மேற் புறத்திலே ஒரு திருக்குளம் வெட்டி வைத்தார். அது இப்போது நந்தன் குளம் என்று வழங்கப்படுகிறது. இதைப்பற்றிய ஒரு கர்ணபரம்பரைக் கதை என்னவென்றால், நந்தனார் தன்னந்தனியே இந்தக் குளத்தை வெட்டி வரும்போது ஆண்டவன் மனமிரங்கி, ஒரு நாள் இரவில் விநாயகரை அழைத்து, பூத கணங்களையும் ஏவி விட்டு, அந்தக் குளத்தை வெட்டிக் கொடுக்குமாறு பணித்தார். மறுநாட் காலை நந்தனார் விழித்துப் பார்க்கும்போது திருக்குளம் பூர்த்தியானது கண்டு வியந்து பகவானைத் தோத்திரம் செய்தார். இந்தக் குளத்தின் பக்கத்திலே, கோயில் மதிலின் மேற்புறத்தில் குளம் வெட்டிய விநாயகர் என்ற பெயருடன் பிள்ளையார் உட்கார்ந்திருக்கிறார். திருப்புன்கூர் கோயிலின் சந்நிதியில் கோபுர வாயிலையடுத்து ஒரு சிறு கட்டடத்தில் நந்தனார் சிலையிருக்கிறது. உட்கார்ந்திருக்கும் நிலை. சந்நிதிக்கு எதிரே வெளிப்பிராகாரத்தில் தேர் நிலைக்குப் பக்கத்தில் இப்பொழுது ஒரு சிறு கோயில் கட்டி அதில் ஒரு நந்தனார்சிலை வைத்திருக்கிறார்கள். தலைமேல் அஞ்சலிக் கையினராக இந்தச் சிலை அமைந்திருக்கிறது. நந்தி விலகி மூலவர் தரிசனம் கிடைத்த சம்பவத்தை நினைவூட்டும் பாவனையாக இந்தச் சிலையை நிறுத்தியிருக்கிறார்கள். இங்கிருந்து சந்நிதியைப் பார்த்தால் நேரே மூலவர் சிவலோகநாதன் தரிசனம் கிடைக்கிறது.

இந்தக் கோயிலிலுள்ள நடராஜ விக்கிரகம் மற்றெங்கும் நாம் காணமுடியாத பெரிய அளவிலுள்ளது. அத்துடன் சிறந்த எழிலோடு கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. பழமையான பத்துப் பதினேராமாண்டுச் சோழ விக்கிரகம் என்று சொல்லலாம்.

ஓதுவாரோடு பேசிக்கொண்டிருந்த போது ஆதனூரைப் பற்றிக் கேட்டோம். ''இங்கே பக்கத்தில் மேற்கே இரண்டு மைல் தூரத்திலேதானிருக்கிறது. மேலாநல்லூர் என்று இப்போது வழங்குகிறது'' என்றார் அவர். நாங்கள் கேட்டுக்கொண்டபடி ஆதனூரைப் போய்ப் பார்க்கவும் வழிகாட்டவும் இணங்கி ஓதுவாரும் எங்களுடன் காரில் ஏறிக்கொண்டார். எங்கள் பிரயாணத்தில் கலந்துகொண்ட நண்பர் சிட்டியைப்பற்றியும், கார் சாரதி ராதாகிருஷ்ணனைப் பற்றியும் முன்பே குறிப்பிட்டிருந்தேன். மூன்றுமவர் ஒருவரைப் பற்றியும் இந்தச் சமயத்தில் அறிமுகப்படுத்த வேண்டியிருக்கிறது; அவர்தான் எங்கள் கணக்கப் பிள்ளை, காரியதரிசி, குறிப்புகள் எடுக்கும் எழுத்தாளர் என்ற பல வித பணிகள் புரிந்து வந்த வேணு என்று செல்லமாயழைக்கப்படும் வேணுகோபாலன். அங்கங்கே முக்கியமான செய்திகளை ஞாபகப் படுத்தி எனது கவனத்தை ஈர்ப்பதும் அவர் கைங்கரியம். இந்த வேணுவுக்குத் திருப்புன்கூர் ஓதுவார்மீது ஏதோ ஒரு பற்றுதல் ஏற்பட்டுவிட்டது! ஆரம்பத்தில் ஓதுவார் வாயில் அபிராமி அந்தாதிப் பாடல்கள் தோன்றிய நேரத்திலிருந்து வேணுவுக்கு ஓர் ஆசை, ஓதுவாரின் கச்சேரி கேட்கவேண்டுமென்று. இப்போது திருப்புன்கூரிலிருந்து ஆதனூர் என்ற மேலாநல்லூர் போகும் வழியில் ஓதுவாரைத் தூண்டிவிட்டார் வேணு. ஓதுவார் வாயிலிருந்து அற்புதமான தேவாரப் பாடல்களும் திருவாசகமும் கந்தரலங்காரமும் மடைதிறந்து பொழிய ஆரம்பித்தன. காரின் பின் ஆசனத்திலிருந்த வேணு, எவருக்கும் தெரியாமல் காசெட் டேப் ரிகார்டரைத் தூண்டி வைத்திருந்தார். ஆதனூர் போய்த் திரும்பும் வழியிலே ரிகார்ட் செய்த பாடல்களை ஓதுவாரே கேட்டு ஆச்சரியப்பட வைத்துவிட்டார்! அதன் பலன், தாமும் ரேடியோவில் பாடவேண்டுமென்ற ஆசை பிறந்தது ஓதுவாருக்கு!

மேலாநல்லூர் கிராமத்தின் மத்தியில் ஒரு பழைய சிறிய சிவன் கோயில். கிராமத்தில் நுழைந்த எங்களை முதலில் வரவேற்றது கோயில் வெளிப்புறச் சுவரில் தீட்டப்பட்டிருந்த இன்றைய நவநாகரிகக் குடும்பக்கட்டுப்பாட்டு முக்கோணச் சின்னம். எதை எந்த இடத்தில் செய்யலாகாதென்ற நுண்ணறிவை ஆர்வமிகுதியுள்ள சில அதிகாரிகள் பெற்றிருக்கவில்லை. திருவாவடுதுறை மடத்துச் சுவரிலேயே இந்த முக்கோணச் சின்னத்தைச் சில அறிவாளிகள் தீட்டியிருக்கிறார்களென்றால் செ ல் ல வு ம் வேண்டுமா? எங்கள் திருத்தல யாத்திரையில்தான் இதையுங் கண்டோம்.

ஆதனூரைப் பற்றிச் சேக்கிழார் வருணிக்கும்போது மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் நிறைந்த இடமென்றுதான்

வருணிக்கிறார். அதாவது செல்வம் செழித்த வேதியர்கள் உறையும் இடம் என்றும், அதனையடுத்தே பயிர்த்தொழிலில் ஈடுபட்ட ஹரிஜனங்கள் வாழ்ந்த புலைப்பாடி இருந்ததென்றும் சொல்கிறார். ஆதனூர் நகரத்தை வருணிக்கும் கற்பனையைக் காட்டிலும் சேக்கிழாரின் புலைப்பாடி தத்ரூபமாயிருக்கிறது.

''அந்த ஊர் வெளிப்புறத்திலே மருதநிலத்தினைச் சார்ந்த வயல்களின் பக்கத்திலுள்ள வரப்புக்களின் ஓரத்திலே, உழவர்களின் சுற்றத்தவர்கள் நெருக்கமாக வசிக்கிறார்கள். புல்லால் வேயப்பட்ட குடிசைகளின் கூரையில் சுரைக்கொடி படர்ந்திருக்கிறது. முற்றத்திலே கோழிக்குஞ்சுகள் நடமாடும். அங்கே துள்ளித் திரியும் நாய்க்குட்டிகளைப் புலைச் சிறுவர்கள் துரக்கிக்கொண்டு ஓடும்போது குட்டிகள் குரைக்கும். சிறுவர்களின் இடையிற் கட்டிய மணிகள் அந்த நாய்க்குட்டிகளின் குரைப்பை மறைக்கும்.''

சேக்கிழார் இப்படி பன்னிரண்டாம் நூற்றாண்டிலே தாம் நேரே கண்ட காட்சியை வருணிக்கிறார். சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டு கோபால கிருஷ்ணபாரதியார் இன்னும் கொஞ்சம் மேலே போகிறார்:

பழன மருங்கணையும்—புலைப்—பாடியது கூரை வீடு தனில்
சுரையோ படர்ந்திருக்கும் —அதைச்—சுற்றிலும் நாய்கள்
குலைத்திருக்கும்
பருந்தோடி வட்டமிடும்—இளம்—பச்சைப் பிசிதமே லிச்சை
கொண்டு
கோழியும் கூவும் கூக்குரலும்—பாழும்—கொல்லை யருகினில்
வெள்ளெலும்பும்
.....
தெருவில் விளையாடிக் கொண்டு—அவர்—தெந்தினம் பாடுவர்
சுந்தரமாய்
இலுப்பை மணி யரையில்—கட்டி—இண்டங் தலைகளில் பூண்டிருக்கும்
சங்கு தோடு காதணியும்—அருங்—தாவடமே யவர் தூ விடமாம்
மணியோ தரித்திருப்பார்—தெரு—வாசற் புறந்தனி லேசிக்கொண்டு
கொண்டாட்ட மாயிருப்பார்.....

இந்தக் காட்சியை இன்று நாங்கள் காணவில்லை. அது ஒரு காலம். இன்று ஆதனூரில் தனியாகப் புலைப்பாடியில்லை. அங்கிருந்த சில குடிகள் வெவ்வேறு ஊர்களுக்கு வேலை தேடிப் போய்விட்டன. இருந்தும், மேலாநல்லூர் வட்டத்தில் ஒரு ஹரிஜனக் குடியேற்றத்தை வைக்க ஹரிஜன முன்னேற்றவாதிகள் தீவிரமாக ஈடுபடுகிறார்கள் என்று ஓதுவார் சொன்னார். அதில்

நந்தனூர் இல்லம், பள்ளிக்கூடம், மாணவர் விடுதி முதலிய அமைப்புக்களுக்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது. கோபால கிருஷ்ணபாரதியார் கர்ணபரம்பரையாக வந்ததைகளை வைத்துக் கொண்டு, நாற்பது வேலி நிலத்தைப் பண்ணையாராகிய வேதியர் வைத்திருந்தார் என்றும், நந்தன் அந்த நிலத்தையுழுது விதை விதைத்து, ஒரே இரவில் நாற்று நடச் செய்தார் என்றும் சொல்கிறார். நாற்பது வேலி என்ற கணக்கு இன்றும் நினைவிலிருப் பதற்கு, மேலாநல்லூர் வட்டத்தின் பரப்பே நாற்பது வேலி அளவாயிருக்கிறது என்று ஓதுவார் எங்களுக்கு விளக்கினார்.

மேலாநல்லூர் என்ற ஆதனூர் சிவன் கோயில் மிகச் சிறியது. இதற்கு வருவாயுமில்லை. கோயிலின் பக்கத்தில் அக்கிரகாரமும் சுருங்கிப்போய்விட்டது. நந்தனார் தொடர்பு காரணமாகச் சில வருடங்களுக்கு முன்புதான் ஒரு சிலாவிக்கிரகம் அமைத்து சந்நிதியில், திருப்புன்கூரில் போல, கோபுர வாயிலின் பக்கத்தில் பிரதிட்டை செய்து வைத்திருக்கிறார்கள். முதலில் இதற்குப் பெரும் எதிர்ப்பு இருந்ததாம். பிராமணர்கள் ஹரிஜன அடியாரை ஏற்றுக்கொள்ளவில்லை. பின்னால் சில அதிகாரிகள் தலையிட்டதன் பேரில் ஒப்புதல் கொடுத்து அந்த இடத்தில் இருக்க இடமளிக்கப் பட்டது. ஆனால், இதற்கான பூசை எதுவும் கிடையாது.

ஆதனூரிலிருந்து திருப்புன்கூருக்குத் திரும்பிவந்தோம். ஓதுவார் தொடர்ந்து இங்கு நடைபெறும் உற்சவத்தைப்பற்றிச் சொன்னார். வைகாசி விசாகத்தில் ஆரம்பிக்கும் பிரம்மோற்சவத் தில் மூன்றும் நாள், நந்தனார் உற்சவம் நடைபெறும். இதிலே தான் நந்தி விலகி சிவலோகநாதன் காட்சி கொடுத்ததாக ஐதிகம். முதலில் சந்நிதிக்கெதிரே சிறிது தூரத்தில் நந்தனார் விக்கிரகத்தை அலங்கரித்து,தாரை தப்பட்டை முதலியவற்றுடன் கொம்பு ஊதி, நந்தனார் புறப்பட்டு வந்து சந்நிதியின் வெளி வாயிலில் நிற்க, உள்ளே கோயிலின் சகல கதவுகளும் மூடப்பட்டுவிடும். இந்தக் கோயிலுக்கு மூன்று பிராகாரங்களிலும் மூன்று கோபுர வாயில்கள். இந்த மூன்று வாயில்களிலும் வரிசையாக ஐந்தடுக்கு விளக்குகள் கொளுத்தி வைத்திருப்பார்கள். மூலஸ்தானத்தில் பூசை முடித்து கற்பூர தீபாராதனை நடைபெறும்போது எல்லாக் கதவுகளையும் ஏக சமயத்தில் திறந்துவிடுவார்கள். நந்தனார் சேவிப்பதாகப் பாவனை. இதற்கு மறுநாள் பஞ்சமர்கள் தனியாகப் பூசை போடுவார்கள்.

திருப்புன்கூரில் சிவலோகநாதனைக் கண்டு சேவித்த நந்தனார் தில்லையில் நடராஜப் பெருமானைச் சேவிக்கவேண்டுமென்று விரும்பினார். ஆனால், தில்லைவாழந்தணர் பாதுகாப்பிலிருக்கும்

நடராஜரைத் தீண்டாச் சாதியிலுள்ள தாம் ஒரு போதும் காண முடியாதே என்று ஏங்கினர். ஆயினும், மானசீகமாக அங்கு போகக்கிடைக்கும் என்ற நம்பிக்கையில், யாராவது கேட்டால் ''நாளைப் போவேன், நாளைப் போவேன்'' என்று சொல்லிக் கொண்டு வந்தார். இதனால் அவருக்கு ''நாளைப் போவார்'' என்ற பட்டப்பெயர் நிலைத்துவிட்டது. வைஷ்ணவ பக்தரான குலசேகராழ்வாரும் ஸ்ரீரங்கநாதரைக் காண ''நாளைப் போவேன்'' என்றுதான் சொல்லிக்கொள்வாராம். வேளை வந்தபோது நந்தனார் தில்லைக்குப் போகத்தான் செய்தார். அங்கு போய் வெளிப்புறத்தில் நின்று கோபுரத்தை மாத்திரம் கண்டு சேவித்தார். நடராஜப் பெருமான் இவர் திறத்தையறிந்து, தில்லைவாழந்தணர்களின் கனவிலே தோன்றி, ''அடியார் ஒருவர் வெளியே காத்து நிற்கிறார். அவர் ஜாதியில் பஞ்சமர், ஆனால் ஒழுக்கத்தில் அந்தணர். இருந்தும், உலகத்துக்கு அவர் பெருமையைக் காண்பிக்க, தீயை வளர்த்து, அதில் அவர் குளித்து எமது சந்நிதானத்தில் வரச்செய்யுங்கள்'' என்று ஆக்ஞாபித்தார். அதேவாறு திருநாளைப் போவாரின் கனவிலும் தோன்றி, ''உம்மை என் அடியானாக ஏற்றுக்கொண்டு விட்டேன். தில்லைவாழந்தணர்கள் வளர்க்கும் தீயில் மூழ்கி உமது பக்திப் பெருமையை உலகிலுள்ளோர் அறியக் காட்டி எம்மிடம் வரக்கடவீர்'' என்று கூறினார். மறுநாள் தில்லைவாழந்தணர்கள் சிதம்பரத்திலே, இப்போது ஓமகுளம் என்று சொல்லப்படும் இடத்தில் தீ மூட்டி, நந்தனாரைச் சகல விதமரியாதைகளுடன் அழைத்துச்சென்று தீயின் பக்கத்தில் நிறுத்தினார்கள். நந்தனார் நடராஜப் பெருமானைத் தியானித்தவாறு தீயை வலம் வந்து அதிலே மூழ்கி வெளிவந்தபோது சடாமுடி முதலிய அணிகலத்துடன், ஒரு முனிவரைப்போல் காட்சியளித்தார். பின் அங்கிருந்து நேரே கனகசபையை நோக்கிச் சென்றவர் திடீரென மறைந்தார். தீண்டத்தகாதவர் என்ற ஒருவர் யாவரும் வணங்கத்தக்க தெய்வமானார்.

திருப்புன்கூரை விட்டுப் பிரியுமுன் இங்கு வாழ்ந்த மற்றொரு நாயனாரைப்பற்றியும் விசாரித்துக்கொண்டு போகலாமென ஓதுவார் நண்பரிடம் சொன்னோம். ஏயர்கோன் கலிக்காம நாயனார் என்பவரும் அறுபத்து மூவரில் ஒருவர். திருப்புன்கூர் சிவலோகநாதனிடம் அளவற்ற பற்றுக்கொண்டவர். நல்ல செல்வந்தராயிருந்து பல திருப்பணிகள் செய்தவர். திருப்புன்கூருக்குப் பக்கத்திலுள்ள பெருமங்கலம் என்ற கிராமந்தான் அவர் வசித்த ஊர். இறைவனிடத்தில் அளவற்ற பக்தி கொண்ட இவர் பெரும் பிடிவாதக்காரர். இவர் கதையைப் பின்னர் திருவாரூரில்

சுந்தரமூர்த்தியைச் சந்திக்கும்போது சொன்னால்தான் பொருத்தமாயிருக்கும்.

இந்தக் கலிக்காம நாயனார் திருப்புன்கூரிலே ஒருகால் மழையில்லாமல் போனபோது, மழைவந்தால் சுவாமிக்கு பன்னிரண்டு வேலி தானமாகக் கொடுக்க வேண்டுதல் செய்திருந்தாராம். உடனே மழை பொழிந்தது. ஆனால் தேவைக்கதிகமாக வெள்ளம் பெருகிவிட்டது! அந்த வெள்ளத்தை நிறுத்தினால் மேலும் பன்னிரண்டு வேலி கொடுக்க முன்வந்தார் கலிக்காமர். இறைவனுக்கு லாபம் இருபத்துநான்கு வேலி! இது ஏயர்கோன் வரலாற்றில் சேக்கிழார் சொல்லாத கதை. ஆனால், சுந்தரமூர்த்தி நாயனாரே தமது தேவாரத்தில் தம் நண்பர் கலிக்காமநாயனாரைப் பற்றித் திருப்புன்கூரில் பாடும்போது,

வையக முற்றும் மாமழை மறந்து வயலில் நீரிலை மாநிலந் தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை என்ன ஒளிகொள் வெண்முகி லாய்ப்
பரந்தெங்கும்
பெய்யுமாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப் பெயர்த்தும் பன்னிரு
வேலிகொண்டருளும்
செய்கை கண்டு நின் திருவடி யடைந்தேன் செழும்பொழிற் றிருப்
புன்கூருளானே

என்று அந்தப் பழைய சரித்திரத்தைச் சொல்கிறார். திருப்புன்கூரின் வடக்கே அரை மைல் தூரத்திலிருக்கிறது கலிக்காம நாயனார் பிறந்த பெருமங்கலம். இங்கே சுந்தரர் ஞாபகார்த்தமாக வன்முறண்டர் கோயில் ஒன்றுள்ளது. இதில் சுவாமியின் பின்புறம் சுந்தரர் நின்று வணங்குவதாகக் காட்டப்படுகிறது. புதிதாகக் கட்டப்பெற்ற இக் கோயிலில் ஏயர்கோன் கலிக்காமருக்கு உற்சவ மூர்த்தம் ஒன்றிருக்கிறது.

எங்கள் திருப்புன்கூர் யாத்திரை ஒதுவார் நண்பர் உதவியால் நல்ல பலனையளித்தது. முக்கியமாக ஆதனூர் என்ற நந்தனார் பிறந்த இடம் எங்கேயென்று தேடிக் கண்டுபிடித்தது அளவற்ற மகிழ்ச்சியைத் தந்தது. இதைப்பற்றி ஆராய்ச்சி செய்த சிலர் ஆதனூர் என்பது ஆதமங்கலம் என்றும், இது கொள்ளிடத்துக்கு வடக்கே ஓமாம்புலியூருக்குப் பக்கத்திலுள்ளது என்றும் சொல்லியிருந்தார்கள். அப்படியானால் நந்தனார் திருப்புன்கூரில் செய்த திருப்பணிக்கு அடிக்கடி கொள்ளிடத்தைக் கடக்கவேண்டியிருக்குமல்லவா? கோபாலகிருஷ்ணபாரதியார் தமது நந்தன் சரித்திரக் கீர்த்தனையில், ஆதனூரையும் திருப்புன்கூரையும்

விட்டுத் தில்லைக்கு வரும் வழியிலேதான் கொள்ளிடத்தைச் கடக்கிறார் என்று சொல்கிறார்.

''நந்தன் சிதம்பரம் வருகின்றார்
ஆதனூ ரைவிட்டுக் கொள்ளிடம் தாண்டி
அப்பால் வருகையிலே.....

என்று தெளிவாகக் கொள்ளிடத்தின் தெற்கே திருப்புன்கூரின் பக்கத்திலேதான் ஆதனூர் இருக்கிறதென்பதைக் காண்பிக்கிறார். நாங்களும் நேரில் சென்றோம். ஆதனூரைக் கண்டோம். கண்டு மகிழ்ந்தோம்.

13. இயற்பகையின் தியாகம்

திருப்புன்கூர் ஆதனூர் யாத்திரையை முடித்துக்கொண்டு வரும் வழியிலே சிறிது காப்பி பலகாரம் சாப்பிட்டுவிட்டு வைத்தீஸ்வரன்கோயில் விடுதிக்கு வந்து சேர்ந்தோம். அங்கே இரு பணியாளர்கள் காப்பி பலகாரங்களுடன் எங்களுக்காகவே காத்திருப்பதைப் பார்த்து வியந்து போனேம்! இவ்வளவு ஏற்பாடுகளையும் நண்பர் தம்பு செய்துவைத்திருப்பார் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. எங்களுக்காக இருந்த பலகாரங்களை எடுத்துக் காரில் வைத்துக்கொண்டு, கோயில் வாயிலில் காத்து நின்ற அந்த நண்பர் சீனிவாச ஐயங்காரிடம் நன்றி கூறி விடை பெற்றுக் கொண்டு நேரே மாயவரத்தை நோக்கிச் சென்றோம்.

மாயவரத்தை மையமாக வைத்துக்கொண்டு பக்கங்களிலுள்ள பல தலங்களுக்குச் சென்று வருவது எனத் திட்டம் போட்டிருந்தோம். அறுபத்து மூவரில் ஆறேழு நாயன்மார் இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்தவர்கள். அவர்கள் சம்பந்தப்பட்ட தலங்களை மாயவரத்திலிருந்தே போய்த் தரிசித்துத் திரும்பலாம் என்ற நோக்கத்துடன் அங்கு போய்ப் பிரயாணிகள் விடுதியில் இடம் கேட்டபோது சிறிது ஏமாற்றம் ஏற்பட்டது. மாயவரத்தில் அன்றையத் தினம் திருமுறை மகாநாடு நடக்கிறதென்றும், அந்த மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க புதுச்சேரி கவர்னர் ஸ்ரீமான் ஜட்டி வருகிறார் என்றும் அவருக்காகப் பிரயாணிகள் விடுதியிலுள்ள இரண்டு அறைகளும் ஒதுக்கிவைக்கப்பட்டுவிட்டன என்றும் கேள்விப்பட்டோம். திருமுறை மகாநாட்டுத் திறப்பு விழா வைபவம் அன்று காலையிலேயே நடந்து முடிந்திருக்கவேண்டும். அப்படியானால் கவர்னர் எங்கே தங்கியுள்ளார் என்று பல இடத்திலும் டெலிபோன் மூலம் விசாரித்ததில், அவர் தமது கடமையை முடித்துவிட்டு, உடனேயே புதுச்சேரிக்குத் திரும்பிவிட்டார் என்ற தகவல் கிடைத்தது.

இம்மாதிரியான யாத்திரைகளில் நமக்கு எதிர்பாராத விதமாகச் சில நண்பர்கள் வாய்க்கப் பெறுவார்கள். மாயவரத்தில் எங்கள் துணைக்கு வந்தவர் செய்தது என்ற இஸ்லாமிய நண்பர்.

தமிழ் இலக்கியத்தில் ஆர்வமுள்ள இவர் ஒரு காலத்தில் அகில இந்திய வானொலியில் அறிவிப்பாளராக இருந்தவர் என்று தெரிந்தது. இப்போது பிரபலமான வக்கீல் தொழில். நண்பர் செய்யதின் உதவி கொண்டு பிரயாணிகள் விடுதியில் எங்களுக்கு இட வசதி கிடைத்தது. இந்த விடுதி ஒரு பழைய ஆங்கிலேயர் காலக் கட்டடம். விசாலமான அறைகளும் குளிக்க வசதியான அறைகளும் கொண்ட இடம். நாலைந்து நாட்கள் ஓய்வில்லாமல் பிரயாணம் செய்ததால் சேர்ந்துவிட்ட அழுக்குத் துணிகளை யெல்லாம் தோய்த்து உலர்த்த ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்தது!

மறுநாட் காலை வெயிலுக்கு முன்னரே கிளம்பி யாத்திரையைத் தொடங்கத் திட்டம் போட்டிருந்த எங்களுக்கு எதிர்பாராத ஒரு அதிர்ச்சி ஏற்பட்டது. அன்று அதிகாலையில் காப்பி வாங்கி வருவதற்காக வண்டியை எடுத்துக்கொண்டு சென்ற ராதாகிருஷ்ணனும் வேணுவும் வெகுநேரமாகியும் திரும்பி வரக் காணோம். என்னவோ ஏதோ என்று திகிலடைந்திருக்கும் வேளையில் வேணு மாத்திரம் திரும்பிவந்து சொன்ன செய்தி மேலும் எங்களைக் கலங்க வைத்தது. எங்கள் கார் ஒரு திருப்பத்திலே வந்து கொண்டிருக்கும்போது ஒரு பஸ் வந்து தாக்கி, காரின் முன்பாகத்தில் ஒரு விளக்கும் அதன் இணைப்பும் சேதமாகிவிட்ட தாகவும், அது சம்பந்தமாக ராதாகிருஷ்ணன் ஸ்தலத்திலேயே விஷயத்தைப் பேசித் தீர்த்துவிட்டு வரக் காத்திருப்பதாகவும் வேணு சொன்னார். சற்று நேரத்தில் ராதாகிருஷ்ணன் வண்டி யுடன் வந்தார். பெரிய சேதமில்லாவிட்டாலும், ஒற்றைக் கண்ணுடன் வண்டியை ஓட்ட வேண்டாமென்று, மாயவரத் திலேயே ஒரு தொழிற்சாலையில் செப்பனிட நண்பர் செய்யது மூலமாக ஏற்பாடு செய்துவிட்டு, வேறு வாடகை வண்டியொன்று பிடித்துக்கொண்டு அன்றைய யாத்திரையை முடிக்கத் தீர்மானித் தோம். நெடுந்தூரப் பிரயாணங்களில் இப்படியான சில தடை களையும் எதிர்பார்க்க வேண்டியதுதான்.

மாயவரத்திலிருந்து காவிரிப்பூம்பட்டினத்துக்குப் போகும் வழியில் நாங்கள் முதலில் சந்தித்தது நனிபள்ளி என்ற தலம். சீர்காழியில் ஞானப்பால் அருந்தி இசை முழக்கம் செய்த ஞானசம்பந்தர், திருக்கோலக்காவில் தாளம் பெற்றவுடன், தரிசித்த தலம் இந்த நனிபள்ளி என்று முன்னரே சொல்லி யிருந்தோம். சம்பந்தரின் தாயார் பகவதியார் பிறந்த பதி இது. இப்போது இந்த ஊர் புஞ்சை என்ற பெயரால் வழங்குகிறது. நன்செய் புன்செய் என்று விவசாயத்துறையில் சொல்வார்கள். நன்செய் என்றால் நல்ல நீர் வளமுள்ள நெல்சாகுபடி செய்யக்

கூடிய நிலம். புன்செய் என்றால் நீர் வளமில்லாது, நெல்லைத் தவிர வேறு பயிர்கள் செய்ய மாத்திரம் ஏற்ற வறண்ட நிலம். அது உலக வழக்கில் புஞ்சை என்றாகிவிட்டது. ஞானசம்பந்தர் தமது தந்தையார் தோளில் உட்கார்ந்துகொண்டு இங்கு வந்தபோது, தந்தையாரிடத்து இது எந்த ஊர் என்று கேட்டாராம். அவர், இதுதான் நனிபள்ளி என்று சொன்னதும் சம்பந்தர் பாடிய பதிகத்தின் முதல் பாட்டு:

காரைகள் கூகை முல்லை களவாகை யீகை படர்தொடரி கள்ளி கவினிச்
சூரைகள் பம்மி விம்மு சுடுகாடமர்ந்த சிவன்மேய சோலை நகர்தான்
தேரைகள் ஆரை சாய மிதிகொள்ள வாளை குதிகொள்ள வள்ளை துவள
நாரைகளாரல் வாரி வயன்மேதி வைகு நனிபள்ளி போலு நமர்காள்

இந்தப் பாட்டை வைத்துக்கொண்டு பின் வந்த இலக்கியப் புலவர்கள் அழகான வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். வறண்ட பாலைப் பிரதேசமாயிருந்த நனிபள்ளியைச் சம்பந்தர் தமது பாட்டால் நெய்தலாக்கி, அதை மீண்டும் வயல் சூழ்ந்த மருதமாக்கினர் என்பது இவர்களது வியாக்கியானம். இந்தத் தேவாரத்தில் பாலை நெய்தலுக்குரிய கருப்பொருள்கள் வந்து, பின்னர் மருதத்துக்குரிய அடையாளங்கள் வருவதால் இலக்கிய வித்தகர்கள் இப்படி வியாக்கியானம் செய்தார்கள். ஆனால் புஞ்சை என்ற நனிபள்ளி இன்றும் அந்தப் பாலையாகவே காட்சியளிப்பதை நாங்கள் நேரில் பார்த்துக் கொண்டோம். ஞான சம்பந்தர் இந்த நனிபள்ளியில் அதிகம் தங்கவில்லை. தாயாரின் பந்துக்களைக் கண்டு மகிழ்ந்தவுடன் இங்கிருந்து புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

நனிபள்ளி என்ற பெயர் எப்படி வந்ததோ தெரியவில்லை. ஆனால், பள்ளி என்பது சமணர் இருக்கையாகையால் ஒருகால் சமணர் இங்கு அதிகமாக வாழ்ந்திருக்கலாமோ என்று சிந்திக்கத் தோன்றுகிறது. பல்லவர்கள் இந்தப்பிரதேசத்தை ஆண்டார்கள் என்று சரித்திரத்தில் காண்கிறோம். அந்தக் காலத்தில் சமணர்கள் செல்வாக்கும் அதிகமாயிருந்ததாகையால் இந்தப்பிரதேசத்திலும் அவர்கள் பள்ளிகள் அமைத்திருக்கலாம். அதன் காரணமாக நனிபள்ளி என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்று சிலர் சொல்வார்கள்.

நனிபள்ளியில் மிகவும் அழகான வேலைப்பாட்டுடன் ஒரு சிறு கோயில் இருக்கிறது. இதன் கர்ப்பகிருகத்தின்மேலுள்ள விமானம் மற்றைய கோயில்களைப் போலல்லாது ஒரு தனிச் சிற்ப அமைப்பாயிருப்பதால், கட்டடக்கலையில் ஆவுடையார் கோயில்

கொடுங்கையும், நனிபள்ளி விமானமும், திருவீழிமிழலை வெளவால் நத்தி மண்டபமும் அசாதாரண வேலைப்பாடு என்பர். அதனால் கட்டடக்கலைஞர் அந்தக் காலத்தில் ஒப்பந்தம் எழுதும்போது, ''இவை நீங்கலாக'' என்று தவிர்த்துவிடுவது வழக்கம் என்று சொல்வார்கள்.

இங்கு கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் சுவாமியின் பெயர் நற்றுணையப்பர். எங்கள் யாத்திரையில் இந்த நற்றுணையப்பர் துணைநிற்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டு நேரே சரித்திரப் புகழ்வாய்ந்த காவிரிப்பூம்பட்டினத்தை நோக்கிச் சென்றோம். சம்பந்தரும் நனிபள்ளியிலிருந்து புறப்பட்டு, ''பட்டினத்துறை பல்லவனீச்சரம்''தான் போகிறார்.

* * *

பூம்புகார் என்று போற்றப்படும் காவிரிப்பூம்பட்டினத்தின் செழிப்பும் செல்வாக்கும் ஒரு காலத்திலே அகில உலகப் புகழ் பெற்றிருந்தது என்பது தமிழ் மக்களின் பெருமை. கிரேக்கரும் உரோமரும் மரக்கலங்களில் வந்து வாணிபம் செய்த பெருநகரம். தமிழ்நாட்டுக் கலங்கள் இங்கிருந்து தூரகிழக்கு நாடுகளுக்குச் சென்று பண்டங்கள் ஏற்றி வந்து குவித்த துறைமுகம். ''பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்'' என்று இளங்கோவடிகள் வாழ்த்திய பழம்பதி. கற்புக்கடம்பூண்ட தெய்வமாகிய கண்ணகி பிறந்த பட்டினம். ஊர்வசியின் வழிவந்த மாதவியின் நாட்டிய அரங்கேற்றம் கண்ட அணிநகர். பலநூறு ஆண்டுகளாகத் தமிழகத்தின் கலங்கரை விளக்கமாகப் பிரகாசித்த காவிரிப் பூம்பட்டினத்தை, காவிரி கடலொடு கலக்கும் சங்கமத்தில், இன்று நாம் சுற்பனையில்தான் காண முடிகிறது. பட்டினப்பாலையிலும் சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் கண்ட காவிரிப்பூம் பட்டினத்தைக் காண முடியாது. இரண்டு பழைய கோயில்கள், அவற்றையடுத்துச் சில குடிகள், கடலருகே சில மீனவர் குப்பங்கள். இவைதான் இன்றைய காவிரிப்பூம்பட்டினம்.

முன்னொரு காலத்தில் இங்கு இந்திரன், சூரியன், சிவன், விஷ்ணு முதலிய தெய்வங்களுக்கெல்லாம் தனித் தனிக் கோயில் களிருந்தன. அவந்தியிலும் மாகதத்திலுமிருந்து கலைஞர் வந்து சிற்ப வேலை செய்தனர். யவனத் தச்சரும் தமிழ்நாட்டுக் கலைஞருடன் கலந்துறவாடினர். பௌத்தர்கள் பல மடங்களில் வசித்தனர். சமணப்பள்ளிகளிருந்தன. ஆனால் தேவாரம் பாடிய நாயனர் மூவர் காலத்துக்கு முன்பே காவிரிப்பூம்பட்டினம் தனது செல்வாக்கை இழந்துவிட்டது என்று சொல்லவேண்டும்.

சம்பந்தர் தரிசித்தபோது இருந்த கோயில் பல்லவனீச்சரம். அவர் பிரமாதமாக ஒன்றும் சொல்லவில்லை. பக்கத்திலுள்ள சாய்க்காட்டைத் தரிசித்த நாவுக்கரசரும் காவிரிப்பூம்பட்டினத்தைப்பற்றிச் சொல்லவில்லை. சேக்கிழார் காலத்தில் அவர் சிதம்பரத்தையும் திருவாரூரையும் வருணித்ததுபோலக் காவிரிப்பூம்பட்டினத்தை வருணிக்காமல், ''நன்னெடும் பெருந்தீர்த்த முன்னுடைய, நலம் சிறந்தது வளம் புகார் நகரம்'' என்று வெறுமனே காவிரி கடலொடு கலக்கும் சங்கமத்தின் தீர்த்த விசேஷத்தை மாத்திரம் குறிப்பிட்டிருக்கிறார். ஆகையால், எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னரேயே காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பு அழிந்துபோயிருக்கவேண்டும்.

பல்லவனீச்சரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்த நாயனார் ''இல்லையே யென்னாத இயற்பகை'' என்று சுந்தரரால் திருத்தொண்டத் தொகையில் பாடப்பெற்ற அறுபத்து மூவரில் ஒருவராகிய இயற்பகை நாயனார்.

காவிரிப்பூம்பட்டினத்தில் சிறந்த வணிகராயிருந்த இயற்பகை பெருங்கொடை வள்ளலாகவுமிருந்தார். சிவனடியார்களுக்கு வேண்டியதை மனங்கோணுமல் கொடுத்துவந்த திறனைச் சோதிக்க இறைவனே ஒரு சூழ்ச்சி செய்தாராம். ஒரு நாள் இயற்பகையார் இல்லத்தில் முழுநீறு பூசிய முனிவராய் ஒருவர் வந்து சேரவும், இயற்பகை உடனே அவரை வணங்கி, ''சுவாமி. நான் செய்த தவமே தங்களை இங்கு எழுந்தருளச் செய்தது'' என்று உபசரித்து, ''அடியேன் என்ன செய்தல் வேண்டும்?'' என்று கேட்டார். ''எதைக் கேட்டாலும் இல்லையே என்னாது கொடுக்கும் நல்ல பண்பைக் கொண்டிருக்கிறீர் என்று உலகம் உம்மைப் போற்றுகிறது. அப்படியானால் நான் உம்மிடம் விரும்புவது ஒன்றுண்டு. அதைக் கொடுக்க இசைந்தால் நான் சொல்லுகிறேன்'' என்றார் முனிவர். இயற்பகை சிறிதும் ஆலோசிக்காமல், ''என்னிடம் இருக்கின்ற பொருள் எதுவாயினும் அது அடியாருடைமை'' என்று சொல்லிவிட்டார்.

அவ்வளவுதான். வந்த அடியார் கொஞ்சமும் கூச்சமில்லாமல், ''அப்பா இயற்பகை! சாதாரணமாய் எவரும் கொடுக்க முடியாத, உனக்கே சொந்தமான, உன் மனைவியை நான் விரும்பி வந்தேன்'' என்றார்!

எதைக் கேட்டாலும் தயக்கமில்லாமல் கொடுப்பதையே விரதமாகக்கொண்ட இயற்பகையார், தமது மனைவியையே ஒருவர் தானமாகக் கேட்டதும், அதைவிடச் சிறந்த தானம் அல்லது

தியாகம் வேறில்லை என்று மகிழ்ச்சி கொண்டார். உடனே உட்சென்று தன் மனைவியை அழைத்து ''எனது பிரிய நாயகியே! அடியார் ஒருவர் வந்திருக்கிறார். அவர் என்னிடமுள்ள சிறந்த பொருளொன்றை விரும்பிக் கேட்கிறார். தருகிறேன் என்று சொல்லிவிட்டேன். உனக்கும் சம்மதம்தானே?'' என்று கேட்டார். கணவன் சொல்லுக்கு எதிர் நின்று வழக்கமில்லாத மனைவியும், ''தாங்கள் கொடுப்பதை எப்போதாவது நான் மறுத்ததுண்டா? இன்று மாத்திரம் எதற்காக இப்படிக் கேட்கிறீர்கள்?'' என்று கேட்டார். இயற்பகையார், ''உன்னை நான் கேட்பதற்குக் காரணமுண்டு. ஏனென்றால், உன்னையே நான் அந்த அடியாருக்கு அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டேன்!'' என்றார். கட்டிய மனைவி கலங்கினாள். ஒரு கணம் திகைத்தாள். பின்னர் தம் கணவனின் கொடைத்திறனை நினைத்துப்பார்த்து வேறு வழியில்லாமல், ''எனது கணவன் கட்டளையை நிறைவேற்றுவதே எனது கடமை'' என்று சொல்லி, வெளியே வந்து சிவனடியாரை வணங்கி நின்றாள். தன் கோரிக்கை நிறைவேறியதைக் கண்ட அடியார் மற்றொரு நிபந்தனையையும் விதித்தார். ''அப்பா, நீ எனக்கு உன் மனைவியை முழு மனதுடன் தந்துவிட்டாய் என்று உன் சுற்றத்தவர்கள் அறியமாட்டார்கள். ஆகையால் நாங்கள் செல்லும் வழியிலே அவர்கள் தடை செய்யாமலிருக்க, நீயே எங்களை அழைத்துக்கொண்டு போய்க் காப்பாற்றவேண்டும்'' என்றார். உடனே இயற்பகையும், பாதுகாவலுக்காக வாளும் கையுமாகப் புறப்பட்டு, அடியாரும் மனைவியும் முன் செல்லத் தாம் பின்னால் சென்றார். எதிர் பார்த்தது நடந்துவிட்டது! இயற்பகையின் சுற்றத்தவர்கள் மாத்திரமல்ல, காவிரிப்பூம்பட்டினமே திரண்டு வந்துவிட்டது. எவனோ பைத்தியக்காரனோடு தம் மனைவி போகவிட்டு முட்டாள் இயற்பகை பார்த்துக்கொண்டிருக்கிறானே என்று எல்லோரும் சூழ்ந்துகொண்டனர்! அவர்களையெல்லாம் இயற்பகை வாள் கொண்டு தாக்கவும் பலர் மாண்டனர். மற்றவர்கள் ஓடினர். இயற்பகையார் அடியவரை நோக்கி, ''அண்ணலே, தாங்கள் அஞ்சாது போங்கள். அதோ அந்தக் காடுவரை நான் அழைத்து வந்துவிடுகிறேன்'' என்று சொல்லிச் சாய்க்காடு என்ற சாயாவனம் வரை அடியாரையும் மனைவியையும் அழைத்துச்சென்று அங்கே அவர்களை விட்டுத் திரும்பினார்.

சற்று நேரத்துக்கெல்லாம் காட்டிலிருந்து அடியார், ''இயற்பகையே, ஓடி வா! ஆபத்து, ஆபத்து!'' என்று கூவி யழைத்தார். மறுபடியும் ஏதோ ஆபத்து நேர்ந்துவிட்டதாக்கும் என்று பதைபதைத்து இயற்பகையார் ஓடிச்சென்று பார்த்தார்.

என்ன அதிசயம்! அங்கு அவர் மனைவி மாத்திரம் நின்றார். அடியாரைக் காணவில்லை. அசரீரி ஒன்று கேட்டது. ''வரையாது கொடுக்கும் வள்ளலே! உலகத்துக்கு உன் கொடைத் திறனையும் பக்திப் பெருமையையும் காண்பிக்கவே இந்தச் சோதனை செய்தேன். நீ உன் மனைவியை அன்போடு அழைத்துச்சென்று சிறப்போடு வாழ்வாயாக. மாண்ட உன் சுற்றத்தவரும் மற்றவர் களும் பிழைத்து உன்னைப் பெருமைப்படுத்துவார்களாக.'' பழையபடி எல்லாம் மகிழ்ச்சியாக முடிந்தது.

அறுபத்து மூன்று நாயன்மார்களின் வாழ்க்கையில் இந்த மாதிரியான பல அசாதாரணச் செய்கைகளை நாம் காணப் போகிறோம். இயற்கைக்கு மாறான காரியங்களென்றும், உலக வழக் குக்கும் சமூக ஒழுக்கத்துக்கும் விரோதமான செய்கைகளென்றும் ஒதுக்கிவிடலாம். ஆனால், அடிப்படையில் பக்தி, வைராக்கியம், சிவதொண்டு என்று பெருமைப்படுத்துவதற்கு எழுந்த கதைகள் இவை. ஆகையால், எத்தனை வெறுக்கத்தக்க காரியமாயிருந்தா லும் அது இறைவனுக்காக அர்ப்பணிக்கும் செயல் என்றுதான் சிவனடியார்கள் கருதினார்களென்று நாம் சமாதானம் செய்து கொள்ள வேண்டியது.

14 பூம்புகார் போற்றுதும்

பல்லவனீச்சரமும் சாய்க்காடும் பக்கத்துப் பக்கத்தில் தானிருக்கின்றன. முதலில், சாயாவனம் என்று சிலப்பதிகாரம் மணிமேகலையில் சொல்லப்பட்ட திருச்சாய்க்காட்டு சாயாவனேசுவரைத் தரிசித்துச் செல்லலாமென்று உள்ளே சென்றோம். அங்கிருந்த அர்ச்சகர் எங்கள் புகைப்படக் கருவிகளைக் கண்டவுடன் சந்தேகத்தோடு, ''நிர்வாக அதிகாரியைக் கண்டு உத்தரவு வாங்கி வாருங்கள்'' என்று சொல்லித் திருப்பிவிட்டார். நிர்வாக அதிகாரி பல்லவனீச்சரத்துக்கு எதிரிலுள்ள வீடொன்றில் வசிக்கிறார் என்று விசாரித்தறிந்து அங்கே சென்றோம். தனிமையில் குடியிருக்கும் அவர் உள்ளே சமையல் செய்து கொண்டிருக்கிறார் என்று ஒரு பையன் சொன்னான். இருந்தும் எங்கள் குரலைக் கேட்டவுடன் அவரே வாசலில் வந்து பார்த்தார். என்ன ஆச்சரியம்! ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர், கோவலனும் கண்ணகியும் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து மதுரைக்குச் சென்ற வழியை ஆராய்ந்து தகவல் சேகரிப்பதற்காகவும் புகைப்படங்கள் பிடிப்பதற்காகவும் நான் காவிரிப்பூம்பட்டினம் போயிருந்தபோது சந்தித்த அதே நண்பர் கஸ்தூரிரங்கன்தான் அவர்! முன்பு நாங்கள் சந்தித்த சந்தர்ப்பத்தையும் என் பெயரையும் மறக்காத அவர் பிரமாதமாக உபசரித்தார். அவர் துணையோடு எங்கள் நோக்கம் நிறைவேறியது.

சிலப்பதிகாரம், மணிமேகலை, பட்டினப்பாலை ஆகிய நூல்களில் பழைய காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றிப் பிரமாதவருணனைகளைக் காணலாம். அங்கே நுதல்விழிநாட்டத் திறையோன் என்ற சிவன் கோயிலும், அறுமுகச் செவ்வேள் என்ற முருகன் கோயிலும், நீலமேனி நெடியோனுகிய திருமால் கோயிலும், பலராமன் கோயிலும் என்று இவ்வகையான கோயில்களும், பௌத்த விகாரங்களும் சமணப் பள்ளிகளும் ஏராளமாயிருந்தனவென்று தெரிவிக்கின்றன. இப்போது பல்லவனீச்சரத்தில் காணப்படும் சிவன் கோயில்தான் சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்ட ''பிறவா யாக்கைப் பெரியோன்'' கோயிலா

யிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. பல்லவனீச்சரத்துக்கும் சாய்க்காட்டுக்குமிடையில் இப்போது ஒரு பெருமாள் கோயில் இருக்கிறது. இதுவே சிலப்பதிகாரத்து மணிவண்ணன் கோட்டமாயிருக்கலாம். பல்லவனீச்சரம் கோயில் ராஜகோபுரத்தையும் திருக்குளத்தையும் கொண்டிருக்கிறது. இங்குள்ள ரிஷபாரூடர் விக்கிரகம் மிக்க அழகுடையது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் நான் சென்ற சமயத்தில் அங்கிருந்த சில முக்கியமான சிலைகளை இப்போது காண முடியவில்லை. அவையெல்லாம் வேறிடத்துக்கு மாற்றப்பட்டுவிட்டன என்று சொல்லக்கேட்டோம்.

காவிரிப்பூம்பட்டினம் ஒரு காலத்தில் பௌத்த மதத்தின் செல்வாக்கு நிறைந்திருந்தது. சமீபத்திலே அரசாங்க தொல் பொருள் துறையினர் இங்கு அகழ்வாராய்ச்சி செய்ததில் பௌத்த விகாரமிருந்த கட்டடச் சின்னங்களும், புத்த விக்கிரகங்களும் கண்டெடுக்கப்பட்டன. மேலும் ஆராய்ச்சி செய்தால் பழைய கிரேக்க உரோமத் தொடர்புகளுக்கான தடயங்களைக் காணலாம் என்று நம்பப்படுகிறது.

காவிரிப்பூம்பட்டினத்தில்தான் பட்டினத்தார் என்ற திருவெண்காட்டிகள் பிறந்தவர். அறுபத்து மூவரில் இந்த அடியார் சேராவிட்டாலும், பன்னிருதிருமுறை என்ற சைவத் திருமுறைப் பாடல்களில் இவரது தோத்திரப் பாக்கள் பதினோராவது திருமுறையில் சேர்க்கப்பட்டிருப்பதால் பட்டினத்துப் பிள்ளையைப் பற்றியும் இங்கே ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது.

காவிரிப்பூம்பட்டினத்திலே வணிகர் குலத்திற் பிறந்தார் பட்டினத்தார். திருவெண்காட்டு சுவாமியின் கருணையாற் பிறந்தார் என்று சொல்லிப் பெற்றூர் இவருக்கு இட்ட பெயர் திருவெண்காடர். பின்னர் இவர் துறவு பூண்டு சென்றபோது இவரைப் பட்டினத்தார் என்றும் திருவெண்காட்டடிகள் என்றும் மக்கள் அழைத்தனர். மிகுந்த செல்வச்செழிப்புடன் வாழ்ந்த இவருக்கு மக்கட்பேறு கிடைக்கவில்லை. திருவிடைமருதூரில் வாழ்ந்த பிராமணர் ஒருவருக்கு மருதவாணர் என்ற பெயரில் ஒரு குழந்தையிருந்தது. இந்தக் குழந்தை ஒரு தெய்வீகக் குழந்தை. பிராமணர் மிக வறுமையால் வாடியபோது திருவெண்காடர் அந்தக் குழந்தையை விலைக்கு வாங்கி வளர்த்துவந்தார். மருதவாணர் வளர்ந்தபின் ஒரு நாள் தந்தை திருவெண்காடர் தமது புத்திரனைத் திரவியம் தேடும் பொருட்டு வெளிநாட்டுக்கு அனுப்பினர். திரும்பி வரும்போது மருதவாணர் தமது பொருள்

களையெல்லாம் கோயிற்பணிகளில் செலவிட்டுவிட்டு, பதிலாக எரு மூட்டைகளைக் கொண்டுவந்து சேர்த்தார்! அதில் ஒரு வரட்டியைத் திருவெண்காடர் கையில் கொடுத்து உடைத்துப் பார்த்தபோது அதனுள் மாணிக்க மணியிருப்பதைக் கண்டார் திருவெண்காடர். ஆனால் மருதவாணர் மேலும் அங்கு நிற்காமல் போய்விட்டார். போகும்போது தாயாரிடம் ஒரு பெட்டியைக் கொடுத்து அதைத் தந்தையிடம் ஒப்படைக்குமாறு சொல்லிச் சென்றார். திருவெண்காடர் அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்த போது அதில் ஓர் ஓலைச்சுருளில் ''காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே'' என்ற வாசகமும், ஒரு காதில்லாத, உபயோகமற்ற ஊசியும் இருக்கக்கண்டார். உடனே திருவெண் காட்டாருக்கு ஞானோதயம் பிறந்து, அவர் அன்றிலிருந்து தமது பெரும்பொருளையெல்லாம் தருமம் செய்துவிட்டுத் துறவு பூண்டார். பத்திரகிரி என்ற ஓர் அரசனும் துறவு பூண்டு இவருடைய சீடரானான். இவர்களுடைய பாடல்கள் பலவகைப் பட்டன. சித்தர்கள் என்ற வகையில் இவர்களைப்பற்றிய கதை களும் பல. பட்டினத்தார் பல தலங்களைத் தரிசித்து இறுதியில் சென்னைக்குப் பக்கத்திலுள்ள திருவொற்றியூரில் சமாதியடைந் தார்.

பட்டினத்தார் என்ற திருவெண்காட்டடிகள் பாடியதாகப் பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டிருப்பவை: கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடை மருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒருபது என ஐந்து பிரபந்தங்கள். ஆனால் பொதுமக்கள் பலர் வாயில் நடமாடும்''பட்டினத்தார் பாடல்கள்'' என்பவற்றைப் பாடியவர் பிற்காலத்தில் வாழ்ந்த வேறொருவர். பல்லவனீச்சரம் என்ற காவிரிப்பூம்பட்டினத்துக் கோயிலில் பட்டினத்தார், அவர் மனைவியார், பத்திரகிரியார், அவர் மனைவி, மருதவாணர் ஆகியவர்களுடைய சிலைகள் இருக்கின்றன.

பல்லவனீச்சரத்திலிருந்து பக்கத்திலுள்ள திருச்சாய்க் காட்டுக்குப் போனோம். மாடக்கோயில். சுவாமியின் பெயர் சாயாவனேசுவரர். அம்பாள் குயிலுநன்மொழியம்மை. கோஷாம்பாள் என்றும் சொல்வர். இந்தச் சாயாவனத்தில் வைத்துத்தான் இயற்பகைநாயனார் தமது மனைவியை அடியார் ஒருவருக்குக் கொடுத்துத் திரும்பியதாக ஐதிகம். இதற்கு வடக்கே மேலூர் என்ற மேலப்பெரும்பள்ளத்திலுள்ள சுவாமியின் பெயர் பிரியா வணங்கீசுவரர். இங்கேதான் இயற்பகையின் மனைவியைத் தனியே விட்டு அடியாராக வந்த இறைவன் பிரிந்தார்.

திருச்சாய்க்காட்டில் மார்கழி மாதம் ஐந்து நாட்கள் விழா நடக்கிறது. இதில் இயற்பகை நாயனார் சரித்திரம் சம்பந்தமான காட்சிகள் காண்பிக்கப்படும்.

காவிரிப்பூம்பட்டினத்தில் ஒரு காலத்தில் இந்திர விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது என்பதை சிலப்பதிகாரத்தில் நாம் காண்கிறோம். சித்திரை மாதம் பூரண நாளில் கொண்டாடப்படும் இந்த விழா இருபத்தெட்டு நாட்கள் நடை பெற்றதாகத் தெரிகிறது. இப்போது கோயிலில் விசேஷ விழா நடத்தப்படுவதுடன், அரசினரும் ஒரு கொண்டாட்டம் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

சாய்க்காட்டுக் கோயில் மாடக்கோயில் என்று சொன்னோம். கோச்செங்கண்ணன் என்ற அரசன் தமிழ்நாட்டில் எழுபது மாடக் கோயில்களைக் கட்டினான் என்று சொல்லப்படுகிறது. யானை ஏறிக் கோயிலில் சிதைக்காமலிருக்கக் கட்டப்பட்ட பெரிய மேடை யுள்ள கோயில் மாடக்கோயில். இதைப்பற்றிய ருசிகரமான கதையைக் கோச்செங்கட் சோழன் என்ற நாயனாரைத் திருவானைக் காவில் நாம் சந்திக்கும்போது தெரிந்துகொள்வோம். நாம் செல்லும் யாத்திரையில் சில கோயில்கள் மாடக்கோயில்களாக இருப்பதையும் பார்க்கப்போகிறோம்.

மணிமேகலையைப் படிக்கும்போது காவிரிப்பூம்பட்டினத்துக்கு சம்பாபதி என்ற ஒரு பெயர் இருந்ததாக நாம் அறிகிறோம். பரத கண்டத்துக்கு சம்புத்தீவு என்ற பெயருண்டு. அந்தச் சம்புத்தீவின் முக்கிய நகரம் சம்பாபதி. இப்பகுதிக்கு முக்கிய தெய்வம் சம்பாபதி தேவி. காவிரிப்பூம்பட்டினத்தில் சம்பாபதி தேவிக்கு ஒரு தனிக் கோயில் இருந்தது. சாயாவனேசுவரர் கோயிலுக்குச் சிறிது தெற்கே சிதைந்துபோன ஒரு பழைய கோயில் காணப் படுகிறது. செங்கல்லால் கட்டப்பட்ட இந்தக் கோயிலைப் பழைய சம்பாபதிதேவி கோயில் என்று சொல்வார்கள். இது கற்கோயில் கட்டப்படுவதற்கு முன்னுள்ள செங்கற்கோயில் என்று ஆராய்ச்சி யாளர் கருதுகின்றனர். இந்தச் சம்பாபதிதேவிதான் ஊரைக் காக்கும் தெய்வம். சாயாவனேசுவரர் கோயில் மண்டபத்தில் இப்போது பஞ்சலோகத்திலமைந்த சம்பாபதி விக்கிரகம் ஒன்று காணப்படுகிறது. மிகத்திறமையான ஸ்தபதி ஒருவருடைய கைவண்ணம் என்பதை அந்த விக்கிரகத்தின் அமைப்பிலும் அழகிலும் காணலாம்.

காவிரிப்பூம்பட்டினத்தில் அந்தக் காலத்தில் ஐந்து மன்றங்கள் இருந்ததாகச் சிலப்பதிகாரத்தில் பார்க்கிறோம். அதில் ஒன்று பூத

சதுக்கம். இந்தச் சதுக்கத்திலுள்ள பூதம் மகா பயங்கரமானது. அதன் கையில் ஒரு பாசக் கயிறு வைத்துக்கொண்டு நகரத்தின் நாலு காத எல்லைக்குள் எவராவது குற்றம் செய்தால் அவர்களை இழுத்துப் புடைத்து உண்ணும் அந்தப் பூதம். ''தவ வேடம் பூண்டு அதற்குரிய தன்மையில்லாது பிறரை ஏமாற்றும் போலித் துறவிகள், போலி மினுக்குகளால் தம்மை மறைத்துக்கொண்டு அவஞ் செய்யும் விபசாரிகள், செங்கோன் மன்னனுக்கு எதிராகச் சதி செய்யும் அமைச்சர்கள், பிறர் மனை நயப்போர், பொய்ச் சாட்சி சொல்வோர், புறங்கூறுவோர், இவர்கள் எல்லோரும் இதோ என் கையிலுள்ள பாசத்திற் படுவர்'' என்று அந்தப் பூதம் அவ்வூர் எல்லையில் நின்று நாலு காதம் கேட்கும்படி கடுங்குர லெடுத்துக் கூவும். இந்தச் சதுக்கப் பூதத்தின் ஒரு பழைய உருவத்தையும் நாங்கள் சம்பாபதிதேவி கோயிலுக்குப் பக்கத்தில் உருவழிந்து போய்க் கிடக்கக்கண்டோம்.

காவிரிப்பூம்பட்டினத்தை விட்டுப் பிரியும்போது ஒரு கற்பனை யுலகைவிட்டுப் பிரியும் எண்ணந்தான் தோன்றியது. பழைய புகார் எங்கே, பட்டினப்பாக்க மெங்கே, மருவூர்ப்பாக்க மெங்கே, துறைமுகமெங்கே, இந்திர விழாவெங்கே? இந்தக் கற்பனைத் திரையைக் கிழித்து, பழைய புகாரையும் அதன் பெருமையையும் ஊனக்கண்முன் எடுத்து வைக்கவேண்டுமென்று சில ஆண்டு களுக்கு முன் மேலப்பெரும்பள்ளத்தில் ஓர் இளைஞர் தோன்றினர், தியாகராஜன் என்ற பெயரில். மாதவி மன்றம் என்று ஓர் அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு அரசாங்கத்தை விடாது தூண்டினர். ''நிலத்தை அகழ்ந்து பாருங்கள், கண்டெடுக்கப் படும் பொருள்களை ஆராய்ந்து பாருங்கள். பல்லவனீச்சரத்திலும் சாய்க்காட்டிலுமுள்ள சிலைகளையும் ஆராய்ந்து பாருங்கள். புகாரின் பழம்பெருமையைக் காண்பீர்கள்'' என்று சலியாது கதறினர் அவர். ஆரம்பத்தில் அதிகார வர்க்கம் அவர் விண்ணப் பத்தை சட்டை செய்யவில்லை. யாவும் இலக்கியக் கற்பனை என்று வாளா இருந்தனர். பின்னர் யாரோ ஒரு புதிய தொல்பொருளா ராய்ச்சியாளர் வந்தார். தியாகராஜன் சொல்வதிலும் ஏதாவது உண்மையிருக்காதா என்று யோசித்தார். காவிரிப்பூம்பட்டினத் துக்குப் போய் இரண்டொரு இடங்களில் தோண்டிப்பார்த்தார். அப்போது அகப்பட்டவைதான் புத்த விகாரமும் புத்தர் சிலைகளும். பழைய காவிரிப்பூம்பட்டினத்தின் துறைமுகம் கீழையூர் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இவை காரணமாகத் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் உற்சாகம் பிறந்தது. பழைய பூம்புகாரை அங்கு தோற்றுவிக்க

எண்ணங்கொண்டனர். இப்போது நவீன பூம்புகார் ஒன்று தோன்றியுள்ளது.

காவிரிப்பூம்பட்டினத்தை விட்டுப் பிரியும்போது எனக்கு என்னவோ மாதிரியிருந்தது. அன்றொருநாள் வைகறை யாமத்தில் எவரும் காணுதவாறு கோவலனும் கண்ணகியும் புகாரைவிட்டுப் புறப்பட்டு, காவிரியின் வடகரை வழியாக நடந்து, கவுந்தி என்ற சமணத் துறவியுடன், உறையூர் வந்து, பின்னர் மதுரையைச் சேர்ந்த வழியைத் தேடிச் சில ஆண்டுகளுக்கு முன்பு நானும் மற்றொரு நண்பரும் சென்ற அனுபவத்தை நினைத்துப்பார்த்தேன். அந்தப் பழைய நினைவுகள் மீண்டும் வந்து உறுத்தின. பக்கத்திலிருந்த நண்பர் சிட்டி, ''கண்ணகி அடிச்சுவட்டில் என்று அதையும் எழுதுவதுதானே?'' என்றார். அடி மனத்திலுள்ள அந்த ஆசை வெளிப்பட்டால் பார்க்கலாம் என்று சொல்லிக்கொண்டே நடந்துபோய், ஹோட்டல் என்ற பெயரோடுள்ள ஒரு சிறு குடிசையில், பெரிய மனத்துடன் ஒருவர் பரிமாறிய உணவை ரசித்து உண்டு, சிறிது இளைப்பாறியபின் அங்கிருந்து புறப்பட்டோம்.

மாயவரத்தில் நாங்கள் பிடித்த வாடகைக்காரின் சாரதி, ஊருக்குத் திரும்புகிறோம் என்ற மகிழ்ச்சியில், வேகத்தைக் கொஞ்சம் அதிகமாகவே அழுத்தினார்! ''இந்தாப்பா, நாங்களும் உருப்படியாக ஊர் போய்ச் சேரவேண்டும். அதற்கிடையில் திருக்கடவூரையும் ஆக்கூரையும் தரிசிக்க வேண்டுமென்று திட்டமிருக்கிறது. கொஞ்சம் நிதானமாகப் போகலாமா?'' என்றோம். சாரதி ஒத்துழைத்தது எங்களுக்குத் திருப்தியைக் கொடுத்தது. நேரே திருக்கடவூர் கோயில் வாயிலில் கொண்டுபோய்ப் பக்குவமாக நிறுத்தினார் அவர்.

15. குங்கிலியச் சேவை

வறுமைப் பிணியினாலே வருந்தும் ஒரு குடும்பத்தின் தாய் தன் கழுத்திலிருந்த ஒரேயொரு சொத்தாகிய தாலியை விற்று அரிசி வாங்கும்படி தன் கணவனிடம் கொடுக்கிறாள். ஆனால் அந்தக் கணவர், சிவபெருமானுக்குக் குங்கிலியத் தூபமிடுகிற விரதத்தைக் கொண்டவர், தாலியை விற்றுக் குழந்தைகளுக்கும் மனைவிக்கும் பசி தீர்ப்பதை மறந்து, குங்கிலியம் வாங்கிப் புகை போடுகிறார். இதுதான் திருக்கடவூரில் வாழ்ந்த குங்கிலியக்கலய நாயனாரின் கதை. அறுபத்து மூன்று சிவனடியார்களின் போக்கில் இவர் போக்கு ஒரு தனி.

இறைவனுக்கு ஏதோ ஒரு வகையில் சேவை செய்யவேண்டு மென்பது பக்தர்களின் விரதம். சிலர் மாலை தொடுத்து வணங்குகிறார்கள். வேறு சிலர் விளக்கேற்றி வைக்கிறார்கள். கலயனார் என்பவர் தினந்தோறும் குங்கிலியத் தூபமிடுவதையே வழக்கமாகக் கொண்டிருந்தவர். குங்கிலியத் திருப்பணிக்கே தமது செல்வங் களையெல்லாம் செலவிட்டார். வறுமை வந்தது. அப்பொழுதும் திருப்பணி தடைபடாதிருக்க, வீட்டிலுள்ள ஒவ்வொரு பொருளை யும் விற்று அதைக்கொண்டு குங்கிலியம் வாங்கித் தூபமிட்டார். ஒரு நாள் வீட்டில் ஒரு பொருளும் கிடைக்கவில்லை. இரண்டு நாட்களாகக் குழந்தைகள் பட்டினியால் வாடினர். இதைக் கண்ட கலயனார் மனைவி, தன் கழுத்தில் கிடந்த மாங்கலியத்தைக் கழற்றிக்கொடுத்து, ''குழந்தைகள் பசி தீர்க்க இதை விற்று அரிசி வாங்கி வாருங்கள்'' என்று சொன்னார். மிகுந்த வருத்தத்தோடு, இப்படியும் பகவான் நம்மைச் சோதிக்கின்றாரே என்று சொல்லிக் கொண்டு கலயனார் வெளியே புறப்பட்டுப் போகும்போது, கடைத் தெருவில் ஒருவன் ஒரு மூட்டையில் குங்கிலியம் கொண்டுவரக் கண்டதும், அவர் உள்ளம் மகிழ்ந்தது. மனைவியை மறந்தார். குழந்தைகள் பசியை மறந்தார். இறைவனுக்குத் தூபம் போடும் ஒன்றையே நினைந்தவராய், கையிலிருந்த பொற்தாலியைக் கொடுத்து அந்தக் குங்கிலியம் அத்தனையையும் வாங்கிச் சுமந்து

கொண்டு நேரே திருக்கடவூர்த் தெய்வத்தின் சந்நிதியையடைந்து திருப்பணி செய்து அங்கேயே தங்கிவிட்டார்.

அரிசி வாங்கச் சென்றவரைக் காணாது வீட்டிலே மனைவியும் மக்களும் காத்திருந்து அன்றிரவு பட்டினித் துன்பத்தில் அயர்ந்து தூங்கிவிட்டனர். மனைவியின் தாலியையே குங்கிலியப் பணிக்காக அர்ப்பணித்த அடியாரின் துன்பத்தைப் பார்த்துக்கொண்டு இறைவன் சும்மா இருப்பானா? அன்றிரவே கலயனார் வீட்டில் அரிசி மூட்டைகளும் மற்றும் செல்வங்களும் மாயமாக வந்து குவிந்தன. இதனைக் கலயனார் மனைவி கனவிலும், இறைவன் தெரிவித்தான். அதே சமயம் கோயிலில் அயர்ந்து தூங்கிய கலயனார் கனவிலும் தோன்றி, ''உன் திருப்பணியை மெச்சினேன். பசியால் வாடும் நீ போய் உன் வீட்டில் பாலும் சோறும் உண்டு பசியை நீக்கக் கடவாய்'' என்று அருளினார். தாலியையே விற்கும் நிலைக்கு வந்த வீட்டில் பாலும் சோறுமா இருக்கும்? கலயனார் நடக்க முடியாமல் நடந்து வீடு திரும்பினார். என்ன ஆச்சரியம்! பாலும் சோறும் சமைத்துவைத்து அருமை மனைவி காத்திருக் கிறார். கலயனார் தமது கண்களையே நம்ப முடியவில்லை. வீடு நிரம்ப வேண்டிய பொருள்களெல்லாம் அடுக்கி வைக்கப்பட்டிருக் கின்றன. குழந்தைகள் குதூகலத்தோடு துள்ளி விளையாடு கின்றன. எல்லாம் இறைவன் அருள் என்று கலயனார் திருக்கடவூர் ஈசனைத் துதித்து வணங்கினார். குங்கிலியம் இட்டுச் சேவை செய்த கலயனார் குங்கிலியக்கலய நாயனார் என்ற பெயரைப் பெற்று, சுந்தரமூர்த்தி நாயனாரின் திருத்தொண்டத் தொகையில் ''கட வூரிற் கலயன்தன் அடியார்க்கு மடியேன்'' என்று பாடப்பெற்றார். இறைவன் அருள் பெற்ற இந்த அடியாரின் மற்றொரு திருப்பணி திருப்பனந்தாள் என்ற தலத்தில் நடந்தது. நாம் பின்னால் அங்கு போகும்போது அதைப்பற்றி அறிந்துகொள்வோம்.

தஞ்சைமாவட்டத்திலுள்ள பல நூற்றுக்கணக்கான கோயில் களில் திருக்கடவூர் வீரட்டானம் அதிக செல்வாக்கான கோயில் களிலொன்று. அட்ட வீரட்டம் என்ற இறைவனின் எட்டு வீரச் செயல்களில் யமனைக் காலால் உதைத்துக் கொன்ற காலசம்ஹார மூர்த்தி எழுந்தருளியிருக்கும் தலம் இது. மார்க்கண்டேயர் சரித்திரத்தைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. பதினாறு வயதில் மரணம் என்று விதிக்கப்பட்ட மார்க்கண்டன், யமதர்ம ராஜன் பிடிக்க வந்தபோது சிவலிங்கத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டான். ஆத்திரங் கொண்ட காலன் நீயாச்சு உன் சிவனுச்சு, அந்தச் சிவனையுமே கட்டியிழுக்கிறேன் பார் என்று சொல்லிப் பாசக்கயிற்றை வீச, இறைவன் தன் காலால் உதைத்து, எமனைக்

கொன்றுவிட்டார். அந்த நிகழ்ச்சி நடந்த இடம்தான் திருக்கடவூர் என்பது ஐதிகம். இங்கு சித்திரை மாதத்தில் நடக்கும் பிரம்மோற்சவத்தில் ஆரும் நாள் இந்தக் காலசம்ஹாரக் காட்சியைக் காணலாம். யமன் இறந்துபட்டதால் உலகத்தில் மக்கட் பெருக்கம் அதிகரித்து, பூமிதேவி பாரம் பொறுக்க முடியாமல் இறைவனிடம் முறையிட்டாள். இறைவன் அதைக் கேட்டு, பழையபடி யமனுக்கு உயிர் தந்து அதிகாரம் கொடுத்தாகப் புராணக் கதை. நாம் திருப்பைஞ்ஞீலிக்குப் போகும் போது இதைப்பற்றி விரிவாகக் கேட்கலாம். அழிக்கும் தொழிலை யுடைய காலனை இங்கு உதைத்த சிவன் படைக்கும் தொழிலை யுடைய பிரம்மாவையும் சும்மா விட்டு வைக்கவில்லை. ஏதோ ஒரு காரணத்துக்காக நெற்றிக்கண் கொண்டு எரித்துவிட்டார். திருக்கடவூருக்குக் கிழக்குத் திசையில் ஒரு மைல் தூரத்திலிருக்கும் திருக்கடவூர் மயானம் என்ற தலத்தில் இது நடந்ததால், மயானம் என்று சொல்லப்படுகிறது. இதனைப் பொது மக்கள் திருமெஞ் ஞானம் என்று சொல்வார்கள். இங்குள்ள ஒரு கிணற்றிலிருந்து திருக்கடவூர் சுவாமிக்குத் தினந்தோறும் திருமஞ்சனத்துக்குத் தீர்த்தம் கொண்டுவரப்படுவதாகச் சொல்வார்கள். இதனைப் பொதுமக்கள் உபயோகிப்பதில்லை. பங்குனியில் சுக்கில பட்சமும் அசுவினி நட்சத்திரமும் கூடும் நாளில் மாத்திரம் இது விசேஷ தீர்த்தமாக உபயோகப்படுமாம்.

திருக்கடவூர் சுவாமியின் பெயர் அமுதகடேஸ்வரர். திருப் பாற்கடலில் கடைந்த அமுதம் ஒரு கடத்தில் (குடத்தில்) சேமித்து வைத்த தேவர்கள் இந்த ஊரிலே கொண்டு வைத்தார்களாம். அதுவே உறைந்து அமிர்தலிங்கமாக மாறியது. அமிர்த கட ஈஸ்வரர் என்ற பெயர் அதன் காரணமாக ஏற்பட்டதென்பது புராணம்.

இங்குள்ள காலசம்ஹார மூர்த்தியென்ற பஞ்சலோக விக்கிரகத்துக்கிணையான ஒரு படிவத்தை வேறெங்கும் காண முடியாது. நடராஜர் வடிவத்தில் இது ஒரு வகை. தூக்கிய திருவடியும், ஊன்றிய சூலப்படையும், நின்ற திருப்பாதத்தின் கீழ்க் காலனும், அவனைக் கட்டியிழுக்கும் குண்டோதரனும், பக்கத்தில் வணங்கி நிற்கும் மார்க்கண்டனும், வாம பாகத்தில் அருள் பொழிய நின்று உவக்கும் பாலாம்பிகையும்—இந்தக் காட்சியைக் காண்பவர் மெய்மறந்து போவர் என்று சொல்ல வேண்டும். இதன் காரணமாகவே, மரண பயமுள்ள பலர் திருக்கடவூருக்குச் சென்று மிருத்யுஞ்சய ஹோமம் என்ற சாந்தி செய்வது வழக்கத்திலிருக்கிறது. காலசம்ஹார மூர்த்தி தெற்கு

நோக்கி—நடராஜர் சந்நிதியாக—உள்ளார். எதிரே அறுபத்து மூவர் மண்டபத்தில் உயிர்பெற்றெழுந்த யமதர்மராஜன் சிலையிருக்கிறது.

குங்கிலியக் கலய நாயனார் போலவே திருக்கடவூரில் பிறந்த மற்றொருவர் அறுபத்துமூவரில் சேர்க்கப்பட்டிருக்கிறார். இவர் பெயர் காரி நாயனார். இந்த நாயனாரின் தொண்டு இலக்கியத் தொண்டு. பொய்யடிமையில்லாத புலவர்க்கு மடியேன் என்று சுந்தரர் பாடியது நக்கீரர், பரணர், கபிலர் முதலிய புலவர்களே யென்று சிலர் சொல்வார்கள். ஆனால் சேக்கிழார், ''செய்யுள் நிகழ் சொற்றெளிவும் செவ்விய நூல் பலநோக்கும், மெய்யுணர் வின் பயனிதுவே'' என்று துணிந்து ''மையணியுங் கண்டத்தார் மலரடிக்கே ஆளானார் பொய்யடிமை யில்லாத புலவர்'' என்று பொதுநோக்காகவே குறிப்பிடுகிறார். இறைவனே வழுத்தும் புலவர்களே, வெறும் பாராட்டு மொழியல்லாது, பொய்யடிமை யில்லாத, மெய்யான அடிமை பூண்ட புலமை மிக்க அடியார்களைத் தான் இங்கு பொதுப்படக் கூறப்பட்டது. ஆனால், சிறப்பாக இலக்கியப்பணி யொன்றையே செய்து முத்தியடைந்து நாயனார் பதவியைப் பெற்றவர் காரிநாயனார் என்பவர். இவரும் திருக்கடவூர்வாசி. இவர் செய்த நூல் காரிக்கோவை என்று சொல்வார்கள். உண்மையில் அது ஒரு கோவை என்ற பிரபந்தமா அல்லது பல பாடல்களால் கோக்கப்பட்ட தொகுப்பா என்று தெரியவில்லை. புராணத்தில் சொல்லப்பட்டதைத் தவிர இலக்கியத்தில் நாம் காணவில்லை. ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள் முதலியோர் செய்த நூல்கள் நமக்குக் கிடைக்கின்றன. அதுபோல் காரிக்கோவை கிடைக்கவில்லை. ''சொல் விளங்கிப் பொருள் மறையக், குறையாத தமிழ்க் கோவை தம் பெயராற் குலவும் வகை, முறையாலே தொகுத்தமைத்து மூவேந்தர் பால் பயில்வார்'' என்பது பெரிய புராணப் பாடல். தமிழிலே தம் பெயரால் செய்த ஒரு கோவை என்றும், அதன் பெயர் காரிக்கோவை என்றும் சிலர் பொருள் கொள்வர். வேறு சிலர், பொருள் விளங்காமலிருந்த பழைய தமிழ்ப் பாடல்களைக் கோத்து, அவற்றின் பொருளை மூவேந்தர் களுக்கும் போய் விளக்கிச் சொன்னார் என்று சொல்வார்கள். எப்படியிருந்தாலும் காரிநாயனாரின் சேவை இலக்கியச் சேவை. அவர் மூவேந்தர்களிடமும் சென்று இலக்கியம் விளக்கியதால் கிடைத்த பொருளைக்கொண்டு திருப்பணி செய்த காரணத்தால் உயர்ந்து நாயனார் பதவி பெற்றார்.

குங்குலியக்கலய நாயனார் குடியிருந்ததாகத் திருக்கடவூர் கோயில் வடக்கு வீதியில் ஒரு வீட்டைக் காண்பிக்கிறார்கள்.

சேக்கிழார் அடிச்சுவட்டில்

ஆனூல் மேற்கு வீதியில் பிச்சுப்பிள்ளை மடம் என்று ஒரு மடம் இருக்கிறது. இங்கேதான் குங்குலியக் கலயர், காரிநாயனூர், உய்யவந்த தேவனூர், அபிராமி பட்டர் ஆகியோர் சிலைகள் வைத்து வழிபாடு நடந்துவருகிறது.

திருக்களிற்றுப்படியார் என்ற சைவசித்தாந்த நூலைப்பாடிய உய்யவந்த தேவர் திருக்கடவூரைச் சேர்ந்தவர். கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்து அபிராமியந்தாதி பாடிய அபிராமி பட்டரும் இதே ஊரைச் சேர்ந்தவர். அபிராமி பட்டரின் வரலாறு ஒரு சுவாரஸ்யமான கதை.

அபிராமிபட்டர் ஒரு சித்தர். தஞ்சையிலிருந்த சரபோஜி மன்னன் ஒரு நாள் திருக்கடவூருக்கு வந்தபோது அன்றைய திதியைத் தெரிந்துகொள்ள அபிராமிபட்டரிடம், ''இன்று என்ன திதி?'' என்று கேட்டார். அன்று நிறை அமாவாசை. ஆனால், பட்டர் தம் வாயில் அந்தச் சமயத்தில் தோன்றியதை ''இன்று பூரணைநாள்'' என்று சொல்லிவிட்டார். அரசனோடு வந்தவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். ''நல்ல அமாவாசையாயிருக்கப் பூரணை நாளென்கிறீரே பட்டர்'' என்று அவர்கள் அரசனிடம் சொன்னார்கள். அரசன் உடனே, ''என்ன பட்டரே, இன்று அமாவாசை நாள் என்கிறார்கள். நீர் அதற்கு எதிரான பௌர்ணமி என்கிறீரே?'' என்று கேலி செய்தான். பட்டர் சிறிது சிந்தித்துவிட்டு, ''இன்று பொழுது அஸ்தமிக்கும் சமயத்தில் இங்கு வாருங்கள், பூரணசந்திரனைக் காண்பிக்கிறேன்'' என்று சொல்லியனுப்பினார். இது ஏதோ பைத்தியம் என்று சிலர் சொன்னார்கள். வேறு சிலர் இவர் மகா சக்திவாய்ந்த சித்தர் என்றார்கள்.

பட்டர் தாம் சொல்லியதை நிரூபிக்கத் திட்டமிட்டார். ஓரிடத்தில் மூன்று கால் நட்டு, அதன் முகட்டில் ஓர் உறி கட்டி, அதன் கீழ் அக்கினியை வளர்க்கச்செய்து, அக்கினிக்கு மேல் தொங்கிய உறியில் உட்கார்ந்து, ''உதிக்கின்ற செங்கதிர்'' என்று தொடங்கும் அபிராமி அந்தாதி நூறு பாடல்களைப் பாடி முடிக்கவும், கீழ்வானத்தில் செஞ்சுடர்க் கோளமாய்ப் பூரண நிலவு உதிக்கவும் சரியாயிருந்தது! சரபோஜி மன்னன் இதைக் கண்டு திகைப்புற்றான். ஆனால் மறுகணம் யாவும் மறைந்து விட்டது. பட்டரின் சித்து விளையாட்டு இது என்று கர்ண பரம்பரையாக இக்கதை வழங்கி வருகிறது. பட்டர் திருக்கடவூர் நாயகி அபிராமியம்மையிடம் நிறைந்த பக்தி கொண்டவர். அவருடைய சந்ததியார் பாரதி என்ற குடும்பப் பெயருடன் இன்றும் வாழ்கின்றனர். அபிராமியம்மைக்குத் திருக்கடவூர் பிராகாரத்தில் ஓர் அழகிய தனிக்கோயிலுண்டு.

கோவலன் சரித்திரம் என்று வழங்கும் பழைய நாடகத்தைப் பார்த்தவர்களுக்கு ஒரு பாட்டு ஞாபகத்திலிருக்குமென்று நினைக்கிறேன். மாதவியிடம் மயங்கிய கோவலன் அவள் வசித்த திருக்கடையூர் வீட்டைத் தேடிப் போனபோது பாடியது: ''திருக்கடையூர் தனிலே, சித்ரத் தேரோடும் வீதியிலே, இருக்கிறேன் என்று இயம்பி வந்தாளென்னை, உருக்கிய மாதவி உற்றவிடம் தன்னை, எங்கு கண்டு தேடுவேன், எவ்விடமென் றோடுவேன்''. இந்த விதமாக அந்தக் காலத்தில் கேட்ட பாட்டு நான் திருக்கடவூரில் நின்றபோது ஞாபகத்துக்குவந்தது. இதை வைத்துக்கொண்டு, ஒருவேளை அந்த மாதவியின் வீடு இன்னும் திருக்கடவூரிலே இருக்கலாமோ என்று ஒரு கிழவனரிடம் கேட்டுப் பார்த்தேன்; அந்தக் கிழவர் சிறிதும் தயங்காமல் ''மேற்கு வீதியிலே ஒரு பழைய வீடு இருக்கிறது. அங்கேதான் மாதவி குடியிருந்தாள் என்று பலரும் சொல்வார்கள். காண்பிக்கிறேன்.'' என்று சொல்லி என்னை அழைத்துக்கொண்டு போய் ஒரு பாழடைந்த வீட்டைச் சுட்டிக் காண்பித்தார். மாதவி திருக்கடவூரில் வாழ்ந்த தாசி என்பதுதான் பலருடைய நம்பிக்கை.

16. ஆயிரத்தில் ஒருவர்

திருக்கடவூரில் மார்க்கண்டர்க்கருளிய காலசம்ஹார மூர்த்தியை வணங்கிக்கொண்டு, அபிராமியம்மையின் தரிசனத்தையும் பெற்றுக்கொண்டு, குங்கிலியக்கலயர், காரி நாயனார், உய்யவந்த தேவனார், அபிராமிபட்டர் ஆகியோரிடமும் விடை பெற்றுக்கொண்டு, மாயவரத்துக்குத் திரும்பிவரும் வழியில் ஆக்கூர் என்ற தலத்தையடைந்தோம்.

நாங்கள் போன சமயம் மாலை நேரம். சிறிய கோயில். மக்கள் நடமாட்டத்தைக் காணவில்லை. இதுதான் நாங்கள் தேடிவந்த கோயிலோ என்று சந்தேகத்துடன் பார்த்தபோது, உள்ளேயிருந்து வயதான ஒருவர் அங்கவஸ்திரத்தையெடுத்து மார்பளவில் கட்டிக் கொண்டு, வாயில் தேவாரமொன்றை முணுமுணுத்துக்கொண்டு வெளியே புறப்பட்டு வந்தார். அவரை நிறுத்தி நாங்கள் ''இது தான் ஆக்கூர் ஈஸ்வரன் கோயிலா?'' என்று கேட்டோம். தென்னாட்டில் யாத்திரை செய்யும்போது கண்ணுக்கெட்டிய இடமெல்லாம் கோயில்களைக் காணலாம். ராஜகோபுரம் அல்லது விமானம் பெரிதாயிருந்தால் அதன் அமைப்பிலிருந்து சிவன் கோயிலா அல்லது பெருமாள் கோயிலா என்று தெரிந்துகொள்ளலாம். வெளிப்புறத்தில் இத்தகைய தோற்றம் தெரியாவிட்டால் உள்ளே சென்றுதான் பார்த்தறிய வேண்டும். ஊரவர்களிடம் கேட்பதானால் சிவன் கோயிலை ஈஸ்வரன் கோயிலென்றும், வைஷ்ணவக் கோயிலை பெருமாள் கோயிலென்றும் குறிப்பிட்டுச் சொன்னால்தான் தெரியும்.

வெளியே வந்தவர் முகம் மலர்ந்தது. தன்னந்தனியாகத் தரிசனம் செய்துவிட்டு வந்த அவர் தமது ஊர்க் கோயிலில் வழிபட வெளியூரிலிருந்தும் மக்கள் வருகிறார்களேயென்று பரம சந்தோஷப்பட்டார். வாய்விட்டும் சொன்னார். ''இந்தத் தலத்து சுவாமிக்கு ஆயிரத்திலொருவர் என்ற பெயர் இருக்கிறது. அதற்கேற்றாற்போல, ஆயிரத்திலொருவர்தான் இங்கே வழிபடவும் வருகிறார்கள். மிக ஏழை இந்த சுவாமி. நீங்கள் இவ்வளவு தூரம்

இவரைத் தேடி வந்தீர்களே. நீங்கள் கேட்ட ஆக்கூர் 'தான்தோன்றி ஈஸ்வரன்' கோயில் இதுதான்'' என்றார். நாங்கள் ஆக்கூரில் வாழ்ந்த சிறப்புலி நாயனாரைத் தேடி வந்தோம் என்று சொன்னதும் அவர், ''சிறப்புலி நாயனார் தம்மிடம் வரும் அடியார்களுக்குச் சோறு போட்டே இறைவனடி சேர்ந்து நாயனாரானார். ஆனால், இங்குள்ள சுவாமிக்கு அந்த வசதி கிடைக்கவில்லை'' என்று வருந்தினார்.

இந்த ஆக்கூருக்கு யாத்திரையில் வந்த திருஞானசம்பந்தர் ஊரையும் மக்களையும் பார்த்து அழகாக வருணித்தார். ''வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்கும் தாளாளர் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே'', என்றும், ''இன்மையால் இரந்து சென்றோர்க்கு இல்லையென்னுதே ஈயும் தன்மையார்'' இந்த ஊர் மக்கள், என்றும் சிறப்பாக வருணித்திருக்கிறார். கொடுத்துப் பெருமை பெற்றவர்கள் இந்த ஊர் மக்கள். இவர்களில் ஒருவர்தான் சிறப்புலி நாயனார். அறுபத்து மூவரில் ஒருவராகச் சுந்தரமூர்த்தி நாயனாரால் திருத்தொண்டத் தொகையில், ''சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்'' என்று பாடப்பெற்ற இந்த அடியார், மற்றைய வன்தொண்டர்களைப் போல நடந்துகொள்ளாமல், அடியார்களுக்கும் மற்றவர்களுக்கும் சோறுபோட்டே பரகதியடைந்தவர். சேக்கிழார் தமது பெரிய புராணத்தில் நாலே நாலு பாட்டில் இவரைப்பற்றிச் சொல்லி, ''வள்ளல் தம் செயல் வாய்ப்ப ஈசர்தாள் நிழல் தங்கினாரே'' என்று முடித்துவிட்டார்.

எங்களைச் சந்தித்த பக்தர் அழைத்துச்சென்று கோயில் அர்ச்சகருக்கு அறிமுகப்படுத்தி, பல அரிய தகவல்களையெல்லாம் எடுத்துச்சொன்னார். இங்கிருக்கும் சுவாமி பெயர் தான்தோன்றியப்பர். அதாவது, தானாகவே எழுந்தருளிய சுயம்பு லிங்கம். ''ஆக்கூரிற் தான்தோன்றியப்பனாரே'' என்று திருநாவுக்கரசு நாயனார் பாடியிருக்கிறார். எங்களைச் சந்தித்த பக்தர் இதற்கு ஒரு கதை சொன்னார். இந்த ஊரை ஆண்ட அரசன் ஒருவன் ஆயிரம் பிராமணர்களுக்கு சமாராதனை செய்தான். யாவரும் உட்கார்ந்த பின் எண்ணிப் பார்க்கும்போது ஆயிரம் இலையில் ஓர் இலை ஆளில்லாமலிருந்தது. அப்போது புதிதாக ஒருவர் வந்து உட்கார்ந்தார். அரசனுக்கு இவரைத் தெரியவில்லை. உள்ளூர் ஆசாமியாகவும் காணப்படவில்லை. அரசன் அவரைப் பார்த்து, ''நீர் எந்த ஊர் சுவாமி?'' என்று கேட்டான். வந்தவர் அதற்குப் பதிலாக, ''கஸ்யபுரம்'' என்றார். கஸ்ய என்றால் வடமொழியில் 'யாருடைய' என்று பொருள். புதிதாக வந்தவர், ''யாருடைய

ஊரைக் கேட்டாய்?'' என்ற பொருள்படச் சொல்லிவிட்டு எழுந்துபோய் ஒரு காட்டினுள் மறைந்துவிட்டார். அரசனும் மற்றவர்களும் உடனே அங்கு போய்ப் பார்த்தபோது ஒரு புற்றுக் காணப்பட்டது. அந்தப் புற்றண்டை பசுக்கள் போனால் பால் தானாகவே சொரிந்தது. அரசன் அந்தப் புற்றை வெட்டச் சொல்லிப் பார்த்தபோது ஒரு சிவலிங்கம் காணப்பட்டது. வெட்டிய காயம் பட்டு லிங்கத்தின்மீது இரத்தம் சிந்தியது. அந்தப் புற்றில் தோன்றியவர்தான் இங்கே எழுந்தருளியிருக்கும் தான்தோன்றியப்பர். லிங்கத்தின்மீது இப்போழுதும் ஒரு கறை யிருக்கிறது. ஆயிரத்திலொருவராக வந்து சமாராதனையில் கலந்து கொண்ட சுவாமியாகையால், ஆயிரத்திலொருவர் என்ற பெயரில் அழகான உற்சவ விக்கிரகம் ஒன்றிருக்கிறது.

சாய்க்காடு போன்று இங்கு ஆக்கூரிலுள்ள கோயிலும் மாடக் கோயில். இங்குள்ள அம்பாளுக்கு கட்கநேத்ரி என்று பெயர். அதாவது வாள்தடங்கண்ணுள் என்பது தமிழ்ப் பெயர். தமிழ் நாட்டுக் கோயில்களிலுள்ள அம்மன் திருவுருவங்களுக்கெல்லாம் அழகொழுகும் பெயர்களே வைத்திருப்பதைக் காணலாம். தமிழில் சொல்லும்போதுதான் அந்த அழகு கொழிக்கிறது. யாழைப் பழித்த மொழியாள், அறம்வளர்த்த நாயகி, நன்முலை நாயகி, இப்படி.

ஆக்கூரிற் சந்தித்த சிறப்புலி நாயனாரிடம் விடைபெற்றுக் கொண்டு, எங்களுக்கு உபகாரம் செய்த அந்தப் பெயர் சொல்லாத பக்தருக்கும் நன்றி சொல்லிவிட்டு, அங்கிருந்து புறப் பட்டு நாங்கள் மாயூரம் வந்து சேர்ந்தபோது எங்கள் வக்கீல் நண்பர் எங்களுக்காகக் காத்திருந்தார். ''மாயவரத்திலுள்ள சில நண்பர்கள் சேர்ந்து சிந்தனையாளர் மன்றம் ஒன்று வைத்திருக் கிறோம். இன்று மாலை கூடும் கூட்டத்தில் நீங்கள் பேசவேண்டும்'' என்று வற்புறுத்தினார். நண்பரின் வேண்டுகோளுக்காக அவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டோம். வக்கீல்கள், வைத்தியர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், எழுத்தாளர்கள், தொழி லதிபர்கள், வியாபாரிகள் என்று பலதரப்பட்ட துறையைச் சேர்ந்தவர்கள் கொண்ட அந்த மன்றத்தில் சிந்திக்கத்தூண்டும் பேச்சுக்கள் இடம் பெற்றன. ஆனால், அன்று முழுவதும் ஓய்வில்லாமல் யாத்திரை செய்து திரும்பிவந்த எங்களுக்குப் புதிய சிந்தனையொன்றும் தோன்றவில்லை. ஆயினும் அவர்கள் மத்தியில் கலந்துகொண்டது ஒரு புதிய அனுபவமாயிருந்தது.

17. கூந்தலழகி

சேக்கிழார் பாடிய் அறுபத்து மூவரில் நேசநாயனூர் என்பவர் ஒருவர். சாலியர் வகுப்பைச்சேர்ந்த இவர் செய்த தொண்டு, தமது குலத்தொழிலாகிய ஆடை நெசவு செய்வது தான். சிவனடியார்களுக்குத் தேவையான உடை, கீழ், கோவணம் என்றவற்றை அவர் தவறுது உபகரித்ததற்காக இறைவனருள் பெற்று நாயனாரானூர் என்பது புராணம். இதற்கு மேல் வேறு செய்தியொன்றும் கிடையாது. இவர் காம்பீலி என்ற இடத்தில் வாழ்ந்தார் என்று பெரிய புராணம் சொல்கிறது. ஆந்திரப் பிரதேசத்தில் பெல்லாரி என்ற பகுதியில் காம்பீலி என்ற ஓர் இடமுண்டு. ஆனல், சேக்கிழார் நமது தமிழ்நாட்டுக்குள்ளேயே அறுபத்துமூவரையும் அடக்கியிருப்பதால் எந்த இடத்தைக் குறிப் பிட்டார் என்று நிச்சயமாக எவராலும் சொல்ல முடியவில்லை. பெரியபுராணத்துக்கு நீண்டதோர் உரை செய்து பல்லாண்டுகள் ஆராய்ச்சி நடத்திய கோயம்புத்தூர் சுப்பிரமணிய முதலியார் மாயவரத்தைச்சேர்ந்த கொரநாட்டை குறிப்பிடுகிறார். எனவே, மாயவரத்தில் தங்கியிருக்கும்போது நேசநாயனரையும் பார்த்து விடவேண்டுமென்று விரும்பினேம். எமது வக்கீல் நண்பரின் துணையோடு பட்டு வியாபாரி ஒருவரைச் சந்தித்து நேச நாயனரைப் பற்றிக் கேட்டோம். அவர் தமக்கொன்றும் தெரியா தென்று சொல்லி, கொர நாட்டிலே தமது சொந்தக்காரர் ஒரு பெரியவர் இருக்கிறார். அவரைக் கேட்டுப்பாருங்கள் என்று அங்கே அழைத்துச்சென்று அறிமுகப்படுத்தினர். எண்பத்தைந்து வயது நிறைந்த கனகசபைச் செட்டியார் என்ற அந்தப் பெரியவர் வெளியே வந்து எனது யாத்திரையைப்பற்றிக் கேட்டார். பின்னர் விளக்கினர்: ''ஆமாம், இங்கேயுள்ள கொர நாட்டுச் சிவன் கோயில் நெசவாளர்களாகிய எம்மினத்தவர்களால்தான் நடத்தப் படுகிறது. சிவநேசநாயனர் எங்களவர். அவருக்குத் தனியாகச் சிலை வைத்து எங்கள் கோயிலில் வழிபாடு செய்து வருகிறோம். பல நூற்றாண்டுக்கு முன்னே எங்கள் மூதாதையர் காம்பீலியிலிருந்து வந்தவர்கள் தங்கள் கையோடு விநாயகர், தண்டபாணி விக்கிரங் களையும் கொண்டுவந்து இங்கே ஸ்தாபித்தார்கள். இப்போது

பங்குனி ரோகிணி நாளில் நேசநாயனுருக்குக் குருபூஜை செய்து வருகிறோம். நேசநாயனுரும் ஒரு காலத்தில் இங்குதான் வந்து குடியேறியிருக்கலாம்'' என்றூர் அந்தப் பெரியவர். அறுபத்து மூவர் வரலாற்றைத்தேடி யாத்திரை செய்யும் என்னைப் பார்த்து, ''உங்கள் தகப்பனுர் செய்த புண்ணியம். நல்ல முயற்சியில் ஈடுபட்டிருக்கிறீர்கள். உங்கள் யாத்திரை நல்ல பலனைத் தரும்'' என்று வாய் நிறைய அந்தப் பெரியவர் வாழ்த்தியது இன்னும் என் காதுகளில் இனித்துக் கொண்டிருக்கிறது.

கொரநாட்டுச் சிவன் கோயிலைப் பார்த்தோம். அங்குள்ள நேசநாயனுரையும் தரிசித்துப் படம் பிடித்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டுப் பக்கத்திலுள்ள திருநீடுருக்குச் சென்றோம். அறுபத்து மூன்று நாயனுர்களில் இன்னுருவராகிய முனையடுவார் என்ற நாயனுர் இந்த ஊரில்தான் வாழ்ந்தவர். இந்த நாயனுரும் நேசநாயனுர் சிறப்புலியார் போலத் தன் தொழிலால் மாத்திரம் உயர்ந்தவர். பெரிய தியாகத்தையோ அல்லது அற்புதங்களையோ செய்தவரல்ல. இவருடைய தொழில், கூலிக்குப் போர்முனை சென்று போராடுவது. அவ்வளவுதான். எந்த அரசன், அல்லது சிற்றரசன், தன் போருக்கு ஆள்தேவையென்று கேட்கிறுனோ அதற்கெனக் கூலிபேசிப் போய்ப் போரிடுவதுதான் இவர் தொழில். ஆனல் இவர் திறமையுள்ள போர்வீரனுகையால் பெருமளவு பொருள்தேடி எல்லாவற்றையும் சிவனது சேவைக்குச் செலவழித்தார். இதில்தான் இவரது மாண்பு தெரிகிறது. அந்த வகையில் புண்ணியம் தேடி அறுபத்து மூவரில் ஒருவராக மதிக்கப் பட்டவரை, சுந்தரமூர்த்தி தம் திருத்தொண்டத் தொகையில், ''அறைக் கொண்டவேல் நம்பி முனையடுவார்க் கடியேன்'' என்று பெருமைப்படுத்தினர். சேக்கிழார் அவரைப் பின்பற்றி, ''சத்துருக்களுடைய போர்முனையிலே தோற்றவர்கள் தம்மிடத் தில் வந்து கூலி பேசினல், அவர்களுக்காகப் போய்ப் போர் செய்து வென்று, பொருள் சம்பாதித்து, சிவனடியார்களுக்குக் கொடுத்துத் தொண்டு செய்து, சிவபதம் பெற்றூர்'' என்று சுருக்கமாக ஆறு பாட்டுக்களில் சொல்லி முடித்துவிட்டார்.

நீடூர் என்பது பழமையான சிவஸ்தலம். தேவார நாயன்மார் களில் சுந்தரர் மாத்திரம் ஒரு பதிகம் பாடியிருக்கிறூர். மற்றவர் கள் ஏன் பாடவில்லையென்று தெரியவில்லை. சுந்தரரும் முதலில் இங்குவராமல் சென்றவர் திடீரென நினைத்துக்கொண்டுதான் வந்து ஒரு பதிகம் பாடினுர் என்று சேக்கிழார் சொல்கிறூர். இக்கோயிலில் முனையடுவார் நாயனுருக்குத் தனியாக உட்பிரா காரத்தில் ஒரு சந்நிதியுண்டு. முனையடுவார் குருபூசைமடம் ஒன்று இருக்கிறது.

பல்லவர் காலத்திலே சோழநாட்டிலிருந்து பலர் போர்த் தொழிலை ஒரு முறையான தொழிலாகக் கொண்டு வாழ்ந்தனர் என்பது பெரிய புராணக்கதைகள் பலவற்றில் நாம் காணக்கிடக் கிறது. நீடூர் வாசியாகிய முனையடுவார் இந்தத் தொழில் செய்தார். செங்காட்டங் குடிப் பரஞ்சோதியார் சரித்திரத்திலிடம் பெற்ற நரசிங்க பல்லவனின் சேனைத்தளபதியாயிருந்தார். (இவர் கதையைச் செங்காட்டங்குடிக்குப் போகும்போது நாம் தெரிந்து கொள்வோம்.) மாயவரத்துக்கு வடக்கே ஆனதாண்டவபுரத்தில் வசித்த மானக்கஞ்சாறர் என்பவரும், நாயனர் பதவிக்கு உயர்ந்தவர், போர்த்தொழிலில் ஈடுபட்டுச் சேனைபதி உத்தியோகம் பார்த்தவர் என்றே அறிகிறோம். எனவே, நீடூரி லிருந்து ஆனதாண்டவபுரத்துக்கு நாங்கள் பயணமானோம்.

மானக்கஞ்சாற நாயனர் ஊர் கஞ்சாறு என்றுதான் காணப் படுகிறது. நல்ல வேளையாய் கோயம்புத்தூர் சி. கே. சுப்பிரமணிய முதலியார் தமது பெரிய புராண ஆராய்ச்சியில் இந்த ஊர் ஆனதாண்டவபுரம் என்பதைத் தெளிவாக நிரூபித்துவிட்டதால் துணிவுடன் அங்கு போனோம். அங்கேயுள்ள சிவன் கோயில் அர்ச்சகரைக் கண்டு கேட்டதற்கு, ''ஆமாம், திருக்கஞ்சாறு என்று இந்த ஊருக்குப் பெயர். அதுதான் கோயில் சம்பந்தமாக வந்த பெயர். ஆனால் இப்போது ஆனைதாண்டபுரம், ஆனைதாண்டா புரம், ஆனந்ததாண்டவபுரம் என்று பலவிதமாகச் சொல்கிறார் கள். உண்மையில் இந்தக் கோயில் சுவாமி பெயர் பஞ்சவடீஸ்வரர் என்றிருப்பதால் புராணவரலாற்றின்படி கஞ்சாறு என்பதுதான் சரியான பெயர்'' என்று விளக்கினர்.

இந்தக் கஞ்சாறில் வாழ்ந்த மானக்கஞ்சாற நாயனர் கதை தமிழ்நாட்டில் ஒரு காலத்தில் சஞ்சாரம் செய்த சில கடும் தபசிகளை ஞாபகமூட்டுகிறது. பல்லவர் காலத்திலே தமிழ் நாட்டில் காபாலிகர், பாசுபதர், மாவிரதியார், காலாமுகர், என்ற பெயர் களைக் கொண்ட சில சந்நியாச வர்க்கத்தினர் ஊரூராகத்திரிந்து, பிட்சை வாங்கி உண்டு தத்தமக்கென ஒருவித கொள்கையைக் கடைப்பிடித்தனர் என்று தெரிகிறது. காஞ்சீபுரத்தில் ஒரு காலத்தில் பாசுபதரும் காபாலிகரும் செல்வாக்குள்ளவராக இருந்தனர். இவர்களில் மாவிரதியார் என்பவர்கள் மனித மயிரையே மகுடமாகவும், அதனையே திரித்து ஐந்து புரியாக்கிப் பஞ்சவடம் என்ற யக்ஞோபவீதமாகவும் (பூணூலாகவும்) தரித்துக் கொண்டு மனம்போன போக்கில் திரிந்து பிட்சை வாங்கியுண்டு ஊரூராக நடமாடினர். இத்தகைய சந்நியாசிகளுக்குப் பொது மக்களும் வணக்கம் செலுத்தி உபசரித்தனர் என்பது சரித்திரங்

களால் அறியப்படும். இந்தவகை மாவிரதியார் ஒருவர் சம்பந்தமான கதைதான் மானக்கஞ்சாற நாயனார் வரலாறும்.

மானக்கஞ்சாறருக்கு ஓர் அழகிய புதல்வி இருந்தாள். அவளுக்கு மணம் பேசி வந்தவர்களில் ஒருவர் கலிக்காமர் என்று புராணம் கூறுகிறது. இவர் பெருமங்கலத்தில் வாழ்ந்த ஏயர்கோன் கலிக்காமநாயனார் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால், கலிக்காம நாயனார் புராணத்தில் சேக்கிழார் இதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. இவர் வேறொரு கலிக்காமர் என்றுதான் கொள்ளவேண்டும். கல்யாண நிச்சயம் செய்து திருமண விழாவுக்கு எல்லா ஏற்பாடுகளும் தடபுடலாக நடந்து கொண்டிருக்கின்றன. அந்தச் சமயம் பார்த்து ஒரு மாவிரதியார் உள்ளே நுழைகிறார். இறைவனிடத்தில் பக்திகொண்ட மானக்கஞ்சாறர் எந்தக் கொள்கையுடைய சந்நியாசிகள் வந்தாலும் தகுந்தபடி உபசரிப்பதில் தவறமாட்டார். மாவிரதியார் உள்ளே வந்ததும், ''இந்த வீட்டில் ஏதோ விசேஷம் நடக்கிறது போலும்?'' என்று கேட்டார். மானக்கஞ்சாறர், தமது அருமைப் புதல்விக்குத் திருமணம் நடக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்று சொன்னதும் மாவிரதியார், ''ஆகா! நல்ல சமயத்தில் வந்தேன். மங்களமுண்டாகட்டும்'' என்று வாழ்த்தினார். இந்த வாழ்த்து மானக்கஞ்சாறருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்ததுடன், தனது புதல்வியாகிய மணப்பெண்ணே நேரில் வந்து மாவிரதியாரின் ஆசீர்வாதத்தைப் பெறவேண்டுமென்ற ஆசையால், அந்த அழகியை அழைத்துச் சந்நியாசியை வணங்கச் சொன்னார். பெரியவர் அடிகளில் அந்தப் பெண் வீழுந்து நமஸ்கரித்து எழுந்தாள். பெண்ணைப் பார்த்த மாவிரதியாருக்கு அவளது திரண்டு வளர்ந்த நெடுங் கூந்தல்மேல்தான் கண்போனது! ''கஞ்சாறரே, உமது பக்தியை வியந்தேன். இந்த மங்கையின் கூந்தல் எமது உபவீதமாகிய பஞ்சவடிக்கு உதவும்'' என்றார். அவ்வளவுதான், சிவனடியார்களின் எவ்வித இஷ்டத்தையும் ஆலோசிக்காமல் பூர்த்தி செய்வதுதான் பக்தர்களின் கொள்கையாகையால், மானக்கஞ்சாறர், சேஞ்திபதித் தொழில் புரிபவர், சட்டென்று தமது உடைவாளை உருவினார். மணப்பெண் என்றும் பாராமல் அவளது நீண்ட கூந்தலை அடியோடு அரிந்து எதிரே நின்ற அடியாரிடம் கொடுத்தார்! அதை வாங்கிய மாவிரதியார் திடீரென மறைந்தார். மானக்கஞ்சாறருக்கு ஒரு தோற்றம் தெரிந்தது. இறைவனே நேரில் காட்சி தந்தார். இந்தக் காட்சி மறைந்த சற்று நேரத்தில் மாப்பிள்ளை கலிக்காமனார் மேளதாளத்தோடு தம் சுற்றத்தவர் சூழ மணப்பந்தலில் நுழைந்தார். அவர் கண்டகாட்சி முண்டிதத்த தலையுடன் அவர் மணமுடிக்க வந்த

பேரழகிநிற்பதைத்தான். என்ன அபசகுனம் என்று அவர் ஒரு கணம்தான் எண்ணினர். மறுகணம் அந்த அழகியின் கூந்தல் மாய மாய் மீண்டும் வளர்ந்து அவள் திருமுடியைச் சிறப்புச் செய்தது. எல்லாம் அவன் திருவருள் என்று சகலரும் திருமணவைபவத்தில் கலந்து கொண்டாடினர் என்பது புராண வரலாறு. ''ஒரு மகள் கூந்தல் தன்னை வதுவை நாள் ஒருவர்க்கீந்த பெருமையார்'' என்று சேக்கிழார் வருணிக்கும் மானக்கஞ்சாறர், நாயனர் பதவியைப் பெற்றார்.

ஆனதாண்டவபுரத்தில் கோயில் குருக்களிடம் பேசிக் கொண் டிருந்த போது அவர் இந்தக் கதையில் ஒரு திருத்தம் செய்தார். ''மாவிரதியார் வந்தார்; பெண்ணின் கூந்தல் வேணும் என்று சொல்லி அதை வாங்கினர். சாப்பிட்டுவிட்டுப் போகும்படி கஞ்சாறர் கேட்டுக்கொண்டபோது வருகிறேன் என்று சொல்லிப் போனவர் திரும்பி வரவில்லை. பின்னர் அவர் மயிரிழையிலைழைக்கப் பட்ட பஞ்சவடி என்ற பூணூலையும் மயிர் முடியையும் தரித்துக் கொண்டு வந்து காட்சி கொடுத்து மறைந்தார். பழையபடி மண்ப் பெண்ணின் முடி வளர்ந்துவிட்டது.''

இங்குள்ள கோயிலில் சுவாமியின் பெயர் பஞ்சவடீஸ்வரர் என்பதால் மானக்கஞ்சாறர் வரலாறு இங்குதான் நடந்ததாக நம்பப்படுகிறது. இதற்குப் பொருத்தமாகச் சில வருடங்களின் முன்னர் இந்த ஊரின் பக்கத்திலுள்ள நிலத்தில் புதையுண்டிருந்த சில செப்பு விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றுள் விநாயகர், சோமாஸ்கந்தர், உமையம்மை, பிச்சாடனர், முதலிய உருவங்களோடு சடாநாதர் என்னும் மாவிரதியார் உருவமும், மானக்கஞ்சாறர் உருவமுமிருந்தன. இவற்றால் இந்த ஸ்தலமே மானக்கஞ்சாறு என்ற பெயரில் வழங்கியதெனத் தீர்மான மாயிற்று. இந்த விக்கிரகங்கள் இப்போதும் வைத்துப் பூசிக்கப் படுகின்றன. ஆனால் ஆனதாண்டவபுரம் நமது தேவார நாயன்மார் மூவராலும் பாடப்பெறவில்லை. திருநாவுக்கரசர் பாடிய க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகம் அக்காலத்தில் வழி பாட்டுக்குரியவையாயிருந்த பல ஸ்தலங்களை அட்டவணையாகத் தருகிறது. அதில் ''கஞ்சனூர் கஞ்சாறு பஞ்சாக்கையும், கைலாய நாதனையே காணலாமே'' என்று காணப்படுவதால் கஞ்சாறு என்று குறிப்பிட்டது இந்த ஆனதாண்டவபுரத்தையாயிருக்கலாம் என்று சிலர் நம்புகின்றனர். தேவார நாயன்மார், சிறுத் தொண்டர் போன்று மானக்கஞ்சாறரும் ஒரு சரித்திர நாயகர் என்று நம்ப இடமுண்டு. தொண்டை நாட்டில் விருத்தாசலத் துக்குத் தெற்கிலுள்ள ஸ்ரீமுஷ்ணம் என்ற வைணவத்தலத்தில் நித்தியேஸ்வரர் கோயில் என்ற சிவன்கோயில் இருக்கிறது. அதன்

கோபுரத்தில் மானக்கஞ்சாற நாயனாருக்கு ஒரு சிலையிருக்கிறது. இதனடியிலுள்ள கல்வெட்டில் இந்த நாயனார் ''திருப்பதியம் பாடி இத்தலத்திலே இறைவனடி சேர்ந்தார்'' என்ற பொருளுள்ள வாசகம் காணப்படுகிறது. சுந்தரமூர்த்தி நாயனார் தமது திருத் தொண்டத் தொகையில், ''மலிமலிந்த தோள்வள்ளன் மானக் கஞ்சாறன்'' என்று குறிப்பிடுகிறார். ஆகையால் இவருக்கு முன் வந்த சம்பந்தர் நாவுக்கரசர் தேவாரங்களே மானக்கஞ்சாறர் பாராயணம் செய்யும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தாரோ என்னவோ. ஆனதாண்டவபுரத்தில் முன்பு தைமாதத்தில் வழக்க மாக உற்சவம் நடந்து வந்ததென்றும், இப்போது கைவிட்டு விட்டார்கள் என்றும் நாங்கள் போன சமயத்தில் குருக்கள் தெரிவித்தார். அவரிடம் விடைபெற்றுக்கொண்டு நாங்கள் திரும்பினோம். பழையபடி மாயவரத்துக்கு வந்து அன்றிரவு தங்கியபின் என் கூட வந்த நண்பர்களுக்கு வேறொரு முக்கியமான அலுவல் காத்திருந்தது. ஆகையால் இரண்டொருநாள் அவர்களை விட்டுப்பிரிந்து தனியே செல்ல வேண்டியதாயிற்று. எனவே அடுத்த யாத்திரைத்திட்டத்தை வகுத்தோம். மாயவரத்தி லிருந்து நான் நேரே திருவாரூருக்குச் சென்று சுந்தரமூர்த்தி நாயனாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அவர் நடவடிக்கைகளைப் பார்த்துவிட்டு, சீர்காழிக்கு வந்து சிவஞானக்கன்று திருஞான சம்பந்தர் கோஷ்டியில் கலந்து அவருடன் யாத்திரை செய்வ தென்றும், நண்பர்கள் அங்கே சீர்காழியில் வந்து சேர்ந்து கொள்வதென்றும் முடிவு செய்தோம். ராதாகிருஷ்ணன் அன்று அதிகாலையிலேயே குளித்துவிட்டு விபூதிப்பூச்சுடன் சிவப்பழமாகக் காட்சி தந்தார். திருவாரூர் என்றவுடன் அவருக்கு ஒரே உற்சாகம். திருவாரூரில் சுந்தரரைச் சேரமான் பெருமாள் சந்தித்த கதை அவருக்கு ஞாபகம் வந்துவிட்டது. ராதாகிருஷ்ண னும் கேரளக்காரர்!

18. கற்பகத்தின் பூங்கொம்பு

திருவாரூர் என்றவுடன் நம் மனக்கண் முன் என்னென்ன காட்சிகளெல்லாம் தோன்றுகின்றன. வழிவழியாகச் சோழ மன்னர்கள் ஆட்சி செலுத்திய ராஜதானி. ''சோழவளநாடு சோறுடைத்து என்ற முதுமொழிக்கிணங்கத் தமிழ்நாட்டுக்கு நடுநாயகமாக விளங்கும் நெற்களஞ்சியம். இசையும் நாட்டியமும் வளர்த்த கலை நகரம். சங்கீத மும்மூர்த்திகளைத் தோற்றுவித்த புனித நகரம். பிறக்க முத்தி தரும் பெரும்பதி. திருத்தொண்டத் தொகை தோன்றிய புண்ணிய ஸ்தலம். சேக்கிழார் பாடிச் சிறப்புச் செய்த திருநகர்.

சென்னையிலுள்ள நண்பர், திருவாரூர்ப் பெருமகன், தியாகராஜ முதலியாரிடம் ஏற்கெனவே தொடர்பு கொண்டிருந்த படியால் அவர் திருவாரூரில் தமது சகோதரர் தக்ஷிணமூர்த்திக்கு எனது வரவை அறிவித்திருந்தார். நான் அங்கு போய்ச் சேர்ந்ததும் அவர்கள் உபசாரம் என்னைத் திணறடித்துவிட்டது. திருவாரூர் கோயிலின் பரம்பரைத் தர்மகர்த்தாக்களாகிய இவர்கள் பண்பாட்டிலும் பரம்பரையாகவே ஊறியவர்கள். சிவநெறியில் நின்று வள்ளன்மை பெருக்கும் மாண்பினர். திருவாரூர்ச் சிறப்பைச் சொன்ன சேக்கிழார் அங்கு வாழ்ந்த குடிகளைப்பற்றி,

> அரசுகொள் கடன்களாற்றி மிகுதிகொண் டறங்கள் பேணி
> பரவருங் கடவுட் போற்றிக் குரவரும் விருந்தும் பண்பும்
> விரவிய கிளையுந் தாங்கி விளங்கிய குடிகள்

என்று வருணிக்கிறார். அந்தப் பண்பு சேக்கிழார் காலத்துக்குப் பின் எண்ணூறு ஆண்டுகளுக்கு மேலாகியும் வடபாதிமங்கலக் குடியில் நிலைத்துநிற்பதைக் காணப் பெருமகிழ்ச்சி தருகிறது.

நண்பர் தக்ஷிணமூர்த்தி எனது யாத்திரைத் திட்டத்தையும் நோக்கத்தையும் கேட்டறிந்தவுடன் இரத்தின தேசிகர் என்ற தமிழ் வித்துவான் ஒருவரை வரவழைத்து அறிமுகப்படுத்திவிட்டு, கோயிலிலுள்ள சில குருக்கள்மாருக்கும் எனது வரவைப்பற்றிய

தகவலைச் சொல்லியனுப்பினர். இரத்தின தேசிகர் ஒரு சைவ இலக்கியக் களஞ்சியம். ஒரு நாள் முழுவதும் அவர் என்னுடனே கூட இருந்து திருவாரூரையும் பக்கத்திலுள்ள மற்றும் சில தலங்களையும் பார்த்துத் தகவல் சேகரிக்க உதவியதை மறக்க முடியாது.

''திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்'' என்று சுந்தரமூர்த்தி நாயனார் பாடினார். தமிழ் நாட்டிலுள்ள கோயில்களில் இங்குள்ள கோயிலைப்போல் அளவாலும் சரித்திரத்தாலும் ஒப்பு நோக்கக்கூடிய கோயில் வேறெதுவுமில்லை என்று சொல்லலாம். சிதம்பரம் கோயில் நடராஜப் பெருமானின் சிறப்பைக் கொண்டது. ஆனால் திருவாரூர்க் கோயில் தியாகராஜப் பெருமான் சிறப்புடன் மற்றெத்தனையோ சிறப்புக்களையும் கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டுச் சரித்திரமே இந்தக் கோயிலில் எழுதப்பட்டிருக்கிறது. அத்தனை சிற்பச் சிறப்புக்கள்; கல்வெட்டுச் சாசனங்கள்; சரித்திரச் சின்னங்கள். ஒருகாலத்தில் சோழ மன்னரின் ராஜதானியாயிருந்த இந்த நகரம் அவர்கள் பெருமையையெல்லாம் கதை கதையாக எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறது. சோழருக்குப் பின் வந்தவர்களும் கோயிலுக்குச்செய்த திருப்பணிகள் மூலம் தமது கால வரலாற்றைப் பொறித்து வைத்துச் சென்றனர்.

* * *

சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூருக்கு வருகிறார் என்ற செய்தியை அந்த ஊர் மக்கள் ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்ததால் வீதிகளெல்லாம் அலங்கரிக்கப்பட்டன. மாளிகைகளிலும் மண்டபங்களிலும் இடபக்கொடிகள் பறந்தன. வீடுகள் தோறும் தோரணங்கள். வாயில்தோறும் மணி விளக்குகள். மங்கல வாத்தியங்கள் முழங்க ஆரூர் மக்கள் திரண்டு வந்து சுந்தரரை வரவேற்றனர். சுந்தரர் தமது பரிவாரங்கள் புடைசூழ ஆரூர் மூலட்டானத்தை வணங்கி, புற்றிடங் கொண்ட பிரானைச் சேவித்து, வீதிவலம் வரும்போது அவர் காதில் மாத்திரம் இறைவனின் வாசகம் ஒன்று கேட்டது. ''சுந்தரா, இன்று முதல் நாம் உன் தோழன். முன்பு நாம் உன்னைத் தடுத்தாட்கொண்ட கல்யாணத்திலே, அன்று நீ கொண்டிருந்த மணக்கோலத்தையே என்றும் பூண்டவனாகி, உனது ஆசை தீரும்படி இவ்வுலகத்திலே நீ விளையாடுவாயாக''! என்ன அற்புதம்! மிகுந்த ஆசையோடு கல்யாணம் செய்யச் சென்றவரைத் தடுத்த சிவபெருமான் இப்போது விடுதலை கொடுத்தது மாத்திரமல்ல, உதவிக்கும் வரப் போகிறார், தோழன் என்ற முறையில்!

உடனேயே இந்த விளையாட்டு ஆரம்பிக்கிறது. கோயில் வீதி வலம் வரும்போது எதிர்ப்படுகிறாள் ஒரு நங்கை. கண்ணை மின்னு கிறது அவள் அழகு. சுந்தரர் ஒரு கணம் திகைத்து நிற்கிறார். இருவர் கண்களும் ஏக சமயத்தில் கவ்வுகின்றன. அவ்வளவுதான். இந்தக் காட்சியைச் சேக்கிழார் தமது இலக்கியப் புலமைத் திறமையால் வருணிக்கும் சிறப்பு இலக்கிய ரசிகர் மாத்திரமல்ல, கலைரசிகர்கள் எல்லாருமே அனுபவிக்கவேண்டிய சிறப்பு. சுந்தரர் வியப்புறுகிறாராம்: ''இவள் என்ன கற்பக தருவின் பூங்கொம்போ, காமன்தன் பெருவாழ்வோ, பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ. அல்லது அற்புதமேதான் உருவெடுத்து வந்து நின்றதோ! ஒருவேளை சிவனருள்தான் நேரில் வந்து தோன்றி யதோ'' என்று அதிசயித்தாராம் சுந்தரர். இதற்கு நேராக அங்கு வந்த நங்கை என்ன நினைக்கிறாள்? ''என் எதிரில் வந்தவர் அழகுத் தெய்வம் முருகனை அல்லது மன்மதன்தானை? ஒருவேளை கந்தர் வரோ. அல்லது இறைவனருளால் ஏற்பட்ட தோற்றமோ, என் மனத்தை இப்படித் திரித்தவன் யாரோ?'' என்று மயங்கி னாராம்.

எதிர் வந்தவள் திருவாரூரில் கணிகையர் குலத்தில் தோன்றிய பரவை என்ற நங்கை. இதைப்பற்றி முன்பே ஒரு குறிப்பு கொடுத்திருந்தோம். அதாவது, முற்பிறவியிலே தேவலோகத் தில் சுந்தரர் ஆலாலசுந்தரர் என்ற பெயரில் சிவனுக்குத் தொண்டு செய்துவந்தார். அப்போது ஒரு நாள் நந்தவனத்தில் பூப்பறித் துக்கொண்டிருந்த பார்வதி தேவியின் சேடியர்கள் இருவரைக் கண்டவுடன் சுந்தரர் மோகித்தார். அவர்களில் ஒருவர் கமலினி, மற்றவர் அநிந்தை. சிவபெருமான் இதையறிந்ததும் மூவரையும், ''பூமியில் போய் விளையாடுங்கள். இது தெய்வ நிலம். இங்கே அதற்கு இடமில்லை'' என்று சொல்லிச் சபித்து அனுப்பிவிட்டார். அது காரணமாகவே ஆலாலசுந்தரர் நம்பி ஆரூரர் என்ற பெயரில் திருநாவலூரில் வந்து பிறந்தார். கமலினி திருவாரூரில் பரவை என்ற உருத்திரகணிகையாகப் பிறந்தாள். அநிந்தை திருவொற்றி யூரில் சங்கிலி என்ற பெயரில் பிறந்தாள். நம்பியாரூரர் சங்கிலி யைச் சந்தித்த கதையைப் பின்னால் திருவொற்றியூர் போகும் போது தெரிந்துகொள்ளலாம்.

பரவையைக் கண்டு மோகித்த சுந்தரர், எப்படியும் அவளை அடைய வேண்டுமென்ற ஆசையோடு வீடு திரும்பினார். அதே விதமான ஆசையோடு பரவையாரும் தனது மாளிகைக்குத் திரும்பினாள். இவர்கள் ஆசையை நிறைவேற்ற, ஏற்கெனவே இறைவன் தாமே சுந்தரரின் தோழன் என்று பிரகடனப் படுத்தியது மாத்திரமல்ல, ''மணக்கோலத்துடன் விளையாடுவாய்''

என்றும் வாழ்த்தி விட்டாரல்லவா? மறு நாளே ஊர் முழுவதும் கதை பரவிவிட்டது. ''நம்பியும் பரவையும் நல்ல ஜோடி'' என்று கண்ட திருவாரூர் மக்கள் விதிப்படி விவாகம் செய்து கொடுத்தார்கள்.

ஆரூரன் ஆரூரில் குடிகொண்டு விட்டார். அழகும் அறிவும் ஆற்றலும் பண்பும் நிறைந்த பரவையுடன் இன்பம் பெருகும் இல்லறத்தில் அமர்ந்தார். ஆயினும், இறைவன் கோயிலுக்குப் போய் வழிபாடு செய்வதை மறக்கவில்லை. இப்படியிருக்கும்போது ஒரு நாள், திடீரென்று கோயில் வாயிலில் விறன்மிண்டர் என்ற சிவனடியார் சுந்தரரை உள்ளே போகவிடாமல் தடுத்தார். ''இந்தக் கோயிலின் தேவாசிரிய மண்டபத்தில் பல திருத் தொண்டர்கள் கூடியிருப்பது உமது கண்ணுக்குத் தெரிய வில்லையோ? அவர்களை யெல்லாம் அலட்சியம் செய்து, அவர்களை வணங்காமல் நீர் உள்ளே போவது மகா பாபம். இது வரை எந்த அடியாரும் அப்படிச் செய்ததில்லை. சிவ தொண்டர்களை வணங்காமல் போகும் நீர் என்ன அவ்வளவு பெரிய பரமாத் மாவோ?'' என்று கோபித்துத் தடுத்து நின்றார். சுத்தர மூர்த்திக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. உடனே தமது தோழரை நினைத்துப் பார்த்தார். இறைவன், ''கவலைப்படாதே. விறன் மிண்டர் கொஞ்சம் கோபக்காரர்தான். கடுமையான பிடிவாத முள்ளவர். நமது கோயிலின் இரண்டாவது சுற்று வடக்குக் கோபுர வாயிலின் பக்கமாக வா, அங்கே நான் உனக்குக் காட்சி தருகிறேன்'' என்று சொல்லி அந்தப் பக்கமாக வந்து ஒட்டியிருந்து காட்சி கொடுத்தார்!

இந்தச் சம்பவத்தை யொட்டி ஒரு ருசிகரமான கதையுண்டு. இம்மாதிரியாக இறைவன் சுந்தரருக்கு இரகசியமாய்க் காட்சி கொடுத்துவிட்டார் என்பதை விறன்மிண்டர் அறிந்தவுடன் அவருக்கு அளவற்ற கோபம் வந்துவிட்டது. இந்தச் சுந்தரன் தான் அடியார்களை மதிக்காமல் விட, அதற்கு இறைவனும் உடந்தையாக இருக்கிறாரே என்று ஆத்திரம் கொண்டு, ''சுந்தரன் எனக்குப் புறகு; இறைவனும் புறகு'' என்று சொல்லி, திருவாரூ ரையே வெறுத்து, இனிமேல் ஒருபோதும் அதற்குள் கால் வைப்ப தில்லை என்று சபதம் பூண்டு, பக்கத்திலுள்ள ஊரில் தங்கியிருந்து நாள்தோறும் சிவனடியார்களுக்கு உணவளித்து வந்தார். ஆனால் ஒரு நிபந்தனை; எல்லா அடியார்க்கும் தாராளமாக உபசாரம் செய்வார், திருவாரூர்க்காரர் மாத்திரம் அங்கே வரக்கூடாது! எவராவது அடியார் திருவாரூர்க்காரர் என்று தெரிந்தால் போதும் உடனே கொஞ்சமும் இரக்க மில்லாமல் தாம் வைத்திருக்கும்

கோடரியால் அந்த அடியாரின் காலைத் தறித்துவிடுவாராம். அத்தனை கோபம் அவருக்கு திருவாரூர் மீதும் அந்த ஊர் மக்கள் மீதும். ஒரு நாள் ஆரூர் இறைவனே ஒரு சிவனடியார் வேடம் பூண்டு விறன்மிண்டர் மடத்துக்குப் போனார். வாசலில் வரவேற்ற விறன்மிண்டரின் மனைவி, ''உங்கள் ஊர் யாது சுவாமி?'' என்று கேட்டார். அடியார் இறைவனல்லவா? பொய் சொல்ல முடியாது. ஆகையால் உண்மையைச் சொல்லி, ''நான் திருவாரூர் வாசி'' என்றார். அந்த அம்மாள் மனங்கலங்கி, ''ஐயா, திருவாரூர் வாசி ஒருவரையும் எனது கணவர் மதிக்கமாட்டார். அதுவுமல்லாமல் அவர்கள் காலை வெட்டிவிடுவாரே. ஆகையால், தாங்கள் வேறு ஊர்க்காரர் என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளுங்கள்'' என்று யோசனை தெரிவித்தார். அடியார் சிறிது சிந்தித்துவிட்டு, ''பொய் சொல்ல எனக்கு இஷ்டமில்லை. ஆனால், தாங்கள் எனக்கு ஓர் உபகாரம் செய்ய வேண்டும். தங்கள் கணவர் தனது வலப் பக்கத்திலேதான் எப்போதும் கோடரியை வைத்துக் கொண்டிருப்பார் என்று கேள்விப்பட்டேன். இன்று மாத்திரம் தாங்கள் அந்தக் கோடரியை அவர் இடது பக்கத்தில் எடுத்து வைத்து விடுங்கள்'' என்று கேட்டுக்கொண்டார். அப்படியே அந்த அம்மாளும் உதவி செய்தார்.

விறன்மிண்டர் அடியாரை வரவேற்று வழக்கம்போல, ''சுவாமி, தாங்கள் எந்த ஊரோ?'' என்று கேட்டார். அடியார் கொஞ்சமும் யோசிக்காமல், ''செல்வம் நிறைந்த திருவாரூர் வாசி'' என்றவுடன் ஆத்திரமடைந்த விறன்மிண்டர் கோடரியைத் தேடினார். வழக்கத்தில் வலது பக்கத்திலிருப்பதைக் காணுமல் இடது பக்கத்தில் தேடுவதில் ஒரு சிறிது தாமத மேற்பட்டது. அதற்குள் அடியார் ஓட்டம் பிடித்தார். பின்னால் துரத்திக் கொண்டு வந்த விறன்மிண்டர் அடியாரைத் தொடர்ந்து ஓடி வந்தபோது தம்மையுமறியாமல் திருவாரூர் எல்லைக்குள்ளேயே வந்துவிட்டார். அடியவர் உடனே, ''திருவாரூர் எல்லைக்குள் வந்தோமிப்பால்'' என்று சொன்னபோதுதான் விறன்மிண்டர் தமது நிலைமையை உணர்ந்தார். தமது சபதம் கெட்டுப் போய் விட்டதே என்ற ஆத்திரத்தில் தமது காலைனையே கோடரியால் வெட்டப்போக, எல்லாம் வல்ல இறைவன் அவரைத் தடுத்துத் தம் சுயரூபத்தைக் காண்பித்து ஆசீர்வதித்தார். அதன் பின்னர், விறன்மிண்டரை அழைத்துச் சென்று சுந்தரருடன் சேர்த்து வைத்தார்.

விறன்மிண்டர் திருவாரூர் எல்லையைக் கடந்து வசித்த இடம் இப்போது திருவாரூருக்கு வடக்கிலுள்ள ஆண்டிப்பந்தல் என்றும்,

அடியாரைத் துரத்தி வந்து திருவாரூர் எல்லைக்குள் நுழைந்த இடம் வண்டாம்பாலை என்றும் சொல்வார்கள். ''வந்தோமிப் பால்'' என்ற வார்த்தைதான் திரிந்து வண்டாம்பாலையாகி விட்டது என்று தெரிகிறது. விறன்மிண்டர் சுந்தரரைத் தடுத்த போது, இறைவன் வடக்குக் கோபுரத்தருகில் ஒட்டி நின்று காட்சி கொடுத்ததைக் குறிக்க இப்போது அந்த இடத்தில் ''ஒட்டுத் தியாகர்'' என்ற ஒரு சிலை வைத்துக் கோயில் கட்டி வைத்திருக் கிறார்கள். சுந்தரர் தேவாரத்திலே ஓரிடத்தில், ''ஒட்டியாட் கொண்டு போய் ஒளித்திட்ட உச்சிப் போதனே'' என்று பாடியதைச் சிலர் மேற்சொன்ன கதைக்குச் சாதகமாக வைத்துக் கொண்டு விளக்கம் தருவார்கள்.

இந்த விறன்மிண்டர் மேற்சொன்ன சம்பவத்தின் பின்னால், அவருடைய அடியார் பக்தியின் காரணமாக, நாயனார் பதவி பெற்றார். சுந்தரருக்கும் புத்தி வந்தது. மறுநாளே திருவாரூர்ப் பூங்கோயிலினுள் நுழையும்போது, முதலில் தேவாசிரிய மண்ட பத்தைப் பார்த்தார். திருத்தொண்டர் என்ற சிவனடியார்கள் உட்கார்ந்திருந்தனர். உடனே இறைவனைத் தியானித்து, ''அப்பனே, அடியார் திருக்கூட்டத்தை மறந்த என் பிழையைப் பொறுத்தருளி, அவர்களுக்கு என்னை அடியவனுக்கி, அவர்களைப் பாட எனக்குத் திறனையும் அறிவையும் அருளவேண்டும். இத் திருத்தொண்டர் வரலாற்றையும் அவர்கள் பண்பையும் தெரியச் செய்யவேண்டும்'' என்று பிரார்த்தித்தார். அவர் தியானத்தில் உடனே இறைவனருள் கிடைத்தது. தேவாசிரிய மண்டபத்தி லெழுந்தருளி யிருந்த அடியார்களைப்பற்றிய ஞானம் சுந்தரர் சிந்தையில் உதித்தது. ''தில்லை வாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்ற முதல் அடி வாக்கிலெழ, திருநாவலூர்ப் பிறந்த தேசிகன் சுந்தரன், திருத்தொண்டத் தொகை என்ற பதிகத்தைப் பாடி முடித்தார்.

இத்திருத்தொண்டத் தொகையே சைவ நாயன்மார் வரலாற்றுக்கு அடிப்படை. இதைக்கொண்டு நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி என்ற ஒரு நூலைச் செய்தார். அந்த நூலையும் கர்ண பரம்பரையாக வந்த வரலாற்றையும் வைத்து சேக்கிழார் தமது ஒப்பற்ற காவியமாகிய பெரிய புராணத்தைப் பாடினார். அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றி நாமும் இந்தக் கதைகளையெல்லாம் சொல்லத் துணிந்தோம்.

19. திருவாரூர்ப் பிறந்தார்கள்

பூங்கோயில் என்ற திருவாரூர் தியாகராஜ சுவாமி கோயிலுக்குள் இரத்தின தேசிகர் என்னை அழைத்துச் செல்லும்போதே சில விளக்கங்களைச் சொல்லிச்செல்கிறார். பிராகாரத்தில் பல கல் தூண்கள் காணப்படுகின்றன. திருவிழாக்காலங்களில் பந்தர் போடுவதற்கு இவை ஏற்பட்டவை. இதைத்தான் காவணம் என்று சேக்கிழார் வருணித்தாராம். காவணம் என்பது பந்தர். இதற்கு பக்தானுக்கிரக மண்டபம் என்று பெயர். இதைத் தாண்டிச் சென்றால் காணப்படுவது ஆயிரக்கால் மண்டபம். தேவாசிரிய மண்டபம் என்று சேக்கிழார் சொல்லியுள்ளார். தேவ ஆஸ்ரய மண்டபம் என்றால் தேவர்கள் விரும்பும் மண்டபம் என்று பொருள். அதுவே தேவாசிரிய மண்டபம் ஆகிவிட்டது. இந்த மண்டபத்திலேதான் திருத்தொண்டர்கள் கூடியிருக்க, அவர்களைத் தொழாமல் சுந்தரர் உள்ளே சென்று, விறன்மிண்டர் பகையைத் தேடிக்கொண்டது. கோயிலுக்குள் போகும் வழியில், கோபுர வாயிலிலே விறன்மிண்டர் சிலை காணப்படுகிறது.

திருவாரூரை சப்த விடங்கஸ்தலங்களிலொன்று என்று சொல்வார்கள். விடங்கர் என்றால், வி—டங்கர், அதாவது உளி படாது ஏற்பட்ட, சுயம்புலிங்கம். இம்மாதிரியான விடங்கரை தமிழ் நாட்டில் ஏழு இடங்களில் காணலாம். திருவாரூர், நாகபட்டினம், திருநள்ளாறு, வேதாரண்யம், திருக்காறாயில், திருவாய்மூர், திருக்கோளிலி என்ற திருக்குவளை. இந்த ஏழு இடங்களிலும் ஏழு விடங்கர்கள் இருக்கிறார்கள். திருவாரூரில் இருப்பவர் பெயர் அவனி விடங்கர். இந்த விடங்கஸ்தலங்களில் விசேஷ மூர்த்தியாக எழுந்தருளியிருப்பவர் தியாகராஜர். இதற்கு ஒரு புராணக் கதையுண்டு.

மகாவிஷ்ணுவின் திரு மார்பில் இதய கமலமாக வைத்துப் பூசித்த வடிவம் சோமாஸ்கந்த மூர்த்தம். விஷ்ணு இதனை இந்திரனுக்குக் கொடுத்திருந்தார். இந்திரனுடைய போர் ஒன்றில் உதவி செய்த முசுகுந்தனுக்கு இந்திரன் பிரதியுபகாரமாக

ஏதாவது அவன் விரும்பிய வரத்தைக் கேட்டால் கொடுப்பதாக வாக்குக் கொடுத்திருந்தான். முசுகுந்தன் சோமாஸ்கந்த மூர்த்தத்தில் ஆசை கொண்டு அதனையே வேண்டும் என்று கேட்டுவிட்டான். ஆனால் உயிருக்குயிராகப் பேணி வந்த இந்திரன் அந்த சோமாஸ்கந்த மூர்த்தத்தைவிட்டுப் பிரியத் தயங்கினான். கேட்ட வரம் தருகிறேன் என்று வாக்குக் கொடுத்தபின் எப்படி இந்த இக்கட்டிலிருந்து தப்புவது என்று யோசித்து, அந்த வடிவத்தைப் போல வேறு ஆறு நகல் உருவங்களைச் செய்து, ஏழு வடிவங்களையும் முசுகுந்தன் முன் வைத்து, அவனுக்கு வேண்டியதைத் தெரிந்தெடுத்துக்கொள்ளுமாறு சொன்னான். முசுகுந்தன் சாமானியனல்லன். ஏற்கெனவே சிவனது திருவருள் பெற்று அதிபராக்கிரமசாலியாக வளர்ந்தவன். இல்லாமலா இந்திரனே அவனது உதவியை நாடவேண்டி வந்தது? முசுகுந்தன் ஏழு உருவங்களையும் சோதித்துப் பார்த்தான். எப்படியோ உண்மையான அசல் உருவம் அவன் கண்ணில் பட்டது. அதையே தனக்கு வேண்டும் என்று குறிப்பிட்டுச் சொன்னதும் இந்திரன் தனது தோல்வியை ஒப்புக்கொண்டு அந்த ஏழு சோமாஸ்கந்த உருவங்களையுமே முசுகுந்தனிடம் கொடுத்து வாழ்த்தி யனுப்பினான். முசுகுந்தன் அவற்றைக் கொண்டுவந்து பூமியில் ஏழு தலங்களில் பிரதிட்டை செய்தான். இந்திரன் வழிபட்ட, திருமால் மார்பிலணிந்திருந்த, அசல் உருவமே திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் தியாகராஜர் என்று சொல்லப்படுகிறது. அதனால், இங்கு இப்போதும் நடைபெறும் சகஸ்ரநாம அர்ச்சனைக்கு முசுகுந்த சகஸ்ரநாம அர்ச்சனை என்று பெயர்.

''முகத்தைக் காட்டியே தேகம் முழுவதும் காட்டாத மூடு மந்திரம் ஏதையா?'' என்ற பரதநாட்டிய பாடலை நாம் கேட்டிருக்கிறோமல்லவா? இந்தப் பாடல் திருவாரூர் தியாகராஜரை நோக்கிப் பாடப்பட்டது. தியாகராஜ சுவாமியின் அமைப்பைப் பார்த்தால் அவர் முகம் மாத்திரம் தோற்றும், மற்றைய பாகங்களெல்லாம் மறைக்கப்பட்டிருக்கும். இந்த உருவத்தினடியில் ஒரு ஸ்ரீசக்கரமுண்டு. அது பலமான தகட்டால் மூடிப் பாதுகாக்கப்பட்டிருக்கிறதென்றும் அபிஷேக நேரங்களில் நீர் முதலியவை படாதென்றும் சொல்கிறார்கள். முதலில் புற்றிடங் கொண்டார் சந்நிதியில் திருமூலட்டானரைத் தரிசித்து, பின்னர் இடது புறத்திலிருக்கும் தியாகராஜரை வணங்குகிறோம். அம்மை கமலாம்பாளுக்குத் தனிக் கோயில். ஒரு காலத்தில் திருவாரூர் கமலாபுரம் என்ற பெயர் பெற்றிருந்தது. லக்ஷ்மி ஆலயம் என்று கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. மஹாலக்ஷ்மிக்கு இங்கு ஒரு கோயில் உண்டு. இங்கே லக்ஷ்மி தபசிலிருப்பதாக ஐதிகம். நேரே

தரிசிக்க முடியாது, கல் சாளரம் வழியாகத்தான் பார்க்க வேண்டும். இதேபோல் கமலாம்பாளும் தபசு நிலை. சுதந்திர சக்தி என்று சொல்வார்கள். நீலோத்பலாம்பாள் வடிவம் இங்கு விசேஷம். பக்கத்தில் ஒரு சேடி கந்தனை வைத்திருக்கும் காட்சி பார்த்து மகிழ வேண்டியது.

திருவாரூர் கோயிலுக்குள்ளேயே பல கோயில்களிருக்கின்றன. அதிலொன்று அரநெறியெனப்படும். இதன் மீது திருநாவுக்கரசு நாயனார் ஒரு தனிப் பதிகமே பாடியிருக்கிறார். இதனை அசலேசம் என்பர். மற்றும் இரண்டாம் பிராகாரத்தைச் சுற்றி வந்தால் ஆனந்தேசம், விசுவகர்மேசம், சித்தீசம், என்று பல சந்நிதிகளைத் தரிசிக்கலாம். கும்பிட்ட கையை எடுக்காமலே கோயிலை வலம் வரலாம் என்று சொல்வார்கள். அப்படி நெருக்கமாயிருக்கின்றன உட்கோயில்கள்.

திருவாரூரில் சாயங்காலப் பூஜை மிகவும் விசேஷமா யிருக்கும். பிரமாதமான அலங்காரம் செய்திருப்பதைத் திருவந்திக் காப்பு என்பார்கள். இந்தப் பூசையில் அர்ச்சகர் நீண்ட அங்கியும் தலைப்பாகையும் தரித்து பூசை செய்யும் வழக்கமுண்டு. அதாவது தேவேந்திரனே நேரில் வந்து பூசை செய்வதாக ஐதிகம்.

திருவாரூரில் ஆதியிலிருந்த சுந்தரமூர்த்தி விக்கிரகம் ஒரு காலத்தில் மன்னார்குடி ராஜகோபாலசுவாமி கோயிலுக்குக் கொண்டு போகப்பட்டுவிட்டது என்ற ஒரு கதையுண்டு. இது எவ்வளவு தூரம் உண்மையென்று தெரியாது. ஆனால், இப்போது திருவாரூரிலுள்ள உற்சவ விக்கிரகம் திருநாவலூரிலிருந்து கொண்டு வரப்பட்டது என்று சொல்வதில் சிறிது உண்மை யுண்டு. திருநாவலூருக்கு நாங்கள் சென்றபோது அவ்வூர்வாசிகள் சொன்ன கதை ஞாபகத்துக்கு வருகிறது. திருநாவலூரிலிருந்து சுந்தரமூர்த்தி விக்கிரகத்தைத் திருவாரூருக்குப் பரவையிடம் கொண்டுவரும் ஒரு விழா முன்பு நடந்து வந்திருக்கிறது. அப்படி நடந்து வருங்காலத்தில் சுந்தரமூர்த்தி விக்கிரகத்தைத் திருப்பி அனுப்பாமல் சிறு தகராறு நடந்ததென்று திருநாவலூர்வாசிகள் சொன்னதன் பொருள் இப்போதுதான் திருவாரூரில் தெரிய வந்தது.

சுந்தரமூர்த்தியையும் விறன்மிண்ட நாயனாரையும் தவிர, மற்றும் சில நாயன்மார் சரித்திரங்களும் திருவாரூரில் நடந்திருக் கின்றன. அவர்களில் ஒருவர் நமிநந்தியடிகள் என்பவர். இவர் திருவாரூருக்குத் தெற்கேயுள்ள ஏமப்பேறூர் என்ற கிராமத்தில்

பிறந்தவர். இப்போது அந்த இடம் திருநெய்ப்பேறு எனப்படுகிறது. இவர் திருவாரூர் பெரிய கோயிலிலுள்ள அரநெறி என்ற கோயிலில் எப்போதும் நெய் விளக்கேற்றி வைப்பதையே தொண்டாகச் செய்துவந்தார். ஒருநாள் இரவு நெய் கிடைக்காமல், பக்கத்தில் எங்காவது ஒரு வீட்டில் கேட்கலாமென்று சென்றபோது, அந்த வீட்டில் வசித்தவர்கள் சமணர் என்று தெரிந்தது. சிவனடியாரைக் கண்டதும் அவர்கள் ஏளனமாக, ''ஏன் உங்கள் சுவாமி கையில்தான் நெருப்பிருக்கிறதே! அந்த வெளிச்சம் போதாதா? அவசியம் விளக்கேற்ற வேண்டுமென்றால் குளத்தில் நிறைய நீர் இருக்கிறது. அதை எடுத்து விளக்கில்விட்டு எரிக்கவேண்டியதுதானே!'' என்று பரிகசித்தார்கள். இதைக்கேட்டு மனம் நொந்த நமி நந்தியடிகள், செய்வதறியாது வந்து இறைவன் சந்நிதியில் விழுந்து அயர்ந்து போனார். பின்னர், ''இறைவன் விரும்பினால் நீரும் எண்ணெயாகும்'' என்று சொல்லித் திருக்குளத்திலிருந்த நீரை முகந்து வந்து விளக்கில் விட்டுத் திரியை ஏற்றினார். என்ன அற்புதம்! திருவிளக்கு சுடர்விட்டெரிந்தது. இந்த நிகழ்ச்சியைக் கண்ட பக்தர்கள் வியந்தனர். கேள்விப்பட்ட சமணர்கள் வெட்கினர். சமணர்கள் பெரும்பாலும் இம்மாதிரியான மந்திர தந்திரங்களில் வல்லவர்களாகையால், நமிநந்தியடிகளுக்கும் ஒரு சவால் விட்டனர். அது பலித்தது கண்டு தலைகுனிந்தனர்.

கோயில் குருக்களில் ஒருவராகிய பிச்சுக்குருக்கள் என்பவருடன் பேசிக்கொண்டிருக்கையில் நமிநந்தியடிகளின் வரலாற்றை அவர் எனக்குச் சொல்லிவந்தார். சமணர்கள் ஏளனமாகச் சொன்ன வார்த்தைகளைப் பிச்சுக்குருக்கள் சொல்லும்பொழுது அவர் குரல் தழுதழுத்து, கண்ணீர் வார்ந்த காட்சியை என்னால் மறக்க முடியாது. திருவாரூரில் நான் சந்தித்த நாலைந்து பெரியார்களில், கோயில் பூஜா கிரமங்களில் தொடர்புள்ள பிச்சுக் குருக்கள் ஒருவர். தெய்வபக்தி நிறைந்த மனிதர் என்பதைக் கண்டேன்.

அறுபத்துமூவரில் நமிநந்தியடிகளைத் தவிர, திருவாரூருடன் சம்பந்தப்பட்ட இன்னொருவர் தண்டியடிகள் நாயனார் என்பவர். இவர் திருவாரூரிலேயே வாழ்ந்த பிறவிக் குருடர். ஆனால் இறைவனிடத்தில் அளவிறந்த பக்திகொண்டு வழிபட்டு வந்தார். திருவாரூரில் உள்ள திருக்குளத்தைச் சுற்றி அந்தக் காலத்தில் சமணர்கள் குடியிருந்து, நாளுக்கு நாள் அவர்கள் பாழிகளைக் கட்டிவந்ததால் குளத்தின் கரைகள் சுருங்கிவிட்டன. தண்டியடிகள் இந்தக் குளத்தைத் தோண்டி அகலமாக்க வேண்டுமென்று

விரும்பினர். கண்குருடாயிருந்தாலும் விடாமுயற்சியில் ஈடு பட்டார். கரையில் ஒரு கோலில் நட்டு அதில் ஒரு கயிற்றைக் கட்டி, குளத்தினுள்ளும் ஒரு கோல் அந்தக் கயிற்றின் மறுநுனி யைக் கட்டி, அந்தக் கயிறே தமக்கு வழிகாட்டியாகத் தடவிக் கொண்டு, கூடையும் மண்வெட்டியும் தாங்கி, தண்டியடிகள் மண் சுமந்து கொட்டிக் குளத்தை அகலப்படுத்தினர்.

சமணர்களுக்கு எப்போதும் சைவர்கள் மீது ஆத்திரம். இவர் செய்யும் வேலையைப் பார்த்து அவர்கள், ''மண்ணைத் தோண்டினால் அதில் வசிக்கும் பிராணிகள் இறந்துபோம். ஆகையால் அவைகளை வருத்தவேண்டாம்'' என்றனர். அதைக் கேட்ட தண்டியடிகள், ''இது இறைவனுக்குச் செய்யும் தொண்டு. இந்தத் தருமத்தைப் பற்றி நீங்கள் அறியமாட்டீர்கள்'' என்றார். அவர்கள் கோபித்து, ''நாங்கள் சொல்லும் தரும நெறியை நீ கேட்பதாகத் தெரியவில்லை. கண்தான் குருடு மாத்திரமல்ல, உனக்குக் காதும் செவிடாகிவிட்டதா?'' என்று பரிகசித்தனர். தண்டியடிகள், ''மந்த அறிவும், காணுத கண்ணும், கேளாத செவியும் உங்களுக்குத்தான். நான் இறைவன் திருவடி ஒன்றையே காண்கிறேன். மற்றவற்றைக் காண்பதில்லை. ஆனால், மற்ற வற்றையும் நான் காணக் கண்ணொளி பெற்றால் நீங்கள் என்ன செய்வீர்கள்?'' என்று கேட்டார். சமணர், ''உன்னுடைய கடவுள் உனக்குக் கண்ணொளி கொடுத்தாராலால், நாங்கள் இந்த ஊரை விட்டே போய் விடுகிறோம்'' என்று சொல்லிவிட்டு, தண்டியடிகள் கையிலிருந்த மண்வெட்டியைப் பறித்துக்கொண்டு, அவருக்கு வழி காட்டியாயிருந்த கயிற்றையும் கம்புகளையும் பிடுங்கி எறிந்தனர்!

தண்டியடிகள் அவலமுற்று அழுதுகொண்டு வந்து திருமடத் தில் சேர்ந்து இறைவனிடம் முறையிட்டபடி தூங்கிவிட்டார். மறுநாள் இந்தச் செய்தியைக் கொண்டுபோய் அரசனிடம் முறை யிட்டார். அரசன் விசாரித்தபோது சமணர்கள் தாம் சொன்ன தைச் சொன்னார்கள். அரசன் தண்டியடிகளைப் பார்த்து, ''நீர் உண்மையான பக்தன் என்பதை நம்புகிறேன். ஆனால் பரமசிவன் திருவருளால் கண்ணொளியைப் பெறலாம் என்பதை இவர்களுக்குக் காட்டும்'' என்றான். தண்டியடிகள் உடனே குளத்திலிறங்கி நின்று, ''இறைவா! நான் உனது அடிமை யென்பது உண்மையானால், என் கண்ணில் பார்வை வரட்டும். இந்தச் சமணர்கள் தங்கள் கண்களை இழக்கட்டும்'' என்று சொல்லிக்கொண்டே மூழ்கி எழுந்தார். வெளியே யாவற்றையும் தம் கண்களால் கண்டார். கூடி நின்ற சமணர்கள் தம்

பார்வையை இழந்து குருடர்களானார்கள்! அரசன் அவர்களை வேறு ஊர்களுக்குப் போகச் சொல்லிவிட்டு, தண்டியடிகளிடம் திருப்பணியைத் தொடர்ந்து செய்யுமாறு வேண்டிக் கொண்டான்.

அறுபத்துமூவரில் காடவார்கோன் கழற்சிங்கன், செருத்துணை என்ற பெயருள்ள மற்றும் இருவர் திருவாரூர்ப் பூங்கோயில் ஈடுபாட்டால் பெருமைபெற்ற நாயன்மார்கள் என்று சேக்கிழார் சொல்கிறார். இருவரும் ஒரே செயலில் சம்பந்தப்பட்டவர்கள். செருத்துணை நாயனாரின் பூர்வோத்தரத்தைப் பற்றி நாம் அறிய மாட்டோம். திருவாரூர்ப் பக்கத்திலுள்ள மருகல் நாட்டுத் தஞ்சாவூரில் பிறந்த ஒருவர் என்பதுதான் தெரியும். இவர் திருவாரூர்க் கோயிலில் தினந்தோறும் வழிபாடு செய்துவந்தவர். காடவர்கோன் கழற்சிங்கன் என்பவன் தொண்டைநாட்டை யாண்ட பல்லவர் வரலாற்றில் புகழ்பெற்று விளங்கிய இரண்டாம் நரசிம்மவர்மன் என்ற ராஜசிம்மபல்லவன். இவன் சுந்தரமூர்த்தி நாயனார் காலத்தவன் என்று வரலாற்றுசிரியர்கள் சொல்வார்கள். காஞ்சியிலாண்ட இவன்தான் கைலாசநாதர் கோயிலையும் மாமல்லப்புரத்துக் கடற்கரைக் கோயிலையும் கட்டிப் புகழ் பெற்றவன். இவனைப் பற்றிப் பின்னர் காஞ்சீபுரத்தில் நாம் அதிகம் அறியப் போகிறோம். இவனுக்கு இரு மனைவியர்—ஒருத்தி ரங்க பதாகை என்பவள் சைவமதத்தைச் சேர்ந்தவள்; மற்றவள் கங்கா என்ற பெயருள்ள சமணக் குடும்பத்தைச் சேர்ந்த பெண். இவள்தான் பட்டத்தரசியாகையால், இவளை யழைத்துக் கொண்டு கழற்சிங்கன் திருவாரூருக்குத் தரிசனத்துக்கு வந்தான். வீதிவலம் வருகையில் தனியாக வந்த கங்கா, பிராகாரத்தில் மாலை தொடுக்கும் மண்டபத்தினருகே விழுந்திருந்த ஒரு பூவை எடுத்து மோந்து பார்த்தாள். இதை நேரில் கண்ட செருத்துணை நாயனார் மிகுந்த கோபத்தோடு வந்து, ''சுவாமிக்கு அர்ப்பணம் செய்யவேண்டிய மலரை மோந்து பார்ப்பது பெருங்குற்றம்'' என்று சொல்லி, அந்தப் பெண் ஒரு பட்டத்தரசி யென்பதையும் பாராது, அவள் மூக்கையரிந்து விட்டார்! பின்னால் வந்த கழற்சிங்கனுக்கு முதலில் விஷயம் புரிய வில்லை. என்ன பாதகம் என்று பதைபதைத்தபோது செருத்துணை நாயனார் கோபாவேசத்தோடு, ''சுவாமிக்குச் சாத்தும் பூவை எடுத்து முகந்தாள்; ஆகையால் மூக்கை வெட்டினேன்'' என்று அச்சமின்றிச் சொன்னார். கழற்சிங்கன் மகா சிவபக்தன். கைலாச நாதருக்கே கோயில் எழுப்பினவனல்லவா? ''பூவை எடுத்த இந்தக் கையையல்லவா முதலில் துணித்திருக்கவேண்டும்'' என்று சொல்லிக்கொண்டே தன் சொந்த மனைவியின் கையை

வெட்டினான். இந்த இரு காட்சிகளும் தேவையற்ற பாதகங்க ளென்று நமக்குத் தோன்றினாலும், அபார பக்தியினால் இறைவன் பணியே பணி மற்றெல்லாம் பாதகம் என்று நினைக்கும் அடியார் களின் செயல்களைப் பெருமைப்படுத்துவதே பெரியபுராணக் கதை களின் நோக்கம். ஆகையால், மேற்சொன்ன இருவரும்—செருத் துணையும் கழற்சிங்கனும் இருபெரும் நாயன்மார்களாகப் போற்றப்பட்டனர். இறைவனே நேரில் வந்து வாழ்த்தினார். கங்காவுக்கும் கையும் மூக்கும் முன்போலாயின.

பிச்சுக்குருக்கள் இந்தக் கதையைச் சொல்லும்போது அரசியின் பெயரை கங்கையம்மாள் என்று குறிப்பிட்டார். சரித்திரத்திலே நரசிம்மபல்லவனின் மனைவியரில் ஒருத்தி பெயர் கங்கா என்றே இருக்கிறது. வழிவழியாக வந்த கர்ணபரம்பரைக் கதையும் மாற்றம் பெறவில்லை.

வித்துவான் இரத்தினதேசிகருடன் கோயிலைச்சுற்றி வந்தோம். திருவாரூர்க்கோயிலில் பஞ்சமுக வாத்தியம் ஒன்றிருக்கிறது. மத்தளத்தின் மூட்டுப்போல் ஐந்து முகங்கள் கொண்ட வாத்தியம். ஐந்திலும் சுருதி வித்யாசமான நாதம் பிறக்கும். இதை ஒரு குருக்கள் வாசித்து, தியாகராஜர் எழுந்தருளும்போது காணப் படும் அஜபா நடனத்தின் தாள கதியைக் காண்பித்தார். திருவாரூரில் காண்பது அஜபா நடனம். அதாவது ஜபிக்கப் படாத நடனம் என்று பொருள். ஆதியில் திருமால் தியாகராஜப் பெருமானைத் தனது இதயகமலத்தில் வைத்து, மானசீகமாக மந்திரம் சொல்லும்போது, மேல்மூச்சு கீழ்மூச்சில் அசைந்தாடிய நடனம் இந்த அஜபா நடனம். மற்றைய தியாகராஜ ஸ்தலங் களில், திருநள்ளாற்றில் உன்மத்த நடனம், அதாவது பித்தனைப் போல் தலைசுற்றி ஆடுவது. நாகையில் தரங்கநடனம், கடல் அலைபோல் ஆடுவது. திருக்காறாயிலில் குக்குட நடனம், கோழி போல் ஆடுவது. திருக்கோளிலியில் பிருங்க நடனம், வண்டு மலர் குடைந்து ஆடுவது. திருவாய்மூரில் கமல நடனம், தடாகத்தில் தாமரை காற்றில் அசைவது போன்ற நடனம். வேதாரண்யத்தில் ஹம்சபாத நடனம், அன்னம் போல் அடியெடுத்து வைத்து ஆடுவது. இப்படி சப்தவிடங்க ஸ்தலங்களில் ஏழுவகையான நடனம் உற்சவகாலங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. சுவாமி யைப் பல்லக்கில் வைத்து வீதிவலம் வரும்போது, தூக்கி வருபவர்கள் முன்னும் பின்னும், இருபக்கங்களிலும், ஒருவித கதிபேதத்துடன் ஊசலாடிக்கொண்டு வருவதைப் பார்த்தால் அற்புதமாயிருக்கும். திருவாரூரில் இந்த அஜபா நடனத்தின் போது சுத்த மத்தளம் வாசிப்பார்கள்.

''திருவாரூரிலே ராமாமிர்தக் குருக்கள் என்பவரை அவசியம் நீங்கள் கண்டு பேசவேண்டும். அவருக்குப் பழைய காலத்துச் சரித்திரங்களும் ஐதிகங்களும் நிறையத் தெரியும்'' என்று சென்னையில் தியாகராஜ முதலியார் சொல்லி வைத்திருந்தார். நான் போன சமயத்தில் அவர் ஊரில் இல்லையென்றும் இரவுதான் வருவார் என்றும் சொன்னார்கள். ஆனால் தியாகராஜ முதலியாரின் தாயார் அடிக்கடி எனது சௌகரியத்தை விசாரித்துக் கொண்டிருந்தவர், இரவு ஒன்பதரை மணிக்கு ஓர் ஆள் அனுப்பி அந்த ராமாமிர்தக் குருக்களை அழைத்துவரச் செய்துவிட்டார். வயது எழுபத்தைந்துக்கு மேலிருக்கும். நல்ல ஞாபக சக்தி. திருவாரூர்க் கோயிலின் ஐதிகங்களைப் பற்றிப் பலவும் சொன்னார். பங்குனி உத்தரத் திருவிழாதான் வெகுகாலமாகப் பிரசித்தி பெற்ற விழாவாக இங்கு கொண்டாடப்பட்டு வருகிறது. தேவாரங்களில் அப்பர் சுந்தரர் ஆகியோர் இந்தப் பங்குனி உத்தரத் திருவிழாவைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ''சுந்தரமூர்த்தியின் பரவையார் உருத்திர கணிகை என்று சொல்லப்படுகிறது. அந்தச் சந்ததியாரின் தொடர்பு இப்போது கோயில் உற்சவங்களில் உண்டா?'' என்று குருக்களைக் கேட்டேன். ''பல ஆண்டுகளுக்கு முன்னர் அது இருந்தது. இப்போதுதான் உருத்திர கணிகையர் என்ற இனத்தவர்களே மறைந்து போய்விட்டார்களே! அந்தக் காலத்தில் நான் அறியக்கூடியதாக பங்குனி உற்சவத்தில் நாலாம் நாள் வாகன உற்சவம் என்று நடக்கும். அந்த உற்சவத்தில் சுவாமி வீதி சுற்றி வந்தவுடன் சுந்தரமூர்த்தி எதிர் கொள்ளச் செய்வார்கள். அந்தச் சமயத்தில் தாசிகள் வந்து தமக்கே அவர் சொந்தம் என்று சொல்லித் தமது நகைகளைக் கழற்றிச் சுந்தரர் மேல் போடுவார்கள். சுந்தரர் அன்று அலங்கார புருஷராக வருவார். தாசிகள் அம்மானை முதலிய ஆட்டங்கள் ஆடுவார்கள். அவர்களுக்குள் பலபோட்டிகள் நடக்கும். ரொம்ப வேடிக்கையாயிருக்கும்'' என்று சொல்லிப் பழையகால நினைவுகளில் ரசித்துச் சிரித்தார் ராமாமிர்தக் குருக்கள்.

20. குண்டையூர்க் கிழார்

பரவையை மணந்து இன்பவாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூரில் சில நாட்கள் தங்கியிருந்தார். பரவையின் குணங்களையும் அவளுக்கிருந்த தர்ம சிந்தனையையும் நன்குணர்ந்த சுந்தரர், கடமை மறவாத கணவன் என்ற முறையில் பரவைக்கு அவ்வப்போது தேவைப்பட்டவைகளை வாங்கிக் கொடுத்துவந்தார். தாம் அனுபவிக்கும் இல்லற இன்பமானாலென்ன, மற்றும் எந்தக் காரியமானாலென்ன எல்லாம் ஈசனுக்கே அர்ப்பணம் என்ற எல்லை கடந்த நிலையில்தான் அவர் நடந்துகொண்டார். ஏற்கெனவே ''நான் உன் தோழன். இந்த உலகில் நீ வேண்டிய இன்பத்தை அனுபவித்து விளையாடுவாயாக'' என்று கடவுள் சொல்லிவிட்டாரல்லவா? சுந்தரர் அந்தத் தோழமையை நன்முக உபயோகிக்கத் தலைப்பட்டார். அவ்வப் போது தனக்கோ தன் காதலிக்கோ வேண்டியதை அடித்துக் கேட்பார் கடவுளிடம். கொஞ்சம் கொடுத்தால் போதாது, மேலும் கொடு என்று வற்புறுத்துவார்! கொடுக்காவிட்டால் ''இந்த ஊரில் இருக்கும் நீர்தான் ஒரு கடவுளா? வேறிடத்தில் போய்க்கேட்கிறேன் பாரும்'' என்று கோபித்துக்கொள்வார். வன்தொண்டர் என்பதற்கு சான்முக சுந்தரர் பல இடங்களில் கடவுளைக் கட்டாயப்படுத்தியும் வந்தார்.

திருவாரூருக்குத் தெற்கே பன்னிரண்டு மைல் தூரத்தில் கோளிலி என்ற ஸ்தலம் இருக்கிறது. அதன் அயலிலுள்ளது குண்டையூர் என்ற ஸ்தலம். பரவை நாச்சியார் பங்குனி உத்தரத் திருவிழாவில் அடியார்களுக்கு உணவளிக்கப் போதிய அரிசி இல்லையென்று குறைபட்டார். வழக்கமாக ஒவ்வொரு பங்குனி உத்தரத்திருவிழாவுக்கும் குண்டையூரிலிருந்த ஒரு பெரியவர், குண்டையூர்க்கிழார் என்ற தனவந்தர், சுந்தரரின் மிக நெருங்கிய நண்பர்களில் ஒருவர், நெல் அனுப்பிவருவார். ஒரு முறை பஞ்சம் வந்ததால் நெல் கிடைக்கவில்லை. இது சம்பந்தமாக சுந்தரர் குண்டையூருக்குப் போய் அங்கே நெல் ஏற்றி வந்ததாக ஒரு சம்பவமுண்டு. ஆகையால், அந்தக் குண்டையூரையும் சுந்தரர்

வணங்கிய கோளிலியையும் பார்த்து வரலாமென்று நண்பர் இரத்தின தேசிகரிடம் தெரிவித்தேன். அவர் மனமுவந்து தாமே என்னோடு கூட வருவதாகச் சொல்லி, இருவரும் புறப்பட்டோம்.

திருவாரூரிலிருந்து குண்டையூர் போகும் பாதையில் சுமார் ஆறு மைல்தூரம் சென்றவுடன் தெருக்கரையில் ஒரு பழைய சிறிய கோயில் தென்பட்டது. வண்டியை நிறுத்தச்சொன்னார் தேசிகர். இருவரும் இறங்கிப்போய்ப் பார்த்தோம். ''இதுதான் ஏமப்பேறூர் அல்லது திருநெய்ப்பேறு என்ற தலம். நமிநந்தியடிகள் குடியிருந்த இடம். உள்ளே பாருங்கள், நமிநந்தியின் சிலை காணப்படுகிறது'' என்று சுட்டிக் காண்பித்தார் நண்பர். நமிநந்தியடிகள் விக்கிரகம் தெளிவாய்த் தெரிந்தது. முன்குடுமி, பூணூல், தோளில் விளக்கு, நெய்க்குப்பி இவைகளுடன் காட்சி தருகிறார் இந்த நாயனார். ஆனால் தேடுவாரற்றுக்கிடக்கிறது இவர் ஆலயம்.

அங்கிருந்து புறப்பட்டு நேரே குண்டையூருக்குப் போனோம். கோயிலை நெருங்கும்போது வழியில் ஒருவர், எங்கள் எதிரில் வந்தவர், வண்டியைக் கடந்து சைக்கிளில் சென்றதைக் கண்ட தேசிகர் உடனே அவரைத் திரும்பி வருமாறு சைகை செய்தார். ''இவர்தான் குண்டையூர்க் கோயிலின் அர்ச்சகர். பூஜையை முடித்துக்கொண்டு போகிறார். திரும்பி வரச்சொல்லியிருக்கிறேன்'' என்று தேசிகர் விளக்கினார். சற்று நேரத்தில் எல்லாரும் குண்டையூர்க் கோயிலில் சந்தித்தோம். அர்ச்சகர் சில சுவையான தகவல்கள் தெரிவித்தார்.

குண்டையூர்க் கிழார் என்ற சைவ வேளாளர் ஒருவர் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரரிடத்தில் பெரும் பக்தி கொண்டவர். அவர் மதுரைக்கு அடிக்கடி தரிசனத்துக்குப் போவார். ஒருநாள் அவர் தரிசனத்துக்குப் புறப்பட்டுச் செல்லும்போது, மதுரை சொக்கநாதர் அவரைச் சோதிக்க வேண்டி, இடியுடன் காற்றும் மழையும் பெய்யச்செய்தார். அதையும் பொருட்படுத்தாமல் சென்ற பெரியவரை சொக்கநாதர் ஒரு கிழவேதியர் வடிவில் தோன்றி, ''எங்கே போகிறாய்?'' என்று கேட்டார். பெரியவர் தாம் மதுரைச் சொக்கநாதரைத் தரிசிக்கப் போவதாகச் சொல்லவும், ''இந்தக் காற்றிலும் மழையிலும் நீ எப்படிப் போகமுடியும்? பக்கத்தில் என்வீடு இருக்கிறது. அதில் தங்கி மழைவிட்டபின் போகலாம்'' என்று தடுத்தார். அதையும் கேளாமல் பெரியவர் போனார். அந்தச் சமயத்தில் இறைவன் காட்சி கொடுத்து, ''பக்தா, நீ குண்டையூரிலேயே என்னைத் தரிசிக்க ஏற்பாடு

செய்கிறேன். திரும்பிப்போ. அங்கு ஒரிடத்தில் இரு அத்தி மரங்கள் இருக்கும். ஒன்று பூ மாத்திரம் பூக்கும். மற்றொன்று காய்க்கும். அதுவே மதுரையென்று வழிபடு'' என்றார். குண்டை யூரிலிருக்கும் சிவாலயத்துக்கு ''மதுரை மீளாட்சி சொக்கநாதர் ஆலயம்'' என்றுதான் பெயர். ஆதியில் ரிஷபம் பூஜை செய்த தால் குண்டையூர் என்று பெயர். குண்டை என்றால் ரிஷபம் என்று சொன்னார் அர்ச்சகர்.

இந்த தெய்வகடாட்சம் பெற்ற குண்டையூர்க்கிழார்தான் ஆண்டுதோறும் பங்குனி உத்தரத்திருவிழாவுக்கு சுந்தரர் வீட்டுக்கு நெல் அனுப்பிக்கொண்டு வந்தவர். ஒருமுறை நாட்டில் பஞ்சம் வந்ததால் நெல் கிடைக்கவில்லை. அனுப்பவும் முடியவில்லை. சுந்தரர் திருவாரூரிலிருந்து இங்கு வந்தபோது, குண்டையூர்க் கிழார் இறைவனே வேண்டினார். ஏராளமான நெல் வந்து குண்டையூர் கோயிலின் பக்கத்தில் மலையாகக் குவிந்துவிட்டது! குண்டையூர்க்கிழாருக்கோ ஆனந்தம். சுந்தரமூர்த்தியைச் சந்தித்து அழைத்துக்கொண்டு போய்க்காட்டுகிறார். சுந்தரர் வியந்து, அந்த நெல்லை எப்படிக் கொண்டுபோய்ச் சேர்ப்பது என்று சிந்திக்கிறார். அவருக்குத்தான் அவர் தோழர் இருக்கிறாரே தியாகராஜர்! உடனே அடுத்தாற்போலுள்ள திருக்கோளிலியில் எழுந்தருளியிருக்கும் இறைவனைப் போய்ப் பார்த்து, வேண்டிக் கொள்கிறார்.

நீளநினைந்தடியேன் உமை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள் வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப் பெற்றேன்
ஆளிலை யெம்பெருமான் அவையட்டித்தரப் பணியே.

உடனே இறைவன் தமது பூதகணங்களை விட்டு அத்தனை நெல்லையும் அன்றிரவே திருவாரூரில் பரவை நாச்சியார் இல்லத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கச் சொல்லிவிட்டார்.

திருக்குவளை என்று இப்போது வழங்கும் திருக்கோளிலி ஸ்தலத்தைப் போய்ப் பார்த்தோம். தருமபுர ஆதீனத்தின் மேற் பார்வையிலுள்ளது இது. திருவாரூர் போல சப்த விடங்க ஸ்தலம். இங்குள்ள தியாகராஜர் அவனிவிடங்கர். இவரது நடனம் பிரம்ம நடனம். தேனுள்ள பூவில் வண்டு சுற்றி ஆடும் நடனம். இதன் காரணமாகவோ என்னவோ இங்குள்ள அம்பாள் பெயர் வண்டமரும் பூங்குழலாள். சுந்தரர் நெல் பெற்ற இந்தச் சம்பவம் நெல்மகோற்சவம் என்று மாசிமாதத்தில் நான்கு நாள் விழாவாக நடக்கிறது. மாசி மாதத்தில் மக நட்சத்திரத்துக்கு

முதல் நாள் திருக்கோளிலியில் பஞ்சமூர்த்திகள் புறப்பட்டு வசந்த மண்டபத்துக்கு எழுந்தருளுதல்; மகத்தன்று காலை பஞ்சமூர்த்தி சந்திர நதியென்று குண்டையூருக்குப் போகும் வழியிலுள்ள நதியில் தீர்த்தம் கொடுத்தல்; பின் அன்றிரவு ரிஷப வாகனத்தில் எழுந்தருளி, குண்டையூர்க்கிழாருக்கு நெல் நிறைய வேண்டு மென்று அனுக்கிரகம் பண்ணுதல்; மறுநாள் சுந்தரமூர்த்தி உற்சவ விக்கிரகம் குண்டையூருக்குப்போய் நெல்மலையைப் பார்த்துவிட்டு வந்து ஆள்வேண்டுமென்று, ''நீள நினைந்தடியேன்'' என்ற பதிகம் பாடுதல்; இரவு கல்யாணமூர்த்தி அங்குபோய் நெல்லையெடுத்து திருவாரூருக்கு அனுப்புதல். இது நான்கு நாள் உற்சவமாக நடைபெறுகிறது.

இங்கே இப்படி நடக்கும் விழாவில் பத்துக்கலம் அல்லது ஐந்து கோட்டைக்குக் குறையாமல் நெல் அளந்து திருவாரூருக்கு அனுப் பப்படுகிறது. திருவாரூரில் பரவை நாச்சியார் கோயிலுக்கு இந்த நெல்லைக் கொண்டுவந்து வைத்து, மாசிமாதம் பூர நட்சத்திரத்தில் அபிஷேக ஆராதனை உபநியாசம் முதலியன செய்து, எல்லாருக்கும் விநியோகம் செய்வார்கள். இந்த வழக்கம் இன்றும் நடைபெற்று வருகிறது. ஒரு சில மணிகளாவது கிடைக்கப்பெற்றால் அந்தக் குடும்பத்திலே உணவுப் பஞ்சம் இருக்காது என்று திருவாரூர் மக்கள் நம்புகின்றனர்.

என்னுடன் வந்த இரத்தின தேசிகர் குண்டையூரில் தொடர் புள்ளவர். அங்குள்ள சிவாலயம் மிகவும் அழிந்துபோகும் நிலையி லிருப்பதால் அதற்கு உதவி செய்யவேண்டுமென்று நிதி படைத்த வர்களிடம் சிபாரிசு செய்யச் சொன்னார். பக்கத்திலே தருமபுர ஆதீனக் கோயில் திருக்கோளிலி இருக்கிறது. செல்வமும் செல் வாக்குமுள்ள இந்த ஆதீனமே உதவி செய்யலாம் என்று நான் தெரிவித்தேன்.

திருக்குவளையிலிருந்து திரும்பிவரும்வழியில் நாட்டியத்தான் குடியையும் பார்த்துவிட்டுப் போகலாம் என்று நான் சொன்ன போது இரத்தினதேசிகர் மகிழ்ச்சியோடு சம்மதித்தார். இந்த நாட் டியத்தான்குடி திருக்குவளையிலிருந்து திருவாரூருக்குத் திரும்பி வரும் வழியில் சற்று மேற்கேயிருக்கிறது. திருவாரூரிலிருந்து ஆறு மைல். இந்த ஊரில் ஒரு காலத்தில் சேஞபதித் தொழில் புரிந்த கோட்புலிநாயனார் வசித்துவந்தார். நாட்டியத்தான்குடியும் திருவாரூரை அணித்தாயுள்ள இடமாகையால் நெல்சாகுபடிதான் முக்கியமானது. குண்டையூர், கோளிலிபோல இங்கும் நிலப் பிரபுக்களிருந்தனர். அதைக்கொண்டு பசித்தோருக்கு அன்ன

மிடும் வழக்கமுமிருந்தது. கோட்புலி நாயனூர் வீட்டிலும் போதியளவு நெல் சேமித்து வைக்கப்பட்டிருந்தது. ஒருநாள் அரசனிடத்திலிருந்து வந்த ஏவலில் கோட்புலி நாயனூர் போர்க்களம் செல்லவேண்டியிருந்தது. அப்போது, தாம் சுவாமிக்குத் திருவமுதுக்காக ஓரிடத்தில் நெல்லை அளந்து வைத்துவிட்டுத் திரும்பி வரும்வரையில் தமது சுற்றத்தவர் எவரும் அந்த நெல்லை எடுக்கலாகாதென்று ஆணையிட்டுச்சென்றார். எதிர்பாராத விதமாக நாட்டில் பஞ்சம் வந்துவிட்டது. சமாளிக்கமுடியாத இவர் சுற்றத்தவர்கள், ''இந்த அவசிய வேளையில் சுவாமிக்கென வைத்திருக்கும் நெல்லை எடுத்துச் செலவிட்டு, பிறகு கொடுத்துவிடலாம்'' என்று அந்த நெல்லை எடுத்து உபயோகித்துவிட்டனர். கோட்புலிநாயனூர் திரும்பி வந்த சமயம் நடந்ததை யறிந்து மிகவும் கோபம் கொண்டார். தெய்வத்தின் சொத்தை உண்ட தமது சுற்றத்தவர் எல்லாரையும் அழைத்து ஒவ்வொருவராக வெட்டிக் கொன்றுவிட்டார்! ஒரு பச்சிளங்குழந்தை தப்பிக் கிடந்ததைப் பார்த்து, ''இது நெல்லை உண்ணுவிட்டாலும் அதையுண்டவள் பாலை அருந்தியதல்லவா?'' என்று அதையும் வெட்டப் போகும்போதுதான் இறைவன் வெளிப்பட்டு வந்து தடுத்து, யாவருக்கும் முத்தி கொடுத்தார் என்பது புராண வரலாறு.

இந்தக் கோட்புலிநாயனூர் வாலாற்றிலே சுந்தரமூர்த்தியும் ஏதோ ஓர் இடத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறார். பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு வரும் வழியில் சுந்தரர் நாட்டியத்தான் குடிக்கும் வந்தார். வந்தவரைக் கோட்புலி வணங்கி, ஏற்கெனவே இவரது நட்புரிமை பூண்டவராகையால், சுந்தரருக்கு விருப்பமுள்ள பல வாசனைத்திரவியங்களையும் பட்டு முதலியவற்றையும் சாத்தி, உணவும் அளித்து மகிழ்ந்தார். சுந்தரர் அழகு சாதனங்களிலும் பட்டுப்பீதாம்பரங்களிலும் பொன்னிலும் மணியிலும் அதிகம் விருப்பமுள்ளவர் என்பதைக் கோட்புலி நாயனூர் நன்றாய் அறிவார்போலும்! எல்லாம் பரிமாறி உபசாரம் முடிந்தபின் கோட்புலி தம் உள்ளத்தில் வைத்திருந்த எண்ணத்தைத் காரியத்தில் நிறைவேற்றக்கருதி, தமது புதல்வியராகிய சிங்கடி, வனப்பகை என்ற இரு நங்கையரையும் அழைத்து, சுந்தரர் முன்னிலையில் நிறுத்தி, ''சுவாமி! இவர்கள் அடியேன் பெற்ற மக்கள். இவர்களை அடிமையாகக் கொண்டருளவேண்டும்'' என்று வேண்டிக்கொண்டார். பரவையிடம் ஏற்கெனவே நாட்டம் கொண்ட சுந்தரருக்கு இது பொருத்தமாய்த் தோன்றவில்லை. உடனே அவர், ''அப்படியா, நல்லது. இவர்கள் எனது சொந்தப் புதல்விகளாக இருக்கக்கடவர்'' என்று வாழ்த்தினார்.

சுந்தரர் தேவாரத்தில் பல இடங்களில் அவர் தம்மைச் சிங்கடியப்பன், வனப்பகையப்பன் என்று குறிப்பிட்டுப்பாடியிருப்பதைக் காணலாம்.

ஆடிமாதம் கேட்டை நட்சத்திரத்தில் இந்த ஸ்தலத்தில் நடவு உற்சவம் நடைபெறும். சுந்தரர் இங்கு முதலில் வந்தபோது நிகழ்ந்ததாக ஒரு கர்ணபரம்பரைக் கதையுண்டு. சுந்தரர் வருகிறார் என்று அறிந்த இறைவன் ஒரு சிறு விளையாட்டு நடத்தினார். கோயிலில் சுவாமி இல்லையென்பதைச் சுந்தரர் கண்டவுடன் வெளியே எங்கு சென்றார் என்று தேடினாராம். அங்கிருந்த விநாயகர் ''ஈசான திசையில் போய்ப்பாரும்'' என்று கைகாட்டினாராம். கை காட்டி விநாயகர் என்ற விக்கிரகம் இப்போது அங்கிருக்கிறது. அந்தத் திசையில் சுந்தரர் போய்ப் பார்க்கும்போது சுவாமி நாற்றுக்களைப் பறித்துக்கொண்டிருக்க அம்பாள் நடவு நட்டுக்கொண்டிருந்தார். சுந்தரர் உடனே, ''நட்ட நடவில் நாழி நடலாம், நாழி நடாக்குழி சேறு கிடக்கட்டும், நட்டது போதும் கரையேறி வாரும் நாட்டியத்தான் குடி நம்பீ'' என்று சொன்னதாக ஐதிகம். இந்தப்பாட்டு எந்த நூலில் உள்ளதோ தெரியாது. நாட்டியத்தான்குடியில் நாங்கள் சந்தித்த சிங்கார சுப்பிரமணியக் குருக்கள் என்பவர் சொல்லக் கேட்டு எழுதிக்கொண்டோம். சுவாமி உடனே மறைந்துபோய், கங்கையும் பாம்பும் புலியுடையுமாய்த் தோன்றியவுடன் சுந்தரர் ''பூணன் ஆவதோர் அரவங்கண்டஞ்சேன்'' என்ற நாட்டியத்தான் குடிப்பதிகத்தைப் பாடினார் என்று அந்தக் குருக்களே சொன்னார்.

நாட்டியத்தான்குடி கோயில் அவ்வளவு பிரசித்தி பெறவில்லை. பாதுகாப்பும் அங்கு காணப்படவில்லை. ஆடிமாதம் கேட்டை நட்சத்திரத்தில் சுந்தரமூர்த்தி நடவு உற்சவம் முடிந்தபின் கோட்புலி நாயனார் வரலாற்று உற்சவம் நடக்கும். இதில் மரப் பொம்மைகளை வைத்து சம்ஹாரம் செய்வார்களாம்.

பொழுது சாயும் வேளையாகி விட்டதால் திருவாரூருக்குத் திரும்பப் புறப்பட்டோம். நாட்டியத்தான்குடி கோயிலுக்கு எதிரே ஒரு பெரிய வீடு. அதன் எதிரில் கீற்றுப் பந்தல் போட்டு அதில் ஜமக்காளம் விரித்துப் பட்டுத் தலையணையில் சாய்ந்தபடி ஒரு பண்ணையார் வீற்றிருந்தார். எதிரே ஒரு பணியாளன் கை கட்டி உத்தரவுக்குக் காத்து நிற்கிறான். பண்ணையாரின் மனைவி, காப்பி வெற்றிலை சகிதம் அவர் முன் வருகிறாள். ''இந்த ஊரில் இவர் பெரிய பெண்ணை'' என்று தெரிவிக்கிறார் குருக்கள். அவர் பெயர் ஏழுவேலிப் பண்ணை. இந்த இருபதாம் நூற்றாண்டுப் பிற்பகுதியிலும் இக்காட்சியைக் காணமுடிகிறது என்ற சிந்தனையோடு திருவாரூருக்குத் திரும்பினோம்.

கணம்புல்ல நாயனார் (தாராசுரம்) - பக். 63



சீர்காழி சட்டைநாதர் கோயில் - பக். 67



சீர்காழி திருக்குளம் - பக். 67



திருக்கோலக்கா - பக். 67



ஆதனூர் - பக். 75



திருப்புன்கூர் நந்தன் குளம் – பக். 74



திருப்புன்கூர் நந்தி – பக். 74

ஓமகுளமும் நடராஜர் கோயிலும் - பக். 64



திருவீழிமிழலை கல்யாணசுந்தரர் - பக்.168



நனிபள்ளி விமானம் - பக். 82



பல்லவனீச்சரம் - பக். 85



சாயாவனம் சம்பாபதி கோயில் – பக். 91

திருக்கடவூர் - பக். 95

கொரநாடு - பக். 103



ஆயிரத்திலொருவர் - பக். 100

சிறப்புலி நாயனார் - பக். 101



சம்பாபதி - பக். 91

நந்தனார் - பக். 74

21. தூது நடந்த தெரு

சிதம்பரமும் திருவாரூரும் நமது தமிழ்நாட்டின் சரித்திரங்களுக்கு வேண்டிய மிக முக்கியமான கல்வெட்டுச் சாசனங்களைக் காப்பாற்றி வந்திருக்கின்றன. சோழ மன்னன் ராஜ ராஜன் காலத்திலிருந்து பல அரசர்கள் ஆட்சியில் அவ்வப்போது நிகழ்ந்த சில தருமங்கள், கட்டளைகள், வழக்குகள், தீர்ப்புக்கள், ஆணைகள் என்பன இந்தச் சாசனங்களில் அழியாத கல்லெழுத்துக்களாகக் காணப்படுகின்றன. இவற்றில் சிலவற்றைப் படித்தபின் சேக்கிழார் பெரியபுராணம் பாடியகாரணத்தைப் பற்றிச் சிந்திக்கச்செய்கிறது.

சேக்கிழார் மந்திரிப் பதவி வகித்தது அநபாயன் என்ற இரண்டாம் குலோத்துங்க சோழனுக்கு. அந்த அரசன் சமண இலக்கியமாகிய சீவக சிந்தாமணியைப் போற்றியதைக் கண்ட சேக்கிழார் சைவ நாயன்மார்களது வரலாறுகளை எடுத்துச் சொல்லி சைவத்தின் சிறப்பை விளக்கிய பின் அந்த வரலாறுகளைக் காப்பியமாகப் பாடச் சொன்னான் என்பது கதை. உமாபதிசிவாசாரியார் எழுதிய சேக்கிழார் புராணத்தில் இந்தக் கதை ஆரம்பித்தது.

ஆனால் திருவாரூர் பூங்கோயிலிலுள்ள பல கல்வெட்டுகளைக் கொஞ்சம் நுணுகி ஆராய்ந்து பார்த்தால் சில உண்மைகள் புலப்படும். அநபாயச் சோழன் என்ற இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சி செலுத்திய காலம் கி. பி. 1123 முதல் 1146 வரை. இவன் தந்தை பரகேசரிவர்மன் விக்கிரமசோழன் ஆட்சிக்காலம் கி. பி. 1118 முதல் 1133 வரை. தந்தையும் மகனும் 1123 முதல் 1133 வரை ஒன்றுபோலிருந்தே ஆட்சி செய்தார்கள் என்று புலப்படுகிறது. விக்கிரமசோழன் ஆட்சியின் ஐந்தாம் ஆண்டிலே, அதாவது கி. பி.

1122ல், திருவாரூர் கோயில் இரண்டாம் பிராகாரத்தின் வடக்குச் சுவரில் பொறித்துள்ள கல்வெட்டில் மனுநீதிச் சோழன் வரலாறு காணப்படுகிறது. சேக்கிழார் இதைத் தமது புராணத்தில் நகரச் சிறப்புக் கூறும்போது விவரிக்கிறார். அதே கல்வெட்டில் 'தூது நடந்த தெரு' என்ற பெயரும் காணப்படுகிறது. சுந்தர மூர்த்திக்காக இறைவன் தூது நடந்த சம்பவம் பல ஆண்டுகளாகத் தெரியவந்திருந்த விஷயம் என்பது புலனாகிறது. அநபாயச் சோழன் பெயரே பல கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. பூங்கோயில் ஆண்டு தோறும் ஐம்பத்தாறு திருவிழாக்களை நடத்துவதுபற்றி ஒரு கல்வெட்டிருக்கிறது. அநபாயனின் ஆட்சியின் ஏழாம் ஆண்டிலே அவன், ''ஆளுடைய நம்பி என்ற சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் அவர் மனைவி பரவையாருக்கும். ஆளுடைய பிள்ளையார் என்ற திருஞான சம்பந்தருக்கும் வாக்யாதிபதி என்ற திருநாவுக்கரசருக்கும் ஆரூர் கோயிலில் சில தர்மங்களைச் சாசனம் செய்துள்ளான்'' என்று ஒரு வடமொழிக் கல்வெட்டு கூறுகிறது. இந்தத் தர்மச் சொத்துக்களைத் தனக்குப் பின் வரும் அரசர்களும் காப்பாற்ற வேண்டுமென்று அந்தக் கல்வெட்டிலேயே ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆளுடைய நம்பியின் தாயார் இசைஞானியார் பிறந்த 'லக்ஷ்மி ஆலய'த்தில் இந்தக் கல்வெட்டு பதிக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறுகிறது. திரு-ஆர்-ஊர் என்பது லக்ஷ்மி ஆலயம் அல்லது கமலாலயம்.

இங்ஙனமாக அநபாயன் காலத்திலும் அவன் தந்தை விக்கிரம சோழன் காலத்திலும் நாயனார்களைப் பற்றிய கதைகள் வழிவழி நினைவிலும் வழிபாட்டிலும் வந்துகொண்டிருந்தன. பத்தாம் நூற்றாண்டிலேயே ராஜராஜ சோழன் பல கோயில்களில் தேவார நாயன்மார்களின் 'திருப்பதியம்' பாடவேண்டுமென்று கட்டளை பிறப்பித்திருந்தான். அதன்பின் ராஜேந்திர சோழன் காலத்தில் தேவார நாயன்மார்களோடு, மெய்ப்பொருள் நாயனார், சிறுத் தொண்ட நாயனார் முதலிய அடியார்களின் விக்கிரகங்கள் தஞ்சைப் பெரிய கோயிலில் வடித்து வைக்கப்பெற்றன. அதைத் தொடர்ந்து மற்றும் பல கோயில்களிலும் அறுபத்துமூன்று நாயனார்களில் சிலருடைய விக்கிரகங்கள் வழிபாட்டுக்குரியவையாக வைக்கப் பெற்றன. அநபாயச் சோழனின் பத்தாவது ஆட்சியாண்டில் நிறுவப்பட்ட ஒரு கல்வெட்டில் தேவாசிரிய மண்டபத்தில் கூடும் அந்தணர்களுக்கு, திருவாரூர் சுவாமியின் நிலங்களை உபயோகிப்பதில் வரி விதிக்க வேண்டியதில்லை என்று சாசனம் கூறுகிறது. இந்தச் சூழ்நிலையில் அநபாயச் சோழன், தனது ஆட்சிக்காலத்து ஏழாம் ஆண்டிலேயே நாயனார் வழிபாட்டில் ஈடுபட்டவன், ''சமண இலக்கியத்தில் ஈடுபட்டிருந்

தான்'' என்று சொல்வது நம்பத்தக்கதாயில்லை. சமண காவிய மாகிய சீவக சிந்தாமணி போன்ற ஒருசைவ காவியம் இயற்றும்படி சேக்கிழாரை அவன் ஊக்குவித்திருப்பான் என்று ஒருவேளை சொல்லலாம். இதுவே பொருத்தமாயிருக்கும். கம்பராமாயணத் தைப் பற்றிய கதையை அப்படிச் சொல்வதுண்டு. ஆனால் அது பெரியபுராணத்துக்குப் பின்னர்தான் எழுதப்பட்டது.

திருவாரூரின் புராதனத் தன்மையைத் திருநாவுக்கரசு நாயனார் தமது தாண்டகங்களில் பல இடங்களிலே குறிப்பிடுகிறார். சுந்தரமூர்த்தி இங்குள்ள இறைவன் தமக்குத் தோழனாகப் பரவை நாச்சியாரைத் தந்தான் என்று ஒரு தேவாரத்தில் வெளிப்படை யாகவே சொல்கிறார்.

கிருஷ்ணதேவராயர் காலத்தில் திருவாரூரில் சில விரும்பத் தகாத காரியங்கள் நடைபெற்றன என்று தெரிகிறது. கோயில் அர்ச்சகர்கள் தமிழ் நாட்டிலே சில சில தலங்களைச் சேர்ந்த குடும்பங்களின் வாரிசுகளாயிருக்கக் காணலாம். ஒரு காலத்தில் திருவாரூரில் திருவீழிமிழலை அந்தணர்கள் பூசை விஷயங்களில் ஈடுபட்டிருந்தனர். அப்போது திருவிழா ஒழுங்காக நடத்தாமலே அங்குள்ள பட்டர்கள் சிலர் கொடியிறக்க எத்தனிக்க, அதனைக் கண்டு தத்துவப் பிரகாசர் என்ற சைவப் புலவர் மனஞ்சகியாமல், கிருஷ்ணதேவராயருக்கு முறையிட்டாராம். அவர் பாடிய பாடல்கள் சில கிடைத்துள்ளன.

மருவு புகழ்க் கிருட்ண மகராச ராணை
அரிய வடமலையா ராணை—திருவாரூர்
பாகற் கொடியறுப்பார் பாதந் திருவாணை
தியாகக் கொடியிறக்காதே.

(தியாகராஜருடைய உற்சவங்களிலே பாகற் கொடியறுத்தல் அல்லது பாகல் வேட்டை என்ற விழாவும் ஒன்று).

கிருஷ்ணதேவராயருக்கு புலவர் தத்துவப்பிரகாசர் உடனே விண்ணப்பித்தார்:

ஊழித்துலுக்கல்ல ஒட்டியான் தானுமல்ல
வீழித்துலுக்கு வந்து மேலிட்டே—ஆழி
சிறந்த திரு வாரூர்த் தியாகருடைப் பூசை
இறந்ததே கிருட்டிண ராயா

(ஊழித்துலுக்கு-முகமதியர்; ஒட்டியான்-கலிங்கர்; வீழித்துலுக்கு-திருவீழிமிழலைப் பிராமணர்).

கிருஷ்ணதேவராயர் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டு உடனே விசாரணை செய்து திருவீழிமிழலையாரை அங்கிருந்து அகற்றிவிட்டார். இங்ஙனம் நடவடிக்கை எடுத்தபின் தத்துவப் பிரகாசர் பாடினார்:

உண்ட வயிற்றி லுமிக்காந்த லிட்டதே
தொண்டரே வீழித் துலுக்கரே—பண்டெல்லாம்
அப்பம் அவல் என்று அதிரசமும் தோசைகளும்
கப்புவது போச்சே கவிழ்ந்து.

பின்னொருமுறை அறுபத்து மூவர் விக்கிரகங்களில் இரண்டை நாகரச நம்பி என்ற அர்ச்சகரோ அல்லது அதிகாரியோ வெட்டியுருக்கியதைத் தத்துவப்பிரகாசர் அறிந்து கிருஷ்ணதேவராயருக்கு அறிவித்தார்:

முன்னூளறுபத்து மூவர் இருந்தார் அவரில்
இன்னூளிரண்டுபேர் ஏகினர்—கன்னூன்
நருக்குகின்றான் விற்றுவிட்ட நாகரச நம்பி
இருக்கின்றான் கிருட்டிண ராயா!

பழைய பஞ்சலோகப் படிமங்கள் இப்படி அந்தக் காலத்திலேயே திருட்டுப் போனவைதான்!

திருவாரூரில் சுந்தரமூர்த்தியைப் பின்பற்றி வந்த சமயத்தில் இப்படிப் பல ருசிகரமான செய்திகள் கிடைத்தன. சுந்தரமூர்த்தி இங்கு சில நாள் தமது காதலி பரவை நாச்சியாருடன் தங்கியிருக்கவிட்டு நாம் புறப்படுவோம். அவரது அடுத்த யாத்திரையில் மீண்டும் சந்திப்போம். இதற்கிடையில், சீர்காழியில் நமது குழந்தை நாயனார் ஞானசம்பந்தரைச் சந்தித்து, அவருடன் பல தலங்களுக்கு யாத்திரை செய்ய வேண்டும். சேக்கிழார் நமக்கு வழிகாட்டுவார். அங்கங்கே மற்றும் பல நாயன்மார்களையும் சந்திப்போம். பின்னர் அப்பர் சுவாமிகளையும் சந்திக்க வேண்டும். ஆகையால் இப்போது திருவாரூரில் நண்பர் தக்ஷிணமூர்த்திக்கும் வித்வான் இரத்தின தேசிகருக்கும் நான் நன்றி கூறிவிட்டுப் புறப்படுகிறேன். சீர்காழியில் சிட்டியும் வேணுவும் காத்திருப்பார்கள். ராதாகிருஷ்ணன் வண்டியைத் தயார் செய்து தன் வழக்கமான அறுபது கிலோ மீட்டர் வேகத்தில் பதறாமல் நகருகிறார்! கொஞ்சம் அவசரமாகப் போகவேண்டும், எண்பது கிலோ மீட்டரைத் தொடுங்கள் என்றால் அவர் கால் மிதிக்க மறுத்துவிடும். அது அவர் சுபாவம். வேகமே தெரியாத மனுஷன்!

22. பாணர் திருப்பதி

சீர்காழியில் ஞானசம்பந்தர் தங்கியிருந்த காலத்தில் அவருடன் யாழ் வாசித்துப் பின்சென்ற திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார் ஒரு நாள், ''தேவாரீர் எனது பிறந்த இடமாகிய எருக்கத்தம்புலியூருக்கு வந்து அந்த ஸ்தலத்தைப் புனிதப்படுத்த வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார். யாழ்ப்பாணரின் மனைவி மதங்கசூளாமணியும் அதே விதம் வேண்டிக் கொண்டதால் சம்பந்தர் உடன்பட்டு, எருக்கத்தம்புலியூருக்கு யாத்திரை போனார் என்று சேக்கிழார் சொல்கிறார்.

சைவ நன்மக்களால் கவனிக்கப்படாமல், மடாதிபதிகளால் நினைத்துக்கூடப் பார்க்கப்படாமல் சீரழிந்து போய்க் கொண்டிருக்கும் ஸ்தலங்களிலொன்று எருக்கத்தம்புலியூர். நாங்கள் அங்கு போன சமயம் அந்தக் கோயில் இருந்த நிலையைப் பார்த்து வருந்தினோம். திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவர் மனைவி மதங்கசூளாமணியும் வாழ்ந்த ஊர் அது. இவர்கள் தோன்றியிராவிட்டால் நமது தேவாரப் பாக்களைப்பற்றி எவரும் ஒன்றும் அறிந்திருக்க முடியாது என்று சொல்லவேண்டும். சம்பந்தப் பெருமானின் இன்னிசைக்குத் திருநீலகண்டயாழ்ப்பாணர் யாழ் வாசித்தார். அந்த இசையமைதியின் இலக்கணங்களைப் பரம்பரைப் பாணர் குல இசையரசி மதங்கசூளாமணி அவ்வப்போது நெட்டுருச் செய்து அவருக்குப் பின் வந்தோரிடம் ஒப்படைத்தமையால்தான் இன்று நமது புராதனத் தமிழிசையின் பண் முறையைத் தெரிந்துகொள்ள ஏதுவாயிருக்கிறதென்பதை நாம் மறந்துவிட்டோம். தில்லையில் நம்பியாண்டார் நம்பியின் உதவியால் தேவாரத் திருமுறைகளைக் கண்டெடுத்த ராஜராஜ சோழன் அத்தேவாரங்களின் பண்களையும் பாடும் முறையையும் தேடும்போது, எருக்கத்தம்புலியூர் மதங்கசூளாமணியின் வழித் தோன்றலாகிய மற்றொரு பெண்மணியே பண்முறையை வகுத்துக் கொடுத்தாள் என்பது சரித்திரம். எருக்கத்தம்புலியூரில் இன்று பாணரைக் காண முடியாது. ஆனால் இசை வேளாளர் என்ற நாதஸ்வரக் கலைஞர்கள் பலர் வாழ்கின்றனர்.

எருக்கத்தம்புலியூர் என்றுல் பலருக்குத் தெரியாது, ராஜேந்திரப் பட்டினம் என்றுல்தான் தெரியும். ராஜராஜன் மகன் ராஜேந்திரன் பெயரால் ஏற்பட்டது இந்தப் பெயர் என்று சொல்வார்கள். விருத்தாசலத்துக்குத் தெற்கே ஏழரைமைல் தூரத்திலுள்ளது ராஜேந்திரப் பட்டினம். முன்னெரு காலத்தில் நைமிசாரண்ய முனிவர்கள் இங்கு மரங்கள் வடிவமெடுத்து நின்று தவஞ்செய்தபோது, உண்மையை அறியாத வேட்டுவர் அந்த மரங்களைத் தறிக்க எத்தனித்தனராம். இதையுணர்ந்த இறைவன் அம்மரங்கள் யாவற்றையும் வெள்ளெருக்குகளாக்கி விட்டாராம். வெள்ளெருக்கு விறகுக்கு உதவாதாகையால் வெட்டாமல் விட்டு விட்டார்கள். இப்போது கோயிலில் இந்தப் புராணக் கதைக்கு ஆதாரமாக ஒரு எருக்கஞ் செடி ஸ்தல விருக்ஷமாக நின்று கொண்டிருக்கிறது. கோயிலிலுள்ள சுவாமிக்கு நீலகண்டர் என்ற பெயரோடு குமரேசர் என்ற பெயருமுண்டு. அம்பாளின் பெயர் வீரமுலையம்மன். இங்கே திருநீலகண்டயாழ்ப்பாணர், மதங்க சூளாமணியாகிய இருவருடைய உருவமும், சம்பந்தர் உருவமு மிருக்கின்றன. ஒரு காலத்தில் மிகச் சிறந்த நடராஜ விக்கிரகம் ஒன்று இங்கிருந்ததென்றும், பழைய தர்மகர்த்தா ஒருவர் அதை எவருக்கோ விற்றுவிட்டார் என்றும் கோயிலில் பூசை செய்து கொண்டிருந்த அர்ச்சகர் எங்களுக்குச் சொன்னர். அது இப்போது பாரிஸ் நகரின் பொருட்காட்சி சாலையில் இருப்பதாக நம்பப் படுகிறது.

திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனர் சம்பந்தரைச் சந்திக்கு முன்னரே உயர்பதவியாகிய நாயனர் பதவியைப் பெற்று விட்டார் என்று சேக்கிழார் தெரிவிக்கிறார். இவர் தமது யாழிலே பரமசிவனுடைய திருப்புகழை வாசித்துவரும் நாளில் ஒருநாள் மதுரைக்குச் சென்று சொக்கநாதரின் கோயிலுக்கு வெளி வாசலில் நின்று யாழ் வாசித்தார். பாணர் என்ற கீழ்க்குலத்தவராகையால் வெளியே நின்று வாசித்தார். இதைக் கண்ட இறைவன், வேதியர்களின் கனவிலே, ''யாழ்ப்பாணரை உள்ளே அழைத்து மண்டபத்தில் வாசிக்கச் சொல்லுங்கள்'' என்று அறிவித்தார். அதன்படியே யாழ்ப்பாணர் உள் மண்டபத்தில் தரையிலே உட்கார்ந்து வாசிக்கும்போது ''பாணர் யாழ் நிலத்தில் பட்டால் குளிர் தாக்கி அதன் சுருதி கலையும். ஆகையால் அவருக்கு ஒரு பலகை கொடுங்கள்'' என்று அசரீரி பிறந்ததாம். உடனே வேதியர்கள் ஒரு பலகை கொடுத்து மரியாதை செய்தனர் என்று சொல்லப்படுகிறது. இவர் திருவாரூருக்குப் போனபோது, தனியாக வடக்குப் பிராகாரத்தில் சுவாமி ஒரு வழி திறந்து கொடுத்தார் என்றும் சொல்கிறார்கள். இந்தப் பாணர் சம்பந்த

ருடன் சேர்ந்த பிறகு, தருமபுரத்திலும் சாத்தமங்கையிலும் நிகழ்ந்த வரலாற்றை அந்த ஊர்களுக்கு நாம் போகையில் தெரிந்துகொள்வோம். சம்பந்தர் இந்த எருக்கத்தம்புலியூரைத் தரிசித்தபின், ''பாணரே, உம்மால் இந்த ஊர் பெருமை பெற்றது'' என்று சொல்லிவிட்டு, தமது பரிவாரத்துடன் விருத் தாசலம் சென்றார். நாங்களும் அங்கே சென்றோம்.

விருத்தாசலம் தென்னாற்காட்டில் ஒரு முக்கிய நகரம். ஆனால் அங்கு தங்குவதற்கு இடவசதி கிடைக்காமல் நாங்கள் பலமணி நேரம் அவஸ்தைப்பட்டோம். முதலில் அரசாங்கத்தின் பொறுப்பிலுள்ள ''பயணிகள் விடுதி''யில் போய்ப் பார்த்தோம். அங்கே சுமார் இரண்டு மணி நேரம் காத்திருந்தும் காவற் காரனையோ விடுதிப் பொறுப்பாளரையோ காணமுடியவில்லை. அவர்கள் எங்கே போனார்கள் என்று கேட்டுத் தெரிந்து கொள்ள வும் முடியவில்லை. விடுதியில் இரண்டு பெரிய அறைகள் காலி யாகவே இருந்தன. சாளரங்கள் திறந்திருந்ததால் அதன் வழியே பார்த்துத் தெரிந்துகொண்டோம்.

தமிழ் நாட்டில் யாத்திரை செய்பவர்களுக்கு அந்தக் காலத் தில் பல தர்மவான்கள் சத்திரங்கள் கட்டி இலவசமாகத் தங்க வசதி செய்து வைத்திருந்தார்கள். அந்தச் சத்திரங்கள் சில இப்போது அழிந்து போய்விட்டன. மற்றும் சில வேறு உபயோகங்களுக்கு ஆகிவிட்டன. இந்தக் காலத்தில் முக்கியமான பெரிய ஸ்தலங்களில் ஹோட்டல்கள் என்ற தங்கும் விடுதிகள் வியாபாரிகளால் கட்டிவிடப்பட்டுப் பலவித வசதிகளுடன் இருக்கின்றன. ஆனால் எல்லா யாத்திரிகர்களும் இந்த ஹோட்டல் களுக்குக் கொடுக்கக்கூடிய பண வசதியுள்ளவர்கள் என்று சொல்லமுடியாது. அரசாங்கம் 'சுற்றுலா மாளிகைகள்' என்றும் பயணிகள் விடுதிகள் என்றும் சிற்சில இடங்களில் கட்டி வைத் திருக்கின்றனர். சுற்றுலா மாளிகைகள் என்பவை முக்கியமாக வெளி தேசப் பிரயாணிகளுக்காகையால் சாதாரண தமிழர் களுக்குக் கட்டுபடியாகாத வாடகைகள். பயணிகள் விடுதிகளைப் பெரும்பாலும் அரசாங்க உத்தியோகத்தர்களே உபயோகிப் பார்கள். இவற்றுக்கு பல நாட்களுக்கு முன்னரே அறிவிப்புக் கொடுத்து, நாட் கணக்காகவும் வாரக் கணக்காகவும் இந்த விடுதி களிலுள்ள அறைகள் 'ரிசர்வ்' செய்யப்பட்டுவிடுகின்றன. சில சமயங்களில் மூன்று நான்கு வாரங்கள் ஒரு விடுதியின் அறைகள் 'ரிசர்வ்' என்ற பெயரில் திறக்காமல் ஆனால் காலியாக இருக்கும். நம்மைப் போன்ற யாத்திரிகர்கள் போனால், ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் மாத்திரம் தேவைப்பட்டாலும், விடுதிக்

காப்பாளர் கொடுக்கமாட்டார். விஷயமறிந்தவர்கள், காப்பாளருக்கு ருசி காட்டினால், அதாவது விசேஷமாகத் தனிப்பணம் கொடுத்தால் இடம் கிடைக்கும். பல இடங்களில் பயணிகள் விடுதியென்பது பயணிகளுக்கே உதவாத விடுதிகளாயிருப்பதுதான் தமிழ்நாட்டில் யாத்திரை செய்பவர்களுக்கு எதிர்ப்படும் பெரும் குறை. சுற்றுலா என்ற ஒரு துறைக்குத் தமிழ்நாட்டு அரசாங்கம் தனி மந்திரியும் அதிகாரிகளும் வைத்திருக்கிறது. முக்கியமான சுக வாசஸ்தலங்களாகிய ஊட்டி, கொடைக்கானல் முதலிய வெளிநாட்டார் விரும்பும் இடங்களில் மேல் நாட்டு வசதியைக் கவனிக்கிறார்களல்லாமல், உள்ளூர் வழிப் போக்கர்களுக்கு அங்கங்கே தங்கக்கூடிய வசதியான விடுதிகளைப்பற்றி அக்கறை கொள்வதில்லை என்பது பலர் அனுபவத்தில் கண்டது.

விருத்தாசலப் 'பயணிகள் விடுதி' நமக்கு உதவமாட்டாது என்று கண்டவுடன் நகரத்தில் பல தெருக்களையும் சுற்றிப் பார்த்து நல்ல ஹோட்டல் ஒன்று தேடினோம். இரண்டொன்று இருந்தன. ஆனால் மனிதர் தங்கக்கூடிய இடங்களாயிருக்கவில்லை. கடைசியில் சலித்துப்போய்த் திரும்புகையில் ஒரு புதிய கட்டடம் தெரிந்தது. அப்போதுதான் வெள்ளையடித்து முடிந்த கட்டடம். புருக்கூண்டு போன்ற அறைகள். நல்ல வேளையாகத் தண்ணீரும் மின்சார விசிறியும் இருந்தன. அன்றிரவு அங்கே தங்கி ஒருவாறு நமது யாத்திரையைப் பூர்த்தி செய்தோம்.

திருமுதுகுன்றம் கோயிலுக்குத் தேவார நாயன்மார்கள் வந்து பாடியிருக்கிறார்கள். சுந்தரமூர்த்தி வந்து போனது ஒரு தனிக் கதை. எங்கு போனாலும் சுந்தரர் பரவையாருக்கு ஏதாவது பொன்னோ மணியோ கேட்பது வழக்கம். இங்கேயும் அவர் கேட்டபோது இறைவன் மறுக்காமல் பன்னிரண்டாயிரம் பொன் கொடுத்தாராம்! அதனைப் பெற்றுக்கொண்டு சுந்தரர், ''இந்தப் பொன்னையெல்லாம் நான் எப்படி திருவாரூருக்குக் கொண்டு செல்வேன்?'' என்று கலங்கியபோது, ''கவலைப்படாதே, இங்கே பக்கத்திலுள்ள மணிமுத்தாற்றிற் போட்டுவிட்டு ஊருக்குப்போய்க் கமலாலயக் குளத்திலே எடுத்துக்கொள்ளலாம்'' என்று இறைவன் சொன்னார். ஆனால் சுந்தரருக்கு ஒரு சந்தேகம்! ''இங்கு ஆற்றில் போடும் பொன்தானா அங்கே கிடைக்கும்? ஒருவேளை மாற்றுக் குறைந்து விட்டாலோ?'' என்றுதான் சந்தேகம்! உடனே அந்தப் பொன்னில் ஒரு சிறுதுண்டு மச்சமாக வெட்டிப் பக்கத்திலிருந்த விநாயகரிடம் காட்டினார். விநாயகர் அதை உரைத்துப் பத்தரை மாற்றுப் பசும்பொன் என்று உறுதி கூறிவிட்டார். திருவாரூருக்குப்

போன சுந்தரர், அவசர அவசரமாகக் கமலாலயக் குளத்திலே இறங்கி அந்தப் பொன்னைத் தேடினார். இதைக் கண்ட பரவையார் என்ன தேடுகிறீர்கள் என்று கேட்டபோது, "விருத்தாசலம் மணிமுத்தாற்றில் கொஞ்சம் பொன் போட்டு வைத்தேன், அதை இங்கே தேடுகிறேன்" என்றார்! பரவையாருக்கு ஒரே சிரிப்பு. "ஆற்றிலே போட்டுவிட்டுக் குளத்திலே தேடுவார்களா?" என்று கேலி செய்தார். சுந்தரர் மனம் தளராமல், பலமுறை தேடிக் கடைசியில் பொன்னோடு வெளியே வந்தார் என்பது கதை. "ஆற்றிலே போட்டுவிட்டுக் குளத்திலே தேடுதல்" இன்றும் ஒரு பழமொழியாக நிலைத்துவிட்டது.

விருத்தாசலம் முதுகுன்றக் கோயில் அர்ச்சகருடன் பேசிக் கொண்டிருக்கையில் அவர் சுந்தரரைப்பற்றி அந்த ஊரில் கர்ண பரம்பரையாக வழங்கும் ஒரு கதை சொன்னார். முதலில் சுந்தர மூர்த்தி இந்த ஊர்ப்பக்கம் வந்து பார்த்துவிட்டு, "ஊரும் கிழம், பேரும் கிழம்" என்று சொல்லி, இறைவனைப் பாடாமல் போனார். ஊரின்பெயர் முதுகுன்றம் ஆனபடியால் கிழம். சுவாமியின் பெயரும் பழமலைநாதர். சுந்தரர் இப்படித் திரும்பிப்போகையில் ஈஸ்வரன் சுப்பிரமணியரை விடுத்து நாலு பக்கமும் தேடச் சொன்னார். தெற்கே இரண்டு மைல் தூரத்தில் வேடப்பர் கோயில் என்ற இடம் இருக்கிறது. அங்கே சுந்தரரைப் பிடித்து அழைத்து வந்தார்கள். வந்தவுடன் ஈஸ்வரன் பாலாம்பாள் என்ற ஓர் இளவயது அம்மனைச் சிருஷ்டித்து, தானும் பாலரூபமாகக் காட்சியளித்தவுடன் சுந்தரர் மகிழ்ந்தார். அதன் பின்னர்தான் பன்னிரண்டாயிரம் பொன்னும் கிடைத்தது என்பது அர்ச்சகர் சொன்ன கதை.

விருத்தாசலத்திலுள்ள சுவாமியின் பெயர் பழமலை நாதர். ஆனால் அம்பாள் பெரியநாயகி தனியாக ஒரு கோயிலில் இருக்க, சுவாமியின் பக்கத்தில் காட்சியளிப்பவர் இளையநாயகி என்ற பெயர் கொண்ட பாலாம்பாள்! சுந்தரமூர்த்தியின் குணங்களையும் அவர் வரலாற்றையும் முழுமையாகப் படித்தால் அவர் ஓர் அழகுப் பிரியர், வாசனைப் பிரியர், அலங்காரப் பிரியர் என்பது தெரிய வரும். "என்றுமே நீ மாப்பிள்ளைக் கோலத்தோடு விளையாடு" என்று ஈஸ்வரன் வாழ்த்தியதை வைத்து, சேக்கிழார் அங்கங்கே அந்தப் பண்பை விடாமல் காண்பிக்கிறார்.

விருத்தாசலக் கோயில் தமிழ்நாட்டில் மிகப்பெரிய கோயில்களில் ஒன்று. அதன் ஐந்து கோபுரங்களும் எழு நிலை மாடக்கோபுரங்களாகப் பல மைல் தூரத்தில் நாம் செல்லும் போதே நம்மை வரவேற்கின்றன. பக்கத்தில் மணிமுத்தாறு.

இது ஒரு காலத்தில் மணியாகவும் முத்தாகவும் தெளிந்த நீர் ஓடும் ஆருயிருந்திருக்கலாம். ஆனல் இன்று அந்த ஆற்றையே காணவில்லை. ஆற்றின் படுகைதான் தெரிகிறது.

கோயில் உட்பிராகாரம் தென்புறத்தில் ஆழத்துப் பிள்ளையார் விக்கிரகம் இருக்கிறது. இவர்தான் சுந்தரருக்கு மாற்றுரைத்துக் கொடுத்தவர். திருவாரூர் கமலாலயக்குளத்தின் வடகிழக்கு மூலையில் இதே மாற்றுரைத்த விநாயகர் உருவம் வைத்து வழிபடப்படுகிறது. குளத்தில் எடுத்த பொன் அதே மாற்றுள்ள பொன்தான் என்று இந்த விநாயகர் உரைத்து உறுதி கொடுத்தார் என்பது ஐதிகம்! விருத்தாசலக்கோயிலில் இருபத் தெட்டு ஆகமங்களுக்கும் தனித்தனியாக லிங்கங்கள் உள்ளது மற்றெங்குமில்லாத சிறப்பு. கிழக்குக் கோபுர வாயிலில் எழுபத்திரண்டு வகையான தாண்டவ நிருத்தச் சிலைகள் புடைச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன. பதின்மூன்றும் நூற்றுண்டில் தொண்டைநாட்டை சோழரிடமிருந்து வெற்றிகொண்டு ஆண்ட காடவர்கோன் கோப்பெருஞ்சிங்கன் சிதம்பரம் கீழ்க் கோபுரவாயிலில் நூற்றெட்டுத் தாண்டவ சிற்பங்களை ஏற்படுத் தினன் என்று முன்னரே சொல்லியிருக்கிறோம். அதே கோப்பெருஞ்சிங்கன் விருத்தாசலத்திலும் பல திருப்பணிகளைச் செய்த கல்வெட்டுச் சான்றுகள் காணப்படுகின்றன. இசையிலும் நாட்டியத்திலும் திறமை பெற்ற கோப்பெருஞ்சிங்கன் எங்கே போனலும் நடன சிற்பங்களை அமைத்துவிடுகிறன். இதைத் தவிர, ஏழிசை மோக மண்டபம் என்ற பதினெறு கால் மண்டபமும் இருக்கிறது. இசைக்கும் நாட்டியத்துக்கும் அந்தக் காலத்தில் தமிழர்கள் கோயில் மண்டபங்களையே உபயோகித் தனர் என்பது வரலாறு.

23. தாகந்தீர்த்த ஈஸ்வரர்

இந்த யாத்திரையில் நாம் சம்பந்தப்பெருமானேதானே தொடர்ந்து வந்தோம்? அவர் விருத்தாசலத்திலிருந்து தெற்கே திருநெல்வாயில் அரத்துறை என்ற ஸ்தலத்துக்குப் போக எண்ணிப் புறப்பட்டார் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். யாத்திரை செய்யப்புறப்பட்ட நாளிலிருந்து ஞானசம்பந்தர் ஆரம்பத்தில் தந்தையார் தோளில்தான் ஏறிப் பிரயாணம் செய்தார் என்று சொல்லப்படுகிறது. மூன்று வயதில் இசைபாட ஆரம்பித்து, நாளடைவில் ஸ்தல யாத்திரையில் ஈடுபட்டவருக்கு இப்போது கிட்டத்தட்ட ஏழு வயதாகி இருக்க வேண்டுமென்று நம்பலாம். ஏனெனில், இந்த யாத்திரையிலிருந்து திரும்பி சீர்காழிக்குப் போனவுடன் உபநயனம் நடந்ததாகப் புராணம். அது ஏழு வயதில் நடந்தது. இங்கே விருத்தாசலத்திலிருந்து திருநெல்வாயில் அரத்துறைக்குப் போகும்போது அவர் நடந்தே சென்றார் என்று தெரிகிறது. பச்சிளங்குழந்தை அந்த வெயிலில் நடந்து சென்றதென்றால் யார்தான் பொறுப்பார்கள்? அதிலும் ஞானப்பாலையே கொடுத்த இறைவன் தாங்குவாரா? அன்றிரவு ஞானசம்பந்தரும் திருக்கூட்டத்தாரும் மாறன்பாடி என்ற இடத்திலே தங்கியிருந்தபோது நெல்வாயில் அரத்துறை ஈஸ்வரன் சில ஏற்பாடுகளைச் செய்து வைத்துவிட்டார். ஒரு முத்துச்சிவிகை, மேலே பிடிக்க ஒரு குடை, பரிவாரங்களுடன் செல்லும் செலவை அறிவிக்க மற்றும் பல சின்னங்கள்! மறுநாட் காலை நெல்வாயில் அரத்துறை வேதியர்கள் இவற்றையெல்லாம் எடுத்துச்சென்று மாறன்பாடியில் தங்கியிருந்த சம்பந்தரை வரவேற்று, சிவிகையில் ஏற்றி, குடை கவித்து, திருச்சின்னங்களை ஊதி, மங்கல வாத்தியங்களுடன் நெல்வாயில் அரத்துறைக்கு அழைத்துச் சென்றனர். அங்கே சம்பந்தர் சுவாமி தரிசனம் செய்து பதிகம் பாடினார் என்று சேக்கிழார் சொல்கிறார்.

விருத்தாசலத்திலிருந்து புறப்பட்ட நாங்களும் சம்பந்தரைத் தொடர்ந்து திருநெல்வாயில் அரத்துறைக்குப் போகும்போது, விருத்தாசலம் அர்ச்சகர் சொன்ன வேடப்பர் கோயிலைத்

தேடினேம். ஒன்றரை மைல் தூரம் கடந்தபோது, அர்ச்சகர் சொன்ன குறிப்பில் ஒரு சிறு கட்டம் இருக்கக்கண்டு அதுதான் வேடப்பர்கோயில் என்ற திருப்தியோடு மேலும்சென்றோம். பேச்சு சுவாரஸ்யத்தில் இடையில் வந்த பெண்ணாகடம் என்ற முக்கிய மான ஸ்தலத்தையும் மறந்து, சிறிது தூரம் சென்றதும் வெயி லின் கொடுமை தாங்காது தெருவோரம் இருந்த மரத்தடியில் வண்டியை நிறுத்திவிட்டு இறங்கி, பக்கத்தில் கண்ட குழாய்க் கிணற்றில் தண்ணீர் எடுத்துத் தாக சாந்தி செய்தோம். அப்போதுதான் நமது சாரதி ராதாகிருஷ்ணன், ''ஸார், வருகிற வழியில் பெண்ணாகடம் என்ற இடத்தையும் கோயிலையும் பார்க்க வேண்டுமென்று சொன்னீர்களே, அதைத் தவற விட்டாச்சு'' என்று ஞாபகப்படுத்தினர். பெண்ணாடம் என்ற பெண்ணாகடத் தாங்காணை மாடமும் எங்கள் யாத்திரையில் பார்க்க வேண்டிய தொன்று. திருநாவுக்கரசு நாயனாருக்கு இடபமும் சூலமும் குறியிட்ட இடம். கலிக்கம்பர் என்ற மற்றொரு நாயனார் வழி பட்ட ஸ்தலம். ''சரி இவ்வளவு தூரம் வந்துவிட்டோம். திருநெல்வாயில் அரத்துறைக்குப்போய்த் திரும்பிவரும் வழியில் அங்கே தரிசிக்கலாம்'' என்று சமாதானம் சொல்லிக்கொண்டு பக்கத்திலிருந்த மாந்தோப்பில் இளைப்பாறினேம். எதிரே ஒரு கோயில் தெரிந்தது. அவ்வழியால் போய்க்கொண்டிருந்தவர் களிடம் என்ன கோயில் என்று கேட்டபோது, ''இதுதான் இறையூர்'' என்ற பதில் வந்தது. எங்கள் காரியதரிசி வேணு தனது குறிப்புப் புத்தகத்தைப் பார்த்தார். ''சபாஷ்! தேடிய பூண்டு காலில் பட்டது!'' என்று சொல்லிக்கொண்டு எழுந்தார்! ''விருத்தாசலத்து அர்ச்சகர் மாறன்பாடி என்ற இடம் இப்போது இறையூர் என்ற பெயரால் வழங்குகிறது என்று சொன்னதை நாம் எல்லோரும் வெயிலின் உக்கிரத்தில் மறந்துபோய் விட்டோம் பாருங்கள்! இதுதானையா மாறன்பாடி! சம்பந்தர் கனைத்துப்போய்த் தங்கினர். நாமும் அவரைப்போலத் தங்கி விட்டோம். அவருக்கு முத்துச்சிவிகையும் குடையும் கிடைத்தது. நமக்கு மர நிழல் கிடைத்தது. வாருங்கள் கோயிலைப் பார்க்க லாம்!'' என்று ஒரே குதூகலத்தில் துள்ளினர். என்ன ஆச்சரியம்! கோயிலுக்குள் சென்று அங்கிருந்த ஓர் அர்ச்சகரிடம் சுவாமியின் பெயர் என்ன என்று கேட்டோம். அந்தப்பெயரைக் கேட்டவுடன் மயங்கி விழுந்துவிடுவோம் போலிருந்தது. அந்தப் பெயர்தான் ''தாகந்தீர்த்த ஈஸ்வரர்!'' வெயிலில் களைத்துவந்த நாங்கள் குழாய்க்கிணற்றில் தண்ணீர் குடித்தது அந்த மாறன்பாடி ஈஸ்வரனின் செயல்தான் என்று மனமார வாழ்த்தி னேம், வணங்கினேம். நமது செயலாளர் வேணுவுக்கும் ஒரு

நன்றிக் கும்பிடு போட்டுவிட்டு மேலே திருநெல்வாயில் அரத்துறைக்குச் சென்றோம்.

சிவஸ்தலங்களின் பழைய தேவாரப்பெயர்கள் பல மறைந்விட்டன. திருநெல்வாயில் அரத்துறை என்பது இப்போது திருவட்டத்துறை என்றுதான் வழங்குகிறது. நிவா நதிக்கரையியலுள்ளது என்று தேவாரங்களில் காணப்படும் இந்த இடம் வெள்ளாறு என்ற ஆற்றின் கரையில் இப்போது இருக்கிறது. அழகான முறையில் கட்டப்பட்டிருக்கும் இக்கோயிலின் விமானம் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது. தருமபுரத்துத் தம்பிரான் ஒருவர் இதில் தங்கியிருந்து திருப்பணி செய்தார் என்று சொல்லக்கேள்வி. மாசிமகம் திருவிழாவின்போது இங்குள்ளார் விருத்தாசலத்துக்குத் தீர்த்தம் பெறச் செல்வது வழக்கம். இங்கிருந்து உற்சவமூர்த்தி மாறன்பாடி என்ற இறையூருக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து ஞானசம்பந்தருடன் எழுந்தருளி வருவதாகச் சொல்கிறார்கள். நாங்களும் இங்குள்ள அரத்துறைநாதரையும் ஆனந்தநாயகியையும் வழிபட்டபின் திரும்பி பெண்ணாகடத்துக்கு வந்தோம்.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் கலிக்கம்ப நாயனார் என்பவர் ஒருவர். இவர் இந்தப் பெண்ணாகடத்தில் வாழ்ந்து அடியார்களுக்கு உணவளித்துப் பெருந்தொண்டு செய்து நாயனார் பதவியை அடைந்தவர். இவருடைய கதையும் செருத்துணை கழற்சிங்கர் போன்ற வல்வினைக் கதைதான். தினந்தோறும் பல அடியார்கள் இவருடைய வீட்டுக்கு உணவருந்த வருவார்கள். இவரது மனைவியாரும் அடியார்களை உபசரிப்பதில் ஈடுபட்டிருந்தார். ஒருநாள் இப்படிப் பலர் வந்தபோது கலிக்கம்பர் மனைவி நீர் வார்க்க கணவன் அவர்களுடைய கால்களைக் கழுவி உள்ளே அழைத்துச் சென்றார். வந்தவர்களில் ஒருவர் முகத்தை அம்மையார் பார்த்ததும், அருவருப்போடு அவர் கால்களில் தண்ணீர் விடாமல் தயங்கி நின்றார். காரணம், அந்த அடியாராக வந்தவர் முன்பு இவர்கள் வீட்டிலே வேலைக்காரனாகப் பணி செய்தவர். இதுவே கலிக்கம்ப நாயனாரின் மனைவியைத் தயங்க வைத்தது. நீர்விடத் தாமதமாவதைப் பார்த்த கலிக்கம்பர் மனைவியின் முகத்தைப் பார்த்தார்! பின் அடியாரின் முகத்தையும் பார்த்தார். தமது மனைவி தயங்குவதற்குள்ள காரணத்தை யறிந்தவுடன் சட்டென்று முன்பின் யோசிக்காமல் ஒரு வாளை எடுத்து மனைவியின் கையைத் தறித்து விட்டார்! பின் தாமே அடியார்களைக் கவனித்தார். இந்தச் செய்கையே அவரை நாயனார் பதவிக்கு உயர்த்தியது என்று புராணம் கூறுகிறது.

இந்தப் பெண்ணாகடம் பல வகையான சரித்திரப் பெருமை பெற்ற நகரம். சைவசித்தாந்த சாஸ்திரத்தின் முதல் நூல் என்று கருதப்படும் சிவஞானபோதத்தை ஆக்கிய மெய்கண்ட தேவரின் தந்தை அச்சுதகளப்பாளர் வாழ்ந்த ஊர் இது. மெய்கண்டாருக்குப் பின் வந்த மறைஞானசம்பந்தர் என்ற ஆச்சாரியாரும் இந்த ஊரில்தான் பிறந்தவர். மெய்கண்டாரின் மரபில் வந்த கார்காத்த வேளாளர்களே திருவாவடுதுறை ஆதீனத்தில் குருப் பட்டம் தரித்தவர்கள் என்று சொல்லப்படுகிறது. களப்பாளர் என்ற பெயர் இந்தப் பிரதேசத்தில் வழக்கிலுண்டு. இவர்கள் களப்பிர வம்சத்தவர் என்று தவருகச் சில ஆராய்ச்சியாளர் சொல்வார்கள். மெய்கண்டாருக்கு இந்த ஊரில் ஒரு தனி ஆலயம் கட்டி வைத்திருக்கிறார்கள்.

பெண்ணாகடத்திலுள்ள கோயிலைத் தூங்கானைமாடம் என்பார்கள். யானை படுத்திருப்பது போன்ற கர்ப்பக்கிருகம். கஜப்பிருஷ்டவிமானம் என்றும் சொல்வதுண்டு. அன்றியும் இதன் விமானத்தில் படிகள் வைத்து, சீர்காழி சட்டைநாதர் கோயிலில்போல, ஒரு கட்டுமலை வைத்து அதில் ஒரு லிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. இந்தக் கோயிலிலுள்ள சுவாமி பெயர் பிரளயகாலேஸ்வரர். ஒரு காலத்தில் பிரளயம் ஏற்பட்டு வெள்ளம் பெருகியபோது இங்குள்ள இறைவன் நந்தியிடம் சொல்லி வெள்ளத்தைத் தடுத்தார் என்று கதை. அதனால் இக்கோயிலிலுள்ள நந்தி மூலஸ்தானத்தைப் பார்க்காமல் மறுபக்கம் கீழ்த் திசையைப் பார்த்தபடி வைக்கப்பட்டிருக்கிறது. மூலஸ்தானத்திலுள்ளது சோடசலிங்கம் என்ற பதினாறு பட்டை கொண்ட லிங்கம். இது தென்னாற்காட்டில் பல இடங்களில் காணப்படும் ஒரு சிற்பவிசேஷம். இந்த லிங்கத்தை யாவரும் தரிசிக்கக்கூடியதாக மூலஸ்தானத்து நான்கு சுவர்களிலும் சாளரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

திருநாவுக்கரசு நாயனார் திருவதிகையில் சூலைநோய் தீர்க்கப் பெற்று தல யாத்திரையில் வந்தபோது இந்தத் தூங்கானைமாடத்தில்தான் சூலமும் இடபமும் சேர்ந்த சைவ இலச்சினை இறைவனால் பொறிக்கப்பெற்று, தமது பூர்வாசிரம சமணத்திலிருந்து விடுபட்டதற்காகப் பிராயச்சித்தம் செய்துகொண்டார்.

* * *

சம்பந்தமூர்த்தி நாயனாருடன் சென்று சில தலங்களைப் பார்த்தபின் பெண்ணாகடத்திலும் கலிக்கம்பர் வரலாற்றையறிந்து கொண்டு நாங்கள் பழையபடி தெற்கே போகவேண்டியவர்கள்,

வழியிலிருந்த பழம்பெரும் நகரமாகிய கங்கைகொண்ட சோழ புரத்தையும் பார்க்க அங்கே சிறிது தங்கிவிட்டோம். கங்கையும் கடாரமும் ஈழமுங்கொண்டு வெற்றிக்கொடி நாட்டிய சோழப் பேரரசன் ராஜேந்திரன், தன் தந்தையைப்போல் இங்கே ஒரு பெரிய தலைநகரையே நிர்மாணிக்கத் துணிந்து, ஒப்பற்ற ஒரு கோயிலைக்கட்டினான். இக்கோயிலின் வடகிழக்கிலுள்ள தீர்த்தக் கிணற்றுக்குக் கங்கையிலிருந்தே நீர் கொண்டுவந்து சேர்த்தான் என்பர். இவன் தந்தை ராஜராஜனே பெரிய சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தினான். ஆனால் இவனே மேலும் பல வெற்றிகள் பெற்று வடக்கே கலிங்கம் தாண்டி, கோசலம் வென்று வங்கத்தை யும் தன் குடைக்கீழ் கொண்டுவந்தான். சேரனையும் பாண்டியனையும் வென்று ஈழத்தரசனையும் தோற்கடித்து மூவர் முடிகளையும் கைப்பற்றிய இவன் முடிகொண்ட சோழன் என்ற பட்டத்தைப் பெற்றான். இவன் தலைநகர் கங்கைகொண்ட சோழ புரம், முடிகொண்ட சோழபுரம் என்ற பெயர் பெற்றது. ஆனால் விதி வேறுவிதம் நடந்துவிட்டது. பின்னால் ஆத்திரம் கொண்ட மாறவர்மன் சுந்தர பாண்டியன் சோழனைத் தோற்கடித்து முடிகொண்ட சோழபுரத்திலேயே வெற்றிவிழாக்கொண்டாடினான் என்பது சரித்திரம்.

கங்கைகொண்ட சோழபுரம் இன்று ஒரு மரணக்காடாகவே காட்சியளிக்கிறது. எழிலார்ந்த சிற்பங்களெல்லாம் உயிரிழந்திருக் கின்றன. உள்ளேயிருக்கும் நவக்கிரக சிற்பம் புதுமையானது. தேர்போன்ற வடிவத்தில் சூரியன் நடுவிலிருக்க, சனிபகவான் தேரோட்டிபோல் காட்சியளிக்கிறார். மற்றைய கிரகங்கள் சுற்றிவர உள்ளன. இங்குள்ள மகிஷாசுரமர்த்தனி சிலை மிகச் சிறந்ததொன்று. எல்லாவற்றிலும் மேலாக எம்மைக் கவர்ந்த சிற்பம் சண்டேசானுக்கிரக மூர்த்தி. சிவன் சண்டேசருக்குத் தொண்டர் பதவி கொடுக்கும் இந்தக் காட்சிச் சிலை, கங்கை கொண்ட சோழபுரத்தில் வடக்குச் சுவரில் மிகச்சிறந்த முறையில் வடிக்கப்பெற்றிருக்கிறது. சோழ சிற்பிகளின் கை வண்ணம் முழுவதும் இதில் காண்பிக்கப்பட்டுள்ளது. இதைப் பார்த்தவுடன் எங்களுக்கு சண்டேசநாயனாரைப்பற்றிய நினைவு வந்தது. அணைக் கரையை அடைந்து கொள்ளிடம் நதியைத் தாண்டினால், சண்டேசர் பிறந்த சேய்ஞலூரையும் அவர் வழிபட்ட ஆப்பாடி யையும் அடையலாம் என்று தெரிந்தது. ஆகையால் அங்கிருந்த படியே நாங்கள் புறப்பட்டு சேய்ஞலூருக்கு வந்தோம்.

24. சண்டேசுரர் கதை

சண்டேசுர நாயனார் பிறந்த ஊர் சேய்ஞலூர் என்று தெரியும். ஆனால் அந்தப் பெயரைச்சொல்லி ஊரைக் கண்டு பிடிப்பது வெகு சிரமம். நல்லவேளையாக விஷயமறிந்த சிலரிடம் ஏற்கெனவே கேட்டு வைத்திருந்தபடியால் ''சேங்கனூர் எங்கே யிருக்கிறது?'' என்று சொல்லித்தான் வழி கேட்டு இந்த சேய்ஞலூரையடைந்தோம். சிறு கிராமம். அதிலும் அழிந்து போய்க்கொண்டிருக்கும் கோயில். நாங்கள் போன சமயம் பிற்பகல் மூன்று மணி. அந்த வேளையில் அர்ச்சகரோ குருக்களோ அகப்படவில்லை! யாரோ கிராமத்தவர்கள் எங்களைக் கண்டவுடன் உதவிக்கு வந்து குருக்கள் வீட்டுக்கே போய் அவரை அழைத்து வந்துவிட்டார்கள்.

சிவஸ்தலங்களிலே கர்ப்பக்கிருகத்துக்கு இடது புறத்தில் அபிஷேக தீர்த்தம் விழும் கோமுகிக்கு எதிராக ஒரு சிறு சந்நிதி இருக்கும். பிராகாரத்தில் பிரதக்ஷணம் வருபவர்கள் இந்தச் சிறு சந்நிதியிலிருக்கும் உருவத்தை எட்டிப்பார்த்துக் கும்பிட்டு, தாம் அணிந்திருக்கும் உடையிலிருந்து ஒரு துண்டு நூலைக் கிள்ளிப் போட்டு, கையைத் தட்டி சப்தம் செய்துவிட்டுத் தொடர்ந்து பிராகாரத்தை வலம் வருவார்கள். இம்மாதிரிப் பலர் செய்து வருவதைப் பார்க்கிறோம். ஆனால் பெரும்பாலானவர்களுக்கு இது என்ன கிரியை என்று சொல்லத் தெரியாது. ஏதோ ஒருவர் செய்கிறார், மற்றவர் அதைப்பார்த்துத் தானும் செய்கிறார், அவ்வளவுதான். இம்மாதிரித்தான் நமது சமயாசாரங்களில் பலவற்றையும் நாம் அர்த்தம் தெரியாமல் அனுட்டித்துக் கொண்டே வருகிறோம்.

இங்கே சிறு சந்நிதியிலிருப்பவர் சண்டேசுர நாயனார் என்பவர். அறுபத்து மூன்று நாயன்மார்களில் சிவனுக்கு முதல் தொண்டராகக் கருதப்படுபவர். அவர்தான் உற்சவங்களில் வழிகாட்டி; கோயில் காரியங்களிலே செயலாளர்; சிவனது பிரதிநிதி. சிவனுக்கு அளிக்கப்படும் பொருள்களையெல்லாம் பூசை

முடிந்தாலும் நிர்மாலியமாக ஏற்றுக்கொள்பவர். இவருடைய வரலாறு விசித்திரமானது.

வேதாத்தியயனம் செய்யும் அந்தணர் எச்சதத்தன் என்பவர் இந்தச் சேய்ஞலூரில் இருந்தார். இவருடைய பிள்ளை விசாரசருமர் எனபவர். இவருக்கு உபநயனம் செய்யு முன்னரே தெய்வ கடாட்சத்தினால், சகல வேதங்களையும் மற்றும் கலைகளையும் கிரகிக்கும் அறிவு வளர்ந்துவிட்டது. சிறு பையனுகவே மற்றும் அந்தணச் சிறுவர்களுடன் விளையாடிக்கொண்டிருக்கும் பொழுது ஒரு நாள் இவர்களுடைய பசுக்களை மேய்க்கும் இடையன் தன்னை முட்ட வந்த பசுவை ஒரு கோலினால் அடித்தான். இதைப் பார்த்த விசாரசருமன் என்ற அந்தணச் சிறுவன் ஓடிப்போய் அந்த இடையனைத் தடுத்து, ''அப்பா, பசு மிகவும் புனிதமான ஒரு பிராணி. நமது சிவபெருமானுக்கு மிகவும் வேண்டியது. திருநீற்றுக்கு வேண்டிய சாணமும், அபிஷேகத்துக்கு வேண்டிய பஞ்சகவ்வியமும் தருவது பசு. சிவபெருமானுக்குரிய வாகனமாகிய இடபத்தை யருளுவதும் பசுவல்லவா?'' என்று சொல்லிவிட்டு, ''இந்தப் பசுக்களை இனிமேல் நீ மேய்க்கவேண்டியதில்லை. நானே மேய்க்கிறேன்'' என்று கூறி, அன்றிலிருந்து பசுக்காக்கும் தொழிலை அந்தப் பிராமணச் சிறுவன் விசாரசருமனே கவனிக்கத் தொடங்கினான். பசுக்களின் சொந்தக்காரரான மற்றைய பிராமணர்களும் இந்த ஏற்பாட்டை ஏற்றுக்கொண்டனர்.

பசுக்களின் மீது அளவற்ற அன்பு காட்டும் சிறுவனுடன் அந்தப் பசுக்களே நெருங்கிப் பழகின. அவன் கிட்டப்போய் பால் கறக்குமுன்பே தாமாகப் பாலைப் பொழிந்தன. இங்ஙனம் பொழியும் பாலைச் சிறுவன் குடங்களில் ஏந்தி உரியவர்களுக்குக் கொடுத்த பின்பும் பசுக்கள் மடியில் பால் சுரந்து பாயும். உடனே சிறுவன், ''இது சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்ய உதவுமே'' என்று சிந்தித்தவனாய், பக்கத்திலே ஒரு மரத்தடியில் மணலால் ஒரு சிவலிங்கத்தை உருப்படுத்தி, அதைச் சுற்றிலும் மணலாலேயே கோயில் கட்டி வைத்து, பசுக்களில் சுரந்த பாலை எடுத்துச் சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்து, பச்சிலைகளாலும் புஷ்பங்களாலும் அருச்சனை செய்து மகிழ்ந்தான். இப்படித் தினந்தோறும் நடந்துவர, ஒரு நாள் இதைப் பார்த்துவிட்ட சிலர் விசாரசருமரின் தந்தை எச்சதத்தனிடம் போய், ''உன் பிள்ளை பசுக்களின் பாலைக் கறந்து மண் பொம்மை செய்து அதைக் கொட்டி விளையாடுகிறான். அநியாயமாகப் பாலெல்லாம் வீணாகப் போகிறது'' என்று முறையிட்டார்கள். எச்சதத்தன் மறுநாள் அதிகாலையில் வந்து ஒரு மரத்தின்மேலிருந்து தன் பிள்ளை

செய்யும் லீலைகளை நேரிலேயே பார்த்துவிட்டான். அவ்வளவுதான், அடங்காத கோபங்கொண்டு, மணல் லிங்கத்துக்கு அருச்சனை செய்துகொண்டிருந்த சிறுவனின் முதுகில் ஒரு கோலால் ஓங்கி அடித்தான். கருமமே கண்ணுயிருந்த சிறுவனுக்கு அந்த அடி எவ்வித உணர்ச்சியையும் தரவில்லையாகையால், பூசை தொடர்ந்து நடந்தது. எச்சதத்தன் திடீரென்று தன் காலால் பாற்குடத்தை உதைத்துத் தள்ளினான். அப்போதுதான் சிறுவனுக்கு உண்மை தெரிந்தது. தந்தையென்றும் பாராது பக்கத்தில் கிடந்த ஒரு கோலை யெடுத்து எச்சதத்தன் கால்களில் வீசினான். அந்தக் கோலே ஒரு கோடரியாக மாறித் தந்தையின் கால்களைத் துணிக்க அவன் கீழே விழுந்தான். உடனே எல்லாம் வல்ல சிவனே சிறுவன் முன் தோன்றி, ''குழந்தாய்! உன்னைப் பெற்றெடுத்த தந்தையை நீ இழந்துவிட்டாய். இனிமேல் நாமே உனக்குத் தந்தை,'' என்று அருளிச் செய்து, விசாரசருமனை அணைத்து உச்சி மோந்து தன் மகுடத்திலே சூடியிருந்த கொன்றை மாலையை எடுத்துச் சிறுவனுக்குச் சூட்டி, ''அப்பா, நாம் நம்முடைய தொண்டர் களுக்கெல்லாம் உன்னைத் தலைவனுக்கி, நாம் பக்தர்களின் பூஜை களில் ஏற்றுக்கொள்ளும் அமுது, பரிவட்டம், புஷ்பம், தீர்த்தம் முதலியவற்றை உனக்கே கிடைக்கும்படி செய்தோம். உனக்குச் சண்டீச பதம் வழங்கினோம். இன்று முதல் நீ சிவனடியார் களாகிய மகேசுவரர்களுக்கெல்லாம் தலைவனாயிருந்து பணி புரிவாய்'' என்று அருளினார். அதனால், விசாரசருமன் என்ற அந்தணச் சிறுவன், சண்டேசுர நாயனாராகி, சிவகணநாதர்களில் முதன்மை ஸ்தானம் பெற்று, இறைவனுக்குப் பூசை செய்தபின் கிடைக்கும் நிர்மாலியங்களைப் பக்தர்கள் சூட்ட அவற்றை யணிந்துகொண்டு என்றும் அருள் புரிந்து வருகிறார்.

சேய்ஞலூரில் பிறந்த சண்டேசுரர் மாடுகளை மேய்த்து, மணல் கோயில் கட்டி, சண்டீசபதம் பெற்ற இடம் பக்கத்திலுள்ள திரு ஆப்பாடி என்பது. இந்தக் கோயிலுக்கு நாங்கள் சென்றபோது பாலுகந்தநாதன் என்ற ஒரு அழகிய உருவம் கொண்ட பிராமணச் சிறுவனே எங்களை வரவேற்றான். கோயில் சுவாமியின் பெயரும் பாலுகந்தநாதர். சேய்ஞலூரைப் போலவே நாளுக்கு நாள் நலிந்துபோய்க் கொண்டிருக்கிறது திருவாப்பாடிக் கோயிலும்.

மற்றைய நாயன்மார்களுக்கெல்லாம் காலத்தால் மூத்தவர் சண்டேசுர நாயனார் என்று தெரிகிறது. தேவாரம் பாடிய மூவருமே இந்தச் சண்டேசுரர் வரலாற்றை விளக்கமாகப் பாடி வைத்திருக்கிறார்கள். திருநாவுக்கரசு நாயனார் குறுக்கைவீரட்டம் என்றபதியில் பாடிய தேவாரத்தில் சொல்கிறார்:

தழைத்ததோர் ஆத்தியின் கீழ்த் தாபர மணலாற் கூப்பி
அழைத்தங்கே ஆவின் பாலைக் கறந்து கொண் டாட்டக் கண்டு
பிழைத்ததன் தாதை தாழைப் பெருங்கொடு மழுவால் வீசக்
குழைத்ததோர் அமுதம் ஈந்தார் குறுக்கைவீ ரட்டனீரே

ஞானசம்பந்தரும் இந்தக் கதையைச் சேய்ஞலூரில் பாடியபோது குறிப்பிடுகிறார்:

தாரடைந்த மாலை சூட்டித் தலைமை வகுத்த தென்னே
சீரடைந்த கோயில் மல்கு சேய்ஞலூர் மேயவனே

சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கலயநல்லூர் தேவாரத்தில் சொல்கிறார்:

இண்டை மலர் கொண்டு மணல் இலிங்கம தியற்றி
இனத்தாவின் பாலாட்ட இடறியதா தையைத்தாள்
துண்டமிடு சண்டியடி அண்டர் தொழு தேத்தத்
தொடர்ந்தவனைப் பணிகொண்ட விடங்கன்...

கங்கைகொண்ட சோழன் இந்தச் சண்டேசுவரரைத் தனது கோயிலில் சிலையாக வடித்தான். மற்றைய சிற்பிகளும் பின் பற்றினர். சிவாலயங்களில் பஞ்சமூர்த்திகள் புறப்பாடு அல்லது வீதி வலம் வரும்போது முதன்மை ஸ்தானம் பெறுபவர் சண்டேசுரர். எல்லாக் கோயில்களிலும் இவருக்குத் தனி சந்நிதி யுண்டு. மூலஸ்தானத்துக்கு வெளியே அபிஷேக தீர்த்தங்கள் முதலியவை சென்று விழும் கோமுகிக்கு எதிர்ப்புறத்திலிருக்கும் இந்த சந்நிதி. சிவாலய தரிசனமும் வழிபாடும் முடியும்போது, சண்டேசுரரையும் தரிசித்தால்தான் சிவதரிசனம் பூர்த்தியாகும் என்பது நம்பிக்கை. சண்டேசுரர் சந்நிதியைத் தரிசிப்பவர்கள் தமது ஆடைகளிலிருந்து ஒரு துண்டு நூலைக் கிள்ளி அங்கே போடுவதைப் பார்த்திருக்கலாம். இது இறைவனுக்குப் படைத்த நிர்மாலியமாகிய பரிவட்டத்தை சண்டேசுரர் ஏற்றுக்கொள்கிறார் என்பது பாவனை. சண்டேசுரர் எப்போதும் மௌனமாக சிவனையே தியானித்துக் கொண்டிருக்கிறாராகையால், பக்தர்கள் அவர் கவனத்தைப் பெறக் கை தட்டுவது ஒரு வழக்கமாகி விட்டது. எல்லாச் சிவாலயங்களிலும் கடைசியாக விடை பெறும் இடம் சண்டேசுரர் சந்நிதி. ஆனால், சிதம்பரத்திலே சண்டே சுரரின் இடத்தில் பிரம்மா இருக்கிறார். திருவாரூர்க் கோயிலில் யமன் அந்தக் கடமையைப் பார்க்கிறார்.

சிவாலயங்களிலே வரவு செலவுக் கணக்குகளைச் சண்டேசுரர் பெயரிலேயே எழுதுவது பண்டைக் காலத்து மரபு. இதற்கு ஒரு பழைய கல்வெட்டுப் பாடலே சாட்சி:

சண்டேச்சுரன் ஓலை சாகரஞ்சூழ் வையகத்தீர்
கண்டீச்சுரன் கருமம் ஆராய்க—பண்டே
அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்தான் பாதம்
திறம்பாமை சென்னிமேல் வைத்து

இந்தக் கல்வெட்டு மதுராந்தகம் தாலுகாவிலுள்ள பெரும் பேறு தான்தோன்றி ஈஸ்வரன்கோயில் சுவரில் காணப்படுகிறது.

சேய்ஞலூருக்கும் திருவாப்பாடிக்கும் சென்ற யாத்திரை ஒரு புது அனுபவமாயிருந்தது. நாயன்மார்களில் பலர் பல அனுபவங்களைப் பெற்றவர்கள். ஆனால் சண்டேசுர நாயனார் பெற்ற பதவியோ இறைவனின் முதல் பிரதிநிதியென்ற பதவி. சிவஸ்தலங்களில் பக்தர்கள் வழிபடும் முறையில் இவருக்குக் கொடுக்கும் மரியாதையையும் வணக்கத்தையும் விளங்கிக் கொள்ள இந்த யாத்திரை உதவியதை நினைத்து நாங்கள் பெருமிதமடைந்தோம். நிர்மாலிய பூசை, நிர்மாலிய தரிசனம் என்பவற்றின் பொருளும் தெரிந்தது.

திருவாப்பாடியில் பாலுகந்தநாதரிடம் விடைபெற்றுக் கொண்டு தெற்கே கும்பகோணத்துக்குச் செல்லும் வழியில் திருப்பனந்தாளுக்கு வந்து சேர்ந்தோம்.

25. திருமூலர் மந்திரம்

தமிழ் நாட்டிலுள்ள சைவ ஆதீனங்களில் பெருஞ்செல்வ வசதியுள்ள தருமபுர ஆதீனத்துக்குத்தான் அனேக கோயில்களும் அவற்றின் சொத்துக்களும் உரிமையாயிருக்கின்றன. திருவாவடுதுறை ஆதீனத்துக்கு ஒரு சில கோயில்களே சொந்தம். ஆனால் திருப்பனந்தாள் ஆதீனத்துக்கு ஒரு கோயிலும் சொந்தமில்லை யென்பது ஆச்சரியம்தான். திருப்பனந்தாள் மடத்தோடு கூடியிருக்கும் தாடகேச்சுரம் என்ற பெருங்கோயிலின் வாயிலை யடையும்போதே ''தருமபுர ஆதீனம் திருப்பனந்தாள் தேவஸ்தானம்'' என்ற பெயர்ப்பலகைதான் காட்சியளிக்கிறது. திருப்பனந்தாளிலுள்ள கோயிலும் தருமபுரத்துக்குத்தான் சொந்தம். ஆனால், நல்ல வசதி படைத்த திருப்பனந்தாள் ஆதீனம் பல கல்வி நிலையங்களுக்கு உதவி செய்து வருகிறதென்பது பிரசித்தம்.

தருமபுரத்தின் அதிகார பலமும் நிர்வாகத் திறமையும் திருப்பனந்தாள் கோயிலிலும் காணப்பட்டது. மிகவும் சுத்தமாகவும் கண்டிப்பாகவும் கோயில் மண்டபங்களும் பிராகாரங்களும் பாதுகாக்கப்படுகின்றன. ''குஷ்டரோகிகள், பாதரக்ஷை போட்டுக்கொண்டவர்கள், உள்ளே போகக்கூடாது'' என்ற அறிவிப்பு நம்மை எச்சரிக்கை செய்கிறது. மண்டபத்தின் விதானங்களெல்லாம் ஓவியங்கள். தாண்டவ வகைகளுக்கு அழகான சித்திரங்கள் தீட்டப்பட்டுள்ளன. அறுபத்துமூன்று நாயன்மார்களது உருவங்களும் தீட்டப்பெற்றுள்ளன. பிராகாரச் சுவரொன்றில் புடைச் சிற்பங்களாக நாயன்மார் வடிவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இவற்றில் ஒரு பகுதி திருப்பணி செய்தவர் கைங்கரியத்தினால் சாந்துக்கட்டிலே மறைந்துவிட்டது. நல்ல வேளையாகப் பெரிய புராணச் சிற்பங்கள் தாராசுரத்தில் இன்னும் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன.

திருப்பனந்தாளுக்குப் பெருமையளித்த நாயனார் குங்கிலியக் கலயர். இதற்கு ஒரு கதையுண்டு. தாடகையென்ற ஒரு பெண்

திருப்பனந்தாள் சுவாமியை வழிபட்டுவந்தாள். ஒருநாள் அவள் சுவாமிக்குச் சாத்த ஒரு பெரிய மாலையைக் கொண்டுபோன போது, இருகைகளாலும் அவள் மாலையை உயர்த்திப் பிடித்த வாறிருக்க, தோளிலிருந்த புடைவை சரிந்தது. மாலையைக் கீழே வைக்கவும் முடியாமல், புடவையையும் சரிப்படுத்த முடியாமல் அப்பெண் தவித்தாள். அப்போது சுவாமியே மனமிரங்கி, வளைந்துகொடுத்து மாலையை ஏற்றுக்கொண்டார். அவளுடைய மானமும் காப்பற்றப்பட்டது.

இவ்வாறு வளைந்துகொடுத்த லிங்கம் பலகாலம் அப்படியே இருந்ததைக்கண்ட அவ்வூர் அரசன் எத்தனையோ முயற்சி யெடுத்து அதை நிமிர்த்தப் பார்த்தான். பலர் பலவாறு உபாயங்கள் சொன்னார்கள். கடைசியில் ஒரு யானையின் உதவி கொண்டும் இழுத்து நிமிர்த்தப்பார்த்து அதுவும் பலனளிக்க வில்லை. இதைக் கேள்வியுற்ற திருக்கடவூர் குங்கிலியக்கலயர் அங்கு வந்து, லிங்கத்தில் ஒரு கயிற்றைக் கட்டி, மறு நுனியைத் தன் கழுத்திலே மாட்டி, இறைவனைத் தொழுதுகொண்டே இழுத்தபோது லிங்கம் நிமிர்ந்து கொடுத்தது.

தாடகை மானங்காப்பான் தாழ்ந்து பூங்கச்சிட் டீர்க்கும்
பீடுறு கலய னன்பி னிமிர்ந்த எம்பிரான்...

திருப்பனந்தாள் கோயிலுக்கு ஸ்தல விருக்ஷம் பனை. அதைக் காண்பிக்க கோயிலின் பின்புறத்தில் இரு பனை மரங்கள் நிற்கின்றன.

திருப்பனந்தாளைத் தரிசித்த பின்னர் மற்றொரு ஆதின மடமாகிய திருவாவடுதுறைக்குச் செல்லலாமென்று தோன் றியது. திருவாவடுதுறை பல வகையில் புகழ் பெற்ற ஸ்தலம். தமிழ் நாட்டுச் சித்தர்களின் இருப்பிடம். முக்கியமாகத் திருமூலர் வசித்திருந்து திருமந்திரம் பாடிய புண்ணிய ஸ்தலம்.

பொதுவாக ரெயில்வேக் கடவைகள் வண்டி வாகனங்களுக்கு இடமளித்துத் திறந்திருக்கும். ரெயில் வண்டி வரும் சமயத்தில் தான் மூடிவைத்திருப்பார்கள். நாங்கள் திருவாவடுதுறைக்குள் செல்ல மோட்டாரில் போகும்போது அந்த ரெயில் கேட்டுகள் சாத்தி வைக்கப்பட்டிருந்ததால், ரெயில் வண்டி வரும் சமயமாக் கும் என்று காத்திருந்தோம். ஆனால் இங்கு சாதாரணமான சமயங் களிலெல்லாம் ரெயில்வே கேட் சாத்தித்தானிருக்கும் என்று பின்னர்தான் தெரிந்தது. காவல்காரரைத் தேடிப்பிடித்து ஒருவர் கொண்டுவந்து அந்த கேட்டுக்களைத் திறந்து வழிவிட உதவிய போது இந்த ரகஸ்யம் வெளிப்பட்டது. திருவாவடுதுறை மடத்தையும் கோயிலையும் சுற்றிவரப் பிரம்மாண்டமான

கற்சுவர். அந்த சுவரிலேயும், ஆதனூர் கோயிலில் நாம் கண்டது போல, பெரிய சிவப்பு முக்கோணம். அறியாமையின் பேரூன விளம்பர ஆர்வம்! உள்ளே சென்றதும் ராஜகோபுரம் திருப்பணிக் காகத் தட்டிகள் வைத்து மூடப்பட்டிருந்தது. பதினைடி உயர முள்ள பிரம்மாண்டமான நந்தி. திருவாவடுதுறை ஆதீனமும் கோயிலும் அருகருகேயுள்ளன. உமாதேவியார் பசு வடிவத்தில் தபசிருந்து இறைவனேயடைந்த ஸ்தலமாகையால் ஆ—அடு—துறை என்ற பெயர் பெற்றதாகப் புராணம். காஞ்சிபுரத்தில் அம்மை தழுவினுள். இங்கே சுவாமியே தழுவி அணைத்த காரணத் தால் அணைத்தெழுந்த நாயகர் என்று பெயர் கொண்டிருக்கிறார். ஆனல் மாசிலாமணி ஈஸ்வரர் என்ற பெயர்தான் அதிகமாக வழங்கிவருகிறது.

திருஞான சம்பந்தர் இங்கு வந்தபோது தமது தந்தையார் யாகம் செய்வதற்காகப் பொருள்கேட்டுப் பாடினர். அதற்குத் திருவாவடுதுறையீசர் உடனே ஆயிரம் பொன் கொடுக்க ஏற்பாடு செய்தார். அதைக் கொண்டுவந்த சிவபூதம் பலிபீடத்தின் பக்கத்திலே வைத்து இது எடுக்கக் குறையாது என்று சொல்லிய தாம். இதை உலவாக் கிழி என்று சொல்வார்கள். பலிபீடத்தின் பக்கத்திலே சிவபூத வடிவம் ஒன்று வைத்திருக்கிறார்கள்.

திருவாவடுதுறைக்கு முக்கியத்துவம் அளிப்பது அங்கு திருமூலநாயனர்தோன்றித் திருமந்திரம் பாடிய வரலாறு. இந்த ஊருக்கு சாத்தனூர் என்பதுதான் பழைய கல்வெட்டுக்களிலுள்ள பெயர். ''தென் கரைத்திரைமூர் நாட்டுப் பிரமதேயம் சாத்தனூர் திருவாவடுதுறை'' என்பது கல்வெட்டு. ஊர்ப்பெயர் சாத்தனூர். கோயிற் பெயர் திருவாவடுதுறை. திருமூலநாயனர் கதையைப் பலரும் அறிவார்கள். வடக்கேயிருந்து வந்த சிவயோகியார் ஒருவர் கூடுவிட்டுக் கூடுபாயும் சித்தியிலும் வல்லவராயிருந்தார். இவர் பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு இந்தச் சாத்தனூ ருக்கு வந்தபோது மூலன் என்ற இடையன் ஒருவன், மாடு மேய்த்துக்கொண்டு நின்றவன் திடீரென்று மரணமடைந்தான். இடையனிடம் பற்றுக்கொண்ட பசுக்கள் அந்த மூலன் என்ற இடையனின் உடலைச் சுற்றிக் கதறக் கண்டார் சிவயோகியார். உடனே அவர் தமது சித்தியை உபயோகித்து தன் உடலை ஓரிடத்தில் மறைத்து வைத்துவிட்டுக் கூடுவிட்டுக் கூடு பாய்தல் என்ற உபாயத்தில், தமது உயிரை மூலனின் உடலில் பிரவேசிக் கச் செய்தார். மூலன் உயிர்பெற்றெழுந்தான். பசுக்கள் சந்தோஷத்தினுல் துள்ளின. மாலைவேளையில் பசுக்கள் சென்ற திசையில் மூலரும் சென்று சேர்ந்தபோது மூலனின் மனைவி வந்து கணவனின் கையைப் பிடிக்க முயன்றுள். பழைய

மூலனல்லவே. ஆகையால் அவர் விரைந்து சென்று ஒரு மடத்திலே தங்கியிருந்து, தாம் மறைத்து வைத்திருந்த சிவயோகியார் உடலைத் தேடினர். அந்தோ, அந்த உடல் மறைந்துவிட்டது! யாரோ அப்புறப்படுத்தி விட்டார்களோ அல்லது இறைவன் செயலோ யார் கண்டார்கள். மூலன் உடலில் புகுந்த சிவயோகியார் திருமூலநாயனாரானார். உடனே அவர் செய்வதறியாது, திருவாவடுதுறைத் திருக்கோயிலை யடைந்து அதன் மேற்புறத்திலுள்ள ஓர் அரசமரத்தின் கீழ் யோக நிஷ்டையில் அமர்ந்து, திருமந்திரம் என்ற ஒப்பற்ற தமிழ் வேதம் மூவாயிரம் பாடல்களால் பாடி இறுதியில் இறைவனுடன் இரண்டறக் கலந்தார் என்பது வரலாறு. இவர் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தார் என்றும், ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் திருமந்திரப் பாடல் பாடினர் என்றும் கர்ணபரம்பரை யாக நம்பப்படுகிறது.

மூவர் நாயனர் பாடிய தேவாரங்களுடனும், மாணிக்க வாசகர் அருளிய திருவாசகத்துடனும் மற்றும் பலர் பாடிய திருவிசைப்பாப் பாடல்களுடனும் சைவத்திருமுறைகள் ஒன்ப தாகத் தொகுக்கப்பெற்றன. திருமூலரின் திருமந்திரம் பத்தாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது. ஆனால், திருமூலர் எந்தக் காலத்தவர் என்று ஆராய்ச்சியாளர் சரியாக நிச்சயிக்க முடிய வில்லை. கி. பி. எட்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் ''நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்'' என்று குறிப்பிடுகிறார். இவருக்கு முந்திய திருநாவுக்கரசரோ ஞான சம்பந்தரோ, திருமூலரைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. சுந்தரர் குறிப்பிட்ட திருமூலன் இதே திருமந்திரம் பாடிய ஆசிரியரைக் குறிக்குமானால், சுந்தர மூர்த்திக்கு முன்பும், நாவுக்கரசருக்குப் பின்பும் வாழ்ந்தவராகக் கொள்ள வேண்டும். ஆனால் சமயப்பற்றுள்ள சிலர் கி. மு. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்தவர் திருமூலர் என்றும் சொல்வார்கள். திருமந்திர நூலைப் படித்துப் பார்த்தால் அதிலுள்ள சொற்களும், சில கருத்துக்களும் தொன்மையானவை என்று சொல்ல முடியாது.

திருமந்திரம் என்ற நூல் இடைக்காலத்தில் தமிழ்நாட்டில் வாழ்ந்த சித்தர் பாடல்களைப்போல் மறைபொருள் கொண்ட வார்த்தைகளால் பாடப்பெற்றது. சைவ ஆகமங்களை அடிப்படை யாகக் கொண்டு, வேதாந்தம், சித்தாந்தம் ஆகிய இருவகைத் தத்துவப் பொருள்களையும் விளக்குவது. ஆனால் சாமானிய தமிழறிவால் இந்த நூலில் உள்ள பாடல்களின் கருத்தை விளங்கிக்கொள்ள முடியாது, இது ஒன்பது தந்திரங்களாகப் பிரிக்கப்பட்டது. தந்திரம் என்பதை ஆகமம் என்று சொல்

வார்கள். முதல் தந்திரத்தில் சைவ சமயம் ஒரு நீதி முறை கொண்ட சமயம் என்கிறது. இரண்டாவது தந்திரம், சில புராணக்கதைகளை உதாரணம் காட்டி சிவனின் ஐந்தொழில்களையும் ஆன்மாவின் மூன்று பிரிவுகளையும் விளக்குகிறது. மூன்றுவது தந்திரத்தில் யோக சாஸ்திர அனுபவங்களைக் காணலாம். நான்காந் தந்திரத்தில் மந்திர சாஸ்திரம் கூறப்படுகிறது. ஐந்தாம் தந்திரத்தில் சைவத்தின் பிரிவுகளாகிய சுத்தசைவம், அசுத்தசைவம், மார்க்க சைவம், கடும் சுத்த சைவம் என்பனவும், சகமார்க்கம், சத்புத்திர மார்க்கம், தாசமார்க்கம் முதலியனவும் கூறப்படுகிறது. ஆறும் தந்திரம் சிவமே குரு என்பதனை விளக்குகிறது. ஏழாம் தந்திரத்தில் ஆறு ஆதாரம் முதலிய சாதனைகள் விளக்கப்படுகின்றன. எட்டாவதில் அவஸ்தைகள் முதலியனவும், ஒன்பதாம் தந்திரத்தில் சமாதி நிலையும் நாதாந்த நடனமும் விளக்கப்படுகின்றன.

இது பொதுவாக எடுத்துச் சொல்லப்பட்ட குறிப்புக்களேயன்றி, திருமந்திரத்தின் உட்பொருளை விளக்கும் குறிப்புக்களல்ல. ஆரம்பத்தில் நாம் சொன்னதுபோல திருமந்திரம் ஒரு புரியாத புதிர். ஆனால் சைவ சமயத்துக்கும் தமிழுக்கும் ஓர் அருமையான பொக்கிஷம்.

திருமூலரைப்போலவே, திருவிசைப்பா என்ற திருமுறையைப் பாடிய திருமாளிகைத் தேவர் என்ற ஒரு சித்தரும் திருவாவடுதுறையில் வாழ்ந்தவராகக் கதையுண்டு. திருமாளிகைத் தேவரின் சித்துவிளையாடல்களில் சில அற்புதமானவை. ஒரு பிணத்தைக் கால்நடையாகவே சுடுகாட்டுக்கு அனுப்பியது இவருடைய சித்துக்களில் ஒன்று! சுவாமிக்கு அருச்சனைக்குக் கொண்டு சென்ற பூக்குடலையை ஆகாயத்தில் நிறுத்தி வைத்தாராம். இவரது பேரழகில் மயங்கிய பெண்கள் இவர் சம்பந்தமில்லாமலே இவரைப் போன்ற சாயலுள்ள குழந்தைகளைப் பெற்றார்கள் என்றும் இப்படியான அற்புதக் கதைகள் பல திருமாளிகைத் தேவர்மீது சுமத்தப்பட்டிருக்கின்றன. எவ்வாறிருந்தாலும் திருமாளிகைத் தேவர் என்ற ஒரு பெரியார் வாழ்ந்தது உண்மை. இவரைப்பற்றித் திருவாவடுதுறை மடத்து அடியார்களில் ஒருவராகிய தொட்டிக்கலைச் சுப்பிரமணியமுனிவர் ஒரு நூல் செய்திருக்கிறார். திருவாவடுதுறைக் கோயிலையொட்டி இப்பொழுதுள்ள திருவாவடுதுறை மடத்தினுள் திருமாளிகைத் தேவருக்குக் கோயில் இருக்கிறது.

திருவாவடுதுறைக் கோயிலின் மேற்குப் பிராகாரத்தில் திருமூலர் சந்நிதி காணப்படுகிறது. அரசமரத்தடியில் வீற்றிருக்கும் இறவாவரம் பெற்ற இந்த மூர்த்தியை வணங்கிக்கொண்டு நாங்கள் அன்று மாலை கும்பகோணம் வந்து சேர்ந்தோம்.

26. கோவண ஆண்டி

எங்களது இந்த யாத்திரையில் முன்பு மாயவரத்தை ஒரு தங்குமிடமாக வைத்திருந்ததுபோல் இப்போது கும்பகோணத்தை வைத்துக்கொண்டு பக்கத்திலுள்ள பழையாறை, பட்டீஸ்வரம், நல்லூர், அழகாபுத்தூர் முதலிய இடங்களுக்குச் சென்று நாவுக்கரசர், சம்பந்தர், அமர்நீதி நாயனூர் முதலியவர்களின் வரலாறு சம்பந்தமான பல தகவல்களைச் சேகரிக்க வசதியாயிருந்தது. கும்பகோணம் எல்லையற்ற காலமாக முக்கியத்துவம் பொருந்திய இடமாயிருந்து வந்திருக்கிறது. சோழர்கள் தலைநகராகவுமிருந்தது. வற்றாது பாயும் காவிரியின் கரையில் நித்திய செழிப்புடன் வீற்றிருக்கும் கும்பகோணம் தமிழரின் மொழியை வளர்த்தது; இசையை வளர்த்தது; நாட்டியத்தை வளர்த்தது. பெண்களின் அழகையும் வளர்த்தது! வெள்ளைக்காரன் வந்தபோது ஆங்கிலக் கல்விக்கே ஒரு தனிப்பெரும் பீடமாக விளங்கியது. தென்னாட்டிலுள்ள சில முக்கிய நகரங்களில் இன்றும் என்னைக் கவர்ந்தவை மதுரையும்கும்பகோணமும். எப்போதாவது ஓய்வு கிடைக்கும்போது மதுரைக்குப்போய் மீனாட்சியம்மன் கோயிலைச் சுற்றிவருவதிலோ, கும்பகோணம் போய்த் தாராசுரத்தின் சிற்பங்களைப் பார்ப்பதிலோ உள்ள இன்பத்தை வேறெங்கும் பெற முடிகிறதில்லை.

கும்பகோணத்துக்கு அருகிலுள்ள பழையாறை ராஜராஜனுக்கு முன்னுள்ள சோழர்கள் பலர் ஆட்சி செலுத்திய ராஜதானியாயிருந்தது. ராஜராஜன் தஞ்சையைத் தலைநகராக்கினான்; அவன் மகன் ராஜேந்திரன் கங்கை கொண்ட சோழபுரத்தைப் புதிதாகஅமைத்தான். பின் வந்தவர்கள் திருவாரூர் சென்றார்கள். அநபாயனின் மகன் இரண்டாம் ராஜராஜன் பழையபடி பழையாறைக்கே வந்து தனது மூதாதையரின் தலைநகரைப் புதுப்பித்தான். பக்கத்தில் ராஜராஜபுரம் என்ற கோயிலையும் கட்டினான். இதுவே பிற்காலத்தில் தாராசுரம் என்றாயிற்று. இந்தப் பக்கத்திலுள்ள இடங்களிலெல்லாம் சோழரின் படையினர்

வசித்த படையூர்கள் இருந்தன. பழையாறையைச் சோழ மாளிகை என்றும் சொல்வார்கள். கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டிலே பாண்டியர் பலம் மிகுந்து, சோழர் அழிவுற்றனர். பழையாறை அழிந்தது. ராஜராஜேஸ்வரம் சிதைந்து தாராசுர மாயிற்று.

தாராசுரத்துச் சிற்ப அழகைச் சொல்லிமுடியாது. ஒவ்வொரு கல்லும் ஒரு கதை சொல்லும். ராஜராஜசோழன் காலத்திலிருந்தே கோயில் நிர்மாண வேலைகளைக் கவனிக்கவும் பூஜா விதிகளை முறைப் படி செய்யவும் ஆகம விற்பன்னர்களான சிவாசாரியர்கள் நியமிக்கப்பட்டனர். அப்படி நியமிக்கப்பட்ட நூற்றெட்டு சிவாசாரியார் பெயர்களும், அவர்கள் படிமங்களும் தாராசுரம் வடக்குச் சுவரில் காணப்படுகின்றன. கர்ப்பக்கிருகத்தைச் சுற்றி மூன்று புறமும் சேக்கிழார் பாடிய பெரியபுராணத்திலுள்ள ஒழுங்கின்படி அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாறு, சிற்பங்களாகச் செதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. . சுந்தரமூர்த்தி நாயனார்தான் முதன் முதல் திருத்தொண்டத் தொகை என்று பாடி அறுபத்து மூவரின் பெயர்களையும் தொகுத்துச் சொன்னார். அதன் விரிவாக நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந் தாதி என்ற பெயரில் அறுபத்து மூவரின் வாழ்க்கையில் முக்கிய மான குறிப்பை மாத்திரம் கொடுத்து, ஆளுக்கொரு பாட்டாகப் பாடிவைத்தார். பின்னால் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வந்த சேக்கிழார் மிக விரிவாக அறுபத்து மூவரின் வாழ்க்கைச் சரித்திரங் களையே பெரிய காவியமாக, திருத்தொண்டர் புராணம் என்று பாடி வைத்தார். இவர் இரண்டாம் குலோத்துங்கன் என்ற அநபாயச் சோழனுக்கு மந்திரியாயிருந்தவர். இந்த அநபாயச் சோழனின் மகன் இரண்டாம் ராஜராஜன் என்பவன்தான் ராஜராஜேஸ் வரத்தைக் கட்டியவன். இவன் காலத்திலிருந்த ஓட்டக்கூத்தர் தமது தக்கயாகப் பரணியில் இந்த ராஜராஜபுரி ஈசனைப் பாடுகிறார்.

ஒரு மருங்குடைய மூலநாயகி
ஒற்றை வெண்விடை யூர்தி மேல்
இருமருங்கு மறை தொழ எழுந்தருள்
இராசராசபுரி ஈசனே

பெரிய புராணத்துள் கண்டவாறே தில்லைவாழந்தணர் சருக்கம் முதற்கொண்டு வெள்ளானைச் சருக்கம் ஈறுக நாயன்மார் களுடைய வரலாறு சேக்கிழாரின் வரிசை முறைப்படியே சிற்பங்க ளாகச் செதுக்கப்பட்டிருப்பதால், ராஜராஜன் தனது தந்தை

அநபாயச் சோழன் திருப்பணியையே தொடர்ந்து செய்து வைத்தான் என்று சொல்லத் தோன்றுகிறது.

இந்தத் தாராசுரத்துக்குப் பக்கத்திலேயே இரண்டு மூன்று மைல் தூரத்துக்குள் உள்ளவை சத்திமுத்தம், பட்டீச்சுரம் என்ற தலங்கள். இவற்றைத் தரிசித்து நீரில்லாத ஆற்றைக் கடந்தால் பழையாறை. சத்தி முத்தம் என்றவுடன் ''நாராய் நாராய் செங்கால் நாராய்'' என்று பாடிய பழம்பெரும் புலவர் சத்தி முத்தப் புலவரின் ஞாபகம்தான் வந்தது. சக்தியாகிய உமையம்மை சிவனுக்கு முத்தம் கொடுத்த காரணத்தால் சத்தி முத்தம் என்ற பெயர் வந்ததாகக் கர்ணபரம்பரைக் கதை. இதற்குப் பொருத்தமாக இறைவனை உமையம்மை அணைத்துக் கொண்டிருக்கும் சிற்பம் வைக்கப்பட்டிருக்கிறது. திருநாவுக்கரசு நாயனார் இந்த வழியாக வந்து பழையாறைக்கும் நல்லூருக்கும் போனார் என்ற காரணத்தாலேயே நாங்களும் சத்திமுத்தத்தைத் தரிசித்தோம். நாவுக்கரசர் இங்கு ''பூவார் அடிச்சுவடு என்மேற் பொறித்துவை'' என்று கேட்கிறார். அதற்கு இறைவன், ''நல்லூருக்கு வா'' என்று சொல்கிறார். நல்லூர் என்ற இடத்தில் தான் திருநாவுக்கரசு நாயனாருக்கு பாததீட்சை கொடுக்கப் பட்டது.

இங்கிருந்து பக்கத்திலுள்ள பட்டீச்சுரம் என்ற தலத்தை தரிசிக்கிறோம். இது ஒரு விசேஷமான கோயில். காமதேனுவுக்கு ஒரு புத்திரி, பட்டி என்ற பெயர். இந்தப் ''பட்டிப்பசு'' வழிபட்டு முத்தி பெற்றதால் பட்டீச்சுரம் என்று பெயர் பெற்றது. சுவாமியின் பெயர் பட்டீச்சுரர் அல்லது தேனுபுரீஸ்வரர். இந்தக் கோயிலை பஞ்சநந்தி க்ஷேத்திரம் என்றும் சொல்வர். ஐந்து நந்திகள் சந்நிதியிலிருக்கின்றன. ஆனால் எல்லாம் மூலஸ்தானத்தை நோக்காமல் விலகியே இருக்கின்றன. ஞானசம்பந்தர் இங்கு வந்தபோது அவருக்கு முத்துப் பந்தர் ஒன்று அளிக்கப்பட்டதாம். அந்தச் சமயத்தில் நந்திகள் விலகிக் கொடுத்ததாக ஐதிகம். ஆனிமாதத்தில் இங்கு இந்த முத்துப்பந்தர் கொடுத்த விழா மிக விமரிசையாகக் கொண்டாடப்படும். கோயில் சிறந்த முறையில் கட்டப்பட்டிருக்கிறது. பல சிற்பங்கள் உள்ளன. கடந்த கி. பி. பதினாறும் நூற்றாண்டில் தஞ்சை அச்சுதப்ப நாயகருக்கு மந்திரியாக இருந்த கோவிந்த தீக்ஷிதர் இங்குள்ள அம்மன் கோயிலுக்குத் திருப்பணி செய்தார் என்ற வரலாறுண்டு. தீக்ஷிதரும் அவர் மனைவியும் இங்கு சிலை வடிவில் காணப்படுகின்றனர். 'மந்திரி ஐயன்' என்ற பெயர் இந்தப் பகுதியில் பலருக்குத் தெரியும். அய்யன் பேட்டை, அய்யன் தெரு, அய்யன்கடை என்ற பெயர்கள்

பல இந்தப் பிரதேசத்தில் கோவிந்த தீக்ஷிதரின் ஞாபகமாகக் காணப்படுகின்றன. ஸ்ரீராமரும் இந்த ஊருக்கு வந்ததாக ஐதிகமுண்டு. இங்கே வந்துதான் அவர் சாயைஹத்தி என்ற தோஷத்திலிருந்து நீங்கப் பெற்றாராம். இந்தக் கோயிலிலுள்ள விக்கிரகங்களில் பைரவ மூர்த்தம்தான் எல்லார் கவனத்தையும் பெறுகிறது. வடக்கு வாயிலில் எட்டடி உயரமுள்ள மகிஷாசுர மர்த்தனி வடிவமுள்ளது.

பட்டீச்சுரத்திலேயே மோட்டாரை நிறுத்திவிட்டு பழையாறைக்கு நடந்து சென்றோம். மூங்கில் காட்டினிடையேயுள்ள வழியில் நடந்து பின்னர் நீர் இல்லாத ஆற்றுப்படுகையைக் கடந்துபோய்ப் பழையாறைக் கோயிலையடைந்தோம். முன்னொரு காலத்தில் பழையாறை இராஜதானியாக இருந்தது. இப்போது ஒதுக்கப்பட்ட சிற்றூர். பழையாறை வடதளி, மேற்றளி, கீழ்த்தளி, தென்தளி என்று நான்கு கோயில்களிருந்தன. வடதளி என்ற கற்கோயில்தான் தென்னுட்டிலுள்ள முதலாவது கற்கோயில் என்று சொல்கிறார்கள். அதாவது பல்லவருக்குப்பின் சோழர் காலத்துக் கற்கோயில் என்று சொல்லலாம். திருநாவுக்கரசு நாயனார் இங்கு வந்தபோது சமணர்கள் பலர் குடியிருந்தார்கள் என்று தெரிகிறது. அவர் வடதளியைக் கும்பிட்டபோது ஒரு விமானம் இருக்கக்கண்டு இதுவென்ன என்று வினவினார். ஊரிலுள்ளவர்கள் "இது சமணர்களால் ஏற்படுத்தப்பட்டது. பழையாறை ஈஸ்வரன் சந்நிதியை மறைத்துக் கட்டியிருக்கிறார்கள்" என்று சொல்லவும், நாவுக்கரசர் "இறைவனே நான் காணுமல் இங்கிருந்து போகமாட்டேன்" என்று சொல்லி உண்ணாவிரதம் இருந்தார். இதைக் கேட்ட அரசன் உடனே சமணரின் செயலைத் தடுத்து, அவர்களை அங்கிருந்து வேறிடத்துக்கு மாற்றி இறைவன் சந்நிதியிலிருந்த தடையை நீக்கிவிட்டான். அன்றியும் சமணர் தடையாகக் கட்டிய விமானத்தையே ஆகம முறைப்படி புதிய கட்டடமாகத் திருத்தி அமைத்தான் என்றும் சொல்லப் படுகிறது.

பழையாறைக் கோயிலை நாங்கள் போய்ப் பார்த்தபோது பாழடைந்த கோயிலாகக் காணப்பட்டது. கோயிலில் அர்ச்சகரைக் காணவில்லை. மெய்க்காவல் என்ற பெயரில் ஒரு பெண் ஓடி வந்தாள். கையிலிருந்த சாவிக்கொத்தில் ஒரு சாவியைக் கொண்டு சந்நிதியைத் திறந்து மூலஸ்தானத்து லிங்கத்துக்கு கற்பூர தீபம் காட்டினாள்! எங்கும் காணுத காட்சியை இங்கு கண்டோம். தேடுவாரற்றுக் கிடக்கும் கோயிலுக்கு ஏதாவது சொத்துண்டா என்று கேட்டோம். ஏதோ மூன்று ஏக்கர் நிலம்

இருக்கிறதென்று சொன்னாள் அந்தப் பெண். தருமபுர ஆதீனத்தின் பொறுப்பிலிருக்கும் வைத்தீஸ்வரன் கோயில் நிலத்தின் பரப்பு எவ்வளவு தெரியுமா? ஏழாயிரம் ஏக்கர். இதில் ஒரு நூறு ஏக்கரைப் பழையாறைக் கோயிலுக்குக் கொடுக்கக்கூடாதா என்று எங்களுக்குள்ளே கேட்டுக்கொண்டு பிராகாரத்தைச் சுற்றிப் பார்த்தோம். மாடக்கோயில். வீதியெங்கும் ஒரே நெருஞ்சிக்காடு.

பழையாறையில் பிறந்த மற்றொரு நாயனார் பெயர் அமர்நீதி. இவர் நெசவுத் தொழில் செய்தவர். தமது தொழிலுக்காக பழையாறையிலிருந்து சிறிது தூரத்திலிருக்கும் நல்லூர் என்ற ஸ்தலத்தில் குடியிருந்து தொழில் செய்ததோடு பல அடியார்களுக்கும் தொண்டு செய்து வாழ்ந்தார். இங்குதான் நாவுக்கரசரும் போய்த் திருவடி தீட்சை பெற்றாராகையால், நாங்களும் திரும்பி பட்டீச்சுரத்துக்கு வந்து, நல்லூருக்குப் பிரயாணமானோம்.

அமர்நீதி நாயனார் நல்லூரிலே ஒரு மடம் கட்டி அங்கு வரும் அடியார்களுக்கு உணவும் உடையும் கொடுத்து ஆதரித்து வந்தார். ஒரு நாள் ஒரு அடியார் அங்கே வந்தார். அவர் கையிலிருந்த தண்டிலே இரண்டு கோவணமும், ஒரு விபூதிப்பையும் தொங்க விட்டிருந்தார். மடத்திலிருந்த அமர்நீதி அடியாரை வரவேற்று, அங்கு தங்கி உணவருந்திச் செல்ல வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அடியார் ''அப்படியே செய்யலாம். நான் காவிரியில் நீராடிவிட்டு வருகிறேன். ஒரு வேளை மழை வந்தால் இந்தக் கோவணம் நனையலாகாது. ஆகையால் இதை வைத்திருந்து நான் திரும்பி வரும்போது கொடுக்கவும். இதைப் பத்திரமாக வைத்திருக்க வேண்டும்'' என்று வற்புறுத்திச் சொன்னார். அமர்நீதி நாயனார் அந்தக் கோவணத்தை எடுத்துச்சென்று பத்திரமாக ஓரிடத்தில் மறைத்துவைத்தார்.

அடியார் காவிரியில் நீராடிவிட்டு வரும்போது மழை. அதிலே நனைந்து வந்தவர், ''நான் கொடுத்த கௌபீனம் எங்கே?'' என்று கேட்டார். அமர்நீதி உள்ளே சென்று தேடினார். வைத்த இடத்தில் அதைக் காணவில்லை! வீடு முழுவதும் தேடிப்பார்த்தார். எங்கும் கிடைக்கவில்லை. திரும்பி வந்து, ''சுவாமி, தாங்கள் கொடுத்த கௌபீனத்தைக் காணவில்லை. அதுபோனால் போகிறது. புதிதாக நெய்யப்பட்ட நல்ல கோவணம் கொண்டு வந்திருக்கிறேன். அதை அணிந்து கொள்ளும்'' என்றார். இதைக் கேட்ட அடியார் கோபங்கொண்டு, ''சற்று நேரத்துக்கு முன்தான் நான்

உம்மிடம் கொடுத்துச் சென்றதைக் காணவில்லையென்று சொல்வது விந்தையாயிருக்கிறது. சிவனடியார்களுக்கு நீர் கௌபீனம் கொடுப்பதாக ஊரிலே பேசிக் கொள்கிறார்கள். அப்படியானால் என்னைப் போன்றவர்களிடமிருந்து கவர்ந்துதான் கொடுத்திருக்கிறீராக்கும்! நல்ல வியாபாரம் இது'' என்று கடும் சொல் சொன்னார். அமர்நீதி நாயனார் இதற்குப் பரிகாரமாக எதையெதையோ தருவதாகச் சொன்னார். ஆனால் அந்தப் பிரம்மச்சாரி கேட்கவில்லை. கடைசியாக அவர், தம்மிடமிருந்த இரண்டாவது கௌபீனத்தை எடுத்து ஒரு தராசில் வைத்து, ''சரி, இந்தக் கௌபீனத்துக்கு ஒத்த நிறையுள்ள வேறொரு கௌபீனம் கொடும்'' என்றார். அமர்நீதிக்கு அப்போதுதான் கவலை நீங்கிய தென்று நினைத்து, தமது கையிலிருந்த புதிதாய் நெய்யப்பட்ட கௌபீனத்தைத் தராசின் மறுதட்டில் வைத்தார். ஆனால் தட்டு மேலேதான் நின்றது. அமர்நீதி தம்மிடமிருந்த பல கோவணங்களைப் போட்டார். தராசு அசையவில்லை. மேலும் மேலும் பல துணிகளையும் பட்டுக்களையும் வாரி வாரிப் போட்டார். அடியாரின் ஒற்றைக் கௌபீனத்தின் எடைதான் அதிகமாகத் தெரிந்தது! அரிச்சந்திரன் எல்லாலற்றையும் கொடுத்ததுபோல அமர்நீதியும் தன் பொருள் பண்டம் யாவற்றையும் இறைத்தும், எடைக்குச் சமானமாகவில்லையாதலால், ''இனி என்னிடம் எதுவுமில்லை. நானும் என் மனைவியும் புத்திரனும்தான் மிச்சம். தேவரீர் அனுமதி தந்தால் நாங்களும் இத்தட்டில் ஏறி நிற்கிறோம்'' என்றார். அடியார் சோதிக்க வந்தவர்தானே, சரி என்றார். உடனே அமர்நீதி, நல்லூரில் வீற்றிருக்கும் தெய்வத்தை தியானித்து ''அடியார்க்குச் செய்யும் தொண்டிலே நாங்கள் இதுவரையும் குறைவில்லாமல் செய்திருந்தோமானால் இந்தத் தட்டு மற்றத் தட்டுடன் சமநிறையில் நிற்கக் கடவது'' என்று சொல்லிக்கொண்டு தாமும் மனைவியும் புத்திரனும் ஏறினார்கள். உடனே தராசு சமநிறை காட்டியது. பிரம்மச்சாரி மறைந்தார்!

நாட்கொண்ட தாமரைப் பூத்தடஞ்சூழ்ந்த நல்லூரகத்தே
நீட்கொண்ட கோவணம் கா என்று சொல்லிக் கிறிபடத்தான்
வாட்கொண்ட நோக்கி மனைவியொடும் அங்கொர் வாணிகனை
ஆட்கொண்ட வார்த்தையுரைக்கு மன்றே இவ்வகலிடமே

என்று நாவுக்கரசர் இந்த நல்லூரில் பாடிய பதிகத்தில் அமர்நீதி நாயனார் வரலாற்றைக் குறிப்பிடுகிறார். இங்கு நாவுக்கரசருக்கு இறைவன் திருவடிதீட்சை கொடுத்தருளினார். இந்தக் காட்சியைத்தான் தாராசுரத்திலுள்ள சிற்பத்தில் வடித்திருக்கிறார்கள்.

நல்லூரில் அமர்நீதி நாயனாரும் மனைவி புதல்வரும் நிற்கும் காட்சி சிலையில் காணப்படுகிறது. இங்குள்ள லிங்கம் பகலிலே பல வர்ணங்களை யுடையதாகக் காணப்படும். வண்டு துளைத்த துவாரங்களுண்டு என்று சொல்வார்கள். சுவாமியின் பெயர் கல்யாண சுந்தரேஸ்வரர். கோயில் மாடக்கோயில். நாங்கள் போன சமயத்தில் உள்ளூர் பாடசாலையில் வேலைபார்க்கும் ஒரு தமிழாசிரியர் அங்கு வந்திருந்தார். நாவுக்கரசரைப்பற்றி ஒரு பிரசங்கமே செய்துவிட்டார். அவருக்கு நன்றி சொல்லிவிட்டு, நல்லூர்ப் பெருமானையும் தரிசித்துக்கொண்டு அரிசிற்கரைப் புத்தூர் என்ற அழகாபுத்தூருக்குச் சென்றோம்.

27. ஏரு நல்லூரிலே

பரந்து படர்ந்த ஒரு திருக்குளத்தின் கரையிலே கோயில். சிறிது தூரத்திலுள்ள அக்கிரகாரத்திலிருந்துதான் அர்ச்சகர் வருகிறாராகையால் கோயிற் கதவு திறக்கும் வரையும் நாங்கள் ஒரு புளியமரத்தின் நிழலில் காத்திருந்தோம். சுமார் ஒரு மணி நேரம் கழித்தே குருக்கள் வந்தார். எங்கள் வரவை அவர் அந்தச் சமயத்தில், அதாவது பகல் இரண்டு மணிக்கு, அவ்வளவாக விரும்பியதாகத் தெரியவில்லை. இருந்தும் நமது காரியம் சித்தியாக வேண்டுமல்லவா? எங்கள் யாத்திரையின் நோக்கத்தையும் இந்த ஊர்க்கோயிலைப் பார்த்து புகழ்த்துணை நாயனாரைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியத்தையும் அவருக்கு எடுத்துச் சொன்னோம். இதற்கிடையில் நமது காரியதரிசி வேணு ஒரு பக்கத்தில் நின்றபடியே கையில் வைத்திருந்த காசெட் டேப் ரிகார்டரைக் கொஞ்சம் முடுக்கிவிட்டார். அதில், நல்லூர் கோயிலில் தமிழாசிரியர் பேசிய பேட்டி நடந்துகொண்டிருந்தது. கொஞ்சம் உற்றுக்கேட்ட அர்ச்சகர் அது என்ன என்று கேட்டார். ''ஒவ்வொரு ஸ்தலமாகத் தரிசிக்கும்போது அந்த ஸ்தலத்தின் ஐதிகத்தைக் குருக்கள் மூலமாக நாங்கள் பேட்டி கண்டு ரிகார்ட் செய்து வருகிறோம். பின்னால் எழுதிக்கொள்வதற்கு வசதியாயிருக்கும்'' என்று நான் விளக்கவும், அர்ச்சகருக்கு ஓர் ஆசை, தன் குரலையும் கேட்கவேண்டும் என்று! என்ன ஆச்சரியம், அர்ச்சகர் வேணுவின் வலையில் சட்டென்று விழுந்து விட்டார். ''உள்ளே வாருங்கள், இங்கேயுள்ள பல விஷயங்களை நீங்கள் தெரிந்துகொள்ளலாம்'' என்றார். இந்த மாதிரி பல இடங்களில், சந்தர்ப்பத்துக்குத் தகுந்த விதமாக பல தந்திரங்களை உபயோகிக்க வேண்டியிருந்தது. சில கோயில்களில் உத்தியோக தோரணையைக் கொஞ்சம் அதிகமாகவே காட்டும் நிர்வாக அதிகாரிகள்; மற்றும் சில இடங்களில் ஒத்துழைக்க விரும்பாத அர்ச்சகர்கள். வேறிடங்களில் அபரிமிதமான உபசாரம், வரவேற்பு. இப்படி எங்கள் யாத்திரை அனுபவங்கள்.

கும்பகோணத்திலிருந்து தென் கிழக்கில் நாலரை மைல் தூரத்திலிருக்கும் அரிசிற்கரைப்புத்தூர் என்ற பாடல் பெற்ற

ஸ்தலத்தை அந்தப் பெயர் சொல்லிக் கேட்டால் யாரும் அறிய மாட்டார்கள். அழகாபுத்தூர் என்பதுதான் இன்று வழங்கும் பெயர். சுந்தரமூர்த்தி நாயனார் ''அரிசிற் தென் கரை அழகார் திருப்புத்தூர்'' என்று தேவாரத்தில் பாடியுள்ளார். அரிசில் ஆற்றின் கரையிலிருப்பதால் அரிசிற்கரைப்புத்தூர். அரிசில் என்பதும் அரி சொல் என்பதிலிருந்து மருவி வந்ததாகச் சொல்வர். விஷ்ணு இந்த ஆற்றை இந்த வழியாக ஓடச் சொன்னதால், அரிசொல் ஆறு என்று பெயர் பெற்றது. அரசலாறு என்று உள்ளூர்க்காரர் சொல்வார்கள். இந்த அழகாபுத்தூர் பெரிய புராணம் பாடிய சேக்கிழார் காலத்தில் செருவிலிபுத்தூர் என்று வழங்கியதாம். ஆனால் இந்தப் பெயரை வேறெங்கும் காணமுடிகிறதில்லை.

அழகாபுத்தூரில் வாழ்ந்த புகழ்த்துணை நாயனார் என்பவர் எப்போதும் இந்தக் கோயில் சுவாமியை வழிபடுவார். அபிஷேகம் செய்து அர்ச்சனையும் செய்வார். எதிர்பாராத விதமாக அவருக்கு வறுமை வந்துவிட்டது. உணவுக்கு வழியில்லை. பட்டினி கிடந்தாலும் தமது சுவாமி கைங்கரியத்தை விடாமல் செய்து வந்தார். ஒருநாள் வழக்கம்போல அரசலாற்றிலிருந்து ஒரு குடம் தண்ணீர் மொண்டு கொண்டுபோய் சுவாமிக்கு அபிஷேகம் செய்யும்போது, உடல் தளர்ச்சி காரணமாக குடம் நழுவி ஈஸ்வரன் முடியில் விழுந்துவிட்டது. நாயனரும் மயங்கி விழுந்தார். உடனே சுவாமி தரிசனம் கொடுத்து, ''அப்பா புகழ்த்துணை, உன் பஞ்சம் நீங்கும் வரை உனக்கு நாள்தோறும் ஒவ்வொரு காசு வைக்கிறேன். எடுத்து உபயோகித்துக்கொள்'' என்று சொல்லி மறைந்தார். அன்றிலிருந்து தினந்தோறும் அவருக்குப் படிக்காசு கிடைத்தது. வறுமை நீங்கித் தம்மையும் காப்பாற்றி, இறைவன் திருப்பணியையும் குறையாமல் செய்து வந்தார்.

படிக்காசு கிடைத்த கோயிலாயிருந்தாலும் இன்றும் இந்த ஸ்வாமிக்கு வறுமைதான். ஏதோ தினசரி பூஜை நடக்கிறது. இரண்டு காலம். உற்சவம் ஒன்றும் கிடையாது. ஆவணி ஆயிலியத்தன்று குரு பூசை. இதைச் சொன்ன ராமலிங்கக் குருக்கள் ஒரு விளக்கமும் கொடுத்தார். ''அன்று அர்த்தஜாமம் முடிய தீபாராதனை நடக்கும். அதை சுவாமியிடம் ஒப்படைப்போம். அதாவது இறைவனுடன் ஐக்கியமாவது என்று பொருள். தீபாராதனை செய்த கற்பூரத்தட்டை நாம் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொள்கிறோமல்லவா, அதுதான் நாம் கடவுளுடன் ஐக்கியமாகிறோம் என்று காண்பிக்கிறது. கிறிஸ்தவர்கள் 'கம்யூனியன்'

என்ற ஒரு சடங்கு வைத்திருக்கிறார்கள். அதுபோல் தீபாராதனை தான் நமது ஐக்கிய வழிபாடு'' என்று அவர் தெளிவுபடுத்தியது உபயோகமான கருத்தாயிருந்தது. இந்தக் கதையைச் சுந்தர மூர்த்தி சுவாமிகள் தமது தேவாரத்தில் மிக விவரமாக வைத்துப் பாடியுள்ளார்.

'' அகத்தடிமை செய்யும் அந்தணன்ருன் அரிசிற் புனல்
கொண்டு வந்து ஆட்டுகின்ருன், மிகத்தளர் வெய்திக்
குடத்தையும் நும் முடிமேல் விழுத்தி ட்டுநடுங்கு
தலும், வகுத்தவனுக்கு நித்தற் படியும் வரும் என்று ஒரு காசினை
நின்ற நன்றிப் புகழ்த்துணை
கைப்புகச் செய்துகந்தீர் பொழிலார் திருப்புத்தூர்ப்
புனிதனீரே''

இந்தக் கதை காரணமாகவே அழகாபுத்தூர் சுவாமியின் பெயர் படிக்காசளித்த நாதர் என்று வழங்குகிறது. இங்கு புகழ்த்துணை நாயனருக்கு ஒரு சிலா விக்கிரகம் மாத்திரமுண்டு. உற்சவ விக்கிரகம் கிடையாது. குருக்களின் ஆரம்ப நிலையையும், இப்போது காண்பித்த உற்சாகத்தையும் ரசித்து, அவர் சொன்ன கதையை ரிக்கார்ட் செய்துகொண்டு, கற்பூர தீபம் காட்டச் செய்து கண்ணில் ஒற்றி அந்தக் கோயில் சுவாமியின் அருளை வேண்டிக்கொண்டு எங்கள் பட்டியலிலுள்ள மற்றொரு நாயனராகிய ஏஞதி நாயனரைத் தேடிச் சென்றோம்.

* * *

இந்த ஏஞதிநாத நாயனருடைய ஊர் எயினனூர் என்று பெரிய புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூர் பெரியார் சி. கே. சுப்பிரமணிய முதலியார் தமது பெரிய புராண உரையில் இந்த இடம் இப்போது ஏன நல்லூர் என்ற பெயரில் வழங்குகிறது என்றும், அழகாபுத்தூரின் பக்கத்திலுள்ளது என்றும் வழிகாட்டியிருப்பதால் எங்களுக்கு இதைக் கண்டு பிடிப்பதில் கஷ்டமிருக்கவில்லை. ''ஏன நல்லூருக்கு எப்படிப் போவது?'' என்று ஒருவரிடம் கேட்டோம். ''ஏஞ நல்லூரா? இதோ நேராப் போங்க'' என்றார் அவர். ஏஞ நல்லூர் என்று தான் இந்தப் பக்கத்திலே சொல்கிறார்கள். போகும் வழியில் நாச்சியார் கோயில் உற்சவத்தையும் பார்த்துக்கொண்டு அந்தக் கிராமத்தையடைந்தோம். கோயில் அம்போ என்று கிடந்தது. குருக்களைத் தேடிப் பார்த்தோம். அவர் ஊரில் இல்லையென்று யாரோ ஒருவர் சொன்னர். பக்கத்திலுள்ள தென்னந்தோப்பில் சிறிது இளைப்பாறியபோது எங்கோ இருந்து சில வாலிபர்கள் வந்தார்கள். எங்கள் நிலையைப் பார்த்து அனுதாபம் கொண்ட அவர்களில் ஒருவர் தோப்பிலிருந்து இளநீர் பறித்து உபசரித்தார்.

இன்னொருவர் கோயில் வெளி கேட்டைத் திறந்துவிட்டார். உள்ளே நடை சாத்தியிருந்தது. சாவி குருக்களிடமிருப்பதால் ஒன்றும் செய்யமுடியவில்லை. நல்ல வேளையாக இங்கு ஏஞ்சி நாத நாயனாருக்கும் அவர் மனைவிக்கும் ஒரு சிறு சந்நிதி தனியாக வடக்குப் பிராகாரத்திலிருப்பதால் அந்த விக்கிரகங்களைப் படம் பிடிக்க ஏதுவாயிற்று. ''இந்தக் கோயிலில் சில ஆண்டுகளுக்கு முன்புதான் ஒரு ஐயங்கார் அம்மாளின் திருப்பணி நடந்தது. பக்கத்திலே இதற்கு ஒரு மடம் இருக்கிறது. நீங்கள் அவசியம் பார்க்கவேண்டும்'' என்று சொன்னார் ஒருவர். இந்த ஊரிலே ஒரு காலத்தில் ஏஞ்திநாதர் என்பவர் ஒருவர் இருந்தார். இவர் ஈழகுலச் சான்றார் வகுப்பில் வந்தவர் என்று சொல்லப்படுகிறது. இது எந்த ஜாதி என்று இப்போது தெரியவில்லை. ஆனால் மதுரையில் எனக்குத் தெரிந்த நாடார் நண்பர் ஒருவர் ஏஞ்தி நாதர் தமது வகுப்பைச் சேர்ந்தவர் என்று முடிவு கட்டி, இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் வெளி வந்த 'க்ஷத்திரிய மித்திரன்' என்ற பத்திரிகையில் கட்டுரை வந்ததாகத் தெரிவித் தார். நாடார் வகுப்பில் ஏஞ்திநாதன் என்று பலருக்குப் பெயர் வைப்பதாகவும் சொன்னார்.

ஏஞ்திநாதர் வாள் வித்தையில் கெட்டிக்காரர். அதை மற்றையவர்களுக்குச் சொல்லிக்கொடுத்து அதில் கிடைக்கும் ஊதியத்தைக்கொண்டு இறைவனுக்குப் பணி செய்துவந்தார். திருநீற்றில் மிகுந்த பற்றுக்கொண்டவர். நீறு பூசிய அடியார் களுக்கு வணக்கமும் வழிபாடும் செய்வதில் குறைவில்லை. அந்த ஊரிலே அதிசூரன் என்பவன் ஒருவனும் இவரைப்போல வாள் வித்தையில் சமர்த்தன். அவனும் பலருக்கு அதைப் பழக்கி வந்தான். ஆனால் நாளுக்கு நாள் அவன் மதிப்புக் குறையவே பொறுமை ஏற்பட்டது. ஏஞ்திநாதர் மேல் அவனுக்கு ஆத்திரம் வந்தது. அவரை எதிர்த்துப் போட்டிபோட அழைத்தான். போட்டா போட்டியில் வெல்பவரே வாள் வித்தை பழக்க இந்த ஊரில் உரிமையுள்ளவர்கள் என்று முடிவு செய்வதென்று தீர்மானித்துக் கொண்டு இருவரும் ஒப்பந்தம் செய்து கொண் டனர். இவர்களுடைய மாணாக்கர் எல்லாரும் தமது ஆயுதங்களை எடுத்துக்கொண்டு வந்து, இரண்டு பெரிய சேனைகளாகவே போருக்குத் தயாராக நின்றனர். போர் தொடங்கியது. இருபக்கமும் வாள் வீச்சுப் பலத்தது. முடிவில் அதிசூரன் கட்சி தோற்றது. அவனும் அவன் கட்சியில் எஞ்சி நின்றவர்களும் ஓடி ஒளிந்துகொண்டனர்.

மறுநாட்காலை அதிசூரன் ஒரு செய்தியனுப்பினான். ''வீணாக நமது மாணாக்கர் இந்தப் போட்டியில் கலந்து உயிரை விட

வேண்டாம். நாம் இருவருமே தனியாக ஓரிடத்தில் நின்று வாட் சண்டையிட்டு வெற்றி தோல்வியைத் தீர்மானிப்போம். அதற்குச் சம்மதமா?'' என்றுகேட்டான். ஏனநாதர், ''நல்லது. அப்படியே செய்வோம்'' என்று ஒப்புக்கொண்டார். அதிசூரன் அப்போது ஒரு சூழ்ச்சி செய்தான். ஏனநாதர் திருநீற்றில் அதிக பற்றுக்கொண்டவர். நீறு பூசியவர்கள் எவராயிருந்தாலும் பணிந்து வணங்குபவர். ஆகையால் அதிசூரன் தனது நெற்றி நிறைய விபூதியைப் பூசிக்கொண்டு, கையில் வைத்திருந்த கேடயத்தால் நெற்றியை மறைத்துவைத்து, ஏனநாதியாருடன் போருக்கு வந்தான். ஏனநாதியார் பாய்ந்து அவனை எதிர்த்து வாள் வீசிய சமயம் அந்தப் பாதகன் கேடயத்தை அகற்றினான். ''அந்தோ கெட்டேன். இவர் நீறு பூசிய சிவனடியார் என்பதை உணராமல் போய் விட்டேன்'' என்று சொல்லிக்கொண்டு ஏனநாதர் தம் கையிலிருந்த வாளைக் கீழே போட்டார். அதிசூரன் தன் காரியத்தை நிறைவேற்றினான். எல்லாம் வல்ல இறைவன் ஏனநாதரைத் தம்முடன் அழைத்து நாயனார் ஆக்கிக்கொண்டார் என்பது பெரியபுராணம்.

ஏனநல்லூருக்குப் பக்கத்தில் ஆண்டான்கரை என்று சொல்லப்படும் இடத்தில்தான் இவர்கள் போர் நடந்தது என்று கர்ணபரம்பரையாக நம்பப்படுகிறது. இந்த ஊரில் ஒருமடம் இருக்கிறதாகச் சொல்லி எங்களுக்கு இளநீர் கொடுத்து உதவிய இளம் நண்பர்கள் அங்கே அழைத்துச் சென்றார்கள். பக்கத்திலுள்ள தெருவில் ஒரு வீடு. அங்கே ஒரு குடும்பம். அவர்கள்தான் கோயில் தர்மகர்த்தா என்று சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு கோயிலின் சொத்தாயிருக்கும் சில நிலங்கள் உதவுகிறதல்லாமல் கோயில் திருப்பணியைப்பற்றி அக்கறையில்லை யென்பதை அறிந்து வருத்தப்பட்டோம். இளம் நண்பர்கள் இந்த நிலையைப் பற்றிக் கதைகதையாகச் சொன்னார்கள். ''பரமசிவத்தம்பிரான் என்று ஒருவர் இந்த மடத்தில் இருந்தார். பின்னர் அவரிடமிருந்து நடராஜ பிள்ளை யென்பவர் மடத்தை விலைக்கு வாங்கிவிட்டார். அவரும் அவர் குடும்பமும் இங்கே வசிக்கிறார்கள்'' என்றார்கள். இப்படி எத்தனையோ தலங்களில் நடக்கும் காரியம்தான் இங்கும் நடக்கிறது. சில இடங்களில் பெரிய அளவில்; மற்றிடங்களில் சிறிய அளவில், அதுதான் வித்தியாசம்.

28. செல்லாக் காசு

எங்கள் யாத்திரையில் ராஜோபசாரமான வரவேற்பும் மரியாதையும் நடந்த இடம் திருவீழிமிழலை. அங்குள்ள அதிகாரி களும் குருக்களும் ஆனந்தமான முகத்துடன் வரவேற்று உபசரித்த பண்பை மறக்க முடியாது. திருவாவடுதுறை மடத்தின் மேற்பார்வையிலிருக்கும் கோயில் இது. அந்த மடத்துப் பிரதிநிதிகள் உண்மையான தொண்டர்கள் என்ற அபிப்பிராயத்தை எங்கள் உள்ளத்தில் பதிய வைத்துவிட்டார்கள். தென்னட்டிலுள்ள ஸ்தலங்களில் திருவீழிமிழலை பார்க்கவேண்டிய ஒரு நல்ல கோயில். சுந்தரமூர்த்தி நாயனார் இங்கு வந்தபோது, ''திருமிழலை இருந்து நீர் தமிழோடிசை கேட்கும் இச்சையாற் காசு நித்தம் நல்கினீர்'' என்று பாடியதாகத் தேவாரத்தில் காணப்படுகிறது. இதற்கு ஒரு வரலாறு உண்டு.

திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் யாத்திரை செய்து கொண்டு வரும்போது திருவீழிமிழலைக்கு வந்து ஆளுக்கொரு மடம் கட்டி அடியார்களுக்கு அன்னதானம் செய்து வந்தார் களாம். ஆனால் சில நாளில் ஊரில் வறுமை வந்துவிட்டது. இவர்கள் கையிலிருந்ததும் செலவாகிவிட்டது. இந்த நிலையில் அடியார்களுக்கு எப்படி அன்னதானம் செய்வதென்று அப்பரும் சம்பந்தரும் வருந்தும்போது ஒரு நாள் கனவிலே சுவாமி தோன்றி, ''கவலைப்படவேண்டாம். உங்களுக்கு நான் தினந் தோறும் படிக்காசு தர ஏற்பாடு செய்திருக்கிறேன். கிழக்கு வாசல் பலிபீடத்தில் ஒன்றும் மேற்கு வாசல் பலிபீடத்தில் ஒன்றும் வைக்கப்படும். அதையெடுத்து உபயோகியுங்கள்'' என்று சொல்லி மறைந்தார். அப்படியே கிழக்குப் பலிபீடத்தில் கண்ட காசைச் சம்பந்தரும், மேற்கில் கண்ட காசை அப்பரும் எடுத்து, பணியாளர்களிடம் கொடுத்து, வேண்டிய பொருள்களை வாங்கிவந்து அன்னதானம் செய்ய உத்தரவிட்டார்கள். அப்பர் மடத்திலே நேரங்காலத்தோடு உணவுபரிமாறப்பட்டது. ஆனால் சம்பந்தர் மடத்திலே தினந்தோறும் தாமதமானது. இதைப் பற்றி ஒருநாள் சம்பந்தர் பணியாளர்களிடம் விசாரித்தார்.

அவர்கள் சொன்னார்கள்: ''சுவாமி! தாங்கள் கொடுக்கும் காசுக்கு கடைக்காரர் வாசி (கமிஷன்) கேட்கிறார்கள்.ஆனால் அப்பர் சுவாமிகளின் காசுக்கு அவர்கள் வாசி கேட்கிறதில்லை. அதனால் நாங்கள் வாசிக்காக அலைந்து தேடி அந்த அதிகப்படியான தொகையைக் கொடுத்த பின்தான் பண்டங்களைத் தருகிறார்கள். இதில் காலதாமதமாகிறது'' என்றார்கள். உடனே சம்பந்தர் மனம் கலங்கி, ''வாசி தீரவே காசு நல்குவீர் மாசின் மிழலையீர் ஏசலில்லையே'' என்ற தேவாரத்தைப் பாடினார். அன்று முதற்கொண்டு கிடைத்த படிக்காசுக்கு வியாபாரிகள் வாசி வாங்கவில்லையென்று வரலாறு. அப்பர் சுவாமி ஓர் உழைப்பாளி; தொண்டு செய்வதில் தவறுவதில்லை. ஆகையால் அதற்கு ஊதியமாக நல்ல காசு கொடுத்தார் சுவாமி. சம்பந்தர் அப்படியில்லை. கேட்டபோது சுவாமி கொடுப்பார் என்ற நம்பிக்கையில் இருந்தவர். அதனால் வாசி கொடுக்க வேண்டிவந்தது என்று சிலர் இந்தச் சம்பவத்துக்கு விளக்கம் தருவார்கள். ஆனால் சுந்தரர் பாடும்போது,''சம்பந்தரின் இசையில் மயங்கிப்போய் வாசி இல்லாத காசு கொடுத்தார்'' என்று சொன்னார்.

திருவீழிமிழலை விமானத்தை விண்ணிழிவிமானம் என்று சொல்வார்கள். மகாவிஷ்ணு விண்ணிலிருந்து இங்கே கொண்டு வந்த விமானமே கோயிலாயிற்று என்று ஒரு ஐதிகம். அது மாத்திரமல்ல,இந்தக் கோயில் விமானத்தின் தென் பக்கம் சீர்காழியிலுள்ள தோணியப்பர் விமானம் போல் காட்சியளிக்கிறது. சம்பந்தர் இங்கு தங்கியிருக்கும்போது அவர் சொந்த ஊராகிய சீர்காழியிலுள்ள பல பிராமணர்கள் அவரை அழைத்துப்போக வந்தார்கள். ஆனால் இங்கே அடியார்களுக்கு அன்னதான சேவை தொடர்ந்து நடக்க வேண்டியிருந்ததால் சம்பந்தர் சீர்காழிக்குப் போக முடியவில்லை. எனவே, அவர் சீர்காழிப் பெருமானாகிய தோணியப்பரை நினைத்துப் பாடியவுடன், இங்கேயே திருவீழிமிழலையில், அவர் காட்சி கொடுத்தார் என்றும் சீர்காழி விமானம் இங்கே தோன்றியது என்றும் சொல்வார்கள். ''காழி பாதி வீழி பாதி'' என்ற பழமொழியுண்டு.

இந்தக் கோயில் சுவாமிக்கு கல்யாண சுந்தரர் என்றும் மணவாளப் பெருமாள் என்றும் பெயருண்டு. உமாதேவியைக் காத்தியாயினி என்ற பெயரில் நரரூபத்தில் வந்து இங்கே கல்யாணம் செய்து கொண்டார் என்ற ஐதிகமுண்டு. அதனால் மணவாளன் என்ற பெயர் ஏற்பட்டது. அப்பர் தமது தேவாரத்தில், ''நித்த மணவாளனென நிற்கின்றுன் காண்'' என்று பாடியுள்ளார். இங்கேயிருக்கும் உற்சவமூர்த்திக்கு நான்கு கைகள்

கிடையா. இரண்டு கைகள்தான். அதாவது மனித ரூபத்தில் வந்து கல்யாணம் செய்தார் என்பதற்கு அறிகுறி. இதில் அம்பாள் வலது பக்கம் நிற்பதைக் காணலாம். கல்யாணக் கோலத்தின் காட்சி. இந்தக் கோயிலில் படிக்காசு சம்பவத்தைக் காண்பிக்க, மேற்கு வாயிலில் ஒரு பலிபீடமும் கிழக்கு வாயிலில் ஒரு பலிபீட மூமாக இரண்டு பலிபீடங்களிருக்கின்றன. இங்கிருந்து ஐந்தாறு மைல் தூரத்தில் ஆண்டார் பந்தி என்ற இடம் இருக்கிறது. இது முன் காலத்தில் அடியார் பந்தி என்ற பெயரில் இருந்தது. இங்கு தான் அப்பரும் சம்பந்தரும் பந்தி வைத்து அடியார்களுக்கு அன்ன தானம் செய்து வந்தார்கள். நாங்கள் போன சமயத்தில் வடக்கு வீதியில் மேற்கிலும் கிழக்கிலும் இரண்டு மடங்கள் இருப்பதைப் பார்த்தோம். அப்பர் சம்பந்தர் மடங்கள் இவையென்று சொன்னார்கள்.

கல்யாண உற்சவம்தான் திருவீழிமிழலையில் மிக விசேஷமானது. ஊரே கல்யாணக்கோலம் கொண்டிருக்கும் என்று சொல்வார்கள். கல்யாண சுந்தரம் என்ற பெயரும் இங்கு பலருக்குண்டு. ஒன்பது வயதுப் பையன் ஒருவன் விபூதி ருத்ராக்ஷ சகிதம் அங்கு நின்று பூஜை செய்தான். அவன் வாயில் பிறந்த மந்திரங்களைக் கேட்க இனிமையாயிருந்தது. அவ்வளவு அட்சர சுத்தம். அவன் பெயரும் கல்யாணசுந்தரம் என்று சொன்னார்கள். தில்லை மூவாயிரவரைப் போல திருவீழிமிழலை ஐந்நூற்றுவர் என்று இங்கே குருக்கள் பரம்பரை யொன்றுண்டு. இந்தப் பரம்பரையிலுள்ள சிலர்தான் திருவாரூரில் ஒரு காலத்தில் பூசை செய்து வந்தார்கள். இவர் களைப் பற்றித்தான் தத்துவப்பிரகாச சுவாமிகள் கிருஷ்ணதேவ ராயருக்கு முறையிட்ட கதையை முன்னரே படித்திருக்கிறோம்! திருவாரூரைப் பற்றிச் சொல்லிய வரலாற்றில் காணலாம்.

சிற்சில கோயில்களில் சிற்ப வேலைப்பாடு விசேஷமாயிருப்ப துண்டு. முன்பு நனிபள்ளி விமானத்தைப் பற்றிக் குறிப்பிட் டோம். அதுமாதிரி, திருவீழிமிழலையிலுள்ள ஒரு மண்டபம் வெளவால் நத்தி மண்டபம் என்று சொல்லப்படும். இது அரை வட்டவடிவத்தில் தூண் எழுப்பாது கட்டப்பட்டிருக்கும் கூரை. இதில் வெளவால் பிடித்திருக்க முடியாது என்பதால் வெளவால் நத்தி மண்டபம் என்று சிலர் விளக்குவார்கள். வெளவால் நெற்றி மண்டபம் என்று வேறு சிலர் சொல்வார்கள். எப்படியிருந் தாலும், இம்மாதிரியான கட்டடக்கலை அந்தக் காலத்தில் மிகவும் அபூர்வம் என்று, கோயில் கட்டட வேலைக்கு ஒப்பந்தம் செய்ப வர்கள் ''திருவலஞ்சுழி பலகணி, ஆவுடையார் கோயில் கொடுங்கை, கிடாரம் கொண்டான் மதில், திருவீழிமிழலை

வெளவால் நத்தி மண்டபம், நனி பள்ளி விமானம் இவை நீங்க லாக'' என்று தம் தொழிலுக்குப் புறனடைப்பாதுகாவல் செய்து கொள்வார்களாம்.

கோயில் அதிகாரிகளும் குருக்களும் எங்களை உட்காரவைத்து உபசாரத்தில் மூழ்க வைத்து விட்டார்கள். இளநீரும் மாம்பழமும் பேயம் பழம் என்ற வாழைப்பழமும் தந்து ஒரு பெரிய விருந்தே போட்டார்கள்! கல்யாண மாப்பிள்ளை ஊரல்லவா? அந்தக் களை அங்கு இன்னும் போகவில்லை! ஆனால், ஊர் ஊராகப் போக வேண்டிய நாங்கள் அங்கேயே உட்கார்ந்திருக்க முடியுமா? ஒரு விதமாக அவர்கள் அன்புப்பிடியிலிருந்து விடுபட்டு, அடுத்த நாயனூர் ஒருவரைத் தேடி சேக்கிழார் பின்னல் அவர் அடிச் சுவட்டில் சென்றோம்.

29. மத்தியானப் பறையர்

அறுபத்து மூவரில் உருத்திரபசுபதி நாயனார் என்பவர் ஒருவர். இவர் வைதீகப் பிராமணர். தினம்தோறும் மகாருத் திரத்தைப் பாராயணம் செய்யும் வழக்கமுடையவர். ருத்திரம் என்பது ''நமசிவய'' என்ற பஞ்சாட்சரத்துக்கு இணையானது. இருக்கு, யஜுர், சாமம் என்ற மூன்று வேதங்களின் நடுவில் இருப்பது யஜுர் வேதம். இதன் மத்திய பாகம்தான் மகா ருத்திரம் என்று வழங்கும். இந்தப் பஞ்சாட்சரத்தை ஓதுவதில் பல நிலைகளிருக்கின்றன. ஆற்றில் அல்லது குளத்தில் கழுத்தளவு நீரில் நின்றுகொண்டு பஞ்சாட்சரத்தை ஓதுவதுதான் ருத்திர ஜபம் என்று சொல்லப்படும். இந்த விதமாக நாள்தோறும் தவறாமல் ருத்திர ஜபம் செய்து மேல் நிலையடைந்து நாயனார் பதவியைப் பெற்றவர்தான் உருத்திர பசுபதி நாயனார் என்பவர்.

இந்த நாயனார் பிறந்த இடம் திருத்தலையூர் என்று சேக்கிழார் சொல்கிறார். இதைப் பற்றிய தகவலை நாம் பழையபடி சுப்பிரமணிய முதலியாரிடமே நாடவேண்டி வந்தது. ''இத்தலம் தென்னிந்திய இருப்புப் பாதையில் மாயவரம் - பேரளம் வழியில், கொல்லுமாங்குடி நிலையத்திலிருந்து கிழக்கு இரண்டு நாழிகை யளவு கற்சாலை வழி சென்றால் நாட்டு வாய்க்காலின் தென்கரை யில் அடையத்தக்கது'' என்ற விளக்கத்தைக் கண்டோம்!

இந்தக் குறிப்புக்களையெல்லாம் வைத்துக்கொண்டு எங்கள் காரியதரிசி - கணக்கப்பிள்ளை வேணு, மோட்டார் சாரதி ராதா கிருஷ்ணனுக்கு உத்தரவுகள் கொடுத்துக் கொண்டிருந்தார். நானும் சிட்டியும் ஏதோ பேச்சிலிருந்து விட்டோம். நிமிஷங்கள் பறந்தோடின. மைல்கற்களைக் கணக்கிட்டுவந்த வேணுவும் ராதாகிருஷ்ணனும் கணக்கைத் தவற விட்டுவிட்டார்கள்! திருத்தலையூர் என்ற ஊருக்கு பெயர்ப்பலகை காணப்படும் என்ற நம்பிக்கையில் வந்தவர்கள் ஊரைத்தாண்டி வெகுதூரம் வந்து விட்டோம் என்பதைப் பின்னர்தான் உணர்ந்தோம். தெரு வோரத்தில் ஒரு பெட்டிக்கடையில் நாங்கள் இறங்கி நின்று

கொண்டு, வேணுவையும் ராதாகிருஷ்ணனையும் அனுப்பி, எப்படியாவது கோயிலைக் கண்டுபிடித்துக் குருக்களையும் அழைத்து வாருங்கள் என்று சொல்லிவிட்டோம்! அது பலன் தந்தது.

சிறிது நேரத்தில் வண்டி வந்தது. குருக்கள் ஒருவர் பின்னல் சைக்கிளில் வந்தார். எதிர்பாராத விதமாக, நாங்கள் வந்து சேர்ந்த ஊரிலேயே திருத்தலையூர் அர்ச்சகர் குடியிருக்கிறார் என்ற தகவல் கிடைத்ததுதான் இந்த வெற்றிக்குக் காரணம் என்று பின்னல் தெரிந்தது. தற்செயலாக அவரைக் கேட்டதும், அவரே கோயிலைப்பற்றிச் சொல்லி இருவரையும் நாங்கள் இருக்கும் இடத்துக்கு அழைத்து வந்தார். மேலும் கால்மைல் தூரம் திரும்பி வந்து நாட்டுவாய்க்காலைக் கடந்து கோயிலையடைந்தோம். தெருவில் நின்று பார்த்தால் கோயிலின் ஒரு பகுதியைக் காணலாம். சிறிய கோயில். கடமைக்கு ஒருவர் வந்து ஒருவேளை தீபம் காட்டிவிட்டுப் போகிறார். சுவாமி பெயர் பாலேஸ்வரர். கோயிலின் தெற்கில் உருத்திரகோடி தீர்த்தம் என்ற பெயரில் ஒரு குளம். நடுவில் ஒரு மேடை. இந்தக் கோயிலில் சில நல்ல அழகுள்ள பஞ்சலோக விக்கிரகங்கள் இருந்தன என்றும், அவற்றை இந்து அறநிலைய உத்தியோகஸ்தர் பக்கத்திலுள்ள சிறுபுலியூர் என்ற ஸ்தலத்தில் பாதுகாப்பாகக் கொண்டுபோய் வைத்துள்ளனர் என்றும் குருக்கள் சொன்னார். சிறிது நேரம் அங்கு பேசிக் கொண்டிருந்துவிட்டு, பழையபடி நாட்டு வாய்க்காலைக் கடந்து தெருவில் ஏறினோம். வாய்க்காலில் நீர் கிடையாது. கார் பக்கத்தில் வந்தபோது ராதாகிருஷ்ணனைக் காணவில்லை. பக்கத்தில் எங்காவது போயிருப்பார் என்று காத்திருந்தபோது ஈரத்துண்டும் அவருமாகக் கோயில் பக்கத்திலிருந்து வாய்க்காலைக் கடந்து வந்தார். ''உருத்திர ஜபம் பண்ணிவிட்டு வருகிறார்'' என்றார் நண்பர் சிட்டி! இந்த நாட்டு வாய்க்காலை நாட்டான் வாய்க்கால் என்று சொல்வார்கள். அதன் பக்கத்தில் வளைந்து வளைந்து செல்லும் சாலையில் நாங்களும் நடந்து நடந்து அலைந்ததைக் கேள்விப்பட்ட அர்ச்சகர் அந்த வட்டாரத்தில் வழங்கும் ''கேட்டார் பேச்சைக் கேட்டு, நாட்டான் வாய்க்கால் சாலையோடு போனானும்'' என்ற பழமொழியைச் சொல்லிச் சிரித்தார்! அடுத்ததாக, சோமயாஜி யாகம் நடந்த அம்பர் மாகாளத்தை நோக்கிச் சென்றோம். அது அவ்வளவு கஷ்டமாயில்லை. பலருக்குத் தெரிந்த இடம். சுலபமாக அங்கு போய்ச்சேர்ந்தோம்.

அம்பர் மாகாளத்துக்கு நாங்கள் போய்ச் சேரும்போது மணி பதினொன்றிருக்கும். கோயில் சந்நிதியில் தட்டுப்பந்தர் போட்டுக் குளுகுளு என்றிருந்தது. பக்கத்தில் அக்ரஹாரம்; தேவஸ்தானக்

காரியாலயமும் இருந்தது. வாசலில் ஒரு அழகான இரட்டை மாட்டு வண்டி நின்றது. சற்று நேரத்தில் மீசையும் ஆளுமாக ஒரு பெரிய உத்தியோகத்தர் மேல் நாட்டு உடையில் தேவஸ்தானக் காரியாலயத்திலிருந்து வெளியே வந்து வண்டியில் ஏறப்போனவர் எங்களைத் திரும்பிப் பார்த்தார். யாரோ வெளியூர்க்காரர் என்று தான் நாங்கள் நினைத்தோம். அவர் எங்களைப் பார்த்து, ''எங்கே வந்தீர்கள்?'' என்று ஆங்கிலத்தில் கேட்டார். நாங்கள் எங்கள் யாத்திரையைப் பற்றிச் சொன்னோம். கோயில் நிர்வாக அதிகாரியைப் பார்க்கலாமா என்றும் கேட்டோம். மீசைக்காரர் புன்னகை புரிந்தார். ''நான்தான் அந்த ஆபீஸர். அவசரமாக வெளியே போகிறேன். மன்னிக்கவும். உங்களுக்கு வேண்டியதைச் செய்ய ஏற்பாடு செய்கிறேன்'' என்று அன்போடு சொன்னவர் ஒரு ஆளைக்கூப்பிட்டு, ''உள்ளே குருக்களிடம் சொல்லி இவர்களுக்கு வேண்டியதைச் செய்யச்சொல்'' என்று உத்தரவு பிறப்பித்து விட்டு எங்களிடமும் விடைபெற்று வண்டியில் ஏறிப்போய் விட்டார். மற்றும் சில இடங்களில் நாங்கள் சந்தித்த நிர்வாக அதிகாரிகளைக் காட்டிலும், வெளியே ஒரு தோற்றமும் உள்ளே ஒரு தோற்றமும் கொண்ட, நல்ல மனுஷர் இவர் என்று நன்றி கூறி விட்டுக் கோயிலுக்குள் போனோம்.

அம்பர் மாகாளம் என்று இந்தக் கோயிலுக்குப் பெயர் ஏற்பட்டதற்கு இரண்டு சம்பவங்களுள்ளன. அம்பன் அம்பரன் என்ற அசுரர்கள் வாழ்ந்த ஸ்தலம். அவர்கள் பலத்தைக் காளி தேவி அடக்கினாள். அதன் காரணமாக அம்பர் என்றும், காளம் என்ற பாம்பு பூஜித்த காரணத்தால் காளம் என்றும், இரண்டும் சேர்ந்து அம்பர் மாகாளம் என்றாயிற்று. நமக்கு முக்கியமான செய்தி, சோமாசிமாற நாயனார் என்பவர் இங்கு சோமயாகம் செய்து வரம் பெற்ற கதை.

சோமயாஜி என்ற ஓர் அந்தணர் இந்த ஊரில் வாழ்ந்தவர். கடுமையான வேத வேள்வி செய்யும் வைதிகப் பிராமணர். இவர் ஒருமுறை சோமயாகம் செய்ய விரும்பி இறைவனையே அவிர்பாகம் ஏற்க வரவழைக்க வேண்டுமென்று துணிந்தார். சாதாரணமாக யாகம் செய்தால் வேள்வித்தீயின் மூலமாகவே அவிர்பாகத்தை இறைவன் ஏற்றுக்கொள்கிறார் என்பது சம்பிரதாயம். ஆனால் சோமாசிமாறர் திருவாரூரில் உள்ள தியாகராஜரையே நேரடியாக வரவழைக்க விரும்பினார். சுந்தர மூர்த்தி நாயனார் திருவாரூர் சுவாமியுடன் தோழமை பூண்டவர் என்பதை எப்படியோ அறிந்துகொண்ட சோமாசிமாறர் ஒரு ரகஸ்யத்தைத் தெரிந்துகொண்டார். சுந்தரமூர்த்திக்கு தூதுவிளங்

கீரை மிகவும் பிடிக்கும் என்பதையறிந்தவர், தினந்தோறும் அந்தத் தூதுவிளங்கீரையைக் கொண்டுபோய்ப் பரவை நாச்சியாரிடம் கொடுத்துவரத் தொடங்கினர். பரவையாரும் மகிழ்ச்சியுடன் வாங்கிச் சமைத்துக் கொடுத்தார். அடிக்கடி இந்தக் கீரை சமைப்பதைப் பார்த்த சுந்தரர் ''இது எப்படிக் கிடைக்கிறது?'' என்று பரவையாரிடம் கேட்க அவர் ''இது சோமயாஜி என்பவர் கொண்டுவந்து இது உங்களுக்குப் பிடிக்கும் என்று சொல்லித் தந்து போகிறார்'' என்று பதிலளித்தார். சுந்தரர் அந்தப் புது மனுஷரைப் பார்க்க வேண்டுமென்று சொல்லிக் காத்திருந்து மறுநாளிலிருந்தே இருவரும் நண்பர்களாகி விட்டனர். ஒரு நாள் தக்க சமயம் பார்த்து, சோமாசிமாறர் சுந்தரரிடம், தியாகராஜப் பெருமானைத் தமது யாகத்தில் வந்து அவிர்பாகம் பெற்றுப் போக உதவிசெய்ய வேண்டுமென்று விண்ணப்பித்தார், சுந்தரருக்கா இது பெரிய காரியம்? சொல்வ தெல்லாம் கேட்பாரே தியாகராஜர். ''நான் சொல்லி யனுப்பு கிறேன். தாங்கள் யாகத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள்'' என்று வாக்களித்தார்.

யாகம் தொடங்கிற்று. வேதியர்கள் பலர் கூடி மந்திரங்கள் ஜபித்தனர். வைகாசி மாதத்து ஆயிலிய நட்சத்திரம் கூடிய நன்னாளில் பூர்ணகுதி செய்து அவிர்பாகம் வழங்க வேண்டிய சமயம் வந்தது. யாக குண்டத்தில் அக்னி நீண்ட நாக்கு விட்டு வளர்ந்தது. இறைவன் தோற்றப்போகிறான் என்று யாவரும் காத்திருக்கும் சமயம் பார்த்து அங்கே ஒரு பறைச் சத்தம் கேட்டது! பிராமணர்கள் திரும்பிப் பார்த்தார்கள். நீச ரூபத்தோடு ஒரு புலையன்; அவன் புக்கத்தில் மதுக்குடத்தை தலையில் ஏந்திய புலைச்சி. அவர்களைத் தொடர்ந்து நான்கு நாய்கள். மற்றும் ஒரு பறைக்கூட்டம்! இத்தனை வரிசையுடன் ஒரு கூட்டம் யாக குண்டத்தை நோக்கி வருவதைக்கண்ட பிராமணர்கள், ''அபசாரம்! அபசாரம்'' என்று சொல்லிக்கொண்டு ஓட்டம் பிடித்தனர். சோமாசிமாறர் மாத்திரம் அங்கே உட்கார்ந்த படி இறைவனைத் தியானித்துக் கண்ணைமூடித் திறந்தார்! என்ன அற்புதக் காட்சி! இறைவனும் இறைவியுமே அங்கு நேரில் எழுந்தருளக் கண்டார். நான்கு வேதங்களே நாய்களாகவும் பூதகணங்களே புலையர்களாகவும் காட்சிதந்தன. உச்சிக்கால வேளை யில் திருவாரூர் தியாகராஜரே நேரில் வந்து தமது அடியார் சோமாசிமாற நாயனாரின் யாகத்தில் அவிர்பாகம் ஏற்றுக் கொண்டார்.

இதையெல்லாம் பார்த்திருந்த விநாயகர், ஓடிப்போன பிராமணர்களை அழைத்து, ''இறைவனே இந்த வேடத்தில்

வந்திருப்பதை அறியாமல் ஓடிப்போய்விட்டீர்கள். பயமில்லாமல் வந்து வழிபடுங்கள்'' என்று சொன்னதாகவும், அவர்கள் திரும்பி வந்து வழிபட்டதாகவும் கதை. ஆனால் இதற்கு இன்னொரு தொடர்கதையுமிருக்கிறது.

தென்னாட்டிலேயுள்ள பிராமணர் வகையில் ஒரு இனத்தவரை ''மத்தியானப் பறையர்'' என்று சொல்வார்கள். பிரதம சாக்கையர் என்றும் இவர்களுக்கு ஒரு பெயருண்டு. இவர்கள் மத்தியானம் பன்னிரண்டு மணியிலிருந்து ஒரு முகூர்த்தம், அதாவது நாற்பத்தெட்டு நிமிஷ நேரம் ''தீண்டாச் சாதியராக'' இருப்பார்கள். இவர்கள்தான் திருமாகாளத்தில் இறைவனும் இறைவியும் பறைக்கோலத்தில் எழுந்தருளக்கண்டு அபசாரம் என்று ஓடிப்போன பிராமணர்களின் சந்ததியார் என்று சொல்லப்படுகிறது. தம்மைக் கண்டு ஓடினதால், ''ஒரு முகூர்த்தநேரம் நீங்களே பறையர்களாக இருக்கக்கடவீர்'' என்ற சாபம் பெற்றவர்கள் இவர்கள் என்ற கர்ணபரம்பரைக் கதை வழங்குகிறது.

திருவாரூர் தியாகராஜர் கோயிலில் உச்சிக்காலப் பூஜை கிடையாது. காரணம், அங்கிருந்து சுவாமி உச்சிக்காலத்தில் அம்பர் மாகாளத்துக்கு சோமாசிமாற நாயனாரின் யாகத்துக்கு வந்துவிடுகிறார் என்பது ஐதிகம்.

அம்பர் மாகாளத்துக்குச் சிறிது தூரம் கிழக்கே அம்பர் என்ற மாடக்கோயில் இருக்கிறது, இந்த இரு கோயில்களுக்குமிடையில் தான் சோமாசிமாறரின் யாகசாலை இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அங்கே ஒரு பாழடைந்த பழைய கோயில் இருக்கிறது. பக்கத்தில் தெரு, எதிர்ப்புறத்தில் ஒரு சிறு பிள்ளையார் கோயில். இதைத்தான் அச்சந்தீர்த்த விநாயகர் என்று காண்பிப்பார்கள். அம்பர் மாகாளத்தில் வைகாசி ஆயிலியத்தன்று யாக உற்சவம் சிறப்பாக நடத்தப்படுகிறது. அம்பர் மாகாளக் கோயிலின் மூலஸ்தானத்துக்குத் தெற்கில் தியாகராஜப் பெருமானுக்கு ஒரு சந்நிதியிருக்கிறது. யாக உற்சவம் முடிந்து மறுநாள் மக நட்சத்திரத்தில் காட்சி கொடுத்த காரணத்தால் இங்குள்ள தியாகராஜரை ''காட்சி கொடுத்த நாயனார்'' என்று அழைக்கின்றனர். இந்த சுவாமிக்கும், திருவீழிமிழலையைப் போல், இரண்டு கைகள்தான். நான்கு கை கிடையாது.

அம்பர் மாகாளத்தைத் தரிசித்ததில் எங்களுக்கு ஒரே திருப்தி. கோயிற் குருக்கள் பேருதவியாக இருந்தார். அவருக்கு நன்றி தெரிவித்துவிட்டு, தியாகராஜப் பெருமானிடம் வேண்டிக்கொண்டு நேரே தெற்கிலுள்ள திருப்புகலூரை யடைந்தோம்.

30. புகலூர் பாடுமின்!

திருப்புகலூர் என்ற ஸ்தலம் அப்பர் சம்பந்தர் வாழ்ந்த காலத்தில் பல நாயன்மார்கள் வந்து கூடும் ஒரு பொது இடமாக இருந்திருக்கவேண்டும். அங்கே முருக நாயனார் என்றொருவர் திருமடம் வைத்திருந்தார். அந்த மடத்தில்தான் நாவுக்கரசரும், ஞானசம்பந்தரும், திருநீலநக்கரும், சிறுத்தொண்டரும் அடிக்கடி சந்திப்பார்கள் என்று தெரிகிறது. இத்திருப்புகலூரிலுள்ள வர்த்தமானீச்சரம் என்ற கோயிலுக்கு நந்தவனம் வைத்து, பூப்பறித்து மாலைதொடுத்துத் தொண்டு செய்துவந்தவர் முருக நாயனார். இவர் தொண்டைப் போற்றிய ஞான சம்பந்தர் இங்கு வந்த சமயத்தில் இருவரும் நெருங்கிய நண்பர்களானார்கள். ஞானசம்பந்தரிடத்தில் அளவற்ற பற்றும் மதிப்பும் கொண்ட பின்னர் அவருடன்தானே முருக நாயனார் முத்தியடைந்தார் என்று சொல்லப்படுகிறது.

முருக நாயனார் பூக்களை எப்படிப் பறித்தார், என்ன விதமான மாலைகளைத் தொடுத்தார் என்று சேக்கிழார் தமது பெரிய புராணத்தில் சொல்லியிருப்பது ஒரு தனி அழகு. தமிழ் மொழியில் என்னென்ன வேறுபாடுகளை விவரிக்கலாம் என்பதற்கு இதை உதாரணமாகச் சொல்லலாம். முருக நாயனார் பொழுது புலருமுன் எழுந்து, புனித நீரிலே முழுகி, நந்தவனத்திலே போய், அப்பொழுதுதான் மலருகின்ற வெவ்வேறு பூக்களை வெவ்வேறு கூடையில் பறித்துச் சேர்ப்பாராம். பூக்களின் வகைகளோ கோட்டுப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ, கொடிப்பூ, தோட்டுப்பூ. இவ்வகையான பூக்களைப் பறித்து அந்தந்த மலருக்கேற்ற விதம் மாலை தொடுப்பாராம். ''கொண்டுவந்து, தனியிடத்திலிருந்து, கோக்கும் கோவைகளைப்பற்றி'' சேக்கிழார்—இண்டை, தாமம், மாலை, கண்ணி, பிணையல், தொடையல் என்று வகைப்படுத்திச் சொல்கிறார். இண்டை என்பது தலையில் அணியும் மாலை. கண்ணி என்பது கொண்டையில் அணிவது. பிணைக்கப்படுவது பிணையல்; தொடுக்கப்படுவது தொடையல், சரம். இப்படியாக மாலைகட்டி இறைவனுக்குச் சாத்தும் பணியைச் செய்தே முருகநாயனார் பெரும்

பதவி பெற்றார். இவருடைய பெருமையை நேரில் கண்ட ஞான சம்பந்தர் தமது தேவாரத்திலே சொல்கிறார்:

> தொண்டர் தண்கயம் மூழ்கித்துணையலும் சாந்தமும் புகையும்
> கொண்டு கொண்டடிபரவிக் குறிப்பறி முருகன் செய்கோலங்
> கண்டு கண்டு கண் குளிரக் களிபரந் தொளிமல்கு கள்ளார்
> வண்டு பண்செயும் புகலூர் வர்த்தமா னீச்சரத்தாரே.

திருவாரூரைத் தரிசித்துவிட்டுத் திருநாவுக்கரசு நாயனார் இங்கு வந்து முருகர் மடத்தில் தங்கியிருந்தார். அப்போது அங்கு வந்த ஞானசம்பந்தர், ''அப்பரே! நீர் வரும் நாளில் திருவாரூர் கண்டதைச் சொல்வீர்!'' என்று கேட்டார். அதற்கு அப்பர், ''திருவாரூர்ப் பெருமானின் திருவாதிரைத் திருநாள் பெருமையை என்னென்றுதான் வருணிப்பது'' என்று சொல்லிவிட்டு அதை ஒரு தேவாரப்பதிகத்தில் எடுத்துரைக்கிறார்:

> முத்து விதான மணிப்பொற்கவரி முறையாலே
> பத்தர்களோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
> வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்
> அத்தனூர ராதிரை நாளா லது வண்ணம்

இதைக்கேட்ட சம்பந்தர், ''நானும் அந்தத் திருவாரூர் அமர்ந்த பிரானை நேரில் சென்று கும்பிட்டு விட்டு, மறுபடியும் உம்மைச் சந்திக்கிறேன்'' என்று சொல்லி அங்கிருந்து போனார். நாவுக்கரசும் சில நாள் தங்கி வணங்கி விட்டு வேறு தலங்களைத் தரிசிக்கச் சென்றார்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருப்புகலூர் வந்த கதை ஒரு தனி. நாட்டியத்தான் குடியிலே கோட்புலி நாயனாரைச் சந்தித்த பின் அவர் திருவாரூர் திரும்பினார் என்று முன்பு சொன்னோமல்லவா? திருவாரூரில் அவர் பரவையாருடன் இருக்கும்போது முன்பு பங்குனி உத்தரத் திருவிழாவுக்கு குண்டையூர் நெல்லுப் பெற்றது போல, இப்பவும் ஏதோ பொன் வேண்டுமென்று பரவையார் கேட்டுவிட்டார். உடனே சுந்தரர் திருப்புகலூர் போய் சுவாமியிடம்வாங்கலாமென்று புறப்பட்டார். அங்கே தரிசனம் செய்த பின் அன்றிரவு தூங்குவதற்கு ஒரு மண்டபத்தை அடைந்தார். அங்கே பக்கத்தில் சில செங்கற்கள் கிடந்தன. அவற்றில் சிலவற்றை எடுத்து வந்து தலைக்கு அணையாக வைத்துக் கொண்டு துயில் கொண்டாராம். மறுநாட்காலை கண்ட காட்சி அவரைத் திகைக்க வைத்தது. தலைக்கு வைத்துப்படுத்த செங்கற்கள் பொன் கற்களாயின! உடனே திருப்புகலூர் இறைவனை வணங்கிப் பாடினார்!

தம்மையே புகழ்ந்திச்சை பேசினும் சார்வினுந் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப்பாடாதே யெந்தை புகலூர் பாடுமின் புல்வீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும் ஏத்தலாமிடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகமாள்வதற் கியாதுமையுற வில்லையே.

இந்தத் திருப்புகலூரைத் தரிசிக்க நாங்கள் சென்றபோது முதலில் புகைப்படம் பிடிக்க முடியாத நிலை ஒன்று ஏற்பட்டது. எதற்கும் முன்னேற்பாடாகவே நாங்கள் சென்னை அறநிலையக் காரியாலயத்தில் அனுமதி வாங்கிக் கொண்டுதான் சென்றிருந்தோம். ஆனால் திருப்புகலூர் நிர்வாக அதிகாரி நாங்கள் போன சமயத்தில், மாலை நான்கு மணிக்கு, தூங்கிக் கொண்டிருந்தார். சிறிது கண் விழித்த சமயம் காரியாலயச் சேவகன் அவர் கவனத்தைப் பெறப் போகச் சீறி விழுந்தார்! வேண்டாம் இவர் தயவு என்று நாங்கள் வழக்கமாக அனுட்டிக்கும் முறையைக் கையாண்டோம். கோயில் அர்ச்சகருக்கு ஒரு தீபாராதனை காட்டுங்கள் என்று சொல்லிச் சில்லறையைத் தாராளமாகக் கொடுத்தோம். அவரே அழைத்துச் சென்று கோயில் முழுவதையும் காட்டி, கொடுக்க வேண்டிய தகவல்களையெல்லாம் தந்தார். நாங்கள் தரிசித்த கோயில்களில் நிர்வாக அதிகாரிகள் பெரும்பாலும் ஒத்துழைத்தார்கள் என்று சொல்லவேண்டும். திருப்புகலூர் அதிகாரி கொஞ்சம் தடபுடல் ஆசாமி என்று தெரிந்தது. செங்காட்டங்குடியில் கண்ட அனுபவம் இதற்கு எதிரானது. அது அப்புறம்.

திருப்புகலூர் கோயிலில் இரண்டு முக்கியமான சந்நிதிகளிருக்கின்றன. ஒன்று அக்கினீஸ்வரர் சந்நிதி, மற்றது திருப்புகலூர் வர்த்தமானீச்சரம் என்ற வர்த்தமானீஸ்வரர் சந்நிதி. அக்கினீஸ்வரர் சந்நிதியில் கோயிலும் கோபுரமும் பெரியன. கோயிலைச் சுற்றி மூன்று பக்கங்களில் பெரிய குளமாக அகழி காணப்படுகிறது. இங்குள்ள சுவாமி, லிங்கம், சற்றே சரிந்திருப்பதால் கோணப்பிரான் என்று பெயர். இதற்கு ஒரு கதையுண்டு. பாணாசுரன் என்பவன் தன் தாயாருக்கு ஸ்வயம்பு க்ஷேத்திரத்திலுள்ள சிவலிங்கம் நூற்றெட்டையும் கொண்டு வந்து வைக்க வேண்டுமென்று ஏற்பாடு. ஆனால் சிவலிங்கத்தைப் பெயர்த்து அவனால் எடுக்க முடியவில்லை. எப்படியாவது சுவாமியைக் கொண்டு போவது அல்லது பிராணத்தியாகம் செய்வது என்று உறுதி கொண்டு உபாசிக்க, இறைவன் அசரீரியாக, ''உன் தாயார் சிவபூசையில்நான் இருக்கிறேன், வருத்தப்படாதே'' என்று சொன்னார். பாணாசுரன் அதற்கு அடையாளம் காண்பிக்குமாறு கேட்டான். உடனே சுவாமி, ''நூற்றெட்டு மிருத்திக லிங்கம் பிடித்து வைக்கச்

சொல்லு. இதில் நூற்றெட்டாவது சிவலிங்கம் சாய்ந்திருக்கும்; பின்னிக் கொன்றை மாலை சூடியிருக்கும்'' என்றார். அதே விதமாக இங்கே திருப்புகலூரிலிருக்கும் சிவலிங்கம் சாய்ந்திருக்கிறது. அப்பர் தம் தேவாரத்தில் ''கோணப்பிரானே'' என்று சொல்லிப் பாடுகிறார். இங்கே அக்கினி வழிபட்டதால் அக்கினீஸ்வரர் என்றும் பெயர். அக்கினீஸ்வரரின் உற்சவமூர்த்தி உருவம் வேதத்தில் சொல்லப்பட்டவாறு ஏழு ஜ்வாலை, நான்கு கொம்பு, இரண்டு முகம், ஏழு கை, மூன்று பாதம்—இந்த லக்ஷணத்தில் இங்கு வைக்கப்பட்டிருக்கிறது. இதைப் போல வேறு எங்கும் இந்த வடிவம் கிடையாது என்று குருக்கள் சொன்னார். திருநாவுக்கரசருக்கு சித்திரை விழா நடக்கிறது. இதில் அவருடைய வரலாற்றுடன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் காட்டப் படுகின்றன. இறுதிக் காலத்திலே அப்பர் இங்குதான் வந்து முத்தியடைந்தார். அந்த வரலாற்றை நாம் இன்னொரு சந்தர்ப்பத்தில் காண்போம். அவர் வேறு பல தலங்களில் தரிசனம் செய்து, இரண்டொரு அற்புதங்கள் நிகழ்த்திய வரலாற்றைப் பார்த்தபின் திரும்பி வருவோம்.

இங்கே திருப்புகலூரில் நவக்கிரகங்கள் மற்றைய கோயில் களில் போலல்லாமல் ட வடிவத்தில் வரிசையாக வைக்கப்பட் டிருக்கின்றன. மேலும் தெற்கே போகப் போக நவக்கிரக அமைப்பு வெவ்வேறு விதமாயிருப்பதைக் காண்போம்.

31. சனீஸ்வரன் தரிசனம்

மாலை ஐந்து மணியாகிவிட்டது நாங்கள் திருப்புகலூரை விட்டுப் புறப்படும்போது. அடுத்தாற்போல் திருமருகல், செங்காட்டங்குடி முதலிய தலங்களுக்குப் போவதா அல்லது காரைக்காலுக்குப் போவதா என்று யோசித்து, இரவு தங்குவதற்கு வசதியாகக் காரைக்காலுக்குப் பக்கத்திலுள்ள திருநள்ளாற்றில் தேவஸ்தான விடுதியிருக்கிறதென்ற காரணத்தால், பழையபடி வந்த வழியே திரும்பி, அம்பர்மாகாளத்துக்குப் போகும் சாலையில் போய், காரைக்காலுக்கு விரைந்தோம். விரைந்தோம் என்பது அப்போது எங்களுக்கிருந்த ஆசையால் தான்; சாரதி ராதாகிருஷ்ணனிடமா அதெல்லாம் நடக்கும்?

ஒரு நாள் முழுவதும் யாத்திரை செய்த தளர்ச்சியில், காரைக்கால் நகரையடைந்தவுடன் ஒரு ஹோட்டலில் நுழைந்து சிற்றுண்டி யருந்திவிட்டு, நேரே திருநள்ளாறுபோய்ச் சேர்ந்தோம். காரைக்காலிலிருந்து மேற்கே மூன்று மைல் தூரம்தான். அங்கே போய்த் தேவஸ்தான விடுதியைப் பார்த்தால் ஒரே கூட்டம். அன்று அங்கே உற்சவம் நடந்துகொண்டிருக்கிறதென்பதை நாங்கள் தெரிந்து கொள்ளவில்லை. தங்குவதற்கு அறை கிடைக்குமோ கிடைக்காதோ என்று சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கையில் எதிர்பாராதவிதமாக சிட்டிக்குத் தெரிந்த நண்பர் ஒருவரை அங்கு கண்டோம். குப்புராவ் என்ற அந்த நண்பர் புதுச்சேரி அரசாங்கத்தில் உயர் பதவி வகிக்கும் ஐ. ஏ. எஸ். அதிகாரி. அப்புறம் சொல்லவும் வேண்டுமா? விடுதியின் காப்பாளர் எங்களுக்குத் தங்க நல்ல வசதி செய்து தந்தார். குப்புராவுடன் வந்த நண்பர் முருகேசன் என்பவருக்கு அந்தப் பகுதியிலுள்ள கோயில்கள் முதலிய இடங்களையெல்லாம் நன்றாகத் தெரியும். அவர் பிரெஞ்சுக்கல்வி சம்பந்தமாகக் கவனிக்கும் உயர் அதிகாரி. நல்ல பண்பாளர். இந்த நண்பர்களின் அறிமுகம் எங்களுக்கு எதிர்பாராத நன்மைகளைத் தந்தன.

திருநள்ளாறு அன்று உற்சவக்களை கொண்டு மிதந்தது. நாதஸ்வரச் கச்சேரி; சென்னையிலிருந்து வர வழைக்கப்பட்ட ஒரு

பெண்மணியின் பாட்டுக் கச்சேரி. தெருவெல்லாம் ஜன நடமாட்டம். இரு பக்கங்களிலும் கடைகள் கண்ணிகள். ஒரே ஆரவாரம். இந்த அமர்க்களத்தில் அன்றிரவு சாப்பாட்டுக்குக் காரைக்காலுக்கே போவதுதான் புத்திசாலித்தனம் என்று ஓர் அன்பர் யோசனை தெரிவித்தார். சங்கீதக் கச்சேரி சுமாராகக் கேட்கக் கூடியதாயிருந்ததால் அதைக் கேட்டுக் கொண்டு, இங்கேயே பக்கத்தில் எங்காவது சாப்பிட்டால் போதுமானது என்று தீர்மானித்தோம். சந்நிதித் தெருவில் இருபக்கமும் பார்த்துக் கொண்டு போகையில் ஒரு சிறு வாசலில் ''வீட்டுச் சமையல் சாப்பாடு'' என்று பெயர்ப்பலகை தொங்கவும் வேணுவுக்கு அந்தச் சமையலைக் கொஞ்சம் ருசி பார்த்தால் தேவலை என்ற எண்ணம் தோன்றியது! சரி என்று உள்ளே நுழைந்தோம். இரண்டொரு மேசையும் ஸ்டூல்களும் மாத்திரம் காணப்பட்டன. மிகவும் குறுகிய இடம். உள்ளே ஒரு அம்மாள் முணுமுணு என்று புலம்பிக் கொண்டே ஏதோ அலுவலில் ஈடுபட்டிருந்தாள். திடீரென்று அங்கு தோன்றியது ஒரு மோகினி! பன்னிரண்டு வயதிருக்கும்; பாவாடை தாவணி. கண்ணும் தலையும் கழுத்தும் அட்டமி போட்டன. என்ன குறுகுறுப்பு, என்ன துடிப்பு! திருக்கோவலூர் புஷ்பவதியின் ஞாபகத்தில் வேணு என் விலாவைச் சுரண்டி, ''இதுவும் ஒரு புஷ்பவதிதானே'' என்று கேட்டபோது அதற்குப் பதிலளித்தது மாதிரி உள்ளேயிருந்து ''கமலா'' என்று கூப்பிட்டாள் அம்மாள்! ''என்ன?'' என்று ஒரு வெட்டு வெட்டிப் பறந்தது அந்த உருவம். ''உங்களுக்கென்ன சாப்பாடா பலகாரமா?'' என்று கேட்டாள், திரும்பி வந்த அந்தக் கமலா என்ற பெண். சிட்டிக்கு மாத்திரம் இரவில் பலகாரம்தான். மற்றும் எங்களுக்கு சாப்பாடு என்று சொன்னதும், ''சரி, ஆளுக்கு ஒரு ரூபா அட்வான்ஸ் கட்டிவையுங்கள். ஒரு மணி நேரம் கழித்து ஒன்பது மணிக்கு வரலாம்!'' என்று அசாத்திய கண்டிப்புடன் உத்தரவு போட்டது அந்த மோகினி. மறுபேச்சுப் பேச இடமளித்தால்தானே? உள்ளேயிருந்து மறுபடியும் ஒரு ''கமலா''! ''இரு, வரேன், கத்தாதே!'' என்று பதில். பழையபடி உள்ளே தாயாரின் முணு முணுப்பு. சமையல் பாத்திரங்களின் சலசலப்பு. ரூபாயை வாங்கிய பெண் உள்ளே ஓடினாள். மறுகணம் துள்ளிக் குதித்துக் கொண்டு வாயிலைத் தாண்டித் திருவிழாக் கூட்டத்தினுள் மறைந்துவிட்டாள். இன்னொரு ''கமலா!'' உள்ளேயிருந்து! ஆனால் அங்கே அது நின்றுதானே! தாயார் வெளியே வந்து எங்களை ஒரு தரம் நன்றாகப் பார்த்துவிட்டு, ''இந்தக் குட்டியை வைத்துக்கொண்டு எப்படித்தான் சமாளிப்பேனோ!'' என்று அலுத்துக் கொண்டு

''இனிமேல்தான் சமையலாகணும். சித்த நாழி கழிச்சு வாங்கோ'' என்று சொல்லியனுப்பினள்.

கச்சேரி நடக்கும் இடத்தில் சிறிது நேரம் போய் உட்கார்ந்து கேட்டுவிட்டுப் பசி யெடுத்ததால் திரும்பி வந்தோம். 'சித்தே நாழி' என்று அம்மாள் சொன்னதால் சமையல் ஆகியிருக்க ஓரளவு நேரம் கொடுத்துத் தான் வந்தோம். நாங்கள் வாயிலில் நுழையவும் அந்தக் கமலாவும் நுழைந்தாள். ''ஒரு மணி நேரம் கழித்து வரச் சொன்னேனே! இன்னும் ஒன்பது மணி ஆகலே. அப்புறம்தான்!'' என்று ஒரு அதிகாரக் குரல். எங்களுக்கோ அந்தக் குரலைக்கேட்கக் கேட்க வருத்தமில்லை. ரசித்தோம்! ஒரு அசாதாரணக் காட்சி அது. இரவு சாப்பாட்டை முடித்துக் கொண்டு கமலாவுக்கு ஒரு நன்றி சொல்லலாம் என்று திரும்பிப் பார்த்தால் அந்தச் சிட்டு அங்கே நின்றுஸ்தானே! மான் கன்று போல் துள்ளி ஒரு பாய்ச்சலில் பழையபடி திருவீழாக் கூட்டத்தில் போய் ஒரு பொய்க்கால் குதிரை நாட்டியத்தைப் பார்த்து ரசித்து நின்றது. எங்கள் யாத்திரையில் நிலைத்து நின்ற ஞாபகங்களில் ஒன்று இது.

யாத்திரிகர் விடுதியில் புதுவை நண்பர்களோடு பேசிக்கொண்டிருந்தோம். எங்கள் யாத்திரை நோக்கத்தைக் கேட்ட முருகேசன், காரைக்காலைப்பற்றியும், திருத்தெளிச்சேரி, தருமபுரம் என்ற மற்றைய ஸ்தலங்களைப் பற்றியும் தெளிவாகப் பல செய்திகளை எடுத்துச் சொன்னார். அந்த இடங்களுக்கு எப்படிப் போவது என்றும் படம் போட்டு விளக்கினார். வெகு நேரம் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கையில் கோயிலிலிருந்து சுவாமி புறப்பட்டு வந்தார்!

திருநள்ளாறு க்ஷேத்திரம் சப்தவிடங்க ஸ்தலங்களில் ஒன்று என்று திருவாரூரிலேயே சொல்லியிருந்தோமல்லவா? இங்குள்ள வர் நகர விடங்கர். நடனம் உன்மத்த நடனம். மூலவர் தர்ப்பாரண்யேசுவரர் என்ற பெயர் கொண்டவர். அதாவது தர்ப்பைப்புற்களை ஒன்று சேர்த்தாற் போன்ற வடிவமுள்ள லிங்கம். இங்கே சனி பகவான் சந்நிதி மிகவும் பிரசித்தி பெற்றது. இரண்டரை ஆண்டுக்கு ஒரு தரம் சனிப்பெயர்ச்சி நடக்கும் போது திருநள்ளாறுக்கு லக்ஷக்கணக்கில் பக்தர்கள் வந்து, இங்குள்ள நளதீர்த்தத்தில் நீராடி, சனிபகவானுக்கு அர்ச்சனை செய்து வழிபடுவார்கள். நளமகாராஜாவின் கதை பலரும் அறிந்ததே. அந்த நளனுக்கு கலி நீங்கியது இந்த இடத்தில் தான் என்ற ஐதிகத்தில் இதற்கு நள்ளாறு என்ற பெயர் வந்ததாகக் சொல்லுவார்கள். ஞானசம்பந்த நாயனார் இந்தத்

திருநள்ளாற்றின் மேல் ''போகமார்த்த பூண்முலையாள்'' என்று ஆரம்பித்து ஒரு பதிகம் பாடியிருக்கிறார். மதுரையில் அவர் சமணர்களுடன் வாதாடும்போது அனல் வாதம் என்ற ஒரு போட்டி நடந்தது. அதாவது, நெருப்பிலே ஒரு ஏட்டைப் போட்டால் அது எரியக்கூடாது. அதற்கு சம்பந்தர் தீம் பதிகங்களில் தெரிந்தெடுத்த ஏடு இந்தப் 'போகமார்த்த பூண்முலையாள்' என்ற தேவாரம் உள்ள ஏடு. அதைத் தீயில் போட்ட போது வேகாமல் அப்படியே கிடந்ததாகச் சொல்லப்படுகிறது. அதனால் இந்த ஸ்தலத்தின் சுவாமியைப் பற்றிப் பாடியது மிகவும் போற்றத் தக்க பாடல் என்று கொள்வர். மதுரையில் சமண வாதம் முடிந்த பின்னர் ஞானசம்பந்தர் இங்கு வந்து, சுவாமிக்கு நன்றி தெரிவித்து மற்றொரு பதிகம் பாடினார். ''திருவாலவாயும் திருநள்ளாறும்'' என்ற பெயர் கொண்டது அப்பதிகம். போகமார்த்த பூண்முலையாள் என்ற பதிகப் பெயரே இங்குள்ள அம்பாளுக்கும் பெயர்.

அன்றிரவு நடந்த உற்சவத்தில் சுவாமியை எழுந்தருளச் செய்து வீதிவலம் வரும்போது கண்ட காட்சியை மறக்க முடியாது. உன்மத்த நடனம் என்ற பெயரில் சுவாமியை மேலும் கீழும், முன்னும் பின்னும், பக்கங்களிலுமாக ஒரு குறிப்பிட்ட தாள ஒழுங்கின்படி அசைத்து அசைத்து ஆடி ஆடிக் கொண்டு வரும்போது, ஒரு பைத்தியக்காரன் ஆட்டம் என்ற உண்மையை நேரில் காணக் கூடியதாயிற்று. சுவாமியை அலங்கரித்தவர்கள் சகல சோடனைகளையும், விலையுயர்ந்த நகைகளையும், மாலைகளையும் மிகப் பக்குவமாகவும் பாதுகாப்பாகவும், அந்த உன்மத்த ஆட்டத்தில் சிறிதும் கலையாதிருக்க அமைத்திருந்தது தான் சாத்துப்படி செய்தவர்களின் திறமையைக் காண்பித்தது.

திருநள்ளாற்றில் சுவாமி ஊர்வலத்தையும் நடனத்தையும் (இதைப் பவனி என்று சொல்வார்கள்) கண்டபின், உள்ளே மூலவரையும் போகமார்த்த பூண்முலையாளையும் வணங்கி விட்டு அன்றிரவு யாத்திரிகர் விடுதியில் தங்கியிருந்தோம். விடியற்காலையில் எழுந்து சனிபகவானுக்கு அருச்சனை செய்ய எண்ணி, பழம் பாக்கு வெற்றிலை தேங்காயுடன் சனிபகவான் சந்நிதியை அடைந்தோம். ஆறு மணிக்கெல்லாம் குருக்கள் அங்கு வருவார் என்று தேவஸ்தானக் காரியாலயத்தில் சொல்லியிருந்தார்கள். ஆனால் ஆறரை மணி வரை காத்திருந்தும் அவர் வரவில்லை. நாங்களோ அடுத்து தருமபுரத்துக்கும் திருத்தெளிச் சேரிக்கும் காரைக்காலுக்கும் போக வேண்டியிருந்தது. ஆகையால் கால தாமதமாவதைக் கண்டவுடன் நாங்களாகவே சனிபகவானுக்கு நேரடியாக அருச்சனை செய்வதென்று முடிவு செய்தோம். தேங்காயை உடைத்து, கற்பூரம் காட்டி, ஒரு தேவாரமும் பாடிவிட்டு பகவானின் கடாட்சத்தை மானசீகமாகப் பெற்றுக் கொண்டு புறப்பட்டோம்.

32. காரைக்கால் யாத்திரை

காரைக்கால் பக்கம் திருஞானசம்பந்தர் தமது பரிவாரத்துடன் யாத்திரை செய்து வரும்போது அவருடன் வந்த திருநீலகண்ட யாழ்ப்பாணனார் ஒரு வேண்டுகோள் விடுத்தார். பக்கத்திலேயுள்ள தருமபுரம் என்ற ஸ்தலம் தமது தாயாரின் ஊர். ஆகையால் அங்கேயும் தரிசிக்க வேண்டுமென்ற ஆசையைத் தெரிவிக்க, சம்பந்தரும் மகிழ்ச்சியுடன் அங்கே சென்றார். சென்று தருமபுரத்தீசனை வழிபடும்போது, யாழ்ப்பாணருடைய சுற்றத்தவர்கள் எல்லோரும் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டு வந்து அதிசயத்தோடு பார்த்தார்கள். யாழ்ப்பாணருக்கு ஒரே மகிழ்ச்சி. தமது சுற்றத்தவர்கள், தாம் சம்பந்தரின் இசைக்கு யாழ் வாசிப்பதைக் கேட்டு மகிழ்வார்கள் என்ற பெருமை நினைப்பில், ''சம்பந்தமூர்த்தி தாம் பாடும் திருப்பதிகங்களை என்னையே யாழில் அமைத்து வாசிக்கும்படி அருள் செய்திருக்கிறார்'' என்று சொன்னார். அதைக் கேட்ட பாணரின் சுற்றத்தார்கள் தமது இனத்தவர் பெருமையைப் போற்றினவர்களாக, ''நீங்கள் அப்படி வாசிப்பதனால்தான் சம்பந்தரின் பதிகங்கள் எங்கும் பரவ ஏதுவாயிருக்கிறது'' என்று சொன்னார்கள். உண்மையில் பாணர் குலத்தவர்கள் தமது இசை மரபைப் பற்றிப் பெருமை கொள்பவர்கள். இன்றும் என்ன, நாதஸ்வரக் கலைஞர் மரபிலுள்ளவர்களாலேதான் கர்நாடக சங்கீதம் வழிவழியாக மரபு கெடாமல் காப்பாற்றப்படுகிறதென்ற அபிப்பிராயம் உள்ளது. பாணர்கள் இப்படிச் சொன்னதும் திருநீலகண்டருக்கு ஒரே அதிர்ச்சி! இறைவனால் கொடுக்கப்பட்ட அபூர்வ இசை ஞானத்தைப் பெற்ற ஞானசம்பந்தரின் பாடல்கள், கேவலம் தம்முடைய யாழின் மூலமாகப் பெருமையடைந்தன என்ற சொற்களை உண்மைத் தொண்டனாகிய அவரால் சகிக்க முடியவில்லை. ஆகையால், தம் சுற்றத்தவர்களே சம்பந்தரின் திறமையையும், தமது யாழின் குறைபாட்டையும் நேரில் காணவேண்டும் என்று விரும்பினார். உடனே அவர் சம்பந்தரிடம் சென்று, ''சுவாமி! தாங்கள் இங்கு பாடும் பதிகங்களில் இந்த யாழில் வாசிக்க முடியாத பண்ணில்

ஒரு பதிகம் பாடவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். சம்பந்தர் குறிப்பை யறிந்து கொண்டார். அங்கு கூடியிருந்த பாணர் கூட்டத்தைக் கவனித்தார். தமது இசையின் தன்மையை யறிய வந்தவர்கள் என்பதையும் தம் இனத்தவர் ஒருவர் யாழ் வாசிப்பதைப் பார்த்துப் பெருமை பேசிக்கொள்கிறார்கள் என்ப தையும் அறிந்துகொண்டார். ஆகையால் இவர்களுக்குத் தம் இசையின் தனித்தன்மையைக் காண்பிக்க எண்ணி, ''மாதர் மடப்பிடியும்'' என்று ஆரம்பிக்கும் பதிகத்தைப் பாடினார். அதில் மடக்கி மடக்கி வரும் வார்த்தைக்கோவையைப் பலவித தாளங் களில், பற்பல காலப்பிரமாணங்களில் பாடி முடித்தார். யாழ்ப் பாணர் அதன்பின்னர் அந்தப் பதிகத்தைத் தமது யாழில் அமைத்து வாசிக்க முயன்றார். யாழ் என்பது மெட்டில்லாத நரம்பு வாத்தியம். இருபத்திரண்டு நரம்பு கொண்ட இந்த வாத்தியத்தில் ஒவ்வொரு நரம்பாக இசைக்கேற்ற நரம்புகளை மீட்டித்தான் வாசிக்க முடியும்! சம்பந்தர் பாடிய விதத்தில் யாழ்ப்பாணர் இந்தப் பதிகத்தை வாசிக்க முயன்றபோது அது யாழ் நரம்புகளிலே அடங்கவில்லை. எவ்வளவோ முயன்றும் அவரால் வாசிக்க முடியவில்லை. இதைக் கண்ட பாணரின் சுற்றத்தவர்களுக்கு அப்போதுதான் சம்பந்தரின் இசை ஞானம் புரிந்தது. யாழ்ப்பாணருக்கோ ஒரே வெட்கமும் துக்கமும். ''இந்த யாழிலேதான் இவ்வளவு கேவலம்,'' என்று எண்ணிக் கொண்டு யாழை ஓங்கி நிலத்திலறைந்து உடைக்கப் போனார். சம்பந்தர் சட்டென்று தடுத்து, ''யாழை இங்கே கொடும்'', என்று வாங்கி வைத்துக்கொண்டு, ''பாவம், இந்த யாழ் என்ன செய்யும்? இதற்கும் ஓர் அளவுதான் இருக்கிறது. எல்லாப் பண்களையும் யாழில் வாசித்துவிடமுடியுமா? ஆகையால், இனி மேல் நான் பாடும்போது யாழில் வாசிக்க முடிந்தவற்றையே வாசித்து வாரும்'' என்று அறிவுறுத்தினார். இந்த ''மாதர் மடப் பிடியும்'' என்ற தேவாரம் வியாழக்குறிஞ்சி என்ற பண்ணிலுள்ள தாகச் சிலர் சொல்வார்கள். ஆனால், இதுவே ஒரு யாழை முறிக்கக் காரணமாயிருந்ததால் 'யாழ்மூரி' என்ற பெயரைப் பெற்றதாம். தருமபுரத்தில் எழுந்தருளிய சுவாமியின் பெயரும் யாழ்மூரிநாதர் என்றுயிற்று.

திருத்தருமபுரம் என்ற ஸ்தலம் காரைக்காலிலிருந்து சிறிது கிழக்கே ஒன்றரைமைல் தூரத்திலுள்ளது. நாங்கள் போன சமயத்தில் கோயிலின் வெளிவாசல் திறந்திருந்தது. கர்ப்பகிருகம் மூடியிருந்தது. குருக்களைத் தேடியபோது அவர் வந்து தீபம் காட்டிவிட்டு வீட்டுக்குப்போய்விட்டார் என்றும், வீடு ஒரு மைலுக் கப்பாலுள்ளதென்றும் அங்கு நின்ற ஒரு பையன் சொன்னான்.

வீதியிலிருந்து ஒரு பெரிய மேடையில் ஏறித்தான் கோயிலைச் சேர முடியும். அந்த மேடை எதற்காக என்று தெரியவில்லை. மாடக்கோயில் என்ற வகையிலுமில்லை. வாயிற்புறத்தில் சுதையால் அமைக்கப்பெற்ற யாழ்ப்பாணர், சம்பந்தர், மதங்க சூளாமணியார் ஆகிய உருவங்களும், பார்வதிபரமேஸ்வரனுக இறைவன் ரிஷபாரூடராய்க் காட்சி கொடுப்பதும் காணப்படுகிறது. மண்டபத்தினுள் கம்பிக்கதவு போட்ட ஒரு பகுதியில் மிக அழகு வாய்ந்த யாழ்மூரி நாதர் உற்சவ விக்கிரகம் வைக்கப் பட்டிருந்தது.

தருமபுரத்தில் யாழ்மூரி நாதரை வணங்கிக் கொண்டு காரைக்காலுக்குத் திரும்பினேம். அறுபத்து மூவரில் ஒருவராய், சைவத்திருமுறையில் பதினேராம் திருமுறையில் சேர்க்கப்பட்ட பதிகங்களைப் பாடியவராய், திருவாலங்காட்டில் இறைவன் நடனங்காண எப்பொழுதுமே அவரடியில் வீற்றிருப்பவரான காரைக்காலம்மையாரைக் காண அந்தத் துறைமுகப்பட்டினத் துக்கு வந்தோம். ஜனநெருக்கடியுள்ள முக்கியமான கடைவீதி யின் நடுவிலிருக்கிறது காரைக்காலம்மையார் கோயில். சமீப காலத்தில்தான் கட்டப்பட்ட கோயில். அம்மையாருக்குச் சிலை யிலும் உலோகத்திலும் விக்கிரகங்கள் உள்ளன.

காரைக்காலம்மையார் சரித்திரம் பலர் அறிந்ததொன்று. காரைக்காலில் ஒரு காலத்தில் செல்வத்தில் திளைத்த ஒரு வணிகரின் புத்திரியாகப் பிறந்தார் இவர். புனிதவதியார் என்று பெயர். உரிய காலம் வந்ததும் நாகபட்டினத்தைச் சேர்ந்த பரமதத்தன் என்ற வணிகருக்கு மணஞ்செய்து வைத்தனர். தம்பதிகள் காரைக்காலிலேயே இருந்து இல்லறம் நடத்துகையில், சிவனடியார்களை வழிபடுதலிலும், அவர்களுக்கு உணவு படைத்து ஆதரிப்பதிலும் புனிதவதியார் அதிகமாக ஈடுபட்டார். ஒருநாள் பரமதத்தனுக்குச் சில வியாபாரிகள் இரண்டு மாம்பழங்களைக் கொடுத்து மரியாதை செய்தார்கள். பரமதத்தன் அவற்றை ஒரு வேலைக்காரன் மூலமாக வீட்டுக்கு அனுப்பி வைத்தான். புனிதவதி யார் அவற்றை வாங்கி வைத்திருக்கையில், ஒரு சிவனடியார் பசித்து வந்தார். அந்தச் சமயத்தில் சமையல் முழுவதும் முடிய வில்லையாயினும், முடிந்ததைக் கொடுத்து, தன் கணவன் அனுப்பிய மாம்பழங்களில் ஒன்றையும் பரிமாறினார். அடியார் அருந்திவிட்டுப் போனபின், வழக்கம்போல் பரமதத்தன் பகல் உணவுக்கு வீட்டுக்கு வந்தான். உணவருந்தும்போது, மாம்பழத் தையும் படைத்தார். பரமதத்தன் அந்தப் பழத்தைச்சாப்பிட்டு "மிகவும் தித்திப்பான பழமாயிருக்கிறது. இரண்டுபழம் அனுப்பி

யிருந்தேனே. மற்றைப் பழத்தையும் கொண்டு வா'' என்று சொன்னான். புனிதவதியாருக்குத் திக்கென்றிருந்தது. அதுதான் சிவனடியாருக்குப் போய்விட்டதே! எங்கிருந்து இன்னொருபழம் கொண்டு வருவார்? பேசாமல் உள்ளே போனவர் என்ன செய்வ தென்றறியாது, இறைவனிடம் முறையிட்டார். உடனே ஒரு பழம் அவர் கையில் வந்தேறியது. மகிழ்ச்சியுடன் அதைக்கொண்டு போய் கணவனுடைய இலையில் படைத்தார். அதனையும் உண்ட பரமதத்தன் ஆச்சரியப்பட்டான். முன்னர் சாப்பிட்ட பழத்தை விட இது வேறுவிதமான ருசியுள்ளதாயிருக்கக்கண்டு, ''என்ன ஆச்சரியம்! இரண்டு பழமும் ஒரு மரத்திலிருந்து வந்ததாக நண்பர் சொன்னார். ஆனால் இந்தப்பழம் ஏன் இப்படி வேறுவித மாக அதிமதுரமாயிருக்கிறது!'' என்றான். மனைவி உள்ளதைச் சொன்னார். நடந்த விஷயத்தைக் கேட்ட கணவனுக்கு நம்பிக்கை யில்லை. ''அப்படியானால், இன்னொரு பழம் தருவித்துக்கொடு பார்க்கலாம்'' என்றான். இந்தச் சவாலுக்கேட்டு அவர் நடுங்கி னார். சும்மா இறைவனைச் சோதிப்பதா? கணவன் கேட்டபடி வரவழைத்துக் கொடுக்காவிடில் அவன் தன்னைப் பொய்க்காரி என்று தவறாக எண்ணிக்கொள்வானே. இறைவனே பொறுப்பு என்று உள்ளே போனவர் பரமசிவனைத் தியானித்தார். அவர் விரும்பியவாறே மற்றொரு மாங்கனி கிடைத்தது. மகிழ்ச்சியுடன் கொண்டு வந்து கணவன் கையில் வைத்தார். அதைப் பார்த்துக் கணவன் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கையில் அந்தப்பழம் மாயமாய் மறைந்துவிட்டது!

பரமதத்தனுக்கு ஒரே பயமுண்டாகிவிட்டது. தனது மனைவி ஒரு மாயப்பெண் என்றும், ஏதோ தெய்வாம்சம் கொண்டவள் என்றும் கண்டான். ஆகையால் இவளுடன் வாழ்வது ஆகாது என்று சில நாட்கள் உடலுறவு கொள்ளாமலே இருந்துவந்தான். பின்னர் ஒரு நாள் அவன், தான் வெளிநாடுகளுக்கு வியாபாரம் சம்பந்தமாகச் செல்லவேண்டுமென்று சொல்லிக் கப்பலேறிப் போய்விட்டான். திரும்பி வரவில்லை. பாண்டி நாட்டை யடைந்து, அங்கே ஒரு நகரில் ஒரு வணிகக் குடும்பத்துப்பெண்ணை மணந்துகொண்டு வாழ்ந்து வந்தான். அவளுக்குப் பிறந்த ஒரு பெண்குழந்தைக்கு புனிதவதி யென்றே பெயர் வைத்து வளர்த்து வந்தனர்.

காரைக்கால் புனிதவதியார் தம் கணவன் திரும்பி வருவார் என்று காத்திருந்தார். நாட்கள் செல்லவே அவரும் அவர் உறவினர்களும் பரமதத்தனைத் தேட ஆரம்பித்தனர். ஒரு நாள் மதுரைக்கருகிலுள்ள ஒரு பட்டினத்தில் பரமதத்தன் மறுமணம்

முடித்து இல்லறம் நடத்தி வருவதைக் கேள்விப்பட்டனர். உறவினர் அதை விசாரித்தறிந்து, உண்மையான செய்திதான் என்று தெரிந்தவுடன், புனிதவதியாரை ஒரு பல்லக்கில் ஏற்றிக் கொண்டு போய், கணவன் வசிக்கும் வீட்டுக்குச் சமீபமாக நிறுத்தி வைத்துவிட்டு, பரமதத்தனிடம் விஷயத்தைச் சொன்னார்கள். பரமதத்தன் தன் மனைவியையும் மகளையும் அழைத்துக் கொண்டு சென்று, புனிதவதியார் கால்களில் விழுந்து வணங்கினான். இதைக் கண்ட உறவினர்கள், ''இதென்ன அநியாயம்? மனைவியின் கால்களில் கணவன் வணங்குவதா?'' என்றார்கள். பரமதத்தன் சொன்னான்: ''இவர் சாதாரண மனிதப் பிறவியல்ல. தெய்வப் பிறவி. அதனால்தான் நான் வணங்கினேன். இவர் தெய்வம் என்று கண்டபின்தான் இவரைப் பிரிந்து சென்று மறுமணம் செய்து கொண்டேன். எங்களுக்குப் பிறந்த குழந்தைக்கு இவரின் பெயரையே இட்டிருக்கிறோம். நீங்களும் இவர் கால்களில் விழுந்து வணங்கினால் நற்கதியடையலாம்'' என்றான்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட காரைக்காலம்மையாகிய புனிதவதியார், சொல்லொணாத் துயரமுற்று, ''இறைவனே! இந்த உடலின் அழகுதானே இப்படியெல்லாம் சொல்லக் காரணமாயிற்று. ஆகையால் எனக்குப் பேய் வடிவம் தந்து காப்பாற்ற வேண்டும்'' என்று வேண்டினார். அப்போதே ஆண்டவன் திருவருளால் அம்மையார் தாம் விரும்பிய பேய் வடிவத்தைப் பெற்றார். எலும்பும் தோலுமாய்ப் பார்க்க வெறுப்பும் பயமும் தரக்கூடிய வடிவத்தைக் கொண்டார். இறைவனைத் துதித்து அற்புதத் திருவந்தாதி, இரட்டை மணிமாலை என்ற இரு பதிகம் பாடி வாழ்த்தினார். பின்னர் காரைக்காலை விட்டுப் புறப்பட்டுக் கயிலை சென்று, அந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தில் தம் கால்கள் படலாகாதென்று அஞ்சி, தலையாலே நடந்து போனார். இறைவன் இதைக் கண்டு அருள்புரிந்து, ''அம்மையே! நீர் திருவாலங்காட்டில் எழுந்தருளும். அங்கே நாம் காட்சியளிப்போம்'' என்றார். அம்மையாரும் ''அப்பா'' என்று கூவியழைத்து விட்டுத் திருவாலங் காட்டுக்குப் போனார். நாம் திருவாலங்காட்டுக்குச் சுந்தர மூர்த்தி நாயனாருடன் போகும் போது அந்தக் காட்சியைக் காணலாம்.

காரைக்காலில் அம்மையார் கோயிலுக்கு எதிர்ப்புறத்தில் ஈஸ்வரன் கோயில் இருக்கிறது. இங்கு ஆனி மாதத்தில் பௌர்ணமி திதியில் மாங்கனித் திருநாள் என்ற விசேஷ உற்சவம் நடத்து வார்கள்.

காரைக்காலுக்குப் பக்கத்தில்தான் திருத்தெளிச்சேரி என்ற மற்றொரு ஸ்தலம் இருக்கிறது. ஞான சம்பந்தர் மதுரையில்

சமணர்களை வாதில் வென்று திரும்பி யாத்திரையில் வரும்போது திருநள்ளாற்றில் வணங்கிவிட்டுத் திருத்தெளிச்சேரியை நோக்கிப் புறப்பட்டார். அந்தக் காலத்தில் நாகபட்டினம் முதலிய கீழ்க் கரைப் பட்டினங்களில் பௌத்தர்கள் பலர் மடம் அமைத்து வாழ்ந்து வந்தனர். திருத்தெளிச்சேரிக்குப் பக்கத்தில் போதி மங்கை என்ற பௌத்த மடம் இருந்தது. சம்பந்தர் யாத்திரையில் போகும்போது அடியார் குழாம் எப்போதும் தொடரும். போகுமிடமெல்லாம் சமணர்களின் அட்டகாசத்தையடக்கிய சிங்கம் என்ற பெருமையால் அவர் தொண்டர்கள் எக்காளம் ஊதி ''பரசமய கோளரி வந்தார்'' என்று அறிவிப்பது வழக்கம். இங்கேயும் போதி மங்கையை யடுத்து இந்தக் கர்ஜனை எழுந்ததும் அங்கு வசித்த பௌத்தர்களுக்கு ஆத்திரம் வந்து விட்டது. அவர்களில் சிலர் மடங்களிலிருந்து வெளியே வந்து, ''எங்களை வாதில் வெல்லாமல் நீங்கள் எப்படி எக்காளம் ஊதமுடியும்?'' என்று கேட்டார்கள். இந்தச் செய்தி சம்பந்தர் காதில் பட்ட வுடன், அவர், ''இவர்களோடு வாதம் செய்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள்'' என்று கட்டளையிட்டார். இதற்கிடையில் சம்பந்தரின் சீடர்களில் ஒருவரும், அவர் பதிகங்களை அவ்வப்போது எழுதிக் கொண்டு வருபவருமாகிய சம்பந்த சரணுலயர் என்பவர், பௌத்தர்களில் தலைவனுக வந்த புத்தநந்தியென்பவன் மேல் ஆத்திரப்பட்டு, ''அவன் தலைமேல் இடி விழ'' என்று சபித்து, சம்பந்தர் பாடலொன்றைப் பாடினார். புத்தநந்தியென்பவன் உடனே இறந்தான் என்று சொல்லப்படுகிறது.

பௌத்தர்கள் உடனே தமது துறவிகளில் அதிகம் திறமை யுள்ள சாரிபுத்தன் என்பவரைத் தலைவனுகக் கொண்டு சம்பந்த ருடன் சமயவாதம் செய்ய வந்தனர். இரு தரப்பாருக்கும் வெகு நேரம் வாதம் நிகழ்ந்தது. முடிவில் பௌத்தர்கள் சம்பந்தரின் வாதத்துக்கு எதிர்நிற்க முடியாமல் தோல்வியுற்று, யாவரும் சைவத்தில் சேர்ந்தனர் என்பது புராணம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு முக்கியமான சரித்திர உண்மையைக் குறிப்பிடலாமென்று நினைக்கிறேம். கௌதம புத்தர் காலத்திலேயே வைதிகர்களுக்கும் பௌத்தர்களுக்கு மிடையே இம்மாதிரியான சமய வாதங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அதேபோல, சமணர்களுடனும் வாதங்கள் நிகழ்வது வழக்கம். முதலில் இருபக்கத்தாரும் வாதத்துக்கென ஒரு இடம் தீர்மானித்து அங்கே நேரம் குறிப்பிட்டுக் கூடி, வாதமும் ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு மேல் போகலாகாது என்பதற்காக, நடுவிலே ஒரு மரத்தின் கிளையை வெட்டி நட்டு, அந்தக்

கிளையிலுள்ள இலைகள் வாடும் சமயத்தில் எந்தக் கட்சி பலம் குறைந்ததோ அந்தக் கட்சி எதிராளிகளின் சமயத்தைத் தழுவ வேண்டும் என்ற நிபந்தனையிருக்கும். சில இடங்களில் வாதம் இரண்டு வகையாக இருக்கும். முதலில் ஒவ்வொரு சமயத்தவரும் தாங்கள் கற்றிருந்த சித்துக்களை உபயோகித்து ஆகாய கமனம் முதலிய வித்தைகளில் போட்டி நடக்கும். அதன் பின்னர்தான் வாக்குவாதம் நடக்கும். கௌதமபுத்தரின் சீடர்களில் மிகவும் திறமையுள்ள இருவர் மொகல்லானன், சாரி புத்திரன் என்பவர் கள். இவர்களில் மொகல்லானன் வித்தைகளில் வல்லவன், சாரிபுத்திரன் வாக்கில் வல்லவன். அந்த மரபில்தானே என்னவோ சம்பந்தரோடு வாதுக்கு வந்த பௌத்தனுக்கு சாரிபுத்தன் என்று பெயர் கொடுத்தார் சேக்கிழார். திருத்தெளிச் சேரி என்பது காரைக்கோயிற்பற்று என்ற பெயரில் இப்போது வழங்குகிறது. மாம்பழ ஈசுவரர் கோயில் உள்ள தெருவில் ஒரு கோடியில் இருக்கிறது. இங்குள்ள மூலவரின் பெயர் பார்வதீஸ் வரர். மேற்குப் பார்த்த சந்நிதி. பக்தர்கள் வாயிலில் நின்று வழிபடும்போது சூரியனின் கிரணங்கள் படுவது ஒரு விசேஷம் என்று சொல்வார்கள். பங்குனி மாதத்தில் சூரிய பூஜை நடக்கிறது.

திருத்தெளிச்சேரியில் நாங்கள் போய்த் தரிசனம் செய்யும் போது அங்கே நமது நண்பர் குப்புராவையும் சந்தித்தோம். இங்கிருந்து நாங்கள் அடுத்தபடியாக சீயாத்தமங்கை என்ற சாத்த மங்கை ஸ்தலத்துக்குப் போக வழி கேட்கும் போது குப்புராவ் சரியான வழியைச் சொல்லி, ''நீங்கள் திருமலைராயன்பட்டினம் வழியாகப்போவீர்கள். அங்கே இன்று ஒரு பெரிய விசேஷம் நடந்து கொண்டிருக்கும். ''ஆயிரம் காளியம்மன்'' என்ற ஒரு பிரசித்தி பெற்ற அம்மனுக்கு பூசை போடுவதைப் பார்ப்பீர்கள். போகும் போது அந்த அம்மனையும் தரிசித்துவிட்டுப் போங்கள்'' என்றார். அவருக்கு நன்றி தெரிவித்து விட்டு, தெற்கு நோக்கிச் சென்று திருமலைராயன் பட்டினத்தையடைந்தோம்.

33. ஆயிரங்காளி

கிராம தேவதைகளுக்கு மக்கள் பூசை போடுவதென்றால் அதைப் போலக் கோலாகலமான காட்சியை வேறெங்கும் காண முடியாது. திருமலைராயன் பட்டினத்துள் நாங்கள் பிரவேசித்த வுடனேயே ஆயிரங்காளியம்மன் திருவிழாவின் பெருமிதத்தைக் கண்டோம். சாரி சாரியாகப் போய்க் கொண்டிருக்கும் மக்கள் கூட்டம்; கண்ணுக்கெட்டிய தூரம் வரை கட்டப்பட்ட கீற்றுப் பந்தல்கள்; ராட்டினம் முதலிய விளையாட்டு அரங்குகள்; தண்ணீர்ப் பந்தல்கள்; பண்டங்கள் விற்போரின் கூச்சல்கள்; அங்கங்கு நைவேத்தியம் கொண்டு செல்லும் கூட்டங்களின் தாரை தப்பட்டை கொட்டுமேளம் முதலிய வாத்தியங்களின் பேரொலிகள்—எல்லாம் ஒரே கோலாகலமாய்க் காணப்பட்டது.

இந்த ஊரிலுள்ள ஆயிரங்காளியம்மன் என்ற தெய்வம் மிக வரப்பிரசாதமுள்ள தெய்வம். அத்துடன் யாவரும் அஞ்சும் மகாமாரி. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் இந்தக் காளி வெளியே வருவாள். மரத்தினால் செய்யப்பட்ட வியக்கத்தக்க பெரிய உருவம். நகைகளும் மாலைகளும் பட்டுக்களும் கொண்டு கண்ணைப்பறிக்கும் வண்ணம் அலங்காரம் செய்திருந்தார்கள். பொங்கல், மாவிளக்கு, வடை, பணியாரம் முதலிய நைவேத்தியப் பொருள்களெல்லாம் படையல் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு வகையிலும் ஆயிரம். மாவிளக்கு ஆயிரம், மஞ்சள் ஆயிரம், என்று படையல் பொருள்கள் வகைக்கு ஆயிரமாகப் பரப்பி வைக்கிறார்கள். விக்கிரகத்தின் பக்கத்தில் திருப்பதி உண்டியல் போன்ற உண்டியலில் பணமும் மற்றும் சில காணிக்கைப் பொருள்களும் விழுகின்றன. லக்ஷக்கணக்கில் கூடிய மக்கள் இந்த விழாவில் சகலத்தையும் மறந்து ஈடுபட்டிருந்தனர். இந்தப் பத்திரகாளியம்மன் விக்கிரகத்தை ஐந்து ஆண்டுக்கொரு முறை தான் வெளியே எடுத்து அலங்கரித்து இப்படி விழாக் கொண்டாடு வார்களாம். நாங்கள் போன சமயம் அப்படியான ஒரு விழா. இவ்விழா முடிந்ததும் விக்கிரகத்தை ஒரு பெட்டியில் வைத்துப் பூட்டி விடுவார்கள். வழக்கமான தினசரிப் பூசை அந்தப்

பெட்டிக்குத்தான். ஐந்து வருடம் முடிய மறுபடியும் பத்திரகாளி வெளியே வருவாள். அவ்வளவு மூர்த்தனமான காளியம்மன் இந்த ஆயிரங்காளியென்று கிராமத்தவர்கள் மதிக்கிறார்கள். போகும் வழியில் எங்களுக்கு இந்தக் காளியம்மனைத் தரிசிக்கக் கிடைத்தது மகா பாக்கியம் என்று கருதிக் கொண்டே சீயாத்த மங்கைக்கு வந்தோம்.

சாத்தமங்கை என்பது சோழநாட்டிலே திருநீலநக்கர் என்ற நாயனார் வாழ்ந்த இடம். இப்போது சீயாத்த மங்கை என்றுதான் உள்ளூரிலுள்ளவர்கள் சொல்வார்கள். இந்த ஊரிலே ஞான சம்பந்தர் காலத்தில் வாழ்ந்தவர் திருநீலநக்கர் என்ற வேதியர். இந்த ஊரில் முத்தீ வளர்க்கும் இருபிறப்பாளர்களாகிய வேதியர் வாழ்ந்தார்கள் என்று சேக்கிழார் கூறுகிறார். வேள்வி செய்யும் வேதியர்கள் காருகபத்தியம், தாக்ஷிணாக்கினியம், ஆகவனீயம் என்ற மூன்று தீ வளர்ப்பார்கள். இருபிறப்பாளர் என்று பிராமணர்களைக் குறிப்பதற்குக் காரணம், அவர் இயல்பான பிறப்போடு உபநயனம் என்ற சடங்கில் பிரமோபதேசம் பெறுதலே இரண்டாவது பிறப்பாகக் கருதுவார்கள். இவர்களில் ஒருவரான திருநீலநக்கர் சாத்தமங்கையிலுள்ள அயவந்தி என்ற கோயிலில் நித்தியம் தொழுது வந்தார். தினந்தோறும் அயவந்தி நாதரை வணங்கி அருச்சனை செய்யும்போதெல்லாம் அவருடைய தர்மபத்தினி அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வந்தார். ஒருநாள் இப்படி அருச்சனை செய்து, தீபங்காட்டுவதற்கு முன்பு நீலநக்கர் தியானத்தி லாழ்ந்திருக்கையில் ஆண்டவன் திருமேனி யில் ஒரு சிலந்திப் பூச்சி விழுந்தது. பார்த்து நின்ற நக்கனார் மனைவி சட்டென்று அந்தச் சிலந்தியை வாயால் ஊதிப் போக்கி விட்டு, சிலந்தி விழுந்த இடத்தில் தமது எச்சிலை உமிழ்ந்து துப்பினார். தாய்மார் குழந்தையின் உடலில் சிலந்தி விழுந்தால் அதை ஊதித் தள்ளிவிட்டு, அந்த இடத்தில் கொப்புளம் ஏற்படும் என்று பயந்து எச்சில் துப்பி வைப்பது நாட்டு வழக்கம். நக்கரின் மனைவியும் அந்த வழக்கத்தை நினைத்தே சிவலிங்கப் பெருமானின் உடலில் ஊறு ஏற்படலாகாதென்ற ஆர்வத்தில் எச்சிலைத் துப்பினார். ஆனால் வேதவேள்வி நியமம் காக்கும் நீலநக்கருக்கு இது அனுசிதமாகப் பட்டது. தூய்மையான பரமசிவன் உடலில் கேவலம் எச்சிலை உமிழ்ந்தாள் இவள் என்று கோபித்தார். "என்ன காரியம் செய்து விட்டாய்? இப்படிக் கீழ்த்தரமான பழக்கத்தை யுடைய உன்னுடன் நான் வாழ்தலே கூடாது. இன்றுடன் நீ வேறு, நான் வேறு" என்று சொல்லி மனைவியைத் திரும்பியும் பாராது சென்று படுக்கையில் படுத்துவிட்டார்.

மனைவி மிகுந்த வருத்தத்துடன் என்ன செய்வதென்றறியாது வேறு பக்கம் போயிருந்தார்.

அன்றிரவு வேதியர் கனவிலே இறைவன் தோன்றி, ''உன் மனைவி அன்புடன் செய்த செய்கையைக் கண்டித்தாய். இப்போது வந்து பார் என் உடலை. உன் மனைவி சிலந்தியைப் போக்கி எச்சில் உமிழ்ந்த இடத்தைத் தவிர மற்றெல்லா இடங்களிலுமே கொப்புளங் கண்டு விட்டது'' என்று அறிவுறுத்தினர். நீலநக்கர் போய்ப் பார்த்தார். என்ன ஆச்சரியம்! மனைவி எச்சில் உமிழ்ந்த அந்த ஓரிடத்தைத் தவிர மற்றிடமெல்லாம் கொப்புளம். உடனே நீலநக்கர் தம் மனைவியை அழைத்துத் தழுவி, ''உன் அன்பே அன்பு. இறைவன் உன் செய்கையைப் பாராட்டியதைப் பார்'' என்று காண்பித்தார்.

வழக்கம் போல இவர்கள் அடியார் பணி செய்து அயவந்தி நாதரைத் தொழுது வரும்பொழுது ஒருநாள், திருஞானசம்பந்தர் தமது பரிவாரத்துடன் சாத்தமங்கைக்கு எழுந்தருளினர். திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவர் மனைவி மதங்கசூளாமணியும் உடன் வந்தனர். திருநீலநக்கர் இது தெரிந்ததும் ஓடோடியும் போய் வரவேற்றுத் தமது இல்லத்துக்கு அழைத்து வந்து உபசாரங்கள் செய்தார். அன்றிரவு அடியார்கள் சாத்தமங்கையிலேயே தங்கும்படி நீலநக்கர் வேண்டிக்கொண்டார். ஞானசம்பந்தர் சரி என்று ஒப்புக்கொண்டு தங்கினர். சற்று நேரத்தில் திருநீலகண்டப் பாணரை மறந்துவிட்டோமே என்று சிந்தித்தார் ஞானசம்பந்தர். அனுசிதமாக எச்சிலுமிழ்ந்த தம் மனைவியையே தள்ளி வைத்த நீலநக்கர் கீழ்க்குலத்தவராகிய ஒரு பாணரை எப்படி எவ்வாறு அங்கீகரிப்பார் என்பதை ஞானசம்பந்தர் உணர்ந்தார். உடனே நீலநக்கரை அழைத்து, ''இங்கே என்னுடன் கூட திருநீலகண்ட யாழ்ப்பாணர் வந்துள்ளார். அவர் மிகப் பெரும் பாணர். அவரும் அவர் மனைவி மதங்கசூளாமணியும் இங்கே இன்றிரவு தங்குவதற்கு இடம் கொடுத்தருளுவீர்'' என்றார். இதைக் கேட்ட பின்தான் நீலநக்கர் சிந்தித்தார். இவர் வெறும் பாணரல்ல; சம்பந்தரே போற்றுமளவில் சிறந்த மகான் என்று உணர்ந்து, உடனே அவரை உள்ளே அழைத்து, நடு வீட்டில் வேள்வித் தீ கனன்று கொண்டிருக்கும் வேதிகையின் பக்கமாய்ப் பாணர் துயில் கொள்ள இடம் ஒதுக்கிக் கொடுத்தார். அன்றிரவு வேதிகையில் கனன்று கொண்டிருந்த வேள்வித் தீ முன்னெயிலொருபடி அதிகமாகச் சுழன்று சுடர் விட்டெரிந்தது. நீலநக்கர் இதைக் கண்டு அளவிலா மகிழ்ச்சி கொண்டார். மறுநாள் சம்பந்தரும் பாணரும் மதங்கசூளாமணியும் திருநீலநக்கரை வாழ்த்தி

மானக்கஞ்சாறர் குடும்பம் - பக். 105

ஏமப்பேரூர் - பக். 117



திருவாரூர் கமலாலயம் - பக். 118



திருவாரூர் ஒட்டுத் தியாகர் - பக். 114

விறன் மிண்டர் (திருவாரூர்)

(தாராசுரம்) – பக். 112



குண்டையூர் - பக். 123



திருக்குவகூ - பக். 125



எருக்கத்தம்புலியூர் - பக். 134



திருமுதுகுன்றம் - பக். 135



குங்கிலியக்கலயர் (தாராசுரம்) - பக். 149



மாறன்பாடி – பக்.. 140

பெண்ணகடம் தூங்கானைமாடம் - பக். 141

சேய்ஞலூர் - பக். 144

சண்டேசுர நாயனார் (தாராசுரம்) - பக். 144



திருவாவடுதுறை பலிபீடம் – பக். 151



அழகாபுத்தூர் - பக். 161

விட்டு, அவரிடம் விடை பெற்றுக் கொண்டு மற்றைய பதிகளைத் தரிசிக்கப் புறப்பட்டனர் அவர்களைத் தொடர்ந்து நாமும் பக்கத்திலுள்ள திருமருகலுக்குப் போவோம்.

மருகல் என்பது வாழை. திருமருகலில் வாழைதான் ஸ்தல விருக்ஷம். ஆனால் இது கல்வாழை; சுவாமிக்கு நிவேதிக்கலாம், யாரும் சாப்பிடலாகாது என்று இங்குள்ள குருக்கள் எங்களுக்கு விளக்கினர். கோயில் மாடக்கோயில். கோயிலின் தெற்கு மூலையில் சுரந்தீர்த்த விநாயகர்; வடக்குப் பிராகாரத்தில் மற்றொரு விநாயகர்; மேற்கிலே இன்னொருவர், பிரதான விநாயகர். இப்படி இந்த ஸ்தலத்திலே பல விநாயகர்கள். செங்காட்டங்குடியில் வாதாபி கணபதி இருப்பதால் பக்கங்களிலுள்ள ஸ்தலங்களிலும் பற்பல வகையான விநாயகர்கள் இருக்கிறார்கள் போலும். மூலஸ்தானத்து உடையார் இரத்தின கிரீசுவரர் அல்லது மாணிக்க வண்ணன். அம்பாள் வண்டுவார் குழலி.

திருமருகல், திருஞானசம்பந்த மூர்த்தியின் அற்புத மொன்றினால்தான் பிரசித்தி பெற்றது. சம்பந்தர் இங்கு எழுந்தருளியிருக்கும்போது ஒரு நாள், பக்கத்திலேயுள்ள திருமடத்தில் எவரோ பாம்பு தீண்டி இறந்துவிட்டார் என்ற துயரச் செய்தி வந்தது. யாரோ ஒரு இளம் வாலிபனும், கன்னியொருத்தியும் வழிப்போக்கர்களாக மடத்தில் வந்து தங்கினர்கள். அன்றிரவு அந்த வாலிபனை ஒரு பொல்லாத பாம்பு தீண்டிவிட்டது. விடம் ஏறிக்கொண்டிருக்க ஊரிலுள்ள பலர் வந்து பல வகை வைத்தியம், மாந்திரீகம் எல்லாம் செய்து பலனில்லாமல், கூட வந்த பெண் அலறியழுதாள். இதைக் கண்டு இரக்கம் கொண்ட சீர்காழிப் பிள்ளை ஞானசம்பந்தர் அவளிடம் போய், ''பெண்ணே, உனக்கு உற்ற துன்பத்தைச் சொல். இவன் யார்? நீயார்?'' என்று கேட்டார். அவள் சொன்னாள்: ''பக்கத்திலே யுள்ள வைப்பூரில் தாமன் என்ற வணிகன் என் தந்தை. இவர் என் தந்தைக்கு மருமகன். நாங்கள் ஏழு பெண்கள். மூத்த பெண்ணை இவருக்குக் கொடுப்பதாகத்தான் ஒப்பந்தம் செய்திருந்தது. ஆனால், என் தந்தை என் அக்காளை இவருக்குக் கொடுக்காமல் வேறு யாரிடமோ நிறையப்பணம் பெற்றுக்கொண்டு அவருக்கு மணமுடித்து விட்டார். மற்றைய பெண்களையும் அப்படியே, என்னைத்தவிர, வேறு வேறுபேருக்கு மணம் முடித்துவிட்டார்கள். இதனால் மிகவும் மனவேதனைப் பட்ட இவருக்காக நான் இரங்கி இவருடன் வந்துவிட்டேன். வந்த இடத்தில் இவருக்கும் இப்படி நடந்து விட்டது. இனி நான் என்ன செய்வேன்? தாங்கள்தான் என்

சுற்றத்தார் போல இங்கு வந்து அருள்புரிந்தீர்'' என்றுள். சம்பந்தர், ''பயப்படாதே, உனக்கும் எல்லாம் நன்மையாக முடியும்'' என்று சொல்லி, திருமருகல் இறைவனை நோக்கி, ''இந்தப் பெண்ணை இப்படித் தனியே விடலாமா?'' என்று இரங்கிப் பின்வரும் பதிகத்தைப் பாடினார்.

சடையாய் எனுமால் சரண் நீ எனுமால்,
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்,
உடையாய் தகுமோ இவள் உள் மெலிவே.

விடம் தீண்டப்பெற்ற செட்டிப்பிள்ளை விடம் நீங்கப்பெற்று எழுந்தான். அடியார் கூட்டம் வாழ்த்தியது. சம்பந்தர் அந்த இளைஞனையும் பெண்ணையும், ''நீங்கள் இனிச் சுகமே சென்று திருமண முடித்து வாழ்வீர்களாக'' என்று வாழ்த்தியனுப்பினார்.

இங்கிருந்து சம்பந்தரும் மற்றவர்களும் செங்காட்டங்குடியை நோக்கிச் செல்கிறார்கள். அங்கேதான் சிறுத்தொண்டநாயனார் மடம் இருக்கிறது. அவருடன் சேர்ந்து சில நாள் தங்கப்போகிறார் சம்பந்தர். சிறுத்தொண்டநாயனருடைய மகன் சீராளன் படித்த இடம் இங்கே திருமருகலில்தான் என்று சொல்வார்கள். அவர் படித்த பள்ளியில் இப்போது தேவஸ்தானக் காரியாலயம் இருக்கிறது. பக்கத்திலுள்ள குளம் இன்றும் சீராளன் குளம் என்ற பெயரோடிருக்கிறது. திருமருகல் கோயிலை யொட்டி ஒரு மடம் இருந்ததாம். அங்குதான் சீராளன் தங்கியிருக்கையில் வீட்டிலிருந்து அழைப்பு வந்தது. அந்தக் கதையைக் கேட்க நாமும் செங்காட்டங்குடிக்குப் போவோம். பக்கத்திலே ஒரு மைலில்தான் இருக்கிறது.

34. பிள்ளைக்கறி

திருச்செங்காட்டங்குடி கோயிலில் போய்ச்சேர்ந்தபோது பன்னிரண்டு மணிக்கு மேலாகி விட்டதால் நடை சாத்தியிருந்தது. இங்கு வந்தும் பயனில்லாமல் போய் விட்டதே என்று யோசித்துக் கொண்டிருக்கையில் வேணு ஒரு மெய்காவலைக் கண்டுவிட்டார். கோயிற் காவற்காரருக்கு மெய்காவல் என்று பெயர். ஒரு வித்மாக நயமாய்ப்பேசி நிர்வாக அதிகாரியைப் பார்க்கவேண்டு மென்று போட்டு வைத்தோம். மெய்காவல் கொஞ்சம் யோசித்து விட்டு, ''சற்றுமுன்தான் அவர் வீட்டுக்குப் போனார், என்ன சொல்கிறீரோ தெரியாது'' என்று தயங்கினார். பின்னர், ''எதற்கும் போய்ச் சொல்கிறேன்'' என்று சொல்லிவிட்டு நிர்வாக அதிகாரி வீட்டுக்குப் போனார். கால்மணி நேரம் கழித்து ஒருவர் வந்தார். பார்ப்பதற்கு கொஞ்சம் கடினமான ஆசாமி போல்தான் தெரிந்தார். மீசையும் ஆளும். சமீபத்தில் நெருங்கியதும், எங்கள் வழக்கமான புராணத்தை வாசித்தோம். திடீரென அவர் முகம் மலர்ந்தது. ''சாப்பிட்டாச்சா?'' என்றது தான் அவரது முதல் கேள்வி! ''சாப்பாட்டுக்கு நாங்கள் அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. கோயில் நடைசாத்து முன் எங்களுக்கு வேண்டிய தகவலைச் சேகரித்து, நாயனார் சம்பந்தமாக இரண்டொரு போட்டோவும் எடுத்துக் கொள்ள வேண்டு மென்பதுதான் எங்கள் கருத்து. இங்கிருந்து நாகபட்டினம் போகிறோம். அங்கே சாப்பாட்டை வைத்துக் கொள்ளலாம்'' என்றோம். அந்த அதிகாரி உடனே எங்களுக்கு மோர் வர வழைத்தார்! பின்னர் கோயிலைச் சுற்றிக்காண்பித்தார். செங்காட்டங்குடி வரலாற்றை ஒன்று பாக்கியில்லாமல் எடுத்துச் சொன்னார். அங்குள்ள ஒவ்வொரு சிலையாகக் காண்பித்து விளக்கங்கள் சொன்னார். கோயில் நிர்வாக அதிகாரி என்றால் இவரைப் போலல்லவோ இருக்கவேண்டும் எல்லாரும் என்று நாங்கள் வாயார மனமாரப் பாராட்டினோம். அந்த இனிய அன்பரின் பெயர் ஜயசந்திரன் என்பதை இங்கே பெருமையோடும் நன்றியோடும் பதிவு செய்து வைக்க வேண்டும்.

எந்தக் கோயிலுக்குச் சென்று பார்த்தாலும் அங்குள்ள சிலா விக்கிரகங்கள் எண்ணெயும் மற்றும் அபிஷேகத்திரவியங்களும் படிந்து உருத்தெரியாமல் போயிருப்பதைத்தான் காணலாம். ஆனால், செங்காட்டங்குடியில் அறுபத்துமூவர் சிலைகளைப்போய் பார்க்கவேண்டுமே! இன்றுதான் வடித்தெடுத்தவை போல் அவயவங்கள் தெளிவாகவும் சுத்தமாகவும் வைத்திருக்கக் கண்டோம். அவ்வப்போது கோதுமைமாவும் வேறெதுவுமோ சேர்த்து விக்கிரகங்களைச் சுத்தம் செய்து வைத்திருக்கிறார் இந்த அபூர்வ நிர்வாக அதிகாரி. அத்துடன் இன்னொரு காரியம் செய்திருக்கிறார். ஒவ்வொரு நாயனாரின் பெயர், குரு பூசை நட்சத்திரம், பிறந்த ஊர், அவர் வாழ்க்கையில் நிகழ்ந்த முக்கிய மான செய்தி இவையெல்லாம் அந்தந்தச் சிலையின் பின்னால் சுவரில் எழுதி வைக்கப்பட்டுள்ளன. வேறெந்தக் கோயிலிலும் இவ்வளவு தகவல்களை நாங்கள் பார்த்ததில்லை. செங்காட்டங்குடி யில் நவதாண்டவ விக்கிரகங்கள் ஒரு சிறந்த அமைப்பு. அவற்றைப்பற்றிச் சொன்ன விளக்கங்கள் நிர்வாக அதிகாரி ஒரு சிறந்தகலைஞர் என்பதைக் காட்டின.

சிறுத்தொண்ட நாயனாரைப் பற்றியும் சீராளனைப்பற்றியும் அறியாதவர்களில்லை. செங்காட்டங்குடியில் வசித்த சிறுத் தொண்டர் பரமசிவன் மேல் என்றும் பக்தி கொண்டவராகத் தினந்தோறும் எவராவது ஒரு அடியாருக்கு உணவளிக்காமல் தாம் உண்பதில்லை என்ற விரதம் கொண்டவர். இவருடைய இல்லக்கிழத்தி, திருவெண்காட்டு நங்கை, பர்த்தாவுக்கேற்ற பதிவிரதை. கணவன் முகங்கோணுமல் எது சொன்னாலும் மகிழ்ச்சியுடன் செய்வார். இவர்களுக்கேற்ற பக்திமிகுந்த பணிப் பெண் சந்தன நங்கை. இக்குடும்பத்துக்கு ஒரேயொரு விளக்காய் வந்த ஐந்து வயதுப் பாலகன் சீராளன்.

ஒரு நாள் பகல் சிவனடியார் எவரும் வரக்காணவில்லையாகை யால் சிறுத்தொண்டர் தாம் எங்காவது போய்ப்பார்த்துத் தேடி அழைத்து வருவதாகச் சொல்லிப் புறப்பட்டுச் சென்றார். அவர் போன பின்னர் ஒரு காபாலிகர் அந்த வீட்டு வாசலில் வந்து, ''அடியார்களுக்கு அன்னமிடும் சிறுத்தொண்டர் வீடு இது தானே?'' என்று கேட்டார். அங்கு நின்ற பணிப்பெண் சந்தன நங்கை, ''இதுதான் அவர் வீடு. இப்பொழுதுதான் அடியார்களைத் தேடி வெளியே போயிருக்கிறார். தேவரீர் உள்ளே எழுந்தருள்க'' என்றழைத்தாள். ''ஆண்களில்லாத வீட்டில் நாம் நுழைவ தில்லை'' என்று அந்தக் காபாலிகர் சொல்லிப் புறப்படும்போது, சிறுத்தொண்டர் மனைவியும் வந்து அடியாரை உள்ளே வருமாறு

வேண்டினார். காபாலிகர், ''நாம் உத்தராபதியிலுள்ளோம். சிறுத்தொண்டரைக் காணவந்தோம். கணபதீச்சரத்திலுள்ள ஆத்தியின் கீழ் இருக்கிறோம். சிறுத்தொண்டர் வந்தால் நாம் இருப்பதைச் சொல்லவும்'' என்று அறிவித்துவிட்டுப் போய் விட்டார்.

வெளியே சென்ற சிறுத்தொண்டர் அடியார் எவரையும் காணாது கவலை கொண்டு திரும்பியபோது காபாலிகர் வந்த செய்தியைக் கேள்விப்பட்டு மிக்க மகிழ்ச்சியுடன் கணபதீச்சரத்து ஆத்திமரத்தின் கீழ் உட்கார்ந்திருந்த காபாலிகரைப் போய்ப் பார்த்தார். நீண்ட சடை திரிதிரியாகச் சரிந்து கிடந்தது. இடையிடையே தும்பை மலர்கள் செருகப்பட்டிருந்தன. நெற்றி யில் திலகம். காதுகளில் செவ்வரத்தை மலர். கழுத்தில் பளிங்கு மணி வடம். மார்பில் யானைத்தோல், சன்னவீரம், ஆரம், கைச்சரி, இடைச்சரி, காற்சரி என்ற பயங்கர ஆபரணவகைகள். கால்களில் சிலம்பு. ஒரு கையில் பிரம்ம கபாலம், மறுகையில் சூலம். இந்த வேடத்திலிருந்த காபாலிகரைத் தொழுது நின்றார் சிறுத்தொண்டர். காபாலிகர் அவரைப் பார்த்து, ''நீர்தாமோ பெரிய சிறுத்தொண்டர்?'' என்று கேட்டார். சிறுத்தொண்டர் அடக்கமாக, ''திருநீற்றுத் தொண்டர்களின் முன் சென்று அவர்களைத் துதிக்கவும் நான் அருகதையற்றவன். எனினும் சிவனடியார்கள் கருணையினால் அந்தப் பெயரைக் கொண்டவன் நான் என்று சொல்லுவார்கள். நான் செய்த தவம் இன்று சுவாமிகள் இங்கு எழுந்தருளியது. அடியேனுடைய மனையில் எழுந்தருளி அமுது செய்ய வேண்டுகிறேன்'' என்றார். காபாலிகர், ''நாம் உம்மைக்காணத்தான் வடக்கேயிருந்து வந்தோம். எமக்கு உணவளிக்க உம்மால் முடியாத காரியம்'' என்றார். சிறுத் தொண்டர், ''எப்படியானாலும் நான் அமுதளிக்க முடியும். என்ன வகையில் செய்யவேண்டும் என்று சொன்னால் போதும்'' என்றார். காபாலிகர் சொல்கிறார்: ''அடியவரே! நாம் ஆறு மாதத்துக்கொருமுறை ஒரு பசுவை வெட்டி உண்போம். அதுவும் நரப்பசு! ஒரு குடிக்கு ஒரு மகனாய், ஐந்து வயதுள்ளவனாய், உறுப்பில் மறு இல்லாதவனாய் உள்ள மகனைத் தம்முள் உவந்து, தாய் பிடிக்கத் தந்தை அரிந்து சமைத்த கறிதான் நாம் உண்பது'' என்றார். அடியார் தேவையைப் பூர்த்தி செய்யும் சிறுத்தொண்டர், ''தேவரீர் உண்ண உடன்பட்டால் நான் அதுவும் தருகிறேன்'' என்றார். உடனே வீட்டுக்குப் போய்த் தம் ஒரே மகன் சீராள தேவனைப் பள்ளியிலிருந்து கொண்டு வரச் செய்து, காபாலிகர் சொன்னவாறே கறி சமைத்து, அவரை உண்ண அழைத்தனர். வந்து உட்கார்ந்த காபாலிகர் ''கறியெல்லாம் நன்றாகத்தான்

சமைத்திருக்கிறீர்கள். எனக்குத் தலைக்கறி பிடிக்கும். அதைக் காணவில்லையே' யென்றார். சிறுத்தொண்டர் மனைவி திருவெண்காட்டு நங்கை தலையை உபயோகிக்காமல் தள்ளி வைத்திருந்தார். ஆனால் தோழி சந்தன நங்கை, ஒரு வேளை அதையும் கேட்கக் கூடும் என்று சமைத்து வைத்திருந்தாள். காபாலிகர் கேட்ட போது கொண்டு வந்து படைத்தார்கள். காபாலிகர் மேலும் நிபந்தனை விடுக்கிறார்: ''நமக்குத் தனியே உண்ணவராது. உடனிருக்க ஒரு அடியாரையும் அழைத்து வாரும்.'' சிறுத் தொண்டர் வெளியே போய்த்தேடி எவரும் கிடைக்காமல், தம்மையே அடியாராகக் கொள்ளும்படி கேட்டார். காபாலிகர் சரி என்று சொல்லி உட்கார, திருவெண்காட்டு நங்கை படைத்தார். அவர்கள் உண்ணப்போகும் போது, காபாலிகர், ''சற்று பொறும். உமக்கு மைந்தன் இருந்தால் அவனை யழைத்து இங்கே சாப்பிடவையும்'' என்றார். சிறுத்தொண்டர் ''அவன் இப்போது உதவான்'' என்று விடை சொன்னார். ''அவன் வந்தபின்பே நாம் உண்பது. போய் அழைத்து வாரும்'' என்றார் காபாலிகர். அவ்வாணையின்படியே சிறுத்தொண்டரும் மனைவியாரும் வீட்டின் பின்புறம் போய் நின்று, ''செய்ய மணியே சீராளா, வாராய் சிவனு ரடியார் யாம், உய்யும் வகையால் உடனுண்ண அழைக்கிறார்'' என்று ஓலமிட்டார்கள். அப்போது தான் பள்ளியினின்றும் ஓடிவருவான் போல வந்து தாயின் நீட்டிய கரங்களில் புகுந்தான் சீராளன். அவனை அணைத்த திருவெண்காட்டு நங்கையும் சிறுத்தொண்டரும், ''சிவதொண்டர் அமுதுண்ணக் கூடியதாய் நாம் உய்ந்தோம்'' என்று மகிழ்ந்து, சிறுவனை யழைத்துக்கொண்டு காபாலிகர் உட்கார்ந்திருந்த இடத்துக்கு வந்தார்கள். வைரவ வேடத்தில் வந்த அந்தப் பரமன் அங்கில்லை! திருவிளையாடலை ஆடிவிட்டு மறைந்துபோனார். அங்கு படைக்கப் பட்ட கறியமுதமும் மறைந்தது. சிறுத்தொண்டர் மலைத்துப் போய் நிற்க, வைரவ வேடத்தில் வந்த பரமசிவன் உமாதேவி யாரோடும் குழந்தை கந்தனோடும் சோமாஸ்கந்த மூர்த்தியாய் வெளி வந்து தரிசனம் கொடுத்து, ஆசீர்வதித்து மறைந்தார். சிறுத்தொண்டரும், மனைவியும், புதல்வனும் தாதி சந்தன நங்கையும் தனிப்பெரும் அருள் பெற்று வாழ்ந்தனர்.

சிவனடியாருக்காக எதையும் செய்யத்துணிவர் பக்தர்கள் என்பதற்கு இந்தக் கதை ஒரு எடுத்துக்காட்டு. இது உண்மையில் இப்படியேதான் நடந்ததோ நடக்கவில்லையோ நாம் அறியோம். ஆனால் நாயனார் கதைகளெல்லாம் பக்தி வைராக்கியத்தை எடுத்துக்காட்டவே தோன்றின. சிறுத்தொண்டர் என்ற அடியாரைப் பொறுத்த வரையில் அவர் ஒரு உண்மையான

வரலாற்று நாயகன் என்பதற்கு சரித்திரச் சான்றுகள் உள்ளன. இவருடைய இயற்பெயர் பரஞ்சோதியார். பல கலைகளைக்கற்று படைக்கலத் தொழிலிலும் சிறந்து விளங்கிய ஒரு சேனாதிபதி. பல்லவ வேந்தன் முதலாம் நரசிம்மன் ஆட்சியில் பெருஞ்சேனையை நடத்திச் சென்று சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியை முறியடித்து, கி. பி. 642ல் வாதாபியைக் கைப்பற்றிய ஒப்பற்றவர் இந்தச் சிறுத்தொண்டர் என்ற பரஞ்சோதி. இந்த யுத்தத்தின் பின் அவர் வாதாபியிலிருந்து கொண்டு வந்த கணபதி விக்கிரகத்தைச் செங்காட்டங்குடியில் ஸ்தாபித்தார். சேனைத் தொழிலைக் கைவிட்டு, சிவதொண்டு செய்து வாழ்ந்தார். இவ்வளவும் சரித்திரத்தில் நடந்த கதை.

பரஞ்சோதியார் வாதாபி கணபதியைக் கொண்டு வந்து திருச்செங்காட்டங் குடியில் ஸ்தாபித்தது ஒரு புறமிருக்க, இந்த ஸ்தலம் ஏற்கெனவே கணபதீச்சரம் என்ற பெயரிலேயே வழங்கியது. கஜமுகாசுரன் என்ற அசுரனை அழித்த கணபதிக்குரிய க்ஷேத்திரம் இது. இங்கே விநாயகர் யானை முகமில்லாமல் மனித முகத்துடன் காணப்படுகிறார். வாதாபி கணபதிக்கு தனி சந்நிதி இருக்கிறது. இந்தக் கோயிலில் முக்கியமாக இரு சந்நிதிகள், கணபதீச்சரமும் உத்தராபதீச்சரமும். சிறுத்தொண்டருக்கு உத்தராபதியிலிருந்து வந்தவராக வைரவ வேடத்தில் தரிசனம் கொடுத்த உத்தராபதியாருக்குத்தான் இங்கு முதலிடம். எல்லாக் கோயில்களிலும் விநாயகர், நடராஜமூர்த்திகளுக்குப் பூசை முடித்த பின்னரே மற்றைய மூர்த்திகளுக்குப் பூசை நடை பெறுவது சம்பிரதாயம். ஆனால் இங்கு உத்தராபதீஸ்வரருக்கும், கணபதீஸ்வரருக்கும் பூசை நடந்த பின்தான் விநாயகருக்குப் பூசை. சித்திரை மாதம் நடக்கும் உற்சவத்தில் ஆறும்நாள் அமுது படையல் என்ற விழா நடக்கும். சிறுத்தொண்டர் உத்தராபதியாருக்குச் சீராளனை வெட்டிக் கறி சமைத்துக் கொடுத்த காட்சி உருவகமாகக் காண்பிக்கப்படும். நாங்கள் இந்த ஸ்தலத்துக்குப் போனது ஒரு வைகாசி மாதம். நிர்வாக அதிகாரி எங்களுக்குத் தாம் வைத்திருந்த ''பிள்ளைக்கறி'' பிரசாதத்தில் ஒரு சிறிது தந்து உபசரித்ததை மறக்கமுடியாது. யாழ்ப்பாணத்திலே சீராளன் குழம்பு என்ற பெயரில் ஒரு சமையல் பாகம் செய்வார்கள். துவரம்பருப்பை ஊறவைத்து அரைத்து அடை மாதிரித் தட்டி ஆவியில் வேகவைத்து, பின் சிறு சிறு துண்டங்களாக வெட்டி தாளித்துக் குழம்பில் சேர்ப்பார்கள். மாமிச பட்சணிகள் இதை மாமிசத் துண்டங்கள் என்று மயங்குவார்களாம்! அதனால், சைவர்கள் இதை சீராளன் குழம்பு என்று சொல்லுவார்கள்!

அமுது படையல் நடந்து இருப்பத்தொராம் நாள், திருவோண நட்சத்திரத்தில் ஐயடிகள் காடவர் கோனுக்கு காட்சி கொடுக்கும் ஐதிகமும் நடைபெறுகிறது. இவர் நரசிம்மவர்மனின் புதல்வர். இரண்டேயிரண்டு ஆண்டுக்காலம் ஆட்சி செய்து விட்டு தன் மகன் பரமேஸ்வரவர்மனிடம் ஒப்படைத்து துறவியாகி, க்ஷேத்திரங்களைத் தரிசித்து, க்ஷேத்திரக் கோவை பாடியவர்.

திருஞான சம்பந்த நாயனார் திருமருகலிலிருந்து செங்காட்டங் குடிக்கு வந்தபோது சிறுத்தொண்டநாயனாரால் உபசரிக்கப் பட்டார். ''பொடி நுகருஞ்சிறுத்தொண்டர்க் கருள்செய்யும் பொருட்டாகக் கடிநகராய் வீற்றிருந்தான் கணபதீச்சரத்தானே'' என்று சம்பந்தரே தமது நண்பரைப் போற்றியுள்ளார். சிறுத் தொண்டரின் தொண்டை வாழ்த்திப் பத்துப்பாடல்களை ஒரு பதிகமாகவே பாடிவைத்தார். செங்காட்டங்குடி கணபதீச் சரத்தில் ஏராளமான பழைய கல்வெட்டுகள் காணப்படுகின்றன. ராஜராஜசோழன், ராஜேந்திரசோழன் முதலானோர் காலத்தில் வைக்கப்பட்ட பல கல்வெட்டுகளில் சீராளதேவர், சிறுத்தொண்ட நாயனார் முதலியோருடைய பெயர்கள் காணப்படுகின்றன.

எங்கள் செங்காட்டங்குடி தரிசனம் ஒரு புதிய அனுபவத்தைத் தந்தது. நல்லவர்களும் பண்பாளர்களும் தமிழ் நாட்டில் அங்கங்கே இருக்கிறார்கள் என்பதை நேரில் கண்டோம். உத்தரா பதியாரையும் சிறுத்தொண்டர் குடும்பத்தாரையும் வணங்கி விட்டு, நிர்வாக அதிகாரி ஐயசந்திரனிடமும் நன்றி கூறி விடை பெற்றுக்கொண்டு நாகபட்டினத்தை நோக்கிப் பிரயாண மானோம்.

35. பொன்மீன் கதை

சுந்தர மூர்த்தி சுவாமிகளை நாம் தொடர்ந்து வரும்போது அவர் பல தலங்களைத் தரிசித்தபின் ஒரு நாள் திருநாகைக் காரோணம் என்ற நாகபட்டினத்துக்கு வந்தார் என்று கேள்விப்படுகிறோம். நமது பிரதம கதாநாயகன் சுந்தரரைப் பற்றித்தான் நாம் ஓரளவு நன்றாக அறிந்து விட்டோமே. எங்கே போனாலும் அது கொடு இது கொடு என்று இறைவனைத் தம் தோழன் என்ற உரிமை பாராட்டிக் கேட்பது வழக்கம். இங்கே நாகைக்காரோணத்தில் வந்தபோது கேட்ட பொருள்களைப் பார்த்தால், அந்த மாப்பிள்ளையின் ரசிகத்தன்மையையும் ஆடை யாபரணப் பிரியத்தையும் தடபுடல் பேர்வழி யென்பதையும் தெரிந்துகொள்ளலாம். திருநாகைக் காரோணத்தில் அவர் பாடியுள்ள தேவாரத்திலே காணப்படும் பொருள்களையே இங்கு தருகிறோம்.

''உமது செல்வத்தையெல்லாம் எங்கே மறைத்து வைத்திருக் கிறீர்? சரிதான், எனக்கும் ஒரு நாள் இரங்கி, முத்தாரம் இலங்கிமிளிர் மணிவயிரக்கோவை அவை பூணத்தந்தருளி, உடம்புக்கு இனிய கஸ்தூரி கமழ் சாந்து முதலியன தரல் வேண்டும். முன்புதான் ஒரு வாக்குக் கொடுத்திருக்கிறீர். ஆகையால் கந்த முதல் ஆடை ஆபரணம் பண்டாரத்திலிருந்து எனக்குப் பணித்தருளவேண்டும். இன்னும் ஏன் பட்டோடு சாந்தம் பணித்தருளாதிருக்கிறீர்? முன்பு இலங்கையர் கோனுக்குத் தேரும் வாளும் கொடுத்தீர்; மறையவர்கள் பட்டினியால் வருந்தவேண்டாமென்று திருவீழிமிழலையில் படிக்காசு கொடுத்தீர். எனக்கு மாத்திரம் ஏன் இன்னும் தராம லிருக்கிறீர்? திருவாரூரில் இருக்கும் உமது செல்வத்தில் எனக்கு மூன்றிலொரு பாகம் வேண்டும். காற்று வேகத்தில் செல்லும் ஒரு குதிரையும் எனக்கு வேண்டும். மூன்று வேளையும் கறியும் நெய்ச் சோறும் வேண்டும். இவையெல்லாவற்றையும் தராவிட்டால் இங்கே இனிமேல் அடியெடுத்தும் வைக்கமாட்டேன்.''

சுந்தரமூர்த்தி சுவாமிகள் போக்கையும் அவர் குணங்களையும் மேற்சொன்ன கருத்துக்களிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். திருவெண்ணெய் நல்லூரில் தடுத்தாட்கொண்ட பெருமானே இவருக்கு விளையாட்டுத் தோழனுகையால், அடித்துக் கேட்க சுந்தரருக்கு உரிமையுண்டு. அன்றியும், ''மாப்பிள்ளைக்கோலத் தோடு விளையாடுவாய்'' என்று அருளிவிட்டார் இறைவன். தேவார நாயன்மார்களில் திருநாவுக்கரசர், பாவம், உடலுழைப் பையே நம்பியிருந்தார். சம்பந்தர் தமிழிசை பொழிந்து வரவேற்புப் பெற்றார். சுந்தரரோ ஒன்றும் செய்யாமல், வேண்டிய நேரமெல்லாம் கடவுளிடம் அடித்து வாங்கி வாழ்ந்தார்.

இந்த நாகைக் காரோணம் என்ற நாகபட்டினத்திலே ஒரு அதிபத்த நாயனர் என்பவரும் வாழ்ந்தார். இவர் அறுபத்து மூவரில் ஒருவராக உயர் பதவி பெற்ற ஒரு மீனவர். கடல் தொழில் செய்து வந்தாலும், இறைவனிடத்தில் அதிக பக்தி கொண்டவராகையால், அதிபக்தர், அல்லது அதிபத்தர் என்ற பெயர் பெற்றார். இந்த அடியாரிடம் ஒரு சிறந்த கொள்கை யிருந்தது. கடலிலே பிடிக்கும் மீன்களில் முதல் மீனை அவர், ''இது சிவபெருமானுக்கு அர்ப்பணம்'' என்று சொல்லிக் கடலிலே திருப்பிவிட்டுவிடுவது அவருடைய வழக்கம். எவ்வளவு குறைவாகக் கிடைத்தாலும், அல்லது ஒரே ஒரு மீன்தான் அன்று கிடைத்தாலும், முதல் மீனைக் கடலில் விட்டுவிடுவார். இம் மாதிரி நடந்து வருகையில் நாளுக்குநாள் அவருக்கு வருவாய் குறைந்தது. கடலில் போதியளவு மீன் அகப்படவில்லை. பல நாட்களில் ஒரேயொரு மீன்தான் அகப்படும். வழக்கப்படி அதையும் திருப்பிக் கடலில் சேர்த்துவிட்டு வீடு வந்து சேர்வார். ஒரு நாள் வெகுநேரம் கடலில் வலைவீசி ஒன்றும் கிடைக்காமல் மனம் வாடிப்போகும் சமயம் எதிர்பாராதவிதமாக ஒரு பெரிய மீன் அகப்பட்டது. கூட வந்த மீனவர்கள் அந்த மீனைப் பார்த்து அதிசயித்தனர். ''பொன்னையும் மணிகளையும் சேர்த்து உருவான அழகான மீன் இது. எவ்வளவோ பெரிய தொகைக்கு விற்றுவிடலாம். பலநாட்களுக்குப் போதுமான திரவியம் நமக்குக் கிடைக்கப்போகிறது'' என்று மகிழ்ந்து கொண்டாடினர், கூத்தாடினர். உடனே அதிபத்தரிடம் அந்த மீனைக்காட்டிக் குதூகலித்தனர். அதிபத்தர் தாம் கொண்ட விரதத்திலிருந்து இப்பொழுதும் விலக விரும்பவில்லை. விலை மதிக்க முடியாத பொன் மீனைப்பிடித்தாலும், முதல் மீன் இறைவனுக்குத்தான் என்று சொல்லி அந்த மீனைக் கடலிலே விட்டுவிட்டார். நீங்காத பக்தியும் பிடிவாதமான விரதமும் பூண்டு என்றும் சிவனே என்று

நம்பியிருந்த அதிபத்தருக்கு அவர் பெருமையை வியந்து சிவபெருமானே காட்சி கொடுத்து, குறையாத செல்வத்தையும் அருளினார் என்பது புராணம்.

நாகபட்டினத்துக்கு நாங்கள் போய்ப்பார்த்துத் தகவல் சேகரிக்க எவ்வித கஷ்டமும் இருக்கவில்லை. செங்காட்டங்குடி நண்பரே நாகபட்டினத்திலிருந்த நிர்வாக அதிகாரியைத் தமக்குத் தெரியும் என்றும், தன் பெயரைச் சொல்லி அறிமுகப்படுத்திக் கொள்ளலாம் என்றும் உதவினார். அப்படியே நாங்கள் நாகபட்டினம் வந்து கோயில் நிர்வாக அதிகாரியைக் கண்டு விஷயத்தைச் சொன்னவுடன் அவர் மிகுந்த மகிழ்ச்சியுடன் பல வகைகளிலும் உதவிசெய்தார்.

நாகபட்டினத்திலிருப்பது நாகைக்காரோணம், அல்லது காயாரோகணஸ்வாமி கோயில். அந்த மாதிரிப் பெயரைச் சொல்லிக் கேட்டால் இங்கு ஒருவருக்கும் தெரியாது. நீலாயதாக்ஷி கோயில் என்று சொல்லிக்கேட்டால்தான் தெரியும். மதுரைக்குப் போய் சொக்கநாதர் கோயில் என்று யாரும் கேட்பதில்லை. மீனாக்ஷி கோயில்தான் பிரசித்தம். அதுபோல், நாகபட்டினத்திலும் நீலாயதாக்ஷிக்கு முதன்மை ஸ்தானம். காரோணம் என்பது காயாரோகணம் என்பதன் திரிபு. காய ஆரோகணம் என்றால் உடம்பை ஏற்றுவது, அதாவது கூட்டோடு கைலாயம் போவது என்று பொருள். புண்டரீக ரிஷி என்பவர் அப்படி முத்தி யடைந்த காரணத்தால் நாகைக்காரோணம் என்ற பெயர் ஏற்பட்டதாகச் சொல்வர். கும்பகோணம் குடந்தைக்காரோணம்; காஞ்சீபுரம் கச்சிக்காரோணம் என்று வழங்கப்படுகின்றன. இந்தக் கோயிலில் பல மண்டபங்களிருக்கின்றன. பந்தல் காட்சி மண்டபம், முத்தி மண்டபம், ராஜதானி மண்டபம் என்பன இவை. ராஜதானி மண்டபத்தில்தான் பஞ்சமூர்த்தி விக்கிரகங்கள் வைக்கப்பட்டுள்ளன. இதற்கு வடபாகத்தில் நீலாயதாக்ஷி காட்சியளிக்கிறாள். சங்கீத மும்மூர்த்திகளாகிய சியாமா சாஸ்திரி, தியாகராஜர், முத்துச்சாமி தீக்ஷிதர் மூவரும் இந்த நீலாயதாக்ஷி மீது பல கீர்த்தனைகள் பாடியிருக்கிறார்கள். தெற்கே போகப் போக நவக்கிரகப் பிரதிஷ்டை வெவ்வேறு விதமாயிருக்கும் என்று நாம் முன்னொருமுறை குறிப்பிட்டிருந்தோம். இங்கே நாகபட்டினத்தில் நவக்கிரகங்கள் ஒரே வரிசையில் வைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். சனிபகவானுக்குத் தனியே ஒரு இடமிருக்கிறது. சப்த விடங்க ஸ்தலங்களில் இதுவுமொன்றாகையால் இங்கே தியாகராஜர் எழுந்தருளியுள்ளார். இவர் சுந்தரவிடங்கர். இவர் ஆடுவது தரங்க நடனம். கடலின் பக்கத்திலிருப்பதால் அலை

போல் நடனமாடுவது தரங்க நடனம். பஞ்சமுக விநாயகர் என்று ஐந்து முகங்களைக் கொண்ட ஒரு செப்பு விக்கிரகம் இங்குண்டு.

காவிரிப்பூம்பட்டினத்தைப்போல் நாகபட்டினமும் ஒரு காலத்தில் மிகப்பெரிய துறைமுகமாகப் பிற நாட்டுக் கப்பல்கள் வருவதும் போவதுமாயிருந்தது. இன்றும் அது ஒரு துறைமுக மாகத்தான் காட்சி தருகிறது. ஆதியில் சமணரும் பௌத்தரும் இந்தப் பகுதியில் மிகுந்த செல்வாக்கோடு இருந்தனர் என்று தெரிகிறது. பின்னர் சமணர் செல்வாக்குக் குறைய, பௌத்தர்கள் தான் வாழ்ந்து வந்தார்கள். கி.பி. பத்தாம் பதினேராம் நூற்றாண்டுகளில் ராஜ ராஜப் பெரும்பள்ளி, ராஜேந்திர சோழப்பெரும்பள்ளி என்று இரண்டு பெரிய பௌத்த மடங்களிருந்ததாகச் சரித்திரமுண்டு. ராஜராஜனுடைய ராஜப் பிரதிநிதியாகக் கடாரத்தையாண்ட சூளாமணிவர்மன் என்பவன் இந்த ராஜ ராஜப் பெரும் பள்ளியைக் கட்ட ஆரம்பித்து, ராஜேந்திர சோழன் காலத்தில் சூளாமணிவர்மனின் மகன் மாறவிஜயதுங்க வர்மன் என்பவன் முற்றுவித்தான் என்று கல்வெட்டு சாசனம் கூறுகிறது. இந்த ராஜ ராஜப் பெரும்பள்ளி கடந்த நூற்றாண்டிலே (1867) இடிக்கப்பட்டு அதிருந்த இடத்தில் சூசையப்பர் கல்லூரி கட்டப்பட்டது. ராஜ ராஜப் பெரும்பள்ளி மூன்றடுக்கு மெத்தைகள் கொண்ட செங்கற் கட்டிடமாயிருந்தது. நான்கு திசைகளிலும் கோபுர வாயில்களைக் கொண்டது. பிற நாட்டவர் வருகையால் எந்த ஊரும் ஒரு புதிய வளர்ச்சியையும் எழுச்சியையும் பெறுவது இயல்பு.

நாகபட்டினமும் ஒரு காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தைப் போலக் கல்வியில் பெருமை பெற்றிருக்க வேண்டும். ''கற்றூர் பயில் கடல் நாகைக் காரோணம்'' என்று திருஞான சம்பந்தர் பாடி யிருக்கிறார். கர்ண பரம்பரையாக வந்த ஒரு பாட்டு நாகபட்டினத்துக்குண்டு: ''பாக்குத் தறித்து விளையாடும் பாலர்க்கு, நாக்குத் தமிழுரைக்கும் நன் நாகை'' என்பது அந்தப் பாட்டு. இது யார் இட்டுக்கட்டியதோ தெரியாது. ஆனால், இதைப்பற்றி ஒரு ருசிகரமான கதையுண்டு. காளமேகப்புலவர் ஒரு முறை நாகபட்டினத்துக்குப் போன போது, பசியை ஆற்ற சோற்றுக்கடை தேடிப்போனார். வழியிலே சில சிறுவர்கள் பாக்கு விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்டு அவர், கிராமியத் தமிழில் ''தம்பி, சோறு எங்கே விக்கும்?'' என்று கேட்டார். பையன்கள் விளையாட்டில் மனஞ்சென்றவராக, புலவரின் வார்த்தைக்கு கேலியாக, ''தொண்டையில் விக்கும்'' என்று பதிலளித்தார்கள். புலவருக்கோ படுகோபம் வந்துவிட்டது. விசை பாடுவதில் புலியல்லவா? அந்தப் பையன்களை ஒரு கை

பார்க்கிறேன் என்று போய் ஒரு திண்ணையில் உட்கார்ந்து, பக்கத்திலிருந்த சுவரில், ''பாக்குத் தறித்து விளையாடும் பாலர்க்கு'' என்று ஒரு வரி எழுதினர். பின்னர், சாப்பிட்டுவிட்டு வந்து, பாட்டை முடிக்கலாமென்று போய், திரும்பி வந்தபோது அடுத்தவரி எழுதப்பட்டிருந்தது. ''நாக்குத் தமிழுரைக்கும் நன் நாகை'' என்பது அந்த வரி. காளமேகம் அதிசயித்தார். நாகையின் தமிழ் வளத்தைக் கண்டு பெருமை கொண்டாராம். இது கட்டுக்கதையாயிருக்கலாம், ஆனால், நாகபட்டினம் ஒரு காலத்தில் ''கற்றூர் பயில்'' பட்டினமாக இருந்ததில் சந்தேக மில்லை.

கோயில் அறங்காவலர் ராஜமாணிக்கம்பிள்ளையிடம் பேசிக் கொண்டிருந்தபோது பல ஐதிகங்களைப் பற்றி அவர் விளக்கினர். அதிபத்த நாயனர் வம்சத்திலுள்ளவர்களுக்கு நாகை நீலாயதாக்ஷி கோயிலில் சில சலுகைகள் உண்டு. அதிபத்த நாயனர் விழா பல ஆண்டுகளாக நடந்து, இப்போது நின்று போய்விட்டது என்று சொன்னர். மீனவர் வம்சத்திலே நம்பியார் என்று ஒருவர் அதிபத்த நாயனர் வேடம் தரித்து, சிவசின்னங்கள் அணிந்து கடலிலே போய் மீன் பிடிக்கிறதாக பாவனை. மூன்று முறை வலைவீசுவார். கடைசியில் அவர் வலையில் சொர்ணமயமான மீன் தங்கும். அதை அவர் கடலில் ஈஸ்வரார்ப்பணமென்று விட்டு விடுவார். பின்னர் சந்திரசேகரமூர்த்தி ரிஷபாரூடராகக் காட்சி கொடுத்து அதிபத்தரை அழைத்துக் கோயிலுக்குள் கொண்டு வருவதாக பாவனை. மீனவர் வம்சத்தினர் எவராவது இறந்தால், பிரேதத்தைக் கோயிலின் முன் கொண்டு வந்து வைத்து அதன் பின்னரே சுடுகாட்டுக்குக் கொண்டு போவது இன்றும் நடை பெற்று வரும் வழக்கம். நாகபட்டினத்தை யடுத்து பன்னிரண்டு சிவஸ்தலங்கள் இருக்கின்றன. திருவையாற்றில் சப்தஸ்தான விழா நடப்பது போல இங்கும் வைகாசி மாதம் நடக்கும் பதினெட்டு நாள்விழாவில் பன்னிரண்டு சிவ ஸ்தலங்களிலிருந்தும் பன்னிரண்டு ரிஷபவாகனங்கள் ஒன்று கூடுவது கண்கொள்ளாக் காட்சி என்று சொல்வார்கள்.

எங்கள் நாகபட்டின விஜயம் திருப்திகரமாயிருந்தது. தங்கியிருந்த ஹோட்டல்தான் ஏற்றதாயில்லாவிட்டாலும், கடைத்தெருக்களைச் சுற்றி வரும்போது பார்த்த பண்டங்கள் நவநாகரிகமாயிருந்தன. மலாயாவிலும் சிங்கப்பூரிலுமிருந்து வரும் கப்பல்கள் கொண்டு வரும் பொருள்கள் பெருவாரியாகக் கடைத் தெருவில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

36. கதவு திறந்தது

நாகபட்டினத்திலிருந்து தெற்கே வேதாரணியத்துக்குச் தான் முதலில் வண்டியை விடச் சொன்னேம். ஆனால் எங்கள் காரியதரிசி வேணு தன் குறிப்புப் புத்தகத்தைப் பார்த்துவிட்டு, ''சத்தி நாயனாரைப் பார்க்க வேண்டாமா? கொஞ்சம் மேற்கே இரண்டு மைலில்தான் அவர் ஊர் இருக்கிறதாம். அதைப் பார்த்துவிட்டு அப்பால் வேதாரணியம் போகலாமே'' என்றார். சத்திநாயனார் வாழ்ந்த இடம் வரிஞ்சையூர் என்பது. இது கீவளூருக்குப் பக்கத்திலிருப்பதாகக் குறிப்பெழுதி வைத்திருந்தோம். ஆகையால், நாகபட்டினத்திலிருந்து திருவாரூர் போகும் பாதையில் கீவளூர் என்று வழங்கும் கீழ்வேளூரை யடைந்தோம். இதன் தென் கிழக்கில் புதுச்சேரி என்ற இடத்தின் பக்கத்திலுள்ளது வரிஞ்சையூர். சிறு கிராமம். இங்கு வாழ்ந்த சத்தி நாயனார் அந்தக் காலத்தில் திருவாரூர் தேவாசிரியன் மண்டபத்தில் மற்றைய அடியார்களுடன் கூடியிருந்திருக்கலாம். திருவாரூர் மிகச் சமீபத்திலிருப்பதால் அங்கே போய் வருவது சுலபம். விறன்மிண்ட நாயனாரைப் போலவே இவரும் அடியார் பக்தியில் தீவிரமானவர். சிவனடியார்களை எவராவது தகுதிக் குறைவாகப் பேசிவிட்டால் இந்த நாயனார் கொஞ்சமும் தயங்காது கத்தி எடுத்து அவரது நாவை அறுத்துவிடுவாராம்! அவ்வளவு பக்தி அடியார் மேல். இது நமக்கு என்னவோ மாதிரித்தான்படும். ஆனால், சத்திநாயனாரின் பிடிவாத குணத்தை என்ன செய்ய முடியும்? யாரும் அவரைத் தடை செய்யவில்லை. அவருடைய பக்திக்காக மரியாதை செய்து, எவரும் அவர் வழியில் எதிர்ப் படாமல் சென்றுவிடுவார்கள். அறுபத்து மூவரில் இவரையும் ஒருவராக்கி, சுந்தரமூர்த்தி நாயனார் தமது திருத்தொண்டத் தொகையில், ''கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்'' என்று பாடி வைத்திருக்கிறார்.

சிறிய கோயில். சத்திநாயனாருக்காக ஓர் உருவம் வைத்திருக்கிறார்கள். ஞாபகார்த்தமாகக் குருபூசையும் ஐப்பசிப் பூசத்தில் நடைபெறுகிறது. அந்தக் காலத்தில் சமணர்கள் இந்தப் பகுதியில்

வாழ்ந்தார்களாகையால், சமயப் பூசல்கள் நிறைந்திருந்த காலம், சத்திநாயனார் சமணர்களின் அபவாதப் பேச்சுக்களைக் கேட்கச் சகியாதவராக அவர்கள் நாவை வெட்டுவேன் என்று சொல்லித் திரிந்த காரணத்தால் மேற்சொன்ன கதை தோன்றியிருக்கலாம்.

பழையபடி கிழக்கே கடற்கரைத் தெருவுக்கு வந்து வேதாரணியத்தை நோக்கிச் செல்லும்போது இடையிலே கண்ட வேளாங்கன்னி மாதா கோயிலிலும் சில நிமிஷங்கள் தங்கினேம். பெரிய நகரத்திலிருந்து இப்படியான சிறிய கடற்கரைப் பட்டினங்களுக்குப் போனால் காணும் காட்சிகள் அற்புதமாயிருக்கின்றன. வேளாங்கன்னி மாதா கோயிலின் முன்னால் பரந்து கிடக்கும் கடல் மணல், அங்கங்கே சிறு சிறு கூடாரம் அடித்து டீக்கடையும் காபிக் கடையும் சர்பத்துக் கடையும். அப்பம் பிட்டு வியாபாரம் செய்யும் பெண்கள் ஒரு புறம். பனையோலையால் முடைந்த பலவகைப் பொருள்கள் விற்கும் சிறுமிகள் ஒரு புறம். சங்குமணி கிளிஞ்சல் முதலிய கடற்பொருள்களைப் பரப்பி வியாபாரம் செய்யும் சிறுவர்கள் ஒரு புறம். யாத்திரிகர் இடைவிடாது வந்து கொண்டிருக்கும் வண்டி மாடுகளின் கழுத்தில் ஒலிக்கும் மணிகளின் சத்தம், பொம்மைக் கடைகளில் சிறுவர்கள் ஒலிக்கும் பல வகைப் பிளாஸ்டிக் குழல்களின் ஒலிகள், எல்லாம் சேர்ந்து புகார் நகரத்தின் இந்திர விழாக் காட்சியைத்தான் எங்கள் சிந்தனை கற்பனை செய்து கொண்டது. இதைப் பார்த்தபின் இளங்கோவடிகள் ஒன்றையும் கற்பனை செய்திருக்க மாட்டார், கண்ணால் கண்டதைத்தான் எழுதியிருப்பார் என்று நிச்சயமாக நம்பினேம்.

வேளாங்கன்னியை விட்டுக் கிளம்பும்போது சிறுக மழை தூறத் தொடங்கியது. யாரோ சிலர் எங்களைத் திருத்துறைப் பூண்டி வழியாகப் போனால் வேதாரணியத்துக்குப் பாதை நன்றாயிருக்கும் என்று சொல்லி வைத்தார்கள். ஆனால் நேரே கடற்கரை வழியாகப் போகும் பாதையில் சென்றால் சீக்கிரம் போய்விடலாம். தூரம்குறைவு என்று எண்ணிக் கொண்டு நேர் வழியில் வண்டியைச் செலுத்தினேம். அதன்பலன் பின்னால்தான் தெரிந்தது! பாதை சீராயில்லை. பல இடங்களில் பள்ளங்கள், மழை வேறு பிடித்துக் கொண்டது. மிகவும் கஷ்டப்பட்டு, நேரத்தையும் வீணாக்கி ஒரு வழியாக வேதாரணியம் போய்ச் சேர்ந்தோம்.

முன்பு திருவீழிமிழலையில் அப்பரும் சம்பந்தரும் படிக்காசு பெற்று அன்னதானம் செய்து வந்தார்களல்லவா? பின் அங்கிருந்து அவர்கள் பல தலங்களை வழிபட்டுக் கொண்டு வேதாரணியத்துக்கு வந்து சேர்ந்தார்கள். முதலில் வந்தவர்

அப்பர். வேதாரணியத்து மறையவரும் மக்களும் மிகுந்த சிறப்போடு அவரை வரவேற்றார்கள். அவரைத் தொடர்ந்து சம்பந்தரும் வந்து சேரவே மக்கள் ஆனந்தம் தாங்கமுடியவில்லை. பலவிதமாக நகரத்தை அலங்கரித்து இவ்விரு பெருமக்களுக்கும் அமோக வரவேற்பளித்தார்கள். அடியார்கள் இருவரும் கோபுர தரிசனம் கண்டு வாயிலில் நுழைந்து உள்ளே மறைக்காட்டமரும் மணவாளனைக் காணச் சென்றபோது ஒரு செய்தி கேள்விப் பட்டனர். வழக்கமாக கோயிலுட் செல்ல இருந்த கிழக்கு வாயில் கதவு வெகுகாலமாகப் பூட்டிக் கிடந்தது. ஒருபோது வேதங்கள் இங்கே வந்து சுவாமியை வழிபட்டுச் செல்லுகையில், இந்தக் கதவைப்பூட்டிவிட்டுச் சென்றனவாம். ஆகையால் அன்றுமுதல் பூட்டப்பட்டேயிருந்தது. எனவே மறையவர்களும் வேறொரு வாயில் அமைத்து அதன் வழியேதான் சென்று வழிபட்டு வருகிறார்கள். இந்தச் செய்தியை ஞானசம்பந்தர் கேட்டவுடன் அப்பரை நோக்கி, ''அப்பரே! வேதவனத்தையரை நாம் அபிமுகத்துத் திருவாயிலைத் திறந்துதான் போய்த் தரிசிக்க வேண்டும். ஆகையால் திருக்காப்புச் செய்திருக்கும் கதவைத் திறக்குமாறு நீர்தான் பாடி அருளவேண்டும்'' என்றார். ''அப்படிச் செய்ய வேண்டுமென்று நீர் கேட்பதால் நான் பாடுகிறேன்'' என்று சொல்லி ஒரு பதிகம் பாடினார் அப்பர்:

பண்ணினேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணினுல் வலஞ் செய்மறைக் காடரோ
கண்ணினுலுமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே.

இந்தப் பாட்டைப் பாடத்தொடங்கிப் பத்துப்பாட்டுக் கொண்ட முழுப் பதிகத்தையும் பாடினார். ஆனால் கதவு திறக்க வில்லை! மனம் வருந்திய அப்பர் இறுதியாகப் பதினோராவது பாடலாக, ''இரக்கமொன்றிலீர் எம்பெருமானிரே'' என்று பாடியவுடன் கதவு திறந்தது! ஞானசம்பந்தரும் வாகீசரும் உள்ளே சென்று சேவித்துத் திரும்பினர். கூடிநின்ற மறையவரும் மற்றவரும் ஆனந்தம் கொண்டனர். வெளியே வந்தவுடன் திருநாவுக்கரசர் சம்பந்தரைப் பார்த்து, ''இனிமேல் இந்தக் கதவு திறக்கவும் அடைக்கவும் தக்கதாயிருத்தல் வேண்டும். ஆகையால் திறந்திருக்கும் கதவை அடைக்கும்படி பாடியருள்க'' என்றார். சம்பந்தர் உடனே ஒரு பதிகம் பாடினார்:

சதுரம் மறைதான் துதி செய்து வணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய்க எனக்குன்
கதவந்திருக்காப்புக்கொள்ளுங் கருத்தாலே

இது முதலாகப் பதிஞெரு பாடல் பாடியவுடன் கதவு மூடிக் கொண்டது. அன்று தொடக்கம் கதவு திறக்கவும் மூடவும் வாய்ப்பாக அமைந்தது என்று சொல்லப்படுகிறது. அப்பரும் சம்பந்தரும் பக்கத்திலுள்ள திருவாய்மூர் சென்று அங்கு நடனமிடும் இறைவனைத் தரிசித்துத் திரும்பி வேதாரணியம் வந்து தங்கியிருக்கும்போது மதுரையிலிருந்து ஒரு முக்கியமான செய்தி வந்தது.

மதுரையிலே நெடுமாறன் என்ற பாண்டிய அரசன் ஆண்டு வந்தான். அவனுடைய நாட்டிலே இருந்த சைவம் நிலைகுலையத் தொடங்கிவிட்டது. சமணர்கள் செல்வாக்கு அதிகரித்துவிட்டது. எங்கு பார்த்தாலும் சமணப் பாழிகளும் அருகர் பள்ளிகளும் பெருகிவிட்டன. அரசனே சமணரின் சொல்லைக்கேட்டு அவர் களுக்காகவே நடந்து வருகிறான். இந்த நிலைமையைக் கண்ட அரசி மங்கையர்க்கரசியும் குலச்சிறை என்ற மந்திரியும் என் செய்வதென்று யோசித்துக் கொண்டிருக்கும்போது தமிழ்நாட்டில் பல அற்புதங்களைச் செய்துகொண்டு ஒரு சிறுவன் ஞானசம்பந்தர் திருமறைக்காட்டில் எழுந்தருளியிருக்கிறார் என்பதைக் கேள்விப் பட்டார்கள். உடனே சில தூதுவர்களை அனுப்பினர்கள். அந்தத் தூதுவர்தான் திருமறைக்காடாகிய வேதாரணியத்துக்கு வந்து வாயில் காவலரை நோக்கி, ''வளவர்கோன் மகளார், தென்னர் கொற்றவன் தேவியாரும் குலச்சிறையாரும் ஏவப் பொற்கழல் பணிய வந்தோம்'' என்று சொன்னார்கள்.

வாயிலைக்காத்து நின்ற தொண்டர்கள் உடனே இந்தச் செய்தியை சம்பந்தரிடம் சொன்னதும் அவர் தூதுவர்களை யழைத்து, ''மங்கையர்கரசியாரும் குலச்சிறையாரும் நன்றுயிருக் கிறார்களா?'' என்று நலம் விசாரித்த பின்னர், தூதுவர், ''பாண்டி நாடே சமணர்களால் துன்பப்படுகிறது. மன்னனும் அவர்கள் மாயையில் சிக்கிவிட்டார். இந்தச் செய்தியை ஞானசம்பந் தருக்கு உடனே தெரியப்படுத்தவும் என்று தேவியாரும் மந்திரி குலச்சிறையாரும் சொல்லியனுப்பினர்கள்,'' என்று சொல்லவும் அங்கு நின்ற சிவனடியார் யாவரும், ஞானசம்பந்தரைப் பார்த்து ''சிவன் பாதம் பணியாத சமணர்களை வென்று, வேத நெறியை ஸ்தாபித்து, அரசனையும் நெறிமாற்றித் திருநீறணியச் செய்து, பாண்டி நாட்டிலே சைவம் தழைக்கச் செய்து வெற்றியுடன் வருக'' என்று விண்ணப்பித்தனர். ஞானசம்பந்தர் உடனே மதுரைக்குச் செல்ல ஆயத்தமானார். நாவுக்கரசரைச் சந்தித்து இந்தச் செய்தியைச் சொன்னதும், அனுபவமிக்கவரான அவர், ''பிள்ளாய்! சமணர்களின் வஞ்சனைக்கு எல்லையில்லை. உமக்கோ இப்போது கோள்கள் அவ்வளவு வலியனவாயில்லை. ஆகையால்,

நீர் அங்கே போவது நன்றுயில்லை'' என்று எச்சரிக்கை செய்தார். சம்பந்தர், ''பரமசிவனே நமது சிந்தையில் வீற்றிருக்கிறாகையால் நமக்கொரு தீங்கும் வராது'' என்று சொல்லி, கோள்களின் தீமையை வெல்வதற்காக, கோளறு பதிகம் என்ற பத்துப்பாட்டைப் பாடினார்.

வேயுறுதோளி பங்கன் விடமுண்டகண்டன் மிகநல்லவீணை தடவி
மாசறுதிங்கள் கங்கை முடிமேலணிந்தென் உளமே புகுந்த அதனால்
ஞாயிறுதிங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி சனி
பாம்பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே

இங்ஙனம் தொடங்கிப் பாடி முடித்தவுடன் நாவுக்கரசரும் உடன் பட்டு, ''நீர் அவசியம் மதுரைக்குப்போகவேண்டியிருந்தால் போகலாம். நானும் உடன் வருகிறேன்'' என்று புறப்பட்டார். ஞானசம்பந்தர், ''தாங்கள் இந்த நிலையில் அங்கு வரவேண்டாம். இங்கேயே எழுந்தருளியிருக்கவும்'' என்று சொல்லி அப்பரை அங்கேயே நிறுத்திவிட்டார். இந்தக் குழந்தை என்ன கஷ்டங்களைப் படப்போகிறதோ என்று அப்பர் கவலைகொண்டார். பாடலிபுரத்தில் அவர் பட்ட பாட்டை நினைத்தார். ஆனால் பாண்டி நாட்டில் உறையும் சமணர்கள் மிகவும் சமர்த்தர். பல தந்திரங்கள் தெரிந்தவர்கள். பாலகனான சம்பந்தர் எப்படிச் சமாளிப்பாரோ என்று அப்பர் பயந்தாலும், இறைவன் ஒருவன் இருக்கிறான், காப்பாற்றுவான் என்று ஆறுதலடைந்தார். சம்பந்தர் யாவரிடமும் விடைபெற்றுக் கொண்டு தமது சிவிகையிலேறி மதுரையை நோக்கிப் புறப்பட்டார்.

வேதாரணியத்தை நாங்கள் தரிசித்தபோது அப்பரும் சம்பந்தரும் திறந்து மூடிய கதவைப் பார்க்க வேண்டுமென்று ஒருகுருக்களை நாடினோம். இது மகாமண்டபத்தின் இடதுகோடியில், அர்த்த மண்டபத்துக்குப் போகுமுன்னர் இருக்கும் கதவு என்று அவர் காண்பித்தார். மாசிமாதத்தில் நடக்கும் திருவிழாவில் ஏழாம் நாள் இந்தக் கதவு திறப்பு அடைப்பு வைபவம் நடக்கிறதாம். நாவுக்கரசர் சம்பந்தர் திருவுருவங்களை எழுந்தருளச் செய்து, கதவைச்சாத்தி கபாட பூஜைபண்ணி, அப்பர் சுவாமிகளின் பதினொரு பாட்டுக்களை ஓதுவார் பாடுவார். பதினோராவது பாட்டைப் பாடும்போது கதவைத் திறந்துவிட்டு தீபாராதனை நடக்கும். பின்னர் சம்பந்தரின் பதிகத்தைப் பாடி முடித்தவுடன் கதவைச் சாத்திவிடுவார்கள். வேதாரணியம் கீழ்ச்சந்நிதியில் அப்பர் சம்பந்தர் கோயிலுண்டு. இந்த இடத்தில்தான் அவர்கள் தங்கியிருந்ததாக ஐதிகம். பாண்டிமாதேவியிடமிருந்து வந்த தூதுவர் இங்கேதான் வந்து செய்தி சொன்னார்கள்.

வேதாரணியத்தில் நெய்த்தீபம் விசேஷமென்று சொல்லப் படும். திருவாரூர் தேர் அழகு, திருவிடை மருதூர் தெருவழகு, மன்னர்குடி மதில்அழகு, வேதாரணியம் விளக்கழகு என்று ஒவ்வொரு ஸ்தலத்திலும் ஒவ்வொரு அழகு சொல்லப்படும். மேற்குச் சந்நிதியிலிருக்கும் சிறு விநாயகர் வீரஹத்தி விநாயகர் என்று வழங்கப் படுகிறார். இலங்கையில் ராவணனையும் மற்றும் ராட்சதர்களையும் கொன்றுவிட்டுத் திரும்பிய ராமனை அரக்கரின் ஆவிகள் தொடர்ந்து வந்தபோது இந்த வீரஹத்தி விநாயகரே காப்பாற்றினார் என்று சொல்லப்படுகிறது. இங்குள்ள துர்க்கை யம்மனும் விசேஷ சக்தி வாய்ந்ததாகக் கருதுகிறார்கள். அடிக்கடி வேதாரணியத்தில் புயலடித்து வெள்ளம் வரும்போதெல்லாம் இந்தத் துர்க்கைக்குப் பொட்டுமணி கட்டுவார்களாம். இங்கு ஒரு பெரிய அதிசயமென்னவெனில் எவ்வளவுதான் வெள்ளம் வந்தாலும் ஒரு சொட்டுத் தண்ணீராவது கோயிலுக்குள் தங்கு வதில்லை.

வேதாரணியத்தில் மிகப்பெரிய சரஸ்வதி சிலையிருக்கிறது. ஆனால் இவர் கையில் வீணையில்லை. ஏடுமாத்திரமிருக்கிறது. இதற்கு ஒரு கதையுண்டு. ஒருமுறை சரஸ்வதிதேவி வீணை வாசிக்கும்போது அதைக்கேட்ட உமாதேவியார், ''பேஷ், நன்றா யிருக்கிறது!'' என்று வாய்திறந்து சொன்னாராம். இந்த மொழி யானது வீணையின் நாதத்தைப் பார்க்கிலும் சிறந்ததா யிருந்ததாம். உடனே சரஸ்வதி வெட்கமடைந்து, தனது வீணையைத் துறந்து ஏட்டைக் கையிலெடுத்தார். சுந்தரமூர்த்தி இந்தக் கதையை ஞாபகத்தில் வைத்து, ''யாழைப்பழித்த மொழியாள்'' என்று தமது தேவாரத்தில் குறிப்பிடுகிறார். வேதாரணியத்திலுள்ள அம்பாளுக்கு வீணைவாத விபூஷணி என்று ஒரு பெயருண்டு.

வேதாரணியம் என்ற திருமறைக்காடும் சப்தவிடங்க ஸ்தலங் களில் ஒன்று. விடங்கர் புவனி விடங்கர். நடனம் பிருங்க நடனம். இந்த விக்கிரகத்துக்கு எதிரில் சுந்தரமூர்த்தியும் பரவையாரும் இருக்கிறார்கள். லிங்கம் மரகதலிங்கம். இந்த லிங்கத்துக்குப் பின்னால் அகஸ்தியருக்கு பரமேஸ்வரன் தனது திருமணக்காட்சி காண்பித்த புடைச்சிற்பம் காணப்படுகிறது. மணவாளசாமி என்றும் இங்குள்ள சுவாமிக்கு ஒரு பெயர் உண்டு.

இந்தக் கோயில் ஓதுவார் சுப்பிரமணியத்துடன் பேசிக்கொண் டிருக்கும்போது பல தகவல்களை யறிந்தோம். வேதாரணியம் ஆயிரம் ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தார் மேற்பார்வையில் நடந்து வருகிறது. நாங்கள் போன சமயம் யாழ்ப்பாணம் வரணி

ஆதினம் கதிர்காமய்யா என்பவர் மடாதிபதியாக இருந்தார். யாழ்ப்பாணத்தார் வீதி ஒன்றுண்டு. கிழக்கோபுர வாயிலுக்கும் அனுப்பு மண்டபத்துக்குமிடையில் இலங்கையிலிருந்து கொண்டு வரப்பட்ட கற்களே தளமாகப் போடப்பட்டிருக்கின்றன. கிழக்குக் கோபுரத்திலுள்ள பல கல்வெட்டுக்களில் யாழ்ப்பாணக் கிராமங்களின் பெயர்கள் காணப்படுகின்றன. திருப்பணி சமயத்தில் உதவியவர்களின் ஊர்ப் பெயர்கள் இவை.

நாகபட்டினத்தைப் போல இங்கும் நவக்கிரகங்கள் ஒரே வரிசையில், வார நாட்கள் ஒழுங்கிலே வைக்கப்பட்டிருக்கின்றன. சனீஸ்வரன் மாத்திரம் தனி. திருமறைக்காடு எழுபத்துநான்கு சக்தி பீடங்களிலொன்று. இங்குள்ளது சுந்தரிபீடம். வேறெங்கு மில்லாத ஒரு அதிசயம் இங்கே சண்டிகேசுவரருடன் ஒரு சண்டிகேசுவரியுமிருக்கக் காணலாம். பஞ்சலோகத்தில் அறுபத்து மூன்று நாயன்மாரது விக்கிரகங்களுமுள்ள சில கோயில்களில் வேதாரணியமும் ஒன்று. இங்கு வடக்குப் பிராகார உட்புறச் சுவரில் பெரிய புராண வரலாறு சித்திரமாகத் தீட்டப் பெற்றிருக்கிறது. சேக்கிழார் பெரிய புராணத்தை அரங்கேற்றிய காட்சி அற்புதமாயமைந்திருக்கிறது.

வேதாரணியத்தில் சுப்பிரமணிய ஓதுவாருடன் பேசிவிட்டு நாங்கள் எங்கள் அடுத்த யாத்திரையை ஆரம்பித்தோம். திருத்துறைப்பூண்டி வழியாகக் களந்தை என்ற கூற்றுவநாயனார் ஊருக்குப் போய், அங்கிருந்து அரிவாட்டாய நாயனாரின் ஊட்டித் தண்டலைக்குப்போய், பின்னர் நேரே மன்னர்குடிமார்க்கமாகத் தஞ்சாவூருக்குப் போவது என்று தீர்மானித்தோம். காரியதரிசி வேணுவின் குறிப்புப் புத்தகத்தில் அப்படியே தான் ஏற்கெனவே திட்டமிருந்தது. ''போகும் வழியில் திருத்துறைப்பூண்டியில் மத்தியானச்சாப்பாடு'' என்று ராதாகிருஷ்ணன் ஞாபகப்படுத்தினார்!

37. பெரியவர் தரிசனம்

முன்னேற்பாட்டின்படியே திருத்துறைப்பூண்டியில் ஒரு ஹோட்டலிலே சாப்பாட்டை முடித்துக்கொண்டு திருக்களந்தை என்ற ஊரைத்தேடிப்போனேம். இப்போது அந்த ஊர் களப்பால் என்ற பெயரில் வழங்குகிறது என்பதையறிந்து கொண்டு, போகும் வழியெங்கும் பலரிடம் விசாரித்துக் கொண்டே போனேம். மோட்டார் போகக்கூடிய வசதியான சாலையாக இல்லாவிட்டாலும், ராதாகிருஷ்ணன் சமாளித்துச் சென்றார். ஒருவழியாக களப்பால் கிராமத்தைச் சேர்ந்ததும் கோயிலைத் தேடிப்பிடித்துவிட்டோம். சந்நிதித் தெருவில் போனதும் ஒரு வீட்டிலிருந்து குருக்கள், ''வாருங்கள், உட்காருங்கள்!'' என்று இனிமையாக வரவேற்று உபசரித்தார். இது முன்பு நாங்கள் எதிர்பார்த்திராத வரவேற்பு, குருக்கள் இங்கே கொஞ்சம் வசதியோடு பெரிய வீட்டில் வசிக்கிறார். எங்கள் யாத்திரையைப் பாராட்டிப் பல தகவல்களைக்கொடுத்தார். கூற்றுவநாயனார் ஊர் இந்தக் களப்பால் தான் என்றும், பக்கத்திலே கூற்றுவன்குளம், கூற்றுவன் திடல் என்ற ஊர்ப்பெயர்கள் உண்டு என்றும் விளக்கினார். இங்குள்ள கோயிலின் பெயர் ஆதித்யேஸ்வரம். தமிழில் அழகிய நாதர் கோயில்.

கூற்றுவநாயனார் ஒரு சிற்றரசன். சோழ மன்னனுக்குப் பிரதிநிதியாயிருந்து இந்தப் பிரதேசத்தை ஆண்டதில் அதிகார பலம் வலுத்தது. மேலும் பல சிற்றரசர்களை வென்று பல நாடு களுக்கதிபதியானார். ஆனால் அதிகாரமும் மற்றும் படைபலமும் இருந்தபோதிலும் முடி மன்னராகவில்லை. அந்த ஒரு குறையை நீக்குவதற்காகச் சிதம்பரம் தில்லைவாழந்தணர்களிடம் சென்று முடிசூட்டவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். தில்லை அந்தணர்தான் சோழர்களுக்கு முடிசூட்ட உரிமையுள்ளவர்கள். ஆனால் அவர்கள், ''நாம் சோழமன்னர்களுக்கன்றி மற்றை யோருக்கு முடிசூட்ட மாட்டோம்'' என்று மறுத்துவிட்டனர். கூற்றுவரோ படைபலமும் அதிகாரமுமுள்ளவர். ஆகையால் அவர் கோபம் கொண்டால் என்னவாகுமோ என்று அஞ்சிய தில்லை

அந்தணர்கள் ஒரேயொரு குடும்பத்தாரை மாத்திரம் சிதம்பரத்தில் நிறுத்தி, ராஜமுடியைக் காத்துக்கொள்ளச் சொல்லிவிட்டு, மற்றவர்கள் யாவரும் சேரநாட்டுக்கு ஓடிவிட்டார்களாம். கூற்றுவர் என்ன செய்வதென்றறியாது, சிதம்பரம் நடராஜ மூர்த்தியையே அனுதினமும் தியானித்து அவர் திருப்பாதத்தாலே தமக்கு முடிசூட்டவேண்டுமென்று விண்ணப்பித்தார். அவர் விரும்பியவாறே நடராஜப்பெருமான் பாதமுடிசூட்டினார் என்பது கதை.

களந்தையில் மிகப்பெரிய நடராஜமூர்த்தி காணப்படுகிறார். ஒரு சிறிய கோயில், மடம் என்றுதான் சொல்லவேண்டும். கூற்றுவநாயனருக்கு விக்கிரகம் உண்டு. ஆடிமாதம் சதய நட்சத்திரத்தில் கூற்றுவநாயனருக்கும் உற்சவம் நடத்துகிறார்கள்.

கூற்றுவநாயனர் ஒரு களப்பிர அரசர் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். களப்பால் என்பதும் களப்பிரர் வாழ்ந்த பிரதேசமென்று விளக்கம் கூறுவர். வேறுசிலர், கூற்றுவரை ஒரு காடவ மன்னன் என்பர். சோழனின் பிரதிநிதியாக கோப்பெருஞ்சிங்கன் என்ற காடவன் ஆண்டு வந்ததுபோல் கூற்றுவநாயனரும் சோழப் பிரதிநிதியாக ஆண்டார் என்று கூறுவர்.

சுவாமிதரிசனம் செய்துகொண்டு புகைப்படங்களும் பிடித்துத் திரும்பியபோது குருக்கள் தமது வீட்டில் காபி ஏற்பாடு செய்து வைத்திருந்தார். இதை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. ''வெகு தூரத்தில் இருந்து வந்த உங்களுக்கு நான் இதுவாவது செய்ய வேண்டாமா?'' என்று அன்போடு சொன்னார். நாங்கள் காபியைச் சாப்பிட்டு, நன்றி கூறி விடைபெற்றுக் கொள்ளும் போது குருக்கள், ''இந்த ஊரில் ஒரு பெரியவர் இருக்கிறார். அவரை நீங்கள் பார்த்துவிட்டுப் போவது நல்லது'' என்றார். சரி என்று சொன்னவுடன் எங்களை அவரே அழைத்துச் சென்றார். சிறிது தூரத்திலுள்ள ஒரு பெரிய வீட்டில் தனியாக வசிக்கிறார் அந்தப் பெரியவர். எங்கள் வரவை அறிவித்தவுடன் அவர் உள்ளேயிருந்து வந்தார். உருவத்திலும் பண்பாட்டிலும் பெரிய வராகவே காணப்பட்டார். எண்பத்தைந்து வயதிருக்கும். தபஸ்வாமி என்றுபெயர். ரமணமகரிஷி ஆச்ரமத்தில் பற்றுக் கொண்டவர். துறவியாகவே வாழ்கிறார். முகத்தில் ஒரு ஒளி. பேச்சில் அடக்கம். ''விருந்தாளிகளாக வந்திருக்கும் உங்களுக்கு நான் என்ன கொடுக்க?'' என்று கேட்டார். முதலில் குருக்களே எல்லாம் உபசரித்துவிட்டார், அதுபோதும் என்றோம். ''அது

அவர் பங்கு. நான் ஏதாவது செய்யவேண்டாமா?'' என்று கேட்டார். ''ஒன்றும் வேண்டாம். தாங்கள் இவ்வளவு கேட்டதே போதும்'' என்று சொல்லிவிட்டு நாங்கள் புறப்பட்டு எழுந்தோம். அந்தப் பெரியவரைக் கண்டது எனக்கும் பெருமித மாயிருந்தது. அவர் ஆசீர்வாதம் உதவியாயிருக்கும் என்று நான் அவர் பாதங்களில் தொட்டு நமஸ்கரிக்கக் குனிந்தேன். அந்தப் பெரியவர், சட்டென்று என் தோள்களைப்பிடித்து நிமிர்த்திவிட்டு, என் பாதங்களைத்தொட்டு வணங்கினார்! இதை என்னால் பொறுக்கமுடியவில்லை. உணர்விழந்தேன். பெரியவர் அருள் நிறைந்த பார்வையுடன் சொன்னார், ''தங்களை சிவத் தொண்டில் ஈடுபட்டு வந்திருக்கும் சிவனடியாராக நான் காண் கிறேன். அதனால் சிவனடியாரை நானே வணங்குவதுதான் முறை'' என்றார்! என் கண்களில் நீர் சுரந்தது. என்னுடன் வந்த நண்பர்கள் பெருமிதத்தினால் அதிர்ச்சியுற்று நின்றனர். அந்த மகானுக்கு மானசீகமாக எனது வணக்கத்தைத் தெரிவித்து விட்டு, நன்றியறிதலோடு, ''போய்வருகிறோம்'' என்று விடை பெற்றோம். ''உங்கள் முயற்சி வெற்றிதரும்'' என்று அந்த மகான் வாழ்த்தினார்கள். திரும்பி வரும்போதுதான் குருக்கள் சொன்னார், அந்தப் பெரியவர் திருவாரூர் வி. எஸ். தியாகராஜ முதலியாரின் சித்தப்பா என்று. இந்த இருபதாம் நூற்றாண்டிலும் திருநாவுக்கரசர் போன்ற மகான்கள் இருந்துகொண்டுதானிருக் கிறார்கள். சைவமும் அடியார் மரபும் மறைந்து போகவில்லை என்ற நம்பிக்கையோடு, களந்தைக் குருக்களுக்கும் நன்றி சொல்லி விடை பெற்றுக்கொண்டு அரிவாட்டாய நாயனாரைத் தேடித் தண்டலை என்ற ஊருக்குப் பிரயாணமானோம்.

* * *

அரிவாட்டாய நாயனார் என்றால் 'அரிவாள்தாய' நாயனார் என்று பொருள். தாம் இறைவனுக்குப் படைக்கக் கொண்டு போன உணவு கொட்டிவிட்டதைக் கண்டு அதிர்ச்சியடைந்தவர், அரிவாளால் தமது கழுத்தை வெட்ட முனைந்தார் தாயார் என்பவர். அதனாலேதான் அரிவாள்தாய நாயனார் என்று பெயர் பெற்றார்.

திருத்துறைப்பூண்டிக்கு வடகிழக்கே கணமங்கலம் என்ற ஊர் உள்ளது. இங்குதான் தாயனார் என்பவர் வாழ்ந்து வந்தார். இவர் மிகுந்த செல்வம் படைத்தவர். விளைநிலங்கள் அதிகமுண்டு. எப்போதும் இவர் இறைவனுக்கு செந்நெல் அரிசிச்சோறும் செங்கீரைக் கறியும், மாவடுவும் படைப்பதை ஒரு விரதமாகக் கொண்டிருந்தார். காலவித்தியாசத்தால் இவர் செல்வம்

குன்றந்தது. நிலபுலங்கள் இல்லாமல் போயின. அப்படியிருந்தும் கூலிவேலை செய்து செந்நெல்லரிசி அமுதாக்கிப் படைத்து வந்தார். வறுமை மேலும் ஏற்பட இது கடவுளின் சோதனைகளில் ஒன்று என்று அவர் தமக்குணவில்லாவிட்டாலும் இறைவனுக்குப் படைப்பதை நிறுத்தவில்லை. ஒரு நாள் இவர் செந்நெல்லரிசிச் சோறும் செங்கீரைக்கறியும் மாவடுவும் கொண்டு இறைவன் சந்நிதிக்குப் போனார். இவர் மனைவியார் உடன் சென்றார். வறுமை காரணமாக உடல் நலிந்திருந்தது. போகும் வழியில் வயல் வரப்பிலிருந்த ஒரு வெடிப்பில் கால் இடறிக் கீழே வீழ்ந்து விட்டார். கையிலிருந்த நைவேத்தியப்பொருள்களெல்லாம் கொட்டுண்டு, வரப்பின் வெடிப்புக்குள் விழுந்து விட்டன. தாயனுருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ''இறைவா, இதுவும் உன் சோதனையா? உனக்கு அருமையாகப் படைக்க நான் கொண்டு வந்தவை உபயோகமில்லாமல் போய்விட்டனவே. இதை நீ உண்டு மகிழும் அருளை நான் பெற்றிலனே'' என்று சொல்லி, ''இனி நான் உயிருடன் இருந்து என்ன பயன்'' என்ற சிந்தனையுடன் கையிலிருந்த அரிவாளால் தன் கழுத்தை அறுக்க முற்பட்டார். உடனே வரப்பு வெடிப்பிலிருந்து ஒரு கை வந்து அரிவாள் பிடித்த கையைப் பிடித்துக்கொண்டது! வெடிப்பினுள்ளே மாவடுவைக் கடித்துச் சுவைக்கும் ஓசையும் அதே சமயம் கேட்டது! இறைவனே ரிஷபாரூடராய்த் தோன்றி, ''அன்பனே, உன் செயலை நான் போற்றுகிறேன். நீ சுகமாக வாழ்ந்து உன் பத்தினியுடன் என் கைலாயத்துக்கு வருவாயாக'' என்று ஆசீர்வதித்து மறைந்தார்.

செந்நெல்லரிசி செங்கீரை கொட்டப்பட்ட இடம்தான் தண்டலை. இது இப்போது தண்டலைச்சேரி என்று வழங்குகிறது. திருத்துறைப்பூண்டியிலிருந்து வடக்கே இரண்டரை மைலில் திருவாரூர் மார்க்கத்திலிருக்கிறது. கணமங்கலம் என்பது இப்போது கணமங்கலத்திடல் என்று வழங்குகின்றது. இங்கு கோயிலோ அல்லது வேறு சின்னமோ ஒன்றும் கிடையாது. இஸ்லாமியமக்கள் வாழும் ஒரு சிற்றூர் இது. தண்டலைச்சேரியில் மாடக்கோயில் இருக்கிறது. சிதம்பரத்து நடராஜர் வந்து இங்கே உச்சிக்கால தரிசனம் கொடுப்பதாக ஐதிகம். தண்டலையிலுள்ள கோயிலுக்கு நீள்நெறியென்று பெயர். சுவாமி பெயர் நீள் நெறிநாதர். சம்பந்தர் இந்தக் கோயிலைப்பாடும்போது கோச் செங்கண்சோழன் கட்டிய தண்டலை நீணெறி என்றுதான் பாடியுள்ளார்.

இதுவரை நாம் வந்த யாத்திரையில் அறுபத்து மூவரில் பல அடியார்களைச் சந்தித்துவிட்டோம். சோழ நாட்டிலுள்ள பல

தலங்களையும் தரிசித்து வந்தோம். தேவார நாயனர் மூவரையும் அங்கங்கே நிறுத்தி வைத்திருக்கிறேமல்லவா? ஞானசம்பந்தர் மதுரைக்குப் போய்க் கொண்டிருக்கிறார். சுந்தரர் திருவாரூரைத் தலைமையிடமாக வைத்துக்கொண்டு பக்கத்திலுள்ள தலங்களுக்குப் போய் வருகிறார். நாவுக்கரசர் தஞ்சாவூர்ப்பக்கம் போயிருக்கிறார். நாமும் இங்கிருந்து தஞ்சாவூரில் முகாம் போட்டு இவர்கள் நடவடிக்கைகளைக் கவனிப்போம்.

தண்டலையிலிருந்து நாங்கள் புறப்பட்டு, மன்னார்குடி மார்க்கமாகத் தஞ்சாவூர் வந்தோம். அங்கே ராஜா சத்திரத்தில் தங்கி இளைப்பாறினோம். ராஜா சத்திரம் என்று ஒரு சத்திரமாகத்தான் அது முன்பு இருந்தது. இப்போது சுற்றுலா மாளிகை என்ற நாகரிகப் பெயரில் சில நல்ல வசதிகளுடன் திருத்தம் செய்யப் பட்டிருக்கிறது. நாங்கள் வந்த சமயம் பெருங்கைகள் யாவரும் வந்து ஆக்கிரமிக்காமல், நல்ல வேளையாக வசதியான இடம் கிடைத்தது!

38 சப்த ஸ்தானம்

தென்னாட்டில் யாத்திரை செய்பவர்கள் தஞ்சாவூருக்குப் போவதை ஒரு முக்கிய கடமையாகக் கருதுவார்கள். சிதம்பரம், திருவாரூர் அல்லது வேதாரணியம் போன்ற பழம் பெருமையுடைய தல்ல தஞ்சாவூர். தேவார நாயன்மார் காலத்திலே இது தோன்றியிருக்க வில்லையாகையால் அவர்கள் பாடலைப்பெறவில்லை. கி. பி. பதினேராம் நூற்றாண்டில் சோழப் பேரரசன் ராஜ ராஜன் எழுப்பிய பிருகதீஸ்வரன் கோயில் கட்டப்பெற்ற பின்தான் அது முக்கியத்துவம் பெற்றது. அவன் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு அரண்மனையும் கோயிலும் கட்டி, மற்றும் பல அரசர்களையும் நாடுகளையும் வென்று முடிகொண்ட சோழனுக ஆட்சி புரிந்தபோது சைவ நாயன்மார்களுக்கு பிருகதீஸ்வரர் ஆலயத்தில் வர்ணச் சித்திரங்களை எழுதச் செய்தான். அவன் மகன் ராஜேந்திர சோழன் அங்கே நாயன்மார்களின் விக்கிரகங்களை நிறுவச் செய்தான். அதன் பின்தான் சைவ உலகத்துக்கு ஒரு முக்கியஸ்தானமாக ஏற்கப்பட்டது தஞ்சாவூர். ஆனால், அந்தப் பெருமை சிதம்பரம் திருவாரூர் போல நிலைக்கவில்லை. உள்ளூர்க் கலகங்களும் மூவேந்தர் படையெடுப்புக்களும் தஞ்சாவூரை நிலை குலைந்து ஒடுங்கச் செய்துவிட்டன. சோழர்கள் அடிக்கடி தங்கள் தலைநகரை வெவ்வேறிடங்களுக்கு மாற்றிச் செல்லவேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டது. இறுதியில் அவர்கள் செல்வாக்கும் புகழும் மறைந்தது.

சோழ மன்னர்கள் போனாலும் அவர்கள் வளர்த்த சைவமும் தமிழும் நல்ல வேளையாகத் தஞ்சையில் மறையவில்லை. சோழருக்குப் பின் வந்த விஜயநகர மன்னர்கள் தமது பிரதிநிதிகளாக நாயக்கர்களை வைத்து ஆண்டார்கள். காலகதியில் விஜயநகர சாம்ராஜ்யமே மறைந்தது. ராஜப் பிரதிநிதிகளாயிருந்த நாயக்கர்களே மன்னர்களாக வந்து பழையபடி சைவத்தையும் தமிழையும் வளர்த்தார்கள். தஞ்சையில் கடைசியாக ஆண்ட நாயக்க மன்னனிடம் மந்திரிப்பதவி பார்த்த கோவிந்த தீக்ஷிதர் நிறைந்த சிவபக்தர். இவர்தான் அரசனுடைய நட்பைக்கொண்டு

பல ஊர்களில் திருப்பணி செய்தவர். பட்டீசுரத்தில் செய்த திருப்பணியைப்பற்றி நாம் முன்னரே குறிப்பிட்டு உள்ளோம். நாயக்கருக்குப் பின்வந்த மராட்டியர்களில் கடைசியாக ஆண்ட சரபோஜி மன்னனின் சிறந்த கல்விப் பணியைப் பற்றி உலகம் அறியும். கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த சரபோஜி, சுவாட்ஸ் என்ற கிறிஸ்தவப் பாதிரியார் நட்பைப் பெற்று ஒப்பற்ற கல்விமானாகத் திகழ்ந்தார். பல ஊர்களிலும் நாடுகளிலுமிருந்து நூல்களை வரவழைத்து இந்தியாவிலேயே வேறெங்கும் காணக்கிடைக்காத மிகச் சிறந்த நூலகத்தை ஏற்படுத்தினார். பல்லாயிரக் கணக்கான தமிழ் வடமொழி ஏட்டுச் சுவடிகளைச் சேகரித்து வைத்தார். வைத்தியம், சோதிடம் முதலிய சாஸ்திரங்கள், சங்கீதம் நாடகம் நாட்டியம் ஓவியம் முதலிய கலைகள், இலக்கணம் இலக்கியம் புராணம் முதலிய அறிவியல் நூல்களெல்லாம் இந்த நூலகத்தில் சேமித்து வைத்திருப்பதுதான் இந்த தஞ்சாவூரின் பெருமையை எடுத்துக் காட்டுகின்றது.

ஆனால், நாம் தஞ்சாவூருக்கு இந்த யாத்திரையில் போனது சுற்றுலாப்பிரயாணிகள் போல ஊரைப் பார்க்கவல்ல. அறுபத்து மூவர் தரிசனம் காணச் சேக்கிழார் அடிச் சுவட்டில் சென்று கொண்டிருக்கிறோம். இருந்தும் ராஜ ராஜன் எழுப்பி வைத்த பிருகதீஸ்வரத்தையும் அங்கு நமது நாயன்மார் சிலரின் ஞாபகார்த்தமாயுள்ள சின்னங்களையும் பார்த்துவிட்டுச் செல்லலாம். இங்கே மேற்குப் பிராகாரத்தில் சில கல்வெட்டுகள் காணப்படுகின்றன. நம்பி ஆரூரர், நாவுக்கரசர், ஞானசம்பந்தர் ஆகிய மூர்த்திகளுக்குத் திரு ஆபரணங்கள் செய்து கொடுத்ததைப் பற்றி ராஜ ராஜன் காலத்துக் கல்வெட்டுக் கூறுகிறது. ராஜேந்திரன் காலத்துக் கல்வெட்டில் ''மிலாடுடைய நாயனா''ருக்கு செப்புப்படிவம் அமைத்ததைப் பற்றிக் காணப்படுகிறது. இந்த மிலாடுடையார் என்பவர், மிலாட நாட்டு மெய்ப்பொருள் நாயனார். இவர் பகைவனால் கொல்லப்பட்ட சமயத்தில், பகைவன் சிவவேடம் தரித்திருந்ததால், மெய்காப்பாளன் தத்தன் அவனைக் கொல்ல வந்தபோது, ''தத்தா, நமர்'' என்று தடுத்தாராம் மெய்ப்பொருள் நாயனார். இந்தச் செய்தியை மேற் சொன்ன கல்வெட்டில் ''தத்தா நமர் என்ற மிலாடுடையார்'' எனக்குறிப்பிட்டிருப்பது ஒரு சிறந்த சரித்திரச் சான்று. மேற்குப் பிராகாரத்தில் சிறுத்தொண்ட நாயனார், அவர் மனைவி திருவெண்காட்டு நங்கை, புதல்வன் சீராளதேவன் ஆகியோருக்கு சிலைகள் அமைத்து வைக்கப்பட்டிருக்கின்றன.

பெரிய புராணத்தின்படி சுந்தரமூர்த்தி நாயனரும் அவர் நண்பர் சேரமான் பெருமாள் நாயனரும் ஒரே சமயத்தில் கைலாயம் சென்றார்கள் என்று சொல்லப்படுகிறது. சுந்தரர் வெள்ளை யானையின் மீது செல்ல, சேரமான் அவரைத் தொடர்ந்து குதிரையில் போனர். இந்தக் காட்சியை பிருகதீஸ்வரர் ஆலயத்தின் உட்புறச்சுவரில் வண்ண ஓவியமாகத் தீட்டியுள்ளார்கள். இது மிகப் பழைய சோழர் காலத்து ஓவியம் என்று கருதப்படுகிறது.

தஞ்சாவூரையடுத்து காவிரிக்கரையில் பல சிவஸ்தலங்களுள்ளன. இந்த ஸ்தலங்களின் பெருமையை யுணர்ந்துதானோ என்னவோ சோழன் ராஜ ராஜன் தஞ்சையில் தலைநகர் நிர்மாணித்தான். தஞ்சைக்கு வடக்கே திருவையாறு முதலிய ஏழு சிறந்த சிவஸ்தலங்கள் சப்த ஸ்தானங்கள் என்று வழங்குகின்றன. கண்டியூர், திருவேதிக்குடி, திருச்சோற்றுத்துறை, திருப்பூந்துருத்தி, திருவையாறு, திருப்பழனம், திருநெய்த்தானம் என்பவை இந்த ஏழு ஸ்தலங்களும். காவிரியாற்றின் இருகரைகளிலுமுள்ள இக்கோயில்கள் பழம்பெரும் வரலாறு பெற்றவை. நமது நாயன்மார்களிற் சிலர் இங்கே வந்து தரிசித்தார்கள். தேவாரம் பாடிப் பெருமைப்படுத்தினர்கள்.

தஞ்சாவூர் ராஜா சத்திரத்திலிருந்து அதிகாலையிலேயே புறப்பட்டுச் சென்று, காவிரியின் தென்கரையிலுள்ள கண்டியூரை யடைந்தோம். வருடம் பன்னிரண்டு மாதமும் பச்சைப் பசேலென்று காணப்படும் மருத நிலச்சோலைகள் அடர்ந்தது இந்தப் பிரதேசம். வாழையும் தென்னையும் கமுகும் பலாவும் மூங்கிலும் செழித்து வளர்ந்து காவிரியின் இரு கரைகளிலும் பந்தர் போட்டது போன்ற நிழலைக் கொடுத்தன. அங்கொன்று இங்கொன்றுக மக்கள் உபயோகத்துக்குப் படித்துறைகள். வடகரையில் திருவையாறு.

அன்று கண்டியூரில் உற்சவம் முடிந்து விடையாற்றிக்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. வசந்த மண்டபத்தில் பிரமாதமாக அலங்கரிக்கப்பட்டிருந்த சுவாமிக்குப் பக்தர்களின் அருச்சனை நடந்தது. நாங்களும் தரிசனம் செய்துவிட்டுக் கோயிலைச் சுற்றிப் பார்த்தோம். பிரமன் தலையைக் கொய்த வீரம் நடந்த அட்ட வீரத்தலங்களிலொன்று கண்டியூர். ஆகையால் சுவாமியின் பெயர் வீரட்டேசுவரர். பிரமன் தலை கிள்ளியது ஒரு தோஷமாகையால் உடனே விஷ்ணு வந்து அந்த தோஷத்தைப் போக்கினர் என்று ஐதிகம். ஆகையால்,

கண்டியூரில் உள்ள பெருமாள் கோயிலும் மிக விசேஷமான ஸ்தலம் என்று கருதப்படுகிறது.

சுந்தரமூர்த்தி நாயனார் வாழ்க்கையில் அவரோடு ஒத்த பண்பும், ரசிகத்தன்மையுமுள்ள நண்பர் ஒருவர் இருந்தார். அவர் தான் கேரளக்கரையில் திருவஞ்சைக்களம் என்ற கொடுங்களூரில் அரசாண்ட சேரமான் பெருமாள் என்பவர். இவர் சுந்தரரைச் சந்தித்ததும், நட்புக் கொண்டதும், இறுதியில் இருவருமே ஒன்றாகச் சிவலோகம் போனதும் ஆகிய கதைகளைப் பின்னாலே சொல்வோம். கண்டியூரில் நாம் இருக்கும்போது, இங்கே நடந்த ஒரு சம்பவத்தை மாத்திரம் சொல்ல வேண்டும். சுந்தரரும் சேரமானும் பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு கண்டியூருக்கு வந்தார்கள். இங்கிருந்து மறுகரையைப் பார்க்கும் போது திருவையாற்றுப் பஞ்சநதீஸ்வரப் பெருமானின் கோயில் தெரிந்தது. இந்நாட்களில் போல் அப்போது ஆற்றைக் கடக்க பாலம் கிடையாது. காவிரி வெள்ளம் பிரவாகமாக ஓடுகிறது. ''திருவையாற்றுக்குப் போய்த் தரிசனம் செய்ய வேண்டும் என்று ஆர்வமுடையேன். எப்படித்தான் போவது?'' என்று கேட்கிறார் சேரமான். ஆறு பெருகி இருகரையும் மோதிக் கொண்டிருக்கிறது. தோணியோ படகோ ஒன்றும் இவர்கள் வந்த சமயத்தில் காணப் படவில்லை. பார்த்தார் சுந்தரர். ஒரேயொரு வழிதான் அவருக்குத் தெரியும். தம்பிரான் தோழரல்லவா? அழைத்தார் சுவாமியை:

கதிர்க்கொள் பசியே ஒத்தே நான் கண்டேன் உம்மைக்காணுதேன்
எதிர்த்து நீந்த மாட்டேன் நான் எம்மான் தம்மான் தம்மானே,
விதிர்த்து மேகம் மழை பொழிய வெள்ளம் பரந்து நுரை சிதறி
அதிர்க்கும் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ

அடிகளோ! அடிகளோ! என்று ஓலமிட்டார் ஆரூரர். திருவையாற்று சுவாமியின் காதில் இந்த ஓலம் கேட்டது. உடனே அவர் தமது மைந்தன் விநாயகரை அழைத்து எதிர் ஓலம் கொடுக்குமாறு பணித்தார். ஓலம் என்றூர் விநாயகர். காவிரியின் ஓட்டத்தில் ஒரு தடை. மேற்கே நீர் சுவர்போல் நின்றது. கிழக்கே ஓடிய நீர் வற்றி மணற்பரப்பாகக் கிடந்தது. சுந்தரரும் சேரமானும், ஆனந்தக் கண்ணீர் பெருக, மயிர்ப்புளகம் கலக்க, தலைமேற் கைகுவித்து வணங்கினர். ''தங்கள் பெருமையை என்ன வென்று சொல்வது'' என்று சுந்தரரை நோக்கிப் பாராட்டினார் சேரமான். அதற்கு சுந்தரர், ''இது எனக்காக வல்ல. உம்பர்நாதன் உமக்களித்த வழி இது'' என்று சொன்னார். இருவரும் நடந்து ஆற்றைக்

கடந்து திருவையாற்றில் வணங்கினார்கள். இவர்கள் கடந்த மறுசணமே காவிரியாறு வழக்கம்போல் பெருகி ஓடத் தொடங் கியது. திருவையாற்றுக் கோயிலின் தெற்குக் கோபுர வாசலில் உள்ள விநாயகரை ஓலமிட்ட விநாயகர் என்று அழைக்கிறார்கள்.

கண்டியூரிலிருந்து திருவையாற்றைப் பார்க்கும்போது காவிரியாற்றின் பெருவெள்ளத்தின் எதிரில் அழகான காட்சியாகத் தானிருக்கிறது. ஆனல் சுந்தரமூர்த்திக்கு ஆற்றின் நீரைத் தடுத்துக் கொடுத்த கடவுள் சாமானியமான நமக்குமா வழி செய்யப்போகிறார்? நல்ல வேளையாக நமக்கு இப்போது பாலம் கட்டிவைத்திருக்கிறார்கள். அந்தப் பாலத்தைக் கடந்து திருவை யாற்றுக்குப் போய்விடலாம். அப்படிப் போவதற்கு ஆயத்தப் படுத்திக் கொண்டிருக்கும் போது எங்கள் காரியதரிசி வேணு ஞாபகப்படுத்தினர்: ''திருப்பூந்துருத்தியிலே அப்பரும் சம்பந்தரும் சந்தித்த கதையுண்டு. அந்தத் திருப்பூந்துருத்தி காவிரிக்குத் தென்கரையிலல்லவா இருக்கிறது. நீங்கள் திருவையாற்றுக்குப் போனல் மறுபடியும் திரும்பிவரவேண்டுமே,'' என்றார். அதுவும் சரிதான். திருப்பூந்துருத்தி கண்டியூரிலிருந்து நேர் மேற்கே இரண்டு மைல் தூரத்திலிருக்கிறது. ஆகையால் வண்டியை அந்தப் பக்கம் திருப்பி விட்டோம்.

திருமறைக்காடு என்ற வேதாரணியத்திலிருந்து மதுரைக்கு ஞானசம்பந்தர் புறப்பட்ட சம்பவத்தை முன்பே சொல்லியிருந் தோம். அவரை வழியனுப்பிய நாவுக்கரசருக்கு ஒரே கவலை. இந்தக் குழந்தை சமணரின் கையில் அகப்படாமல் பத்திரமாய்த் திரும்பி வந்துவிடவேண்டும் என்று போகுமிடமெல்லாம் இறைவனே வேண்டிக் கொண்டிருந்தார். மதுரை சென்ற ஞானசம்பந்தர் வெற்றியோடு திரும்பிப் பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு,அப்பரைக் காணவேண்டுமென்ற ஆசையோடு வந்தார். இவர்களிருவரும் சந்தித்தது இந்தத் திருப்பூந்துருத்தியில் தான்.

ஞானசம்பந்தர் வெற்றி முழக்கத்தோடு சிவிகையில் வரும் போது ஆயிரக்கணக்கான அடியார்கள் பின்தொடர்ந்தார்கள். நாவுக்கரசர் இதைக் கேள்வியுற்று, மற்றவர்கள் கவனிக்காதவாறு நடந்து வந்து சம்பந்தரின் சிவிகையில் ஒரு தோள்கொடுத்துச் சுமந்து வந்தார்! தாம் மதுரையில் பெற்ற வெற்றியைச் சொல்ல வேண்டுமென்று, தம்மைப் பற்றிக் கவலை கொண்டிருந்த அப்பரையே தேடி வந்த சம்பந்தர்,''அப்பர் எங்கிருக்கிறார் என்று யாராவது விசாரித்துப் பார்த்தீர்களா?'' என்று தமது பரிவாரத்தி

ஞள்ளவர்களிடம் கேட்டார். கீழே சிவிகை தாங்கிவரும் அப்பர் உடனே, ''உம்முடைய திருவடியைத்தாங்கி வரும் பெருவாழ்வு பெற்று இங்குதான் இருக்கிறேன்!'' என்று பதிலளித்தார். சட்டென்று சிவிகையிலிருந்து குதித்த சம்பந்தர் அப்பரை வணங்க, அப்பர் சம்பந்தரை வணங்க, இருவரும் தந்தையும் பிள்ளையும் போன்ற அன்புப்பெருக்கில் திளைத்தனர். இந்த நிகழ்ச்சிதான் சப்த ஸ்தானங்களில் ஒன்றுகிய திருப்பூந்துருத்திக்கு அழியாத பெருமையைக் கொடுத்துள்ளது. கோயில் மிக அழகாகத் திருப்பணி செய்யப்பட்டிருக்கிறது. அப்பரின் உழவாரப் பணியில் ஈடுபட்ட பல அன்பர்கள் இங்கே அப்பர் தேவாரப் பாடல்களைச் சுவரிலே தீட்டி வைத்துள்ளார்கள். திருப்பூந்துருத்தியில் எழுந்தருளியிருக்கும் பொய்யிலியார் என்ற மூலவரையும் நாவுக்கரசரையும் வணங்கிக் கொண்டு திரும்பிக் கண்டியூர் வழியாக வந்து காவிரிப்பாலத்தைக் கடந்து திருவை யாற்றையடைந்தோம்.

39. மூத்த திருநாவுக்கரசு

சப்த ஸ்தானங்களுக்கும் தலைமை ஸ்தானமாகத் திகழும் திருவையாற்றின் பஞ்சநதீஸ்வரர் கோயிலின் அழகே ஒரு தனி. வானளாவிய இரு பெருங்கோபுரங்கள், ஐந்து பிராகாரங்கள். கிழக்குக் கோபுரவாயிலில் நுழைந்தவுடன் இடது பக்கத்தில் தக்ஷிண கைலாசம், வலதுபுறம் உத்தரகைலாசம் என்று இரு சந்நிதிகள். தர்மசம்வர்த்தனி அல்லது அறம் வளர்த்தநாயகி என்ற அழகான பெயரில் அம்மனுக்குத் தனி ஆலயம்.

திருநாவுக்கரசு நாயனார் சரித்திரத்தில் ஒரு முக்கியமான பகுதி அவர் பரமசிவனைத் தேடிக் கைலாய யாத்திரை சென்றது. வடக்கே திருக்காளத்தியைத் தரிசித்தபின் அவருக்கு கைலையங் கிரியிற் போய் நேரே சிவனை வணங்கவேண்டுமென்ற ஆர்வம் மேலிட்டது. சம்பந்தரைப் போல முத்துச்சிவிகை கிடையாது. வண்டி வாகன வசதியுமில்லை. கால் நடையாகவே பல நகரங்களை யும் கடந்து காசிக்கு வந்தார். அங்கே விசுவநாதரை வணங்கி விட்டுத் தம்முடன் வந்த அடியார்களை அங்கேயே இருக்கச் சொல்லித் தாம் மாத்திரம் தனியாகக் கைலாயத்துக்குப் புறப் பட்டார். ஆரம்பத்தில் காட்டில் அகப்பட்ட கிழங்கு, கனி முதலியவற்றைப் பறித்து உண்டு நடந்தார். பின்னர் இமயமலைச் சாரலில் கற்பாறைகளே மிகுதியான இடத்தில் கிழங்கும் கனியும் அகப்படவில்லை. இருந்தும் பசி தாகத்தைப் பொருட்படுத்தாமல் இறைவன் நாமத்தையே செபித்துக் கொண்டு நடந்தார். ஆனால் எவ்வளவுதான் நடக்க முடியும்? கால்கள் தள்ளாடின. கைகளை ஊன்றிக்கொண்டு தவழ்ந்து சென்றார். அதுவும் முடியவில்லை. கற்பாறைகளில் உடம்பால் ஊர்ந்து சென்றார். அங்குமெல்லாம் ஒரே காயம். மேலே செல்ல அவரால் இனி முடியாதென்றவுடன் விழுந்து அழுதார். அந்தச் சமயத்தில் ஒரு முனிவர் வேடத்தில் இறைவனே தோன்றினார். பக்கத்திலே குளிர்ந்த நீரோடு ஒரு தடாகத்தையும் தோன்றவைத்தார். நாயனார் சிறிது கண்ணைத் திறந்து பார்க்கவும், முனிவர், ''உடம்பு அழியும்படி இந்தத் தனிக் காட்டில் நீர் வந்ததென்ன?'' என்று கேட்டார். அப்பர் ஈனக்

குரலில், ''வடகயிலையில் வீற்றிருக்கும் இறைவனையும் தேவியையும் காணத் தேடி வந்தேன்'' என்றார். முனிவர் சிரித்துக் கொண்டு, ''என்ன ஆசை இது! கயிலையங்கிரியைத் தேவர்களே காண முடியாது. சாதாரண மனிதர் போய்ப் பார்க்க முடியுமா? இது வீண் முயற்சி. ஆகையால், நீர் திரும்பிப் போவதே நல்லது'' என்றார். ''கயிலாயத்தைப் பார்க்காமல் இந்த உடல் திரும்பாது. நான் இங்கேயே செத்துமடிவேன்'' என்றார் அப்பர். அவர் கண்கள் மூடின. வாயில் பஞ்சாட்சர ஜபம் நடந்தது. அந்தச் சமயத்தில் அங்கு வந்த முனிவரும் மறைந்தார். உடனே அசரீரி, ''திருநாவுக்கரசனே, எழுந்திரு'' என்று கூவியது. கண்விழித்த நாவுக்கரசர் தம் உடலிலிருந்த காயங்கள் நீங்கப்பெற்று, பசிதாகம் இளைப்பு எல்லாம் போன புனித உணர்ச்சியுடன் எழுந்தார். இறைவனின் திருவிளையாடலை எண்ணிப் பரவசமானார். ஆனாலும் கயிலைக் காட்சியைக் காணும் விருப்பத்தைக் கைவிடவில்லை. ''அண்ணலே, எனை ஆண்டு கொண்டருளிய அமுதே. விண்ணிலே மறைந்தருள்புரி வேதநாயகனே, கண்ணினுல் திருக்கயிலையில் இருந்த நின் கோலத்தைக் காண்பிக்க மாட்டாயா?'' என்று கேட்டார். உடனே இறைவன் பதிலளித்தார். ''இங்குள்ள குளத்தில் முதலிலே முழுகி எழுந்திரும். பின்னர் திருவையாற்றில் எமது திருக்கோலத்தைக் காணலாம்'' என்றார். நாவுக்கரசரும் மகிழ்ந்து அங்கிருந்த வாவியில் முழுகினார். முழுகி எழுந்தவர் கண்ட காட்சி அவரை அதிசயிக்க வைத்தது. வடக்கே எங்கோ ஒரு காட்டில் குளத்தில் முழுகியவர் இங்கே நன்முகத் தெரிந்த தலமாகிய திருவையாற்றின் பிராகாரத்திலுள்ள திருக்குளத்தில் தாமிருக்கக் கண்டார். மேலே பார்த்தால் கயிலையங்கிரி தெரிகிறது. பார்வதி பரமேஸ்வரர் தமது பரிவாரங்களுடன் வீற்றிருக்கின்றனர். இக்காட்சியைக் கண்ட நாவுக்கரசர் உள்ளமுருகிப் பாடினார்.

மாதர்ப்பிறைக் கண்ணியரனே மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதும் சுவடுபடாமல் ஐயாறடைகின்ற போது
காதன் மடப்பிடியோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்

தெற்குப் பிராகாரத்திலுள்ள கோயில் தக்ஷிண கைலாசம் என்பதுதான் அப்பருக்குக் காட்சி கொடுத்த இடம் என்று வணங்கப்படுகிறது. ஆடி அமாவாசை தினத்தன்று திருவையாற்றில் கயிலைக்காட்சி விழா விமரிசையாக நடக்கிறது. தக்ஷிண கைலாசம் என்ற இந்தக் கோயிலைக் கட்டியது ராஜராஜசோழனின் மனைவி பஞ்சவன்மாதேவி.

நந்திதேவருக்கு இங்கே ஒரு முக்கிய ஸ்தானம் கொடுக்கப் பட்டிருக்கிறது. சூரிய புஷ்கரணி தீர்த்தம், அமிர்த்த நதி என்ற சந்திரபுஷ்கரணி, கங்காதீர்த்தம், பாலாறு, நந்திதீர்த்தம் என்று ஐந்து நதிகள் பூமிக்கடியில் வந்து புஷ்ய மண்டபத்துக்கு மேற்குப் பக்கத்தில் காவிரியுடன் கலக்கிறதாக ஐதிகம். இந்தப் பஞ்ச நதிகள் காரணமாகவே ஐயாறு என்று இந்த ஸ்தலத்துக்குப் பெயர் வந்தது. நந்திகேஸ்வரனுக்கு திருமழபாடியில் வைத்து ஐயாறப்பர் பெரிய திருமண விழா நடத்தினர். இந்தத் திருமணத்துக்கு சப்த ஸ்தானங்களும் பலவகையில் உதவி புரிந்தன. திருப்பழனத்திலிருந்து பழங்கள் முதலியன வந்தன. திருச்சோற்றுத்துறையிலிருந்து உணவு வகைகள் வந்தன. திருவேதிக்குடியிலிருந்து வேதியர்கள் அனுப்பப் பட்டார்கள். கண்டியூரிலிருந்து மகர கண்டிகை முதலான ஆபரணங்களெல் லாம் வந்தன. திருப்பூந்துருத்தியிலிருந்து புஷ்ப வகைகள் வந்தன. திருநெய்த்தானத்திலிருந்து நெய்முதலிய பொருள்கள் வந்தன. இம்மாதிரியாக ஏழு ஸ்தானங்களும் உதவி செய்த கல்யாணத் துக்காக நந்திதேவரும் ஐயாறப்பரும் ஏழு தலங்களுக்கும் எழுந்தருளி நன்றி கூறுவதே சப்தஸ்தான விழா என்று சொல்லப் படும். ஏழு கோயில்களிலுமிருந்து பூம்பல்லக்குகள் ஒன்றுகச் சேர்ந்து சித்திரை மாதத்தில் திருவையாற்றில் சந்திக்கும்போது காணும் காட்சி பிரமாதமாயிருக்கும் என்று கண்டவர்கள் சொல் வார்கள். வழியெங்கும் தண்ணீர்ப்பந்தலும் மற்றும் வசதிகளும் செய்து வைத்திருப்பார்கள். திருவையாற்றைச் சுற்றியுள்ள கிராமங்களெல்லாம் திருவிழாக் கோலத்தில் ஆரவாரிக்கும். திருவையாற்றில் மூன்றுவது பிராகாரத்தில் நந்திதேவரின் அடிச்சுவடு காணப்படுவதாகச் சொல்வார்கள். சப்தமூர்த்திகளும் திருவையாற்றில் ஒருங்கே திரும்பி வந்ததும் பிராகாரத்தில் மௌனப்பிரதட்சணம் நடக்கும்.

இங்குள்ள தேவி தர்மசம்வர்த்தனி முப்பத்திரண்டு வகையான தர்மங்களைச் செய்து வந்தாராம். அதில் ஒன்று அவர் இரண்டேயிரண்டு படி அரிசியை வைத்து அன்னபூரணியாக உலகிலுள்ள மக்களுக்கெல்லாம் பசியைப் போக்கியது. நின்ற திருக்கோலத்தில் அம்மன் இங்கு மிக்க எழில் வாய்ந்த உருவம்.

திருவையாற்றுக்கு வந்த இடத்தில் சங்கீதமேதை தியாக ராஜசுவாமிகள் வாழ்ந்த வீட்டையும் அவர் சமாதியையும் தரிசிக்காமல் போகலாகாது என்று நாங்கள் அவற்றையும் பார்த்தோம். காவிரியாற்றங்கரையில் கட்டப்பட்டிருக்கும் சமாதியின் முன்னர் வெண்மணல் பரப்பிய மைதானம் உண்டு. இதிலேதான் ஆண்டு தோறும் பந்தல் அமைத்து தியாகராஜ

உற்சவம் கொண்டாடுகின்றனர் சங்கீத வித்துவான்கள். சமாதியிலுள்ள தியாகராஜ சுவாமியின் உருவத்துக்கு வணக்கம் செலுத்திவிட்டு நாங்கள் மற்றைய இரு சங்கீத மூர்த்திகளான சியாமா சாஸ்திரி, முத்துசாமி தீக்ஷிதர்களுடைய ஞாபகச்சின்னங்களையும் தரிசித்துக்கொண்டு திருப்பழனத்தை நோக்கிப் புறப்பட்டோம்.

திருப்பழனமும் சப்தஸ்தானங்களில் ஒன்று. நாவுக்கரசர் இந்த ஸ்தலத்துக்கு வந்து சுவாமி தரிசனம் செய்து செல்லும்போது ஓரிடத்தில் ''திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தர்'' என்று பெயர்ப் பலகை போட்டிருக்கக் கண்டார். ஏராளமான மக்கள், வழிப் போக்கர்களும் மற்றும் ஸ்தல யாத்திரை செய்பவர்களும் அங்கு நிரம்பியிருந்தனர். அப்பர் இதைப் பார்த்தவுடன் ''இது எந்த ஊர்?'' என்று விசாரித்தார். அங்கு நின்றவர்களில் ஒருவர், ''இதுதான் திங்களூர். இங்கே அப்பூதியார் என்ற வேதியர் ஒருவர் இருக்கிறார். அவருக்கு இப்படித் தண்ணீர்ப்பந்தல் வைத்துப் பணி செய்வதே பொழுதுபோக்கு. திருநாவுக்கரசர் என்ற பெயர்தான் அவருக்கு எல்லாம். இங்கே குளம், சோலை, சாலை, வீட்டிலுள்ள பொருள்கள் எல்லாமே திருநாவுக்கரசர் மயம்'' என்றார்கள். ''அவர் எங்கிருக்கிறார்? அவரை நான் பார்க்கலாமா?'' என்று கேட்டார். ''அவர் இங்கே பக்கத்தில் தானிருக்கிறார். இப்போது தான் வீட்டுக்குப் போகக் கண்டோம்'' என்றனர். பின்னர் அவர்களில் ஒருவர் வழிகாட்ட நாவுக்கரசர் அப்பூதியார் வீட்டையடைந்தார்.

யாரோ ஒரு சிவனடியார் தமது வீட்டு வாசலில் வந்தார் என்று கேட்டவுடன் அப்பூதியார் வெளியே வந்தார். அவரைப் பார்த்து நாவுக்கரசரே முதலில் வணங்கினார். அப்பூதியார் உடனே எதிர் வணக்கம் செய்து, ''சிவனடியார் என்மனைக்கு எழுந்தருளியது என் தவம் செய்த பாக்கியம்தான். சுவாமிகள் எங்கிருந்து வருகிறதோ?'' என்று கேட்டார். அதற்கு அப்பர், ''நாம் திருப்பழனத்தில் இறைவனைச் சேவித்து வருகிறோம். வரும் வழியிலே நீர் வைத்த தண்ணீர்ப்பந்தரைக் கண்டும், மற்றும் நீர் செய்யும் அறங்களைக் கேட்டும் இங்கு வந்தோம். இந்தத் தண்ணீர்ப்பந்தருக்கு உம்முடைய பெயரை எழுதாமல், வேறொரு பெயர் எழுதிய காரணமென்ன?'' என்று கேட்டார். ''நன்றுகச் சொன்னீர். சமணர்களின் கொடுமைகளை எதிர்த்துச் சைவத்தை நிலைநாட்டிய அந்தப் பெரியாரை விட என் பெயர் சிறந்ததா? கல்லையே மிதப்பாகக் கொண்டு கரையேறிய திருநாவுக்கரசர் மேன்மையை நீர் அறியீர் போலும். மங்கலமான சிவவேடத்திலிருக்கும் நீரே இப்படிக் கேட்கலாமா? உமக்கு எந்த ஊர்? உமது

பெயர் தெரியலாமா?'' என்று கேட்டார் அப்பூதியார். அப்பர் சொன்னார்: ''பிறதுறையினின்றும் கரையேறும்படி சிவபெருமான் சூலை நோயைத் தந்து ஆட்கொள்ள, அதனைத் தெரிந்துகொள்ள உணர்வில்லாத அந்தச் சிறுமையுடையவன்தான் யான்'' என்றார். அப்பூதியார் கைகள் சிரமேற்குவிந்தன; கண்ணீர் பொழிந்தது; நாக் குழறிற்று. உடம்பெல்லாம் மயிர்க்கூச்செறிந்தது. அப்படியே தரையில் வீழ்ந்து நாவுக்கரசரின் பாதங்களைப் பற்றிக் கொண்டார். நாவுக்கரசர் அவரைத் தூக்கி நிறுத்தியதும், அப்பூதியார் கொண்ட ஆனந்தத்தைச் சொல்ல முடியாது. ஏகலைவனைப் போல, நாவுக்கரசரைக் காணுமலே அவரைத் தம் குருவாகக் கொண்டு வணங்கி வந்த அவர் இப்போது அந்தக் குருவையே நேருக்கு நேர் கண்டதும் எல்லையற்ற மகிழ்ச்சி கொண்டார். அன்று தமது இல்லத்திலேயே உணவருந்திச் செல்லுமாறு வேண்ட, திருநாவுக்கரசரும் ஒப்புக்கொண்டார்.

அப்பூதியாரும் மனைவியாரும் தமக்குக் கிடைத்த பெரும்பேறு இதென்று பெருமை கொண்டு அறுவகையுண்டி சமைத்தனர். நாவுக்கரசருக்கு உணவு படைக்க ஏற்ற பெரிய வாழைக் குருத்தைக் கொண்டு வரும்படி தமது மக்களுக்குள்ளே மூத்த திருநாவுக்கரசிடம் சொல்லியனுப்பினர். எல்லாப் பிள்ளைகளுக்கும் திருநாவுக்கரசுதான் பெயர். மூத்த திருநாவுக்கரசு வாழைத் தோட்டத்தினுள் சென்று, நல்ல செழிப்பான வாழையில் பழுது படாதிருந்த பெரிய குருத்தை வெட்டி எடுக்கும் போது அதனுள் ளிருந்த ஒரு கொடிய பாம்பு அவன் கையில் கடித்துச் சுற்றிக் கொண்டது. பையன் பதைபதைத்துப் பாம்பை உதறி எறிந்து விட்டு, விஷம் விறுவிறுவென்று ஏறிக்கொண்டிருக்கவும், ''நான் மயங்கிவிழுமுன்னர் இலையைக் கொண்டு போய்ச் சேர்ப்பிக்க வேண்டும்'' என்ற ஆவலுடன் ஓடிப்போய்த் தாயார் கையில் கொடுத்துவிட்டு அப்படியே தரையில் மூர்ச்சையாய் விழுந்தான். தாயும் தந்தையும் திகிலடைந்து உற்றுநோக்கினர். கையில் காயம். அதிலிருந்து இரத்தம் கசிகிறது. உடம்பு கருமை கொள்கிறது. மூச்சும் நின்றுவிட்டது. விஷம் தீண்டி இறந்துவிட்டான் என்பதை உணர்ந்தனர். அந்தச் சமயத்தில் அவர்கள் என்ன செய்ய முடியும்? எதிர்பாராத விதமாகத் தமது குரு வந்திருக் கிறார். அவருக்கு எவ்வித துன்ப உணர்ச்சியும் ஏற்படாதவாறு அவர் திருவமுது செய்து போவதுதான் முதல் கடமை என்று தீர்மானித்து இறந்த பையன் உடலை ஒரு பாயில் சுற்றிப் பின் புறத்தில் வைத்து விட்டு வந்து, ஒன்றும் நடவாதது போல் நடித்துக் கொண்டு நாவுக்கரசரைப் பார்த்து, ''தேவரீர் திருவமுது செய்ய எழுந்தருளுவீர்'' என்றார்கள். அப்பர் எழுந்து,

கைகால் கழுவிக்கொண்டு உட்காரும் போது யாவருக்கும் திருநீறு கொடுத்தார். பிள்ளைகளை அழைத்துக் கொடுக்கும்போது, ''எங்கே உங்கள் மூத்த பிள்ளை? அவனையும் அழையுங்கள்'' என்றார். தாய் தந்தையருக்கு எப்படியிருக்கும் அப்போது? ''அவன் இப்போது உதவான்'' என்றனர். அதுகேட்ட நாவுக்கரசர், ''என்ன சொன்னீர்கள்? உண்மையைச் சொல்லுங்கள்'' என்று வினவினார். அப்பூதியார் யோசித்தார். இப் பெரியவரிடம் உண்மையைச் சொல்லாமல் மறைப்பது சீலமல்ல என்று கருதி, தம்மகன் பாம்பு தீண்டி இறந்த செய்தியைச் சுருக்கமாய்ச் சொல்லி விட்டார். அப்பருக்கோ தாங்க முடியாத வருத்த முண்டாயிற்று. ''என்ன காரியம் செய்தீர்? இம்மாதிரி யாராவது நடந்து கொள்வார்களா?'' என்று கடிந்து, அந்தப் பிள்ளையின் உடலைத் திருக்கோயிலின் முன் கொண்டு வரச் செய்து, சிவபெருமானை நோக்கி உள்ளம் உருகப் பாடினார்.

ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர் வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவர் ஊர்வது தானே

இங்ஙனம், ஒன்று, இரண்டு, மூன்று என்று பத்துப் பாடல் கொண்ட திருப்பதிகத்தைப் பாடியதும் பையன், மூத்த திருநாவுக்கரசு, உறக்கத்திலிருந்து விழித்தவன் போல் எழுந்து நின்றான். எதிரே நாவுக்கரசு நாயனார் நிற்பதைக் கண்டு அவர் பாதங்களில் விழுந்து வணங்கினான். அப்பர் அவனுக்குத் திருநீறு கொடுத்து ஆசீர்வதித்தார். பார்த்து நின்ற தாய் தந்தையரும் நாவுக்கரசர் திருவடிகளை வணங்கியபின், இந்தப் பெரியார் உணவருந்துவதற்குத் தடையாக இச்சம்பவம் நடந்து விட்டதே என்று கவலை கொண்ட முகத்துடன் நிற்கும் போது நாவுக்கரசரே முன்வந்து, ''இனி வாருங்கள், வீட்டில் போய் யாவரும் உணவருந்தலாம்'' என்றழைத்தார். அப்பூதியாருக்கும் அவர் மனைவியாருக்கும் சொல்லொணா ஆனந்தம். முன்னம் அவர் வீட்டுக்கு வந்த சமயத்திலும் பார்க்க இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் நாவுக்கரசை அழைத்துக் கொண்டு அவர்கள் மனையில் சென்று, யாவருமே ஒன்றியுட்கார்ந்து உணவருந்தினர்.

அப்பூதியாரின் இந்தக் குருபக்தியை மெச்சிய நாவுக்கரசர் அங்கிருந்து பழையபடி திருப்பழனத்துக்குப்போய், ''சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே'' என்று குயில்களையும் நாரைகளையும், பூவைகளையும் மற்றும் பறவைகளையும் நோக்கி இறைவனுக்குத் தூது சொல்லியனுப்புவது போல் மிக அருமை

யான பதிகத்தைப் பாடி வணங்கிவிட்டு மேலும் யாத்திரையில் தொடர்ந்து சென்றார்.

திருப்பழனத்திலிருந்து திங்களூர் ஒரு மைல் தூரம் தான். கச்சாரோடு. திருவையாற்றுக்கும் கணபதி அக்கிரகாரத்துக்கும் செல்லும் பெரிய சாலையிலிருந்து வடக்கே சிறுபுலியூரிலிருந்து பிரிந்து செல்லும் கச்சாரோடில் மழையில்லாத சமயமாகையால் மோட்டார் போகக்கூடியதாயிருந்தது. இருபக்கமும் பழனம் என்ற ஊர்ப்பெயருக்கேற்றவாறு கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒரே நெல்வயல்கள். பயிரும், கதிரும், அறுவடையுமாக மூன்று நிலைகளையும் அங்கு காணக்கூடியதாயிருந்தது. திங்களூரையடையும் போது முதலில் தெரிந்தது பெருமாள் கோயில். அங்கிருந்து கிழக்குத் திசையில் சிறிது தூரத்திலிருக்கிறது சிவன் கோயில். நாங்கள் போனசமயம் காலை ஒன்பது மணிக்கெல்லாம் கோயில் நடை திறந்திருக்குமென்றுதான் நம்பிச் சென்றோம். ஆனால் வெளிவாயிற் கதவு பூட்டியிருந்தது. தென்புறத்திலுள்ள திடலில் ஊள்ளூர்க்காரர் யாரோ எருமையும் எருதும் பூட்டி போர் அடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் நாங்கள் கோயிலைப் பார்க்க வந்திருக்கிறோமென்பதைத் தெரிந்து கொண்டு, ''குருக்கள் வர பத்துமணியாகும்'' என்றார். நாமோ வந்தாகி விட்டது, இனித் திரும்பிப்போய் வருவதிலும் பலனில்லை. ஒரு மணி நேரம்தானே, பரவாயில்லையென்று சொல்லி அங்கேயே ஒரு மரத்தின் கீழ் உட்கார்ந்தோம். நண்பர் சிட்டி அண்ணாந்து பார்த்தார். அது ஒரு பூவரசு மரம். உடனே அவரது கற்பனை வேலை செய்தது. ''ஐயா திருநாவுக்கரசரே! நாமிருப்பதும் அரசின் கீழ்த்தான். பூவரசு! முன்பு இது திருநாவுக்கரசு மரம் என்று தான் இந்த ஊரில் வழங்கியது. யாரோ வழிப்போக்கர் பூக்கள் நிறைந்திருப்பதைக் கண்டு பூவரசு என்று பெயரை மாற்றி விட்டார்கள்'' என்றார்! அப்பூதியடிகளின் ஊராச்சே. எல்லாம் திருநாவுக்கரசு மயமாயிருந்ததை சிட்டி ஞாபகப்படுத்தினார். வழக்கமாக இந்த யாத்திரையில் அவர் என்னை சேக்கிழார் என்றே பெயர் வைத்தழைத்து வந்தவர் இப்போது பூவரசு மரத்தின் கீழ் உட்கார்ந்திருந்ததும் திருநாவுக்கரசரே என்றழைக்க ஆரம்பித்துவிட்டார்!

ஒரு மணி நேரம் காத்திருந்தும் குருக்களைக் காணவில்லை. ஒரு ஐயங்கார் மாது வயல் வேலைக்காரரோடு அந்தப்பக்கம் வந்தவர் எங்களைப் பார்த்துவிட்டு, ''குருக்களையா பார்த்திருக் கிறீர்கள்? வயசான காலத்திலே மெதுவாகத்தான் வருவார். அதிகம் பேச்சுக் கொடுத்துவிடாதேங்கோ, அப்புறம் அவரை

நிறுத்த முடியாது!'' என்று சிரித்துக்கொண்டே எச்சரிக்கை செய்துவிட்டுப் பக்கத்தில் வேலை செய்பவர்களை மேற்பார்வை பார்க்கச் சென்று விட்டார். மணி பத்து, பதினொன்று, பன்னிரண்டு ஆகிவிட்டது. எங்களுக்கோ கவலை. இனிமேல் அவர் வராமல் விட்டுவிடுவாரோ என்று சந்தேகித்து, களத்தில் நின்ற ஒருவரிடம் ''குருக்கள் இன்னும் வரவில்லையே. ஒரு வேளை இன்று வரமாட்டாரோ?'' என்று கேட்டோம், ''மழையோ வெயிலோ காற்றோ, அந்த மனுஷர் ஒரு நாளைக்கு ஒரு தடவை வராமல் இருக்கவே மாட்டார். வயசாகிவிட்டது. மெதுவாகத் தான் வருவார். வழக்கமாகப் பத்துப் பத்தரைக் கெல்லாம் வந்துவிடுவார். இன்று மாத்திரம் தாமதமாகி விட்டது'' என்று சொன்னவர் தெற்கே நெடுந்தூரத்துக்கப்பால் தெரிந்த சோலையைக் காட்டி,'' அதோ அதுதான் திருப்பழனம் அக்கிரகாரம். அங்கிருந்துதான் அவர் வரப்புக்களிலே நடந்து வரவேணும். அதோ ஒரு உருவம் தெரிகிறது பாருங்கள்! குடை பிடித்துக் கொண்டு மெதுவாக ஊர்ந்து வருகிறது. அதுதான் குருக்கள். கொஞ்சம் இருங்கள், வந்துவிடுவார்'' என்று நம்பிக்கையோடு சொல்லி விட்டுக் களத்தில் வைக்கோலைப் பிரித்துப்போட்ட பையன்களைப் பார்த்து, ''அடே! குருக்கள் வர்ரார், வழியிலே வைக்கோலைப் போடாமல் பாதையை விட்டுக் குவியுங்கோடா'' என்று எச்சரிக்கை செய்தார். ''குருக்கள் ரொம்ப நல்லவர், ஆனால், முன்கோபக்காரர். அவர் கோயிலுக்குள் செல்லும் பாதை சுத்தமாயிருக்க வேண்டும். உள்ளே வீதியைப் போய்ப் பாருங்கள். ஒரு மண்வெட்டி, கத்தி, உழவாரம் இப்படி ஆயுதங்களை வைத்துக்கொண்டு ஒவ்வொரு புல்லாக உட்கார்ந்து எடுத்து வீதியைச் சுத்தம் செய்வது அவரது வேலை. கோயிலில் வழக்கமான பூசை முடிந்ததும் சும்மா இருக்கமாட்டார். பூச்செடிக்குத் தன் கையாலேயே தண்ணீர் இறைத்து வார்ப்பார். வீதியைச் சுத்தம் செய்வார். பெருக்குவார். பொழுது போவதே தெரியாது. சில சமயங்களில் பத்து பதினொரு மணிக்கு வருபவர் நாலு ஐந்து மணியாகிவிடும் அவர் வீட்டுக்குப் போக'' என்று குருக்களைப் பற்றி விளக்கினார் களத்தில் நின்ற அந்த விவசாயி.

குருக்கள் வந்து சேர்ந்தார். ஒரு கையில் குடை. அதே கையில் ஒரு துணிப்பை மறுகையில் ஒரு கோல். தூக்கிச் சொருகிய பஞ்சகச்சம். தோளில் கசங்கிய உத்தரீயம். அரையில் மற்றொரு கச்சம். ஆடி ஆடி நடந்து வருபவர் அவ்வப்போது நின்று, பாதையில் கிடக்கும் முள்ளை அல்லது கல்லைத் தம் கைத்தடியால் தட்டி அப்புறப்படுத்திக்கொண்டே வந்தார். கோயிலண்டை வந்ததும், வெளிவாசற் கதவைத் திறந்து என்னைப்

பார்த்து, ''வாங்கோ'' என்றார். எத்தற்கு வந்தேன் என்று அவரே கேட்கு முன் எனது யாத்திரையைப் பற்றி விவரமாகச் சொன்னேன். நண்பர்களைப் பார்த்தார். யோக்கியமானவர்கள் தான் என்று முடிவு செய்தபின் உள்ளே வாருங்கள் என்று அழைத்துச் சென்றார்.

குருக்கள் பேச ஆரம்பித்தார். எண்ணெய்க்குப்பி ஒன்றைக் கையில் எடுத்துக்கொண்டு அங்கங்கு தீபங்களில் எண்ணெய் வார்க்கிறார். பின்னர் நின்று பேசுகிறார். கோயில் நிர்வாகம், பூசைக்கிரமம், இக்காலத்தில் அருச்சகர் செய்யும் மோசடிகள், தர்மகர்த்தாக்கள் செய்யும் திருட்டுத்தனம், எல்லாம் அவருக்கு ஒரே கவலையைத் தருகிறது. ஒன்றிலிருந்து பேச்சு மற்றொன்றுக்குப் போகிறது. நான் உடனே திசைதிருப்ப எண்ணி, அப்பூதி அடிகளைப் பற்றிய கர்ணபரம்பரைக் கதையைக் கேட்கிறேன். ''அப்பூதி இந்த ஊரில் மனமுருகிப் பூஜை பண்ணியவர். யாருக்கும் குரு உபதேசம் தான் முக்கியம். அப்பூதிக்கும் ஒரு குரு வேண்டியிருந்தது. பூஜை பண்ணினார். சொப்பனத்தில் சுவாமி தோன்றி, திருநாவுக்கரசு வருவார் என்று சொன்னார். திருப்பழனத்திலிருந்து அப்பர் வந்தார்,'' என்றார். ''அந்தப் பாம்பு கடித்த கதை?'' என்று ஞாபகப்படுத்தினேன். ''ஓ அதுவா?'' கதை சொல்ல ஆரம்பித்தார். அந்தப் பெரியவரின் உணர்ச்சியை அடக்க முடியவில்லை. கண்களில் நீர் பெருகி விட்டது. திருவாரூரில் நமிநந்தியடிகளைப் பற்றிச் சொல்லும் போது பிச்சுக் குருக்கள் உணர்ச்சி வசப்பட்டது எனக்கு ஞாபகம் வந்தது. பக்தியிலேயே ஊறிப்போனவர்கள் உள்ளம் கலங்குவதில் ஆச்சரியமில்லை. சுவாமி சந்நிதிக்கெதிரே ஒரு நந்தி, பலிபீடம். அம்மன் சந்நிதிக் கெதிரே, தெற்கு வாயிலில் ஒரு நந்தியும் பலிபீடமும். இங்கே தான் மேற்குச் சுவரண்டை அப்பூதியும், மனைவியும், இரு பிள்ளைகளும் சிலைகளாகக் காட்சி தருகின்றனர். கிழக்குப் பக்கத்தில் அப்பர் விக்கிரகம். அங்குள்ள உற்சவ மூர்த்தி சோமாஸ்கந்தரை சில காலத்துக்கு முன்பு எவரோ திருடிக் கொண்டு போய்விட்டனராம். பின்னர் அகப்பட்டுக் கிடைத்தவுடன் குருக்கள் அதைத் தமது வீட்டிலேயே வைத்துப் பூஜை செய்து வருவதாகச் சொன்னார்.

கற்பூர தீபங்காட்டி விபூதிப் பிரசாதம் தருகிறார். ''இந்தக் காலத்திலே எந்தப் பிராமணன் கிரமமாகப் பூஜை செய்கிறான்? கோயில்களில் எங்கே நல்ல விபூதி கிடைக்கிறது? கோலமாவைத் தான் விபூதி என்று சொல்லிக் கொடுத்தனுப்பி விடுகிறார்கள்''. சந்தனக்கல் ஒன்றும் கட்டையும் ஒரு மூலையில் காணப்படுகின்றன.

கும்பாவிலிருந்து சந்தனம் கொடுக்கிறார். "சந்தனத்தின் பெருமையை எல்லாரும் மறந்து போய்விட்டார்கள். கோயில்களில் சந்தனம் வழங்குவதை இப்போது ஏனோ நிறுத்தி விட்டார்கள்" என்று குறைப்பட்டுக்கொண்டார் குருக்கள். இந்தக் கோயிலின் மூலவர் பெயர் கைலாசநாதர். நமது குருக்களின் பெயரும் கைலாசக் குருக்கள். சிறு வயது முதற் கொண்டே இந்தக் கோயிலில்தான் சுவாமி கைங்கர்யம். வயது எழுபத்து மூன்றாகிறது. அப்பூதியடிகள் பிராமணர். அவர் பிராமணரல்லாதவராகிய நாவுக்கரசரை உபசரித்த காரணத்தால் இங்குள்ள பிராமணர்கள், பெரும்பாலும் வைஷ்ணவர்கள், மேற்கே போய்க் குடியேறிவிட்டார்கள் என்றார் குருக்கள். மேற்கேயுள்ள பெருமாள் கோயில் பக்கத்திலேதான் அக்கிரகாரம். சிவன் கோயில் உள்ள இடத்தைக் கீழூர் என்பார்கள். "அவர்களுக்கு இது கீழ்" என்று சொல்லிச் சிரித்தார் குருக்கள்!

திருநாவுக்கரசரையும் அவர் உழவாரப் பணியையும் நினைத்துக் கொண்டோம். கைலாசக் குருக்களின் சாயல், விபூதி நிறைந்த நெற்றி, பக்தியிலேயே ஊறிப்போய் ஒடுங்கிய உடல், விபூதி சந்தனத்தில் இருக்கும் பற்றுதல், கோயில் வீதியையும் நந்தவனத்தையும் தன் சொந்தக் கையாலேயே சுத்தப்படுத்தி உழைக்கும் பாங்கு இவையெல்லாம் அந்த நாவுக்கரசரையே ஞாபகப்படுத்தின. ஓயாமல் பேசிக்கொண்டேயிருந்தார். வெகு நேரமாகி விட்டதால் நாங்கள் வேறு பல தலங்களுக்குப் போக வேண்டுமென்று சொல்லி அந்தப் பெரியவரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு வெளியே வந்தோம். ஒரு மரத்தடியில் விவசாயிகள் செய்யும் வேலையை மேற்பார்வை பார்த்துக் கொண்டு நின்ற அந்த ஐயங்காரம்மா எங்களைப் பார்த்தவுடன், "குருக்களிடமிருந்து எப்படித் தப்பிச்சு வந்தீர்கள்?" என்று ஆச்சரியத்தோடு கேட்டுச் சிரித்தார்!

40. பொதி சோறு பெற்றது

திருநாவுக்கரசுநாயனார் திருப்பழனத்தி லிருந்து புறப்பட்டுப் பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு வருகையில் திருப்பைஞ்ஞீலி என்ற தலத்துக்குச் சென்றார் என்று அவர் வரலாற்றைப் படிக்கும் போது தெரிகிறது. இது திருச்சிராப்பள்ளிக்குச் சமீபமாகவுள்ள ஒரு தலம். திருச்சிக்குப் பக்கத்திலே திருவானைக்கா, திருப்பாச் சிலாச்சிராமம், திருமங்கலம் முதலிய ஊர்களோடு நமது அறுபத்து மூவரில் சிலருடைய வரலாறுகள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. ஆகையால், நாங்களும் திருச்சிராப்பள்ளியை ஒரு தங்குமிடமாக வைத்துக்கொண்டு, மற்றைய தலங்களைத் தரிசித்துக்கொண்டு, கொடும்பாளூர் வழியாக மதுரைக்குப் போய் ஞானசம்பந்தரின் சமண வாதத்தைப் பார்க்கலாம் என்று தீர்மானித்தோம். எனவே திருப்பழனத்திலிருந்து தஞ்சாவூருக்குத் திரும்பி அங்கிருந்து நேரே திருச்சிராப்பள்ளிக்கு வந்தோம்.

திருச்சியில் தங்குவதற்குத்தான் வகைவகையான ஹோட்டல்கள் இருக்கின்றனவே. கிராமம் கிராமமாகச் சுற்றிவரும்போது சேர்ந்த அழுக்குத்துணிகளை இப்படியான பெரிய ஹோட்டல் வசதியுள்ள நகரங்களுக்கு வந்தவுடன்தான் கழுவி உலர்த்த வாய்ப்புக் கிடைக்கிறது. திருச்சியில் அன்று மாலை அந்தச் சடங்கை முடித்துக்கொண்டு எழுத்தாள நண்பர்கள் சிலரைக் கண்டு பேசிவிட்டு, மறுநாள் சேக்கிழார் அடிச்சுவட்டில் போக ஆயத்தமானோம்.

திருப்பைஞ்ஞீலி என்று சொல்லிக்கேட்டால் ஒருவருக்கும் சட்டென்று தெரியாது. திருப்பைங்கிளி என்றால்தான் தெரியும். ஒதுக்குப்புறமாக ஓரிடத்திலிருக்கிறது கோயில். மொட்டைக் கோபுரம். உள்ளே செல்லும்போது நாலுகால் மண்டபம் ஒன்று. அதன் பின்னால் இரண்டாம் பிராகாரத்தில் கோபுரம். கிழக்குப் பார்த்த சந்நிதி. கோயிலுக்குப் பின்னால் சில வாழைகள். ஞீலி என்றால் வாழை. பைஞ்ஞீலி, பசிய வாழை. இந்த வாழைதான் இங்கே ஸ்தல விருக்ஷம். இதன் இலை, காய், பழம் கோயிலுக்கு

மாத்திரம் பயன்படுபவை. மற்றவர்கள் உபயோகிப்ப தில்லை.

திருப்பைஞ்ஞீலியை நோக்கித் திருநாவுக்கரசர் வரும்பொழுது மிகவும் களைத்துப் போனார். பசியும் நீர் வேட்கையும் அதிகரித்தது. ஆயினும் எப்படியும் திருப்பைஞ்ஞீலி போய்ச் சேர்ந்து விடலாம் என்ற துணிவோடு நடக்கலானார். இதையுணர்ந்த சிவபெருமான் ஒரு அந்தணர் வேடங்கொண்டு ஒரு தடாகக் கரையில், கையிலே பொதிசோறு கட்டி உட்கார்ந்திருந்தார். திருநாவுக்கரசர் அங்கு சமீபித்தவுடன், ''பெரியவர் களைத்துப் போயிருக்கிறீர்கள். என்னிடம் கொஞ்சம் பொதி சோறிருக்கிறது. இதைச் சாப்பிட்டு, இந்தத் தாடகத்திலே தாகந்தீர்த்து, சிறிது இளைப் பாறிவிட்டுப் போகலாமே'' என்றார். இதுவும் திருவருள்தான் என்று நாவுக்கரசர் அந்தணருக்கு நன்றி கூறி, அந்தப் பொதி சோற்றை வாங்கி உண்டு களை தெளிந்தார். ஆனால் அந்தச் சோறளித்த ஈஸ்வரன் திடீரென்று மறைந்தவுடன் நாவுக்கரசர் உண்மையை உணர்ந்து திருப்பைஞ்ஞீலி இறைவனை வணங் கினார்.

திருப்பைஞ்ஞீலி மூலவர் பெயர் நீலிவனேஸ்வரர். ஆனால் தெற்குப் பிராகாரத்தில் சோறுடையீசர் என்ற பெயருள்ள மூர்த்தியின் சந்நிதி தனியாக இருக்கிறது. அம்பிகை இங்கே இல்லை. இவர்தான் அப்பருக்கு கட்டமுது கொடுத்த ஈசர். இங்கிருந்து ஒரு முக்கால் மைல் தூரத்தில் ஒரு தடாகமும் தோட்டமுமிருக்கின்றன. இங்கேதான் அப்பருக்குப் பொதி சோறு கொடுக்கப்பட்டதாக ஐதிகம். சித்திரை அவிட்ட நட்சத்திரத்தில் அப்பருக்கு விசேஷமாக கட்டமுது உற்சவம் நடத்தி வருகிறார்கள். மறுநாள் சுமார் ஐஞ்ஞூறு பேர்களுக்கு மகேசுரபூசை என்ற அன்னதானமும் நடக்கிறது.

இங்கே தெற்கு வெளிப்பிராகாரத்தில் கொஞ்சம் பள்ளமான இடத்தில் சிறு கட்டிடத்தினுள்ளே பாறையில் உமாமகேசுரர் உருவம் செதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. சிவனின் திருவடி யமன் தலையில் இருக்கிறது. இதை யமன் கோயில் என்று சொல்லிக் காண்பிக்கிறார்கள். திருக்கடவூரிலே யமனை சம்ஹாரம் செய்த கதை நமக்குத் தெரியும். அந்தச் சம்பவத்தின் பின்னர் உலகத்திலே மரணம் என்பது இல்லாமல் போய்விட்டது. பூமாதேவி பாரம் பொறுக்க முடியாமல் போய் பரமசிவனிடம் விண்ணப்பம் செய்தார். உடனே சுவாமி யமனை இங்கே திருப்பைஞ்ஞீலியில் எழுப்பி அவனுக்குப் பழையபடி அதிகாரம்

கொடுத்தாராம். அதனால் இங்கே இருக்கும் சுவாமிக்கு அதிகார வல்லவர் என்ற பெயருமுண்டு.

சுந்தரமூர்த்தி நாயனார் இந்த ஊருக்கு வந்தபோது சிவனே நடமாடும் கங்காள மூர்த்தியாகக் கண்டு பாடினார். அந்தப் பாட்டில், நடனமூர்த்திக்கு கிடைத்த பக்கவாத்தியங்களை மிக அழகாக அடுக்கிப் பாடுகிறார்.

தக்கை தண்ணுமை தாளம் வீணை தகுணிச் சங்கிணை சல்லரி
கொக்கரை குடமுழவினோடு இசை கூடிப் பாடி நின்றருடவீர்

நவக்கிரகங்களைப் பற்றிப் பல கோயில்களில் பலவித வரிசையிலிருப்பதாக முன்பு கண்டோம். இங்கு திருப்பைஞ்ஞீலியில் நவக்கிரகங்களுக்குப் பதிலாக ஒன்பது தீபங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

* * *

செந்தமிழ்த் தாண்டகம் பாடி உழவாரத் தொண்டு செய்த வாக்கின் மன்னன் நாவுக்கரசரைத் தொடர்ந்து பல தலங்களுக்கும் சென்றோம். அந்தப் பெருந்தகையை நாம் விட்டுப் பிரிய வேண்டிய சமயம் வந்துவிட்டது. திருவாமூரில் பிறந்து, பாடலிபுரத்தில் கீர்த்தி வாய்ந்த தருமசேனர் என்ற சமண குருவாகத் திகழ்ந்து, அந்தச் சமணத்தின் பேரூகப் பெற்ற ஒரேயொரு பலன் என்று சேக்கிழார் சொல்லும் சூலை நோயுடன் திருவதிகை வந்து, மறுபடியும் சைவனாகி, தலயாத்திரை செய்த நாவுக்கரசர் மற்றைய தேவார நாயனார் இருவரைப் போலவும் இளம் வயதிலேயே திருவருள் சித்திக்கப் பெற்றுப் பதிகம் பாடிய வரல்லர். அடிப்படையிலே பல நூல்களைக் கற்று, அனுபவ முதிர்ச்சி பெற்ற வயதிலே தேவாரம் பாடியவர். ஒவ்வொரு தலத்திலும் அவர் பாடியவைகள் ஆழ்ந்த கருத்துக்களையும் புலமையையும் கொண்ட பாட்டுக்கள். இவற்றுக்கு இறைவன் செவி கொடுத்தான். காட்சி கொடுத்தான். கயிலையைக் காண வேண்டுமென்ற போதும் தமிழ் நாட்டுக்கே அந்தக் கயிலையைக் கொண்டு வந்து காண்பித்தான். அப்பர் தமது இறுதி நாட்களைத் திருப்புகலூரில் கழிக்க வேண்டுமென்று முடிவு செய்து, அங்கு சென்றிருந்து உழவாரத் தொண்டுடன் ஒப்பற்ற பல இலக்கியம் செய்தார். இங்கே அவர் பாடி வைத்த திருத்தாண்டகங்கள், திரு நேரிசைகள், திருவிருத்தங்கள், முதலிய பாவகைகள் இலக்கிய மரபிலும் இசை மரபிலும் தமிழுக்குப் புதுமையானவை. ஈடு இணையற்றவை. அப்பருக்கு முன்னே பின்னே எவரும் செய்ய முடியாதவை.

திருப்புகலூரில் அவர் இருந்து பதிகம் பாடி உழவாரத் தொண்டு செய்யும்போது வீதியிலே நவமணிகளும் பொன் மணிகளும் கிடந்தன. நாயனார் கண்ணுக்கு அத்தனையும் உபயோகமற்ற மண்ணும் கல்லுமாகவே தெரிந்தன. அவற்றை வாரி வாவியில் போட்டார். கௌதம புத்தருக்கு அவர் கடுந்தவம் குழப்ப அரம்பையர் தோன்றினதுபோல் திருப்புகலூரி லும் அரம்பையர் ஆடினர் என்று கதையுண்டு. ஆனல் யாவற் றையும் கடந்த நாயனார் இறைவன் கழலையே சிந்தித்து ஒரு சித்திரை மாதம் சதய நட்சத்திரத்தில்,

எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனே
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்றோர்கோ கண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணரமாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே

என்று சித்தத்தைச் சிவமாக்கி அவனடி சேர்ந்தார்.

41. சிலந்தியமைத்த பந்தர்

திருப்பைஞ்ஞீலியின் தென்மேற்கில் சிலமைல் தூரத்தில் கொள்ளிடத்தின் வடகரையிலிருக்கிறது திருப்பாச்சிலாச்சிராமம். மற்றைய தலங்களைப்போல இதன் பழைய பெயரும் மறைந்து திருவாசி என்ற பெயரில்தான் இப்போது வழங்குகிறது. திருவாசல் என்றும் சொல்வார்கள். சுந்தரமூர்த்தியும் சம்பந்தரும் இந்த ஊருக்கு வந்தபோது இருவர் வருகையிலும் ஒரு முக்கிய மான சம்பவம் நடந்திருக்கிறது.

பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு வந்த சுந்தரர் திருப்பாச்சிலாச்சிராமம் வந்ததும் திடீரெனப் பொருள் வேண்டி யிருந்தது. உடனே வழக்கமான முறையில் வணங்கினார், கேட்டார். ஆனால் ஒன்றும் பலனில்லை. உடனே, வெறுப்புக் கொண்டவர் போல் காண்பித்து ''இவர் இல்லையென்றால் வேறு ஆளில்லையோ'' என்று பாடினார். இறைவன் இதைக் கேட்டுத் தமக்குள் சிரித்துக்கொண்டு வேண்டிய பொருள்களைக் கொடுத் தனுப்பினாராம். சுந்தரமூர்த்தியின் தோழமைக் குணத்தையே இது காண்பிக்கிறது. திருப்பாச்சிலாச்சிராமம் தலத்தில் சுந்தரர் பாடிய பாட்டுக்கள் பன்னிரண்டும் ''இவரலா தில்லையோ பிரானார்'' என்று தான் முடிகின்றன. கடைசிப் பாட்டு:

> **ஏசின அல்ல இகழ்ந்தன அல்ல எம்பொருமான் என்று எப்போதும்**
> **பாயினபுகழான் பாச்சிலாச்சிராமத் தடிகளை அடிதொழப் பன்னாள்**
> **வாயினுற்கூறி மனத்தினால் நினைவான் வளவயல் நாவல் ஆரூரன்**
> **பேசின பேச்சைப் பொறுக்கிலராகில் இவரலா தில்லையோ பிரானார்**

இது அவருடைய பேச்சுக்கும் அன்புத்திட்டுக்கும் ஒரு முத்தாய்ப்பு.

திருஞானசம்பந்தர் இங்கு வந்தபோது ஒரு அற்புதமே நிகழ்த்திவிட்டுப் போனார். அந்தக் காலத்திலே கொல்லிமலைச் சாரலில் வாழ்ந்த மழவன் என்ற குறவர்தலைவன் மகளுக்கு முயலக நோய் என்ற ஒருவகை வலிப்பு நோய் வந்து மிகுந்த துன்பத்தைக் கொடுத்தது. கொல்லி மழவன் எவ்வளவோ

வைத்தியம் பார்த்தான். மந்திர வாதிகளைக் கொண்டு வந்து பார்த்தான். எவ்வகையிலும் அந்தக் கொடிய நோய் பெண்ணை விட்டு நீங்கவில்லை. அதனால் மனம் வருந்திய கொல்லி மழவன், இனிக் , கடவுளிடம்தான் ஒப்படைக்கவேண்டும் என்று நினைத்துத் தனது மகளை அழைத்து வந்து திருப்பாச்சிலாச் சிராமத்துக் கோயிலின் சந்நிதியில் படுக்கவைத்தான். ஞானசம்பந்தர் இங்கு வருகிறார் என்பதைக் கேள்விப்பட்ட மழவன் ஓடோடியும் போய், அவர் முத்துச்சிவிகையிலிருந்து இறங்கும்பொழுது விழுந்து நமஸ்கரித்து, அவர் வீதிவலம் வரும் போது தானும் கூட வந்தான். சந்நிதியில் வந்தபோது சம்பந்தர் பெண்ணைக் கண்டதும், ''ஏன் இப்படிக் கிடக்கிறாள்?'' என்று கேட்டார். மழவன் தன் சரித்திரத்தைச் சொல்லி, எவ்வித சிகிச்சைக்கும் இந்த வியாதி தீரவில்லை என்றான். சம்பந்தர் உடனே திருப்பாச்சிலாச்சிராம இறைவனை வேண்டி இப் பெண்ணின் துன்பத்தைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். ''துணிவளர்திங்கள்'' என்று தொடங்கும் பாடலுடன் ஆரம்பித்த சம்பந்தர் சுந்தரரைப் போலக் கொஞ்சம் கடுமையாகக் கேட்டது இந்த மண்ணின் வாசனை போலும்! ''மங்கையை வாட மயல் செய்வதோ இவர் மாண்பே'' ''ஏழையை வாட இடர் செய்வதோ இவர் ஈடே'', ''பைந்தொடி வாடச் சிதை செய்வதோ இவர் சீரே?'' இப்படி நிந்தாஸ்துதி செய்கிறார் சம்பந்தர். முடிவில் அந்தப் பெண்ணின் முயலக நோய் தீர்ந்து சம்பந்தரின் ஆசிபெற்ற கொல்லிமழவன் தன் பெண்ணையு மழைத்துச் சென்றான்.

இங்குள்ள நடராஜருக்கு சடை கிடையாது. மகுடம்தான் உள்ளது. பாதத்தடியில் முயலகன் இல்லை. பாம்பு இருக்கிறது. சம்பந்தர் தமது தேவாரத்தில் இந்த அமைப்பையே தெளிவாகப் பாடினார்: **''துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச் சுடர்ச்சடை சுற்றி முடித்துப் பணிவளர் கொள்கையர்''** என்பது அந்தத் தேவாரம். ''சுடர்ச்சடை சுற்றிமுடித்த'' திருக்கோலம் மகுட மாகக் காணப்படுகிறது. சுவாமியின் பெயர் மாற்றறி வரதர். ஆனால் பொதுமக்கள் மாற்றுரை வரதர் என்று சொல்லி வருகிறார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இங்கே வந்து பொன் கேட்டாராம். சுவாமி மண்ணுங்கட்டியை பத்தரை மாற்றுத் தங்கமாகக் கொடுத்தார் என்று விளக்கினர் கோயிற்குருக்கள்.

கோயில் பாண்டியர் காலத்துச் சிற்பங்களைக் கொண்டிருக் கிறது. ஒரு தூணிலே கொல்லி மழவன், அவன் மனைவி, மகள் ஆகிய வடிவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

திருப்பாச்சிலாச்சிராமத்திலிருந்து திரும்பி வரும்போது திருமங்கலம் என்ற பெயர் ஞாபகத்துக்கு வந்தது. மதுரையை அடுத்து திருமங்கலம் இருக்கிறது. லால்குடியை யடுத்தும் ஒரு திருமங்கலம் இருக்கிறது. இந்தத் திருமங்கலத்தில்தான் அறுபத்து மூவருள் ஒருவராகிய ஆனாய நாயனார் வசித்தார் என்பதால் திருவாசியிலிருந்து வரும்போது கொள்ளிடத்தைக் கடக்காமல் நேரே கிழக்குத் திசையில் லால்குடிக்குப் போகும் சாலையில் வண்டியைச் செலுத்தினோம். லால்குடிக்குப் போகுமுன்னர் வடக்கே செல்லும் ஒரு சாலையில் சென்று திருமங்கலத்தையடைந் தோம். பெரிய ஊராக ஒன்றுமில்லை; சிறுகிராமம். பழைய கோயிலைச் செப்பனிட்டுத் திருப்பணி செய்திருக்கிறார்கள். சிறு அளவில் ஒரு ராஜகோபுரம். சந்நிதியில் குடிசைகள்.

மாடுகள் மேய்க்கும் ஆயர்குலத்து ஆனாயர் என்பவரோடு சம்பந்தப்பட்டது இந்த திருமங்கலம். ஆனிரை காத்து வந்த ஆனாயர் கிருஷ்ணபகவான் போல் புல்லாங்குழல் வாசிப்பதில் நிகரற்றவர். அவ்வளவுதான் அவர் மாண்பு. ஒரு நாள் அவர் தமது குழலிலெடுத்து வாசிக்கும்போது அந்த இசையிலே அண்ட சராசரங்கள் யாவும் அசைவற்று மயங்கிப் போயின என்றும் இறைவன் காதிலே அது மகிழ்வித்தது என்றும், அதன் காரண மாக் ஆனாயர், நாயனார் பதவி பெற்றார் என்றும் பெரிய புராணம் கூறுகிறது. இவர் மற்றைய நாயனார் சிலர்போல் பிள்ளையை வெட்டவில்லை; மனைவியின் கையைத் துணிக்கவில்லை; எதிரிகள் நாவை அறுக்கவில்லை; அல்லது தமது கழுத்தையே வெட்டவில்லை. இவர் செய்தது ஒரு சிறு மூங்கிலை வைத்துக்கொண்டு அதில் ஊதி இசையெழுப்பியதுதான். ஆனால் அந்த இசையின் பெருமையைச் சேக்கிழார் பல பாட்டுக்களில் விரிவாக வருணிக்கிறார்.

''ஆனிரையும் கான் விலங்குகளும் தம் உணவை மறந்து வந்து அணைந்தன. மயிலினமும் புட்களும் இசையில் மயங்கி வந்து ஆனாயரைச் சுற்றிக் கொண்டன. மற்றைய இடையர்களும் தம்மை மறந்து நின்றனர். வானவர் மகளிர் தம் உலகினின்றும் வந்து அணைந்தனர். பாம்பும் மயிலும், சிங்கமும் யானையும், புலியும் மானும் பகையை மறந்து ஒன்றாய் வந்து கூடி நின்றன. காற்றும் ஆடவில்லை. மரமும் அசையவில்லை''. இவ்வாறு அண்டசராசரங்களும் ஆனாயரின் இசையில் மூழ்கிப் போக இறைவனே எழுந்தருளிவந்து ஆனாயருக்கு தரிசனம் கொடுத்து இவரை ஒப்பற்ற நாயனாராக்கி வைத்தார்.

திருமங்கலத்திலே ஆனாய நாயனாருக்கு ஒரு சிலை வைக்கப் பட்டிருக்கிறது. ஒரு மரத்தடியில் புல்லாங்குழலுடனே நிற்பதாகக்

காண்பிக்கப்பட்டிருக்கிறது. ஒரு காலத்தில் மகாலக்ஷ்மி வழிபட்ட காரணத்தால் திருமங்கலம் என்ற பெயர் பெற்றதாகச் சொல்வர். கார்த்திகை மாதம் அத்த நக்ஷத்திரத்தில் இங்கே விழாக் கொண்டாடுவார்கள். இசை காரணமாக இறைவன் அருள் புரிந்தானல்லவா? ஆகையால் இங்குள்ள சுவாமியின் பெயர் சாமவேதீஸ்வரர். சாமவேதம் இசைக்குப் பெயர்போனது.

ஆனை நாயனாரையும் சாமவேதீஸ்வரரையும் வணங்கிவிட்டு நாங்கள் திரும்பி வந்தோம். கொள்ளிடத்தைக் கடந்து வரும் வழியில் ஸ்ரீரங்க நாதரையும் தரிசித்துக் கொண்டு திருவானைக் காவினுள் புகுந்தோம்.

சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழற்பந்தர் செய்து
உலந்தவண் இறந்தபோதே கோச்செங்கணானுமாக
கலந்த நீர்க் காவிரி சூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனாரே

என்று அப்பர் சுவாமிகள் குறிப்பிட்ட கோச்செங்கணான் என்ற சோழ அரசன் கோச்செங்கட்சோழ நாயனாராகிய கதை சம்பந்தமானது இந்தத் திருவானைக்கா. திருச்சி நகருக்குப் பக்கத்திலுள்ள இந்த ஸ்தலத்துக்கு முன்பு எத்தனையோ தடவை போயிருந்தாலும் கோச்செங்கட்சோழன் என்ற பழைய சரித்திர நாயகனோடு சேர்த்துப் பார்ப்பதென்றால் புதிய கண்ணோடுதான் பார்க்க வேண்டும்.

யானையும் சிலந்தியும் சம்பந்தப்பட்ட கதை பலருக்குத் தெரியும். ஜம்புகேஸ்வரம் என்ற இந்தத் திருவானைக்காவின் பெருமானுக்கு ஒரு யானை, முற்பிறப்பில் செய்த நல்ல பலனால் தினந்தோறும் காவிரியிலிருந்து நீர் கொண்டு வந்து அபிஷேகம் செய்து மலராலும் இலையாலும் அருச்சனை செய்து வழிபட்டு வந்தது. நாவல் மரத்தின் கீழ் இருந்த லிங்கத்தின் மேல் மரத்தின் சருகு விழாதவாறு ஒரு சிலந்திப் பூச்சி தன் வாயால் நூல் செய்து விதானம் போல வலை பின்னி வைத்தது. யானை வந்து பார்க்கையில் சிலந்தி எச்சம் இருக்கலாகாதென்று அதைக் கலைத்து விட்டது. இதைக் கண்ட சிலந்திக்கு கோபம் வந்துவிட்டது. அடுத்த நாள் யானை வணங்கவந்த சமயத்தில் சிலந்தி வலையை மீண்டும் கலைத்தது. உடனே சிலந்தி யானையின் துதிக்கையில் நுழைந்து கடித்துவிட்டது. யானை அதைத்தாங்கமாட்டாமல் தும்பிக்கையை நிலத்தில் மோதியது. சிலந்தியும் யானையும் ஏக சமயத்தில் இறந்துபோயின.

சிவபூசையின் பயனாக சிலந்தி அடுத்த பிறவியில் சோழனாகப் பிறந்தது. கண்கள் சிவந்திருந்த காரணத்தால் இந்த இளவலுக்கு செங்கண்ணன் என்ற பெயர் ஏற்பட்டது. வயது வந்து ராஜ்ய பரிபாலனம் செய்யும் காலத்தில் ஈஸ்வர பக்தி மேலிட்டு திருவானைக்காவிலேயே முதன் முதல் ஓர் அழகிய கோயிலைக் கட்டினான். கோச்செங்கட்சோழன் என்ற பெயர் பலரால் போற்றப்பட்டது. இதன் பிறகு சிதம்பரத்தில் பல மாளிகைகள் கட்டினான். தமிழ்நாடு முழுவதும் பல மாடக் கோயில்களைக் கட்டினான். இந்தச் சேவையின் காரணமாகவே கோச்செங்கட் சோழன் நாயனார் பதவியைப் பெற்றான்.

கோச்செங்கட் சோழன் கட்டிய மாடக் கோயில்களுக்கு ஒரு தனி வரலாறு உண்டு. சிலந்திவலையை யானை அழித்ததல்லவா? அந்த ஞாபகம் இருந்ததால் அச்சங்கொண்ட செங்கட்சோழன் யானை புகமுடியாதபடி மாடக்கோயில்களைக் கட்டினான் என்பர். மாடக் கோயில்களில் முன்பார்வைக்கு ஒரு உயர்ந்த மேடை மாத்திரம் தெரியும். பக்கத்திலே சென்று படிக்கட்டுகளின் மேல் ஏறித்தான் சுவாமி சந்நிதிக்கு செல்லவேண்டும். கோச்செங்கணான் தன் காலத்தில் இம்மாதிரி எழுபது கோயில்களைக் கட்டினான் என்று தேவாரங்களிலும், திருமங்கையாழ்வார் பாசுரத்திலும் சொல்லப்படுகிறது. இந்தச் சோழன் வரலாற்று நாயகனா அல்லது கற்பனைப் பாத்திரமா என்று ஆராயப்பட்டு, வரலாற்று நாயகன் என்றே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சங்க இலக்கியத்தில் பதினெண்கீழ்க்கணக்கு என்று சொல்லப்படும் தொகுதியில் களவழி நாற்பது என்ற நூலை பொய்கையார் என்ற புலவர் பாடியிருக்கிறார். இந்தப் பொய்கையார் சேரன் கணைக்கால் இரும்பொறை என்ற சேரமன்னனின் நண்பர். கோச்செங்கணான் இந்தச் சேரமன்னனை வென்று சிறைவைத்து விட்டான். பொய்கையார்தான் தலையிட்டு சேரனை விடுவித்தார். அவர் இந்தப் போரில் சோழனின் வெற்றியை களவழி நாற்பது என்ற நூலில் பாடியிருக்கிறார். சேரர் தலைநகராகிய கருவூரின் பக்கத்தி லுள்ள கழுமலம் என்ற இடத்தில்தான் இந்தப் போர் நிகழ்ந்தது. இந்தக் குறிப்பையும் இலக்கியச் சான்றையும் ஆதாரமாகக் கொண்டு கோச்செங்கட்சோழன் கி. பி. நாலாம் நூற்றாண்டில் வாழ்ந்தவன் என்று தீர்மானித்திருக்கிறார்கள்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த அப்பர் சம்பந்தர் காலத்தில் முந்நூறு சிவன் கோயில்கள் இருந்திருக்கின்றன இவையெல்லாம் செங்கல்லாலும் மரத்தாலும் கட்டப்பட்டன என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். இதற்கு முன் நாலாப்

நூற்றுண்டில் கோச்செங்கணான் கட்டிய மாடக் கோயில்களும் இதே செங்கற்கட்டிடங்களாகவே இருந்திருக்க வேண்டும். இவை விரைவில் அழிந்து போகின்றன என்ற காரணத்தால் பல்லவ மகேந்திரவர்மன் பாறைகளைக் குடைந்து கோயில் சமைத்தான். அவனுக்குப் பின் வந்தவர்கள் கற்றளி என்ற கருங்கல் கொண்டு கோயில்களைக் கட்டினர்.

இப்போதுள்ள திருவானைக்கா, ஜம்புகேஸ்வரம், ஐந்து பெரிய பிராகாரங்களைக் கொண்டு அழகுமிக்க சிற்பவேலைப்பாடுகளை யுடையது. நாலாம் பிராகாரத்து மதில் திருநீற்றுமதில் என்று சொல்லப்படும். திருநீற்றையே சம்பளமாகக் கொடுத்து ஒரு சித்தர் இந்த மதிலைக் கட்டுவித்தாராம். திருநீறு பொன்னாக மாறியது என்று சொல்வார்கள். இக்கோயிலிலுள்ள தேவி அகிலாண்டேஸ்வரி ஒரு காலத்தில் மிக உக்கிரதேவதையாக இருந்தார் என்றும் ஆதிசங்கரர் வந்து காடகம் என்ற காதணி ஒன்று செய்து அணிவித்த பின் சாந்தமூர்த்தியாகிவிட்டா ரென்றும் கதையுண்டு.

இங்குள்ள பரம்பரை அர்ச்சகர்களை பண்டிதர் என்பார்கள். அகிலாண்டேஸ்வரியே சிவனை அருச்சித்து வழிபட்ட ஐதிகத்தில் இங்கு அம்மனுக்கு நடைபெறும் உச்சிக்கால பூசையில் குருக்கள் பெண் உடைதரித்து அருச்சனை செய்வதாகச் சொல்வார்கள்.

திருவானைக்காவில் வேறொரு சோழன் சம்பந்தமான கதையு முண்டு. சோழமன்னன் காவிரியில் நீராடும் பொழுது அவன் கழுத்தில் கிடந்த முத்தாரம் காவிரி நீரில் விழுந்து விட்டது.

திரும்பப் பெறமுடியாமல் அவன் வந்து திருவானைக்கா சுவாமியிடம் வேண்டினான். பின்னர் ஒரு குருக்கள் காவிரி நீரைக் குடத்தில் மொண்டு வந்து அபிஷேகம் செய்யும்பொழுது அந்த நீருடன் அரசன் தொலைத்த முத்து மாலையும் வந்து சுவாமியின் கழுத்தில் விழுந்ததாகச் சொல்வார்கள்.

திருவானைக்கா கோயிலைச் சுற்றிப் பார்ப்பதில் பொழுது போவதே தெரியாது. பஞ்சலிங்க க்ஷேத்திரத்தில் அப்புலிங்கம் என்று, எப்போதும் ஊற்றுநீரால் வருடப்பட்டிருக்கும் மூலவர் ஒரு அற்புதம். சோழபாண்டிய நாயக்க சிற்பிகள் செய்து வைத்திருக்கும் சிலைகளும் சிற்பங்களும் ஒரு அற்புதம். இந்த அற்புதங்களையெல்லாம் கண்டபின் நாங்கள் கோச்செங்கணானின் மாடக் கோயிலைப்பற்றியும் சிந்தித்துக் கொண்டு பழையபடி திருச்சிக்குத் திரும்பினோம்.

42. யானை கைப் பூமாலை

திருச்சிராப்பள்ளியிலிருந்து காவிரியின் தென்கரை வழியாகக் கரூர் செல்லும் சாலையில் மோட்டாரைச் செலுத்திச் செல்லும் போது சாரதி ராதாகிருஷ்ணனுக்கு ஒரே ஆனந்தம். இரு கரைகளிலும் பச்சைப்பசேலென்ற வாழைத்தோட்டம், அல்லது மூங்கில் காடு அல்லது வானளாவ வளர்ந்த தேக்கமரச்சோலை. வெயிலே தெரியாதபடி பச்சைப்படாம் விரித்தது போல நிழல் பரப்பிக் கொண்டிருந்தது. பிரயாணத்தின் அலுப்புத் தோற்றுமல் யாவருக்கும் ஒரே குஷி. நண்பர் சிட்டிக்கு பழைய ஞாபகங்கள் சிலதோன்ற ஆரம்பித்தன. காவிரி நதியின் தோற்றுவாயான தலைக்காவேரியிலிருந்து கடலுடன் கலக்கும் சங்கமமாகிய காவிரிப் பூம்பட்டினம் வரையில், நதியின் செலவுடன், சென்று பார்த்து முன்பே ஒரு நூல் எழுதியவர் அவர். அதனால் காவிரியைப் பார்க்கும் போதெல்லாம் பெருமிதம் கொள்வார். பழைய வரலாற்றிலும் தொல்பொருள் ஆராய்ச்சியிலும் ஈடுபாடு கொண்ட நண்பர் ஒரு பிரசங்கமே செய்துவிட்டார்: ''இது ஒரு காலத்தில் பெரிய ராஜபாட்டையாயிருந்ததென்பது உங்களுக்குத் தெரியுமா? திருச்சிக்குப் பக்கத்திலுள்ள உறையூருக்கும் கரூருக்கும் ஒரே போட்டா போட்டி. உறையூர்ச் சோழருக்கும் கரூர் சேரருக்கும் அடிக்கடி பூசல், போர். எத்தனையெத்தனையோ சேனைகள் இந்தச் சாலையில் நடந்திருக்கின்றன; தேர்கள் உருண்டன; யானைகள் நடந்தன; குதிரைகள் பாய்ந்தன. கரூர்தான் ஒரு காலத்தில் சேரர்களின் தலைநகரான வஞ்சி என்ற பெயருடன் விளங்கியது. சங்ககாலத்து வஞ்சி இது. பிற்காலத்திலேதான் அது கொடுங்கரூர் என்ற திருவஞ்சைக்களத்துக்குப் போய் விட்டது. அயலிலுள்ள சோழர்களின் தொந்தரவு பொறுக்க முடியாமல் சேரர் மேற்குக் கடற்கரைப்பட்டினத்துக்கு மாற்றி விட்டார்கள் போலும். இந்தப் பக்கத்தில் காவிரி பாயும் வேகத்தைப்பாருங்கள். என்ன பெருக்கு! தலைநிமிர்ந்து பழைய மிடுக்குடன் நடக்கிறது. நடந்தாய் வாழி காவேரி! இளங்கோ கண்ட காவேரியை இங்கேதான் பார்க்க முடியும். பல்லவனீச்சரம்

என்ற காவிரிப்பூம்பட்டினத்திலும் அன்று நாம் பார்த்தோமே அதுவா காவிரி?''

பேசிக்கொண்டே போய்க் கரூரையடைந்தோம். சேரர், தலைநகராகிய வஞ்சிமாநகரமாயிருந்த கருவூர் இன்று அந்தப் பழைய கம்பீரத்தையிழந்து விட்டது. ஒரு காலத்தில் உரோமரும் கிரேக்கரும் பண்டமாற்று வியாபாரம் செய்த இந்த நகரத்திலே இன்று வடநாட்டு வியாபாரிகள் வந்து கைத்தறித்துணி கொள் முதல் செய்வதையே பார்க்கிறோம். தமிழ் சங்க இலக்கியங்களைப் படிக்கும்போது அக்காலத்துக் கரூர் அரணமைந்த பெருநகரா யிருந்ததென்று தெரிகிறது.

நகரைச் சுற்றிக் கோட்டை கொத்தளங்கள், அகழிகள், எதிரிப்படைகள் உள்ளே நுழையாதபடி பல பாதுகாப்புகள், கொத்தளங்களில் நிறுவப்பட்டிருந்த போர்க்கருவிகள், பெருங் கற்களை வீசும் கவண்கள்; கொதிக்கும் எண்ணெய் பாய்ச்சும் யந்திரங்கள்; தீப்பந்தங்களைக் கக்கும் கருவிகள். இப்படி அந்தக் காலத்துச் சேரர் தமது தலைநகரைக் காத்துவைத்தனர். அடிக்கடி உறையூர்ச் சோழர்கள் தொல்லைதான் இந்தப் பாதுகாப்புக் கெல்லாம் காரணம். ஆனால் எத்தனை காலம்தான் இந்த எல்லைப்புற நகரம் தாக்குப்பிடிக்கும்? முடிவிலே ஒரு நாள் சோழர் கைக்கே மாறியது. சேரர் இடம் பெயர்ந்து திருவஞ்சைக் களத்துக்குப் போய்விட்டனர். கருவூரிலே ராஜப்பிரதிநிதிகளை வைத்துக் கொண்டு சோழர்கள் உறையூரிலிருந்தபடியே அந்த நாளில் ஆட்சி செய்ய ஆரம்பித்தனர்.

இப்படியான ஒரு காலத்திலேதான் இங்கே இரண்டு நாயன்மார்கள் ஒரே சமயத்தில் பதவி பெற்றார்கள். ஒருவர் புகழ்ச்சோழ நாயனார் என்ற சோழமன்னன். மற்றவர் எறிபத்தர் என்ற சிவதொண்டர். கருவூர் ஆனிலை என்ற கோயிலுக்கு எப்போதும் மலர் மாலை பூனைந்து ஏத்திவரும் சிவகாமியாண்டார் என்ற சிவ பக்தருக்கு அந்த ஊரில் பெரு மதிப்பிருந்தது. மிக உயர்ந்த பண்புள்ள மனிதர். ஒரு நாள் காலையில் இவர் நந்தவனங்களுக்குச் சென்று புதுமலர் பறித்து மாலை தொடுத்து ஒரு கூடையில் கொண்டு வந்தார். நவராத்திரி காலம். மறுநாள் சரஸ்வதி பூஜை. ஊரே கோலாகலத்துடன் காணப்பட்டது. வீதிகளெல்லாம் சாணம் தெளித்து மாக்கோல மிட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தன. அரசனின் பட்டத்து யானை பட்டவர்த்தனம் காவிரியில் குளித்துவிட்டு அலங்கார நடை யுடன் வரும்போது அதற்குத் தன்னையறியாமல் ஓர் உற்சாகம்

பிறந்து விட்டது. பாகர் இருவர், மெய்காப்பாளர் மூவர் என்று ஐந்து பேர் பக்கத்தில் வர, யானை தன் துதிக்கையை அங்கும் இங்கும் வீசிக்கொண்டு வரும்போது, சாலை ஓரமாக நடந்து சென்ற சிவகாமியாண்டாரின் தோளில் இருந்த கோலில் தொங்கிய கூடையைக் கண்டுவிட்டது. உடனே தன் துதிக்கையால் கூடையைப் பிடுங்கி, மாலைகளைச் சின்னபின்னமாகச் சிதறியது! ஆத்திரம் கொண்ட சிவகாமியாண்டார் தன் கோலால் யானையை அடிக்க ஓடினார். யானையின் சீற்றம் அதிகப்படும் என்று பயந்த பாகர்கள் பட்டவர்த்தனத்தை ஓட்டிக்கொண்டு வேகமாய்ச் சென்றனர்.

சிவகாமியாண்டார் குய்யோமுறையோ என்று கதறினார். சாலையில் கூட்டம் கூடி விட்டது. அந்தச் சமயத்தில் அங்கு வந்த எறிபத்தர் என்ற சிவனடியார் சிவகாமியாண்டாரையணுகி என்ன நடந்தது என்று விசாரித்தார். நடந்த சம்பவத்தைக் கேட்ட வுடன் அந்த அடியார் துடித்தார். ''இறைவனுக்குச் சாத்தக் கொண்டு சென்ற மாலையைத் துவைத்த அந்த யானையைச் சும்மா விட்டு வைக்கலாகாது. இதோ என்ன செய்கிறேன் பார்!'' என்று சொல்லிக்கொண்டே கையிலிருந்த மழுவுடன் யானை சென்ற திக்கை நோக்கி ஓடினார். யானையைச் சமீபித்த வுடன் அதன் காலில் மழுவால் அடித்தார். யானை கோபத்துடன் திரும்பியது. அதன் துதிக்கை துண்டமாகியது! சரிந்து விழுந்த யானையைப் பார்த்து மலைத்து நின்றனர் யானைப்பாகர்கள். அவர்களில் சிலரையும் வெட்டி வீழ்த்தினார் எறிபத்தர். அவர் ஆத்திரம் தீர்ந்தது. எஞ்சியிருந்த பாகர்கள் ஓடோடியும் சென்று அரசனிடம் முறையிட்டனர். ''பட்டத்து யானையும் மாண்டது. பாகர்களும் கொல்லப்பட்டார்கள்'' என்று வாய் குழறினர். அரசன் அதற்குமேல் கேட்கவில்லை. அவசரப்பட்டான். பட்டத்து யானையைக் கொன்றவர்கள் பகையரசராயிருக்க வேண்டும். சைனியம் நம் நகரத்துள் நுழைந்திருக்க வேண்டும் என்று கற்பனை செய்தான். உடனே எக்காளம் ஊதப்பட்டது. யுத்த சன்னத்தனாகி ஒரு பெரும் படையையே திரட்டி விட்டான்! யானை கொல்லப்பட்டதாகச் சொன்ன இடத்தை நோக்கிப் படையைச் செலுத்திவந்தான். வந்தவுடன் அவன் கண்ட காட்சி கோடரியும் கையுமாக அங்கே தன்னந்தனியாக ஒரு சிவனடியார் தாம் நிற்கக் கண்டான். ''இவரே அந்த யானையைக் கொன்றவர்'' என்று காட்டிக் கொடுத்தனர் பாகர்கள். ''என்ன? இந்தச் சிவனடியாரா யானையையும் பாகரையும் கொன்றவர்?'' என்று அதிசயித்த அரசன் தன் படையைத் திரும்பிப் போகச் சொன்னான். ''சரியான காரணமில்லாமல் இந்த அடியார்

யானையைக் கொன்றிருக்கமாட்டார். ஏதோ பெரிய தவறு நடந்திருக்கிறது'' என்று சொல்லிக்கொண்டே, எறிபத்தரை யணுகி என்ன நடந்ததென்று பணிவோடு கேட்டான். எறிபத்தர் விவரமாக எல்லாம் சொல்லி, இறைவனுக்குச் சாத்தக்கொண்டு சென்ற மாலையைத் துகளாக்கிய யானையை நான் கொன்றேன்'' என்றார். அரசன் அவரை விட பக்தன். ''அது மாத்திரம் போதாது சுவாமி! இந்த மகாபாதகத்துக்குத் தலைவனுயிருக்கும் என்னையும் கொல்ல வேண்டும்,'' என்று சொல்லிக் கொண்டே தன் உடைவாளை உருவி, ''இதோ இந்த வாளால் என்னையும் கொன்றுவிடும்'' என்று நீட்டினர். எறிபத்தர் பார்த்தார். தான் அந்த வாளை மீட்காவிட்டால் அரசன் தற்கொலை செய்யக் கூடும் என்று நினைத்து, வாளை வாங்கினர். அரசன், ''ஒரு சிவபக்தர் கையாலே குற்றமுள்ள என் உயிர் போயிற்று என்ற வரத்தைப் பெற்றேன்'' என்று சொல்லி தலை குனிந்தான். இதற்கிடையில் எறிபத்தர், ''தனது யானையும் பாகரும் இறந்து போக அதற்குச் சிறிதும் வருந்தாமல் தன் உயிரையே போக்கிக் கொள்ள முன் வந்த அரசனையா நான் கொல்வது? முதலில் என் உயிர் போகட்டும்'' என்று நினைத்தவராய், வாளைத் தன் கழுத்தில் வைத்தார்! அவ்வளவுதான், அரசன் பாய்ந்து அந்த வாளைப் பிடித்துக் கொள்ளும் சமயம் ஓர் அசரீரி கேட்டது. ''அடியார் களுடைய தொண்டை உலகத்திலே வெளிப்படுத்தும் பொருட்டு இன்று யானை புஷ்பத்தைச் சிதறும்படி பரமசிவன் அருள் செய்தார்'' என்று முழங்கியது அந்த அசரீரி. உடனே அங்கு கிடந்த யானையும் பாகர்களும் உயிர்பெற்றெழுந்தனர். பூக்கூடையில் முன்னிருந்த பூக்களும் மாலைகளும் நிறைந்தன. சிவகாமி யாண்டார் உள்ளம் பூரித்து வணங்கினர். அரசன் எறிபத்தரைப் பட்டத்து யானையில் வீற்றிருக்கச் செய்து நகர்வலம் வந்தான். நவராத்திரி விசேஷம் கோலாகலமாய் நடந்தது.

கரூர் இறைவன் கோயில் ஆனிலை என்ற பெயர் பெற்றது. காமதேனுவாகிய பசு வழிபட்டதால் ஆ நிலை என்று வழங்கு கிறது. சுவாமிபெயரும் பசுபதீஸ்வரர். அம்பிகை அலங்காரவல்லி. ஆலயத்தின் முன் கொடிக்கம்ப பீடத்தில் ஒரு பசு லிங்கத்துக்குப் பால் ஊட்டுவது போன்ற சிலை காணப்படுகிறது. எறிபத்த நாயனார் வரலாறு சம்பந்தமாக நடக்கும் விழாவில் யானையை வெட்டிய காட்சி நடிக்கப்படுகிறது. இதற்காக கோயிலில் ஒரு மரப்பலகையில் யானை உருவம் செய்து வைத்திருக்கிறார்கள் துதிக்கை தனியாக இணைக்கப்பட்டிருக்கிறது.

யானையின் சம்பவத்தில் எறிபத்தர் ஒரு நாயனார் பதவி பெற்ற பின், புகழ்ச் சோழர் என்ற சோழமன்னன் மற்றொரு சம்பவத்தில்

நாயனுர் பதவி பெற்று சிவகணங்களில் ஒருவராகச் சேர்ந்த கதை யுள்ளது. சோழமன்னர் ஒரு முறை உறையூரிலிருந்து கருவூருக்கு வந்து தங்கிய சமயத்தில், சிற்றரசர்கள் எவரெவர் வழக்கமான திறை செலுத்தாமல் இருக்கிறுர்கள் என்று விசாரணை செய்தான். அப்போது மந்திரிகள், ''ஒரே யொருவரைத்தவிர மற்றவர்கள் யாவரும் திறை செலுத்தி விட்டார்கள். அதிகமான் என்பவன் ஒருவன்தான் இன்னும் திறை கொண்டுவரவில்லை. அவன் பெரிய அரண்கட்டி மலைப்பகுதியில் பாதுகாப்புகள் செய்து அங்கு தங்கி யுள்ளான்'' என்றார்கள். சோழ அரசன் அதைக்கேட்டு, ''அப்படியானுல் உடனே படையுடன் சென்று அவன் அரண்களைத் தகர்த்து வாருங்கள்'' என்று உத்தரவிட்டான். சோழப்படைகள் ஆர்ப்பரித்தெழுந்தன. அதிகமான் அரணைச் சென்று தாக்கின. கடும் யுத்தம் மூண்டது. இருபக்கத்திலும் பலத்த சேதம். அதிகமான் படைகள் சின்னபின்னமுற்றன. இதைக் கண்ட அதிகமான் தப்பியோடி விட்டான். இவன் கோட்டையழிந்து படைகளும் நிர்மூலமாக்கப்பட்டன. சோழசேனைகள் திரும்பி வரும்போது தாம் வெற்றி கொண்டதற்கு அறிகுறியாக, அதிகமான் கோட்டையில் அகப்பட்ட பொருள்களையும், போரில் மாண்ட சில வீரர்களின் தலைகளையும் அரசன் பார்த்து மகிழும் பொருட்டுக் கொண்டு வந்தனர்.

அதிகமான் அரணை விட்டு ஓடிவிட்டான் என்பதையும் அவன் சேனைகள் தோல்வியுற்றன என்பதையும் கேள்விப்பட்டு அரசன் மகிழ்ந்தான். தமது வீரர்கள் கொண்டு வந்து குவித்த தலைகள் சிலவற்றைப் பார்க்கும் போது அதில் ஒரு தலையில் சடை இருந்தது. அரசன் சந்தேகம் தெளிய மேலும் உற்றுக் கவனித்தான். சந்தேகமில்லாமல் அது ஒரு காபாலிக சந்நியாசி யின் தலையாயிருந்தது! அரசன் பதைபதைத்தான். ''நமது அரசாட்சி அழகாய்த்தானிருக்கிறது! சைவநெறியைப் பாது காக்கும் எனது அரசியலில் ஒரு சிவனடியாரைக் கொன்ற பாவம் ஏற்படுவதா? இத்தகைய மகாபாதகத்தைச் செய்த நான் இனி மேலும் இருந்து அரசு நடத்துவது பாவம். பெரும் பழி. அரசாட்சி செய்யும் தகுதியை நான் பறிகொடுத்துவிட்டேன். ஆகையால், என் மகனுக்குப் பட்டம் சூட்டி நான் விலகுவதே முறை,'' என்று சொல்லி இளவரசுக்கு ஆட்சியைக் கொடுத்துப் பட்டத்தைச் சூட்டி வைத்துவிட்டு, ''இனி நான் உலகில் வாழ்வது முறையல்ல'' என்று சொல்லி தீப்பாய்ந்து உயிரை விட்டான் அரசன் புகழ்ச்சோழன். அன்று முதல் புகழ்ச்சோழ நாயனுர் என்று உலகம் போற்றும் புகழைப் பெற்றுன்.

பிற்காலச் சோழர் சரித்திரத்தில் கரூர் ''முடிவழங்கு சோழ புரம்'' என்று பெயர் பெற்றது. சாளுக்கியரை வென்ற ராஜ ராஜன் முதற்கொண்டு சோழர்கள் கரூரை ஒரு முக்கிய ராஜதானி யாக வைத்திருந்தார்கள். கரூர் ஆனிலைக் கோயிலில் காணப்படும் பல கல்வெட்டுக்கள் சோழ சரித்திரத்துக்கு முக்கிய சான்றுகள் தருகின்றன.

சைவத்திருமுறைகளில் ஒன்பதாம் திருமுறையில் சேர்க்கப் பட்டிருக்கும் திருவிசைப்பா பாடிய கருவூர்த் தேவர் இந்த ஊரைச் சேர்ந்தவர் என்று கருதப்படுகிறது. இவர் பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த முதலாம் ராஜராஜன் காலத்தவர் என்றும், ராஜராஜன் இவர்மேல் அளவிறந்த பக்தியும் நட்பும் கொண்டிருந்தான் என்றும் சொல்லப்படுகிறது. ராஜராஜன் மகன் ராஜேந்திர சோழன் காலத்திலும் கருவூர்த்தேவர் வாழ்ந் தார் என்று தெரிகிறது. ராஜராஜன் எழுப்பிய பிருகதீஸ்வரத்து இறைவனையும் கங்கை கொண்ட சோழன் கட்டிய கோயிலில் பிரதிட்டை செய்திருக்கும் இறைவனையும் தமது திருவிசைப் பாவில் பாடியுள்ளார். பிருகதீஸ்வரம் ஆலயத்தில் கருவூர்த்தேவர் ஓவியம் தீட்டப் பெற்றுள்ளது. மேற்குப் பிராகாரத்தில் சிற்பமும் காணப்படுகிறது. கங்கை கொண்ட சோழபுரம் கோயிலில் விமானத்தின் தென் கீழப் பகுதியில் கருவூர்த் தேவர் சிலை வைக்கப் பட்டுள்ளது.

திருவிசைப்பா பாடிய கருவூர்த் தேவரும் கருவூர்ச்சித்தர் என்பவரும் ஒருவரா அல்லது இருவரும் வேவ்வேறினரா என்பது ஆராயப்படவேண்டிய செய்தி. இருவரையும் ஒருவராகக் கொண்டு பல சித்துக்கள் பேசப்படுகின்றன. தஞ்சைப் பெரிய கோயிலில் ராஜராஜன் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யும்போது அஷ்டபந்தன மருந்து இளகி நின்றதால் லிங்கத்தை உறுதியாக வைக்க முடியவில்லை. எவ்வளவோ பிரயத்தனம் எடுத்தும் லிங்கப் பிரதிஷ்டை நிறைவேறுததால், சிலர் கரூரிலிருக்கும் சித்தரை அழைத்து வந்தால் அவர் உதவிகொண்டு நிறைவேற்ற லாம் என்று சொன்னார்கள். ராஜராஜன் உடனே தகவல் அனுப்பி, வேண்டிய மரியாதைகளுடன் கருவூர்த்தேவரை வரவழைத்தான். அவன் அழைப்பிற்கிணங்கி வந்த அடியார் முன்னிலையில் அஷ்டபந்தனம் நடக்க, எவ்வித குறையுமில்லாமல் மருந்து உறுதியாகி, லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகச் சொல்வார்கள்.

சரித்திர ஆராய்ச்சியாளராகிய நண்பர் ஒருவர் தரும் விளக்கம் வேறு விதம். ராஜராஜ சோழன் தான் கோயில் கட்டி வாலஸ்

தாபனம் செய்யும் காலத்தில் பல சிவாசாரியர்களை வரவழைத் திருந்தான். அவர்களில் மூத்த சிவாச்சாரியாரே முன் நின்று பிருகதீஸ்வரப் பிரதிஷ்டை வைபவத்தை நடத்திக் கொடுத்தார். அவருடைய உருவமே பிருகதீஸ்வரம் கோயிலில் ஓவியமாகவும் சிற்பமாகவும் காணப்படுகிறது என்பது இந்த நண்பரின் ஆராய்ச்சி.

எது எப்படியாயினும் கருவூர்ச் சித்தர் என்பவரைப்பற்றி வழங்கும் அற்புதங்கள் சுவாரஸ்யமானவை. திடீரென மழை பெய்யச் செய்வார்; பூட்டியிருக்கும் கோயில் கதவைத் திறக்கச் செய்வார்; ஆறு திடீரென்று பெருகச் செய்வார். பலவிதமான அற்புதங்களைச் செய்து வந்த இவர் மீது சில அந்தணர்கள் பொறுமை கொண்டார்கள். பிராமணனுயிருந்தும் இவர் ஒரு வாமமார்க்கத்தவர் என்று, அதாவது காபாலிகர், மாம்சம் சாப்பிடுகிறார், மது அருந்துகிறார் என்றெல்லாம் அரசனிடம் சென்று இவரைப்பற்றிப் புகார் செய்தார்கள். அரசன் இது உண்மைதானு என்று கருவூர்ச்சித்தர் குடியிருந்த ஆசிரமத்தை சோதிக்கச் செய்தான். அந்தணர்கள் புகார் செய்தது போல எவ்வித தடயமும் கிடைக்கவில்லை. கருவூர்த்தேவர் இதைக் கண்டு பலமாகச் சிரித்து, ''என் வீட்டை ஏன் சோதனை யிடுகிறீர்கள். அதோ அந்த அந்தணர் வீடுகளிற்போய்ப் பாருங்கள். நீங்கள் தேடுவது கிடைக்கும்'' என்றார். அரசன் காவலாளிகள் அந்தணர்கள் வீடுகளிற் சோதனை செய்ததில் ஒவ்வொருவர் வீட்டிலும் மதுக்குடமும் மாமிசமும் இருக்கக் கண்டனர்! இதைக் கேள்வியுற்ற அரசன் கரூர் அந்தணர்களை நாடுகடத்த உத்தரவிட்டான் என்று கர்ணபரம்பரைக் கதையுண்டு.

கரூர் ஆனிலை தெற்குப் பிராகாரத்தில் கருவூர்த் தேவருக்கு ஒரு சந்நிதியிருக்கிறது. ராஜேந்திரசோழன் காலத்துக் கல்வெட்டொன்று கரூரில் அவன் காலத்திலேயிருந்த ஒரு சமூக வழக்கத்தையும் அரசனின் சீர்திருத்த மனப்பான்மையையும் காண்பிக்கிறது. கம்மாளர் என்ற குலத்தவர்களுக்கு அவர்கள் திருமணங்களிலும் மரணச் சடங்குகளிலும் அனுட்டிக்க சில முற்போக்கான சலுகைகளை அரசன் அளித்தான். அவர்கள் மேளம் அடிக்கலாம்; இரட்டைச் சங்கு ஊதலாம்; அவர்கள் வரவேற்புக்களிலும் மற்றும் விசேஷ வைபவங்களிலும் சந்தனம் பூசிக்கொள்ளலாம். அவர்கள் வீடுகளுக்கு வெள்ளைச் சாந்து பூசவும் சலுகை அளிக்கப்பட்டது.

கரூர் ஆனிலைக் கோயிலிலுள்ள நிர்வாக அதிகாரியும் தர்மகர்த்தாக்களும் எங்களுக்கு நல்ல வகையில் உதவினர்கள். பல

தகவல்களை எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு நன்றி தெரிவித்து விட்டு, ஆனிலைப் பசுபதீஸ்வரரை வணங்கி, கருவூர்த் தேவரிடமும் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டோம்.

அடுத்த கோயில் எது, எந்த நாயனார் பக்கத்திலிருக்கிறார் என்று எமது காரியதரிசி வேணுவின் கையிலிருந்த குறிப்பைப் பார்க்கச் சொன்னேம். ''அடுத்து இங்கிருந்து அவிநாசி போய் சுந்தரர் முதலை வாய்ப்பிள்ளை மீட்டது பார்த்து, திருமுருகன் பூண்டி போய்...'' என்று வேணு அடுக்கிக் கொண்டே போன போது சிட்டி அவரை நிறுத்தி, ''ஞானசம்பந்தரை இடை வழியில் நிறுத்திவிட்டு வந்து விட்டோம். மதுரைக்குப் போன அவர் சமணரிடமிருந்து தப்பி வந்தாரோ?'' என்று கேட்டார். உடனே யாத்திரைத் திட்டத்தை மறுபரிசீலனை செய்யவேண்டியதாயிற்று.

முக்கியமான பல அடியார்களின் தலங்களைப் பார்த்து விட்டோம். இன்னும் ஒரு சிலர்தான் பாக்கி. தேவார நாயன் மார்களில் திருநாவுக்கரசர் தாம் போகவேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்து விட்டார். சம்பந்தர் மதுரைக்குப் போனவரைப் பின் தொடர்ந்து அவர் திருமணக் காட்சியை முடித்துக்கொண்டு விட்டால் அப்புறம் நமது பிரதம கதாநாயகர் சுந்தரர் ஒருவர் தான் பாக்கி. அவருடைய திருவிளையாடல்கள் இனிமேல்தான் வேடிக்கையாயிருக்கும். அந்தக் காட்சிகளைப் பார்த்துக்கொண்டு அவரைத் தொடர்ந்து போகும்போது அங்கங்கே அறுபத்து மூவரில் எஞ்சியவர்களையும் சந்திக்கலாம். கடைசியாக சேக்கிழார் நம்மைத் திருவஞ்சைக் களத்துக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்வோம் என்று முடிவு செய்தோம்.

இந்த முடிவின்படி கரூரிலிருந்து பழையபடி திருச்சிக்கு வந்து அங்கிருந்து விராலிமலை வழியாகக் கொடும்பாளூருக்கு வந்தோம். அறுபத்து மூவரில் ஒருவராகிய இடங்கழிநாயனார் ஊர் இந்தக் கொடும்பாளூர்.

43. பெருமிழலைக் குறும்பர்

அரசனுடைய நெற்கொட்டகாரத்தில் ஒருவன் திருடி அந்த நெல்லைச் சிவனடியாரின் மகேசுர பூசைக்கு உபயோகித்தான். திருடனைக் கண்டுபிடித்து அரசன் முன் நிறுத்தினர்கள் காவலாளிகள். அரசன் விசாரித்தான். தன் களஞ்சியத்திலிருந்த நெல் சிவனடியாருக்குச் சேர்ந்தது என்று தெரிந்ததும், மகிழ்ச்சியடைந்தது மாத்திரமல்ல, ''அரண்மனையிலுள்ள எல்லாவற்றையுமே எல்லாரும் எடுத்துச் சிவனடியார்களுக்கு வழங்குங்கள்'' என்று பறையறைவித்தான்!

இதுதான் இடங்கழி நாயனார் சரித்திரம். கொடும்பாளூரில் அரசாண்ட இருக்கு வேளிர் குலத்தரசன் இடங்கழி. தான தருமங்களில் குறையாமல், சிவனடியார்களையும் ஆதரிப்பவன். இந்த ஊரிலுள்ள ஒரு அடியார் வழக்கமாகச் சிவனடியார்களுக்குத் தவறாமல் உணவளித்து வருவார். ஒரு நாள் இவர் கையில் ஒன்றுமில்லாமல் போய் விட்டது. அரசனுடைய களஞ்சியத்தில் ஏராளம் நெல் இருப்பதை இவர் அறிவார். நேரே கேட்டால் அரசனுடைய உத்தியோகஸ்தர்கள் தரமாட்டார்கள். அவர்களை மீறி அரசனிடம் போகவும் வாய்ப்பில்லை. ஆகையால் அந்த நெல்லைத் திருடுவது என்று தீர்மானித்து விட்டார். திருடித் தமக்குச் சொந்தப்படுத்துவதுதான் அதர்மம்; குற்றம். அடியார்களுக்கு உபயோகமாவதால் அது தர்மம் என்று அவர் மூளையில் பட்டது. உடனே களவாகச் சென்று அரசன் களஞ்சியத்திலிருந்த நெல்லைத் திருடிவந்து சிவனடியார்களுக்கு அன்னதானம் நடத்தினர். களஞ்சியத்தில் நெல் காணாமல் போய் விட்டதையறிந்த காவலாளிகள், திருடியவர் ஒரு அடியார் என்று கண்டுபிடித்து அவரை அரசன் விசாரணை செய்தான். ''சிவனடியார்களுக்கு அமுது செய்ய நெல் கிடைக்காததால் களஞ்சியத்திலிருந்ததைத் திருடி அவர்களுக்கு உணவளித்தேன்'' என்றார் அடியார் தைரியமாக! ''என் களஞ்சியத்திலுள்ள நெல் சிவனடியார் உபயோகத்துக்கானதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். அந்த நெல் மாத்திரமல்ல, மற்றும் பொன்னும் மணியும் பொருள்களும் நிறைந்த பண்டாரங்களையே திறந்து விடுகிறேன். சிவனடியார்கள்

யாவரும் வேண்டியதை எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று பறை யறைவித்தான் இடங்கழிமன்னன். இந்தக் கொடை இடங்கழியை நாயனார் பதவிக்கு உயர்த்தியது. இடங்கழி நாயனார் அறுபத்து மூவரில் ஒருவராகச் சுந்தரமூர்த்தியின் திருத்தொண்டத் தொகையில் இடம் பெற்றார்.

கொடும்பாளூர் மிகப் பழைய சரித்திரப் பெருமை பெற்றது. சிலப்பதிகாரத்தில் கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளுடன் நடந்து மதுரைக்கு வரும் வழியில் இங்கு தங்கிச் சென்றதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இங்குள்ள பெரிய குளம் சிலப்பதிகாரத் தில் நெடுங்குளம் என்று காணப்படுகிறது. மிகப் பழமை பொருந்திய ஊர் இது. சோழர்களுக்கு முன் இருக்குவேளிர் என்ற வேளிர் குலச் சிற்றரசர்கள் ஆண்டு வந்தார்கள். பின்னர் சோழரின் முன்னோனாகிய பூதி விக்கிரம கேசரி என்பவன் இங்கு வந்து மூவர் கோயிலையும் பிருகன் மடம் என்ற ஒரு மடத்தையும் கட்டினான் என்று சரித்திரமுண்டு. மூவர் கோயில் இன்றும் அழியாச் சின்னமாகக் காணப்படுகிறது. முன்பு மூன்று தனிக் கட்டிடங்கள் இருந்தன. இப்போது இரண்டுதான் இருக்கின்றன. சேரசோழ பாண்டியர்களான மூவேந்தரும் தனித்தனி சேவிக்க இந்த மூன்று கோயில்களும் கட்டப்பட்டன என்பது கர்ண பரம்பரைக் கதை. ஆனால் பூதி விக்கிரமகேசரி என்பவன் தன் பெயரில் ஒன்றும், மற்றிரண்டு கோயில்களைத்தன் இரு மனைவியர் கற்றளிப்பிராட்டியார், வரகுணை என்பவர்கள் பேரிலும் கட்டினான் என்று அவன் வைத்த கல்வெட்டுச் சாசனத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த பூதி விக்கிரமகேசரி சோழன் அல்ல, கங்கா வம்சத்தவன் என்பது சில சரித்திர ஆசிரியர் கருத்து. இங்கு ஒரு காலத்தில் பெரிய கோட்டை கொத்தளங்கள் இருந்தனவாம். கோட்டையின் கற்கள்தான் இப்போது நெடுங்குளத்துக் கரையில் அணைகட்ட உதவின என்று சொல்வார்கள்.

கொடும்பாளூர் இருக்குவேளூர் என்றும் மங்கம்மாள் சமுத்திரம் என்றும் இடைக்காலத்தில் வழங்கப்பட்டது. ஒரு பெரிய சிவஸ்தலமாயிருந்தது என்பதற்குச் சான்றுகளுள்ளன. மூவர் கோயிலிலிருந்து சிறிது தூரத்தில் பழைய சிவாலயம் இருக் கிறது. இது இடங்கழி நாயனார் காலத்து ஆலயமாயிருக்கலாம். இடங்கழி உருவத்தை இப்போது வேறிடத்தில் ஒரு சாந்துக் கட்டிடத்தில் வைத்து வழிபடுகிறார்கள். வயல்களில் உழும்போது பல சிவலிங்கம் அகப்படுவதாயும் சொல்கிறார்கள். ஒரு காலத்தில் இங்கு நூற்றெட்டு சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருந்தனவாம். நெடுங்குளத்தின் பக்கத்தில் 'கார்காளன்

கோட்டை' அல்லது காராளவேளாளர் கோட்டை என்ற பெயருள்ள இடம் இருக்கிறது. காராள வேளாளர்தான் இருக்கு வேளிர் மரபினர் என்று சொல்வார்கள். மங்கம்மாள் சமுத்திரம் என்ற இடப்பகுதி, மதுரையிலிருந்து ஆண்ட ராணிமங்கம்மாள், அவள் கணவன் சொக்கநாதநாயக்கர் பிறந்த நாள் ஞாபகார்த்த இனாமாக, தளவாய் லக்ஷ்மி நரசய்யா என்பவருக்குக் கொடுத்த தாகச் சொல்வார்கள்.

திருச்சியிலிருந்து விராலிமலை வந்து மதுரைக்குச் செல்லும் சாலை சில மைலில் இடது பக்கம் பிரிந்து கொடும்பாளூரை அடைகிறது. இருபக்கமும் அரசாங்கம் புதிய விவசாயப் பண்ணை களை நடத்துகிறது. சிலப்பதிகார காலத்தில் பயங்கரமான காடாயிருந்தது. ஆனால் சேக்கிழார் வருணனையில் நீரும் சுனையும் நிறைந்த மருதநிலமாகக் காட்சியளிக்கிறது. வானம் பார்த்த பூமிதான். ஆனால் நெடுங்குளத்தின் உதவியால் பெரிய பண்ணை இப்போது உற்பத்தியாகியிருக்கிறது. மூவர் கோயிலையும் பக்கத்தி லுள்ள அரசாங்க புதைபொருளாராய்ச்சிப்பிரிவின் பொருட் காட்சி மண்டபத்தையும் பார்த்து, பழைய சிவாலயத்தினுள்ளும், கற்கள் தலையில் விழாதபடி பக்குவமாய் நுழைந்து வழிபட்டுக் கொண்டு, இடங்கழி நாயனார் நின்ற நிலையில் காட்சி தரும் சாந்துக்கட்டிடத்தையும் பார்த்துக் கொண்டு, நேரே புதுக் கோட்டைக்கு வண்டியைச் செலுத்தினோம்.

ஐந்தினையில் பாலை என்பது எப்படியிருக்கும் என்று அனுபவித்துப் பார்க்கவேண்டுமானால் கொடும்பாளூரிலிருந்து புதுக்கோட்டைக்குப் பிரயாணம் செய்து பார்த்தால் தெரியும். எக்கச்சக்கமாக வெயில் கொளுத்தியது. இடையிடையே கள்ளியும் கருவேலும் அடர்ந்தகாடுகள். சுடு காற்று உடலைத் தகித்தது. விரைவாகவே புதுக்கோட்டைக்கு வந்து இளைப்பாறி மத்தியான உணவைச் சாப்பிட சாரதி ராதாகிருஷ்ணன் சிறிது தயவு காட்டி விரைவாகவே வண்டியைச் செலுத்தினார் என்பதை இங்கே சொல்லி வைக்கவேண்டும்!

நேரே மதுரைக்குப் போகாமல் நாங்கள் புதுக்கோட்டைக்கு வந்தது மற்றொரு நாயனார் இந்தப் பக்கத்தில் யாருக்கும் தெரி யாமல் மறைந்து வசிக்கிறார் என்று கேள்விப்பட்டதால் தான். புதுக்கோட்டையில் மத்தியான உணவை முடித்துக்கொண்டு திருமயம் ரோடில் போய் ஒரு மரத்தடியில் சிறிது நேரம் இளைப் பாறினோம். பின்னர் பெருமிழலையைப் பற்றி எங்கள் குறிப்புப் புத்தகத்தில் எழுதியதைத் தேடிப்பார்த்தோம். பெரிய புராணத்

தில் இதனை ''மிழலைநாட்டுப் பெருமிழலை'' என்று தான் சேக்கிழார் சொல்லியிருக்கிறார். பல ஆராய்ச்சியாளர் பல ஊர் களைச் சொல்கிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவீழி மிழலைக்குப் பக்கத்தில் என்றும், இராமநாதபுரம் மாவட்டத்தில் என்றும், மதுரைக்குப் பக்கத்திலென்றும் பலவித அபிப்பிரா யங்கள். இருந்தும் கோவை சுப்பிரமணிய முதலியார்தான் எங்களுக்குப் பெருமளவில் வழி காட்டி. அவர் இந்த ஊர் புதுக்கோட்டைக்குச் சமீபமாக உள்ளது என்று சொல்லி அதை அடையும் வழியையும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். புதுக்கோட்டை திருமயம் ரோடில் போய், பொன்னமராவதிக்குச் செல்லும் சாலையில் திரும்பினால் பேரையூர் என்ற இடத்துக்குச் சமீபமாகவுள்ளது பெருமிழலை என்று சுப்பிரமணிய முதலியார் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அந்தத் துணிவோடுதான் நாங்களும் புதுக்கோட்டை வழியாக வந்தோம். பொன்னமராவதி ரோடில் சென்று கொண்டிருக்க, ''பேரையூர்'' என்ற பெயர்ப் பலகையும் கைகாட்டியும் இருந்தன. உடனே அந்தத் திசையில் வண்டியைத் திருப்பி ஒன்றரைமைல் போனதும் ஒரு சிவன் கோயில் இருக்கக் கண்டோம். இதுதான் நாம் தேடிவந்த இடமாயிருக்கலாம் என்று அந்தக் கோயிலின் பக்கம் போனோம். பக்கத்திலுள்ள ஐந்தாறு வீடுகளில் ஒரு வீட்டிலுள்ளவர் கையில் சிறு குழந்தையுடன் வெளியே மரத்தடியில் உட்கார்ந்திருந்தார். அவரையண்டிச் சென்று நாங்கள் தேடும் பெருமிழலையைப் பற்றிச் சொன்னோம். அந்த மனிதர் ஒரு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர். தமக்கு அவ்வளவாகத் தெரியாது, ஆனால் அடுத்த வீட்டில் குருக்கள் இருக்கிறார். அவர்தான் பக்கத்திலுள்ள தேவர் மலைக்குப் போய் பூசை செய்து வருகிறார். அவரைக் கேளுங்கள் என்று சொல்லி ஒரு பையனைக் கூப்பிட்டு, குருக்களை அழைத்துவரச் சொன்னார். குருக்கள் இளைப்பாறிக் கொண்டிருந்தார் என்று நினைக்கிறோம். சட்டென்று வெளியே வரவில்லை. வீட்டிலுள்ள இரண்டொரு பெண்கள் வாசற்படியில் வந்து நின்று எங்களை எட்டி எட்டிப்பார்த்தார்கள். பிறகு ஒரு வழியாகக் குருக்களை அரையில் வேஷ்டியைச் சரிசெய்துகொண்டு வந்தார். நாங்கள் எங்கள் விஷயத்தைச் சொன்னவுடன் குருக்கள் அவ்வளவாக ஒத்துழைக்கக்காணோம். தேவர்மலைக்கு அவர் போவதுதானும். பெருமிழலைக்கோயில் அதுதானும். ஆனால், ''இப்போ எப்படி அங்கே போவது? எனக்கு வசதிப்படாது'' என்று பின் வாங்கினார். கூட நின்ற பள்ளி ஆசிரியர் கொஞ்சம் விஷயந்தெரிந்தவர். குருக்களிடம் பேசி எங்கள் மீது சிறிது நம்பிக்கை வரச்செய்தார். இதற்கிடையில் வேணு தன் கையிலிருந்த டேப் ரிக்கார்டரைத் திருப்பிவிட்டு வேடிக்கை பார்த்தார். ஏற்கெனவே கரூரில்

ரிகார்ட் செய்த பேச்சு வெளிவந்தது. பள்ளி ஆசிரியரும் குருக்களும் அதைக் கேட்டார்கள். அக்கிரகாரத்திலிருந்து நாலைந்து பெண்களும் ஆச்சரியத்தோடு வெளியே வந்து காது கொடுத்துக் கேட்டார்கள். அதன்பின்தான் குருக்களுக்கு எங்கள் மீது நம்பிக்கை பிறந்தது. சரி என்று சொல்லி வீட்டுக்குள் போய் உடையை மாற்றிக்கொண்டு எங்களுடன் வரத்தயாரானார். காரில் ஏறி எங்களுடன் பேசிக்கொண்டு வரும்வழியில்தான் அவர் தமது ஆரம்ப தயக்கத்தைப் பற்றி விளக்கினார். சில நாட்களுக்கு முன்பு நாம் போகப்போகிற வழியில் தனிமையான இடத்தில் ஒரு கொலை நடந்ததாம். யாரோ நாலுபேர் ஒரு வாடகை மோட்டாரைப் பிடித்துக்கொண்டு போய் ஓரிடத்தில் நிறுத்தி மோட்டார் சாரதியைக்கொன்று விட்டுக் காரோடும் பணத்தோடும் ஓடி விட்டார்களாம்! இதைச் சொல்லிவிட்டு அவர் எங்களைச் சந்தேகித்ததற்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

பொன்னமராவதிரோடில் மறுபடியும் வலதுபக்கம் திரும்பி சுமார் ஒன்றரைமைல் போனபின் வண்டியை நிறுத்தி ஒரு மாட்டுக்காரப் பையனிடம் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு இடது பக்கம் காட்டிலே ஒற்றையடிப் பாதையில் நடக்க ஆரம்பித்தோம். வண்டியை விட்டுப் போக ராதாகிருஷ்ணனுக்குக் கொஞ்சம் கஷ்டமாய்த்தானிருந்தது. குருக்களுக்கு மாட்டுக்காரப் பையன் தெரிந்தவனுகையால் அந்த பலத்தில் காரை நிறுத்தி வைத்தோம். கச்சாரோடிலிருந்து சுமார் அரைமைல் தூரம் முட்புதர்களையும் செடிகளையும் கடந்து ஒற்றடிப் பாதையில் நடந்து ஒரு குன்றையடைந்தோம். இதைத்தான் தேவர் மலையென்கிறார்கள். மலையின் ஒரு பக்கத்தில் குடவரை. எதிரே ஒரு சிறிய தோப்பு. கிராமத்துப் பெண் ஒருத்தி ஒரு மரத்தின் கிளையில் ஏணை கட்டிக் குழந்தையைப் போட்டுவிட்டு, விறகு வெட்டிக் கொண்டிருந்தாள். ஒரு கிழவன் நாலைந்து ஆடுகளை மேயவிட்டு மரத்தடியில் கோலுடன் உட்கார்ந்திருந்தான். குருக்களைக் கண்டதும் அறிமுகத்துடன் விசாரித்தான். குருக்கள் எங்களையழைத்துக் கொண்டு போய் குடவரைக் கோயிலின் வாசற்கதவைத் திறந்தார். உள்ளே சுயம்புவான லிங்கம். கருவறையின் வாசலில் இருபக்கமும் அகஸ்தியர் புலஸ்தியர் ஆகிய இரு முனிவர்களும் துவார பாலகர்களாக நிற்கிறார்கள். பக்கத்தில் மற்றொரு கருவறை. அதில்தான் பெருமிழலைக் குறும்ப நாயனார் ஒரு காலை மடக்கி மறுகாலைக் குத்தாக வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார். கையில் ஒரு தண்டு பிடித்திருக்கிறார். தலைக்குப் பின்னால் பிரபைபோன்ற ஓர் அமைப்பு. மிகப் பழைய காலத்தில் செதுக்கப்பட்ட சிலையென்பது அந்தக் கல்லின்

திருத்தலையூர் - பக். 170

உருத்திரபசுபதி நாயனார் (தாராசுரம்) - பக். 170



திருப்புகலூர் - பக். 177

முருகநாயனார் (தாராசுரம்) – பக். 175

ஏனநல்லூர் - பக். 181

யாழ்மூரி நாதர் - பக். 185

யாழ்ப்பாணர் (தாராசுரம்) - பக். 184

காரைக்காலம்மையார் கோயில் - பக். 185



திருத்தெளிச்சேரி - பக். 188



சாத்தமங்கை - பக். 191

திருநீலநக்கர் (தாராசுரம்) - பக். 191



திருமருகல் - பக். 193

செங்காட்டங்குடி - பக். 195

கூற்றுவர் - பக். 213

அரிவாட்டாயர் - பக். 215



தண்டலை – பக். 216



காவிரி (கண்டியூர் - திருவையாறு) - பக். 221



திருவையாறு அப்பர் குளித்த குளம் - பக். 225

தன்மையிலிருந்து தெரிந்தது. சிற்பமுறையும் பழமையானது. இலங்கையில் ஈசுரமுனியா என்ற இடத்தில் காணப்படும் சிலையும் மாமல்லபுரத்தில் அர்ச்சுனன் தபசு என்ற சிற்பத் தொகுதியில் காணப்படும் சிலை அமைப்பும் இந்தப் பெருமிழலைக் குறும்ப நாயனூர் உருவத்தை ஒத்திருக்கின்றன. அனேகமாக கி.பி. ஏழாம் எட்டாம் நூற்றாண்டுக்குரிய சிற்பமாக எண்ணத் தோன்றுகிறது. நிச்சயமாகப் பல்லவ சிற்பம் என்பது தெரிந்தது. இந்தக் குறும்பநாயனூர் வீற்றிருக்கும் குடவரைக்குப் பின்னல் நெடிது வளர்ந்த தேவர்மலை என்ற குன்றிலிருந்து ஒரு பக்கத்தில் சிற்றருவி யொன்று கொட்டிக் கொண்டிருக்கிறது. அற்புதமான நீர். அந்த வைகாசி மாதத்திலும் அந்தப் பாலைவனத்தில் ஒரு அருவி பாய்வது ஆச்சரியம்தான்.

பெருமிழலைக்குறும்ப நாயனூர் பற்றிப் பெரிய புராணத்தில் கண்டது மிகச் சிறிய கதைதான். இந்த நாயனூர் முதலில் சிவனடியார்களை வழிபட்டு அவர்களுக்குச் சேவை செய்து வந்தார். பின்னர் யோகப் பயிற்சியில் ஈடுபட்டு, அட்டமாசித்தி களிலும் தேர்ச்சி பெற்று, நிஷ்டையிலிருந்தே பொழுதைக் கழித்தார். சதாகாலமும் அவருக்கு மானச குரு சுந்தரமூர்த்தி நாயனூர். அவரையே தியானித்துக் கொண்டு இந்த மிழலையில் காட்டிலே வசித்து வந்தார். சுந்தரமூர்த்தி நாயனூர் திருவஞ்சைக் களத்திலேயிருந்து திருக்கயிலாயத்துக்கு வெள்ளை யானையிலே போனூர் என்பதை அறிந்தவுடனேயே தமது சித்தியால் அறிந்த குறும்பனூர், "எனது குரு போகும் இடத்துக்கே அடியேனும் போவேன்" என்று சொல்லி கபாலத்தின் வழியாகத் தம் ஆன்மாவை, சூக்கும சரீரத்தைப் பாயவிட்டு, சுந்தரர் கயிலையில் போய்ச்சேரும்போது அங்கே காத்து நின்று எதிர்கொண்டாராம் சுந்தரரை!

எங்களுக்கு வழிகாட்டிய சுந்தரக் குருக்களுக்கு குறும்ப நாயனூர் முதலில் ஆடுமேய்க்கும் இடையராக இருந்தார் என்று தான் தெரியும். "வயோதிக காலத்தில் இங்கே அவர் தபசிலிருந்து முத்தியடைந்ததாக ஐதிகம். இப்போதும் ஆடி மாதத்தில் சித்திரா நட்சத்திரத்தில் அபிஷேகம்; சுமார் ஆயிரம் பேருக்கு சாப்பாடு போடுகிறார்கள். இந்தக் கைங்கரியத்தைச் செய்பவர்கள் இந்த ஊருக்குப் பக்கத்திலேயுள்ள மல்லாங்குடியைச் சேர்ந்த தேவர்கள். வழி வழியாக விடாது அவர்கள்தான் செய்து வருகிறார்கள். சுந்தரர் முத்தியடைந்த நாள் ஆடி சுவாதி. குறும்ப நாயனூர் அவருக்கு முன்னரே கயிலாயத்தில் போய்ச்

சேர்ந்து விட்டாராகையால் ஆடி சித்திரையில் குருபூசை நடக்கிறது'' என்று சுந்தரக்குருக்கள் விளக்கம் தந்தார்.

பேரையூர் நாகநாதசுவாமி கோயில் பூசைப்பொறுப்பு நமது சுந்தரக் குருக்களுடையது. அங்கும் எங்களை யழைத்துப்போய்க் காட்டி, அதன் ஐதிகங்களையெல்லாம் விளக்கிச் சொல்லிவிட்டு, திரும்பி வந்ததும் தமது இல்லத்துக்கு அழைத்துக் காப்பி தந்து உபசரித்து அனுப்பினர். பெருமிழலைக் குறும்ப நாயனாரைத் தேடிக் கண்டு பிடித்துவிட்டது எங்கள் யாத்திரையில் மறக்க முடியாத ஒரு அனுபவம்.

44. இளையான்குடி சாமியார்

அறுபத்து மூவரில் ஒருவரான இளையான்குடி மாற நாயனார் வசித்த இளையான்குடி யென்பது எங்கேயிருக்கிறது என்பதைப் பற்றிப் பலவித அபிப்பிராயங்களுள்ளன. சோழ நாட்டிலே திருநள்ளாற்றுக்கு மேற்கே உள்ளது என்பது ஒரு கருத்து. பரமக்குடிக்கு வடக்கேயுள்ளது இவ்வூர் என்று வேறு சிலர் கருத்து. தொண்டை மண்டலத்திலும் இருப்பதாக இன்னும் சிலர் சொல்வார்கள். இப்படிப் பலர் பல விதமாகச் சொல்ல நமது நண்பர் கோவை சுப்பிரமணிய முதலியார் ''ஆசிரியர் இப்பதிக்குரியது எந்த நாடு என்று கூறவில்லை. இது இன்னதெனத்துணியக் கூடவில்லை'' என்று கையை விரித்து விட்டார்!

அறுபத்து மூன்று நாயன்மார்களது ஊரையும் எப்படியாவது தரிசித்துவிட வேண்டுமென்று விரதம் கொண்ட எமக்கு இளையான்குடியை விட்டுவிட முடியவில்லை. நல்ல வேளையாகப் பழைய பத்திரிகைகள் சிலவற்றை இலக்கிய ஆராய்ச்சிக்காகப் படித்துக்கொண்டு வருகையில் 1910ம் ஆண்டு பிப்ரவரி மாதத்து 'வித்யாபானு' இதழில் இளையான்குடியைப் பற்றி சில செய்திகளைக் கண்டு ஆனந்தமடைந்தோம். இப்பத்திரிகையின் ஆசிரியர் மதுரை கந்தசாமிக் கவிராயர் மிகவும் ஆழ்ந்த அறிவும் பரந்த கல்வியும் பெற்றவர். அவர் எழுதிய குறிப்புகள்:

''மதுரை ஜில்லாவில் பரமக்குடிக்குச் சற்று வடகிழக்குத் திசையில் ஏழு மைல் தூரத்தில் இளையான்குடி என்ற ஓர் வளநகரம் இருக்கிறது. இதுவே இளையான்குடி மாற நாயனார் வசித்திருந்த இடமென்பதற்கு கீழ்க்கண்ட சான்றுகளுள்ளன. 1. இவ்வூரிலே இம்மாறநாயனார் குடியில் தாயத்தார்களான வம்சத்தார்கள் பலர் வசிக்கிறார்கள். 2. முளைவாரி யமுதளித்த நாற்றங்கால் என்ற பெயரால் வயல்நிலமுள்ளது. ஆயிரம் வருஷங்களுக்கு முற்பட்டே வழங்கி வருகிறதாம். 3. அக்கால முதல் இறைப்பொருள் வாங்காது சர்வமான்யமாகவுள்ளது

நிலம். 4. பழைய சிவாலயம் இப்போது (1910) கிலமாயுள்ளது. 5. மாறன் பாண்டிய நாமம்.''

இந்தக் குறிப்பு 1910ம் ஆண்டிலேயே எழுதப்பட்டது. இதை வைத்துக்கொண்டு, பரமக்குடிக்குப் பக்கத்திலுள்ள இளையான் குடியையே போய்ப்பார்ப்பதென்று முடிவு செய்தோம். பெரு மிழலையிலிருந்து பொன்னமராவதி, திருப்பத்தூர் வழியாக வரும்போது பொழுது சாய ஆரம்பித்தது. ஆகையால் நாங்கள் நேரே மதுரைக்கு வந்து மறுநாள் இளையான் குடிக்குப் போகலாம் என்று ஏற்பாடு. ஆனால் மதுரையில் நண்பர் ஒருவருக்கு உடல் நலக்குறைவா யிருந்ததால் நான் மாத்திரம் மறுநாள் அதிகாலை யிலேயே சிவகங்கை மார்க்கமாக இளையான்குடி போய்ச் சேர்ந்தேன்.

நாம் முதலில் தேடுவது எந்த ஊரிலும் ஒரு ஈஸ்வரன் கோயில். அதன் பின் சம்பந்தப்பட்ட நாயனாரைத் தேடுவோம். இங்கேயும் வந்தவுடன் விசாரித்துக் கொண்டு ஈஸ்வரன் கோயிலைத் தேடிப் பிடித்தேன். கோயில் வாசலில் அரசமரத்து நிழலில் ஒரு பையன் நின்றான். சந்நிதியில் இடப்புறத்தில் ஒரு மகாவீரர் விக்கிரகம், பிரமாண்டமான சிலை, சாந்துக் கட்டிடத்தினுள்ளே இருக்கக் கண்டு இது என்ன சுவாமி என்று அந்தப் பையனிடம் கேட்டேன். ''இதுதான் அம்மணச்சாமி'' என்றான் பையன். திகம்பர வேடத்தி லிருப்பதால் அம்மணசாமி என்று பேர் வந்ததாக்கும் என்று நினைத்தபோது சமணசாமி என்பது அமணசாமியாகி, அம்மண சாமியாகிவிட்டதென்ற விளக்கம் தோன்றியது!

இந்தச் சிலையின் நெற்றியிலும் புயங்களிலும் சந்தனத்தால் நாமம் போடப்பட்டிருந்தது. கோயிலின் அயலிலேயே குருக்களும் குடியிருப்பதால் அந்தச் சமயத்தில் அவரைத்தேட வேண்டிய அவசியமில்லாமல் போய்விட்டது. குருக்களும் இன்னொருவரும் கோயில் மண்டபத்திலே பேசிக்கொண்டிருந்தார்கள். புதிதாகத் திருப்பணி செய்யப்பட்டிருக்கிறது கோயில். பிராகாரத்தில் தளங்களும் மண்டபங்களும் அழகாகக் கட்டப்பட்டிருக்கின்றன. குருக்களும் அவருடனிருந்தவரும் இளையான்குடி மாறநாயனாரைப் பற்றி சில கதைகள் சொன்னார்கள். நாயனாருக்கு உட்பிராகாரத் தில் தனியாக ஒரு சந்நிதி அமைத்திருக்கிறார்கள்.

குருக்களுக்கு அதிக விவரம் தெரியாது. உடனிருந்தவர் கோயில் மேளக்காரர் கொஞ்சம் விஷயமறிந்தவர். அவர்தான் சொன்னார், ''இந்த ஊரிலே குமாரசாமிப்பிள்ளை என்று ஒருவர் இருக்கிறார். ஆண்டுதோறும் அவர்தான் இளையான்குடிமாற

நாயனாருக்கு குருபூசை நடத்துபவர். அவர் அந்தப் பரம்பரையில் வந்தவர்தான்'' என்று சொல்லி அவர் வீட்டைக் காண்பிக்க ஒரு பையனையும் உடன் அனுப்பி வைத்தார். ஆனால் நான் போன சமயம் குமாரசாமிப்பிள்ளையைக் காண முடியவில்லை. அவர் வெளியூர்.போய்விட்டதாக அறிந்தேன். பக்கத்து வீட்டிலிருந்த ஒருவர், ''இங்கே ஒரு மடமிருக்கிறது. சாமியார் ஒருவர் அங்கே இருக்கிறார்'' என்றார். அதுவாவது பொழுது போக ஒரு வாய்ப்பு என்று நினைத்து மடத்தை நோக்கி நடந்தேன்.

இளையான்குடி மாறநாயனாரைப் பற்றி முதலில் தெரிந்து கொள்வோம். இளையான்குடி என்ற ஊரிலே ஒரு வேளாளப் பிரபுவாயிருந்தவர் மாறன் என்பவர். இவர் சிவனடியார் எத்தனை பேர் வந்தாலும் உபசரித்து விருந்து செய்வித்து அனுப்புவார். பலகாலம் இது நடந்து வந்தது. சில சமயம் வறுமை வந்தும் அவர் இத்தொண்டை விடவில்லை. ஒரு நாள் நள்ளிரவில் மழை கொட்டிக்கொண்டிருக்கிறது. யாரோ வாசலில் வந்து கதவைத் தட்டினார். பார்த்தவுடனேயே அவர் ஒரு சிவனடியார் என்றும் நல்ல பசியுடன் மழையில் நனைந்து வருகிறார் என்றும் மாறனார் தெரிந்து கொண்டார். அடியாரை ஈரம்போக்கி ஓர் ஆசனத்தில் அமரச் செய்து மாறனார் உள்ளே போய் மனைவியுடன் ஆலோசனை நடத்தினார். எதிர்பாராத விதமாக அவர்களிடமிருந்த சிறிதளவு நெல் முழுவதையும் அன்று பகல் தான் வயலில் விதைத்து விட்டார்கள். வீட்டில் அரிசியோ வேறு தானியமோ ஒன்றும் கிடையாது. அவர்களே அன்று பட்டினிதான். இந்த நிலைமையில் அடியாருக்கு எப்படி உணவளிப்பது? மனைவி யோசித்தார்.'' இந்த நள்ளிரவில் நாம் யாரிடம் போய் இரவல் கேட்பது? அல்லாமலும் கடந்த இரண்டு மூன்று தினங்களாகவே கடன் வாங்கிவிட்டதால் இனிமேல் நமக்கு உதவி செய்யவும் தயங்குவார்கள். ஆனால், ஒன்று செய்யலாம். காலையில் வயலிலே விதைத்த நெல்லை வாரிக் கொண்டு வந்தால் நான் எப்படியாவது சமைத்துத் தருகிறேன்'' என்றார். மாறனாருக்கு ஒரே ஆனந்தம். உடனே சிவனடியாரைச் சிறிது படுத்திருக்கும்படி சொல்லிவிட்டு, வயலுக்கு ஓடினார். மழை கொட்டிக் கொண்டிருக்க சேற்றையும் தண்ணீரையும் சேர்த்துத் தாம் விதைத்த நெல் மணிகளை ஒரு கூடையில் வாரினார். உள்ளே கொண்டுவந்து கழுவி நெல்லை மாத்திரம் பிரித்தெடுத்தார். அந்தச் சமயத்தில் மனைவி வேறொரு பிரச்னையைச் சொன்னார். அடுப்பு எரிக்க விறகில்லை! சிறிதும் யோசிக்காமல் மாறனார் வீட்டின் பின்புறம் போனார். மேற்கூரையில் கட்டியிருந்த சில கொம்பு களைப் பிரித்துக் கொண்டு வந்து மனைவி கையிற் கொடுத்தார். மனைவியார் மளமளவென்று காரியத்தில் இறங்கினார். வாரிக்

கொண்டு வந்த நெல்லை முதலில் வறுத்துக்குத்தி அரிசியாக்கி உலையிலிட்டார். தொட்டுக் கொள்ளக் கறிக்கு என்ன செய்வ தென்று யோசித்துவிட்டு, பின் கொல்லையில் கீரை முளைத்தி ருந்தது ஞாபகம் வரவே அந்தக் கீரையைப் பறித்து வந்து கறியாக்கினர். வந்த அடியாருக்குப் பசிதீர உணவளித்து மகிழ வேண்டும் என்று கணவனும் மனைவியும் அடியார் படுத்திருந்த இடத்தில் வந்து பார்த்தார்கள். ஆளையே காணவில்லை! எங்கு போனார் என்று திகைத்து நிற்கையில் இறைவன் குரல் அசரீரி யாகக் கேட்டது. ''அன்ப, நீயும் உன் மனைவியும் குறைவற்ற செல்வத்துடன் வாழ்ந்து சிவலோகம் சேர்வீர்களாக!''

இத்தகைய பண்பு நிறைந்த காரணத்தால்தான் இளையான்குடி மாறன் என்பவர் நாயனார் என்ற தகுதி பெற்று சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருத்தொண்டத் தொகையில் ''இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்'' என்று போற்றப்பட்டார்.

* * *

மடத்துச் சுவாமியைத் தேடிப்போனபோது மடம் வெறிச் சோடிக்கிடந்ததைக் கண்டேன். திண்ணையில் ஒரு வழிப்போக்கர் படுத்திருந்தார். என்னைக் கண்டதும், ''சாமியார் உள்ளேதானி ருக்கிறார். உட்காருங்கள்'' என்று சொல்லிவிட்டு, யாரோ ஒருவர் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டார். ஒரு வேலைக்காரன் வந்து எட்டிப் பார்த்துவிட்டு உள்ளே போனான். அடுத்த நிமிஷம் குள்ள மான, சிறிய உடலில் காவி வஸ்திரம் போர்த்த ஒருவர், அமைதி யான குரலில், ''வாருங்கள், உட்காருங்கள், எங்கேயிருந்து வருகிறீர்கள்?'' என்று விசாரித்தார். நான் என் விஷயத்தைச் சொன்னதும் அளவற்ற சந்தோஷத்தில் பூரித்தார். ''என்ன சிறந்த சேவை! என்ன தொண்டு! இம்மாதிரியான காரியத்தில் இக்காலத்திலே ஆயிரத்தில் ஒருவர் தானும் முயல்வதில்லை. தாங்கள் இதில் ஈடுபட்டிருப்பது சிறந்த காரியம்'' என்று வாழ்த்தி விட்டுச் சொன்னார்: ''இந்த இளையான்குடிதான் மாறநாயனார் பிறந்து சேவை செய்த சிறந்த பதி. கடந்த 1918ம் ஆண்டு முதலாக அடியேன் காளையார் கோயிலுக்கும் இதற்குமாக மாறி மாறிச் சென்று கொண்டிருக்கிறேன். இந்த ஊரில் ஒரு காலத்தில் சைவவேளாளர்கள் மிகுதியாயிருந்தார்கள். ஆனால் வேளாண்மை குறைந்தவுடன் அவர்கள் பலர் வேறு ஊர்களுக்குப் போய் விட்டார்கள். குமாரசாமிப்பிள்ளை குடும்பம் ஒன்று தான் இங்கே நிரந்தரமாக, பல சந்ததிகள் வழியாக, இங்கே வாழ்ந்து வருகிறது. அவர்கள் இளையான்குடி மாறனார் பரம்பரை என்பதை நம்பலாம். இன்றும் அவர்கள் வீட்டில் விருந்துக்குக் குறைவில்லை. இங்கே

நான் தங்கியிருக்கும் மடமும் இதைச் சேர்ந்த சிறிது நெல்வயலும் மடத்துக்காக ஒரு முஸ்லிம் பெரியார் இனாமாகக் கொடுத்து உதவியது. வேதாந்த மடம் என்று, சங்கராசாரியார் ஆசியுடன் இதனை நடத்தி வருகிறேன்,'' என்றார் அவர். சிவானந்த ஞான தேசிக சுவாமி என்ற பெயரைக் கொண்ட அந்தத் துறவி திருநெல்வேலியைச் சேர்ந்த சைவப்பிள்ளை. பல ஆண்டுகளுக்கு முன்பு துறவியாகி, காளையார் கோயிலில் சேவை செய்து வந்தார். படித்தவர், சில நூல்கள் செய்திருக்கிறார். இளையான்குடி மாறநாயனார் புராணம் ஒன்று பாடி அச்சிட்டிருக்கிறார். அடக்கமும் பண்பும் நிறைந்தவர். நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தபின் மணி பன்னிரண்டாகி விட்டது. ''சாப்பாடாயிற்று?'' என்று கேட்டார். ''இனிமேல்தான் ஆகவேண்டும். மதுரைக்குத் திரும்பிப் போய் அங்கே பார்த்துக்கொள்ளலாம்'' என்றேன். அவர் உடனே, ''இங்கேயே சாப்பிட்டுப் போகலாம். ஏதோ இருக்கிறதை வைத்து நாமிருவரும் பகிர்ந்து கொள்வோம்'' என்று தன்னடக்கத்துடன் சொன்னார். சரி என்று ஒப்புக் கொண்டு சுவாமிகளுடன் உட்கார்ந்து சாப்பிட்டேன். சாப்பிடும் போது தான் இது உண்மையில் இளையான்குடி மாறன் ஊர் என்பது உறுதியாகிவிட்டது! கைக்குத்தரிசிச் சாதம், மடத்துக்குப் பின்னாலுள்ள நிலத்தில் விளைந்த நெல்லில் கிடைத்தது! மடத்துப் புழைக்கடையில் விளைந்த கீரையில் கறி! மோர், வடுமாங்காய் ஊறுகாய்! அரிசியையும் கீரையையும் பார்த்த வுடனேயே சுவாமிகளிடம், ''மாறநாயனார் அடியாருக்குக் கொடுத்த அதே பக்குவத்தை இங்கே பார்க்கிறேன். என்ன பொருத்தம்!'' என்றேன். எதிர்பாராத இந்தப் பொருத்தத்தைக் கண்டு சுவாமிகளே ஆச்சரியப்பட்டார். ''இறைவனின் சோதனை தான் இதுவும். அந்தச் சிவனடியார் போலவே நீங்களும் இன்று வந்தது எனக்குத்தான் பெருமை!'' என்றார் அவர்.

எதிர்பாராத இந்த நிகழ்ச்சி எனக்கு மறக்க முடியாத ஒரு ஞாபகப்பொருள். பக்கத்து வயலில் விளைந்த நெல்லரசியும் கொல்லையில் வளர்ந்த கீரையும் இளையான்குடிக்கு ஒரு அடையாளம் போலும். பக்கத்திலே 'முளைவாரி அமுதளித்த' வயல் இன்னும் காணப்படுகிறது. அது இப்பொழுதும் சர்வ மானிய நிலமாகவே இருந்து வருகிறது. இளையான்குடிச் சைவ மடத்துக்கு ஒரு முஸ்லிம் பெரியார் அன்பளிப்புச் செய்த காரணத் தால், இவ்வூர்க்கோயில் திருவிழாவின்போது முஸ்லிம்களே சிறு கடைகள் வைப்பதற்குப் பிரத்தியேக உரிமை கொடுக்கப்பட்டி ருக்கிறது. உண்மையான இளையான் குடியைத் தரிசித்த திருப்தி யோடு, சிவானந்த ஞான தேசிக சுவாமிகளுக்கு நன்றி கூறி என் வணக்கத்தைச் செலுத்திவிட்டு மதுரைக்குத் திரும்பினேன்.

45. மதுரை அற்புதங்கள்

பாரத நாட்டில் பௌத்தமும் சமணமும் தோன்றியது கி. மு. ஆரும் நூற்றாண்டில் என்பது வரலாறு. இச்சமயங்களின் ஆதி நாயகர்களான புத்தரும் மகாவீரரும் ஏற்கெனவே கைக் கொண்டிருந்த வைதிகக் கொள்கைகளிலிருந்து புதிய மார்க்கங்களை உபதேசிக்கத் தொடங்கிய காலம் அது. ஆனால் அந்தக் கொள்கை விளக்கங்கள் நடைமுறைச் சமயங்களாக நாட்டில் பரவ ஆரம்பித்தது இரண்டு மூன்று நூற்றாண்டுகளின் பின்னரே. வைதிக மதம் ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள், மேல் நிலையிலுள்ள மக்களிடையே அதற்கென உரிய சமஸ்கிருத மொழி யைக் கருவியாகக் கொண்டு வழங்கியபோது, பொதுமக்கள் மொழியான பிராகிருதத்தில் புத்தரும் மகாவீரரும் கொள்கை பரப்பினர்கள். வேதத்தின் முக்கிய அம்சமான வேள்வியையும் அதனுடன் சம்பந்தப்பட்ட கிரியைகளையும் அவர்கள் எதிர்த்தனர். அஹிம்சையையும் தயையையும் பாராட்டினர். இதன் பேரால் இவ்விருசமயங்களும் விரைவிலே வடநாட்டில் பரவி, கி. மு. இரண்டாம் நூற்றாண்டளவில், அசோகன் காலத்தில், தெற்கேயும் வரத் தொடங்கின. ஆனால் கி. பி. நான்காம் ஐந்தாம் நூற்றாண் டளவில் தான் சமணமும் பௌத்தமும் போட்டி போட்டுக் கொண்டு தமிழ் நாட்டில் தீவிரமான இயக்கங்களாக மாறின.

எந்த ஒரு சமயமும் மக்களிடையே தமது கொள்கையைப் பரப்பி அவர்களைத் தமது பிடிக்குள்ளே கொண்டு வருவதற்குப் பல வித ஆயுதங்களைக் கைக்கொள்வது சரித்திரத்தில் நாம் கண்ட உண்மை. புத்தர் காலத்திலேயே வைதிகத்தாரும் சமணரும் பௌத்தரும் நடத்திய போட்டிகளையும் தந்திரங்களையும் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். மக்களின் ஆதரவைப் பெற அவர்கள் பலவித்தைகளைக் கையாண்டார்கள். மந்திரம், தந்திரம், வாதம் என்ற மூன்று வகையான உபாயங்களையும் கையாண்டார்கள். வடநாட்டில் நடந்த இதே முறைகள் தென்னாட்டிலும் நடந்திருக் கின்றன. கி. பி. ஆரும் ஏழாம் நூற்றாண்டுகளில்தான் இந்தப்

பிரச்சார யந்திரங்கள் முழுவேகத்துடன் செயல்பட்டன என்பதற்கு நாவுக்கரசரதும் சம்பந்தரதும் வாழ்க்கையனுபவங்கள் நமக்குச் சாட்சி பகருகின்றன.

தமிழ்நாட்டிலே கிறிஸ்துவுக்கு முன்னுள்ள நூற்றாண்டுகளில் சமயநிலை எப்படி யிருந்ததென்று ஆதாரத்தோடு சொல்ல முடியாது. ஆனால், கி. பி. நாலாம் ஐந்தாம் நூற்றாண்டுகளில் வைதிக சமயம் ஓரளவு பிடிப்புக் கொண்டிருந்தபோது சமணமும் பௌத்தமும் பொதுமக்கள் செல்வாக்குப் பெற்றுத் தீவிரமாகப் பரவ ஆரம்பித்தன. பௌத்தம் ஓரளவோடு நின்று விட்டது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டைத் தரிசித்த சீன யாத்திரிகன் யுவான் சுவாங் என்பவன், பௌத்தம் நலிந்து போனதையும் சமணம் பெருவாரியாக வளர்ந்ததையும் பார்த்து வருந்தினான். சமணம் பெருவாரியாகப் படர்ந்தது உண்மைதான். காரணம் அவர்கள் வைதிகர்களைப் போலத் தமது மதத்துக்கும் கிரியைகளுக்கும் தனியாக ஒரு பாஷையை வைத்திருக்கவில்லை. வைதிகர்கள் வேள்விக்கும் மந்திரங்களுக்கும் வழிபாட்டு அருச்சனைகளுக்கும் சமஸ்கிருதம் என்ற ஒரு தனி மொழியை அமைத்து வைத்துவிட்டனர். ஆனால் வடநாட்டில் பேச்சு மொழியாகிய பிராகிருதத்திலேயே தமது சமயத்தை வளர்த்த சமணர்கள் தமிழ் நாட்டிலும் தமிழ் மூலமாகவே வளர்க்கத் துணிந்தனர். அதற்கெனத் தமிழையும் தமிழ் மொழியின் இலக்கணத்தையும் கற்றனர். புதிய இலக்கணங்களை எழுதினர். இலக்கியங்களையும் யாத்தனர். பேச்சுத் தமிழ் அவர்கள் சமயப்பிரச்சாரத்துக்குப் பயன்படவே மக்களிடமும் தீவிரமாகச் சமணம் பரவியது. வைதிக சமயம் குன்றியது. இந்த நிலையில்தான் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் தோன்றினர்கள் புரட்சி வீரர்கள் என்று சொல்லத் தகுந்த நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும். அவர்கள் செய்த புரட்சி மிகவும் இலகுவானது. அவர்கள் கையாண்ட தந்திரம் மிகச் சாதாரணமானது. சமணர் எந்தக் கருவியைக் கையாண்டனரோ அதைத்தான் இவர்களும் கையாண்டனர். தமிழிலே பேசினார்கள், பாடினார்கள். வைதிகக் கருத்துக்களையெல்லாம் மக்கள் விளங்கக்கூடிய தமிழில் எடுத்துச் சொன்னார்கள். அன்றியும், எதையும் அவர்கள் மறைபொருளாக வைக்கவில்லை. காயத்ரியைச் சொல்ல அஞ்சவில்லை. ''வேத நான்கினும் மெய்ப் பொருளாவது நாத நாமம் நமச்சிவாயவே'' என்று ஊர் கூடி நின்று கேட்க உரக்கச் சொன்னார்கள். இதைத்தான் வைஷ்ணவத்திலும் ராமானுஜர் செய்தார். வெளியே சொன்னால் தலை வெடிக்கும் என்று குரு உபதேசித்த போதும், என் தலை

வெடித்தால் போகிறது, ஆயிரக்கணக்கான மக்கள் கேட்டுப் பரகதியடையட்டும் என்று மேடையில் நின்று பகிரங்கமாகச் சொன்னார் அந்த மந்திரத்தை!

இவ்வாறு வைதிகம் என்ற சைவமதம் பெரதுமக்கள் மேடைக்கு வந்தபிறகுதான் சமணம் விழிப்புக் கொண்டது. மந்திர தந்திரங்கள் என்ற கருவிகள் தீவிரமாக உபயோகிக்கப் பட்டன. அப்படிப் பட்ட ஒரு சூழ்நிலைதான் ஞானசம்பந்தர் மதுரைக்கு வரக் காரணமாயிருந்தது. முத்தமிழ் விரகர் என்ற பட்டத்தைப் பெற்ற ஞானசம்பந்தர்தான் சமணரை வாதில் வெல்லச் சிறந்த 'செந்தமிழ் மாருதம்' என்று வரவழைக்கப் பட்டார்.

மதுரையிலும் அதைச் சுற்றியுள்ள பிரதேசத்திலும் சமணர்கள் பள்ளிகளையும் பாழிகளையும் அமைத்து அட்டகாசம் செய்து வந்தனர். அரசனும் அப்போது அவர்கள் தந்திரங்களுக் கெல்லாம் இசைந்து கொடுத்து வந்தான். ஆனைமலை, பசுமலை, நாகமலை இந்த மூன்றும் பலம் பொருந்திய சமணர்கள் கோட்டை களாயிருந்தன. திருப்பரங்குன்றம், பழனியில் ஐவர் மலை, உத்தமபாளையம், கோவிலாங்குளம், குப்பள நத்தம்—முதல் மூன்றும் இந்த ஐந்தும் சேர்ந்த எட்டுக் குன்றுகளில் 'எண்பெருங் குன்றத் தெண்ணாயிரவர்' என்றபடி சமணர்கள் அதிகாரம் செலுத்தி வந்தார்கள். அப்போது மதுரையில் ஆட்சிபுரிந்த பாண்டிய மன்னன், நின்ற சீர் நெடுமாறன். சேக்கிழார் இவரை ''நெல்வேலிச் செருக்களத்தூர்'' போர்வென்ற நெடுமாறன் என்கிறார். நெல்வேலி வென்ற பாண்டியன் என்று கல்வெட்டுக் களில் குறிக்கப்படுபவன் இரண்டாம் பராங்குசன் என்ற அரிகேசரி. இவன் தேவி சோழநாட்டுப் பெண் 'வளவர்கோன் பாவை' மங்கையர்க்கரசி. இவர்கள் மதித்த மந்திரி குலச்சிறை. அரசியும் அமைச்சரும் தீவிர சைவர்கள். ஆனால் நெடுமாறன் தீவிர சமணனல்லாவிட்டாலும் சமணர்களின் ஆதிக்கத்துக்குக் கட்டுப் பட்டிருந்தான். இப்படிப் போய்க் கொண்டிருந்தால் பாண்டி நாடே சைவத்தை மறந்து விடும் என்று கண்ட அரசியும் அமைச்சரும், சமணருடன் வாதாடி அவர்களைத் தோற்கடிக்கத் தக்க ஒருவரைத் தேடினார்கள். அப்பொழுது அவர்களுக்கு காதில் விழுந்த செய்தி: ''வயதில் சிறுபிள்ளை. இசையில் மகாசமர்த்தர். தமிழிலே சண்டமாருதம். சிவஞானக் கன்று என்று எல்லோரும் வாழ்த்துகிறார்கள். எல்லாவற்றையும் விட இந்த ஞானசம்பந்தர் பல அற்புதங்களை நடத்தி வருகிறாராம். இறந்தவர் பிழைக்கிறார். ஆண்பனையைப் பெண்பனையாக்குகிறார். இவர்தான் சமணரின்

தந்திரங்களுக்கு ஈடு கொடுக்கக் கூடியவர்''. இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடனே திருமறைக்காடு என்ற வேதாரணீயத்துக்கு ஆள் அனுப்பினர்கள். பாண்டிமாதேவியிடமிருந்து அழைப்பு வந்திருக்கிறதென்றதும் நாள் நட்சத்திரம் பார்க்காமல் துணிச் சலோடு வந்தார் ஞானசம்பந்தர்.

மதுரை நகரத்தின் எல்லையில் வரும்போதே சமணர்களுக்குக் கலக்க முண்டாகத் தொடங்கியது. ''பர சமய கோளரி வந்தான்'' என்று எக்காளமூதிக் கொண்டு சம்பந்தரும் அவர் பரிவாரங்களும் வரும்போது யாரும் கொஞ்சம் அதிர்ச்சியடையத்தான் செய் வார்கள். எல்லைப்புறத்தில் வந்து கொண்டிருக்கவே அரசி அமைச்சரை அனுப்பி வரவேற்க ஏற்பாடு செய்தார். அமைச்சர் குலச்சிறையார் சம்பந்தரையும் அவர் பரிவாரத்தையும் கண்ட வுடன் அப்படியே நிலத்தில் வீழ்ந்து நமஸ்கரித்தார். இவர்தான் பாண்டிநாட்டு அமைச்சர் குலச்சிறை என்று கேள்விப்பட்டவுடன் சம்பந்தரே வந்து கை கொடுத்துத் தூக்கி மரியாதை செய்தார். நகரத்துக்குள் வந்தவுடன் அரசியே முன்வந்து வரவேற்றார். சம்பந்தர் தங்குவதற்கு வசதியான திருமடமும் ஏற்பாடு செய்தார்கள்.

அந்தக் காலத்திலே சமயங்களுக்குள் நடக்கும் போட்டியில் கொள்கை சம்பந்தமாக வாது செய்வதும் ஒருமுறை. வாதில் தோற்றவர்கள் எதிர்க்கட்சிக்குப் பணிந்து அவர்கள் சமயத்தில் சேர்ந்து கொள்ளவேண்டும். வாதைத் தவிர, மந்திர தந்திரங் களிலும் சித்துக்களிலும் போட்டியிருப்பதுண்டு. எல்லா வற்றுக்குமே தயாராகத்தான் ஞானசம்பந்தர் மதுரைக்கு வந்திருக்கிறார்.

இங்கு நடந்த வரவேற்பையும், சம்பந்தரின் கவர்ச்சிகரமான தோற்றத்தையும் அந்தத் தோற்றத்தில் கண்ட திறமையையும் சமணர்கள் கவனித்ததும் நிச்சயமாகத் தாங்கள் தோல்வி யுறுவார்கள் என்பதை உணர்ந்தனர். ஆகையால் சம்பந்தர் மதுரை நகரில் தங்குவதே ஆபத்து என்று கருதிய சமணர்கள் மன்னனிடம் போய் முறையிட்டார்கள். மன்னன் ''நீங்கள் செய்வதைச் செய்யுங்கள்'' என்று சொல்லிவிட்டான். அவர்கள் தாங்கள் மந்திரத்தினால் அக்னி உண்டாக்கி அதைச் சம்பந்தர் தங்கியிருக்கும் மடத்தின் மீது ஏவி விடப்போவதாகச் சொன்னார்கள். ஆனால் அந்தத் தந்திரம் பலிக்கவில்லை! ஏற்கெனவே தெய்வாம்சம் பெற்று அதுவே கவசமாய்க் கொண் டிருக்கும் சம்பந்தர் மீது வேறு எந்தக் கணையும் தாக்காதென்பதை

அவர்கள் அறியமாட்டார்கள். மந்திரத்தினால் அக்னியை ஏவ முடியாதவர்கள் நேரிலேயே சென்று சம்பந்தர் மடத்துக்குத் தீ வைத்து விட்டார்கள். தீ எரிவதைக் கண்ட சம்பந்தர், சமணரின் சித்தியைவிடப் பன்மடங்கு சித்திகளில் வல்லவரான தால், அந்தத் தியானது பாண்டியன் மீதே போய்ச்சுடும்படி ஏவி விட்டார். ''தீயே! நீ பையவே சென்று பாண்டியனை அடைவாய்'' என்று திசையைத் திருப்பிவிட்டார். மடம் எரிவது நின்று விட்டது. அரண்மனையிலிருந்த பாண்டியன் சரீரம் வெப்பு நோயால் தக தக வென்று காந்தத் தொடங்கியது. சம்பந்தரின் சக்தியால் மடம் எரியாமல் தப்பியதை எல்லாரும் நம்பினார்கள். ஆனால் அந்த வெந்தீ பாண்டியனிடம் போயிற்றென்பதை எவரும் உணரவில்லை.

அரசன் வெப்பு நோயால் அவஸ்தைப் படுவதைக் கண்ட அரசியாரும் அமைச்சர் குலச்சிறையும் மிகவும் கவலைகொண்டனர். சமணர்கள் சம்பந்தருக்குச் செய்த துரோகம்தான் இப்படிப் பழிவாங்கிற்றே என்று அவர்கள் சந்தேகப்பட்டனர். சமணர்கள் அரசனுக்கு நோய் என்று கேள்விப்பட்டதும் ஓடோடி வந்து பார்த்து, உள்ளுக்குள் தங்கள் செயலை நினைந்து அஞ்சினார்கள். அரசனுக்கு தமது மந்திர சக்தியால் நோயை அகற்றிவிடலாம் என்று தைரியம் கூறிச் சில மந்திரங்கள் சொல்லி மயிர்ப்பீலியால் உடலைத் தடவினர். ஆனால் நோய் அதிகரித்ததல்லாமல் குறைய வில்லை. உடனே அரசன் எல்லாரையும் அவ்விடத்தை விட்டுப் போகுமாறு சொல்லிவிட்டான்.

மங்கையர்கரசியார் அரசனிடம் போய் ''ஞானசம்பந்தரை அழைத்து வரட்டுமா? அவருக்கு இந்தச் சமணர்கள் செய்த துரோகம் தான் இப்படி வந்து சூழ்ந்ததாயிருக்கும்'' என்றார். குலச்சிறையாரும் வந்து ''ஞானசம்பந்தப் பிள்ளையாரின் அருள் தான் இதைப் போக்கவல்லது. அவர் வந்து தரிசனம் கொடுத் தாலே இந்த நோய் போய்விடும்'' என்றார். பாண்டியன் அதற்கு, ''இந்த நோயைத் தீர்ப்பதுதான் எனக்கு வேண்டியது. ஆகையால் இதைப் தீர்ப்பதில் யார் வெல்கிறாரோ அவர்கள் பக்கம் நான் சேர்ந்துவிடுகிறேன். சம்பந்தரால் தீர்க்க முடியுமானால் அழைத்து வாருங்கள்'' என்றான்.

அளவற்ற மகிழ்ச்சியுடன் அரசியும் அமைச்சரும் ஞான சம்பந்தர் திருமடத்துக்குப் போய் அவர் திருவடிகளைப் பிடித்து வணங்கினர். பின்பு அப்பெருமானின் உடலிலே சமணர் வைத்த தீ ஒன்றும் செய்யவில்லை யென்பதைக் கண்டு திருப்தியோடு,

பாண்டியனுடைய வெப்பு நோயைப் பற்றிச் சொல்லி ''சமணர்களால் அந்த நோயைத் தீர்க்க முடியவில்லை. தாங்களே அருள்புரிந்து வந்து சமணர்களை வென்றால் அரசனும் பிழைப்பார். நாங்களும் பிழைப்போம்'' என்றார்கள். ''இறைவன் திருவருளால் முடியாதது ஒன்றுமில்லை. கவலைப்படாமல் போங்கள். சுவாமி தரிசனம் செய்து கொண்டு நான் அங்கே வருகிறேன்'' என்று சம்பந்தர் பதில் தெரிவித்தார். மங்கையர்க்கரசியும் அமைச்சரும் பேரானந்தத்துடன் திரும்பிச் சென்றார்கள்.

சம்பந்தர் முத்துச் சிவிகையில் அரண்மனை வாயிலில் வந்தார். இதைக் கண்ட சமணர்கள் ஆத்திரப்பட்டார்கள். அரசனிடம் போய், ''இப்படியும் ஒரு வரவேற்பா? சைவர்களுக்கு இடம் கொடுத்தால் எங்கள் சமயம் எப்படி மதிக்கப்படும்?'' என்று குறை பட்டார்கள். அரசன் உடனே, ''நீங்கள் இருபக்கத்தாரும் நோயைத் தீருங்கள். யார் வெற்றி பெறுவார்கள் என்று பார்க்க லாம். நான் சொன்னபடி நடப்பேன்'' என்றான். சம்பந்தர் வாசலில் வந்துவிட்டார் என்று கேள்விப்பட்ட அரசன் மரியாதையோடு வணங்கித் தன் தலைமாட்டிலிருந்த ஒரு பொற் பீடத்தைக் காட்டினான். சம்பந்தர் அதில் உட்கார்ந்தார். பாண்டியன் சம்பந்தரைப் பார்த்து, ''தங்கள் ஊர் எது?'' என்று கேட்டதற்கு அவர் தம்முடைய ஊர் சீர்காழி என்றும் அதற்குப் பன்னிரண்டு வேவ்வேறு பெயர்கள் உள்ளன என்றும் தோன்ற ஒரு பதிகம் பாடினார். இங்கேயும் சம்பந்தர் தமது இசைப் புலமையையும் தமிழறிவையும்தான் முதலில் எடுத்துக் காண்பிக் கிறார்.

சமணர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு ஒவ்வொருவராகவும், பலர் சேர்ந்தும் சரமாரியாகக் கேள்விகளைத் தொடுத்தனர். சமய நூல்களில் கண்ட தத்துவக் கேள்விகள்தாம் அவை. ஆனால் எல்லோரும் சேர்ந்து ஒரே குழப்பமுண்டாக்கவே பார்த்துக் கொண்டிருந்த அரசி மங்கையர்க்கரசிக்குப் பயம் வந்துவிட்டது. உடனே அரசனைப் பார்த்து,''இவர் சின்னக் குழந்தை. இவர்களோ எண்ணிலாதவர்கள். இத்தனை பேரும் சேர்ந்தால் எப்படி?'' என்றார். இதைக் கவனித்த சம்பந்தர், ''மாதரசி! நான் பாலன் என்று வருந்த வேண்டாம். இறைவன் அருள் இருக்கும்போது என்ன பயம்? நான் இவர்களுக்குக் கொஞ்சமும் இளைத்தவனல்ல'' என்று தைரியம் கூறினார்.

பாண்டியன் சொன்னான்: ''முதலில் எனது நோயைத் தீருங்கள். வேறு வாதம் எதற்கு? உங்கள் தெய்வ சக்தியை இங்கே நிரூபித்துக் காட்டுங்கள் பார்க்கலாம்'' என்றான்.

சமணர்கள் உடனே, ''நாங்கள் முதலில் இடப்பக்கத்திலுள்ள வெப்பத்தைத் தீர்க்கிறோம்'' என்று சொல்லி மந்திரநீர் போட்டு பீலியால் தடவினார்கள். முன்பு அவர்கள் தடவியது போதாதா? நோய் மாறவில்லை. அதிகரித்தது! அரசன் வெப்புத் தாங்காமல் ஞானசம்பந்தரை நோக்கினான். குறிப்பறிந்த சம்பந்தர் உடனே அரசனின் வலப்பக்கத்தில், ''மந்திரமாவது நீறு'' என்று சொல்லிக் கொண்டே திருநீற்றைத் தடவினார். அரசனுடைய வலது பக்கம் குளிர்ந்தது! வெம்மை நீங்கியது. ஆனால் இடப் பக்கம் பன்மடங்கு சுட்டது! மன்னன் வருந்தி, ''சமணர்களே! நீங்கள் தோற்றீர்கள். எனது வலப்பாகம் குளிர்ச்சியாயிருந்தது. இடப்பாகம் தாங்க முடியவில்லை'' என்று கூறிவிட்டு, ஞான சம்பந்தரைப் பார்த்து, ''சம்பந்தப் பெருமானே, அந்தப் பக்கத்து நோயையும் தீர்த்தருள்க'' என்று வேண்டிக்கொண்டான். ஞானசம்பந்தர் உடனே திருநீற்றை எடுத்து ''மந்திரமாவது நீறு'' என்று தமது வழக்கமான இன்னிசையுடன் பாடிக்கொண்டே அரசனின் உடல் முழுவதும் பூசிவிட்டார். பாண்டியன் வெப்பு நோய் நீங்கப் பெற்று எழுந்து, தன் மனைவி மங்கையர்க்கரசியும் அமைச்சர் குலச்சிறையும் உடனிருக்க ஞானசம்பந்தரை விழுந்து பணிந்தான்.

இந்தக் காட்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டு சமணர்கள் வாய்பொத்தி நிற்பதைக் கண்ட சம்பந்தர், ''உங்கள் சமயத்தின் உண்மைப் பொருளை எடுத்துச் சொல்லுங்கள். அவற்றில் உண்மை இருக்கிறதுதானா என்பதை நாம் வாதிக்கலாம்'' என்றார். சமணர்கள் யோசித்தார்கள். இந்தப் பிள்ளை தமது இனிமையான பாட்டினால் மயக்கிவிடுகிறார். வாதத்தின் மூலம் சாதித்து விட முடியாதாகையால் தமது தந்திர உத்திகளைக் கையாண்டுதான் வெல்ல வேண்டும் என்று நினைத்து, ''தர்க்கத்தினால் மட்டும் வெற்றி பெறுவது வெற்றியல்ல, பிரத்தியட்சம் என்ற காட்சியின் மூலமாக, கண்ணுக்குத் தெரியும் உண்மை மூலமாகத்தான் அதைச் செய்ய வேண்டும்'' என்றார்கள். பாண்டியன் இதைக் கேட்டு நகைத்தான். ''எனது வெப்பு நோயைத் தீர்க்க முடியாத உங்களுக்கு, வேறு என்ன வாது வேண்டியிருக்கிறது!'' என்றான். இந்த வார்த்தைகளில் ''என்ன வாது வேண்டியிருக்கிற'' தென்பதையே தம்மிடம் கேட்ட ஒரு கேள்வியாகக் கொண்டு சமணர்கள், ''இருவரது சமய உண்மைகளையும் ஒரு ஏட்டிலே எழுதித் தீயிலிட்டுப் பார்க்கலாமே. எவருடைய ஏடு எரியாமலிருக் கிறதோ அவருக்கு வெற்றி என்றார்கள். அப்படியே ஏற்பாடா யிற்று. தீ எரிக்கப்பட்டு, அதில் சம்பந்தர் ஓர் ஏட்டைப் போடு வதற்குத் தமது பக்கத்தில் நின்ற சரணாலயர் என்ற எழுத்தரிட

மிருந்த ஏட்டுக்கட்டை வாங்கி, தாம் பாடிய பாடல்களில் ஒன்றுள்ள ஏட்டை இழுத்தார். திருநள்ளாறு சுவாமி மீது பாடிய ''போகமார்த்த பூண்முலையாள்'' என்ற தேவாரம் கொண்ட ஏடு அது. அதைப்பெற்று, திருநள்ளாற்றுப் பெருமானைத் தியானித்துக் கொண்டு ஒரு தேவாரம் பாடினார். ''தளரிள வளரொளி'' என்று ஆரம்பிக்கும் இத்தேவாரத்தின் முடிவில், ''நள்ளாறர் நாமமே மிளிர் இள வளர் எரி இடில் இவை பழுதிலை மெய்ம்மையே'' என்ற வார்த்தைள் உள்ளன. அந்த ஏட்டை நெருப்பில் போட்டதும் அது எரியாமல் அப்படியே கிடந்தது. சமணர்களும் ஓர் ஏட்டை நெருப்பில் போட்டவுடன் அது உடனே சாம்பலாயிற்று! மன்னன் சம்பந்தரின் ஏட்டை வெளியே எடுக்கச் சொல்லி, சபையில் உள்ளவர் யாவருக்கும் காட்டிவிட்டு சம்பந்தரிடம் திருப்பிக் கொடுத்தான். பின்பு சமணரைப் பார்த்து, ''உங்கள் ஏட்டையும் எடுத்துக் காட்டுவதுதானே!'' என்றான். சமணர்கள் முகம் வாடியது. நெருப்பில் கருகிப் போய்க்கிடக்கும் ஏட்டை எடுத்துப் பிசைந்து பார்த்தார்கள். பாண்டியன் அவர்களைப் பார்த்து, ''நன்றாக அரித்துப் பாருங்கள். பொய்யெல்லாம் மெய்யாகும்!'' என்று நகைத்தான். இன்னும் ஏதாவது இருக்கிறதா என்று கேட்டதற்கு சமணர், ''மூன்றில் இரண்டு ஆகிவிட்டது. மூன்றாவது ஒரு போட்டி. நமது சமய உண்மைகளை ஏட்டில் எழுதி ஆற்றில் விடுவோம். எது ஆற்றோடு போகாமல் தங்கி நிற்கிறதோ அதுவே உண்மைப்பொருள் என்று தீர்மானிக்கலாம்,'' என்றனர். சம்பந்தர் உடனே ''அப்படியே செய்வோமாக'' என்றார். இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு நின்ற அமைச்சர் குலச்சிறையார், ''வாதுகள் முற்றிக் கொண்டு வருகின்றன. இந்தப் போட்டியிலும் சமணர்கள் தோல்வியுற்றால் என்ன பரிகாரம் என்பதையும் இப்பொழுதே தீர்மானித்துக் கொண்டு போட்டியை ஆரம்பிக்கலாம்'' என்றார். சமணர்கள் ஆத்திரம் கொண்டு, ''இந்த மூன்றும் முறையும் நாங்கள் தோற்றோமாயின் நாங்கள் அத்தனைபேரும் கழுவேறித் தற்கொலை செய்துகொள்வோம்'' என்றார்கள்.

வைகையாற்றங்கரை. ஒரே ஜனக்கூட்டம். ''வெப்புநோய் தீர்த்த பிள்ளை வருகிறது பாருங்கள்'' என்கிறார் ஒருவர். ''முழுமை மொழி பேசும் குழந்தை'' என்கிறார் மற்றொருவர். ''முத்துச் சிவிகையில் வரும் அழகைப் பாருங்கள்'' என்கிறார் மூன்றாமவர். இப்படியே சம்பந்தப் பெருமானின் வருகையை மதுரைமக்கள் பாராட்டி நின்றனர். ஆற்றங்கரையில் இருகட்சியாரும் கூடி விட்டனர். அரசன் அவர்களைப் பார்த்து, ''உங்கள் ஏடுகளை ஆற்றில் விடலாமே'' என்றான். சமணர்கள் இருமுறை தோற்றவர்

மூன்றுவதில் வெற்றி கொள்வார் என்ற நம்பிக்கையில் ''அத்தி நாத்தி'' என்று ஒரு ஏட்டில் எழுதி அதை ஆற்று நீரில் விட்டார்கள். வைகையாறு என்றுமில்லாத வேகத்தோடு அந்த ஏட்டைக் கொண்டு பாய்ந்து கடலுட் செலுத்திவிட்டது! ஆற்றின் வேகத்தைத் தடுத்து விடுவார் போலச் சமணர்கள். கரைமீது ஓடினார்கள். கடைசியில் நட்டாற்றில் விட்டவர்கள் போல, ஒன்றும் செய்ய முடியாமல் திகைத்து நின்றனர். பாண்டியன் உடனே சம்பந்தரை நோக்கினான். சம்பந்தர் அந்தக் குறிப்பை யறிந்து ஒரு ஏட்டில் புதிதாக ஒரு பாசுரம் எழுதினார்!

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்தப் பாட்டை ஏட்டில் எழுதிச் சம்பந்தர் ஆற்றில் விட்டார். அந்த ஏடானது சிறிது நேரம் ஆற்று வெள்ளத்தில் அடிபடாமல் ஆடாமல் அசையாமல் கிடந்தது. பின்னர் திடீரென்று எதிர் நோக்கிச் சென்றது! எல்லாரும் அதிசயித்தனர். ஏடு நெடுந்தூரம் செல்லச் செல்ல அதனைப் பார்ப்பதற்கு அரசன் எட்டி எட்டி நிமிர்ந்தான். ஏற்கெனவே அவன் கூனன். கூன் பாண்டியன் என்பதே பட்டப்பெயர். இங்கே வைகையில் எதிர் நீச்சல் போடும் ஏட்டைத் தன் கண்களால் பார்க்க மன்னன் நிமிர்ந்தபோது தெய்வாதீனமாக அவன் கூனும் நிமிர்ந்தது! ''வேந்தனும் ஓங்குக'' என்று சம்பந்தர் பாடியது பாண்டியன் உடலுக்கே உயர்ச்சியைக் கொடுத்தது என்று யாவரும் பாராட்டினார்கள். ஏடு போய்க் கொண்டேயிருந்தால் எப்படி? அதை நிறுத்த வேண்டுமென்று சம்பந்தர் பிரார்த்தித்தார். ஏட்டை நோக்கியே தமது குதிரையில் சென்ற குலச்சிறையார் அந்த ஏடு திருவேடகம் என்ற ஸ்தலத்தில் கரையோரமாக அணைந்துகிடந்ததைக் கண்டு அதனை எடுத்துக் கொண்டு வந்து பாண்டியனிடம் ஒப்படைத் தார். ஏடு அணைந்த காரணத்தால்தான் அந்த இடம் திருவேடகம் என்ற பெயர் பெற்றதாகச் சொல்வார்கள்.

சமணர் தோல்வியை ஒப்புக்கொண்டனர். தாம் கொடுத்த வாக்கிலிருந்து அவர்கள் மாறவில்லை. அத்தனைபேரும் கழுவிலேறி உயிர்நீத்தனர் என்பது கதை. இந்தக் கழுவேற்றம் பற்றிப் பலவித விளக்கங்கள் சொல்லப்பட்டன. அந்தக் காலத்தில், அதாவது கி. பி. நான்காம் ஐந்தாம் நூற்றாண்டுகளில், பௌத்த சமண வைதிக சமயப்போட்டிகள் ஒரு கட்டுப்பாடான, ஒப்பந்த

முறையான போட்டிகளாகவே நடந்திருக்கின்றன. தர்க்கவாதங்களும், மந்திர தந்திர வாதங்களும், ஆகாய கமனம், கூடுவிட்டுக் கூடு பாய்தல் என்ற பரகாயப் பிரவேசம் முதலியனவெல்லாம் சர்வ சாதாரணம். இம்மாதிரி வாதங்களிலும் போட்டிகளிலும் தோற்றவர்கள் தாமே தம்மைத் தண்டித்துக் கொள்ள ஒப்புதல் செய்திருப்பார்கள். சிலர் சாத்விக முறையில், எதிர்க்கட்சியின் சமயத்தில் சேர்ந்துகொள்வர். மற்றவர்கள் குன்றிலிருந்து குதித்தோ கழுவிலேறியோ தம் உயிரை மாய்த்துக் கொள்வர். கழுவேறுதல் அந்தக் காலத்தில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட சுய தண்டனை. ஆகையால், மதுரைச் சமணர்கள் கழுவில் ஏறினார்கள். அரசன் இவர்களைத் தண்டிக்க கழுவில் ஏற்றினன் என்று சொல்வது தவறு. அவர்களாகவே தமது வாக்குப்படி கழுவில் ஏறினார்கள். ''எண்பெருங்குன்றத் தெண்ணாயிரவரும் ஏறினார்கள்'' என்று சேக்கிழாரும் எச்சரிக்கையாகவே சொல்லி வைத்தார். இந்தக் காட்சியை சேக்கிழார் சொல்வது மிகவும் அற்புதமாயிருக்கிறது. 'தம்பம்' என்ற சொல்லை வைத்துக் கொண்டு அவர் இலக்கியச் சிலம்பம் ஆடுகிறார்.

''தோற்றவர் கழுவில் ஏறித் தோற்றிடத் தோற்றும் தம்பம்
ஆற்றிடை யமணர் ஓலை அழிவினுல் ஆர்ந்த தம்பம்
வேற்றொரு தெய்வமின்மை விளக்கிய பதாகைத் தம்பம்
போற்று சீர்ப்பிள்ளையார் தம் புகழ்ச் சயத்தம்பமாகும்

பாண்டியன் நெடுமாறன் முன்பு வெப்பு நோய் தீர்வதற்காக நீறணிந்தவன் இப்போது சம்பந்தரிடம் நீறு வாங்கி மேனி முழுவதும் அணிந்து சைவப் பெருஞ்செல்வனைத் திகழ்ந்தான். தன் கணவன் சைவனாகிவிட்டதைக் கண்டு மங்கையர்க்கரசியார் மட்டற்ற பெருமை கொண்டார். அமைச்சர் குலச்சிறையும் அளவற்ற மகிழ்ச்சி கொண்டார்.

46 பாண்டியர் தலைநகர்

மதுரையிலிருந்து பன்னிரண்டு மைல் தூரத்திலுள்ள திருவேடகத்தைப் போய்ப் பார்த்தோம். சாலையின் கீழ்ப்புறத்தில் ஏடக நாதர் கோயிலிருக்கிறது. மேற்கிலே வைகையாறு. படித்துறை கட்டி ஏடு அமைந்த காட்சியும் சிற்பமாகச் செதுக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் போன சமயத்தில் வைகையில் வெள்ளமில்லை. ஒரு சிறுதுறையில் சிலர் குளித்துக்கொண்டிருந்தனர். ஏடக நாதர் கோயிற் கோபுரத்தில் சுதையினால் சமணர் கழுவேறிய காட்சி அமைக்கப்பட்டிருக்கிறது. கோயில் மண்டபத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களின் உருவங்கள் தஞ்சாவூர் ஓவிய முறையில் பொன் மூலாம் பூசிச் சித்திரங்களாகத் தீட்டப்பெற்றுள்ளன. இங்குள்ள ஞானசம்பந்தர் உற்சவ மூர்த்தி நர்த்தன சம்பந்தராகக் காட்சியளிக்கிறார். இக்கோயிலின் நிர்வாக அதிகாரியைச் சந்தித்தோம். அதிகாரி என்ற தோரணையில் அவர் முதலிலே உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு அசையாது விறைப்பாயிருந்தார். ஒத்துழைக்கத் தயங்கினார். பின்னர் ஒருவாறு பேச்சுக் கொடுத்ததும், திருவாய் மலர்ந்து பல செய்திகளைச் சொன்னதோடு, தாம் இக்கோயில் தலவரலாறு எழுதியதற்காகப் பொன்னுடை போர்த்தப்பட்ட தகவலை முக்கியமாக எடுத்துச் சொன்னார்! அதைக் கேட்ட நாங்களும் பாராட்டியவுடன், எங்களை அழைத்துக் கொண்டு போய் கோயிலினுள் காண்பித்து உபசரித்தார்.

மதுரைக்குத் திரும்பி வந்தபின்னர், மாலை குளித்துவிட்டுச் சென்று மீனாக்ஷியையும் சொக்கநாதரையும் மனமாரத் துதித்து வணங்கினோம். சுவாமியைத் தரிசிக்கு முன்னர் அம்பாளைத் தரிசிப்பதே இங்கு முறை, ஏனெனில் இது மீனாக்ஷியின் ஊர். அவள் தான் சர்வாதிகாரி. தேவஸ்தானத்தின் பெயரும் மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் தேவஸ்தானம் என்றுதான் வழங்குகிறது. கோயிலைப்பற்றியும் அதன் சிற்பக் காட்சிகளைப் பற்றியும் நாம் எவ்வளவுதான் புதிய புதிய புத்தகங்களைப் படித்தாலும், எத்தனை முறைதான் நேரில் சென்று பார்த்தாலும் தெவிட்டாத ஓர் இன்பு உணர்ச்சியைப் பெறலாம்.

மதுரையின் பழமையை, அதன் நீண்ட காலச் செல்வாக்கை நினைத்துப் பார்க்கும்போது வியப்படையாமலிருக்க முடியாது. தமிழ்நாட்டு மூவேந்தர்களில் மதுரையில் ஆண்ட பாண்டியர்கள் மிகவும் மூத்தவர்கள். கி. மு. ஆரும் நூற்றாண்டிலேயே இலங்கை மன்னன் விஜயனுக்குப் பாண்டியன் பெண் கொடுத்தான் என்று சிங்கள சரித்திரமாகிய மகாவம்சம் சொல்கிறது. உலகப் பொருள்கள் அனைத்தையும் தராசிலே ஒரு தட்டில் வைத்து, மறு தட்டிலே மதுரையை வைத்தால் மதுரைதான் தாழும் என்று பரிபாடலில் பெருமையோடு வருணிக்கப்படுகிறது. சிலப்பதிகாரத்தில், அகநானூற்றில், கலித்தொகையில், சங்க இலக்கியங்களில் எல்லாமே மதுரை பெற்றிருக்கும் பெருமை அளப்பரியது. தமிழ் வளர்த்தது மதுரை. தமிழ்ப் புலவர்கள் வளர்ந்தது மதுரையில்தான். அப்படிப்பட்ட மதுரையை கண்ணகி அழித்தாள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் உண்மையில் மதுரை அழிந்து பட்டதா? இல்லை, வளர்ந்தது! ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மதுரையும் வளர்ந்தது, தமிழும் வளர்ந்தது.

தமிழ் நாட்டில் ஒரு பெரிய அதிசயமென்னவென்றால் சேரர், சோழர், பாண்டியர் என்ற மூவேந்தர்களுமே அடிக்கடி போரிட்டாலும் அந்தப் போர்க்களெல்லாம் பொதுமக்களையோ கோயில்களையோ மற்றும் கலைகளையோ எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. காஞ்சியை வென்ற சாளுக்கிய விக்கிரமாதித்தன், கைலாசநாதர் கோயிலுக்கு விசேஷ நன்கொடை கொடுத்தானல்லாமல் அதைத் தொடவுமில்லை. ஆனால், தமிழ் நாட்டிலிருந்த இந்தப் பண்பை சிதைத்தவர்கள் பின்னால் வடக்கேயிருந்து வந்த முகம்மதியர்கள். பதினான்காம் நூற்றாண்டில் மாலிக் கபூரின் அட்டகாசத்தில் அழிந்த கோயில்கள் எத்தனை! மீனாக்ஷி கோயிலும் அவன் கையில் தப்பவில்லை. கோபுரமும் மதில்களும் தகர்க்கப்பட்டன. பின்னர் பதினாறாம் நூற்றாண்டில் முகம்மதியர்களை அடக்க வந்த நாயக்க மன்னர்களே மீனாக்ஷி கோயிலைப் புதுப்பித்து, கோபுரம் எழுப்பி, வழி வழியாகப் பாதுகாத்து இன்றைய நிலையில் வைத்தார்கள்.

நாயக்கர்களில் இரண்டு பெயர்கள் மதுரைக்குச் சிறப்புக் கொடுத்த பெயர்கள். ஒன்று திருமலை நாயக்கர். இவர் கட்டி வைத்த "மஹால்" ஒரு காட்சிப் பொருளாயிருக்கிறது. மற்றப் பெயர் மங்கம்மாள். மூன்று தலைமுறையாக இந்த மங்கம்மாள் மதுரையின் ராணியாக இருந்து ராஜ்ய பரிபாலனம் செய்தது தமிழ் நாட்டுச் சரித்திரத்தில் ஒரு முக்கிய அம்சம் என்று சொல்ல வேண்டும். தென் பாண்டி நாட்டிலுள்ள நூற்றுக்கணக்கான சத்திரங்கள், பல ராஜபாட்டைகள், மடங்கள் எல்லாம் இன்றும்

மங்கம்மாள் பெயரால் வழங்கி வருகின்றன. பரத கண்டத்தில் அயோத்தியா, அவந்தி, காஞ்சி, மதுரை என்ற பெருநகரங்கள் ஒரு காலத்தில் மகோன்னத நிலையிலிருந்தன. அவற்றுள் தமிழ் மொழி போல் தொடர்ந்து பெருமையோடிருப்பது மதுரை ஒன்றே யென்று நாம் பெருமைப் படலாம்.

* * *

மீனாக்ஷி கோயிலைச் சேர்ந்த குருசாமி ஒதுவாருடன் பேசிக் கொண்டே அம்மன் சந்நிதியில் ஆரம்பித்து அஷ்ட சக்தி மண்டபம், மீனாக்ஷி நாயக்கர் மண்டபம், முதலி மண்டபம் முதலியவற்றையும் தாண்டிப் பொற்றாமரைக் குளத்தருகில் வந்தோம். சங்கப் பலகை ஞாபகம் வந்தது. எத்தனை புலவர் களுக்கு அது தீர்ப்புக் கூறியிருந்தது! பொற்றாமரைக் குளத்தைச் சுற்றியுள்ள நடையின் மூன்று பக்கச் சுவர்களிலும் ஆலவாயானின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களும் சித்திரங்களாகத் தீட்டப் பெற்றுள்ளன. மதுரை நாயக்கர் காலத்துச் சித்திரங்கள். பின்னால் திருப்பணி செய்தவர்கள், இவற்றை மறைத்து, பலகை யடித்து, அதன் மீது அச்சித்திரங்களை நகல் செய்து வைத்திருந் தனர். மூலச்சித்திரம் அப்படியே சுவரில் இருந்ததைப் பலர் அறியமாட்டார்கள். சமீபத்தில் தமிழ்நாட்டு அரசின் செய்தித் துறையைச் சேர்ந்த அறிஞர் ஜெயச்சந்திரன் கண்டுபிடித்து, பலகைச் சித்திரத்தை அகற்றி, சுவர்ச்சித்திரங்களை அப்படியே புலப்படுத்தி வைத்ததோடு, பலகைச்சித்திரங்களைப் புதுப்பித்து, ஆயிரக்கால் மண்டபத்தில் அவர் நிறுவிய பொருட்காட்சியில் சேர்த்திருக்கிறார். சுவர்ச்சித்திரங்களைப் பார்த்துக் கொண்டு, நேரே சென்று அங்கயற்கண்ணியாகிய மீனாக்ஷியை வணங்கி விட்டு, பிராகாரத்தைச் சுற்றி வந்து சுவாமிகோயிலுக்குப் போகும் வழியில் முக்குறுணிப் பிள்ளையாரை நின்று வணங்கினோம். என்ன பிரமாண்டமான சிலை! என்ன அழுத்தமான வேலைப்பாடு! பக்கத்துக் கிராமத்து வண்டியூர்த் தெப்பக் குளத்தில் அந்தக் காலத்தில் யாரோ தூக்கியெறிந்து விட்ட சிலை. அந்தச் சிலைதான் இங்கு எல்லோரையும் வரவேற்கிறது. சுவாமி கோயிலை வலம் வந்து உள்ளே போகிறோம். வலக்கால் தூக்கி நின்றாடும் நடராஜரைத் தரிசித்துக் கொண்டே மூலவராகிய சோமசுந்தரக் கடவுள் என்ற சொக்கநாதப் பெருமானைக் கண்டு களிக் கின்றோம். எத்தனை திருவிளையாடல்களைப் புரிந்த மூர்த்தி இவர்! மாணிக்கவாசகரை நினைந்து கொள்கிறோம். பிராகாரத்தில் வரும்போது வடமேற்கு மூலையில் ஒதுங்கிப் போயிருக்கும் நாற்பத்தொன்பது கடைச்சங்கப் புலவர்களையும் கண்டு விசாரித்து

விட்டுத் திரும்பி வந்து நவக்கிரக மூர்த்திகளைத் தரிசிக்கிறோம். எதிரே பழனி, கழுகுமலை ஆகிய மலைகளில் வாசம் செய்யும் முருகனையும் பார்க்கிறோம். கம்பத்தடிமண்டபம் என்று ஒரு மண்டபம். அதாவது கொடிக் கம்பத்தின் பக்கத்திலுள்ள கல் வேலைப்பாடு. இதுதான் மதுரைக் கோயிலில் ஒரு சிறப்புக் காட்சி. மீனாக்ஷி கல்யாணம், அக்னி வீரபத்திரர், ஊர்த்துவ தாண்டவர், காளி, காலசம்ஹாரர், காமதகனர், ரிஷிபாந்திகர், இன்னும் என் னென்ன வடிவங்களில் சிவமூர்த்தங்களுண்டோ யாவரையும் பார்க்கிறோம். இதன் வடபாகத்தில் நாயக்கர் மண்டபம் என்ற நூற்றுக்கால் மண்டபத்தில் ஒரு நடராஜர்.

அப்படியே கிழக்கு வாயிலால் வெளியே வருகிறோம். இடது பாகத்தில் இருக்கிறது வரலாற்றுப் புகழ்பெற்ற மந்திரி அரியநாத முதலியாரின் ஞாபகார்த்தச் சின்னமான ஆயிரக்கால் மண்டபம். பல கோயில்களில் இந்த ஆயிரக்கால் மண்டபம் என்பது, ஒரு காலத்தில் உற்சவமூர்த்தி எழுந்தருளியிருக்கும் வசந்த மண்டபம், இப்போது உபயோகமற்றுச் சீரழிந்து போவதைப் பார்த்திருக் கிறோம். ஆனால் மதுரைக் கோயிலில் இந்த மண்டபத்தையே ஒரு காட்சி மண்டபமாக மாற்றி யமைத்துள்ளார்கள். கோயில் வரலாறு, சிற்ப வரலாறு, மூர்த்தி வரலாறு முதலிய சமயப் பண்பாட்டின் பாரம்பரிய வளர்ச்சியை ஓர் அற்புதமான பொருட் காட்சியாக அமைத்து வைத்திருப்பது ஒரு சிறந்த முயற்சி என்று பாராட்ட வேண்டும். இந்த அமைப்புக்கு மூல காரணராகிய நண்பர் ஜெயச்சந்திரனைச் சந்தித்து விசாரித்தோம். ''அங்கங்கு தனித்தனியாகக் கிடந்த சிலைகள், சிற்பப் பொருள்களை ஓரிடமாகச் சேர்த்து வைத்ததுதான் என் கடமை. சைவாகம விதிப்படி கோயில் எப்படி வளர்ந்தது, சிலைகள் எப்படிச் செதுக்கப் பட்டன, உலோக விக்கிரகங்கள் எப்படி வார்க்கப்பட்டன, சுவாமி அம்மன் விக்கிரகங்கள் வெவ்வேறு மூர்த்தங்களாக் அமைக்க என்ன விதிகள் ஏற்பட்டன, சிற்ப சாஸ்திரத்தின் வகைகள் என்ன, என்ற வரலாறுகளையும் பொருள்களையும் பொது மக்கள் யாவரும் எளிதில் நேரே கண்டு தெரிந்துகொள்ள ஒரு வாய்ப்பாகவே இந்தக் காட்சி மண்டபத்தை உபயோகித்தோம்'' என்று விளக்கினார் ஜெயச்சந்திரன். இவர் அரசாங்கத்தில் ஒரு உத்தியோகத்தர். ஆனால் அவர் தகுதிகள்? ஓவியர்; ஆங்கிலம், தமிழ், வடமொழி தெரிந்தவர்; சைவாகமத்தில் நிறைந்த பரிச்சய முள்ளவர்; தொல்பொருளாய்விலும் அனுபவமுள்ளவர்.

இரவு எட்டு மணியிருக்கும். குருசாமி ஓதுவாருடன் அம்மன் சந்நிதியில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு

பெரியவர் வந்தார். ''இவர்களை நீங்கள் அவசியம் தெரிந்து கொள்ளவேண்டும்'' என்று சொல்லி அவரை அறிமுகம் செய்து வைத்தார் ஓதுவார். அறுபத்தைந்து வயதுக்கும் மேற்பட்ட சுப்பிரமணியக் குருக்கள் அவர். பழுத்த அனுபவவாதி. கோயில் பூசை முறைகள் பற்றியும், விழாக்கள் பற்றியும் பல விஷயங்கள் சொன்னார். அறுபத்து நான்கு திருவிளையாடல்களில் கண்ட பல காட்சிகள் இங்கு விழாக்களாகக் கொண்டாடப்பட்டு வந்தன. இப்போது குறைந்து போய் விட்டது என்று சொன்னார். சமணர்கள் கழுவேறியது பற்றிக் கேட்டேன். அந்த மாதிரி ஒரு நாடக ரூபமான விழா நடந்தது என்றும், பல ஆண்டுகளுக்கு முன்பே நிறுத்தப்பட்டு விட்டது என்றும் அந்தக் கதையின் மூலாத்திரம் தற்போது ஆரும் நாளன்று அலங்கார ஓதுவார் குருசாமியினால் கூறப்பட்டு வருகிறது என்றும் சொன்னார்.

மதுரை மீனாக்ஷியம்மன் கோயிலுக்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் பிரம்மாண்டமான திருப்பணி வேலைகள் நடந்தன. அந்தச் சமயத்தில் புதுமாதிரியான சில திருத்தங்கள் கைக் கொள்ளப்பட்டபோது ஒரு பாரதூரமான நஷ்டமும் ஏற்பட்ட தென்பதை சுப்பிரமணியக் குருக்கள் தமது பேச்சினிடையே குறிப்பிட்டார். மீனாக்ஷியம்மன் கோயில் முதல் சுற்றுச் சுவர்களில் பெரிய புராணக் கதைகள் சம்பந்தமான மிகப்பழைய ஓவியங்கள் தீட்டப்பெற்றிருந்தன. இவற்றின் கலையருமை தெரியாத திருப்பணி வேலைக்காரர் அந்த ஓவியங்கள் யாவற்றையும் அழித்து விட்டனர்! ஏற்கெனவே இந்தப் பெரியபுராணச் சித்திரங்களைப் பற்றிப் பலருக்கும் தெரியும். அந்த அருமையான புராதனக் கலைச் சின்னம் இப்போது அழிக்கப் பட்டுவிட்டது.

மதுரை மீனாக்ஷியம்மன் கோயிலில் எந்நாளும் எந்நேரமும் ஒரே ஜன சமுத்திரத்தைப் பார்க்கலாம். வடநாட்டார், தென் னாட்டார், மேனாட்டார், எல்லாரும் வந்து வணங்கும் தெய்வம் மீனாக்ஷி. அவள் எழில் உருவத்தை இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டேயிருக்கலாம். ஆயிரக்கணக்கில் பக்தர்கள் குழுமி யிருந்தாலும் அந்த உருவத்தை ஒரு சிறிது கணம்தானும் பார்த்துப் பரவசப்படாமல் திரும்ப வேண்டியதில்லை. அந்தச் சந்தர்ப்பம் எப்பொழுதும் கிடைக்கிறது. அவள் கோயில் ஒரு சிற்பக்கோயில், தமிழ் நாட்டின் தனிக் கோயில்.

47 மும்மையால் உலகாண்ட மூர்த்தி

மதுரை மீனாட்சியம்மன் சந்நிதியில் சுவாமி கோயிலுக்குத் திரும்பும் வழியில் வலது பக்கத்தில் ஒரு மேடையின் மீது ஆட்டுக் கல் மாதிரி பெரிய கல் ஒன்றிருப்பதைப் பார்க்கலாம். மூர்த்தி நாயனார் என்ற ஒருவர் இதில்தான் சந்தனம் அரைத்து சுவாமிக்கு வழிபாடியற்றி வந்தவர். பின்பு சந்தனக்கட்டை கிடைக்காமல் தமது முழங்கையையே கட்டையாக அரைத்தார் என்று சொல்லப் படுகிறது.

மூர்த்தி ஒரு வணிகன். மதுரைச் சொக்கநாதர் மீது அளவிறந்த பக்தி கொண்டு வழிபாடியற்றி வந்தார். அவரது கடமை இறைவனுக்கு சந்தனக் காப்பிடச் சந்தனக் கட்டை வாங்கிச் சந்தனம் அரைத்துக் கொடுப்பது. பல நாள் இப்படிச் செய்து கொண்டு வரும் காலத்தில் வடக்கேயிருந்து வடுகக் கருநாடக மன்னன் ஒருவன், தெற்கே வந்து பாண்டிய அரசனை வென்று மதுரையைத் தனது தலைநகராக்கி ஆளத் தொடங்கினான். அப்போது மதுரையை யடுத்திருந்த பல சமணர்கள் செல்வாக்கில் புதிய அரசனும் பலியானான். மூர்த்தியாரும் மற்றவர்களும் செய்யும் திருப்பணிகளுக்குப் பல இடைஞ்சல்கள் வந்தன. இருந்தும் மூர்த்தியார் தமது கடமையில் தவறவில்லை. திடீரென்று சந்தனக்கட்டைக்கு தடையுத்தரவு விதித்தான் அரசன்! சந்தனக் கட்டை எங்கும் கிடைக்கவில்லை. மூர்த்தியாருக்கு என்ன செய்வ தென்று தெரியவில்லை. ''இந்தப் பாதகன் தொலைந்து செங்கோன் மன்னன் மறுபடியும் எப்போது வருவானோ!'' என்று மனம் வருந் திய மூர்த்தியார், ''சந்தனக் கட்டைக்குத்தான் தடையுத்தரவு; எனது முழங்கைக்குமா தடை?'' என்று சொல்லிக்கொண்டே தனது முழங்கையைக் கல்லில் தேய்க்கத் தொடங்கினார்! தோலும் நரம்பும் எலும்பும் தேய்ந்தன. இரத்தம் பாய்ந்தது. இந்தக் காட்சியை மேலும் காண விரும்பாத இறைவன் அருள்கூர்ந்து அசரீரியில் சொன்னார்: ''ஐயனே! அன்பின் துணிவினால் இக்காரியத்தைச் செய்யவேண்டாம். உன் பால் வலியக் கொடுகை விளைவித்தவன் வலிந்து கொண்ட நாடு முழுமையும் நீ கொண்டு,

முன்பு புகுந்த துன்பங்கள் முழுமையும் போக்கி, மக்களைக் காத்து, பின்பு உனது நியதியாகிய திருப்பணி செய்து எமது பேருலகத்துக்கு வருவாயாக!''

அன்றிரவே கருநாடக மன்னன் திடீரென இறந்து போனான்! ஆனால் அவனுக்குப் பின் அரசாள அவன் எந்த வாரிசையும் விட்டு வைக்கவில்லை. அமைச்சர்கள் கூடி ஆலோசித்தார்கள். யாரைப் பட்டத்துக்கு வைக்கலாம்? ஒருவர் சொன்னார்: ''நமது பட்டத்து யானையின் கண்களைக் கட்டி அனுப்பி அந்த யானை எவரைப் பிடிக்கிறதோ அவரையே நாட்டை ஆளும் அரசனைப் பட்டங்கட்டி விடலாம்''. இந்த யோசனை ஏற்கப்பட்டு, யானைக்குப் பலவித அருச்சனைகள் செய்து அதன் கண்களைக் கட்டி விட்டு, ''இந்தப் பெருநிலத்து ஆட்சியைக் கொள்ளக் கூடிய தோள்வலிவுடைய மன்னனை நீ பெற்று வருவாயாக'' என்று சொல்லி நகரத்து வீதிகளில் போக விட்டனர். யானை பல வீதிகளைக் கடந்து ஆலவாய்க் கோபுரத்தின் முன் வந்து நின்றது. அப்பொழுது முன்னரே அசரீரி வாக்குக் கேட்ட மூர்த்தியார், ''எமது பெருமானது திருவருளும் அதுவானால் நான் அரசாட்சியை மேற் கொள்வேன்'' என்று நினைந்தவராய் கோயிலைவிட்டு வெளியே வந்தார். பட்டத்து யானை உடனே அவர் முன் பணிந்து, அவரை எடுத்துப் பிடரின்மீது வைத்துக்கொண்டு அரண்மனை சென்றது. அமைச்சர்கள் அளவு கடந்த மகிழ்ச்சியோடு மூர்த்தியாருக்குப் பட்டாபிஷேகம் செய்ய முன்வந்தனர். மூர்த்தியார் அவர்களைப் பார்த்து, ''சமணர்கள் வழியிலன்றிச் சைவ முறையிலே இவ்வரசியல் நடக்கும் என்பதை உங்களுக்கு அறிவிக்கிறேன்'' என்றார். அவர்கள், ''அவ்வண்ணமே நடக்கட்டும்'' என்றார்கள். மீண்டும் அவர், ''ஆட்சி செய்வதானால் திருநீறே அபிடேகமாகவும், உருத்திராக்க மணியே ஆபரண மாகவும், சடாமுடியே மகுடமாகவும் தரித்து நான் அரசு புரிவேன்'' என்றார். இதைக் கேட்ட அமைச்சர்களும் மற்றவர்களும் ''தாங்கள் சொல்வதை நாமும் ஏற்றுக் கொண்டோம்'' என்றார்கள். எனவே சிவ சின்னங்களாகிய திருநீறு, உருத்திராக்கம், திரிசடை ஆகிய மூன்றையும் தரித்துக்கொண்டு மூர்த்தி யென்ற மூர்த்தி நாயனார் மதுரையிலிருந்து அரசாண்டார். இதனையே சுந்தரமூர்த்தி நாயனார் தமது திருத்தொண்டத்தொகை யில், ''மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கு மடியேன்'' என்று குறிப்பிட்டார்.

வடுகக் கருநாடமன்னன் என்று சேக்கிழார் குறிப்பிடும் மன்னன் தமிழ் நாட்டில் ஒரு காலத்தில் அரசாண்ட களப்பிரர்

வகுப்பைச் சேர்ந்தவன் என்று சில சரித்திரகாரர் நம்புகின்றனர். வேள்விக்குடி சாசனம் என்ற கல்வெட்டுச் சாசனம் ஒன்று தமிழ் நாட்டு வரலாற்றின் ஒரு முக்கிய சம்பவத்தைக் குறிப்பிடுகிறது. அந்தச் சாசனத்தில் கண்ட ஒரு பகுதி: ''பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி யெனும் பாண்டியாதிராசன் பின்...அளவரிய அதிராசரை அகல நீக்கி அகலிடத்தைக் களப்ரனெனும் கலியரசன் கைக் கொண்டானையிறக்கிய பின், படுகடன் முளைத்த பரிதிபோல் பாண்டியாதிராசன் விடுகதி ரவிரொளி விலக வீற்றிருந்து... கடுங்கோன் என்னும் கதிர்வேற் றென்ன...'' என்று காணப்படு கிறது, பல்யாகசாலைப் பெருவழுதியென்பவன் சங்க காலத்தி லாண்ட பாண்டியன். இவனுக்குப் பின் வந்த அதிராசனைக் களப்பிரன் என்னும் கலியரசன் போரில் தோற்கடித்து மதுரையைக் கொண்டான் என்றும், கடுங்கோன் என்ற பாண்டியன் மீண்டும் நாட்டைப் பிடித்தான் என்றும் தெரிகிறது. இந்தக் களப்பிரர் சில காலம் தமிழ் நாட்டை ஆண்டு வந்த காலம் இருண்டகாலம் என்றும் அக்காலத்தில் என்ன நடந்த தென்பது தெரியவில்லையென்றும் சில வரலாற்றுசிரியர் கருது கின்றனர். வேறு சிலர், களப்பிரர் என்பவர்கள் கங்க அரசர்கள் என்றும், அவர்கள் இரண்டொரு ஆண்டுகளே தமிழ்நாட்டில் அரசு செலுத்தினர் என்றும் நம்புகின்றனர். மூர்த்தி நாயனாருக்கு முன் ஆண்ட ''வடுக கருநாட மன்னன்'' தான் இந்த கங்க அரசன் என்று சிலர் சொல்வார்கள். வடுகு என்பது மைசூர் மானிலம். அங்கிருந்து வந்த ''கலியரசர்'' என்பவர் யானைக்கொடியுடைய வர்கள். கங்க வம்சத்தவர். இவர்கள் வழிவந்தவர்கள் களப்பாளர் என்ற இனத்தவர்கள் தமிழ்நாட்டில் பல ஊர்களில் வாழ்ந்தார்கள்.

தேவார நாயன்மாரில் சம்பந்தர் மாத்திரமல்ல, மற்றைய இருவரும் மதுரைக்கு வந்து போயிருக்கிறார்கள். சுந்தரர் ஒருமுறை தமது நண்பர் சேரமான் பெருமாளோடு வந்து பாண்டியனோடு தங்கியிருந்த சமயம் மூன்று அரசர்கள் ஒரே சமயத்தில் சந்தித்த தாக வரலாறுண்டு. பாண்டியனுடன் இருந்த அவன் மருமகன் சோழ இளவரசன் என்று தெரிகிறது. பாண்டியன், சோழன், சேரமான்—மூவரும் மதுரையில் சந்தித்த பெருமையுண்டு. ஏற்கெனவே நெடுமாறன் என்ற பாண்டியன் மனைவி மங்கையர்க் கரசி சோழநாட்டு இளவரசியென்று தெரிந்த செய்தி. அக்காலத் தில் சோழரும் பாண்டியரும் மணமுறையில் கொடுக்கல் வாங்கல் உள்ளவர்களாயிருந்தார்கள் என்று தெரிகிறது.

மதுரை சுவாமி கோயில் பிராகாரம் வடமேற்கு மூலையில் சங்கப் புலவர் மண்டபம் உள்ளது. இங்கு நாற்பத்தொன்பது

சிலைகள், சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மரைக் குறிக்க ஏற்படுத்தியுள்ளார்கள். ''பொய்யடிமையில்லாத புலவர்க்கு மடியேன்'' என்று சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் வைத்துப் பாடியது இந்தச் சங்கப் புலவரையே என்று சிலர் சொல்வார்கள்.

திருஞானசம்பந்தர் ஆசீர்வாதம் பெற்றவர்கள் பாண்டியன் நெடுமாறன், அவன் அரசி மங்கையர்க்கரசி, அமைச்சர் குலச் சிறை—இந்த மூவரும் சுந்தர மூர்த்தியின் திருத்தொண்டத் தொகையில் இடம் பெறுகிறார்கள். ''நிறைக் கொண்ட சிந்தை யால் நெல்வேலிவென்ற நின்ற சீர் நெடுமாறனடியார்க்கு மடியேன்'' என்று நெடுமாறனைக் குறிப்பிடுகிறார். ''நெல்வேலி வென்ற'' என்ற குறிப்பிலிருந்து இந்த நெடுமாறன் அப்பர் சம்பந்தர் காலத்தவர் என்பது தீர்மானமாகிறது. இவன் மனைவி மங்கையர்க்கரசியை ''வரிவளையாள் மானிக்கும்'' என்று சுந்தரர் குறிப்பிடுகிறார்; இவரது அமைச்சரை, ''பெருநம்பி குலச்சிறை தன் அடியார்க்கு மடியேன்'' என்கிறார். இந்த மூவரும்—நெடுமாறன், மங்கையர்க்கரசி, குலச்சிறை—அறுபத்துமூவரில் இடம் பெற்று, சேக்கிழாரால் வரலாறு எழுதப்பெற்றனர். இவர்களை நாம் மதுரையிலேயே சந்தித்து விட்டோம். சீர்காழிக்குப் போய் சம்பந்தரைச் சந்தித்த திருநீலகண்டயாழ்பாணரைப்பற்றி முன்பே குறிப்பிட்டிருந்தோமல்லவா? அவர் இங்குதான் முதன் முதல் யாழ்வாசித்து அந்த யாழுக்கு சொக்கநாதரின் ஆசியைப் பெற்றவர் என்பதையும் முன்பு சொல்லியிருக்கிறோம்.

சேரமான் பெருமாளுக்கும் மதுரைச் சொக்க நாதருக்கும் ஒரு தொடர்புண்டு. திருத்தொண்டத்தொகையில் ''கார் கொண்ட கொடை கழறிற் றறிவார்க்கு மடியேன்'' என்று ஒரு தொடர் வருகிறது. கழறிற்றறிவார் என்ற பெயருள்ள நாயனாரை இது குறிக்கிறது, இந்தக் கழறிற்றறிவார் என்பவர் வேறு யாரு மல்ல, சேரமான் பெருமாள் நாயனாரே. யார் எது கழறினாலும், அதாவது சொன்னாலும், உடனே அதைத் தெரிந்து கொள்ளும் ஆற்றல் படைத்தவராகையால், கழறில் அறிவார், கழறிற்றறிவார் என்ற காரணப்பெயர் பெற்றார். இவருக்கு இறைவன், சுந்தரரைப் போல,மிக நெருங்கிய ஒரு நண்பர் போலிருந்தார் என்று சொல்லப் படுகிறது. சேரமான் பூசை செய்து முடித்தவுடன் தில்லை நடராஜரின் நர்த்தனத்தின்போது எழும் சிலம்பின் ஒலி அவர் காதில் ஒலிக்குமாம். இது கேட்டபின்தான் உணவருந்துவார். இதேமாதிரி மதுரையிலிருக்கும் சோமசுந்தரக் கடவுளும் இந்த சேரமானுக்கு மிகவும் தெரிந்திருந்தபடியால் சோம சுந்தரக்

கடவுள் ஒரு முறை ஒரு கடிதமே எழுதியனுப்பினராம்! இந்தக் கதைதான் சுவாரஸ்யமானது.

மதுரையிலே பாணபத்திரர் என்று ஒரு பக்தர் இருந்தார். இவர் சோமசுந்தரக் கடவுளிடம் நிறைந்த பக்தி கொண்டு நித்தியம் பூஜை செய்து வணங்கி வந்தார். வறுமை வந்தெய்திய சமயத்தில் இவர் கஷ்டப்படுவதைக் கண்ட சோமசுந்தரக் கடவுள் ஒரு நாள் பாணபத்திரரின் சொப்பனத்தில் தோன்றி, ''உனக்குப் பொன்னும் பட்டாடை முதலியனவும் வேண்டியளவு தருவதற்கு சேரனுக்கு ஒரு ஓலை தருகிறேன். கொண்டு போய்ப் பெற்றுக் கொண்டுவா'' என்று சொல்லி ஒரு அறிமுகக் கடிதம் கொடுத்தார். அந்தக் கடிதம் தமிழ் இலக்கியத்தில் மிகவும் மதிக்கப் பெற்ற கடிதம்.

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பானிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆல வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவியொளி திகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க.
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே

இந்தக் கடிதத்தைக் கொண்டு போய் பாணபத்திரர் சேரமான் பெருமாளிடம் கொடுத்ததும், சேரன் மட்டிலா மகிழ்ச்சி கொண்டு, தன்னிடமுள்ள அத்தனை செல்வங்களையும் தனது ராச்சியத்தையுமே பாணபத்திரருக்குக் கொடுத்தானும்! ஆனால் பாணபத்திரர் பேராசை பிடித்தவரல்ல. தமக்கு வேண்டியதை மாத்திரம் எடுத்துக் கொண்டு ராச்சியத்தையும் மற்றெல்லாவற்றையும் சேரனே வைத்திருக்குமாறு சொல்லி, நன்றியுடன் திரும்பினர் என்பர். இந்தச் சேரமான் பெருமாள் சுந்தரமூர்த்தியின் நட்பைப் பெற்ற வரலாற்றைப் பின்னர் பார்ப்போம்.

சமணரை வாதில் வென்ற ஞானசம்பந்தர் வெற்றிவாகை சூடிக்கொண்டு முத்துச் சிவிகையில் பவனி வந்தார். தமிழ் நாடெங்கும் யாத்திரை செய்தார். தொண்டை நாட்டில் சில சமணர்கள் நடந்து கொள்ளும் முறையைப் பற்றிச் சைவ மக்கள் வருந்தி, ஞான சம்பந்தரை அழைக்க அவர் அங்கு செல்கிறார். நாமும் அந்த ஊரைப் போய்ப் பார்ப்போம்.

48. போதியோ பூம்பாவாய்!

மதுரையிலிருந்து புறப்பட்ட ஞானசம்பந்தர் பல தலங்களையும் தரிசித்துவிட்டு, தொண்டை நாட்டிலுள்ள சில கோயில்களைத் தரிசிக்க வரும் வழியில் ஒரு தொண்டர் வந்து சம்பந்தரின் காலில் விழுந்து வணங்கிப் பின்வருமாறு விண்ணப்பித்தார்: ''சுவாமி! எங்கள் திருவோத்தூர் கோயிலில் அடியேன் இறைவனுக்காகச் சில பனைகளை வளர்த்து வந்தேன். ஆனால் எல்லாப் பனைகளும் ஆண்பனைகளாகிவிட்டன. இறைவனுக்குக் காய் நிவேதிக்க வழியில்லாமல் தவிக்கிறேன். இதைக் கண்ட எங்களூர் சமணர்கள், 'உங்கள் தெய்வத்தைக் கேட்கிறதுதானே! சர்வ வல்லமையுள்ள உங்கள் தெய்வம் ஆண்பனையில் காய் கொடுக்கும்' என்று எள்ளி நகையாடுகிறார்கள். இந்தச் சமணரின் மந்திர சக்தியால்தான் பனைகளெல்லாம் ஆண்பனைகளாகிவிட்டன என்று ஊரில் பேசிக் கொள்கிறார்கள். ஆகையால், பரசமய கோளரியாகிய தேவரீர் எங்கள் ஊருக்கு வந்து சமணர்களின் கொட்டத்தை யடக்க வேண்டுகிறேன்'' என்று கேட்டுக் கொண்டார்.

சமணர் என்றூர் ஞானசம்பந்தர் எங்கேயென்று தேடிப் போவார்! பாண்டி நாட்டில் அவர்கள் செல்வாக்கை முறியடித்தவர் தொண்டை நாட்டிலும் உள்ள எதிரிகளை வெல்ல வேண்டும் என்று மகிழ்ச்சியுடன் அந்த அடியாருடன் திருவோத்தூர் என்ற தலத்தையடைந்தார். ஏற்கெனவே சம்பந்தர் வருகையை யறிந்த ஊர்மக்கள் பலவித அலங்காரங்களுடன் வரவேற்க ஆயத்தமானார்கள். இதைக் கேள்விப்பட்ட சமணர்களும் என்ன நடக்குமோ என்று அறிவதற்கு ஆவலாக நின்று வேடிக்கை பார்த்தார்கள். ஒரு சிலருக்குக் கவலை. சம்பந்தரின் துணிவையும் செல்வாக்கையும் அறிந்தவர்கள் அவர்கள். மதுரையில் சமணர் தோற்ற வரலாறு அவர்களுக்குத் தெரியும்.

சம்பந்தர் வந்தார். திருவோத்தூர் ஆலயத்தின் வாயிலில் நின்று வணங்கினார். பின்னர் நாலா பக்கமும் சுற்றிப் பார்த்தார். அங்கே சில பனைகள் ஆண்பனைகளாக நிற்பதைக் கண்டார். ஒரு தேவாரப் பதிகம் பாடினார்.

பூத்தேர்ந் தாயன கொண்டு நின் பொன்னடி
ஏத்தா தாரில்லே யெண்ணுங்கால்
ஒத்தூர் மேய வொளி மழுவாள் அங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே

இந்தப் பதிகத்தைப் பாடி அதன் கடைசிப் பாட்டாகிய திருக் கடைக்காப்பில், ''குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்'' என்று தொடங்கும் பாடலைப் பாடியவுடன் அங்கு நின்ற ஆண் பனைகளிலெல்லாம் காய்கள் சொரிந்து குலை குலையாகக் காணப் பட்டன. கூடி நின்ற பக்தர்கள், ''பரசமய கோளரி வாழ்க'' என்று ஆர்ப்பரித்தார்கள். பார்த்து நின்ற சமணர்கள் ஓட்டம் பிடித்தார்கள். வேறு சிலர் தமது கையிலிருந்த குண்டிகைகளைப் போட்டு உடைத்தார்கள். இன்னும் சிலர் சம்பந்தரின் பாதங் களில் விழுந்து வணங்கிச் சைவர்களானார்கள்.

இந்தத் திருவோத்தூர் என்ற தலம் காஞ்சீபுரத்துக்குத் தென் மேற்கே பதினெட்டு மைல் தூரத்தில் சேயாற்றின் கரையிலிருக் கிறது. திருவத்தூர் என்றும் அனகாவூர் என்றும் இப்போது வழங்குகிறது. வேதத்தின் பொருளை இறைவன் இங்கிருந்துதான் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் ஓதினார் என்ற காரணத்தால் ஓத்தூர் என்ற பெயர் பெற்றதாக ஐதிகம். சுவாமியின் பெயர் வேத நாதர். இவர் இங்கு வீர நடனம் செய்ததாகவும் சொல்லப் படுகிறது. ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கிய சம்பவத்தை நினைவூட்ட இங்கே கல்லில் ஒரு பனை செய்து வைத்திருக்கிறார்கள். இதில் ஒரு பக்கம் காய்களும் மறுபக்கம் பூம்பாளைகளும் காணப் படுகின்றன.

தொண்டை மண்டலத்தில் பெரும்பாலனவான சிவஸ்தலங் களில் பெருமாள் சந்நிதிகளையும் காணலாம். இங்கே திருவோத் தூரிலும் ஒரு ஆதிகேசவப் பெருமாள் சந்நிதியிருக்கிறது. பழைய காலத்துக் கோயில். சோழர், பாண்டியர் கல்வெட்டுக்கள் பல இங்கு காணப்படுகின்றன. பிற்காலத் தமிழ் இலக்கியங்களில் திருவோத்தூர் மறைசைமாநகர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வெற்றிக்குப் பின் ஞானசம்பந்தர் தொண்டை நாட்டில் சில கோயில்களைத் தரிசித்துக் கொண்டு வந்து திருவொற்றியூரையடைந்தார். ஊரிலுள்ள மக்களெல்லாரும் திரண்டு வந்து வரவேற்பளித்தார்கள். இப்படி வரவேற்பளித்த வர்களில் முக்கியமான ஒருவர் மயிலாப்பூர் வாசியான சிவநேசச் செட்டியார் என்பவர். இவருடைய புதல்வி பூம்பாவையின் சரித்திரம் மிகவும் அற்புதமானது.

சிவநேசர் மயிலாப்பூரில் மிகவும் செல்வாக்குள்ள வணிகர். ஏராளமான கப்பல் வியாபாரம் நடத்தியவர், சிவபக்தி நிறைந்தவர். அன்றியும் அவர் காலத்தில் மயிலாப்பூரில் வாழ்ந்த சமணர்கள் செய்கைகளை வெறுத்தவர். இவருக்குத் தெய்வகடாட்சத்தின் பயனாக ஒரேயொரு புதல்வி பிறந்திருந்தாள். அவளுக்குப் பூம்பாவை என்று பெயரிட்டு, மிகவும் செல்லமாக வளர்த்து வந்தவர், சீர்காழியில் பிறந்த ஞானசம்பந்தரின் அற்புதச் செயல்களைக் கேள்விப்பட்டபின் இந்தப் பெண்ணை சம்பந்தருக்கே மணம் முடித்துக் கொடுக்க வேண்டும் என்ற ஆசையில் அர்ப்பணம் செய்திருந்தார். பூம்பாவைக்கு பன்னிரண்டு வயது நிரம்பி அற்புத எழிலோடு வளரும்போது ஒரு நாள் நந்தவனத்தில் பூப்பறிக்கும் சமயத்தில் எதிர்பாராத விதமாக ஒரு பாம்பு தீண்டிவிட்டது. உடனே எல்லாவித சிகிச்சையும் செய்து பார்த்தார்கள். ஒன்றும் பயனில்லாமல் பூம்பாவை இறந்து போனாள். சிவநேசர் மிக வருந்தி, பெண்ணின் ஈமக்கிரியை முடித்த பின், அஸ்தியை எடுத்து ஒரு குடத்திலிட்டு வைத்து, விளக்கு, மாலை, சாந்தம், போனகம் முதலிய உபசாரங்களைத் தோழியர் மூலமாகத் தினந்தோறும் செய்வித்து வந்தார்.

திருவொற்றியூரிலே ஞானசம்பந்தப் பிள்ளையார் வந்திறங்கியிருக்கிறார் என்று கேள்விப்பட்டதும் சிவநேசர், மயிலாப்பூருக்கும் திருவொற்றியூருக்கு மிடையில் நடைக்காவணம் அமைத்து, துகில் விதானம் விரித்து, வாழை, கமுகு, தோரணம், மாலை முதலியன கட்டிக் கோலாகலமான வரவேற்பளித்தார். சம்பந்தரும் பரிவாரங்களும் எல்லையற்ற மகிழ்ச்சியுடன் மயிலாப்பூரை யடைந்து, கபாலீஸ்வரரையும் கற்பகவல்லியையும் வணங்கி நிற்கும்பொழுது சிவநேசர், தமது புதல்வி இறந்த கதையைச் சொன்னார். சம்பந்தர் யோசித்துப் பார்த்தார். அங்கே பெருங் கூட்டம் கூடியிருந்தது. சமணர்களும் பலர் அங்கு வேடிக்கை பார்த்து நின்றனர். அதுவே தக்க சமயம் என்று சம்பந்தர் சிவநேசரிடம், ''உமது புதல்வியின் எலும்பு சேர்த்து வைக்கப் பட்டிருக்கும் குடத்தைக் கபாலீச்சுரத்தின் வெளி மதிலின் பக்கத்திலே எடுத்து வருக'' என்று சொன்னார். சிவநேசர் அளவு கடந்த மகிழ்ச்சியுடன், கன்னிமாடத்தில் வைத்திருந்த அஸ்தியுள்ள குடத்தை, பல சேடியர் புடைசூழப் பல்லக்கில் வைத்துக் கொண்டு வந்து சம்பந்தர் முன்னிலையில் இறக்கி வைத்தார். மயிலை நகரிலுள்ள மக்கள், மற்றும் சுற்றுப்புறங்களிலுள்ளவர்கள், பிற சமயவாதிகள் என்று பலர் கூடி என்ன நடக்கப் போகிறதோ என்று காத்து நின்றனர். சம்பந்தர் சிறிது நேரம் இறைவனைத் தியானித்துவிட்டுச் சொன்னார்: ''பூம்பாவாய்! உலகிற் பிறந்தார்

பெறும் உறுதிப்பயனுவது, சிவபெருமானடியார்களே அமுது செய்வித்தலும், இறைவனது திருவிழாக்களைக் கண்ணுரக் காணுதலுமேயாம் என்பது உண்மையாயின், இதோ உலகோர் முன்னே வா! இறைவனைப் பற்றித் தெரியாத சமணரும் சாக்கியரும் பலர் இங்கே பார்த்துக் கொண்டுதான் நிற்கிறார்கள். அவர்கள் இது முடியாத காரியம் என்று சொல்வார்கள். ஆனால், பூம்பாவாய்! உடனே எழுந்து வா'' என்று சொல்லி, ஒரு அழகான திருப்பதிகம் பாடினார். அதன் முதற்பாடல்:

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சுர மமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணுதே போதியோ பூம்பாவாய்

இங்கு பாடிய பதினெரு பாடல்களிலும் சம்பந்தர் பல திருவிழாக்களைக் குறிப்பிட்டு, ''இந்த விழாக்களைக் கண்டு களிக்காமல் நீ போதியோ பூம்பாவாய்?'' என்று இரங்கிப் பாடினார். முதல் எட்டுப் பாடல்கள் நிறைவுற்றவுடன் குடத்திலிருந்த எலும்பும் சாம்பலும் உருப்பெற்றுப் பன்னிரண்டு வயது நிறைந்த பெண்ணாகி, பத்தாவது பாட்டிலே சம்பந்தர், சமணர்களும் பௌத்தர்களும் இச்செய்கை முடியாதென்று சொல்வார்கள் என்ற கருத்துப்படப்பாடிய பொழுது பெண்ணின் கை வெளியே புறப்படக் குடம் உடைந்து பூம்பாவை எழிலுடன் காட்சியளித்தாள். இந்த அற்புதத்தைக் கண்ட மக்கள் யாவரும் அதிசயித்தனர். சமணர்களும் சாக்கியர்களும் ஏங்கித் தள்ளாடி விழுந்தனர்.

சிவநேசரும் பூம்பாவையும் சம்பந்தர் திருப்பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தனர். ஞானசம்பந்தர் சிவநேசரை நோக்கி, ''இனி உம்முடைய புத்திரியை அழைத்துக்கொண்டு வீட்டிற்குச் செல்லலாம்'' என்றார். சிவநேசர் சம்பந்தரைப் பணிந்து, ''சுவாமி! அடியேன் அருமையாகப் பெற்ற இப்புத்திரியைத் தேவரீர் திருமணஞ் செய்தருளல் வேண்டும்'' என்று பிரார்த்தித்தார். இதைக் கேட்ட ஞானசம்பந்தர் புன்னகை செய்து சிவநேசரை நோக்கி, ''உமது பெண் எப்பொழுதோ விஷத்தினால் இறந்து விட்டாள். இப்போது உலகத்தார் சிவபெருமானது கருணையை அறியும்பொருட்டு நாம் பிறப்பித்தவளை நாமே மணம் செய்வதென்பது தகாத காரியம். ஆகையால் அவளை யழைத்துக்கொண்டு செல்க'' என்றார். சிவநேசரும் அதன் பொருளை யுணர்ந்தவராகப் பூம்பாவையை யழைத்துக்கொண்டு வீடு சென்றார். இந்தச் சம்பவத்தை ஞாபக

மூட்ட, மயிலாப்பூர் கபாலி கோயில் மேற்குச் சந்நிதியில் சுதை யுருவங்கள் காணப்படுகின்றன.

* * *

மயிலாப்பூர் கோயில் சென்னை வாசிகளாகிய நமக்கெல்லாம் மிகவும் பழக்கப்பட்ட கோயில். வெளியூர்களிலிருந்து பட்டணத்தைப் பார்க்க வருபவர்களும், வெளிநாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளும் மயிலாப்பூர் கபாலிகோயிலைத் தரிசிப்பது ஒரு இன்றியமையாத கடமை என்று சொல்ல வேண்டும். தமிழ் நாட்டின் பழம் பெரும் சரித்திரத்தில் காவிரிப் பூம்பட்டினம் போன்று மயிலாப்பூரும் ஒரு புகழ் பெற்ற துறைமுகப்பட்டினமாயிருந்த தென்பதற்குப் பல சான்று களுள்ளன. கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் தொலமி என்ற உரோம யாத்திரிகன் எழுதிய நூலில் மயிலாப்பூரைக் குறிப் பிட்டுள்ளான். ஏழாம் நூற்றாண்டில் வந்த நாவுக்கரசர் மயிலாப்பூரை 'மயிலாப்பில்' என்று குறிப்பிட்டுள்ளார். பத்தாம் பன்னிரண்டாம் நூற்றாண்டுக் கல் வெட்டுச் சாசனங்களிலும் 'மயிலார்ப்பு' என்று காணப்படுகிறது. ஏழாம் நூற்றாண்டில் ஞானசம்பந்தர் மயிலை என்று குறிப்பிடுகிறார். இவருக்குச் சற்று முந்திய ஆழ்வார்களும் மயிலை என்றே பாடியிருக்கிறார்கள்.

ஆகவே, மயிலாப்பூர் என்ற பெயர் எப்படி வந்ததென்பதை ஆராயும்போது பல விநோதமான விளக்கங்களையெல்லாம் பார்க்கலாம். இந்தப் பிரதேசம் ஒரு காலத்தில் மயில்கள் நிறைந்த இடமாயிருந்தது. தோகை விரித்தாடும் மயிலை 'மயிலார்ப்பு' என்று சொல்லலாம். எனவே இந்த இடத்துக்கு ஆதியில் மயிலார்ப்பு என்ற பெயரே இருந்திருக்கலாம். இதுவே கல்வெட்டுச் சாசனங்களில் காணப்படுகிறது. இதனைச் சுருக்கி மயிலை என்று நாயன்மாரும் ஆழ்வார்களும் தமது பாடல்களில் பாடினார்கள். இந்த மயிலை பின்பு மயிலாபுரி என்று வந்து, அது பிற்காலத்தில் ஆங்கில உச்சரிப்பில் 'மயிலாப்பூர்' என்று வழங்க, தமிழிலும் அந்த உச்சரிப்பையே நம்மவர்கள் கையாளத் தொடங்கினர்.

கிறிஸ்து காலத்திலேயே அவரது சீடர்களில் ஒருவராகிய தோமை என்பவர் மயிலாப்பூரில் வந்து குடியேறிப் பின்னர் சாந்தோம் குன்றில் அடக்கம் செய்யப்பெற்றார் என்று சில நூற்றாண்டுகளாக நம்பப் படுகிறது. உண்மைச் சரித்திர ஆராய்ச்சியாளர் இது நடந்திராத கர்ணபரம்பரைச் செய்தி மாத்திரமே என்று சொல்வார்கள். மயிலையிலுள்ள தோமை

ஆலயப் பகுதியில் அகழ்வாராய்ச்சி செய்தபோது சமண விக்கிரகங்கள் சில அகப்பட்டன. ஆகவே இந்தப் பிரதேசத்தில் சமணர்கள், கி. பி. நாலாம் ஐந்தாம் நூற்றாண்டுகளில் மிகுந்த செல்வாக்குடனிருந்தார்கள் என்பதற்குச் சான்றுகளிருக்கின்றன. நேமிநாத தீர்த்தங்கரருக்கு ஒரு கோயில் இருந்ததாகச் சில சமண நூல்களில் செய்தி காணப்படுகிறது. இதற்குச் சான்றாக சந்தோமை ஆலயப் பகுதியில் நேமிநாதரின் பழைய சிலையொன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த பதினாறும் நூற்றாண்டில் மேற்கேயிருந்து வந்த போர்த்துக்கீசரின் அட்டூழியங்களில் ஒன்று, முக்கியமான க்ஷேத்திரங்களிலிருந்த இந்துக் கோயில்களை இடித்துக் கோட்டைகளும் கிறிஸ்தவக் கோயில்களும் கட்டியது. இந்தியாவின் மேற்குக் கரையில் கோவாவும் இலங்கையின் கிழக்குக் கரையில் திருக்கோணமலையும் தமிழ் நாட்டின் கிழக்குக் கரையில் மயிலாப்பூரும் இந்தப் போர்த்துக்கீசரின் கையில் அழிந்து பட்டன. அதில் சிதையுண்டு எஞ்சிக் கிடந்த கற்களைக் கொண்டே இன்று விளங்கும் மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில் கட்டப் பெற்றது என்பது வரலாறு. பழைய சோழ சிற்பிகள் கட்டியெழுப்பிய, கடற்கரையிலிருந்த கோயிலில் பல கல்வெட்டுச் சாசனங்களிருந்தன. அந்தச் சாசனங்கள் இன்று காணப்படும் கோயிற் சுவர்களில் தாறுமாறாக வைத்துக் கட்டப்பட்டுள்ளன.

பார்வதி தேவியார் மயிலாப்பூரிலிருந்து பூசித்த தலம் என்ற ஐதிகத்தை நிரூபிக்க இங்கே வடக்குப் பிராகாரத்தில் ஒரு சந்நிதியிருக்கிறது. இதில் மயிலம்மை லிங்கத்துக்கு பூசை செய்வதாய்க் காட்டப்படுகிறது. இந்தக் கோயிலில் கபாலீஸ்வரர் சந்நிதி மேற்குப் பார்த்தது; அம்மன் கற்பகவல்லி சந்நிதி தெற்குப் பார்த்தது.

மயிலாப்பூரில் வசித்த நாயனார் ஒருவர் பெயர் அறுபத்து மூவர் தொகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயிலார் என்ற பெயருடைய இந்த நாயனார் மற்றும் சிலரைப் போலச் சரியை கிரியை ஒன்றிலும் ஈடுபடாது, தியான மார்க்கத்தில் நின்று மனத்திலே கோயில் அமைத்து வழிபட்டார் என்று சொல்லப்படுகிறது. திருநின்றவூரில் பூசலார் நாயனார் அழகான மனக் கோயில் கட்டி இறைவனை யழைத்துத் திறப்பு விழா நடத்தினார். ஆனால் வாயிலார் அவ்வளவு தூரம் போகவில்லை. ''மறவாமையானமைந்த மனக்கோயிலினுள்'' இறைவனை வைத்து, தியானம் செய்தே வழிபட்டு முத்தியடைந்தவர். ''துறைக் கொண்ட செம்பவளமிருளகற்றும் சோதித் தொன்மயிலை வாயிலானடியார்க்கு மடியேன்'' என்று சுந்தரமூர்த்தி நாயனார் தமது திருத்தொண்டத் தொகையில் இவரைச் சேர்த்துள்ளார். இவரது

சந்நிதியை மயிலாப்பூரில் வேறு எங்கும் வைக்காமல், கபாலீஸ்வரர் கோயிலில், அம்மன் சந்நிதிக்கு எதிரில் தனியாக் அமைத்திருக் கிறார்கள்.

மயிலாப்பூர் கபாலிகோயில் குளமும் ஒரு தனிச் சரித்திரத் தைக் கொண்டது. முகரம் பண்டிகையின்போது வருடாவருடம் முஸ்லிம்கள் இந்தக் குளத்தை ஆக்கிரமித்துத் தங்கள் தாஜிகளைக் கழுவிக் கொள்வதைப் பார்க்கலாம். அன்று ஒரு நாள் மாத்திரம் இத்திருக்குளம் முகம்மதிய சழயிகளுக்கு உரிமையானதற்கு ஒரு வரலாறுண்டு.

பழைய நவாபுகள் ஆட்சியின் போது கபாலி கோயிலுக்கு மேற்கே முகம்மதியர்கள் ஒரு பள்ளிவாசல் வேண்டுமென்று விண்ணப்பிக்க, அப்போதிருந்த நவாபு சரியென்று கட்டிக் கொடுத்து விட்டார். இந்துக்கள் அதனை எடுத்துவிடவேண்டு மென்று மன்றுடிக் கேட்டார்கள். அந்தச் சமயத்தில் நாவாபு ஊரில் இல்லை. அங்கே இருந்த மந்திரி ஓர் இந்து. அந்த இந்து மந்திரி நவாபுக்குத் தெரியாமல் ஒரே இரவில் பள்ளியை இடித்து, அந்த இடத்தில் திருக்குளம் தோண்டிவிட்டாராம்! நவாபு திரும்பி வந்த பிறகு, வேறு எதுவும் செய்யமுடியாமல், முகரம் பண்டிகையின் போது முகம்மதியர்கள் தங்கள் தாஜிகளை அக் குளத்தில் கழுவிக் கொள்ளலாம் என்ற உரிமை தந்ததாகவும், அதுமுதல் அவ்வாறே நடப்பதாகவும் கர்ணபரம்பரைக் கதை யொன்று உண்டு. இதில் உண்மை இருக்க முடியாது. ஆனால், முகம்மதியர்கள் முகரம் பண்டிகையின்போது இந்தக் குளத்தை உபயோகிப்பதற்கு ஏற்பட்ட கற்பனைக் கதையென்று மாத்திரம் கொள்ளலாம்.

திருமயிலைக் கபாலிகோயிலில் பிரம்மோற்சவத்தின்போது அறுபத்து மூவருக்கு ஒரு விசேஷ விழா நடத்தப்படுகிறது. சம்பந்தர் பாடிய பூம்பாவைப் பதிகத்தில் பல திருவிழாக்களைக் குறிப்பிடுகிறார். இவையெல்லாம் அவர் காலத்தில் இங்கே நிகழ்ந்த விழாக்கள் என்பது வெளிப்படை. ஐப்பசி ஓணம், கார்த்திகை விளக்கீடு, மார்கழித் திருவாதிரை, தைப்பூசம், மாசி மகம், பங்குனி உத்திரம், சித்திரை அட்டமி, திருக்கல்யாணம், பெருஞ் சாந்தி முதலிய விழாக்கள் சம்பந்தரின் பூம்பாவைப் பதிகத்தில் காணப்படுகின்றன.

மயிலாப்பூர் கோயில் சென்னை நகரத்தினுள் இருப்பதால் பெரிய பட்டணத்து வசதிகளையெல்லாம் கொண்டிருக்கிறது. கோயில் நிர்வாகமும் மிகச்சிறப்பாகவே நடைபெற்று வருகிறது. மயிலைக் கபாலீஸ்வரரையும் கற்பகவல்லியையும் தரிசித்துக் கொண்டு சிறிது வடக்கே வீற்றிருக்கும் திருவள்ளுவ நாயனாரையும் தரிசித்துவிட்டு, நாம் பழையபடி ஞானசம்பந்தரைப் பின் தொடர வேண்டியிருக்கிறது.

49. பெருமணத்தில் திருமணம்

மதுரையிலிருந்து ஞானசம்பந்தப் பெருமானைத் தொடர்ந்து வந்த நாம் விரைவிலே அவரை விட்டுப் பிரிய வேண்டிய சமயம் வந்துவிட்டது. மூன்று வயதில் ஞானப்பால் அருந்தி இறையருள் பெற்ற பாலகனுக்கு இப்போது வயது பதினைந்து. அவர் சீர்காழிக்குத் திரும்பி வந்தபோது தந்தையார் சிவபாதவிருதயரும் மற்றும் சுற்றத்தாரும் சமூக முறைப்படி அவருக்கு உடனே ஒரு கல்யாணத்தைச் செய்துவிட வேண்டுமென்று விரும்பினர். இந்த விருப்பத்தை சம்பந்தரிடம் தெரிவித்தும் அவர் உடன்படாமல், ''இப்போது என்ன அவசரம்? நான் இன்னும் சிவதொண்டு பல செய்யவேண்டுமே'' என்று மறுத்தார். ஆனால் குடும்பத்திலுள்ளவர்கள் வற்புறுத்தி, ''நீங்கள் வைதிக நெறி கெட்டுப் போகாமல் அது தழைக்க வேண்டுமென்றே இதுகாலமும் ஒழுகி வந்தீர்கள். நாமோ மறையவர்கள். மறையவர்களுக்குரிய வேள்விகளை வேட்பதற்குச் சில தகுதிகள் இருக்கவேண்டும். பிரமசாரியாக இருந்து அதைச் செய்ய முடியாது. இல்லறத்தை மேற்கொண்டால்தான் முடியும். ஆகையால், பதினெறு வயதாகிய மணப்பருவம் வந்தபோது விவாகம் செய்துகொள்வதே கடமை'' என்று எடுத்துச் சொன்னார்கள்.

சம்பந்தர் யோசித்துப் பார்த்தார். விவாகம் செய்ய வேண்டியது ஏதோ சரிதான். ஆனால் அதன் விளைவான குடும்ப பாசம் மேலும் தனது சேவையைச் செய்யவிடாமல் தடையாயிருக்கு மென்பதை யுணர்ந்தார். இறைவன் விட்ட வழி நடப்போம் என்று தீர்மானித்து, விவாகத்துக்கு ஒப்புக் கொண்டார். உடனே சிவபாத விருதயரும் சுற்றத்தாரும் அளவற்ற மகிழ்ச்சியுடன் பெண்பார்க்கத் தொடங்கினர்கள். பக்கத்து ஊராகிய பெருமணநல்லூரிலே நம்பாண்டார் என்ற பெயருடைய பிராமணர் ஒருவர் இருக்கிறார். அவருக்கு ஒரே புதல்வி. சகல விதத்திலும் பொருத்தமான வரன் என்று கேள்விப்பட்டு சிவபாத விருதயர் சுற்றத்தார் சிலருடன் பெருமணநல்லூருக்குச் சென்று விசாரித்தார். ''ஞானப்பால் உண்டு

வளர்ந்த சிவக்கன்றை மணப்பதற்கு என் மகள் பெருந்தவம் செய்திருக்க வேண்டும்'' என்று சொல்லி நம்பாண்டாரும் மகிழ்ச்சியுடன் பெண் கொடுக்க முன் வந்தார். திருமண நிச்சயம் செய்யப்பட்டது. மணநாளும் குறித்து ஓலை அனுப்பப்பட்டது.

தமிழ் நாடு முழுவதும் புகழ் பரப்பிய திருஞான சம்பந்தருக்குத் திருமணம் என்றால் சொல்லவும் வேண்டுமோ? பெருமணநல்லூர் திருமணநல்லூராகி விட்டது. வீதிகள், மாளிகைகள் எல்லாம் அலங்கரிக்கப்பட்டன. நாலாதிசைகளிலு மிருந்து சுற்றத்தவர்களும் நண்பர்களும் பக்தர்களும் அடியார் களும் வந்து கூடினர். திருநீலநக்கர் சாத்தமங்கையி லிருந்து வந்துவிட்டார். திருப்புகலூரிலிருந்து முருக நாயனார் வந்தார். நீலகண்டப் பாணரும் மனைவி மதங்கசூளாமணியும் கூடவே யிருந்தனர்.கோலாகலமாக விழா நடந்தது.வேதியர்கள் திருமறை ஓத ஞானசம்பந்தர் மணப்பெண்ணின் கரம் பற்றி எரிவலம் வந்தார். கண்டவர் யாவரும் இந்த அழகிய ஜோடியின் பொருத்தத்தைப் பார்த்துப் பூரிப்படைந்தனர். எங்கும் வாழ்த் தொலி எழுந்தது.

அக்கினியை வலம் வந்து அம்மி மிதிக்கும் சடங்கு வந்தது. அப்போதுதான் ஞானசம்பந்தருக்கு ஒரு புதிய உணர்ச்சி ஏற்பட்டு, ''இல்லறவாழ்வு வேண்டாம் என்று நினைத்திருந்த நமக்கு இது வந்து சேர்ந்ததே. இவளையும் சேர்த்துக் கொண்டு நாம் இறைவன் திருவடியை அடைந்தால் என்ன?'' என்று சிந்தித்தவர், உடனே கைப்பற்றியிருந்த பெண்ணுடன் நல்லூர்ப் பெருமணம் என்ற கோயிலை நோக்கி நடந்தார். அங்கு நின்ற வர்கள் யாவருமே உடன் சென்றனர். அங்கே சென்றவுடன் சம்பந்தர், ''எம்பெருமானே, நின் கழல் வேண்டி வந்து நிற்கின்றேன். இப்போதே என்னை ஏற்றுக்கொள்ளும்'' என்று தியானித்து ஒரு பாசுரம் பாடினார்:

கல்லூர்ப் பெருமணம் வேண்டா, கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் ஆய்த்திலை
சொல்லூர்ப் பெருமணம் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேய நம்பானே

''நல்லூர்ப் பெருமணத்தில் எழுந்தருளிய எம்பெருமானே, கல்லில் கால் வைக்கும் அம்மி மிதித்தல் என்ற சம்பிரதாயத்தைக் கொண்ட திருமணம் எனக்கு வேண்டாம். கழுமலம் என்ற சீர்காழி முதல் பல தலங்களைப் பாடினேன். உலகம் உய்யவேண்டு மென்று பாடினேன்; ஆனால் அது உண்மையாகவில்லை. நான்

விரும்பியது ஈடேறவில்லை. 'தொண்டர்கள் நம் சொல்லின் மணமாகிய பொருளை அறிந்து கொள்ளவில்லையே'' என்ற பொருள்படப் பாடினர். அப்போது ஒரு அசரீரி பிறந்தது! ''நீயும் உன் மனைவியும் உங்கள் திருமணத்துக்கு வந்தவர்கள் யாவரும் இங்கே தோற்றும் சோதியுட் புகுந்து நம்மை வந்தடையுங்கள்'' என்று அந்த அசரீரி சொன்னது. அதே சமயம் திருக்கோயில் முழுவதும் சோதிமயமாய்த் தெரிந்தது. உடனே ஞானசம்பந்தர் பஞ்சாட்சரத்தை யுச்சரித்து,

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே

என்று தொடங்கும் பதிகத்தைப் பாடி, அங்கு நின்றவர்களைப் பார்த்து, ''இந்தப் பிறவி நீங்க எல்லோரும் சோதியிற் புகுக'' என்றார். உடனே அங்குநின்ற திருநீல நக்கர், முருக நாயனார், நீலகண்ட யாழ்ப்பாணர், மதங்க சூளாமணி, இவர்களோடு சிவபாத விருதயர் நம்பாண்டார் முதலியவர்களும் சோதியிற் புகுந்தனர். ஞானம் பெற்ற யாவரும் புகுந்த பின்னரே சம்பந்தர் தம் மனைவியின் கைப்பிடித்து கடைசியில் அந்தச்சோதியில் கலந்து கொண்டார். சிறிது நேரத்தில் அந்தச் சோதி மறைந்து பழையபடி கோயில் தெரிந்தது.

* * *

சிதம்பரத்துக்கும் சீர்காழிக்குமிடையில் கொள்ளிடத்திலிருந்து மூன்று மைல் தூரத்திலிருக்கும் ஆச்சாள்புரம் என்பதே திருமண நல்லூர் என்ற ஊர். ஆச்சாபுரம் என்றும் சொல்வார்கள். கோயிலின் பெயர் நல்லூர்ப் பெருமணம். எதிர்ப் புறத்தில் திருக்குளம். கோயில் முகப்பிலேயே சம்பந்தர் திருமணம் இங்குதான் நடந்தது என்பதைக் காட்ட ஞான சம்பந்தர் திருமணக் காட்சியும், மற்றைய நாயன்மார்களுடன் சோதியில் கலப்பதும் சுதை உருவங்களாகச் செய்து வைக்கப் பட்டிருக்கின்றன. இங்கு நாங்கள் சந்தித்த மகாலிங்கக் குருக்கள் கோயிலின் ஐதிகத்தைப் பற்றியும் சம்பந்தர் திருக்கல்யாண வைபவத்தைப் பற்றியும் சொன்ன கதை மிகச் சுவாரஸ்யமாயிருந்தது.

இந்தக் கோயிலில் வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தில் உற்சவம் ஆரம்பம். நாலாவது நாள் மூல நட்சத்திரத்தில்

சம்பந்தருக்கு சிறப்பு உற்சவம். அன்று தான் அவர் சோதியில் கலந்ததாக ஐதிகம். இங்கே பால சம்பந்தர், கல்யாண சம்பந்தர் என்ற இரண்டு உற்சவ மூர்த்திகள் உண்டு. முதல் நாள் காலை பால சம்பந்தருக்கு உபநயனம் நடக்கும். அவரை எழுந்தருளப் பண்ணிக் கொண்டுபோய் வடக்கு வீதியிலுள்ள ஒரு மடத்தில் இறக்கி வைப்பார்கள். அதன்பின் சமாராதனை நடக்கும். அக்கிரகாரத்திலே வேறொரு மடம் இருக்கிறது. இங்குதான் நம்பாண்டார் குடியிருந்ததாக நம்பிக்கை. பெண்ணின் பெயர் சொக்கியார் என்று சொல்வார்கள். அருச்சனையில் தோத்திர பூரணம்பாள் என்றிருக்கிறது. இந்த மடத்திலே இப்போது ஒரு படத்தை வைத்துப் பூஜை செய்து வருகிறார்கள்.

அன்று மாலை சம்பந்தருக்கு மாப்பிள்ளை அழைப்பு. அக்கிரகாரத்திலிருந்து பெண்ணை அழைப்பதாகவும் பாவனை. இருவரும் வீதியில் புறப்பாடு; வேதகோஷம், தேவார பாராயணம் முதலிய மரியாதைகள் நடக்கும். சந்நிதானத்தில் வந்தவுடன் மாலை மாற்றுவார்கள். அதன்பின் ஊஞ்சல் நடக்கும். மாலை மாற்றும் போதும், வெண்பட்டுச் சாத்தும் போதும், முத்துமணி சாத்தும் போதும், ஊஞ்சலின் போதும் பொருத்தமான பண்களில் தேவாரம் பாடப்படும்.

இனி முகூர்த்தம் ஆரம்பம். அப்போது ஏகாசனத்திலுள்ள கல்யாண சம்பந்த மூர்த்தியை வைத்துத் திருக்கல்யாணம் ஆரம்பமாகும். எல்லா விதமான வைதிகச் சடங்குகளும் நடக்கும். இரவு புஷ்பப் பல்லக்கில் வீதி வலம் வருவார்கள். எல்லாம் நிறைவேற இரவு நான்காம் சாமம் ஆகிவிடும். இந்த நான்காம் சாமத்தில் மூல நட்சத்திரம் பொருந்தவேண்டும். நான்காம் சாமம் என்பது விடியற்காலை நாலுமணிக்கும் ஐந்தரை மணிக்கு மிடையிலுள்ள நேரம். இந்த வேளையில் கோயில் மூலவருக்கு அபிஷேகம் முதலியன செய்து வைத்துவிட்டு, ஓதுவாருக்குப் பட்டுக் கட்டி, உபசாரங்களெல்லாம் பண்ணி வைக்க, அவர், ''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி'' என்ற பதிகத்தில் முதல் ஐந்து பாட்டையும் பாடி முடிப்பார். பின்னர் கடைசி ஐந்து பாட்டை யும் ஒவ்வொன்றுகப் பாட, கருவறையிலுள்ள பஞ்சாட்சரப்படி ஒவ்வொன்றுக கல்யாண சம்பந்தரையும் மணப்பெண்ணையும் ஏற்றிச் செல்வார்கள். ஒவ்வொரு படிக்கும் ஒவ்வொரு பாட்டாக ஐந்து பாட்டும் முடிந்தபின், மூலஸ்தானத்தில் ஏராளமான கற்பூரத்தை வைத்து தீபாராதனை பண்ணுவார்கள். இதுவே சோதி. இந்த சோதியில் சம்பந்தர் உற்சவ மூர்த்தியை உள்ளே மூலஸ்தானத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பார்கள். சோதியில்

கலந்துவிட்டதாக ஐதிகம். மற்றெந்தக் கோயிலிலும் மூலவருள்ள கர்ப்ப கிருஹத்தினுள் உற்சவமூர்த்தியைக் கொண்டு செல்வதில்லை. இந்த ஊரில் சம்பந்தர் சோதியில் கலந்தார் என்ற ஐதிகத்துக்காக மணக்கோலத்தோடு உற்சவமூர்த்தி கொண்டு செல்லப்படுகிறது.

சம்பந்தருடன் சென்ற மற்றைய அடியார்கள், நீலநக்கர், முருக நாயனார், யாழ்ப்பாணர், மதங்கசூளாமணி முதலியோரை முதலில் அனுப்பிவிட்டுத்தான் சம்பந்தரும் மனைவியும் சோதியில் கலந்தார்கள். ஆனால் அந்த விக்கிரகங்களை உள்ளே எடுத்துச் செல்வதில்லை.

திருமணத்தில் அக்கினியை வலம்வரும்போது அம்மி மிதிக்க வேண்டுமென்பது சம்பிரதாயம். அப்போது சம்பந்தர் பெண்ணின் காலைத் தொட்டு வைக்க மறுக்கிறார். மறுக்கும் போது இந்தக் குறைபற்றி பகவானைத் தோத்திரம் பண்ணுகிறார். தமக்கு ஞானத்தைக் கொடுத்தருளவேண்டுமென்கிறார். உடனே ஒரு சோதி தோன்றுகிறது. இதைப் பார்த்து அங்கு நின்றவர்கள் எல்லாரும் பெரிய அக்கினி என்று பயந்து ஓடிவிடுகிறார்கள். சம்பந்தர் உடனே தமக்கு மாத்திரமல்ல, எல்லோருக்குமே ஞானத்தை அருளவேண்டுமென்று ஈஸ்வரனைப் பிரார்த்திக்கிறார். ஈஸ்வரன் நந்திதேவரை யனுப்பி எல்லாரையும் அழைத்து வரச் சொல்கிறார். எதிரேயுள்ள குளத்தில் சுவாமி தமது திரி சூலத்தால் பஞ்சாட்சரத்தை எழுதி உபதேசம் பண்ணினார். இது பஞ்சாட்சர தீர்த்தம் எனப்படும். எல்லாரும் இந்தக் குளத்தில் குளித்து எழுந்தவுடன் அம்பாள் விபூதி கொடுக்க அவர்களுக்கும் ஞானம் ஏற்படுகிறது. இந்தச் சம்பவத்தின்போது பன்னீராயிரம் திருக் கூட்டம் இருந்ததாகப் புராணம். இதன் பின்னரே நீலநக்கர் முதலிய அடியார்கள் உள்ளே போக, சம்பந்தர் தொடர்ந்து சோதியில் கலக்கிறார்.

இந்தக் கதையை எங்களுக்கு மகாலிங்கக் குருக்கள் சொன்னார். இதில் நந்தி போய் எல்லாரையும் அழைத்து வந்த இடம் ஓதவந்தான்குடி என்ற பெயரில் பக்கத்தில் இருக்கிறது. ஆச்சாபுரம் கோயிலில் முக்கிய விசேஷம், அம்பாள் சந்நிதியில் விபூதி கொடுத்த பின்தான் குங்குமம் கொடுப்பார்கள். அம்பாளின் பெயரே திருவெண்ணீற்றுமையவள். நமச்சிவாயப்பதிகம் சம்பந்த மாகப் பஞ்சாட்சர தீர்த்தமே விசேஷமானது. சுவாமி பெயர் சிவலோகத் தியாகர். அடியார்களைச் சிவலோகத்தில் சேர்த்துக் கொண்டவரல்லவா? சுவாமி சந்நிதியில் நூற்றுக்கால் மண்டப முண்டு. இதில் கல்யாண சம்பந்தரும் தேவியும் வீற்றிருக்கும்

சந்நிதியிருக்கிறது. இந்தச் சம்பந்தருக்கு நடக்கும் அருச்சனையில் முருகன் அஷ்டோத்தரம் சொல்வது மரபு. சம்பந்தரை முருகன் அவதாரமாகக் கொள்வதுமுண்டு.

சைவசமய வரலாற்றிலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் ஓர் ஒப்பற்ற நாயகனின் சரித்திரத்திலிருந்து நாம் பிரிய வேண்டி வந்திருக்கிறது. மூன்று வயதில் பசுந்தமிழ்ப்பாக்கள் பாடத் தொடங்கித் தமிழ் நாட்டின் சரித்திரத்தில் ஒரு புரட்சி செய்த இளஞ்சிங்கம் சம்பந்தர். வேதவேள்விப் பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்தும் திருநீலகண்டயாழ்ப்பாணர் என்ற கீழ்க்குலத்தவரை அவர் பாராட்டிச் செய்த மரியாதையையும், திருநீல நக்கர் வீட்டில் பாணருக்கு மிக உயரிய அந்தஸ்து கொடுக்கச் செய்து மறைமுகமாக சமூகப் புரட்சி செய்ததையும் நாம் மறக்க முடியாது. காலத்தின் கோலம் அவர் தமது பாடல்களிலெல்லாம் சமணத்தையெதிர்த்தது. ஒவ்வொரு பதிகத்திலும் பத்தாவது பாட்டு சமணரை அல்லது பௌத்தரைக் குறிப்பிட்டு அவர் திட்டமிட்டே பாடினார். அதேபோல் ஒன்பதாவது பாட்டில் பிரமனையும் விஷ்ணுவையும்விட சிவனே மேன்மையுள்ளவர் என்று பாடத் தவறவில்லை. இலக்கிய ரீதியில் அவர் பாடல்களில் காணப் படும் உவமை நயம், இயற்கை வருணனை முதலியன பண்பட்ட புலமையைக்காண்பிக்கிறது. தெய்வ கடாட்சத்தில் அவர் பெற்ற திறமையே இது. தேவாரத்திருமுறைகள் ஏட்டிலே முதல் மூன்று திருமுறைகளாக இடம் பெற்றவை சம்பந்தர் தேவாரங்கள். பாவகைகளில் எத்தனை எத்தனை! பண் வகைகளில் எத்தனை எத்தனை! ஒரு சில ஆண்டுகளே இந்நிலவுலகில் வாழ்ந்த திராவிட மதலை விட்டுச் சென்ற தமிழ்ச்சொத்து மிகப் பெரிது. அந்தச் சிவஞானக் கன்றிடம் விடைபெற்றுக் கொண்டு நாம் நமது இஷ்டமித்திரரான சுந்தரமூர்த்தியைத் தொடருவோம்.

50. பாடுவார் பசி தீர்ப்பார்

திருவாரூரிலிருந்து சுந்தரமூர்த்தி நாயனார் பலதலங்களைத் தரிசித்துக்கொண்டு திருக்குருகாவூர் என்ற இடத்துக்கு வந்த போது வெயிலின் கொடுமை பசியும் தாகமும் அவரை வாட்டியது. இதையறிந்த சிவபெருமான் ஒரு பிராமண வேடங் கொண்டு, நிழலுக்காக ஒரு பந்தர் அமைத்து, அதில் பொதி சோறும் தண்ணீரும் வைத்துக்காத்திருந்தார். சுந்தரர் பந்தரைக் கண்டதும் அதில் போய்த் தங்கிப் பஞ்சாட்சர ஜபம் செய்து கொண்டிருந்தார். பிராமண வேடத்திலிருந்த இறைவன் சுந்தரரைப் பார்த்து, ''மிகவும் களைத்துப் போயிருக்கிறீர். இங்கே நான் கட்டுச்சாதம் கொஞ்சம் வைத்திருக்கிறேன். அதில் நீரும் உமது கூட்டத்திலுள்ளவர்களும் சாப்பிட்டு, தண்ணீர் அருந்துங்கள்'' என்றார். ''நல்ல சமயத்தில் வந்து உதவினீர்கள்'' என்று நன்றி தெரிவித்துவிட்டு சுந்தரர் உணவருந்தினார். பின்னர் தமது பரிவாரத்திலுள்ளவர்களும் சாப்பிட, பொதியிலிருந்த உணவு, மேலும் பலர் சாப்பிடக் கூடியதாயிருந்தது! வழி நடந்த களைப்பில் யாவரும் சற்றுக்கண்ணயர்ந்து எழும்பிப் பார்த்தால் அங்கே பந்தரையும் காணவில்லை, வேதியரையும் காணவில்லை! இறைவன் திருவருளை முன்னமே தெரிந்திலனே என்று சுந்தரர் பாடுகின்றார்:

இத்தனை யாமாற்றை அறிந்திலேன் எம்பெருமான்
பித்தரே என்றும்மைப் பேசுவார் பிறரெல்லாம்
முத்தினை மணிதன்னை மாணிக்கம் முளைத்தெழுந்த
வித்தனே குருகாவூர் வெள்ளடைநீயன்றே.

இந்தப் பதிகத்தின் மற்றோர் பாட்டில் ''பாடுவார் பசி தீர்ப்பாய்'' என்று பாடும்போது கட்டமுது கொடுத்த வரலாறு காணப்படுகிறது.

சீர்காழியிலிருந்து சிறிது கிழக்கேயுள்ள கிராமத்திலிருக்கிறது இந்தக் கோயில். திருக்குருகாவூர் என்று சொல்லாமல் திருக்கடாவூர் என்று சொன்னவுடன் ஊரிலுள்ளவர்கள் வழி

காட்டினர்கள். மிகவும் சிறிய கோயில் திருப்பணியில்லாமல் முன்பகுதி அழிந்து போய்க் கொண்டிருக்கிறது. கர்ப்பக் கிருக விமானம் மாத்திரம் நல்ல நிலையிலிருக்கிறது. கோயில் குருக்கள், இளம் வயதுக்காரர், மிகுந்த உற்சாகத்தோடு கோயில் வரலாற்றைச் சொன்னர். வெள்விடை நாதர் என்று சுவாமிக்குப் பெயர். ஆனல் தேவாரங்களில் குருகாவூர் வெள்ளடை என்று தான் காணப்படுகிறது. இங்குள்ள தீர்த்தக் கிணற்றில் தை அமாவாசையன்று தண்ணீர் பால் நிறமாகும் என்று சொல் வார்கள். இந்தக் கோயிலுக்குக் கிழக்கே 'இடமாறல்' என்ற ஓர் இடமிருக்கிறது. இங்கேதான் சுவாமி கட்டமுது கொடுத்த தாக ஐதிகம். வேடரூபமாக வந்து கொடுத்தார் என்றும் சொல்வார்கள்.

நாங்கள் போய்ச் சேர்ந்த சமயம் நல்ல வெயில் நேரம். வேதாரணியத்து சிவாசாரியார் பரம்பரையில் வந்த அந்தக் குருக்கள் தாமாகவே உணர்ந்து, ''வெயில் நேரமாயிருக்கிறது. தாகத்துக்குக் கொஞ்சம் மோர் சாப்பிடுகிறீர்களா?'' என்று கேட்டார்! ஆகா என்ன பொருத்தம்! சுந்தரமூர்த்திக்கு இறைவன் இங்கே பசியும் தாகமும் தீர்த்தார். குருகாவூர் குருக்கள் எங்கள் தாகம் தீர்க்க மோர் கொடுக்கிறார். இதுவும் இறைவன் திருவருள் தான் என்று மெச்சி, அவர் அன்போடு தந்த மோரைச் சாப்பிட்டுத்தாகம் தீர்த்துக் கொண்டோம். எதிர்பாராமல் இப்படி எங்கள் யாத்திரையில் கிடைத்த அனுபவங்கள் பல.

குருகாவூரிலிருந்து சுந்தரமூர்த்தியை மேலும் தொடர்ந்து செல்ல நாங்கள் தீர்மானித்தோம். அவர் இங்கிருந்து தொண்டை நாட்டுத் தலங்கள் சிலவற்றுக்குப் போக எண்ணித் திருக்கச்சூர் ஆலக்கோயிலுக்கு வந்தார் என்று அறிந்தவுடன் நாங்களும் அங்கே சென்றோம். இது செங்கல்பட்டு மாவட்டத்திலே சிங்கப் பெருமாள் கோயில் என்ற ஊருக்கு வடமேற்கே ஒன்றரை மைல் தூரத்திலுள்ளது. இந்தக் கோயிலைத் திருக்கச்சூர் ஆலக்கோயில் என்று வழங்கினர்கள். மரங்களே தெய்வமாகவும் மரநிழலே கோயிலாகவும் கொண்ட ஆதிகாலத்திலே, ஆலமரம் ஒரு முக்கிய இடம் பெற்றது. அதனல் ஆலக்கோயில் என்ற பெயர் ஏற்பட்டது. இன்றும் சில இடங்களில் ''ஆலம்மன்'' கோயில்களைக் காணலாம்.

சுந்தரமூர்த்தி இந்தக் கோயிலைத் தரிசிக்க வந்தபோதும், திருக்குருகாவூரில் போல, பசியும் தாகமும் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இங்கேயும் சிவபெருமான் அவர் உதவிக்கு

வருகிறார். குருகாவூரில் பொதிசோறு கட்டிவைத்துக்கொண்டு காத்திருந்தார். ஆனால் இங்கே திருக்கச்சூரில் ஓர் இரந்துண்ணும் அடியார் வேடத்தில் வந்து, மற்றைய வீடுகளில் உணவு இரந்து கொண்டு வந்து சுந்தரருக்கு அளித்துவிட்டு மறைகிறார். சிவபெருமானுக்கு பிட்சாடணர் என்ற ஒரு பெயர் உண்டு. அந்த நிலையிலே அவர் இங்கு பிச்சையேற்று சுந்தரருக்குக் கொடுத்தார்.

முதுவாய் ஓரிகதற முதுகாட்டு எரிகொண்டு ஆடல் முயல்வானே
மதுவார் கொன்றைப் புதுவீ சூடும் மலையான் மகள்தன் மணவாளா
கதுவாய்த் தலையிற் பலிநீ கொள்ளக் கண்டால் அடியார் கவலாரே
அதுவே ஆமாறிதுவோ கச்சூர் ஆலக் கோயில் அம்மானே.

மேற்கண்டவாறு சுந்தரர் இந்த இடத்தில் சிவபெருமானது செயலை நினைத்து மனமுருகி ஒரு பதிகம் பாடினார்.

கச்சூர் என்ற பெயர் கச்சப ஊர் என்பதிலிருந்து வந்ததாக விளக்கம் கூறுவர். திருமால் கூர்மாவதாரம் எடுத்து கச்சபம் என்ற ஆமைவடிவில் இறைவனை வழிபட்டதாகப் புராணம். இந்தக் கோயிலில் தியாகராஜர் சந்நிதி யொன்று இருக்கிறது. தொண்டை நாட்டிலேயுள்ள தியாகராஜர் சந்நிதிகளுள் இதுவு மொன்று. தியாகராஜரை இங்கு கச்சபேஸ்வரர் என்றும் சொல்வர். சித்திரை மாதத்தில் நடக்கும் பிரம்மோற்சவத்தில் பவனி என்ற நடன உற்சவம் நடைபெறும்.

கோயிலுக்கு மேற்கே ஒரு சிறிய மலையின்மேல் மருந்தீசர் கோயில் உள்ளது. இவரை மருந்திட்டீஸ்வரர் என்பர்.

இந்தக் கோயில் மிகவும் பழமை பொருந்திய கோயில் என்று தெரிகிறது. மூன்றும் குலோத்துங்கன் காலத்தில் நித்திய விநோத நல்லூர் என்ற பெயர் இந்த ஊருக்கு இருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. கி.பி. பதின்மூன்றும் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டு இந்தக் கோயிலிலுள்ளது. அதில் சொல்லப் பட்டிருக்கும் செய்தி அக்காலத்தின் சமூக நிலையையும் சட்ட ஒழுங்குகளையும் பற்றிக் கூறுகிறது. இந்த ஊரில் ஆட்கொண்ட வில்லி, பாம்பணையான், மலைவாய்க்கோன், வரதன், செல்வன், என்ற ஐந்து பிராமணர்களும் வேறு சில வேளாளரும் சேர்ந்து, வழிபறி கொள்ளைக்காரராக அட்டகாசம் புரிந்து வந்தனர். கொலை, களவு, காதறுத்தல், பிராமணப் பெண்களை அவமதித்தல், கால்நடைகளை அழித்தல் முதலிய குற்றங்களைப் புரிந்து கொண்டு திரிந்த இவர்களைப் பற்றி விக்கிரம சோழதேவன் திருமலை

என்ற இரு பெரிய உத்தியோகத்தருக்கு முறைப்பாடு செய்யப் பட்டது. அவர்கள் உடனே இவர்களைப் பிடித்துச் சில தண்டனை கொடுத்து, மேற்கொண்டு நல்லொழுக்கத்துடன் நடக்கவேண்டு மென்று எச்சரிக்கை செய்து அனுப்பினார்கள். ஆனால் இவர்கள் திருந்தவில்லை. பழையபடி அட்டகாசம் செய்யத் தொடங் கினார்கள். பொதுமக்கள் மீண்டும் வந்து பிரதம மந்திரி பொத்தப்பி அரையனுக்கு விண்ணப்பித்தார்கள். அவன் வளவ நாட்டு ஆழ்வான் இருங்கோள் என்ற சேனுபதியையும் சில மலையாளப் போர்வீரர்களையும் அனுப்பிக் கொள்ளைக் கூட்டத் தைப் பிடிக்க ஏற்பாடு செய்தான். கொள்ளைக் கூட்டத்தை எதிர்த்துப் போர்வீரர்கள் நிற்கமுடியவில்லை. பல வீரர்கள் மடிந்தார்கள். கடைசியில் ஆட்கொண்டவில்லியும் பாம்பணி யானும் மாத்திரம் பிடிபட்டு ஆயுள் தண்டனை பெற்றார்கள் என்று இந்தக் கல்வெட்டில் சொல்லப்பட்டிருக்கிறது.

திருக்கச்சூரில் வணங்கியபின் சுந்தரமூர்த்தி மற்றும் சில தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருவொற்றியூருக்கு வந்தார் என்று வரலாறு கூறுகிறது. இந்தத் திருவொற்றியூரில்தான் சுந்தரரின வாழ்க்கையில் ஒரு முக்கியமான திருப்பம் ஏற்பட்டது. நாமே நேரில் சென்று பார்க்கலாம்.

51. ஒற்றியூரில் ஒரு காதல்!

சென்னை நகரத்திலிருந்து வடக்கே ஆறுமைல் தூரத்தில் தானிருக்கிறது திருவொற்றியூர். ஆனால் இரு இடங்களுக்கு மிடைத்தூரம் கால அளவையில் பார்த்தால் ஆயிரம் ஆண்டு! சிதம்பரம், திருவாரூர், திருவாலங்காடு ஆகிய தலங்களைப் போலத் தமிழ் மொழிக்கும் சைவ சமயத்துக்கும் சோழமன்னர்கள் வழிவழியாகச் செய்த சேவையைப் பிரகடனப்படுத்திக் கொண்டிருக்கிறது திருவொற்றியூர். இக்கோயிலிலுள்ள நூற்றுக்கணக்கான கல்வெட்டுக்களைப் படித்தால் ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த தமிழர்களின் சமூக வழக்கங்கள், கோயில் பரிபாலன முறைகள், அரசர்களின் வம்சங்கள், சமயவாதிகளின் வியாக்கியானங்கள், இன்னோரன்ன பல வரலாறுகளைத் தெரிந்து கொள்ளலாம்.

திருவொற்றியூர் நகரமும் இங்குள்ள கோயிலும் எப்போது தோன்றியது என்று சொல்வதற்கு, மற்றும் பல கோயில்களைப் போலவே, போதிய வரலாற்றுச் சான்றுகளில்லை. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் திருநாவுக்கரசர் ''ஒத்தமைந்த உத்திரநாள் தீர்த்தமாக ஒளி திகழும் ஒற்றியூர்'' என்று ஒரு பதிகத்தில் பாடியிருப்பதால் அவர்காலத்தில் இங்கிருந்த கோயிலில் பங்குனி உத்திர விழா கொண்டாடப் பெற்றதென்று தெரிகிறது. அதே காலத்தில் திருஞான சம்பந்தரும் இத்தலத்துக்கு வந்து வணங்கியிருக்கிறார்.

இவர்களுக்குப்பின் வந்த சுந்தரமூர்த்திகள் இந்த ஊரைத் தமது மாமியார் வீடாகக் கொண்ட கதைதான் உலகறிந்த செய்தியல்லவா? பலதலங்களையும் தரிசித்துக் கொண்டு வந்த ஆரூரர் திருவொற்றியூர் வந்து புற்றிடங்கொண்டநாதர் என்று சொல்லப்படும் ஒற்றியூர் உறைபவரை வணங்கி வரும் ஒரு நாள் அழகிய மங்கையொருத்தி கையில் பூமாலையுடன் சுவாமியை வணங்க வந்தவளைக் கண்டுவிட்டார்! முன்னைவினைப்பயன், கண்டதும் காதல் உண்டாயிற்று! இந்தப் பெண்தான் முற்பிறவியில் கயிலாயத்திலே சுந்தரர் கண்டு மயங்கிய சேடியர்களில் ஒருத்தி அநிந்தை என்பவள், கமலினி என்பவள்தான் பரவை

யாகத் திருவாரூரில் பிறந்து சுந்தரரை ஏற்கெனவே மணந்து கொண்டாள். இப்போது அநிந்தையென்பவளுடைய கதை ஆரம்பிக்கிறது. இவள் திருவொற்றியூருக்குப் பக்கத்திலுள்ள ஞாயிறு என்ற கிராமத்தில் ஒரு பெரிய தனவந்தர் குடும்பத்தில் பிறந்தாள். ஞாயிறுகிழார் என்று அவருக்குப் பெயர். ஊருக்குப் பெரிய மனிதர். ஏராளமான சொத்துக்கள் உடையவர். ஒரே யொரு பெண்தான் இந்தக் குடும்பத்தில் பிறக்க, அவளுக்கு சங்கிலி என்ற பெயர் கொடுத்து மிக அருமையாக வளர்த் தார்கள். மணப்பருவம் வந்தபோது ஒரு நாள் தாயும் தந்தை யும் சங்கிலிக்கு நல்ல இடமாகப் பார்த்து ஒரு கலியாணத்தைச் செய்து வைக்கவேண்டுமென்று பேசிக் கொண்டார்கள். பக்கத்தில் நின்ற பெண் இவர்கள் பேச்சைக் கேட்டவுடன் திடீரென மயக்கம் போட்டு விழுந்து விட்டாள்! தாய் தந்தையர் பதறிப் போய் அவள் மயக்கத்தைத் தெளிவித்து, என்ன நடந்ததென்று கேட்ட தற்கு சங்கிலி, ''நீங்கள் இப்போது பேசிக் கொண்டிருந்த விஷயத்தில் எனக்கு இஷ்டமில்லை. நானே சிவபெருமானது அருளைப் பெற்ற ஒருவருக்குத்தான் மனைவியாக வேண்டியவள். திருவொற்றியூர் கோயிலை அடைந்து அங்கே சுவாமியை வழிபட்டுக் கொண்டிருக்க முடிவு செய்துவிட்டேன். ஆகையால் நீங்கள் எனக்கு எந்த வரனையும் பார்க்க வேண்டாம்'' என்று சொன்னாள். பெற்றோருக்கு இது பெரும் கவலையைக் கொடுத்தது. ஊரிலே இது தெரிந்தால் யாரும் பலவிதமாக நினைப்பார்கள் என்று எண்ணி, பேசிவரும் வரன்களுக்கெல்லாம் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லித் தள்ளிப் போட்டுக் கொண்டு வந்தார்கள். இம்மாதிரிக் கேட்டு வந்தவர்களில் ஒருவன் சங்கிலி யின் அழகையும் குடும்பத்தின் பெருமையையும் அறிந்தவனுகை யால், தான் பேசி அனுப்பியவர்கள் வெறுங்கையோடு திரும்பி வந்ததைக்கண்டு ஏமாற்றமடைந்து தற்கொலை செய்து கொண் டான். இந்நிகழ்ச்சி பெரிய பரபரப்பை உண்டாக்கி விட்டது. இனிமேலும் தம் பெண்ணின் பிடிவாதத்தை மறைத்து வைப்பது சரியல்ல என்று கருதிய பெற்றோர், சங்கிலியின் இஷ்டம்போல் அவளைத் திருவொற்றியூர்க் கோயிலில் சேவை செய்ய ஏற்பாடு செய்து, அங்கே ஒரு கன்னிமாடத்தில் இருக்க வைத்தார்கள். சங்கிலி ஒரு கன்னிகாஸ்திரியாகி விட்டாள் என்று ஊருக்குத் தெரிய வந்தது.

திருவொற்றியூர் ஆலயத்தில் பூமாலை தொடுத்து வழக்கமாக சுவாமிக்கு அளித்து வந்தபோதுதான் ஆரூரர் இவளைக்கண்டு மயங்கினர். கூடி வந்தவர்களிடம் அவர் இந்தப் பெண் யார் என்று கேட்க அவர்கள், ''இவள் சங்கிலி என்ற கன்னி; இந்த

ஆலயத்தில் பூமாலை தொடுத்து சேவை செய்து வருபவள்'' என்றார்கள். ஆரூரருக்குப் பழைய ஞாபகம் வந்தது. ''இரண்டு பெண்கள் காரணமாகத்தான் இறைவன் என்னை இந்தப் பூலோகத்தில் பிறக்கச் செய்தார். ஒருத்தி ஏற்கெனவே நம்மை மணந்த பரவை. மற்றவள் இவளாகத்தான் இருக்கவேண்டு'' மென்ற தீர்மானத்துடன், திருவொற்றியூர் தெய்வத்தை வணங்கி வந்தார். தெய்வந்தான் இவர் தோழராயிற்றே! ''கவலைப் படாதேயப்பா. அவள் உன்னை மணக்க நான் ஏற்பாடு செய்கிறேன்'' என்று கனவில் வந்து உறுதி கொடுத்துவிட்டு மறைந்தார் இறைவன். இதில் ஒரு விசேஷம் என்னவென்றால், பரவையாரைப் பொறுத்தளவில் சுந்தரர் ''கற்பகத்தின் பூங்கொம்போ'' என்று காதல் கொண்டார். பரவையாரும் ''முன்னே வந்து எதிர்தோன்றும் மாரனே'' என்று மயங்கினர். இருவரும் ஒருவரையொருவர் பார்த்ததும் பரஸ்பரம் காதல் கொண்டு கலியாணம் செய்தார்கள். ஆனால் இங்கே சுந்தரர்தான் கண்டதும் காதல் கொண்டார். பெண் சங்கிலியோ ஒன்று மறியாத பேதை. தானுண்டு தன் கடமையுண்டு என்று போய்க் கொண்டிருக்கிறாள். ஆனபடியால் சுந்தரர் தோழராகிய இறைவன்தான் இந்தக் கலியாணப் பேச்சை ஆரம்பித்து முடிக்க வேண்டியிருக்கிறது. சுந்தரரிடம், ''நீ கவலைப்படாதே. நான் முடித்து வைக்கிறேன்'' என்று சொல்லிச் சென்றவர் கனவிலே சங்கிலியையும் போய்ச் சந்திக்கிறார். அவள் விழுந்து வணங்கி, ''அடியேன் உய்ய எழுந்தருளி வந்த தெய்வமே! தங்கள் தரிசனம் கிடைக்கப்பெற்ற யான் என்ன கைம்மாறு செய்வேன்?'' என்று பிரார்த்தித்தாள். உடனே இறைவன், ''சங்கிலியே கேள். என்னிடத்திலே பேரன்புடையவன் ஒருவன். மேருமலை போன்று தவத்தில் மேம்பட்டவன். திருவெண்ணெய் நல்லூரில் எல்லாரும் அறிய என்னால் ஆட்கொள்ளப்பட்டவன், இங்கே வந்திருக்கிறான். அவன் உன்னைக் கண்டு விரும்பி, உன்னை மணம் செய்து கொள்ள வேண்டுமென்று என்னிடம் இரந்து கேட்டான். ஆகையால் நீ அவனை மணக்கச் சம்மதிக்க வெண்டும்''என்றார்.இறைவனே வந்து கட்டளை பிறப்பித்தால் அதை எப்படி மறுக்கமுடியும்? ஆனால், ஆரூரரைப்பற்றி உலகம் அறியுமே. திருவாரூரிலே பரவையை மணந்து வாழ்பவர் இங்கே தன்னையும் மணந்துகொண்டு எப்படி வாழமுடியும் என்று கவலைகொண்ட சங்கிலி நேரடியாகவே கேட்டுவிட்டாள். ''சுவாமி! தாங்கள் சொல்வது சரிதான். ஆனால் அவர் திருவாரூரில் நிரந்தரமாக ஒரு மனைவியுடன் வாழ்கின்றார் என்பது தெரியுமல்லவா? அப்படியிருக்க என்னையும் அவர் மணந்தால் எப்படி?'' என்று கேட்டாள். ''அதற்காக நீ கவலைப்

படாதே. சுந்தரன் உன்னைப் பிரிந்து போக மாட்டேன் என்று உனக்குச் சத்தியம் செய்து தரச் சொல்கிறேன்'' என்று சொல்லி விட்டு உடனே சுவாமி தமது நண்பரிடம் சென்றார். ''சுந்தரா! உன்னை அந்தப் பெண் சங்கிலி கலியாணம் செய்ய உடன்பட்டு விட்டாள். ஆனால் ஒரு நிபந்தனை போட்டிருக்கிறாள். அதற் கென்ன சொல்கிறாய்?'' என்றார். சுந்தரர் எப்படியாவது சங்கிலியை மணந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை மிகுதியால் ''தாங்கள் என்ன நிபந்தனை விதித்தாலும் சரி, சொல்லுங்கள்'' என்றார். உடனே இறைவர் புன்னகை புரிந்து, ''கொஞ்சம் கஷ்டமாய்த்தானிருக்கப் போகிறது. இருந்தாலும் உனக்கு அவள் அவசியம் வேண்டுமென்றால் அந்த நிபந்தனையை முடிக்கத்தான் வேண்டும். அதாவது, அவளை விட்டு ஒரு போதும் பிரியேன் என்று அவளுக்கு நீ கோயிலில் சத்தியம் செய்து கொடுக்க வேண்டும்'' என்றார். இதைக் கேட்ட ஆரூரருக்கு ஒரே திகில். இம்மாதிரிச் சத்தியம் செய்து கொடுத்துவிட்டால் திருவாரூருக்குப் போக முடியாது. அல்லாமலும் மற்றைய கோயில்களுக்கே போகாமல் இவளோடு இங்கேயே இருக்க வேண்டி வந்துவிடுமே என்று பயந்தார். இந்த இக்கட்டிலிருந்து எப்படித் தப்பலாம் என்று யோசித்த சுந்தரர் தாம் அதிக புத்திசாலி என்று நினைத்து, சுவாமி யிடமே ஒரு வாக்குறுதி வாங்கினார். ''சுவாமி! அவள் கேட்ட விதமே நான் அவளைப்பிரியேன் என்று சத்தியம் செய்து கொடுக்க உடன்படுகிறேன். ஆனால் தாங்கள் எனக்காக ஓர் உதவி செய்ய வேண்டும். மறுக்கலாகாது'' என்று கேட்டார். திருவொற்றியூர் சுவாமி, ''சரி சொல்லு. உனக்குத்தான் கேட்டதெல்லாம் செய்ய எப்பொழுதோ சம்மதித்து விட்டேனே. என்ன வேண்டும் சொல்'' என்றார். சுந்தரர் மிகவும் தைரியத்தோடு, ''நான் சங்கிலிக்குச் சத்தியம் செய்ய உமது ஆலயத்துக்கு வந்தால், நீர் அங்கே இருக்க லாகாது. பக்கத்திலுள்ள மகிழமரத்தின்கீழ் போய் இருக்க வேண்டும்'' என்றார். இறைவனுக்கு சுந்தரரின் சூழ்ச்சி தெரியும். ''சரி. உன்னிஷ்டப்படியே நான் கோயிலைவிட்டுப் போய் விடுகிறேன். இன்றிரவே போய் அவளைச் சந்தித்துக்கொள்'' என்றவுடன் சுந்தரருக்கு அளவில்லாத ஆனந்தம். ''சத்தியம் செய்யும்போது சுவாமிதான் அங்கே இருக்கமாட்டாரே. ஆனபடியால் எனது சத்தியம் கட்டுப்படாது'' என்று மனப்பால் குடித்தார். ஆனால் அவர் தோழர் சாமானியமானவரா? பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழர் அவர். நேரே சங்கிலியைப் போய்ச் சந்தித்தார். ''அம்மா சங்கிலி! நீ கேட்டபடியே சுந்தரன் உன்னைவிட்டுப் பிரியமாட்டேன் என்று உனக்குச் சத்தியம் செய்து கொடுக்க உடன்பட்டு விட்டான். ஆனால், கோயிலுக்கு முன் அவன் சத்தியம் செய்ய வந்தால் நீ மறுத்து, பக்கத்திலுள்ள மகிழ

மரத்தடியில் சத்தியம் செய்யச் சொல்லி விடு. இன்றிரவே அவன் அங்கு வருவான்'' என்று உபாயம் சொல்லிவிட்டுப் போய்விட்டார் அந்த திருவிளையாடல் வல்லான்.

சங்கிலியார் அன்றிரவே தமது சேடியரை எழுப்பி நடந்த விவரத்தைச் சொன்னார். சேடியரும் மிகுந்த மகிழ்ச்சிகொண்டு சங்கிலியாரை அலங்கரித்துக் கோயிலின் முன் அழைத்துச் சென்றனர். அங்கே ஏற்கெனவே காத்து நின்ற சுந்தரர் இவர்கள் வரவைக்கண்டதும், இறைவன் சொல்லியவாறு எல்லாம் நடக்கப் போகிறதென்ற ஆசையால் அவர்களைத் தொடர்ந்தார். சங்கிலியும் சேடியரும் கோயிலினுட் சென்றதும், சுந்தரர் அவர்களை நோக்கி, ''பெண்களே! இங்கு நாம் கூடியது எதற்கென்பதை நீங்கள் அறிவீர்களல்லவா?'' என்றார். சேடியர்களில் ஒருத்தி; ''தெரிந்துதான் வந்திருக்கிறோம். தாங்கள் மேலும் என்ன சொல்லப் போகிறீர்கள்?'' என்றார். ''உங்கள் தோழியை நான் மணம் செய்ய விரும்புகிறேன் என்பதை நீங்கள் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள் என்பது மகிழ்ச்சிக்குரியது'' என்றார். சேடி, ''அது சரிதான். இவளை நீங்கள் திருமணம் செய்தால் இவளை விட்டுப் பிரிய மாட்டீர்கள் என்பதற்கு என்ன உறுதி?'' என்று கேட்டாள். சுந்தரர் சற்றும் தாமதியாமல், ''இதோ இந்த இறைவன் முன்னே சத்தியம் செய்து கொடுக்கிறேன்'' என்றார். சேடியர்கள் உடனே, ''சிவ, சிவ! இந்த ஒரு அற்பவிஷயத்துக்காக சிவ சந்நிதானத்திலே சத்தியம் செய்வது தகாது,'' என்றார்கள். சுந்தரர், ''அப்படியானால் வேறெங்கே சத்தியம் செய்து தரலாம் என்று நீங்களே சொல்லுங்கள்'' என்று ஆவலோடு கேட்டார். அந்தப் பொல்லாத பெண்கள், ''பின்னல் ஒரு மகிழ மரம் இருக்கிறது. அங்கே வாருங்கள். சத்தியம் செய்து உங்கள் இஷ்டம் போல் எங்கள் சங்கிலியைத் திருமணம் செய்து கொள்ளலாம்'' என்றார்கள்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட சுந்தரர் உள்ளம் நடுங்கியது. தாமே சூழ்ச்சி செய்து இறைவனைக் கோயிலில் இருக்காது மகிழ மரத்தின் கீழ் போய்விடுமாறு ஏற்பாடு செய்திருக்க இந்தப் பெண்கள் அறிந்தோ அறியாமலோ அதே மரத்தின் கீழ் வந்து சத்தியம் செய்யச் சொல்லிக் கேட்கிறார்களே! அப்படியானால் நமது இறைவன் சந்நிதியிலேயே சத்தியம் செய்ய வேண்டியிருக்கிறதே என்று அச்சங் கொண்டார். இருந்தாலும் இந்த சமயத்தில் மறுத்தால் ஊரார் பழிக்கு ஆளாக வேண்டுமென்று நினைத்து, ''சரி அப்படியே மகிழின் கீழ் சத்தியம் செய்து தருகிறேன்'' என்று சொல்லி அவர்களை அழைத்துக் கொண்டு

போய் மகிழ மரத்தடியில் நிறுத்திவிட்டு, அந்த மரத்தை மும்முறை வலம்வந்து நின்று, சங்கிலியாரைப் பார்த்து, ''பெண்ணே, உன்னை விட்டு நான் பிரியேன்'' என்று சத்தியம் செய்தார். சங்கிலியார் உடனே சுந்தரர் காலில் விழுந்து வணங்கி விட்டு. சேடியர்களுடன் தமது கன்னிமாடத்துக்குச் சென்றார். அவர் கண்கலங்கியிருந்தது. ''இறைவன் திருவருளினால் இப்படி நடந்து விட்டதற்கு நானல்லவா காரணம்? அநாவசியமாக அவர் சத்தியம் செய்து கொடுக்கவேண்டி வந்ததே'' என்று கவலைப் பட்டார். சுந்தரருக்கு ஒரே ஆத்திரம். ''நான் ஒன்று நினைக்க இறைவன் ஒன்று நினைத்துவிட்டார். நடக்கிறது நடக்கட்டும்'' என்று சொல்லி மணவினைக்காகக் காத்திருந்தார்.

சுந்தரரும் சங்கிலியும் சந்தித்த செய்தி ஊருக்குள் யாவருக்கும் தெரிந்து விட்டது. நிறைந்த அழகும் சிவபக்தியும் கொண்ட சுந்தரர் அதே பண்புள்ள சங்கிலியாரை மணப்பது மிகவும் பொருத்தமானதென்று சகலரும் மகிழ்ந்தார்கள். மிக விமரிசை யாய் நடந்தது கலியாணம். சுந்தரரும் சங்கிலியாரும் இல்லறம் நடத்திய இன்பத்தைச் சேக்கிழார், ''பேரின்பத்திலமர்ந்தார்கள்'' என்று அதற்கு ஒரு புனிதத் தன்மை கொடுக்கிறார். சுந்தரமூர்த்தி நாயனார் செய்யும் காரியங்களெல்லாம் உலகியலோடு சம்பந்தப் பட்டிருந்தாலும், எல்லாம் இறைவனுக்கே அர்ப்பணமாகும் செயல்களென்பது சேக்கிழாரின் கருத்து.

இப்படியிருக்கும் நாளில் திடீரென்று சுந்தரருக்குப் பரவையின் நினைவு வந்துவிட்டது. வசந்தகாலம். திருவாரூரில் பெரிய விழா நடப்பதையும் அங்கே பரவையார் பாடுவதையும் நடனமாடுவதையும் பார்க்கவேண்டுமென்ற ஆசை பிறந்தது அவருக்கு. இத்தனை நாள் திருவாரூரை அவர் மறந்திருந்ததே பெரிய ஆச்சரியம். சிந்தித்துப் பார்த்தார். தமக்குப் பலவிதத் திலும் உதவி செய்த இறைவன், தம்முடைய தோழன், திருவாரூரில் அமர்ந்திருக்க, அவரைப் பிரிந்து இதுவரை தாம் மறந்திருந்தது எவ்வளவு கொடுமை என்று வருந்தினார்.

பத்திமையும் அடிமையையும் கைவிடுவான் பாவியேன்
பொத்தினநோய் அதுவிதனைப் பொருளறிந்தேன் போய்த் தொழுவேன்
முத்தினை மாமணிதன்னை வயிரத்தை மூர்க்கனேன்
எத்தனை நாட் பிரிந்திருக்கேன் என்னூரிறைவனையே.

ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமா யான் செய்யுந் துரிசுகளுக் குடனாகி
மாழையொண்கண் பரவையைத்தந் தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என்னூரிறைவனையே.

இப்படியாக ஓர் இரவு முழுவதும் தூக்கமில்லாமல் திருவாரூரையும், அங்கு நடக்கும் பங்குனி உத்திரத் திருவிழாவையும், அந்தத் திருவிழாவில் இசைபாடி நடனமாடும் தம் இன்னுயிர்த் துணைவி பரவையாரையும் நினைத்து வருந்திய சுந்தரர் விடியற்காலையில் எழுந்தார். சங்கிலியை மறந்தார். திருவொற்றியூர் சுவாமியை மறந்தார்; மகிழமரத்தடியில் கொடுத்த சத்தியத்தையே மறந்தார்! ஒற்றியூரைவிட்டுத் திருவாரூருக்குப் புறப்பட்டார். ஊரைவிட்டு வெளியே கால் எடுத்து வைக்கவில்லை, இரண்டு கண்களும் பார்வையிழந்து குருடரானார்! தாம் செய்து கொடுத்த சத்தியத்தினின்றும் தவறியதனால் ஏற்பட்ட சாபம் என்பதை யுணர்ந்தார் சுந்தரர். பழையபடி இறைவன் தமக்குக் கை கொடுப்பார் என்ற நம்பிக்கையில் திருவொற்றியூரானை நினைத்து, மனமுருகிப் பாடினார்:

‘‘ வழுக்கி வீழினும் திருப் பெயரல்லால்
மற்று நானறியேன் மறு மாற்றம்
ஒழுக்க என் கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றியூரெனுமூர் உறைவானே’’...

‘‘அகத்திற் பெண்டுகள் நாணென்று சொன்னால்
அழையேல் போ குருடா எனத் தரியேன்
முகத்திற் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்வேன்?’’

இப்படிக் கதறிக் கொண்டு நின்றும், திருவொற்றியூர் சுவாமி பதில் சொல்லவில்லை! வேறு வழியின்றி, எப்படியாவது திருவாரூருக்கே போய்விடுவதென்று தீர்மானங்கொண்டவராய் சுந்தரர் மேலும் நடந்தார். அவரது தொண்டர்கள் சிலர் வழி காட்டினார்கள். நேரே திருவாரூருக்குப் போகாமல் தொண்டை நாட்டுத் தலங்கள் சிலவற்றைத் தரிசித்துக் கொண்டு அப்புறம் திருவாரூர் போகலாமென்ற நோக்கத்தோடு திருமுல்லைவாயில் என்ற ஸ்தலத்தை நோக்கி நடந்தார் சுந்தரர்.

52. பாசுபதரும் காலாமுகரும்

திருவொற்றியூர் கோயிலுக்கு நாங்கள் போன சமயத்தில் எங்களை முதலில் வரவேற்றது ''புகைப்படம் பிடிக்கலாகாது'' என்ற எச்சரிக்கைப் பலகை. காமெராவும் கையுமாகக் கோபுர வாயிலைத் தாண்டி உள்ளே சென்றபோது ஒரு கோயில் சேவகனின் தடையுத்தரவு! தேவஸ்தானக் காரியாலயத்துக்குச் சென்று நிர்வாக அதிகாரியின் உத்தரவு கேட்கலாமென்றால் அவர் அங்கில்லை. காரியாலயத்திலிருந்த கணக்குப் பிள்ளையிடம் நிர்வாக அதிகாரியின் வீட்டு விலாசம் கேட்டோம், அவர் மறுத்து விட்டார். தர்ம கர்த்தா யாராவது அகப்படுவார்களா என்று கேட்டதற்கும் கணக்குப்பிள்ளை பதில் தர மறுத்தார். பரவாயில்லை, இந்தக் கோயில் சம்பந்தமாகவும் நாயனார் சம்பந்த மாகவும் ஏதாவது தகவல் தர ஒரு குருக்கள் அகப்படுவாரா என்று கேட்டதற்கும் கணக்குப்பிள்ளை, ''அப்படி யாரும் நிர்வாக அதிகாரி உத்தரவில்லாமல் தகவல் தரக்கூடாது'' என்று ஒரே யடியாகத் தடையுத்தரவு போட்டுவிட்டார்! அதற்குமேல் அங்கு நின்றுவாதாடினால் ஒரு வேளை எங்களையே வெளியேற்றி விடக்கூடும் என்று நினைத்து, காரியாலயத்தைவிட்டு வந்து சுவாமி தரிசனம் செய்து விட்டு, குருக்களோடு மறைவில் பேசியபோது கிடைத்த தகவல்கள், ஐதிகங்கள் அந்த உத்தியோகத்தர்களுக்குத் தெரி யாதவை.

மாசிமாதம் பிரம்மோற்சவத்தில் மக நட்சத்திரத்தன்று சங்கிலி நாச்சியார் கலியாண உற்சவம் நடைபெறுகிறது. இப்போது சந்நிதித் தெரு இருந்த இடத்தில்தான் சங்கிலி வசித்த நந்தவனமும் கன்னிமாடமும் இருந்ததாக நம்பப்படுகிறது. காலையிலே நந்தவனத்துக்கு எழுந்தருளித் திரும்பி வந்த பின் திருக்கல்யாணம் நடக்கிறது. அதன்பின் மாலையில் மகிழமரத்தடி யில் சத்தியம் செய்வதாக பாவனை. இது சுந்தரர் சம்பந்தமான மகிழடி சேவை உற்சவம்.

திருவாரூரில் போல திருவொற்றியூரிலும் புற்றிடம் கொண் டார்தான் மூலவர்; புற்றிலிருந்து தோன்றிய ஈசன் என்பதால்

எப்போதும் கவசம் மூடியிருக்கும் கார்த்திகை மாதம் பௌர்ணமி நாளில் மாத்திரம் கவசம் நீக்கி அபிஷேகம் செய்து புனுகு சாத்துவார்கள். பிராகாரத்தைச் சுற்றி வரும்போது இருபத்தேழு லிங்கங்கள் தெற்குப் பிராகாரத்தில் வரிசையாயிருக்கக்காணலாம். இவை நக்ஷத்திர லிங்கங்கள் என்று சொல்வார்கள். ஒவ்வொரு நக்ஷத்திரத்துக்கும் ஒரு லிங்கம். உட்பிராகாரத்தை வலம் வந்தால் வடக்குப்பாகத்தில் காளி சந்நிதியைக் காணலாம். இதன் வாயிலில் ஒரு பெரிய வட்ட வடிவமான கல் காணப்படும். இந்தக் காளி 'வட்டப்பாறையம்மன்' என்ற பெயர் பெற்ற மகாசக்தி. இந்த அம்மன் மகா உக்ரம் கொண்டிருந்த காலத்தில் ஆதி சங்கரர் இங்கு வந்து ஒரு யந்திரம் ஸ்தாபித்துச் சென்றதாகவும் அந்த யந்திரத்தை மூடியே வட்டப் பாறை இருக்கிறதென்றும் சொல்வார்கள். காஞ்சீபுரத்திலும் காமாக்ஷி அம்மனுக்கு முன்னுல் யந்திரம் இருக்கிறது. அங்கே யந்திரத்துக்குத்தான் பூசை முதலியன, அம்மனுக்கல்ல. ஆனுல் இங்கே திருவொற்றியூரிலுள்ள காளி அல்லது துர்க்கைக்குத்தான் பூசை. இங்கே யந்திரம் மூடப்பட்டிருப்பதால் உக்ரம் அதிகம் என்று நம்பப்படுகிறது. காளி சந்நிதியைத் தாண்டிச் சென்றுல் ஒரு சாந்துக் கட்டிடம் இருக்கிறதைப் பார்க்கலாம். இது முற்றும் மூடப்பட்டிருக்கிறது. கி. பி. பதினெட்டாம் நூற்றுண்டிலே ஹைதர் அலி காலத்தில் கொள்ளேயும் கொடுமையும் நடந்தபோது திருவொற்றியூர் ஆலயத்தைச் சேர்ந்த தெய்வ உருவங்களுக்கும் ஆபத்து நேரிடக் கூடுமென்று கண்ட குருக்கள் ஒருவர், விக்கிரகங்களேயெல்லாம் எடுத்து இந்தக் கட்டிடத்துள் ஆவாகனம் பண்ணி வைத்தார். மூலவரை அகற்ற முடியாததால் குருக்கள் வருந்திய போது, ''என்னேப்போல் வேறு உருவத்தை வை, நான் திருப்தியடைவேன்'' என்றுராம். குருக்கள் மூலவரைப் போல் ஒரு லிங்கம் செய்து, கவசம் புனைந்து இங்கே வைத்தார். திருப்தீஸ்வரர் என்று இந்த லிங்கத்தைச் சொல்வார்கள்.

தென்மேற்குப் பிராகாரத்தில் கோயிலே அடுத்து ஒரு சந்நிதியிருக்கிறது. இதை கௌளீஸ்வரர் சந்நிதி என்பார்கள். எப்போதும் பூட்டிய படியேயிருக்கும் ஓர் இருட்டறை. கதவிலே காது கொடுத்துக் கேட்டால் ஓம் என்ற ஒலி கேட்பதாகச் சொல்வார்கள். முன்னெரு காலத்தில் பாசுபதர், காபாலிகர், காலாமுகர், மாவிரதியர் முதலிய கடும் தபசிகள் இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்தவர்கள். அவர்களில் சிலர் தங்கிய இடமாக இந்தச் சந்நிதி இருக்கலாமோ என்று கருத இடமுண்டு. இரண்டாம் ராஜாதிராஜன் காலத்தில் (கி. பி. 1180) இந்த அரசன் பங்குனி உத்திர விழாவின் போது திருவொற்றியூருக்கு

நேரில் வந்து வணங்கினன் என்று ஒரு கல்வெட்டு இக்கோயிலில் காணப்படுகிறது. இது முக்கியமான சில செய்திகளைக் கூறுகிறது. ''அரசன் இங்கு வந்து படம்பக்க நாதர் பங்குனி உத்திரவிழாவில் கலந்து கொண்டபோது அவருடன் கூட இருந்தவர்கள், இங்கு ஒரு மடம் கட்டிய சதுரானன பண்டிதர், காபாலிக சைவர்களின் சித்தாந்தமாகிய சோமசித்தாந்தத்தை எழுதிய வாகீஸ்வர பண்டிதர், மற்றும் கோயில் நாயகர், ஸ்ரீகார்யம் ஆகியோர். இவர்கள் யாவரும் ஆளுடைய நம்பி புராண படனத்தைக் கேட்டார்கள்,'' என்ற விவரங்கள் இந்தக் கல்வெட்டில் காணப் படுகின்றன. இங்கே ஆளுடைய நம்பி புராணம் என்பது சுந்தரமூர்த்தியை நாயகனாகக் கொண்ட சேக்கிழாரின் பெரிய புராணம்.

பல்லவ மகேந்திரவர்மன் காலத்திலே பாசுபதர், காபாலிகர், காலாமுகர் என்ற சைவமார்க்கத்தினர் வாழ்ந்தார்கள் என்பது சரித்திர வரலாறு. இவர்களின் அனுஷ்டானங்களும் பழக்கங்களும் அநாகரிகமானவை. மனிதக் கபாலத்தில் பிச்சை வாங்கி உண்பது, மாமிசம், மது முதலியவற்றைக் கூசாது உண்பது, சுடுகாட்டு சாம்பலைப் பூசுவது, இவையெல்லாம் அவர்கள் கடைப்பிடித்த வழக்கங்கள். பாசுபத சித்தாந்திகள் பலர் திருவொற்றியூரில் வாழ்ந்தார்கள் என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகளுள்ளன. இவர்களின் கடுமையான முறைகள் ஆதிசங்கரரின் வருகைக்குப் பின் தளர்ந்து நாகரிகமான முறைகள் அனுட்டிக்கப்பட்டன என்று தெரிகிறது. நிரஞ்சன குரு என்பவரே திருவொற்றியூரில் பாசுபத சித்தாந்தமான சோமசித்தாந்தத்தைப் பிரகடனம் செய்தவர் என்று சொல்லப்படுகிறது. இவர் ஏற்படுத்திய மடத்தில் கேரளத்திலிருந்து வந்த சதுரானன பண்டிதர் வாழ்ந்தார். இவருடைய இயற்பெயர் வல்லப குரு. சதுரானன பண்டிதர் என்பது பட்டப்பெயர். இந்தப் பட்டத்தில் பலர் வழிவந்தவர்கள். அவர்களில் ஒருவர்தான் மேலே இரண்டாம் ராஜாதிராஜன் கல்வெட்டில் சொல்லப்பட்டவர்.

சோழர் காலத்திலே திருவொற்றியூர் ஆலயம் ஒரு சிறந்த கல்விக்கூடமாகவும் விளங்கியதென்பது கல்வெட்டுக்களிலிருந்து தெரியவருகிறது. கருத்தரங்குகளுக்காக 'வாக்களிக்கும் மண்டபம்' ஒன்றும், இலக்கிய இலக்கணத் தெளிவுரைகளுக்காக 'வியாகரண வியாக்கியான மண்டபம்' ஒன்றும் இருந்தன.

இந்தக் கோயில் தியாகராஜர் சந்நிதி திருவாரூரைப் போல மிக விசேஷம். பிரம்மோற்சவத்தில் மூன்றும் நாள் முதல் ஆறும் நாள் வரை பவனி என்ற நடனம் நடைபெறும். சுவாமியின் பெயர் ஆதிபுரீஸ்வரர். இது ஒற்றியூர் என்பதன் வடமொழிப்

பெயர். ஒரு காலத்தில் சிவஸ்தலங்கள் உள்பட எல்லா ஊர்களுக்கும் வரி விதித்து அரசன் சுற்றோலை அனுப்பினான். அப்பொழுது அரசனுக்கும், ஓலை எழுதிய ஓலைநாயகத்துக்கும் தெரியாதவாறு வரிபிளந்து, ''இவ்வாணை ஒற்றியூர் நீங்கலாகக் கொள்க'' என்று அவ்வோலையில் எழுதப்பட்டிருந்ததாம். இதன் காரணமாக இவ்வூருக்கு, ஒற்றியூர், அதாவது விலக்கப்பட்ட ஊர் என்று பெயர் ஏற்பட்டதாக கர்ணபரம்பரைக் கதை ஒன்றுண்டு. அதே சமயம் இக்கோயில் இறைவனுக்கு ''எழுத்தறியும் பெருமாள்'' என்ற பெயரும் உண்டாயிற்று. பெரிய புராணத்தில் இதற்கு சேக்கிழார், ''ஏட்டு வரியில் ஒற்றியூர் நீங்கல் என்ன எழுத்தறியும், நாட்டமலரும் திருநுதலார்'' என்று ஒரு குறிப்பை அமைத்துப் பாடியிருக்கிறார்.

திருவொற்றியூர் தேவியின் பெயர் வடிவுடைநாயகி. உச்சிக் காலத்தில் இவ்வம்மனை வணங்குவது சாலச் சிறப்பென்பர். மேலூர், திருவொற்றியூர், திருமுல்லைவாயில் என்பன ஒன்றுக் கொன்று சமீபத்திலுள்ள தலங்கள். இம்மூன்றிலும் அம்மன் சந்நிதி விசேஷம். மூன்றும் ஒரே முகச்சாயலுடைய விக்கிரகங்கள். மேலூரில் திருவுடைநாயகியைக் காலையில் தரிசித்து, உச்சிக்காலத்தில் திருவொற்றியூர் வடிவுடை நாயகியைத் தரிசித்து, மாலையில் திருமுல்லைவாயில் கொடியிடைநாயகியைத் தரிசிப்பது சிறப்பு என்று குருக்கள் சொன்னார். பௌர்ணமியும் வெள்ளிக்கிழமையும் திருவொற்றியூரில் விசேஷ தினங்கள். ஆடி வெள்ளி மிகவும் சிறந்த தினம்.

ஞான சம்பந்தரும் அப்பரும் திருவொற்றியூரைத் தரிசித்துப் பாடியிருக்கிறார்கள். அப்பர் வந்தபோது காலால் நடக்காமல் நெஞ்சால் ஊர்ந்து வந்ததாக ஐதிகம். அவருக்கு மண்ணெல்லாம் விபூதி, கல்லெல்லாம் சிவலிங்கம் என்ற கொள்கை. அதனால்தான் நெஞ்சால் ஊர்ந்தார் என்று கர்ணபரம்பரைக் கதை. அப்பர் வருவதற்கு முன் சுவாமியே இரங்கி நேரிற் சென்று காட்சி கொடுத்தாராம். அப்பர்சுவாமி கோயில் என்ற ஒரு பழைய கட்டிடம் திருவொற்றியூரில் இன்றும் காணப்படுகிறது. அழிந்து போய்க் கொண்டிருக்கிறது இது.

அறுபத்து மூவரில் கலிய நாயனார் என்பவர் திருவொற்றியூரிலே வாழ்ந்தவர். இவர் ஒரு பெரிய தியாகி. எண்ணெய் வாணிகர் குடும்பத்தில் பிறந்த இவர் கோயிலுக்கு நித்தியமும் எண்ணெய் கொடுத்துத் திருவிளக்கேற்றி வரும் சேவையைச் செய்து வந்தார். இவருக்கு வறுமை வந்தபோதும், கூலிவேலை செய்து அதில் வரும் பொருளைக் கொண்டு எண்ணெய் வாங்கித் தன் கடமையைச் செய்தார். இப்படியானவர்களை இறைவன்

சோதனை செய்து உலகத்தார்க்கும் காண்பிப்பது வழக்கம். வறுமையோடு தள்ளாமையும் வந்ததால் அவர் கூலி வேலை செய்யவும் முடியவில்லை. இதற்கு என்ன வழி என்று சிந்தித்து, தமது மனைவியையே விலை கூறி விற்றுப் பணம் தேடமுயன்றார். அடியார் மனைவியர் எவரும் கணவன் சொல்லுக்கு எதிர் சொல்ல மாட்டார்களல்லவா? மனைவியும் ஒப்புக்கொள்ள கலியர் நகரெங்கும் விலைகூற, வாங்குவார் எவரும் கிடைக்கவில்லை! கடைசியில் மனம் தளர்ந்து, இனிமேல் ''நான் உயிர் தரியேன்'' என்று சொல்லிக் கொண்டு தமது இரத்தத்தையே எண்ணெயாக விளக்கேற்றி விடலாமென்ற துணிவோடு கழுத்திலே கத்தியை வைத்தார். உடனே சிவபெருமான் வந்து தடுத்து அவருக்கு வேண்டிய பொருளைக் கொடுத்து வாழ்த்தினார். கலியர் அறுபத்து மூவரில் ஒரு நாயனாரானார். இவருடைய உருவம் திருவொற்றியூர் பிராகாரத்தில் தென் கிழக்கு மூலையில் வடக்கே நோக்கி யிருக்கிறது.

திருவெண்காட்டடிகள் என்ற பட்டினத்துப் பிள்ளையார் திருவொற்றியூரில் முத்தியடைந்ததாகச் சொல்லப்படுகிறது. பட்டினத்தார் சமாதி ஒரு தனிக் கோயிலாக திருவொற்றியூரில் கிழக்குத் திசையில் இருக்கிறது. வடலூர் இராமலிங்க சுவாமியும் திருவொற்றியூருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அவர் இங்கே முருகனை வழிபட்டதால் இங்குள்ள முருகன் கோயிலுக்கு அருட்பெருஞ்சோதி முருகன் என்று பெயர்.

திருவாரூரைப்போல சோழர் காலத்தில் திருவொற்றியூரிலும் பல வகையான இசை நடன நிகழ்ச்சிகள் நடந்து வந்தன. பிற் காலத்தில் தியாகபிரம்மம் என்ற தியாகராஜ சுவாமிகள் இங்குள்ள தியாகரை வேண்டி ''தாரினி தெலிசு கொண்டி'' என்ற திருவொற்றியூர் பஞ்சரத்தினம் பாடினார். நடனக்கச்சேரிகளில் பாடப்படும் ''திருவொற்றியூர் தியாகராஜன் சிற்சபேச நாதனடி'' என்ற பதத்தைப் பாடிய வீணை குப்பையரும் திருவொற்றியூரைப் புகழ்ந்து வணங்கினார்.

உனைப்பிரியேன் என்று சங்கிலிக்கு சத்தியம் செய்து கொடுத்த சுந்தரமூர்த்தி திடீரெனப் பரவை ஞாபகமாகப் புறப்பட்டுப் போனார் என்றும், சத்தியம் தவறினதால் கண்ணை இழந்தார் என்றும் சொல்லியிருந்தோமல்லவா? அவர் இங்கிருந்து திருமுல்லை வாயிலுக்குப் போகிறார். நாமும் அவரைத் தொடர்ந்து போகும் போது, வேறு இரண்டு நாயனார்கள், நாம் செல்லும் பாதைக்குப் பக்கத்தில் திருவேற்காட்டிலும் திருநின்றவூரிலும் இருக்கிறார் களாகையால் அவர்களையும் தரிசித்துக் கொண்டு அப்பால் திருமுல்லைவாயிலுக்குப் போகலாம்.

53. சூதாடும் திருத்தொண்டர்

செல்லும் வழி எப்படி யிருந்தாலும் சிவனையும் சிவனடியார் களையும் சேவிக்கும் சேவையே இறுதி நோக்கமா யிருக்குமாயின் அதுவே ஒருவரை உயர் பதவிக்குக் கொண்டு செல்லும் என்பது தான் பெரிய புராணத்தின் உட்பொருள். ஒருவர் சிவனுக்கு அல்லது சிவனடியாருக்கு உணவளிப்பதற்குப் பொருள் இல்லை யென்றால் திருடுவார்; இன்னொருவர் மனைவியின் தாலியை விற்பார். வேறொருவர் சொந்த மனைவியையே விற்கத் துணிவார். இம்மாதிரியான நாயன்மார்களை நாம் இதுவரை சந்தித்திருக் கிறோம். புதிதாக ஒருவரை இப்போது சந்திக்கப் போகிறோம். அவர்தான் மூர்க்க நாயனார் என்பவர். இவர் அடியார்களுக்கு அமுதளித்த தெல்லாம் சூதாடிச் சம்பாதித்த பணத்தைக் கொண்டுதான்.

சென்னையிலிருந்து பூந்தமல்லிக்குப் போகும் சாலையில் ஒரு கிலோப்பாதையி லிருக்கிறது திருவேற்காடு என்ற தலம். இங்கே வாழ்ந்தவர் மூர்க்கர் என்பவர். இவர் மூர்க்கத்தனமாக நடப்ப தால் மூர்க்கர் என்ற பெயரைப் பெற்றார். சொந்தப் பெயர் என்னவென்று தெரியவில்லை. இளமையிலேயே சூதாட்டத்தில் நல்ல பயிற்சி பெற்றிருந்தவர். பெரிய செல்வந்தரான இவர் சிவனடியார்களுக்கு நாள் தோறும் உணவளித்து வந்தார். இவர் பண்பைக் கேள்விப்பட்ட அடியார்கள் பல ஊர்களி லிருந்தும் கூட்டம் கூட்டமாய் வர ஆரம்பித்தார்கள். சில நாட்களில் இவர் கையிலிருந்த பொருள் செலவாகிவிட்ட படியால் சூதாட்டத்தி லிறங்கி அதிலே வெற்றி பெற்ற பொருளைக்கொண்டு அடியார் களுக்கு உணவளித்து வந்தார். சூதாட்டத்தில் எப்போதுமே இவர் வெல்லும் வழக்கமாகையால் பலர் இவரோடு ஆடுவதற்கு அஞ்சிப் பின் வாங்குவார்கள். இதையுணர்ந்ததும் மூர்க்கர் ஒரு தந்திரம் செய்தார். முதல் இரண்டொரு ஆட்டத்தில் வேண்டு மென்றே தோற்பார். அந்த உற்சாகத்தில் எதிராளிகள் மேலும் ஆடத் தொடங்குவார்கள். பந்தயம் பெரிதாகும் சமயத்தில் முழுக்கத் தாமே வென்று அதைக்கொண்டு அடியார்களுக்கு

உணவளித்துவிட்டு, கடைசிப் பந்தியி லுட்கார்ந்து தாம் உண வருந்துவார். கொஞ்ச நாளில் ஊரிலுள்ளவர்களுக்கு இவர் தந்திரம் வெளிப்பட்டுவிட்டது. அன்றியும் பெரும் பந்தயம் கட்டக்கூடியவர்கள் இல்லை. ஆகையால், எவரும் ஆட்டத்துக்குக் கிடைக்காததால் மூர்க்கர் கும்பகோணத்துக்குப் போய் அங்கே பலருடன் சூதாடிப் பொருளீட்டி அன்னதானம் செய்தார். இவரிடம் ஒரு பொல்லாத குணமென்ன வென்றால், எவராவது பந்தய விஷயமாகத் தகராறு செய்தால் உடனே கத்தி யெடுத்துக் குத்திவிடுவாராம்! அப்படியான முரடர். மூர்க்கர் என்ற பட்டத்தைப் பெற்றாலும், அவர் தம் வாழ்க்கையில் சிவனடியார் களுக்கே தமது வருமானம் முழுவதையும் செலவிட்டதால் மூர்க்க நாயனார் என்ற பெரும் பதவியைப் பெற்றுச் சிவபதமடைந்தார் என்று புராணத்தில் சொல்லப்படுகிறது.

சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலையில் பத்து மைல் சென்று வலது புறம் திரும்பும் ஒரு பாலத்தின் வழி ஆற்றைக் கடந்து திருவேற்காட்டை யடைந்தோம். சம்பந்தர் பாடல் பெற்ற பழம் பதியிது. அழகான கிராமியச் சூழலில் தூங்கானைமாடமாகக் கட்டப்பட்டுள்ள கோயிலில் குடியிருப்பவர் வேதபுரீசர். வட வேதாரணியம் என்றும் கொண்டாடப்படும் இந்தத் தலத்தில் வேதாரணியத்தைப் போல மூலவருக்குப் பின்னால் அகஸ்தியருக்குத் திருமணக்கோலம் காட்டிய உமாமகேஸ்வரர்கள் இருக்கிறார்கள். அகஸ்தியருக்கு உற்சவ விக்கிரகம் தனியாக இருக்கிறது. நவக் கிரகங்களின் அமைப்பு இங்கே எண்கோணமாக இருப்பது ஒரு தனியழகு. சூரியமூர்த்தி நடுமத்தியில் பெரிய அளவில் தலை நிமிர்ந்து நிற்கிறார். சமீபகாலத்தில் தான் இங்கு திருப்பணி நடந்திருப்பதால் அறுபத்து மூவர் முதலிய சிலா விக்கிரகங்க ளெல்லாம் தெளிவாக வைக்கப்பட்டுள்ளன. சோழர்காலத்துக் கோயில் என்பதைக் காண்பிக்க மிக உபயோகமான கல்வெட்டுச் சாசனங்களெல்லாம் அர்த்த மண்டபச் சுவர்களிலும் கர்ப்பக் கிருகத்தின் வெளிப்புறத்திலும் காணப்படுகின்றன. வெளிப் பிராகாரத்தில் கீழ்ச் சந்நிதியின் வட புறத்தில் மூர்க்க நாயனாருக்கு ஒரு தனி ஆலயம் கட்டி வைத்திருக்கிறார்கள். பக்கத்திலே சனீஸ்வரனுக்கும் ஒரு தனிச் சந்நிதி யிருக்கிறது. இது ஒரு பிற்காலச் சேர்க்கை என்று தெரிகிறது. சமீப காலத்தில் விநாயகருக்கு எங்கெல்லாமோ கோயில்கள் எழும்புவதைக் காண்கிறோம். புதிதாக வரும் பெருமாள் கோயில்களிலும் சில இடங்களில் விநாயகரையும் நவக்கிரங்களையும் பார்க்கலாம். சனீஸ்வரனுக்கும் மதிப்பு இப்போது அதிகரித்து வருகிறது.

வெகுகாலமாகத் தேடுவாரற்றுக் கிடந்த திருவேற்காட்டுக்கு இப்போது ஒரு புதிய மதிப்பும் புகழும் ஏற்பட்டதற்குக் காரணம் அங்கே எழுந்தருளி யிருக்கும் கருமாரியம்மன் ஆசியால் என்று சொல்லவேண்டும். ஒதுக்குப் புறமா யிருந்த திருவேற்காட்டுக்கு இப்போது ஒரு புதிய நகருக்குள்ள செல்வாக்கும் வசதிகளும் வந்து விட்டன. சென்னை நகரிலிருந்து பல பஸ் வண்டிகள் போய் வருகின்றன. கடைத்தெருக்கள், பள்ளிக் கூடங்கள், மருத்துவ நிலையங்கள் என்று பற்பல தொடர்புகளெல்லாம் நிரம்பிவிட்டன. மிக அழகான கோபுரத்தோடு கூடிய தேவி கருமாரியம்மன் கோயில் தினந்தோறும் பக்தர்களை வசீகரித்த வண்ணமிருக்கிறது. ஞாயிறு வெள்ளிக் கிழமைகளில் ஆயிரக்கணக்கானவர்கள் வந்து வழிபட்டுச் செல்கின்றனர். நாங்கள் தரிசிக்கச் சென்றது ஒரு வெள்ளிக்கிழமை. அன்று பக்தர்கள் பெரிய கியூ வரிசையில் அர்ச்சனைக்காகக் காத்து நின்றார்கள். வெளிப்பிராகாரத்தி லிருக்கும் உற்சவ மூர்த்திக்குத் தனியாக அர்ச்சனை வசதி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்தக் கோயிலில் மிகவும் நாகரிகமான முறையில் பல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. எல்லாம் ஒரு பெரிய தொழில் நிறுவனத்தின் காரியாலயப் பந்தாவில் நடைபெறுவதைப் பார்த்தோம். கூட்டம் கூட்டமாக வருபவர் களில் பெண்கள்தான் அதிகம். அதிலும் சினிமா நடிகைகளுக்கு இப்போது இறைபக்தி அதிகரித்திருப்பதை நேரில் காணக்கூடிய தாயிருக்கிறது. கோயில் நிர்வாகத்திலும் திருப்பணியிலும் ஈடுபட் டிருப்பவர்கள் பல முன்னேற்றமான காரியங்களைச் செய்கிறார்கள் என்று தெரிகிறது. புதிதாக ஒரு ஆலயம் அமைத்தால் என்ன அம்சங்களையெல்லாம் சேர்க்கவேண்டும் என்று திட்டமிட்டு இங்கே பலவிதமான வேலைகள் நடந்துவரக் கண்டோம். தேவி கருமாரியம்மன் கோயில் ஆரம்பித்தபோதே ராஜகோபுரமும் எழுப்பியிருந்தனர். இப்போது புதிதாக ஒரு தேரும் திருக்குளமும் கட்டியிருக்கிறார்கள். வெகு சீக்கிரத்தில் பிரபல்யமடைந்து வருமானத்திலும் முன்னேறிய புதுக்கோயில் திருவேற்காடு தேவி கருமாரியம்மன் கோயில் என்று சொல்லவேண்டும். இந்தக் கோயில் பெற்ற கௌரவத்தில் பழைய வேதபுரீசருக்கும் ஓரளவு பாக்கியம் கிடைத்திருக்கிறது. கருமாரியம்மன் கோயிலுக்கு வருபவர்கள் இங்கேயும் வந்து போகிறார்கள். ஏதோ கொஞ்ச மாவது காணிக்கை செலுத்துகிறார்கள். இந்தச் சமயத்தில் மூர்க்க நாயனார் இல்லையே என்று சொன்னார் நண்பர் சிட்டி. ஏன் என்று கேட்டதற்கு அவர், ''அந்தக் காலத்தில் செல்வர்களைத் தேடி மூர்க்க நாயனார் கும்பகோணத்துக்குப் போனார். இப்போது அவர் இருந்தால் கோடம்பாக்கத்துச் செல்வர்கள்

திருவேற்காட்டுக்கு வருவதைப் பார்த்து கும்பகோணத்தைவிட்டு இங்கேதான் முகாம் போட்டுவிடுவார்'' என்றார். திரைப்படச் செல்வர்கள் திருவேற்காட்டுக்கு வருவதைக் குறிப்பிட்டார் நண்பர்.

கருமாரியம்மன் கோயிலுக்கு ஸ்தல புராணம் முதல் பல பிரபந்தங்கள் புதிதாகப் பாடிச் சேர்த்துள்ளார்கள். திருப்பதி ஏழுமலையப்பன் பின்பற்றி ஒரு ''கருமாரி சுப்ரபாத''மும் புதிதாக ஏற்பட்டிருக்கிறது. இதனைக் கருமாரி சுப்ரபாதம் என்னாமல், ''கிருஷ்ணமாரி சுப்ரபாதம்'' என்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்னர், கோயிலைச் சேர்ந்த ஒரு பெரியவர் ''கருமாரி குறவஞ்சி'' ஒன்று இயற்றி, அடையாறு கலாக்ஷேத்திரத்தார் மூலம் நாட்டிய நாடகமாக நடிக்கக் கேட்டுக் கொண்டார். கருமாரி என்ற பெயரை மாற்றி, ''கிருஷ்ணமாரி குறவஞ்சி'' என்ற பெயரை வைத்தவர் கலாக்ஷேத்திர ருக்மிணிதேவி.

கும்பகோணத்தில் மூர்க்க நாயனார் சூதாடிய இடத்தைக் கண்டு பிடிப்பது சிரமம். ஆனால் இப்போது காணப்படும் சாரங்கதேசிகேந்திர மடத்தில்தான் மூர்க்க நாயனார் பல அடியார்களுக்கு அன்னதானம் செய்தார் என்று கர்ணபரம்பரைக் கதையுண்டு. இந்த மடம் வீரசைவர்களுக்கு முக்கியமானது.

திருவேற்காடு சென்னை நகரத்துக்குப் பக்கத்தில்தான் இருந்தாலும் பரந்த நெல்வயல்கள் நிரம்பிய கிராமியச் சூழ்நிலை நம்மை வசீகரிக்கிறது. முக்கியமாக வேதபுரீசர் கோயில் இருக்கும் ஸ்தானம் உண்மையான பழமைக் காட்சி தருகிறது. இன்றைய நாகரிகத்திலிருந்து நம்மை ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னால் இழுத்துச் செல்கிறது.

54. ஆண்டி கட்டிய ஆலயம்

ஆண்டிகள் கூடி மடம் கட்டுவதென்று ஒரு பழமொழி யுண்டு. ஊரிலே இடும் பிச்சையிலே கவலையில்லாமல் வாழும் ஆண்டிகள் சிலர் மாலவேளையில் ஓரிடத்தில் கூடினார்கள். அது மரநிழல். இலேசாக மழை தூற ஆரம்பித்து நின்றது. ஆண்டி களுக்கு ஒரு யோசனை தோன்றியது. இந்த இடத்தில் நாம் ஒரு மடம் கட்டினாலென்ன? பேச்சிலேயே ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் யோசனையைச் சொன்னார்கள். கற்பனையிலேயே தள பாடங்களை வாங்கினார்கள். கற்பனையிலேயே மடம் கட்டினார்கள், என்று கதை. ஆனால் இம்மாதிரி ஓர் ஆண்டி கற்பனையிலேயே ஒரு கோயில் கட்டி கும்பாபிஷேகம் நடத்த சிவபெருமானையே நேரில் வரவழைத்த கதையுண்டு. அதுமாத்திரமல்ல, இந்தக் கற்பனைக் கோயிலைப் பார்க்கப் பல்லவ அரசன் ஒருவன் தேடிப் போனான். அதுதான் இந்தக் கதையின் சிறப்பு.

பூசலார் நாயனார் ஒரு சாதாரண பிராமணர். இவருக்கு ஓர் ஆசை எப்படியாவது இறைவனுக்கு ஒரு கோயில் கட்ட வேண்டு மென்று. அந்த ஆசையை நிறைவேற்ற எத்தனையோ வகையில் பாடுபட்டு, பலரிடம் உதவி கேட்டு ஒன்றும் பலனளிக்கவில்லை. ஊரில் அந்தக் காலத்தில் பஞ்சம் வேறு. இந்த நிலைமையில் சாதாரண ஒரு ஏழைப் பிராமணர் எப்படிக் கோயில் எழுப்புவது? எனவே, பூசலார் தமது கற்பனையிலேயே மானசீகமாக ஒரு கோயில் கட்ட முனைந்தார். முதலில் கோயிலுக்குப் பொருத்த மான ஒரு நிலத்தைச் சிருஷ்டித்து அதற்கு வாஸ்து சாந்தி முதலிய சடங்குகளையெல்லாம் நிறைவேற்றினார். சகலவிதமான ஆகமங் களிலும் வல்லவராகையால் ஆலய நிர்மாணம் முதலியவற்றுக்கு வேண்டிய பத்ததிகளைத் தெரிந்துகொண்டார். கட்டிட வேலைக்கு வேண்டிய சாதனங்களையும் தச்சர்களையும் மனத்தால் தேடி ஏற்பாடு செய்தார். நல்ல நாள் பார்த்து அஸ்திவாரம் போட்டதுடன் இரவும் பகலும் இடைவிடாது தியானத்திலேயே கட்டிடத்தின் எல்லாப் பகுதிகளையும் கட்டினார். கோபுரமும் விமானமும் கட்டி, விமானத்தின்மீது தூபியும் அமைத்து,

திருக்குளம், திருமதில் முதலியவைகளும் நியமத்தோடு சிருஷ்டித்து, இறைவனைப் பிரதிஷ்டை செய்வதற்கு ஒரு நல்ல நாளும் தீர்மானித்து வைத்தார்.

இதற்கிடையில் காஞ்சியில் அப்போது ஆண்டுவந்த காடவர்கோன் கழற்சிங்கன் என்ற அரசன் கச்சிக் கற்றளி என்ற கைலாசநாதர் கோயிலைக் கட்டி அதில் சிவனைப் பிரதிஷ்டை செய்வதற்கு நாள் குறித்துவைத்தான். அதே நாளில்தான் பூசலாரும் தாம் மானசீகமாகக் கட்டிய கோயிலில் சிவனைப் பிரதிஷ்டை செய்ய ஏற்பாடு செய்திருந்தார். அதற்கு முதல் நாள் சிவன் கழற்சிங்கனின் கனவில் தோன்றி ''உன்னுடைய கோயிலில் நாளைய தினம் பிரதிஷ்டை செய்வதை வேறொரு தினத்துக்கு மாற்றி வைத்துக் கொள். திருநின்ற ஊரில் வசிக்கும் பூசலார் என்னும் எனது அன்பன் பல நாட்களாக உழைத்துக் கட்டிய ஆலயத்துக்கு நாம் நாளைய தினம் போக வேண்டியிருக்கிறது'' என்று சொல்லி மறைந்தார். இந்தச் செய்தியை அறிந்த மன்னன் ஆச்சரியங்கொண்டு, ''இப்படி ஒரு திருப்பணியைச் செய்தவரை நான் போய்க் கண்டு வணங்க வேண்டும்'' என்று சொல்லி திருநின்ற ஊருக்கு வந்து சேர்ந்தான். ஊரில் அப்படியான விழாவுக்கு எந்தவிதமான அறிகுறியையும் அவன் காணவில்லை. அங்கே நின்ற சிலரிடம், ''பூசலார் என்பவர் கட்டிய கோயில் எங்கேயிருக்கிறது?'' என்று கேட்டபோது அவர்கள், ''பூசலாரா? கோயில் கட்டினாரா? அப்படி இந்த ஊரில் யாராவது கோயில் கட்டவில்லையே!'' என்றார்கள். உடனே அரசன் அங்குள்ள அந்தணர்கள் யாவரையும் வரவழைத்து, ''பூசலார் என்பவர் ஒருவர் இந்த ஊரில் வசிக்கிறாரா?'' என்று கேட்டார். ''ஆமாம். பூசலார் என்ற வேதியர் ஒருவர் இந்த ஊர்க்காரர்தான். அவர் எப்போதும் தமது வீட்டில் பூசையில் அல்லது தியானத்தில் இருப்பார்'' என்று பிராமணர்கள் தெரிவித்து, ''அவரை இங்கே அழைத்துக் கொண்டு வரலாமா?'' என்று கேட்டார்கள். அதற்கு அரசன் வேண்டாம் என்று சொல்லித் தானே அவரிடம் சென்று பார்ப்பதாக அந்தச் சிவனடியார் இல்லம் தேடிச் சென்றான். அங்கே பூசலார் இருக்கக் கண்டு, ''சுவாமி! தாங்கள் இங்கே ஒரு பெரிய ஆலயம் எடுத்திருப்பதாகவும், அதில் இன்று இறைவனைப் பிரதிட்டை செய்யப் போவதாகவும் கேள்விப்பட்டு, தங்களைக் கண்டு வணங்கிப் போக வந்தேன்'' என்றான். பூசலார் திகைத்துப் போனார். ''இறைவன் அருள்தான் இருந்தவாறென்னே! என்னையும் ஒரு பொருளாகக் கொண்டு இறைவன் அருள் செய்திருக்கிறான். என் கையில் பணமில்லை. எவ்வளவோ பிரயாசை எடுத்தும் பொருள் தேட முடியவில்லை. ஆகையால்,

மனத்திலுல் முயன்று ஒரு கோயில் கட்டினேன். அந்தக் கோயிலில் எல்லாவித சிற்ப அமைப்புக்களும் வைத்தேன். அது முற்றுப் பெற்று இன்றுதான் இறைவனைப் பிரதிஷ்டை செய்ய நாளும் குறித்தேன். அதுவும் என் மனக்கோயில் கொண்ட நாதராய்த் தானிருப்பார்'' என்றார். பல்லவ வேந்தன் இதைக் கேட்டு அதிசயித்து, ''சுவாமி. தங்கள் பக்தித் திறனைப் பாராட்டுகிறேன்'' என்று அவரைப் போற்றித் தனது ஊர் போய்ச் சேர்ந்தான். சிற்ந்த முறையில் கற்கோயில் கட்டிப் பிரதிஷ்டை செய்யக் காத்திருந்த மன்னனிடம் இறைவன் போகாமல், மனக்கோயில் கட்டிய எளிய பக்தர் ஒருவரிடம் போனது பல்லவனுக்கு அதிசயமாகத்தான் தோன்றியது. பூசலார் அன்று நீனைத்தவாறே இறைவனைப் பிரதிஷ்டை செய்து, கிரமமாகப் பூசை முதலியன செய்து திருப்தியடைந்தார். அவர் அறுபத்து மூவரில் ஒருவரான சிறப்பைப் பெற்றார்.

காஞ்சிக் கற்றளி எடுத்த காடவ மன்னன் வேறு யாருமல்ல கைலாசநாதர் ஆலயத்தைக் கட்டிய நரசிம்ம பல்லவன் என்ற இரண்டாம் நரசிம்மவர்மன். இவனே காடவர்கோன் கழற்சிங்கன் என்ற பெருமையைப் பெற்று அறுபத்து மூவரிலும் ஒருவராகச் சேர்க்கப்பட்டவன். இவனைப் பற்றி நாம் காஞ்சிபுரத்துக்கு சுந்தரமூர்த்தியுடன் போகும்போது விவரமாகத் தெரிந்து கொள்வோம். இவன் காலத்தில், கி. பி. 686க்கும் 689க்குமிடையில் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டதென்று தண்டி என்ற வடமொழிப் புலவர் தமது அவந்தி சுந்தரி கதா என்ற காவியத்தில் இந்தப் பஞ்சத்தைப் பற்றி வருணிக்கிறார். இதனுல் தான் போலும் பூசலார் நாயனார் எவ்வித பொருளும் சேகரிக்க முடியவில்லை.

திருநின்றவூர் இப்போது தின்னனூர் என்று சிதைந்து வழங்கப்படுகிறது. இந்த ஊரில் கண்ணுக்குத் தெரியும் பெரிய கோபுரத்தோடு விளங்குவது பக்தவத்ஸலப் பெருமாள் கோயில். திருநின்றவூர் என்பது இலக்குமி தங்கியிருக்கும் ஒரு ஊர் என்று பொருள்படுவதால் வைஷ்ணவர்களுக்கு இது சிறந்த ஸ்தல மாகக் கருதப்படுகிறது. சிவன் கோயில் மிகச் சிறியது. பழைய கோயில் இருந்த இடத்தில் இப்போது புதிதாகக் கட்டி வைத்திருக் கிறார்கள். மனக்கோயில் கொண்ட நாதர், இருதயாலேஸ்வரர் என்ற பெயர்கள் வழங்குகின்றன. பழமையான சிவலிங்கங்கள் காணப்படுகின்றன. பூசலார் உருவமும் நரசிம்ம பல்லவன் உருவமும் உள்ளன. கோயிலின் பிராகாரத்தில் தெற்குச் சுற்று மதிலில் தனியாக உள்ள ஒரு சிற்பத்தில் பூசலார் நாயனார் மனக் கோயில் கட்டியிருப்பதைச் சித்திரித்துள்ளார்கள்.

55. வெள்ளத்தில் மூழ்கிய கோயில்

திருவொற்றியூரிலிருந்து புறப்பட்ட சுந்தரமூர்த்தி, தமது தொண்டர்கள் வழிகாட்டத் திருமுல்லைவாயில் என்ற க்ஷேத்திரத்துக்குப் போனார் என்று முன்பு சொன்னோமல்லவா? திருமுல்லைவாயில் என்று சீர்காழிக்குப் பக்கத்தில் கடற்கரைப்பட்டினம் ஒன்றுண்டு. இதுவும் பாடல்பெற்ற ஸ்தலம். இன்னொரு திருமுல்லைவாயில் சென்னையை யடுத்த அம்பத்தூருக்குப் பக்கத்திலுள்ளது. இதனை வடதிருமுல்லைவாயில் என்றும், சீர்காழிக்குப் பக்கத்திலுள்ளதைத் தென்திருமுல்லைவாயில் என்றும் இப்போது பேதப்படுத்தி வைத்திருக்கிறார்கள். சேக்கிழார் தமது புராணத்தில் வெறுமனே ''திருமுல்லைவாயில் சென்று இறைஞ்சி'' என்றுதான் குறிப்பிடுகிறார். ஆனால் அடுத்த பாட்டிலே ''தொண்டைமானுக்கு அன்று அருள் கொடுத்தருளும்'' என்று பாடியிருப்பதால் தொண்டைமானுடன் சம்பந்தப்பட்ட திருமுல்லைவாயில் என்று தெளிவாகத் தெரிகிறது. அல்லாமலும் திருவொற்றியூரிலிருந்து புறப்பட்டுத் திருமுல்லைவாயில், திருவெண்பாக்கம், காஞ்சி முதலிய தலங்களுக்குப் போவதால் இது தொண்டைநாட்டுத் தலமாகத்தான் இருக்க முடியும். சுந்தரமூர்த்தியும் தமது திருப்பதிகத்தில், ''சொல்லரும் புகழான் தொண்டைமான் களிற்றைச் சூழ்கொடி முல்லையாற் கட்டிட்டு எல்லையில் இன்பம் அவன் பெற வெளிப்பட்டருளிய இறைவனே!'' என்று பாடியிருப்பதால் தொண்டை நாட்டுத் திருமுல்லைவாயில் என்பது சந்தேகமில்லாமல் தெரிகிறது.

தொண்டைமானுக்கும் இந்தத் திருமுல்லைவாயிலுக்கும் ஒரு கதையுண்டு, எந்தத் தொண்டைமான் என்று சரித்திரத்தைப் பார்த்துச் சொல்ல முடியாது. இது கர்ண பரம்பரையாக வந்த கதை. தொண்டைமான் இங்கு ஒருமுறை வேட்டைக்காக யானையில் ஏறி வரும்போது ஒரு முல்லைக் கொடியில் யானையின் கால் பட்டுச் சிக்கியது. உடனே அரசன் அந்தக் கொடியைத் தன் வாளால் வெட்டியதும் முல்லையின் மறைவிலிருந்த ஒரு சிவலிங்கம் தோன்றியதாம், அந்தச் சிவலிங்கத்தின் மீதும் வாள் பட்டதனால்



திருப்பூந்துருத்தி - பக். 222

திருவாசி நடராஜர் - பக். 238



திருப்பைஞ்ஞீலி – பக். 234



திருமங்கலம் - ஆனயர் - பக். 240



கொடும்பாளூர் மூவர் கோயில் - பக். 253



கொடும்பாளூர் சிவன் கோயில் - பக். 252



இளையான்குடி - பக். 259



பெருமிழலை – பக். 255



குறும்ப நாயனார் (பெருமிழலை) - பக். 256

வாயிலார் நாயனார் (தாராசுரம்) - பக். 289

மூர்த்தி நாயனார் (தாராசுரம்) - பக். 279



மூர்த்தி நாயனார் சந்தனக்கல் (மதுரை) - பக். 279



திருவேடகம் - பக். 274

மயிலாப்பூர் அறுபத்துமூவர் விழா - பக். 290



நல்லூர்ப் பெருமணம் - பக். 292



திருமுல்லைவாயில் - பக். 320

அரசன் பதைபதைத்துக் கீழே இறங்கி வணங்க, இறைவன் அருள் அவனுக்குக் கிடைத்ததாகக் கதை. அந்த இடத்தில் கட்டப் பெற்ற கோயில் திருமுல்லைவாயில் என்ற பெயர் பெற்றது.

சுந்தரமூர்த்தி இங்கு வந்து தொழுதார். ஆனால் அவர் பிணி நீங்கவில்லை. வருத்தம் தாங்க முடியாமல் அவர் அலறியழுதார் என்பது அவரது திருப்பதிகத்திலிருந்து தெரிகிறது.

"செண்பகச் சோலைசூழ்திருமுல் லைவாயிலாய், தேவர்தம் அரசே!
தண்பொழிலொற்றி மாநகருடையாய்! சங்கிலிக்கா வென்கண்
கொண்ட
பண்பா! நின்னடியேன் படுதுயர்களையாய் பாசுபதா பரஞ்சுடரே!"

சங்கிலிக்குக் கொடுத்த சத்திய வாக்கை மீறிய சுந்தரர் எவ்வளவு துயரப்பட்டிருக்க வேண்டும்! ஆனால் இங்கே அவருக்கு அருள் கிடைக்கவில்லை. சுவாமி கண் திறந்தும் பார்க்கவில்லை. அழுது கொண்டே நடந்து திருவெண்பாக்கம் என்ற தலத்துக்குப் போனார்.

திருமுல்லைவாயிலுக்கு நாங்கள் போன சமயத்தில் அங்கு குருக்கள் மாத்திரம் இருந்தார். வழிபடுவோர் எவரையும் காணவில்லை. மிகப் பழைய கோயில். சுவாமியின் பெயர் மாசிலாமணீஸ்வரர். மாசில்லாதவர் என்ற பெயராலும் லிங்கத்தின் மீது ஒரு வடு இருக்கிறது. தொண்டைமான் முல்லைக் கொடியை வெட்டியபோது வாள் பட்டு ஏற்பட்ட வடு என்று விளக்கம் சொல்கிறார்கள். அம்பாளுக்குத்தான் மிக அழகான பெயர், கொடியிடைநாயகி. சாயங்காலத்தில் இவரை வழிபடுவது மிகவும் விசேஷம் என்பர். இவரைத் தவிரச் சமீபத்திலுள்ள பச்சையம்மன் கோயிலும் தரிசிக்கத்தக்க விசேஷமுள்ளது. திருமுல்லைவாயில் சுவாமிக்கு வெந்நீரில்தான் அபிஷேகம் செய்கிறார்கள். சித்திரைமாதம் சதய நட்சத்திரத்தில் சந்தனக் காப்பு இடுவார்கள். இங்கேயுள்ள நந்தி பெண்ணைகடத்தில் போல், சுவாமியைப் பார்க்காமல் கிழக்கு நோக்கி இருக்கிறது. கிழக்கே கோயில் வாயில் கிடையாது, தெற்கு வாயிலால்தான் உள்ளே போக வேண்டும். சந்நிதானத்திலே இரண்டு எருக்குத் தூண்கள் காணப்படுகின்றன.

திருமுல்லைவாயில் கோயிலைப் பாடிய சுந்தரர் தமது பாடல் ஒவ்வொன்றின் முடிவிலும் "பாசுபதா பரஞ்சுடரே," என்ற சொற்களை வைத்திருக்கிறார். அவர் காலத்திலும் இந்தப் பிரதேசத்தில் பாசுபதர்கள் தமது சைவக் கொள்கைகளைக் கடைப்பிடித்து வந்தனர் என்பது தெளிவாகிறது.

திருமுல்லைவாயிலிலிருந்து ஆவடி, திருவள்ளூர் போய், பாடல் பெற்ற சிவஸ்தலமாகிய திருப்பாசூரைக் கடந்து திருவெண்பாக்கத்தை நோக்கிப் போனேம். ஆனால் திருவெண்பாக்கம் என்பது தேவாரப் பெயர் என்றும், அந்தப் பெயரில் இப்போது ஊரோ கோயிலோ கிடையாதென்றும் முன்னரே ஆராய்ச்சி செய்திருந்தபடியால், திருவிளம்புதூர் என்ற பெயரைச் சொல்லி வழிகேட்டுச் சென்றோம். சத்தியமூர்த்திசாகர் என்று இப்போது வழங்கும் பூண்டி நீர்த்தேக்கத்தில் அழிந்து போய்விட்டது இந்தக் கோயில் என்பதாகத் தெரிந்திருந்தோம். திருவுளம்புதூர் என்ற பெயரிலிருந்த கிராமமும் நீர்த்தேக்கத்தில் விழுங்கப்பட்டு விட்டது. ஏரியின் வடகிழக்கே, கரையில் ஒரு புதிய கோயில் கட்டி அதுவே திருவெண்பாக்கம் அல்லது திருவுளம்புதூர் என்று வழிபாடியற்றி வருகிறார்கள். நீர்த்தேக்கம் அமைக்கும்போது பழைய கோயிலிருந்த சில விக்கிரகங்களை எடுத்துவந்து இந்தப் புதிய கோயிலில் வைத்துள்ளார்கள்.

திருமுல்லைவாயிலிலும் ஏமாற்றமடைந்த சுந்தரர் திருவெண்பாக்கத்துக்கு வந்தபோது பழையபடி தமது சுண்ணிழந்த நிலையை எண்ணி அழத் தொடங்கினர். இங்கு அவர் பாடிய பதிகத்தில், ''வெண்கோயிலுள்ள இறைவனே, நான் பிழை செய்தால் நீ பொறுத்தருள்வாய் என்ற துணிவினால் சில குற்றங்கள் செய்தேன். நீ என் தோழன் என்ற துணிவு எனக்கிருந்தது. ஆனால், நீயோ நண்பனின் கண்களைக் குருடாக்கிய பழியையும் பாராது இப்படிச் செய்து விட்டாயே! நான்தான் உன்னை மகிழமரத்தின் கீழ் இரு என்று கேட்டுக் கொண்டேன்; ஆனால், என்னையறியாமல் நீ போய் அவளுக்கு ''மகிழ்க்கீழே சத்தியம் கேள்'' என்று சொல்லி விட்டாய். இதுவா உன் தோழமை மாண்பு'' என்று வருந்தினர். உடனே இறைவன் பழையபடியிலிருந்து சிறிது இறங்கிவந்து, ''பாவம், வழிநடைக்கு ஒரு பற்றுக்கோடாவது கொடுப்போம்'' என்று நினைந்து, ஊன்றுகோல் ஒன்று கொடுத்தார். ''உண்மையாக நீர் இங்குதான் இருக்கிறீரா?'' என்று சுந்தரர் கேட்க, அதற்கு விடையாக இறைவன் ''உளோம். போகீர்'' என்றார். இது சுந்தரர் தேவாரத்திலேயே காணப்படுகிறது. இதன் காரணமாகவே கோயில் ''திருவுளோம் போகீர்'' என்று பெயர் பெற்றுப் பின்னர் மருவி 'திருவுளம்புதூர்' என்று மாறியதாகச் சொல்வர். ஏரிக்கரையில் இருக்கும் புதிய கோயிலில் ஊன்று கோலுடன் சுந்தரமூர்த்தி நாயனார் திருவுருவம் இருக்கிறது. சுவாமி பெயர் வெண்பாக்கநாதர். வெண்கோயில் என்றுதான் சுந்தரர் தேவாரத்தில் காணப்படுகிறது. இவருக்கு ஊன்றுகோல் கொடுத்தவுடன் மேலும் நடந்துபோக அம்பாள் மின்னலாக

விட்டுவிட்டு வந்து வழிகாட்டினுள் என்பது ஐதிகம். அம்மன் பெயர் மின்னலொளியம்மை.

திருவெண்பாக்கத்தைப் பார்க்கச் சென்ற எங்களுக்கு மற்றும் பலருக்குக் கிடைக்காத ஒரு பாக்கியம் என்னவென்றால், அந்தப் பழம் திருப்பதியை நேரில் சென்று பார்த்து, மண்டபத்தினுள்ளும் பிரகாரத்திலும் தொட்டு வணங்கக் கிடைத்த பாக்கியம்தான் அது. நாங்கள் போன சமயம் கடும்கோடை. பல மாதங்களாக மழையில்லாமல் பூண்டி நீர்த்தேக்கம் முற்றுக வற்றிப் புல் முளைத்த நிலை. அணைக்கட்டிலிருந்து பார்க்கும்போது வெகு தூரத்தில், ஒரு மைல் தூரத்துக்கு அப்பால் ஒரு கரும்புள்ளி போல் தெரிந்த அடையாளத்தை வைத்து அதுதான் பழைய கோயிலின் இடிந்துபோன சின்னம் என்று நம்பி, கீழே இறங்கி நடக்க ஆரம்பித்தோம். இந்த சமயத்தில் நண்பர் சிட்டிக்கு எதிர்பாராத உணர்ச்சி வேகத்தில் பேச நாவெழவில்லை. காலஞ் சென்ற தேசபக்தர் சத்தியமூர்த்தி சென்னை நகர மேயராக இருந்த காலத்தில் எவ்வளவோ எதிர்ப்புக்கிடையே இந்தப் பூண்டி நீர்த் தேக்கத்துக்கு அணைகட்டி சென்னை நகரத்துக்கு வேண்டிய குடிதண்ணீரை வற்றுத பெருநிதியமாக வழங்க ஏற்பாடு செய்து வைத்தார். அந்தப் புண்ணியவானின் பெயரையே நன்றியுள்ள மக்கள் ''சத்தியமூர்த்தி சாகர்'' என்று நீர்த்தேக்கத்துக்கு வழங்கினர்கள். சத்தியமூர்த்தியின் வாழ்க்கை வரலாற்றை நூலாக எழுதிவரும் சிட்டி இப்போது அந்த சாகர் என்ற சமுத்திரம் ஒரு சிறு குளமாகவாவது காணப்படாமல், வளந்தர மாகக் காட்சியளிப்பதைப் பார்த்து ஸ்தம்பித்துப் போனர்.

நடக்க நடக்க தூரமும் போய்க் கொண்டேயிருந்தது. வெயில் வேறே கொளுத்தியது. பாதிதூரம் போனதும் திரும்பிப் பார்த்தால் அணைக்கட்டில் மனிதர்கள் எறும்பு போல் காணப் பட்டனர். வெண்பாக்கம் கோயில் சின்னங்களும் ஏதோ ஆடோ மாடோ படுத்திருப்பது போல் காணப்பட்டன. எங்களுக்கோ இரண்டும் கெட்டான் நிலைமை. ஒருவாறு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மேலும் நடந்தோம். இறுதியில் அந்தக் கோயில் இருந்த இடத்தைச் சேர்ந்தபோது ஏற்பட்ட பெருமிதத்தைச் சொல்லி முடியாது. கர்ப்பகிருகம் இருந்த இடத்தில் சுவர்கள் இன்னும் கெடாமல் இருக்கின்றன. வடக்குச் சுவரில் பல கல்வெட்டுக்கள் சுத்தமாக இருக்கின்றன. இந்தக் கல்வெட்டுக்களையெல்லாம் நீர்த்தேக்க அணைகட்டுவதற்கு முன்பே அரசாங்கத்தார் பெயர்த்தெழுதிப் பாதுகாத்து வைத்து விட்டார்கள். கர்ப்பகிருகத்துக்கெதிரே கிழக்குத் திசையில்

சிறிது தூரத்தில் விமானத்தின் மேற்பகுதி மாத்திரம் உடைந்து போய்க் கிடந்தது. இடது பக்கத்தில் ஏதோ ஒரு சந்நிதியிருந்த தற்கு அடையாளமான கட்டிடமும், அதன் பக்கத்தில் மற்றொரு கட்டிடமும் காணப்பட்டன. சிறிது தூரம் தள்ளி, வடதிசையில் ஒரு கட்டிடம் இடிந்து போய்க் காணப்பட்டது. இவற்றை யெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியுடன் புகைப்படம் பிடித்துக்கொண்டு வெண்பாக்கநாதர் இன்னும் அங்கேதான் இருக்கிறார் என்ற நம்பிக்கையோடு திரும்பி நடந்தோம். ''உளோம்; போகீர்'' என்று இறைவன் சுந்தரருக்குச் சொன்ன உறுதிமொழி இன்றும் காப்பாற்றப்படுகிறது! இந்த ஸ்தலத்திலிருந்து திரும்பி ஏரிக் கரைக்கு நாங்கள் நடந்தபோது பழைய கோபுரம் தெரியவில்லை.

மறைந்த க்ஷேத்திரமாகிய திருவெண்பாக்கத்தையே கண்டு பிடித்துக் கையில் எடுத்துக்கொண்டு வந்தது போன்ற நிறை வுடன் நடந்து கரைக்கு வந்தோம். மிக அருமையாகக் கிடைத்த தரிசனத்தின் ஞாபகச் சின்னமான புகைப்படங்களை இந்நூலில் பிறிதோரிடத்தில் காணலாம். எதிர்பாராத வரட்சி காரணமாக, பழைய கட்டிடச் சின்னங்களை நேரில் தொட்டுத் தரிசிக்க எமக்குக் கிடைத்தது இறைவனருள்தான். சுந்தரருக்கு திருவையாற்றைத் தரிசிக்க காவிரி வற்றி வழி கொடுத்ததுபோல் எமக்கும் பூண்டி நீர்த்தேக்கம் வற்றி வழி விட்டது. இப்போது மறுபடியும் அந்தச் சின்னங்களை நீர்த்தேக்கம் மூடி மறைத்து விட்டது!

ஊன்றுகோலைப் பிடித்துக் கொண்டு, மின்னல் ஒளி வழிகாட்ட சுந்தரர் பழையனூர் சான்ற திருவாலங்காட்டுக்குப் போனார் என்று சேக்கிழார் சொல்கிறார். ''பங்கயப் பூந்தடம் பணைசூழ் பழையனூரை யெய்தித் தங்குவார், அம்மை திருத்தலையாலே வலங்கொள்ளும், திங்கள் முடியார் சூடும் திருவாலங்காட்டில்'' என்பதுதான் பெரிய புராணம். இதிலே, ''அம்மை திருத்தலை யாலே வலங்கொள்ளும்'' என்று, காரைக்காலம்மையின் கதையும் சொல்லப்படுகிறது. திருவாலங்காடு காரைக்காலம்மையார் தங்கியிருந்து பாடிய திருப்பதியாகையால் இங்ஙனம் குறிப்பிடு கிறார் சேக்கிழார். நாமும் அங்கே நேரில் போய்ப் பார்க்கலாம்.

56. பழையனூர் நீலி

திருவெண்பாக்கம் என்ற பூண்டியிலிருந்து திருவாலங் காட்டுக்குப் போவதில் எவ்வித சிரமமுமிருக்கவில்லை. பழையபடி திருவள்ளூரையடுத்த பெரியசாலைக்கு வந்து திருப்பதிக்குப் போகும் வழியில் கனகம்மா சத்திரத்திலிருந்து பிரிந்து இடதுபுறம் செல்லும் பாதையில் போய்த் திருவாலங்காட்டையடைந்தோம்.

சுந்தரமூர்த்தி நாயனார் ஊன்றுகோலுடன் இங்கு வந்து ஒரு பதிகம் பாடிவிட்டுப் போய்விட்டார். திருநாவுக்கரசரும் ஒரு யாத்திரையில் வந்துபோனார். சம்பந்தர் வந்து ''காரைக்கா லம்மையாரே தலையால் நடந்துவந்த இத்திருப்பதியில் நான் கால்மிதிக்கலாகாது'' என்று சொல்லித் தூரத்திலிருந்து வணங்கி விட்டுச் சென்றார். இவர்களுக்கெல்லாம் முன்னால் பல ஆண்டு களுக்கு முன்பே இங்கு வந்து வணங்கிய காரைக்காலம்மை யாருக்குத்தான் இந்த ஸ்தலம் மிகவும் முக்கிய தொடர்புடையது.

காரைக்கால் வணிகனின் மனைவியாயிருந்த புனிதவதியார் பேய் உருவம் பெற்றுக் கயிலைக்குச் சென்ற வரலாற்றை முன்னரே படித்திருக்கிறோம். கயிலையில் அவர் சேர்ந்தவுடன் இறைவனே அவரை ''அம்மை!'' என்றழைத்தார். இவரும் ''அப்பா!'' என்று அலறி அவரது திருவடிகளில் விழுந்து வணங்கினார். உமக்கு வேண்டிய வரத்தைக் கேளும் என்றார் இறைவன். ''என்றும் மாறுத இன்ப அன்பு வேண்டும்; பிறவாமை; அன்றி மீண்டும் பிறப்பு உளதாயின் உன்னை என்றும் மறவாமை வேண்டும்; இன்னும் நீ ஆடுகின்றபோது நான் மகிழ்ந்து பாடிக்கொண்டு உன் திருவடியின் கீழே இருத்தலும் வேண்டும்'' என்றார். இறைவன் அருள்கூர்ந்து ''தென்னாட்டிலே பழையனூர் திருவாலங்காட்டில் நாம் ஆடும் பெருநடனத்தை நீ கண்டு ஆனந்தத்துடன் எப்போதும் நம்மைப் பாடிக் கொண்டிருப்பாயாக'' என்று சொன்னார்.

திருவாலங்காட்டுக்கு வந்து ''அண்டமுற நிமிர்ந்தாடுகின்ற'' ஐயனது திருநடனத்தைக் கண்டு மூத்த திருப்பதிகம், அற்புதத்

திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை என்ற பாசுரங்களைப் பாடினார். இந்தப் பாசுரங்கள் அப்பர் சம்பந்தருக்கு முன்னுள்ளவை. மூத்த திருப்பதிகம் இசையுடனமைந்தது. பண்முறை அமைந்த முதல் யாப்பு என்ற காரணத்தால் மூத்த திருப்பதிகம் என்ற பெயர் பெற்றது. காரைக்காலம்மையார் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு என்று சிலர் மதிப்பிடுகிறார்கள். தேவார நாயன்மார் மூவருக்கும் இவர் மூத்தவர்.

திருவாலங்காட்டுக்கு நாங்கள் போய்ச் சேர்ந்த சமயம் நடை சாத்தப்பட்டிருந்தது. இருந்தும் குருக்கள் வீட்டுக்குப் போய் அவர் உதவியை நாடியதும் எவ்வித தயக்கமுமில்லாமல் அவர் எங்களை அழைத்துக்கொண்டு போய் கோயிலின் முக்கியமான இடங்களையெல்லாம் விளக்கிக் காண்பித்தார். மேலும் பல விளக்கங்களையும் ஐதிகங்களையும் தெரிந்துகொள்ள வேண்டுமானால், சந்நிதித் தெருவின் பக்கத்தில் சபாபதி தேசிகர் என்று ஒருவர் இருக்கிறார். அவரைக் கண்டு பேசினால் பல விஷயங்களைத் தெரிந்து கொள்வீர்கள் என்று சொல்லி அவர் வீட்டுக்கு வழியும் காண்பித்தார் குருக்கள்.

சபாபதி தேசிகர் ஒரு கலைக் களஞ்சியம். தமிழிலும் சமஸ்கிருதத்திலும் அவர் கற்றிருக்காத விஷயமில்லை. நல்ல சங்கீத ஞானம். கணீரென்ற குரல். சுமார் இரண்டு மணி நேரம் அவருடன் பேசிக் கொண்டிருந்தபோது பொழுதே போனது தெரியவில்லை. திருவாலங்காட்டின் சரித்திரம், கோயிலின் ஐதிகம் புராணங்களின் சாரம், என்னவெல்லாமோ அவர் சொல்லித் தெரிந்துகொண்டோம். நாங்கள் அவரைச் சந்தித்த சமயம் அப்பொழுதுதான் பகல் உணவருந்திவிட்டு வெளியே வந்தார். தனி மனிதர். குடும்பமில்லை. தானுகவே சமைத்துச் சாப்பிட்டு விட்டு வந்தார். எங்களையும் உடனே சாப்பிடச் சொன்னபோது நாங்கள் ஏற்கெனவே சாப்பிட்டுவிட்டு வந்ததாகப் பொய் சொன்னோம். நிலைமை எப்படியிருக்குமோ என்ற காரணத்தால் அந்தப் பொய்யை, அவர் பல தடவை ஞாபகப்படுத்திய போதெல்லாம், வற்புறுத்திக் கொண்டேயிருந்தோம். கடைசியாக அவர் எங்களுடன் வெகுநேரம் பேசி முடிந்த பின் பழையனூருக்கு அழைத்துக் கொண்டு போய்க் காண்பிக்கப் புறப்பட்ட சமயம், ''இதுவரை நீங்கள் சாப்பிட மறுத்துவிட்டீர்கள். கொஞ்சம் மோராவது சாப்பிடலாமே'' என்றார். அவர் அன்பான உபசாரத்தை வரவேற்று மோர் சாப்பிட்டுவிட்டு அவருடன் கிளம்பினோம்.

திருவாலங்காடு தமிழ்நாட்டின் சரித்திரத்துக்கு ஒரு நூல் நிலையம் என்று சொல்ல வேண்டும். இந்தக் கோயிலில் கண்ட

நாற்பத்தாறு கல்வெட்டுச் சாசனங்களும் முப்பத்தொரு செப்புப் பட்டயங்களும் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து பதினாலாம் நூற்றாண்டு வரையுள்ள சரித்திர சம்பவங்களைத் தெளிவாகக் கூறுகின்றன. திருவாலங்காடு கோயிலுக்கு ஆதித்திய சோழன் காலம் தொடங்கி (கி. பி. 871-907) பல பேரரசர்கள் திருப்பணி செய்துள்ளார்கள். சோழர், பாண்டியர், பல்லவர், கங்கபல்லவர், விஜயநகர மன்னர்கள் முதலானோர் பெயர்கள் இக்கோயிலிலுள்ள கல்வெட்டுச் சாசனங்களில் காணப்படுகின்றன. அவ்வக்காலத்தில் இவர்கள் பல அறக்கட்டளைகள் ஏற்படுத்தியுள்ளார்கள். காரைக் காலம்மையார் மூத்த திருப்பதிகத்தில் ''அண்டமுற நிமிர்ந்தாடு மெங்களப்பன் இடம் திருவாலங்காடே'' என்ற சொற்கள் வருகின்றன. கி. பி. 1178-1218-ல் அரசாண்ட மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டொன்று திருவாலங்காட்டுக் கோயிலை ''அண்டமுற நிமிர்ந்தாடுலிங்க நாயனூர் கோயில்'' எனக் குறிக்கிறது.

சோழப் பேரரசர்களைப் பற்றி மிக விரிவான சரித்திரங்கள் திருவாலங்காட்டுச் சாசனங்களின் மூலமாக அறியலாம். தமிழ் நாட்டில் பல்லவர் ஆட்சி முடிந்து சோழர் ஆட்சி எப்போது ஆரம்பித்தது என்பதற்குச் சான்று இங்கேதான் கிடைக்கிறது. முதலாம் ஆதித்தியன் (கி. பி. 871-907) பல்லவ அபராஜிதனை வென்று தொண்டை நாட்டைச் சோழ நாட்டோடு சேர்த்துக் கொண்டது கி. பி. 890-ல் என்பது ஒரு சாசனத்தின் மூலம் தெரிகிறது. முதலாம் ராஜராஜனைப் பற்றி (கி. பி. 985-1016) இவன் பிறப்பு முதல் திக் விஜயம் வரை பல செய்திகளை இங்கு கண்டெடுத்த செப்பேட்டின் மூலமாகவே தெரியவந்தது. முதலாம் ராஜேந்திரனைக் கங்கைகொண்ட சோழன் என்கிறோம். இந்தக் கங்கைகொண்ட வரலாற்றை, திருவாலங்காட்டுச் செப்பேட்டைப் படித்த பிறகுதான் சரித்திர ஆசிரியர்கள் கண்டு பிடித்தார்கள்.

திருவாலங்காட்டு மூலவர் பெயர் தேவர்சிங்கன். அம்பாள் வண்டார்குழலி. இங்குள்ள நடராஜர்தான் உலகம் போற்றும் சிறந்த அழகியார். ஊர்த்துவ தாண்டவ விக்கிரகம் எட்டுக் கைகளுடன் ரத்ன சபையில் வீற்றிருக்கிறது. ஒரு காலத்தில் இந்தக் கோயிலில் பல நடராஜ விக்கிரகங்கள், செப்புப் படிமங்கள் இருந்தன. அவையெல்லாம் இப்போது லண்டன், பாரிஸ் போன்ற பிற ஊர்களின் பொருட்காட்சிச் சாலைகளை அலங்கரிக்கின்றன. அமெரிக்காவில் பாஸ்டன் நகரிலுள்ள பொருட் காட்சிச் சாலையிலுள்ள நடராஜ விக்கிரகம் திருவாலங்காட்டிலிருந்து சென்ற விக்கிரகம்.

இந்த ''எண்டோள்வீசும்பிரானின்'' விக்கிரகத்தை வார்ப்பதில் சரியான படிமம் ஏற்படவில்லை என்று ஒரு கர்ணபரம்பரைக் கதையுண்டு. சிற்பி இரண்டு தடவை கருக்கட்டி உலோகத்தை வார்க்கும் போது இரு தடவையும் சரியாக வார்க்கப்படவில்லையாம். மூன்றும் தரம் உலோகத்தை உருக்கி வார்க்க முற்பட்டபோது ஒரு துறவி அங்கு வந்து அந்த உருக்கிய உலோகத்தை எடுத்து அப்படியே விழுங்கி விட்டாராம். இதைக் கண்ட ஸ்தபதி மயங்கி விழுந்து பின் எழுந்திருந்த போது அசரீரியாக ஒரு குரல், ''இப்போதுதான் எனக்குத் திருப்தியாயிற்று. கருக்கூட்டை உடைத்துப் பார்'' என்றதாம். ஸ்தபதி உடைத்துப் பார்த்தபோது என்றுமில்லாத எழிலுடன் ஊர்த்துவ தாண்டவ விக்கிரகம் அமைந்திருந்ததைப் பார்த்து ஆச்சரியப்பட்டாராம்.

இந்த ஊர்த்துவ தாண்டவத்தைப் பற்றியும் சுவாரஸ்யமான ஒரு கதையுண்டு. திருவாலங்காட்டிலே நிம்பன் சும்பன் என்ற இரு அசுரர்கள் பல இன்னல் செய்து கொண்டிருப்பதைப் பார்வதி தேவி அழித்துவிட, இவர்கள் உடன் பிறந்தாளான விகுருதியின் மகன் இரத்தபீஜன் அம்பிகையை எதிர்த்தான். இந்த இரத்தபீஜனுக்கு ஒரு தவபலன் என்னவென்றால் ஒரு துளி இரத்தம் பூமியில் விழுந்தால் அவனைப் போல் ஒரு உருவம் தோன்றும். இப்படிப் பல இரத்தபீஜன்கள் உருவாகும் இயல்புடையவன். அம்பிகை உடனே இதற்குச் சரியான ஆசாமி காளிதேவிதான் என்று காளியைத் தோற்றுவித்து, இரத்தபீஜனை எதிர்க்கச் செய்தாள். காளி போர் செய்தபோது விழுந்த இரத்தம் முழுவதையும் ஒரு கபாலத்தில் ஏந்திக் குடித்தாள்; இரத்தபீஜன் அழிந்தான். ஆனால் இரத்தத்தைக் குடித்த காளிக்கு அசுரபலம் ஏற்பட்டு, இரத்த வெறியில் அல்லல்படுத்தி வந்தாள். தேவர்கள் இதைக்கண்டு முறையிடவும், பார்வதி தேவியே காளியை அணுகி, அவள் ஆட்டத்தை இறைவனின் ஆட்டத்தோடு போட்டியிடச் செய்தாள். காளியும் பெருமை கொண்டு இறைவனின் ஆட்டத்துக்கு இணையாக வெகுநேரம் ஆடினாள். நடராஜர் பார்த்தார், இந்தப் பெண்ணை மடக்க வேண்டுமென்று தீர்மானித்து, இடது காதிலிருந்த குண்டலத்தைக் கீழே விழச்செய்து, நடனத்தோடு நடனமாக அந்தக் குண்டலத்தை இடது கால் விரல்களால் எடுத்து மேலே கொண்டு போய்க் காதில் மாட்டினார்! இந்த ஊர்த்துவ தாண்டவ நிலையைக் காளி எதிர் பார்க்கவில்லை. அவளோ பெண். எப்படி இந்த விதமாகக் காலைத் தூக்க முடியும்? அவள் வெட்கித் தலை குனிந்தாள். ஆனால் இறைவன் கருணையோடு அவளுக்கு ஒரு வரமளித்தார். ''உனக்கு திருவாலங்காட்டில் முதல் பூசையும் விழாவும் உரிய

தாகும். பக்தர்கள் முதலில் உன்னை வணங்கிய பின்தான் மற்றைய தெய்வங்களை வணங்குவார்கள்'' என்று சொன்னார்.

திருவாலங்காடு பஞ்ச சபைகளிலொன்று. இங்குள்ளது இரத்தின சபை. இதன் விமானம் தாமிரத்தால் வேயப்பட்டது. இங்குதான் எண்தோள் வீசும் நடராஜர் அண்டமுற நிமிர்ந்தாடு கின்றார். உண்மையில் இந்த விக்கிரகத்தைப் பார்த்தால் எட்டுக் கரங்களும் நாலா திசைகளிலும் பறப்பது போன்ற காட்சியைத் தருகின்றன. ஊர்த்துவ தாண்டவ நிலையில் இடதுகால் அண்டத்தையே தொடுவது போன்று உயர்ந்து கொண்டே போகிறது. நடராஜ வடிவம் நிலையுள்ள வடிவமாயினும் அதன் அமைப்பில் யாவும் விரைவாக அசைந்து கொண்டிருப்பது போல் தோன்றும். நமது முன்னோர்கள் கண்ட கருத்தும் அந்தக் கருத்துக்குச் சிற்பிகள் கொடுத்த வடிவமும் நம்மைப் பரவசப் படுத்துகின்றன.

இரத்தின சபையின் பின்னல் நான்குபுறமும் கற்சுவர்களால் மூடப்பட்ட ஒரு சிறிய அறையிருக்கிறது. 1910-ம் ஆண்டில் நடந்த திருப்பணியின் போது இந்தச் சுவர்களை இடிக்க முயன்றார்கள். ஆனல் திடீரென்று பேதி வியாதி ஏற்பட்டு இருநூற்றுக்கு மேற்பட்ட மக்கள் இறந்தார்கள். உடனே பழையபடி சுவர்களை மூடிவிட்டார்கள். இதேமாதிரியான அறை தான் சிதம்பரம் கனகசபைக்குப் பின்னல் இருப்பதாக நம்பப் படுகிறது. 1885-ம் ஆண்டு இக்கோயிலில் பல ஆபரணங்கள் திருட்டுப் போயின. பின்னர் 1938-லும் ஒரு திருட்டு நடந்தது. பங்குனி மாதத்தில் இங்கு பிரமோற்சவம் நடைபெறும். இந்த உற்சவம் முடிந்தவுடன் காரைக்காலம்மையாருக்குத் தனியாக இரண்டு நாள் விழா நடக்கும். காளியம்மனுக்குத் தனியாக ஒரு கோயில் இருக்கிறது. ஆடி மாதத்தில் விழா நடக்கும். மார்கழி மாதம் திருவாதிரை உற்சவம் சிதம்பரத்தில் போல ஆருத்ரா தரிசனமாக இங்கு விசேஷமாக நடக்கும். பங்குனி உத்தர விழாவில் ஏழாம் நாள் பவளக்கால் கடைந்த தேரில் இறைவன் உலா வருவது மிகவும் சிறப்பாயிருக்கும். இந்தக் கோயிலிலிருந்த தேர் சில ஆண்டுகளுக்கு முன்னர் தீப்பிடித்து எரிந்துபோய் விட்டது. யாழ்ப்பாணத்து சங்கர சுப்பையர் என்பவர் இந்தக் கோயிலில் நிறைந்த பக்தியுள்ளவராகையால், தாமாகவே பொருள் சேர்த்துப் புதிய தேர் செய்து உபயமாகக் கொடுத் துள்ளார். அவர் இந்தத் தேர் விஷயமாகத் திருவாலங்காட்டில் நீண்ட நாள் தங்கியிருந்த சமயத்தில்தான் நம்முடன் பேசிக் கொண்டிருந்த சபாபதி தேசிகர் சச்சிதானந்த ராஜயோகி சுவாமிகள் என்ற சங்கர சுப்பையரிடம் முறைப்படி சங்கீதமும்

சமஸ்கிருதமும் கற்றுக் கொண்டார் என்று தெரிவித்தார். சங்கரசுப்பையரை நானும் நன்கறிவேனாகையால் அவரைப் பற்றிப் பேச்சு வந்தபோது, அவர் ஒரு காலத்தில் கதாகாலட்சேபம் செய்வதில் மிகவும் பிரசித்தி பெற்றிருந்தார் என்றும், சங்கீதத்தில் சில அருமையான வர்ணங்களும் கீர்த்தனைகளும் செய்திருக்கிறார் என்றும் சொன்னேன். அம்பாள் சஹஸ்ரநாமங்களைக் கொண்டே பல வர்ணங்கள் செய்திருக்கிறார் என்பதை அறிவேன். ஆனால் அவை இப்போது கிடைக்காமல் போய் விட்டன என்று சொன்னேன். சபாபதி தேசிகர் உடனே உள்ளே வீட்டுக்குள் சென்று திரும்பி வரும்போது ஒரு பெரிய நோட்டுப் புஸ்தகத்தைக் கொண்டுவந்து காட்டினார். என்ன அதிசயம்! வித்துவான் சங்கரசுப்பையரின் வர்ணங்களும் கீர்த்தனைகளும் ஸ்வரசாகித்தியங்களாக அந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றை அச்சிட்டு வெளிப்படுத்துமாறு தேசிகரைக் கேட்டுக் கொண்டேன்.

திருவாலங்காட்டை பழையனூர் திருவாலங்காடு என்றே அந்தக் காலத்தில் வழங்கினர்கள். பழையனூர் என்ற ஊர் திருவாலங்காட்டிலிருந்து முக்கால் மைல் தூரத்திலிருக்கிறது. இந்த ஊரோடு சம்பந்தப்பட்ட ஒரு பழைய வரலாறு சரித்திரங்களிலும் புராணங்களிலும் காணப்படுகிறது. பழையனூர் நீலியின் கதை அது.

காஞ்சீபுரத்திலிருந்த ஒரு வணிகன் தன் மனைவியிருக்க வேறொருத்தியுடன் தொடர்பு கொண்டிருந்தான். இதையறிந்த மனைவி கணவனைத் திருத்த முயன்றாள். தன் இன்ப வாழ்வுக்கு மனைவி இடையூறாக நிற்கிறாள் என்று வணிகன் அவளைக் கொன்று விட்டான். இந்தப் பழியின் பேராக அவள் ஆவி நீலி என்ற பேயாகி வணிகனை அல்லும் பகலும் துரத்தித் திரிந்தது. இதையறிந்த வணிகன் தன் கையில் ஒரு மந்திரவாளைக் கொண்டு திரிந்தான். நீலியோ எப்படியும் அவனைக் கொன்று பழிதீர்க்க வேண்டுமென்று அவன் போகுமிடமெல்லாம் பின்தொடர்ந்து சென்றது. ஒரு நாள் வணிகன் பழையனூருக்கு வந்தான். நீலியும் ஒரு பெண் வடிவம் கொண்டு, ஒரு கள்ளிக் கொம்பைக் குழந்தை வடிவாக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு வணிகனைப் பின்தொடர்ந்து வந்தது. இதையறிந்த வணிகன், பழையனூரில் வேளாளர் எழுபது பேர் கூடியிருந்த ஒரு சபையார் முன்போய், நீலி தன்னைக் கொல்ல வருகிறாள் என்றும், அதிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்றும் முறையிட்டான். ஆனால், நீலி வேறுவிதமாக முறையிட்டாள். "இவர் என் கணவன். இதோ என் கையிலிருப்பது எங்கள் குழந்தை. இவர் ஒரு தாசியின் வலையில் அகப்பட்டு

எங்களைக் கைவிட்டு ஓடிவந்து விட்டார். நீங்கள்தான் பெரிய மனசு வைத்து எங்களை ஒன்று சேர்த்து வைக்க வேண்டும்'' என்று நீலி புகார் செய்து கண்ணீர் விட்டு அழுதாள். வணிகன் மறுத்து, ''பெரியோர்களே! இது பெண்ணல்ல; நீலி என்ற பேய்'' என்று சொல்லவும், நீலி தன் கையிலிருந்த குழந்தையைக் கீழே விட அந்தக் குழந்தை ஓடிப்போய் அப்பா என்று சொல்லி வணிகனைக் கட்டிக் கொண்டது. இதைக் கண்ட வேளாளப் பெருமக்கள், உண்மை என்னவென்று தீர்மானிக்க முடியாமல், ''இன்றிரவு நீங்கள் இங்கேயே ஒன்றுகத் தங்கியிருங்கள். நாளை ஒரு முடிவு சொல்கிறோம்'' என்றார்கள். நீலிப் பேய் உடனே. ''ஐயா, இவர் கையில் ஒரு வாள் வைத்திருக்கிறார். இன்றிரவு இவருடன் தங்குவதற்குப் பயமாயிருக்கிறது. ஆகையால் அந்த வாளை அப்புறப்படுத்திவிடுங்கள்'' என்றது. வணிகன் அதற்கு மறுத்து, ''இந்த வாள்தான் என்னைக் காப்பாற்றுகிறது. இந்த ஒரு மந்திர வாள், என் கையை விட்டுப் போனால் இந்தப் பேய் என்னைக் கிழித்துக் கொன்றுவிடும்'' என்றான். வேளாளர் யோசித்துப் பார்த்தார்கள். ஒன்றுமறியாத குழந்தை நடந்து கொண்டதைப் பார்த்தால் இவன் தந்தையென்று தெரிகிறது. எதற்கும் பார்க்கலாம் என்று அவன் கையிலிருந்த வாளை அப்புறப் படுத்திவிட்டு, ''அப்பா, உனக்கு எவ்வித தீங்கும் நேராதவாறு காப்பாற்றுவது எங்கள் பொறுப்பு. அப்படி உனது உயிருக்குக் கேடு வருமானால் எங்கள் எழுபது பேர்களின் உயிரையும் அதற்கு ஈடாக்குவோம்'' என்று வாக்குறுதியளித்தனர். அன்றிரவு நீலி வணிகனைக் கிழித்துக் கொன்று தன் பழியைத் தீர்த்துவிட்டு மாயமாய் மறைந்தது. காலையில் இதையறிந்த வேளாளர் எழுபது பேரும் தாம் சொன்ன சொல்லைக் காப்பாற்றத் தீ வளர்த்து அதில் மூழ்கித் தற்கொலை செய்து கொண்டனர்.

இது ஒருகாலத்தில் உண்மையாக நடந்த வரலாறு என்று சொல்வார்கள். வேளாளரின் பெருமையைச் சொல்வதற்கு ஞானசம்பந்தர் முதற்கொண்டு பலர் இந்த வரலாற்றை உதாரணமாகச் சொல்வார்கள். பழையனூரில் நீலிகுளம் என்று ஒரு குளமிருக்கிறது. இதுதான் பழையனூர் வேளாளர் தீக்குளித்த இடம் என்று சொல்லப்படும். இந்தக் குளத்தின் அயலிலே சில காலமாக அழிந்து போய்க்கிடந்த ஒரு மேட்டில் ஒரு சிவலிங்கமும் நீண்ட கற்பாறைகளில் செதுக்கிய மனித உருவங்களும் கண்டெடுக்கப்பட்டன. இந்த உருவங்கள்தான், புடைச் சிற்பமாகச் செதுக்கப்பட்டவை, தீக்குளித்த எழுபது வேளாளர்களைக் குறிப்பன. மிகப் பழைய காலத்துச் சிற்பம் என்பது இவற்றைப் பார்த்தாலே தெரியும். பழையனூரிலுள்ள வேளாளர் பெருமக்கள் உடனே இவற்றைப் பாதுகாத்து, ஒரு மண்டபத்தின் சுவர்களில்

பதியவைத்து, எதிரிலே காட்சிநாதர் என்ற கோயிலில் சிவலிங்கத் தையும் பிரதிட்டை செய்து வைத்திருக்கிறார்கள்.

சபாபதி தேசிகர் எங்களைப் பழையனூருக்கு அழைத்துச் சென்று அங்குள்ள பழங்குடி முதலியார் சிலருக்கு அறிமுகப் படுத்தி வைத்தார். ருத்திராட்சமும் விபூதியும் தரிக்காதவர்களை அங்கே காணமுடியாது. பெரும்பாலானவர்களும் தமக்கில்லை யாளுலும் பிறருக்கு விருந்தளிப்பதில் பெருமை கொள்பவர்கள். அங்கே போய்விட்டு ஒரு மோராவது சாப்பிடாமல் கிராமத்தை விட்டு வெளியேற முடியாதென்பதை யறிந்தோம். இவர்கள் தமக்குள் சில கோத்திரங்களை வைத்திருக்கிறார்கள். கூழாண்டார் கோத்திரத்திலுள்ளவர்கள் பழையனூரில் வசிக்கிறார்கள். இந்தப் பெயருக்கும் ஒரு காரணமிருக்கிறது. இவர்கள் தமது வயலில் விளையும் நெல்லைக் கோயிலுக்கு உபயோகித்து, தாம் கேப்பைக் கூழ் சாப்பிட்ட காரணத்தால், கூழாண்டார் கோத்திரம் என்று பெயர் வந்தது.

நண்பர் சபாபதி தேசிகரின் சலியா உழைப்பும் கடமை யுணர்ச்சியும் திருவாலங்காட்டிலும் பழையனூரிலும் பல சிறந்த திருப்பணிகளுக்கு உதவியதென்பதைப் பழையனூர் மக்களிட மிருந்து அறிந்து மகிழ்ந்தோம். கரிய உடம்பும் நரைத்த முடியும் தாடியும், வெங்கலத்தில் தட்டியது போன்ற குரலும், தமிழ் இலக்கியம், சமயம், சரித்திரம் இவைகளில் ஆழ்ந்த புலமையும், பரம்பரை வேளாளப் பண்பாடும் நிறைந்த சபாபதி தேசிகரைத் திருவாலங்காட்டில் நாங்கள் சந்தித்தது ஒரு வரலாற்று நிகழ்ச்சி என்று பதிவு செய்துகொண்டு திருவாலங்காட்டிலிருந்து காஞ்சிக்கு வந்தோம்.

நமது பிரதம கதாநாயகன் சுந்தரமூர்த்தி நாயனாரை இந்தச் சமயத்தில் மறந்துவிடலாகாது. திருவாலங்காட்டு சுவாமியிடம் அவர் வரங்கேட்கவில்லை. போகும் வழியில் அயலிலே நின்றுதான் தொழுது பாடினார் என்று தெரிகிறது. ''சிவனே தேவர் சிங்கமே, பத்தா பத்தர் பலர் போற்றும் பரமா பழையனூர் மேய அத்தா ஆலங்காடா உன் அடியார்க்கடியனேனே!'' என்று பாடிவிட்டு அவர் காஞ்சிக்குப் போனார். நாங்களும் அவரைப் பின்தொடர்ந்து காஞ்சீபுரத்துக்குப் புறப்பட்டபோது, நண்பர் சிட்டி ஒரு யோசனை சொன்னார். ''இவ்வளவு தூரம் வந்தாகிவிட்டது. சிறிது வடக்கே காளஹஸ்திக்குப் போய்க் கண்ணப்ப நாயனாரையும் தரிசித்து விட்டுத் திருத்தணி வழியாகத் திரும்பி காஞ்சீபுரத்துக்கு வந்தா லென்ன? இல்லாவிட்டால், காளஹஸ்திக்குத் தனியாக ஒரு பிரயாணம் செய்ய வேண்டிவரும்'' என்றார். அந்த யோசனையை ஏற்றுக்கொண்டு காளஹஸ்தியை நோக்கிச் சென்றோம். ''கண்ணிடந்தப்பிய'' கண்ணப்ப நாயனாரின் புகழ்பெற்ற அந்த ஊரையும் கோயிலையும் தரிசிக்க ஆவலோடு விரைந்தோம்.

57. காளத்தி வேடன்

''கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க்கடியேன்'' என்று சுந்தர மூர்த்தி நாயனார் தமது திருத்தொண்டத் தொகையில் பாடி வைத்தார். ஆனால் கண்ணப்பர் எந்தக் கலையில் மலிந்தவர் என்று சுந்தரர் கருதினாரோ தெரியவில்லை. அவர் ஒரு வேடுவர். காட்டிலே மிருகங்களை வேட்டையாடிப் புசிப்பவர். எப்படியோ அவருக்கு ஒரு தெய்வாம்சம் ஏற்பட்டுத் தன் கண்ணையே குடைந்தெடுத்து இறைவனுக்கு அர்ப்பணம் செய்ய முன்வந்த காரணத்தால் சைவ உலகம் போற்றத்தக்க நாயனார் ஒருவரானார்.

பொத்தப்பி நாட்டில் உடுப்பூர் என்ற காட்டுப் பகுதியில் வாழ்ந்த வேடர்களுக்குத் தலைவன் நாகன் என்பவன். இவனுடைய மகன் திண்ணன் தனது குலத்தொழிலில் நல்ல பயிற்சிபெற்று பதினாறு வயதடைந்ததும் சம்பிரதாய முறைப்படி தெய்வத்துக்குப் பூசை போட்டு, முதல் வேட்டைக்காகக் காட்டுக்கு அனுப்பினார்கள். இவன்கூட காடன், நாணன் என்ற தோழர்களும் வேட்டைக்குச் சென்றார்கள். பல காடுகளில் புகுந்து வேட்டையாடிக் கொண்டு செல்கையில் ஓரிடத்தில் அடிபட்ட காட்டுப் பன்றி தப்பி ஓடியதைத் தொடர்ந்து இவர்களும் ஓடினார்கள். பெரிய வனவிலங்குகளை அடித்த இவர்கள் ஒரு காட்டுப் பன்றியைத் துரத்திக்கொண்டு ஓடியதில் ஏதோ முற்பிறவியில் செய்த நல்வினையென்றுதான் சொல்ல வேண்டும். காட்டுப் பன்றி வெகுதூரம் ஓடிப்போய் அதற்குமேல் செல்ல முடியாததால் ஒரு மரத்தடியில் களைத்து நின்றது. திண்ணன் அதனை அம்பெய்தி வீழ்த்தாமல் தைரியத்தோடு அதனருகில் சென்று வாளால் வெட்டிக் கொன்றான். உடன் வந்த நாணனும் காடனும் தமது தோழனின் அச்சமற்ற தைரியத்தை மெச்சினார்கள். இத்தனை தூரம் ஓடி வந்தவர்கள், தமக்குப் பசி ஏற்பட்டு விட்டதென்றும் இந்தப் பன்றியைத் தீயில் சுட்டுச் சாப்பிடலாமென்றும் யோசனை கூறினார்கள். திண்ணனும் அதற்கு உடன்பட்டு சென்றான். தாகத்துக்குத் தண்ணீர் எங்கே கிடைக்கும் என்று கேட்டபோது, இந்தக் காட்டுப் பிரதேச

மெல்லாம் நன்கறிந்த நாணன், ''இதோ இந்தத் தேக்குமரச் சோலையைத் தாண்டினால் ஒரு மலை தெரியும். அதன் பக்கத்தில் பொன்முகலியாறு ஓடும்'' என்றான். சரி என்று சொல்லி மூவரும் அடிபட்ட பன்றியைக் கொண்டு சென்றார்கள். போகும்போது திருக்காளத்தி மலையைக் கண்டார்கள். திண்ணன் மலையைக் கண்டு அதில் எதிர்பாராத ஒரு கவர்ச்சி ஏற்படத் தோழன் நாணனைப் பார்த்து, ''நாண! இந்த மலையில் நாம் ஏறிப் பார்த்தா லென்ன?'' என்று கேட்டான். நாணன், ''நன்றாக ஏறிப் பார்க்கலாம். நாங்கள் அடிக்கடி ஏறியிருக்கிறோம். அங்கே குடுமித் தேவர் இருப்பார். நாமும் சாமி கும்பிடலாம்'' என்றான். ''அந்தக் குடுமித் தேவரைப் பார்க்க வேண்டும், போகலாமா?'' என்று கேட்டுக்கொண்டு போகையில் பொன்முகலி ஆற்றங்கரைக்கு வந்துவிட்டார்கள். அங்கே காடனை இருத்தி, கொண்டுவந்த பன்றியைச் சுட்டு வைக்கச் சொல்லிவிட்டுத் திண்ணனும் நாணனும் மலையில் ஏறினார்கள். அங்கே இவர்கள் குடுமித் தேவர் என்று சொல்லிய திருக்காளத்திநாதரின் திருவுருவம் இருந்தது. முன்னினைப் பயனால் திண்ணனின் உள்ளம் மலர்ந்தது. அன்பே உருவமாய் மாறி, ஒடிப்போய்க் காளத்தி நாதரின் வடிவத்தைக் கட்டிக்கொண்டு, ''ஐயோ பாவம்! கொடிய விலங்குகள் நடமாடும் இந்தக் காட்டில் இவர் தனியாக இருக்கிறாரே!'' என்று சொல்லி விழுந்து வணங்கினார். பின்னர் அந்தத் திருவுருவத்தில் பச்சிலை பூ முதலியவை அணிந்திருக்கக் கண்டு இது யார் வேலை என்று நாணனிடம் கேட்டார் திண்ணனார். நாணன், ''இது நெடுநாள் நடக்கும் காட்சி. இங்கே ஒரு பிராமணர் தினந்தோறும் வந்து இந்தக் குடுமித் தேவருக்குத் தண்ணீர் கொண்டு குளிப்பாட்டி, பச்சிலையும் பூவும் இட்டுச் செல்வார்'' என்றான். இதைக் கேட்ட திண்ணனார், ''ஓகோ, இவருக்கு அது பிடிக்குமாக்கும். ஆனால் யார் இவருக்கு உண்பதற்கு இறைச்சி கொடுப்பார்கள்? சரி, நாமே போய் இறைச்சி கொண்டுவந்து கொடுத்து, இவரைத் தனியேவிடாமல் உதவிக்கு இருப்போம்'' என்று சொல்லிக்கொண்டே நாணனை அழைத்துக்கொண்டு காடனை உட்காரச் சொல்லியிருந்த இடத்துக்கு வந்தார்.

காடன் ஏற்கெனவே மரக்கட்டையைக் கடைந்து தீமூட்டிப் பன்றியிறைச்சியை வெட்டி வைத்திருக்கிறேன், எப்படிச் சுட வேண்டுமோ சுட்டுக் கொள்ளலாம் என்று சொன்னவன், இவ்வளவு தாமதமாக வந்த காரணம் என்னவென்று கேட்டான். அதற்கு நாணன், ''இவன் மலையிலுள்ள தேவரைப் பற்றிக் கொண்டு கிடந்தான். இங்கேயும் அந்தத் தேவருக்கு இறைச்சி

கொண்டு போகத்தான் வந்திருக்கிறான்'' என்றான். திண்ணனார் எதையும் காதில் போட்டுக்கொள்ளாமல், கருமே கண்ணாயினார்! தானாகவே பன்றி இறைச்சித் துண்டுகளைத் தெரிந்தெடுத்தார். நல்ல பக்குவமுற்றவற்றை நெருப்பில் வாட்டி எடுத்து, ருசி யுள்ளனவா என்று வாயில் கடித்துப் பார்த்து நல்லனவற்றை மாத்திரம் ஒரு அம்பில் கோர்த்தார். தேக்கிலையில் சிலவற்றைச் சுருட்டிக் கொண்டார். நல்ல புஷ்பங்களாகப் பார்த்துத் தலையிலும் காதிலும் சொருகிக் கொண்டார். இந்தக் காட்சியைக் கண்டதும் நாணனும் காடனும் திண்ணனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்று நினைத்து உடனே போய் அவன் பெற்றோரை அழைத்து வர ஓடினர். திண்ணனார் சிறிதும் கவலை கொள்ளாமல் பொன்முகலியாற்றில் போய், திருக்காளத்தி நாதனுக்கு நன்னீராட்டத் தண்ணீர் எடுக்க முயன்றார். பாத்திரம் இருந்தால்தானே? மனம் தளராமல் தமது வாயில் கொள்ளு மட்டும் தண்ணீரை நிரப்பிக் கொண்டு மலையில் ஏறிச் சென்று காளத்திநாதர் திருவுருவத்திலிருந்த பழைய பூக்களையும் இலைகளையும் களைந்தெறிய, இரண்டு கைகளிலும் பொருள்கள் இருந்ததால், செருப்பணிந்த தமது காலைத் தூக்கிச் செருப்பாலேயே அவற்றை அகற்றினார். பின்னர், வாயிலிருந்த நீரை உமிழ்ந்து கொப்பளித்து, இறைவனுக்கு அபிஷேகம் செய்தார்! கையிலிருந்த இறைச்சித் துண்டுகளை வைத்து நைவேத்தியம் பண்ணினார். தமது தலையிலும் காதிலும் சொருகியிருந்த புஷ்பங்களை எடுத்துச் சாத்தினார்! ''சுவாமி! அருமையான இறைச்சி. என் கையாலேயே பக்குவம் பண்ணி, நானே கடித்து ருசி பார்த்துக் கொண்டு வந்திருக்கிறேன். சாப்பிடுங்கள்'' என்று குழந்தையைப் போல் உபசரித்தார்.

பொழுது சாய்ந்து இருட்டியது. திண்ணனாருக்கு ஒரு சந்தேகம். இறைவன் தனியே இருக்கிறார். காட்டு மிருகங்கள் வந்து தொந்தரவு கொடுத்தால் என்ன செய்வதென்று தாமே வில்லும் கையுமாக அங்கே இரவு முழுவதும் காவல் காத்து நின்றார்.

மறுநாட்காலை தமது அன்புக்குரியவருக்கு இறைச்சி தேடுவ தற்காகப் புறப்பட்டுச் சென்றார். அவர் போன பின்னர் வழக்க மாகத் திருக்காளத்தி நாதருக்குப் பூசை செய்யும் சிவாகமப் பிராமணர் சிவகோசரி முனிவர் என்பவர் வந்து இறைவன் திருவுரு வத்தையும் அங்கு படைக்கப்பட்டிருந்த மாமிசத்தையும் பார்த்ததும் அவருக்கு ஆச்சரியமும் கோபமும் ஒருங்கே பிறந்தன. ''யார் இந்தக் கோலத்தைச் செய்தவர்கள்? கொலைக்கஞ்சாத வேடர்களே இந்த மாதிரி வெறுக்கத்தக்க காரியத்தைச் செய்திருக்

வேண்டும்'' என்று சிந்தித்தவர் உடனே எல்லாவற்றையும் கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்துவிட்டு, ஆகம விதிப்படி பிராயச்சித்தச் சடங்கும் செய்து, தாம் கொண்டு வந்த நன்னீரால் அபிஷேகம் செய்து, புஷ்பம் சாத்தி அருச்சனை செய்து விட்டுச் சென்றார். பகலில் வேட்டையாடி இறைச்சியைச் சுட்டுச் சுவைபார்த்த திண்ணனார் அளவிலா அன்புடன் காளத்தி நாதரிடம் வந்தார். பழையபடி இருந்த நிர்மாலியங்களைக் காலால் களைந்து, வாயிலிருந்து நீர் உமிழ்ந்து அபிஷேகம் செய்து, தலையில் சூடிய பூக்களை எடுத்து சுவாமிக்குச் சாத்தி, தாம் கொண்டுவந்த இறைச்சியை முன்படைத்து, ''நேற்றுக் கொண்டு வந்ததைவிட இது மிகவும் ருசியானது, தேனில் தோய்த்து வைத்திருக்கிறேன். தித்திக்கும்'' என்று சொல்லிப் படைத்து மகிழ்ந்தார்.

நாணனும் காடனும் தெரிவித்த செய்தியைக் கேட்டு திண்ணனின் தாயும் தந்தையும் வந்து பார்த்துத் தமது புதல்வனின் போக்கைக் கண்டு என்ன செய்வதென்றறியாது பூசை போட வேண்டுமென்று சொல்லித் திரும்பிவிட்டனர்.

இவ்வாறு பகலில் வேட்டையாடி இறைவனுக்குப் படைத்து இரவில் காவல் காக்கும் திண்ணனார் செயலை அறியாத சிவகோசரி முனிவர், தாம் பூசை செய்ய வரும்போதெல்லாம் இறைச்சித் துண்டுகள் சுவாமியின் முன்னால் சிதறிக் கிடப்பதைக் கண்டு அளவற்ற கோபம் கொண்டார். இந்தக் கொடுமையைக் காளத்தி நாதன் தான் அகற்ற வேண்டுமென்று பிரார்த்தித்தார்.

அன்றிரவு சிவகோசரியார் கனவிலே இறைவன் தோன்றி, ''அவனை வேடனென்று நீ நினையாதே. அவன் வடிவமெல்லாம் நம்மிடத்தில் கொண்ட அன்பேயுருவாயிருக்கிறது. அவன் அறிவு முழுவதும் நம்மையறியும் அறிவேயாம். அவன் செய்யும் செயல் களெல்லாம் நமக்கு இனியவை. இது அவனது நிலை. நாளையதினம் நீ என் பின்னால் மறைந்திருந்து பார். அவன் என்மேல் வைத்தி ருக்கும் அன்பின் பெருக்கைக் காண்பாய்'' என்று சொல்லி மறைந்தார்.

மறுநாட்காலை வழக்கம் போல் திண்ணனார் வேட்டைக்குப் போய்விட்டார். சிவகோசரி முனிவர் என்றுமில்லாத பக்திப் பரவசத்துடன் வந்து இறைச்சியையும் மற்றும் பொருள்களையும் அகற்றிவிட்டு தமது பூசையை முடித்து ஓரிடத்தில் மறைந்தி ருந்தார். திண்ணனார் ஆடிப்பாடிக் கொண்டு வந்து, ''இத்தனை நேரம் தாமதமாகிவிட்டதா? இதோ வந்துவிட்டேன்'' என்று அன்புடன் விசாரித்துக்கொண்டே காளத்தியப்பர் திருவுருவத்தின்

முன்னர் வந்தார். அவர் கண்ட காட்சி அவரைப் பதைபதைக்க வைத்தது. இறைவனின் வலது கண்ணிலிருந்து இரத்தம் வடிந்தது. துடித்துப் பதைத்த திண்ணனார் தாம் கொண்டு வந்திருந்த நைவேத்தியப் பொருள்களை அப்படியப்படியே போட்டார். இரத்தத்தைத் துடைத்தார். ஆனால் அது நிற்கவில்லை. ''இந்தப் பொல்லாத காரியத்தை யார் செய்தார்கள்?'' என்று ஆத்திரத்துடன் வில்லிலே அம்பை மாட்டிக்கொண்டு நாலாபக்கமும் ஓடினார். பின்னர் எங்கிருந்தோ பச்சிலை மூலிகைகளைக் கொண்டு வந்து கசக்கிப் பிழிந்து இரத்தம் வடியும் கண்ணில் அப்பினார். அதற்கும் கேட்கவில்லையென்று கண்டவுடன் அவருக்கு ஒரு வழி தோன்றியது. ''ஊனுக்கு ஊனே உற்ற நோய் தீர்ப்பது'' என்ற பழமொழி ஞாபகத்துக்கு வரவே, மகிழ்ச்சியுடன் உட்கார்ந்து தமது வலக்கண்ணை அம்பினால் தோண்டி எடுத்து இரத்தம் பாயும் இறைவன் கண்மீது அப்பினார். குருதி வராமல் நின்றதைக் கண்டார்! குதித்தார்! கூத்தாடினார். தாம் செய்த காரியத்தின் வெற்றியைக் கண்டு ஆனந்தம் கொண்டார். ஆனால், இறைவன் வேடிக்கை பார்ப்பதில் சமர்த்தரல்லவா? ஒரு கண்ணில் இரத்தம் வடிந்தது நின்றுபோக மறுகண்ணிலும் இரத்தம் பாய்ந்தது! இதைக் கண்ட திண்ணனாருக்குக் கவலை தாங்க முடியவில்லை. ''ஐயோ, பாவியேன் என் செய்வேன். எனது நாயகனுக்கு ஒரு கண்ணில் இரத்தம் கசிந்ததை நிறுத்தினேன். மற்றைக் கண்ணிலும் வடிகிறதே! எனக்கு இப்போது மருந்து என்ன என்று தெரியும். இன்னொரு கண்ணும் என்னிடமிருக்கிறதே! கவலையில்லை'' என்று சொல்லிக்கொண்டே தமது இடக்கண்ணைப் பெயர்த்தெடுக்க அம்பைக்கொண்டு போனார். உடனே ஒரு சந்தேகம். தமது இருவிழிகளும் போய்விட்டால், இறைவனுடைய ஊனமுற்ற கண்ணை எப்படிப் பார்ப்பது? அதற்கும் ஒரு வழி செய்தார். தமது இடது காலைத் தூக்கி இறைவனின் கண்ணில் வைத்துக் கொண்டு தமது கண்ணைத் தோண்ட அம்பு நுனியைப் பொருத்தினார். இனியும் தனது பக்தனைச் சோதிக்கலாகாது என்று திருக்காளத்திநாதன், ''நில்லு கண்ணப்ப, நில்லு கண்ணப்ப!'' என்ற அமுதவாக்குடன் கண்ணிடந்தப்பிய திண்ணனாரின் கையை எட்டிப்பிடித்துக் கொண்டார். ''அன்பனே, மாறில்லாய்! என்றென்றும் நீ என் வலத்தில் நிற்க'' என்றருளினார். இவற்றையெல்லாம் பார்த்து நின்ற சிவகோசரி முனிவர் ஓடோடியும் வந்து கண்ணப்பராகிய திண்ணனாரின் காலில் விழுந்து வணங்கினார். காட்டுவேடர் திண்ணனார் அறுபத்து மூவருள் ஒருவராய் நாயனார் பதவிபெற்றார்.

* * *

காளஹஸ்தி கோயிலில் இறைவன் பக்கத்தில்தான் கண்ணப்ப நாயனார் உருவமும் வைக்கப்பட்டிருக்கிறது. சீகாளத்தி என்ற பெயரில், சீ என்ற சில்லி, காளம் என்ற பாம்பு, அத்தி என்ற யானை என்று வியாக்கியானம் செய்து, சிலந்தியும் பாம்பும் யானையும் பூசித்து முத்தியடைந்தன என்று கொண்டு அதனால்தான் இந்த ஸ்தலத்துக்கு சீகாளத்தி என்ற பெயர் வந்தாக ஒரு விளக்கம் கொடுக்கிறார்கள். இதற்கு, உள்ளே லிங்கத்தின் பின்னால் ஒரு பாம்பு படம் எடுப்பதாயும், பக்கத்தில் சிலந்தி இருப்பதாயும் காண்பிக்கப்பட்டுள்ளதோடு, லிங்கத்தின் மேல் பகுதியும் இரண்டு கொம்புகள் முளைத்திருப்பது போல் காணப்படுகிறது.

உத்தர வாஹனியாக வடக்கு நோக்கிப் பாயும் புண்ணிய நதியான பொன்முகலி அல்லது சுவர்ணமுகி, கோயிலுக்கு மேற்கிலே ஓடுகிறது. பஞ்சலிங்க க்ஷேத்திரங்களுள் காளஹஸ்தி வாயுலிங்க க்ஷேத்திரம் என்று சொல்வார்கள். கர்ப்பகிருகத்துள்ளேயுள்ள ஒரு விளக்கின் சுடர் எப்போதும் அங்கு உலாவும் காற்றில் அசைந்தசைந்து எரிவது வாயுலிங்க க்ஷேத்திரமென்பதற்கு அடையாளம் என்பர்.

காளஹஸ்தியுடன் பாம்பு தொடர்புள்ள காரணத்தினால் ராகு பகவானுக்குரிய க்ஷேத்திரம் என்ற நம்பிக்கையில் பலர் ராகுவுக்கு பிரீதி செய்ய இங்கு வருவார்கள். ராகு கால வேளையில் இங்கு பிராகாரத்தில் பிரதட்சணம் செய்தால் பீடைகள் நீங்கும் என்ற நம்பிக்கையுண்டு. அர்ச்சனைக்கு தும்பைப் பூமாலை சாத்துவார்கள்.

சைவ உலகிலே கண்ணப்ப நாயனாருக்கு ஒரு சிறப்பான இடமுண்டு. அறுபத்து மூவரில் பலர், பல இனத்தவர்கள், பல சமூக நிலையிலுள்ளவர்கள் வரலாறுகளிருக்க ஒரு காட்டு வேடனின் வாழ்க்கையில் பழுதற்ற அன்பினால் பெற்ற கதியே மற்றவர்களெல்லாரிலும் சிறந்தது என்று சொல்ல வேண்டும்.

அறுபத்து மூவரில் நாம் இதுவரையில் எத்தனை பேருடைய வரலாற்றை அவரவர் ஊரிலே போய்ப் பார்த்து வந்தோம் என்று இப்போது கணக்கிட்டுப் பார்ப்போம். ஐயடிகள் காடவர்கோன், காடவர்கோன் கழற்சிங்கன், திருக்குறிப்புத் தொண்டர், சாக்கியர், சேரமான் பெருமாள் ஆகிய ஐந்து பேரைத் தவிர மற்றவர்களை நாம் தரிசித்துவிட்டோம். இந்த ஐவரில் சேரமான் பெருமாள் தவிர மற்றைய நால்வரும் காஞ்சீபுரத்தைச் சேர்ந்த

வர்கள். சேரமான் பெருமாள் கேரள நாட்டிலுள்ள கொடுங்களூர் என்ற திருவஞ்சைக்களத்தைச் சேர்ந்தவர். ஆகையால், இப்போது நாம் சுந்தரமூர்த்தியின் வரலாற்றோடு சென்று காஞ்சியில் மற்றைய நால்வரின் வரலாற்றையும் அறிந்து கொண்டு மீண்டும் சுந்தரமூர்த்தியைத் தொடருவோம். அவருடைய பிற்கால வாழ்க்கையைப் பார்த்துக்கொண்டு திருவஞ்சைக்களத்துக்கு ஒரு தனி யாத்திரை போகலாம். இப்போது காளஹஸ்தியிலிருந்து புறப்பட்ட நாங்கள் ரேணிகுண்டா வழியாகத் திருத்தணிக்கு வந்து முருகப் பெருமானையும் சேவித்துவிட்டு அரக்கோணம் மார்க்கமாகக் காஞ்சிபுரத்தையடைந்தோம்.

58. கற்றூர் தொழும் காஞ்சி

திருவாலங்காட்டிலிருந்து காஞ்சிக்கு வந்த சுந்தரர் முதலில் காமகோட்டத்துக் காமாக்ஷியம்மனே வழிபட்டார். பின்னர் அங்கிருந்து ஏகாம்பரேஸ்வரர் கோயிலையடைந்து கண்ணீருகுத்து வழிபட்டார். எத்தனே நாட்கள்தான் அவர் தோழர் சோதிப் பார்? இங்கே விண்ணப்பிக்கவும் இடக்கண்ணில் பார்வையை அளித்தார். அளவற்ற ஆனந்தத்தோடு சுந்தரர் ஒரு பதிகம் பாடினர். ''காணக்கண் அடியேன் பெற்றவாறே'' என்று தாம் கண்பெற்ற சம்பவத்தை ஒவ்வொரு பாட்டிலும் வைத்துப் பாடினர். இதிலே ஒரு பாட்டு ஏகாம்பரநாதர் கோயிலின் சரித்திரத்திலேயே ஒரு முக்கிய சம்பவத்தை விளக்குகிறது:

எள்கலின்றி இமையவர்கோனே ஈசனேவழிபாடு செய்வாள்போல்
உள்ளத்துள்கி யுகந்துமைநங்கை வழிபடச்சென்று நின்றவாகண்டு
வெள்ளங்காட்டி வெருட்டிடவஞ்சி வெருவியோடித் தழுவ
வெளிப்பட்ட
கள்ளக்கம்பனே யெங்கள்பிரானேக் காணக்கண்ணடியேன்
பெற்றவாறே.

இது ஒரு பெரிய கதை. உமாதேவியானவர் ஒருநாள் திருக்கயிலாயத்தில் இறைவனுடன் வீற்றிருக்கும்போது அவர் கண்களிலொன்றை விளையாட்டாகப் பொத்தினாளாம். சிவனுக்கு சூரியன் சந்திரன் அக்னி என்ற மூன்று கண்கள். இதில் சூரியக் கண்ணே உமையவள் பொத்தினவுடன் பூலோகம் முழுவதும் இருளடைந்துவிட்டது. ரிஷிகள் போய் இறைவனிடம் முறையிட்டதும், தனது பத்தினி என்றும் பாராமல் சிவன் உமாதேவியைப் பூலோகத்தில் செல்லுமாறு சாபமிட்டார். உமையம்மை இங்கு வந்து சும்பாநதிக்கரையில் மணலேயே லிங்கமாக வைத்துப் பூசை பண்ணித் தவமிருக்கும்போது சிவனுக்கும் ஒரு விளையாட்டுணர்ச்சி ஏற்பட்டு, வெள்ளம் பெருகச் செய்தார். அந்த வெள்ளத்தில் மணல் லிங்கம் கரைந்துவிடப் போகிறதே என்று அஞ்சிய உமாதேவியார் செய்வதின்னதென்

ற்றியாது லிங்கத்தையே கட்டிக்கொண்டார். உடனே சிவன் வெளிப்பட்டு உமையை ஏற்றுக் கொண்டார். ஆனல் உமை கட்டித் தழுவியதில் அவர் உடம்பிலே முலேச்சுவடும் வளேயல்களின் சுவடும் பட்ட காயம் இன்னும் இருக்கிறதாம்! அதனல் இங்குள்ள மூலவருக்கு 'தழுவக் குழைந்தநாதர்' என்ற ஒரு பெயருண்டு. கம்பாநதிக்கரையிலிருப்பதால் ஏகம்பம் என்று ஒரு பெயர். ஒரேயொரு மாமரத்தடியில் இருப்பதால் ஏகாம்பரம் என்று வேறெரு பெயருண்டு. இங்குள்ள மாமரம் நான்கு வேதங்கள் ஒன்று சேர்ந்த மரம் என்று நம்புகின்றனர். இதன் காய்கள் தித்திப்பு, துவர்ப்பு, புளிப்பு, எரிப்பு என்ற நால்வகைச் சுவையையும் கொண்டவை என்று சொல்வார்கள். பங்குனி உத்திர விழாவிலே திருக்கல்யாணம் நடக்கும். மணலே லிங்கமாக வைத்துப் பூசை பண்ணினதால் இந்தத் தலம் பிருதுவித் தலம் என்று கொள்ளப்படுகிறது. நாம் மூன்பு காளஹஸ்தியை வாயுஸ்தலம் என்று கண்டோம். திருவானேக்கா அப்பு ஸ்தலம், சிதம்பரம் ஆகாய லிங்கமுள்ளதால் ஆகாசஸ்தலம், திருவண்ணுமலே தேயு என்ற அக்னி ஸ்தலம். திருவேகம்பத்தின் தென்பகுதியில் ஆயிரக்கால் மண்டபத்தில் விகட சக்கர விநாயகர் எழுந்தருளியிருக்கிறர்.

ஏகாம்பரநாதர் சந்நிதிக்கு ஈசானபாகத்தில் மகாவிஷ்ணுவும் வந்து எழுந்தருளியிருப்பது சிவவிஷ்ணு ஐக்கியத்தில் ஒரு புதுமை என்று சொல்ல வேண்டும். இந்தப் பெருமாளுக்கு 'நிலாத் துண்டப் பெருமாள்' என்று பெயர். திருப்பாற்கடலில் அமிர்தம் கடைந்த சமயத்தில் ஆலகால விஷத்தின் துளிகள் மகாவிஷ்ணு மேல் பட்டதால் அவர் உடலில் நீலநிறம் உண்டாயிற்றும். உடனே இறைவன் விஷ்ணுவிடம், காஞ்சீபுரத்தில் பிருதுவி லிங்கத்தை வழிபட்டால் அதன் திருமுடி மேலிருக்கும் சந்திர கலேபட்டு உடலின் ஊறு தீர்க்கப்படும் என்று சொல்லவும் அப்படியே மகாவிஷ்ணு இங்கு வந்து வழிப்பட்டார் என்றும், சந்திரகலே பட்டதால் நிலாத்துண்டப்பெருமாள் என்ற பெயரைப் பெற்ருர் என்றும் இங்குள்ள குருக்கள் விளக்கினர். காஞ்சீபுரத்திலே வைஷ்ணவர்களுக்கு பதினெட்டு திவ்ய க்ஷேத்திரங்களுண்டு. இவை முக்கியமான சிவ ஸ்தலங்களிலேயே அடங்கியுள்ளன. இவற்றிலொன்று நிலாத்துண்டப் பெருமாள் உறையும் திருக்கோயில். இது திருமங்கையாழ்வாரின் பாசுரம் பெற்றது. வீர வைஷ்ணவர்கள் காஞ்சி வரதராஜப் பெருமாளேத் தரிசித்தபின் இங்கு வந்து நிலாத்துண்டப் பெருமாளேயும் தரிசிப்பார்கள். ஆனல் அப்படி ஏகாம்பரநாதர் கோயிலுக்குள் நுழையும்போதும் திரும்பிப் போகும்போதும்

மூலஸ்தானத்திலிருக்கும் சிவலிங்கத்தைப் பார்க்கக்கூடாதென்று வேறுபக்கம் முகத்தைத் திருப்பி வைத்துக் கொள்வார்களாம்!

இன்னுமொரு வைஷ்ணவ சம்பிரதாயம் இங்கேயுண்டு. ருத்ரபாதுகை என்று சிவனுடைய பாதச் சுவடுகளை நம் தலையில் வைத்து ஆசீர்வதிப்பது. வைஷ்ணவக் கோயில்களில் சடாரி வைப்பது போல இங்கே ருத்ரபாதுகையைச் சூட்டுவது ஒரு மரபு. இது வேறெந்தக் கோயிலிலும் காண முடியாது. காஞ்சீபுரத்தில் மாத்திரம்தான் இந்த ஐதிகம். உமாதேவியார் தம்து லிங்க வழிபாட்டுக்குமுன் ருத்ரபாதுகை மூலம் தீக்ஷை பெற்றார் என்ற காரணத்தால் இது அனுஷ்டிக்கப்படுகிறது. ருத்ரபாதுகை தமிழிலே சிவபாதம்.

ஏகாம்பரநாதர் கோயிலுக்குப் பின்புறமாகவுள்ள மாமரம் மிகப் பழைய காலத்து மரம். இம்மரத்தினடியில் வீற்றிருக்கும் சோமாஸ்கந்த மூர்த்தமும் பிரசித்தி பெற்றது. இங்குதான் கச்சியப்ப சிவாசாரியார் கந்த புராணத்தைப் பாடி, ''காஞ்சி மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி'' என்று காப்புச் செய்யுள் எழுதினார். இந்தக் கோயிலுக்கு பல்லவர், சோழர், விஜயநகர அரசர்கள் அவ்வக் காலங்களில் திருப்பணிகள் செய்திருக்கிறார்கள்.

காஞ்சியில் ஒரு காலத்தில் ஆயிரத்தெட்டு சிவஸ்தலங்களும் நூற்றெட்டு வைஷ்ணவ ஸ்தலங்களும் இருந்தன என்று புராணங்கள் கூறுகின்றன. ஆனால் இன்று சுமார் நூறு சிவாலயங்களிருக்கின்றன. எந்த சிவாலயத்திலும் தனியாக அம்மன் சந்நிதி கிடையாது. எல்லாச் சக்திகளும் ஒன்றுயடங்கிய மகாசக்திதான் காமாக்ஷியம்மன். ஓங்கார வடிவத்திலமைந்த உட்பிரகாரத்தின் மத்தியில் பத்மாசனமிட்டு எழிலுடன் வீற்றிருக்கும் இந்தக் காமாக்ஷி எந்தக் காலத்தில் காஞ்சியை ஆட்சி புரியத் தொடங்கினாள் என்று சொல்ல முடியாது. ஆனால் காஞ்சியில் ஒரு காலத்தில் மஹாயான பௌத்தம் வழியாக தாந்திரிகமும் சாக்தமும் வளர்ந்திருந்து, அதனைத் தூய்மைப்படுத்திய பெருமை கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆதிசங்கரரைச் சேரும். ஆதியில் காளிமூர்த்தத்தில் வணங்கப்பட்ட துர்க்கை, ஊரிலே பயங்கரமான இன்னல்களைக் கொடுத்து வந்தாள் என்றும், சங்கரரே சாந்தப்படுத்தி ஒரு யந்திரத்தில் ஆராதனைத்து அம்மன் சந்நிதியில் புதைத்து வைத்தபின் காளியின் உக்கிரம் குறைந்ததென்றும் சொல்லப்படுகிறது. இப்பொழுதும் அம்பிகைக்குச் செய்யும் அருச்சனை அபிஷேகமெல்லாம் இந்த

யந்திரத்துக்கே நடைபெறுவதைப் பார்க்கலாம். உட்பிராகாரத்தில் ஓரிடத்தில் ஆதி சங்கரர் சந்நிதியிருக்கிறது. காமாக்ஷி அம்மன் புறப்பாடு நடக்கும்போது சங்கர சந்நிதியில் சிறிது நின்று செல்வது வழக்கம். சங்கரரின் உத்தரவு கேட்டுத்தான் அம்மன் ஊருக்குள் புறப்படலாமென்பது ஐதிகம். கர்ண பரம்பரைக் கதை எப்படியிருந்தாலும் ஆதிசங்கரர் சக்தி வழிபாட்டுக்காரர் என்பது உறுதி. வெகுகாலத்துக்கு முன் பிருந்தே காஞ்சீபுரத்தின் சமய வாழ்வும் வரலாறும் காப்பாற்றப் பட்டு வந்த வகையில் சங்கரரின் வரலாறும் ஓரளவில் காப்பாற்றப் பட்டு இன்று நமக்குக் கிடைக்கிறது.

காமாக்ஷியம்மன் கோயிலில் ஒருகாலத்தில் பங்காரு காமாக்ஷி அல்லது சொர்ண காமாக்ஷி என்ற தங்க விக்கிரகம் இருந்த தென்றும் அதை 1767-ல் ஹைதர் அலி கைப்பற்ற முயன்றான் என்றும் சொல்லப்படுகிறது. அதையறிந்த நாயக்க அரசர்கள் தந்திரமாக எடுத்துச் சென்று தஞ்சாவூரில் ஒரு காமாக்ஷியம்மன் கோயில் கட்டி அதில் பிரதிட்டை செய்து வைத்துவிட்டார்கள்.

ஆதிசங்கரர் பாரத நாட்டின் நான்கு கேந்திர ஸ்தானங்களில் நான்கு பீடங்கள் ஸ்தாபித்தபோது காஞ்சீபுரத்தில் காமகோடி பீடம் ஏற்படுத்தினார். கி. பி. 1686வரை இது விஷ்ணு காஞ்சியில் வரதராஜப் பெருமாள் கோயிலுக்கு மேற்கிலிருந்தது. பின் ஒரு காலத்தில் சிவகாஞ்சியில் புதிதாக ஒரு மடம் கட்டினார்கள். 1743-ல் இந்த மடம் கும்பகோணத்துக்கு மாற்றப்பட்டது.

காஞ்சீபுரத்தில் தேவாரம் பெற்ற திருப்பதிகள் திருவேகம்பம் என்ற ஏகாம்பரநாதர் கோயில், திருமேற்றளி, திருஅநேகதங் காவதம், திருவோணகாந்தன்தளி, கச்சிநெறிக்காரைக்காடு. தளி என்பது கோயில். மேற்றளி என்பது மேற்கேயுள்ள கோயில் என்று பொருள். இது பிள்ளையார்பாளையம் என்ற பகுதியில் இருக்கிறது. அநேகதங்காவதம் என்பது கைலாசநாதர் கோயிலுக்குச் சமீபமாகவுள்ளது. ஓணகாந்தன் தளி என்பது ஏகாம்பரநாதர் கோயில் சர்வதீர்த்தக் கரைக்குக் கிழக்கேயுள்ளது. கச்சிநெறிக் காரைக்காடு என்பது திருக்காலீசுவரர் கோயில் என்று இப்போது வழங்குகிறது. ஒவ்வொரு தலத்துக்கும் சில புராணக் கதைகளுண்டு.

தென்னிந்திய வரலாற்றில் பண்டை நாளிலேயே நாகரிக முதிர்ச்சிபெற்ற நகரங்களில் காவிரிப்பூம்பட்டினத்தையும் காஞ்சியையும் வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவார்கள். காவிரிப்பூம்

பட்டினத்தைவிட காஞ்சி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே இன்றும் அழியாப் புகழ்பெற்று நிற்கிறது.

கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் அசோகன் காலத்திலேயே வந்த பௌத்தர்கள் தொண்டை நாட்டின் தலைநகராயிருந்த காஞ்சீபுரத்தில் பல விஹாரங்களை அமைத்தும் கல்விக்கூடங்களைக் கட்டியும் ஒரு முக்கியமான பௌத்த சமூகத்தை வளர்த்து வந்தார்கள். மணிமேகலையில் சொல்லப்பட்ட வரலாற்றின்படி சோழர் தலைநகராகிய காவிரிப்பூம் பட்டினம் கடலால் அழிவு பட்ட போது அங்கிருந்தவர்கள் காஞ்சீபுரத்துக்கு வந்து அவ்வூர் மக்களை பௌத்தர்களாக மாற்றினர்கள் என்று காணப்படுகிறது. காஞ்சியில் நூற்றுக்கணக்கான சங்காராமங்களும் பதினாயிரக் கணக்கான பௌத்த சந்நியாசிகளும் இருந்தார்கள் என்று மணிமேகலையில் சொல்லப்படுகிறது. கி. பி. ஏழாம் நூற்றாண்டின் மத்தியில் தமிழ் நாட்டிலே யாத்திரை செய்த சீனயாத்திரிகன் ஹுவென் சியாங் காஞ்சியில் பல விஹாரங்களும் மடங்களும் இருந்ததை வருணிக்கிறான். அத்துடன், தான் நேரில் கண்ட போது பௌத்தத்தைவிட சமணர்களின் செல்வாக்கு அதிகரித் திருந்ததையும் குறிப்பிடுகிறான். ஆகையால், கி. பி. நான்காம் ஐந்தாம் நூற்றாண்டுக் காலத்திலே, பௌத்தம் மிகுந்த செல்வாக்குடன் வளர்ந்திருக்க வேண்டும் என்று நம்ப இடமுண்டு. பிரசித்திபெற்ற பௌத்த அறிஞர் தின்னாகர் காஞ்சியில் கல்வி கற்று சீனாவிலும் திபேத்திலும் பிரசாரம் செய்தார். நாளந்தை பல்கலைக் கழகத்தின் தலைவராகப் பதவி வகித்த தர்மபாலர் என்ற துறவி காஞ்சி நகரைச் சேர்ந்தவர். சீனாவிலும் ஜப்பானிலும் பௌத்த மடத்தலைவராயிருந்த போதி தர்மரும் காஞ்சீபுரத் தமிழரே.

இங்ஙனம் பௌத்த மதம் ஒரு காலத்தில் காஞ்சியைக் கேந்திரமாகக் கொண்டு வளர்ந்தது. முதலில் ஹீனயான பௌத்தமே பெருமளவில் கைக்கொள்ளப்பட்டு, பின்னர் மஹாயானக் கொள்கைகள் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. இப்படியான ஒரு காலகட்டத்தில்தான் பௌத்தர்களில் சிலர் சைவத்துக்கு மாறத்தக்க சூழ்நிலை ஏற்பட்டது. சாக்கிய நாயனாரின் கதையும் இந்தக் கால எல்லையில்தான் நிகழ்ந்திருக்க வேண்டும்.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் சாக்கிய நாயனார். சாக்கியர் என்றாலே பௌத்தர் என்று பொருள். புத்தருக்கு சாக்கிய முனிவர் என்றும் ஒரு பெயருண்டு. இந்த சாக்கியர் காஞ்சீபுரத்

துக்குப் பக்கத்திலுள்ள சங்கமங்கை என்ற இடத்தில் பிறந்து இளம் வயதிலேயே பௌத்தத்தின் குருபீடமாயிருந்த காஞ்சிக்கு வந்து துறவு பூண்டு தமது சமயக் கல்வியில் விற்பன்னராஞர். ஆஞல் சிலகாலம் மற்றைய சமய சித்தாந்தங்களையும் கற்றதன் பயஞக 'சைவ மதத்தின் உண்மைப் பொருளில் அவருக்குப் பற்றுதல் உண்டாயிற்று. ''எந்நிலையில் நின்ருலும் எக்கோலம் கொண்டாலும்'' சிவன்தாள் மறவாமை பயன்தரும் என்ற நம்பிக்கையில் தமது பௌத்த வேடத்துக்குரிய துவராடையைக் களையாமலே சிவனை நினைந்து வந்தார். ஒருநாள் இவர் ஒரு வெளியான இடத்தில் நடந்து வரும்போது சிவலிங்கம் ஒன்றைக் கண்டு அதனை அர்ச்சித்து வழிபட விரும்பி, தாம் என்ன செய்வதென்றறியாது, பக்கத்தில் கிடந்த ஒரு கல்லை எடுத்துச் சிவலிங்கத்தின் மீது எறிந்தார். மறுநாளும் அந்த வழியே வந்த போது முதல்நாள் செய்தது போலவே ஒரு கல்லை எடுத்துச் சிவலிங்கத்தின் மீது போட்டுவிட்டு வந்தார். இப்படியே அவர் மத்தியானம் பிச்சை எடுத்து உண்பதற்கு முன்னர் சிவலிங்கத் துக்கு ஒரு கல்லை எடுத்துப் போடுவது நித்தியம் ஒரு பழக்க மாக ஏற்பட்டுவிட்டது. ஒருநாள் இவர் எப்படியோ கல் லெறிவதை மறந்துபோய் உணவில் உட்கார்ந்துவிட்டார். திடீரென அந்த ஞாபகம் வரவே ஓடோடியும் போய் லிங்கத் துக்குக் கல் எறியும்போது இறைவனே வெளிப்பட்டு வந்து ஆட்கொண்டார் என்பது புராணம். அன்றுமுதல் அவர் சாக்கிய நாயனுர் ஆனுர். காஞ்சீபுரத்தில் குப்பம் என்று ஓர் இடம் இருக்கிறது. கோனேரிக்குப்பம் என்று சொல்வார்கள். இந்த இடத்தில்தான் சாக்கிய நாயனுர் கல்லால் எறிந்து அருச்சனை செய்து சிவனடியார் பதவி பெற்ருர் என்று நம்பப்படுகிறது. இங்கே சாக்கியனுர் உருவம் பௌத்த துறவி வடிவிலுள்ளது. கோயில் கவனிப்பாரற்று நாற்புறமும் காடாகக் காட்சி யளிக்கிறது.

வைஷ்ணவ ஆழ்வார்களிலொருவராகிய திருமழிசையாழ்வார் முதலில் பௌத்தராயிருந்து, பின் சமணத்தைத் தழுவி, சைவராகி, அதன் பின்னரே வைஷ்ணவத்துக்கு வந்தார் என்று வரலாறு கூறுகிறது. இங்ஙனம் அந்தக்காலத்தில் மதம் மாறுவது சகஜம் என்று சொல்லலாம்.

பௌத்தத்தின் செல்வாக்குக் குறைந்து சமணம் பெருமளவில் வளர்ந்த காலம்தான் திருநாவுக்கரசு நாயனுர் சமணத் துறவியாகி மீண்டும் சைவத்தில் சேர்ந்தபோது, அவர் பெருமையை யறிந்த பல்லவ மன்னன் மகேந்திரவர்மனும் சைவனுகியது. மகேந்திரனின்

மகன் முதலாம் நரசிம்மவர்மன் வைஷ்ணவ வழியில் சென்றான் அவனுடைய மகன் இரண்டாம் மகேந்திரவர்மன் இரண்டே ஆண்டுகள் (கி. பி. 668-670) ராஜ்ய பரிபாலனம் செய்துவிட்டுத் தன் மகன் முதலாம் பரமேஸ்வரவர்மனிடத்தில் ராஜ்யத்தைக் கொடுத்துவிட்டுத் துறவு பூண்டான் என்று வரலாறு கூறுகிறது. இந்தப் பல்லவ வேந்தனுகிய காடவன்தான் பெரிய புராணத்தில் இடம்பெற்ற ஐயடிகள் காடவர்கோன் என்று நம்பப்படுகிறது.

வையநிகழ்பல்லவர்தங்குலமரபின் வழித்தோன்றி
வெய்ய கலியும் பகையும் மிகையொழியும் வகையடக்கிச்
செய்ய சடையவர் சைவத்திரு நெறியாலரசளிப்பார்
ஐயடிகள் நீதியால் அடிப்படுத்துஞ் செங்கோலார்

என்று சேக்கிழார் பாடுகிறார். இவர் வடமொழிப் புலமையும் தமிழ் மொழிப் புலமையும் நிறைந்தவர். பொதுவாகப் பல்லவ மன்னர்களிற் பலர் வடமொழியில் பாண்டித்தியம் பெற்றதோடு அம்மொழி கற்ற பண்டிதர்களையும் ஆதரித்தார்கள். ஒரு சிலர் தமிழிலும் பாண்டித்தியம் பெற்றனர். இந்த மன்னரும் தமிழ்த் துறையில் கவனம் செலுத்தி, சிவநெறியிலும் பக்தி மார்க்கத்திலும் ஈடுபட்டபோது, மேலும் தொடர்ந்து ராஜ்ய பரிபாலனம் செய்ய விரும்பாமல், தன் மகனிடத்தில் ஒப்படைத்து விட்டுத் தல யாத்திரையில் புறப்பட்டார். தமிழ் நாட்டில் பல கோயில்களைத் தரிசித்து ஒவ்வொரு கோயிலைப் பற்றியும் ஒரு வெண்பா பாடி வணங்கினர். 'க்ஷேத்திரத் திருவெண்பா' என்று இந்தப் பாடல்கள் வரவேற்கப்பட்டன. இறைவனுக்கு இவை ஒப்பற்ற மாலையாகின. அதனால் ஐயடிகள் காடவர்கோன் நாயனார் பதவிக்கு உயர்த்தப்பட்டார். ''ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது திருத் தொண்டத் தொகையில் சேர்த்துக்கொண்டார்.

தேவாரங்கள் முதல் எழு திருமுறைகளாகத் தொகுத்து வைக்கப்பட்டது போல, ஐயடிகள் காடவர்கோன் பாடிய க்ஷேத்திரத் திருவெண்பாவும் பதினேராவது திருமுறையில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. பல தலங்களை அவர் பாடியிருக்க வேண்டும். ஆனால் இப்போது கிடைப்பது இருபத்து நான்கு வெண்பாக்கள் தான். கச்சி ஏகம்பத்தைப் பற்றி அவர் பாடிய வெண்பா:

என்னெஞ்சே உன்னை இரந்தும் உரைக்கின்றேன்
கன்னஞ்செய் வாயாகிற் காலத்தால்—வன்னெஞ்சேய்
மாகம்பத்தானை உரித்தானை வன்கச்சி
ஏகம்பத்தானை இறைஞ்சு.

ஐயடிகள் காடவர்கோன் என்ற இரண்டாம் மகேந்திரவர்மனின் மகனுக்கு மகனாய் வந்த பேரரசன்தான் ராஜசிம்ம பல்லவன் என்ற இரண்டாம் நரசிம்மவர்மன். பல்லவ அரசின் பொற்காலம் இவனுடைய ஆட்சியில்தான் என்று சொல்ல வேண்டும்.

59. பூலோக கைலாயம்

தமிழ்நாட்டு வரலாற்றில் காஞ்சியின் பங்கு என்ன என்பதைப் பற்றிச் சிறிது பார்க்கலாம் என்று தோன்றுகிறது. அரசியல் துறை, சமயத் துறை, கல்வித் துறை இந்த மூன்று துறைகளிலும் தமிழ்நாட்டுக்கு வழிகாட்டியாயிருந்தது காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட தொண்டை மண்டலம் என்பதைச் சரித்திரச் சான்றுகளோடு நாம் காண்கிறோம். பழைய சங்க இலக்கியத்தில் பத்துப் பாட்டில் ஒன்றான பெரும்பாணாற்றுப் படையில், ''மலர்தலை யுலகத்துள்ளும் பலர் தொழ விழவு மேம்பட்ட பழவிறல்மூதூர்'' என்று காஞ்சிமாநகரில் எப் பொழுதும் விழாக்கள் நிறைந்தது என்று வருணிக்கப்படுகிறது. மணிமேகலையில், ''தேவர்கோமான் காவல்மாநகர் மண்மிசைக் கிடந்தென வளந்தலை மயங்கிய பொன்னகர்''. அதாவது இந்திர லோகமே பூமியில் வந்திறங்கியது போன்றது என்று வருணிக் கிறது. அப்பர் சுவாமிகள் ''கல்வியைக் கரையிலாத காஞ்சி மாநகர்'' என்று சொல்கிறார்.

இப்படிப் பழம் பெருமையில் பல நூற்றாண்டுக் காலமாக சிறப்புற்றோங்கிய காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட தொண்டை நாட்டில், கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே கரிகால் சோழனின் இனத்தவனான தொண்டைமான் இளந்திரை யன், சிறுசிறு கூட்டங்களாயிருந்த குறும்பர்களை வென்று தனி அரசு ஸ்தாபித்தான். கரிகாலன் தொடர்புக்குச் சான்றாக காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் சந்நிதியில் அவன் சிலையொன்று காட்சியளிக் கிறது. ஒரு சில ஆண்டுகளே இளந்திரையன் ஆட்சியிலிருக்க வடக்கேயிருந்து சதவாகனர் என்ற ஓர் இனத்தவர்கள் தமது சாம்ராஜ்யத்தை விஸ்தரித்து வரும்போது தொண்டைமண்டலத் தையும் தமதாக்கிக் அடக்கி, தெலுங்கு நாட்டிலிருந்த பல்லவ வீரனான பப்பசாமி என்பவனை ராஜப்பிரதிநிதியாக வைத்து அரசாண்டார்கள். ஆனால் சதவாகனர் பலமும் குன்றத் தொடங்கி கி. பி. மூன்றும் நூற்றாண்டில், ராஜப்பிரதிநிதிகளா யிருந்த பல்லவர்களே ஆளத் தொடங்கினார்கள். மூன்றும்

நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டுவரை தொண்டை மண்டலத்தில் பல்லவர்களின் தனிக்கொடி பறந்தது. இடையிலே கி. பி. ஆரும் நூற்றாண்டளவில் களப்பிரர் என்ற அரசர்களின் குறுக்கீடு இருந்தாலும் தெற்கே கடுங்கோன் என்ற பாண்டியனும் சிம்மவிஷ்ணு என்ற பல்லவனும் களப்பிரரை முறியடித்து அவர்கள் இருந்த இடம் தெரியாமல் செய்து விட்டனர். சிம்ம விஷ்ணுவிலிருந்து தொடர்ந்து ஒன்பதாம் நூற்றாண்டுவரை நடந்த பல்லவர் ஆட்சிதான் அரசியல், சமயம், கல்வி ஆகிய மூன்று துறைகளிலும் ஒப்பற்ற சாதனைகளைப் புரிந்துள்ளது.

சிம்மவிஷ்ணுவின் மகன்தான் சரித்திரப் புகழ்பெற்ற முதலாம் மகேந்திரவர்மன் (கி. பி. 600-630). மகேந்திர விக்ரமன், மத்தவிலாசன், விசித்திர சித்தன், சித்திரக்காரப்புலி என் றெல்லாம் சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் பல விருதுகளைப் பெற்றிருந்த இந்த மன்னன்தான் முதன்முதலில் தமிழ்நாட்டில் மலையைக் குடைந்து குடவரைக் கோயில்களைக் கட்டச் செய்த மேதாவி. பல்லாவரம், வல்லம், மாமண்டூர், மகேந்திரவாடி, தளவானூர், சீயமங்கலம், மண்டகப்பட்டு, திருச்சிராப்பள்ளி, நாமக்கல் ஆகிய இடங்களில் இவன் கண்ணுற்ற குன்றுகளில் குடவரைகள் தோண்டி இறைவனுக்கு இருப்பிடம் அமைத்தான். இவன்தான் திருநாவுக்கரசரால் சமணத்திலிருந்து மீட்கப்பட்டு சைவத்தில் சேர்ந்து திருவதிகையில் குணதரவீச்சுரம் கட்டியவன். இவன் மகன் முதலாம் நரசிம்மவர்மன் (கி. பி. 630-668) வைஷ்ணவ பக்தன். சாளுக்கிய மன்னன்மேல் படையெடுத்து (கி. பி. 642) வாதாபியைக் கைப்பற்றிய மாவீரன். இந்த வெற்றிப் படையை நடத்திய சேனாதிபதிதான் சிவதொண்டரான பரஞ்சோதி, சிறுத்தொண்டர். இவருடைய சிவதொண்டை மெச்சிய வைஷ்ணவ பக்தனான நரசிம்மவர்மன் அவருக்கு மரியாதை செலுத்தி அவருடைய சிவதொண்டைத் தொடர்ந்து செய்யப் படைத் தொழிலிலிருந்து ஓய்வு கொடுத்தனுப்பினான். மாமல்லன் என்று புகழ்பெற்ற நரசிம்மன் கட்டிய சிற்பப் பொக்கிஷம்தான் மாமல்லபுரத்துக் குகைக்கோயில்களும், பகீரதன் தபசென்ற ஒப்பற்ற சிற்பமும்.

நரசிம்மனின் மகன் இரண்டாம் மகேந்திரவர்மன் தனது பாட்டன் வழியில் சைவ மதத்தைப் பின்பற்றியதோடு சிவ தொண்டிலும் ஈடுபட்டு, இரண்டு ஆண்டுகளே அரசியல் நடத்தி, மகனுக்குப் பட்டம் கட்டிவிட்டுத் துறவுபூண்டு ஐயடிகள் காடவர்கோன் என்ற நாயனார் பதவியைப் பெற்றான். இந்த அரசன் பாடியதுதான் சைவத்திருமுறையில் பதினோராம்

திருமுறையில் சேர்க்கப்பட்டிருக்கும் க்ஷேத்திரத் திருவெண்பா என்பதை முன்பே கண்டோம்.

இரண்டாம் மகேந்திரவர்மனின் மகன் முதலாம் பரமேஸ்வர வர்மன் காலத்தில் சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசி, தன் பாட்டனைப் பல்லவர் தோற்கடித்ததற்கு நஷ்ட ஈடாக வந்து காஞ்சியைப் பிடித்துக் கொண்டான். ஆனால் பரமேஸ்வரன் சில நாட்களில் திருப்பித் தாக்கித் தலைநகரை மீட்டுக் கொண்டான். இந்த முதலாம் பரமேஸ்வரவர்மனின் மகன்தான் ராஜசிம்ம பல்லவன் என்ற இரண்டாம் நரசிம்மவர்மன் (கி. பி. 680-720) சுந்தரமூர்த்தியின் சமகால நண்பனை "கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கள்."

சோழ மன்னர்களில் கோச்செங்கணான், புகழ்ச்சோழர் ஆகியோரைப் போல சிவதொண்டில் நின்று நாயனாராகிய பல்லவர்கள் இருவரில் ஐயடிகள் காடவர்கோனைப் பற்றி முன்பே அறிந்தோம். காடவர்கோன் கழற்சிங்கனைப் பற்றியும் திருவாரூரில் செருத்துணை நாயனார் வரலாறு காணும்போதும் திருநின்றவூரில் பூசலார் நாயனாரைக் கண்டபோதும் ஓரளவு தெரிந்து கொண்டோம். திருவாரூரில் இவன் பட்டத்தரசி கங்கா, திருக் கோயிற் பிராகாரத்தில் ஒரு புஷ்பத்தை எடுத்து முகர்ந்ததற்காக அவள் கையையே துணித்தவன். திருநின்றவூரில் பூசலார் நாயனார் கட்டிய மனக்கோயிலைக் காணச்சென்று அங்கே கோயில் பூசலார் நெஞ்சில்தான் உருவாக்கியிருந்ததைக் கண்டு வியந்தவன். இந்த இரு சம்பவங்களும்தான் கழற்சிங்கனை நாயனார் பதவிக்கு உயர்த் தியது. ஆனால் இவன் உலகியல் வாழ்வில் சாதித்த மகோன்னத மான காரியங்கள் புராணத்தில் அகப்படாமல் கல்வெட்டுச் சாசனங்களில் அழியாத சரித்திரமாய், பல்லவர் பெருமைக்குச் சான்றாக நிற்கின்றன.

காஞ்சி கைலாசநாதர் கோயில் ஒன்றே போதும் ராஜசிம்ம பல்லவனின் பெருமையை விளக்க. கைலாசநாதனையே பூலோகத் தில் கொண்டுவந்து இருத்தி, அவனுக்கு ஒரு கோயில் கட்டி, அந்தக் கடவுளின் அனந்தமூர்த்தங்களையெல்லாம் சிலை சிலையாக வடித்து ஓர் அற்புத உலகத்தைச் சிருஷ்டித்துத் தந்திருக்கிறான் ராஜசிம்மன். கல்லைக் கொண்டு கோயில் கட்டிய முதல் கற்றளி இது. எத்தனை கல் தச்சர்கள், என்னென்ன புதுமைகள்! மனிதன் கண்ட அழகுணர்ச்சிகளையெல்லாம் ஒன்றுசேர்த்துக் குழைத்த அழகு சொரூபம் இந்தக் கைலாசநாதர் கோயில். கங்காதரர், பிக்ஷாடனர், திரிபுராந்தகர், சோமாஸ்கந்தர் முதலிய மூர்த்தங் கள் அங்கங்கே காட்சியளிக்கின்றன. தேவாசுரர்கள் பாற்கடல்

கடையும் காட்சி, முப்புரங்கள் எரியும் காட்சி, எமனை உதைத்து மார்க்கண்டனைக் காத்த காட்சி, கிராத வேடத்தில் அர்ச்சுனனுடன் போட்டியிட்ட காட்சி, திருக்கயிலையை இராவணேஸ்வரன் தன் இருபது கைகளாலும் பேர்த்தெடுக்க முயலும் காட்சி இவையெல்லாம் பக்கம் பக்கமாக எப்படித்தான் சிற்பிகளின் கையுளியில் கடைசல் பெற்றனவோ? கூத்தாடும் பெருமானின் நடனக் கோலங்கள்தான் எத்தனையெத்தனை? அம்மையின் மகிஷாசுரமர்த்தனம், வீணுகானம், அர்த்தநாரி உருவம், இவையெல்லாம் எத்துணை அழகு பொழிகின்றன!

புராணங்கள் இதிகாசங்கள் சரித்திரங்கள் எல்லாம் பிரத்தியக்ஷ ஏடுகளாகக் குவிந்திருக்கின்றன காஞ்சி கைலாசநாதர் ஆலயத்தில். சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தன் இங்கு வந்து பல்லவரை வென்றபோதும் கைலாசநாதர் ஆலயத்தைத் தொடவில்லை. அதன் சிற்பச் செல்வங்களை அபகரிக்கவும் அவன் விரும்பவில்லை. தமிழர் பண்பாட்டுக்கு அவன் மதிப்புக் கொடுத்தான். ஆனால் பின்னால் வந்த முதலாவது குலோத்துங்கன் என்ற தமிழன்தான் கைலாசநாதர் கோயிலை இழுத்து மூடி, அதன் நிலங்களையெல்லாம் பக்கத்திலுள்ள அனேகதங்காவதம் என்ற கோயிலுக்கு மாற்றினான் என்று கல்வெட்டுச் சாசனம் சாட்சி கூறுகிறது. மூடிய கோயிலைத் திறந்தவனும் ஒரு தெலுங்கு நாயக்கனான கி. பி. பதினாலாம் நூற்றாண்டைச் சேர்ந்த கம்பண உடையார்.

கைலாசநாதர் ஆலயத்தைச் சுற்றிச் சுற்றி ஆயிரம் தடவை வந்தாலும் அதன் சிற்ப அழகை ரசித்து முடியாது. ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளாகக் காற்றிலும் வெயிலிலும் சிறிது கரையுண்டு போனாலும் இந்தச் சிற்பங்களின் குழைவும் அழுத்தமும் மெருகும் மாறவில்லை. முதலாம் மகேந்திர வர்மனுக்கும் ராஜசிம்ம பல்லவனுக்கும் இடைத்தூரம் சுமார் எண்பது ஆண்டுகள். மாமல்லபுரத்திலும் பல்லாவரத்திலும் மற்றும் இரண்டோரிடத்திலும் காணப்படும் சிற்ப வடிவங்களுக்குப் பின்னர் மற்றைய அரசர் காலத்தில் தமிழ் நாட்டுச் சிற்பிகள் உளியைக் கையிலெடுக்காமல் சும்மா இருந்தார்களா? ராஜசிம்மன் காலத்தில் கைலாசநாதர் கோயில் சிற்பங்களை ஆயிரக்கணக்காக, பல்வேறு நிலைகளில் பல்வேறு கற்பனையில் வடித்தெடுத்த பாங்கைப் பார்க்கும்போது இந்தச் சிற்பிகளுக்கு குறைந்தது மூன்று நான்கு தலைமுறை அனுபவம் இருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. அப்படியானால் இவர்கள் முன்னோர்கள் செய்த கலைப் பொருள்களெல்லாம் எங்கே?

இந்தச் சந்தேகத்தை மேலும் வலுபடுத்துவதற்கு ராஜசிம்ம னின் மற்றொரு கலைச் சின்னமான மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலைப் பற்றிய ஒரு கதையிருக்கிறது. மாமல்லபுரத்தில் காணப்படும் பாண்டவர் ரதங்கள் என வழங்கும் சிற்பங்களுக்கு மாமல்லன் என்ற முதலாம் நரசிம்மவர்மன் காரகன் என்பதை யறிவோம். ஆனால் கடற்கரையில் எழுந்திருக்கும் அனந்தசயனப் பெருமாள் கோயிலைக் கட்டியவன் கைலாசநாதர் கோயில் தலைவன் ராஜசிம்ம பல்லவன். இவன் காலத்தில் காஞ்சீபுரத்தில் வாழ்ந்த ஒரு பெரும்புலவன் காவ்யதர்சம் என்ற வடமொழி அலங்கார சாஸ்திரத்தை எழுதிய தண்டி. இது தமிழில் தண்டியலங்காரம் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. தண்டி ஒரு மகாமேதை. பலவித சாஸ்திரங்களிலும் பேரறிவு படைத்தவர். கட்டிடக் கலை சிற்பக்கலை முதலியவற்றுடன் மற்றும் பல நுண்கலைகளையறிந்தவர். வடமொழியில் வல்லவர். அத்துடன் தமிழிலும் மொழியியல் தெரிந்தவர். வடமொழிக் கவிதையைத் தமிழ் எழுத்திலே எழுதுவதை இவர் ஒரு சாதனையாகப் பயின்றிருந்தார் என்றும் சொல்வர். இவர் எழுதிய அவந்தி சுந்தரி கதா என்ற காவியத்தில் பல்லவர்களின் பெருமையைச் சொல்லும்போது மாமல்லபுரக் கடற்கரைக் கோயிலில் நடந்த ஒரு சம்பவத்தையும் சொல்லிப் போகிறார். காஞ்சியிலே இவர் காலத்தில், அதாவது ராஜசிம்ம பல்லவன் காலத்திலேயே, மிகத் திறமையுடைய லலிதாலயன் என்ற கலைஞன் இருந்தான். இவன் நவீனமான பறக்கும் யந்திரங்கள் செய்வது முதல் கட்டிடம், சிற்பம், ஓவியம் முதலிய கலைகளிலும் நிபுணன் என்று சொல்வார்கள். ஒருநாள் இந்த லலிதாலயன், மாமல்லபுரத்து அனந்தசயனப் பெருமானின் கையில் காணப்பட்ட ஒரு சிறு வெடிப்பை மறைத்துச் செப்ப னிட்டுத் திருத்தினான். பின்னர், மகாமேதையான தண்டியிடம் போய் வணங்கி, ''அடியேன் அனந்தசயனப் பெருமாள் சிலையில் கண்ட ஒரு பின்னத்தைச் செப்பனிட்டு நிறைவு செய்திருக்கிறேன். தாங்கள் அதை வந்து பார்க்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டான். இதை தண்டி அவ்வளவு முக்கியமானதாகக் கருத வில்லையாகையால் கவனத்தில் கொள்ளவில்லை. பக்கத்திலிருந்த சில பண்டிதர்கள் லலிதாலயனின் திறமையை எடுத்துச் சொன்னதின் பேரில் தண்டி மாமல்லபுரத்துக்குச் சென்று அனந்தசயனப் பெருமாள் விக்கிரகத்தைப் பார்த்துவிட்டு, ''எந்த இடத்தில் செப்பனிட்டிருக்கிறீர்?'' என்று லலிதாலயனைக் கேட்ட போது, லலிதாலயன், ''எனது கலை வீண்போகவில்லை! செப்ப னிட்ட இடம் தெரியாது. அவ்வளவு நுட்பமாக முடித்திருக் கிறேன் என்பது தங்கள் கேள்வியிலிருந்தே தெரிகிறது'', என்று சொல்லி மகிழ்ந்து ஒரு கையில்தான் பின்னமிருந்ததாகவும்

அதைச் செப்பனிட்டதாகவும் தெரிவித்தான். இத்தகைய சிறந்த கலைஞர் வாழ்ந்திருந்தும் மூன்று நான்கு தலைமுறைகள் கண்ட சிற்பச் சின்னங்களோ கலைச் சின்னங்களோ காணக்கிடைக்க வில்லை.

கைலாசநாதர் கோயில் கர்ப்பகிருகத்தின் வாயிலில் நின்று பதினுறுபட்டை லிங்கத்தை வணங்குகிறோம். தீபாராதனையில் ஒன்றிப் பிரசாதம் வாங்கிக் கொண்டவுடன் அருச்சகர் பக்கத் திலே இரண்டு கற்பாறைகளுக்கிடையிலுள்ள குறுகிய வழியைக் காண்பித்து, ''இதில் நுழைந்து உள்ளே போய் கர்ப்பக்கிருகத்தை வலம் வந்து மறுபடியும் வெளியே வருவதற்குள்ள குறுகிய சந்து வழியே நுழைந்து வாருங்கள். இதுதான் புனரபிமரணம், புனரபிஜனனம் என்ற சொர்க்கப் பிரதக்ஷணம்'' என்றார். படுத்திருந்து ஊர்ந்து புறப்பட்டு, குறுகிய பிராகாரத்தில் நடந்து மறுபடியும் படுத்திருந்து ஊர்ந்து வெளியே வரவேண்டும். இந்த அப்பியாசத்தைப் பரிசோதிக்க நண்பர் சிட்டிக்குத் தைரியம் வர வில்லை! ஆனால் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு மிக இளமை யுடன் இருந்தபோது இந்தச் சொர்க்கப் பிரதக்ஷணத்தை ஒரு தரம் அனுபவித்த எனக்கு அது அச்சந்தரவில்லையாகையால், தனியே வலம் வந்து சொர்க்கத்தின் இன்பத்தைப் பெற்றேன்!

பல்லவர் ஆட்சி தொண்டை மண்டலத்தில் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டுடன் ஆட்டம் கண்டது. ராஷ்டிரகூடர் வந்து நுழைந்து பல்லவ அரசைச் சின்னபின்னப்படுத்தினர்கள். ஆனால் அவர்களும் வெகுநாள் தங்க முடியவில்லை. ஆதித்யசோழன் படையெடுத்து வந்து ராஷ்டிரகூடரை முறியடித்து, சோழப் பேரரசை நிலை நாட்டினான். நான்கு நூற்றாண்டுகளாகவே சோழர் ஆதிக்கம் செலுத்தினர். பெரும்பாலும் பழைய பல்லவர் வழித் தோன்றல்களையே ராஜப்பிரதிநிதிகளாக வைத்து ஆண்டார்கள். கருணாகரத் தொண்டைமானும் கோப்பெருஞ்சிங்கனும் அப்படி ஆண்டவர்கள். கோப்பெருஞ்சிங்கன் கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டில் தனி ராஜ்யம் நடத்திய கதையை நாம் முன்பே கண்டுகொண்டோம்.

காஞ்சீபுரத்தில் வெகுநேரம் செலவழித்து விட்டோம். இன்னும் நாம் சந்திக்க வேண்டிய முக்கியமான ஒருவரைச்சந்தித்து விட்டு, சுந்தரமூர்த்தி ஒற்றைக் கண்ணுடன் திருவாரூர் திரும்பும் போது அவரைத் தொடர்ந்து செல்வோம். இப்போது சந்திக்க வேண்டியவர் அறுபத்து மூவரில் ஒருவராகிய திருக்குறிப்புத் தொண்ட நாயனார்.

இந்த நாயனார் ஒரு ஏகாலியர், அதாவது துணிவெளுக்கும் வண்ணாரக் குலத்தைச் சேர்ந்தவர். தமது தொழிலில் பலருக்குத் துணி வெளுத்துக் கொடுப்பதுடன் சிவனடியார்களுக்குக் கூலி பெறாமல் வெளுத்துச் சேவை செய்வதையும் ஒரு சிவதொண்டாகக் கருதிச் செய்துவந்தார். ஒருநாள் சிவபெருமானே ஒரு அடியார் வேடத்தில் அழுக்கடைந்த கந்தல் துணியைப் போர்த்திக்கொண்டு வந்தார். அவரைக் கண்ட திருக்குறிப்புத் தொண்டர், ''சுவாமி, தங்கள் ஆடை அழுக்கடைந்திருக்கிறது. என்னிடம் கொடுங்கள். நான் சுத்தமாய்க் கழுவித் தருகிறேன்'' என்றார். அடியார் அதற்கு, ''என்னிடம் மாற்றுடையாக எதுவும் கிடையாது. இதைக் கழுவி இன்றே திருப்பித் தருவதானால் செய்யும். இல்லாவிட்டால் என்னால் குளிர் தடுக்க முடியாது'' என்றார். திருக்குறிப்புத் தொண்டர், ''இன்று மாலையே நான் கொடுத்து விடுகிறேன்'' என்று சொல்லி அடியாரின் கந்தலை வாங்கிக் குளக் கரைக்குச் சென்று சுத்தமாகத் தோய்த்தார். இதற்கிடையில் பெருமழை பெய்ய ஆரம்பித்து, விடாமல் நாள் முழுவதும் பெய்தது. கழுவிய துணியைக் காயவிட இடமில்லை. மாலையாகி விட்டதும் நாயனார் மனம் சஞ்சலப்பட்டது. சிவனடியாருக்குக் கொடுத்த வாக்கை எப்படி நிறைவேற்றுவது என்று வருத்த மடைந்து, ஒரு வழியும் தோன்றாமல், ''என் வாக்கைக் காப்பாற்ற முடியாத நான் இனி இவ்வுலகில் இருந்தென்ன?'' என்று சொல்லிக் கொண்டு துணி தோய்க்கும் கல்லில் தம் தலையை முட்டி இறக்கத் துணிந்தார். கச்சி ஏகம்பன் காட்சி தந்து தடுத்து ஆசீர்வதித்தார்.

இந்தத் திருக்குறிப்புத் தொண்ட நாயனாருக்கு ஒரு கோயில் காஞ்சீபுரத்தில் தனியாக இருக்கிறது. ஆடிசன்பேட்டை என்ற கடைவீதியிலுள்ளது இது.

காஞ்சிக்கு வந்த எங்களை மற்றொரு சக்தியும் பிடித்திழுத்தது. ஆதிசங்கரர் ஸ்தாபித்து வைத்த காமகோடி பீடத்தின் அறுபத் தெட்டாவது பீடாதிபதி ஜகத்குரு சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள், உலகையும் மடத்தையும் துறந்து, காஞ்சிமாநகரின் அயலிலுள்ள தேனம்பாக்கம் என்ற கிராமத்தில் தனித்துறைந் துள்ளார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டோம். ஆழ்ந்த கல்வியும், அனுபவமும் உள்ளுணர்வும் கொண்டு, பராசக்தி அருளோடு அடியார்களின் கண்கண்ட தெய்வமாக வீற்றிருக்கிறார் காஞ்சி முனிவர் சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள். தீட்சண்யம் நிறைந்த கண்கள்; அருளொழுகும் முகவிலாசம்; அடக்கமும் பண்பும் அந்த எண்பத்துநான்கு வயது நிறைந்த ஞானியை அலங்கரிக்கின்றன. மௌனம் நிலவியபோதிலும்

அந்த மகா புருஷரின் அருள் விழிகள் மூலம் பேசிய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு, எமது சேக்கிழார் அடிச்சுவட்டில் யாத்திரை இனிதே நிறைவேற வேண்டிக்கொண்டு திரும்பினேம்.

காஞ்சீபுரத்தில் சைவ நாயன்மார்களைத் தேடி வந்த நாம் வைணவத்தின் தலைமைப்பீடம் என்று கருதப்படும் இந்நகரிலுள்ள பெருமாள் சந்நிதிகளைத் தரிசிக்காமல் எப்படிப் போக முடியும். ஆழ்வார்களும், வேதாந்த தேசிகரும் இராமானுஜரும் வாழ்த்தி வணங்கிய வரதராஜரையும் மற்றும் சில திவ்விய க்ஷேத்திரங்களையும் தரிசித்துக் கொண்டு சுந்தரமூர்த்தியின் யாத்திரையைப் பற்றிச் சிந்தித்தோம். காஞ்சியில் இடக்கண் பார்வை பெற்று வலக்கண் குருடுடன் அவர் திருவாரூருக்குப் போகிறார் என்று சேக்கிழார் சொல்கிறார். நாமும் திருவாரூர் போய் அங்கு நடந்த சில வேடிக்கையான சம்பவங்களைப் பார்ப்போம்.

60. தொண்டர்நாதன் தூது

காஞ்சியில் ஏகாம்பரநாதர் சுந்தரருக்கு கண்பார்வை கிடைக்கச் செய்ததும் திருவாரூருக்கு எப்போது போய்ச் சேருவேன் என்ற சபலம் தொட்டது.

அந்தியு நண்பகலும் அஞ்சு பதம் சொல்லி
முந்தியெழும் பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென் திருவாரூர் புக்கு
எந்தை பிரானரை என்றுகொல் எய்துவதே

என்று அங்கலாய்த்தார். இப்படியாக ஏங்கிக்கொண்டு சுந்தரர் சில தலங்கள் வழியாகத் திருவாவடுதுறை போய் ''கண்ணிலேன்; உடம்பில் அடுநோயாற் கருத்தழிந்து உனக்கே பொறையானேன். எனக்கு நீ சுகத்தைத் தந்தருள மாட்டாயா?'' என்று கேட்டார். ஆனால் திருவாவடுதுறை சுவாமி கவனிக்கவில்லை. மேலும் நடந்து திருத்துருத்தி என்ற குற்றாலத்துக்கு வந்தார். அங்கே தமது உடலில் ஏற்பட்ட நோயைத் தீர்க்குமாறு வேண்டவும், அங்குள்ள இறைவர் மனமிரங்கி, ''இங்கே வடக்குத் திசையில் ஒரு குளம் இருக்கிறது. அதில் குளித்து உடம்புப் பிணியைத் தவிர்த்துக் கொள்'' என்று அசரீரியாகச் சொன்னார். அப்படியே சுந்தரரும் அந்தக் குளத்தில் சென்று குளித்து உடலில் இருந்த வருத்தம் நீங்கப் பெற்றார். ஆனால் வலக்கண் பார்வை இன்னும் கிடைக்கவில்லை.

மாயவரத்துக்குப் பக்கத்திலுள்ள குற்றாலத்தில், காவிரியாற்றின் தென்கரையிலுள்ளது திருத்துருத்தி. இங்குள்ள மூலவரின் பெயர் சொன்னவாறறிவார்! இதே கோயிலுக்கு எதிர்ப்புறத்தில் வேள்விக்குடி என்ற தலம் இருக்கிறது. சுந்தரமூர்த்தி இந்த இரண்டையும் சேர்த்து ஒரு பாட்டில்,

' சொன்னவாறறிவார் துருத்தியார், வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
என்னை நான் மறக்குமா றெம்பெருமானே
யென்னுடம் படும்பிணி யிடர் கெடுத்தானே '

என்று பாடுகிறார். வடகுளம் என்ற தீர்த்தக் கரையில் ஒரு கண் குருடரான சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவுருவம் காணப் படுகிறது.

குற்றாலம் என்ற திருத்துருத்தியில் உடல் பிணி நீங்கப் பெற்றதும் சுந்தரமூர்த்தி வழிவழியே சில கோயில்களைத் தரிசித்துக் கொண்டு திருவாரூர் போய்ச் சேர்ந்தார். அங்கு திருவாரூர்ப் பூங்கோயிலின்முன் தன் நிலைமையை நினைந்து வருந்தி, நிலத்தில் விழுந்து தொழுது, பின்னர் தம் கண்ணின் குருட்டை மனத்தில் கொண்டவராய் பொழுது சாயும் சமயத்தில் கோயிலினுள்ளே சென்று வணங்கினார். பின்னர் பரவையுண் மண்டளிக் கோயிலையடைந்து அங்குள்ள சுவாமியின் பெயரைச் சொல்லி, ''தூ வாயா! என் இடர்தீர்த்து ரக்ஷிக்க மாட்டாயா?'' என்று வேண்டினார். பின்னர் திருவாரூர் மூலட்டானரை நினைந்து, ''அப்பா! உன்னை நான் என் இரு கண்களாலும் பருகுவதற்கு மற்றைக் கண்ணின் பார்வையையும் எனக்குத் தர வேண்டும்'' என்று சொல்லி, ''மீளா அடிமை'' என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினார். அதில் இரண்டாவது பாடல்:

விற்றுக் கொள்வீர் ஒற்றியல்லேன் விரும்பியாட்பட்டேன்
குற்ற மொன்றும் செய்ததில்லை கொத்தை யாக்கினீர்
எற்றுக்கடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாராதொழிந்தால் வாழ்ந்து போதீரே

''நான் எக்கேடு கெட்டாலென்ன, நீரே நன்றுக வாழ்ந்துபோம்!'' என்று சுந்தரர் மிகவும் வெறுப்போடு தமது வருத்தத்தைச் சொல்லவும், அவர் தோழர் மனமிரங்கி, வலக்கண்ணுக்கு பார்வை கொடுத்தருளினார். அளவற்ற மகிழ்ச்சியோடு சுந்தரர் விழுந்து வணங்கி, இரண்டு கண்களாலும் திருவாரூரீசனை உளம் நிறையக் கண்டு களித்தார்.

சுந்தரமூர்த்தி யாத்திரை செய்யவென்று புறப்பட்டுச் சென்று திருவொற்றியூரில் சங்கிலியுடன் சல்லாபமாயிருந்த செய்திகளை யெல்லாம் கேள்விப்பட்டிருந்த பரவை ஊன் உறக்கமின்றிப் பல நாள் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். இப்பொழுது சுந்தரர் திருவாரூருக்கு வந்துவிட்டார் என்று அறிந்ததும் தமது வீட்டுக் கதவை யாரும் உள்ளே நுழையலாகாது என்று சாத்தி வைத்தார். வழக்கம் போல் சுந்தரருடன் வந்த அடியார்கள் பரவையின் மாளிகைப் பக்கம் போய், கதவு சாத்தப்பட்டிருந்ததைப் பார்த்து விட்டு, உள்ளே போக முடியவில்லை என்று வந்து சுந்தரரிடம் முறையிட்டார்கள். ''திருவொற்றியூரில் நடந்த விஷயமெல்லாம் இங்கே அம்மாளுக்குத் தெரிந்து போய்விட்டது! ஆகையால்

வீட்டிலுள்ளவர்கள் எங்களை உள்ளே செல்லவிடவில்லை'' என்றார்கள். இந்த நிலைமையைக் கண்ட சுந்தரர் இதற்கு என்ன செய்வது என்று சிந்தித்து, நாலைந்து பெரிய மனிதரிடம் சொல்லி, பரவையாரின் மனத்தை மாற்றியுதவுமாறு கேட்டுக் கொண்டார். அவர்கள் பரவையிடம் சென்று, ''ஏனம்மா இவ்வளவு பிடிவாதம்? அவர்தான் வந்து விட்டாரே! இனிமேல் உங்கள் வாழ்க்கை நல்லாயிருக்க வேண்டாமா? கோபம் வேண்டாம்'' என்று சொல்லவும் பரவையார், கொஞ்சமும் கோபம் தணியாதவராய், ''பெரியவர்களாகிய நீங்களே இப்படிச் சொல்லலாமா? இனிமேலும் வற்புறுத்துவீர்களானால் நான் தற்கொலைதான் செய்து கொள்வேன்'' என்று பிடிவாதமாகச் சொன்னார். மேலும் அவர்கள் என்ன செய்வார்கள்? சுந்தரரிடம் போய்ச் சொன்னதும் அவர் மிகவும் வேதனைப்பட்டார். அந்த நள்ளிரவிலே வேறு துணை காணாது, தமது தோழராகிய தம்பிரானையே நினைத்து தியானித்தார். அவர் உடனே வந்து நேரில் தோன்றினார். சுந்தரர் அவரிடம் நடந்த விஷயத்தைச் சொல்லி, எப்படியாவது பரவையார் கோபத்தைத் தணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். சுவாமியும் இந்தச் சின்ன விஷயத்துக்கெல்லாம் தாம் தூது போக வேண்டுமா என்று யோசிக்காமல், கோயில் அர்ச்சகர் வேடம் தாங்கி, மறைவிலே தமது கணங்கள் புடைசூழ, பரவையார் வீட்டு வாசலில் போய்க் கதவைத் தட்டி, ''பாவாய்! கதவைத் திற'' என்று அழைத்தார். இந்த நள்ளிரவிலே கோயில் அர்ச்சகர் எதற்காக இங்கு வந்தாரோ என்று அஞ்சிய பரவையார் கதவைத் திறந்து, ''ஏது இந்த நடுச்சாமத்தில் வந்தீர்கள்?'' என்று விசாரித்தார். வந்த இறைவன், ''பரவை! நம்பி வந்திருக்கிறார். அவரை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும். குற்றங்களைப் பொருட்படுத்தாமல் அவரைச் சந்தோஷமாக ஏற்றுக் கொள். கோபம் வேண்டாம்'' என்று கேட்டுக் கொண்டார். அவ்வளவுதான். பரவைக்கு இருமடங்கு கோபமுண்டாயிற்று. ''இந்த விஷயத்துக்குத்தான் இந்நடுநிசியில் இங்கு வந்தீரோ? இது உமது கௌரவத்துக்கு இழுக்காயில்லை? வந்த வழியைப் பார்த்துப் போய்விடும்'' என்று சொல்லிக் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டார். இந்த வேடிக்கையைப் பார்க்க வேண்டும் என்று இறைவன் திரும்பிப் போய்ச் சுந்தரரிடம் நடந்ததைச் சொன்னார். சுந்தரருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. ''என்ன? பரவை மறுத்தாளா? நன்றாகச் சொன்னீர். உமக்கே அடியாளான பரவை மறுத்தது ஆச்சரியம்தான். என்னை அடிமையாகக் கொண்ட நீர் என்மேல் எவ்விதமான பற்றுக் கொண்டிருக்கிறீரோ தெரியவில்லை. எப்படியாவது பொழுது விடிவதற்குள் பரவையின்

ஊடலைத் தீர்த்து நான் அங்கே போய்ச் சேர வழி செய்யா விட்டால் இந்த உயிர் போய்விடும் என்பதை உமக்குச் சொல்லி வைக்கிறேன்'' என்று இந்த வன்றொண்டர் பிடிவாதம் பிடித்தார். ''சரி அப்பா! நான் இன்னொரு முறை அவளிடம் சென்று கேட்டுப் பார்க்கிறேன். நீ இங்கேயே இரு'' என்று சொல்லிவிட்டுப் பரவையார் மாளிகைக்குப் போய், முன்போல் அர்ச்சகர் வேட மில்லாமல், தம்மை அவள் இன்னார்தான் என்று அறிந்து கொள்ளக்கூடிய சின்னங்களோடு அங்கு நின்றார்.

இதற்கிடையில் பரவையாருக்குத் தம்மிடம் அர்ச்சகராக வந்தவர் உண்மையான அர்ச்சகரல்ல என்ற சந்தேகம் தோன்றி, ''நாம் ஏன் அவரை அப்படிக் கோபித்து அனுப்பிவிட்டோம்?'' என்று வருந்தி, வாயிலிலே நின்றபடி சிந்தித்தாள். அப்பொழுது இறைவரும் மறுபடி அங்கு வர, பரவை அவர் காலில் வீழ்ந்து வணங்கினாள். இறைவர், ''ஆரூரன் உரிமையினால் என்னைக் கேட்டுக் கொண்டான். அதனால் திரும்பவும் உன்னிடம் வர வேண்டியதாயிற்று. முன்புபோல் மறுத்துவிடாதே. இங்கே ஆரூரன் வருவதற்கு இசைவு அளிப்பாயா?'' என்று கேட்டார். பரவையார் உடனே, ''அன்பருக்காக உமது திருவடி வருந்த ஓர் இரவு முழுவதும் இங்குமங்குமாக அலைந்து நடக்கும்போது நான் இசையாமல் வேறு என்ன செய்வது'' என்று சொன்னார். இறைவரும் பரவைக்கு ஆசி கூறிச் சுந்தரரிடம் சென்று பரவை கோபம் தணிந்து விட்டாளாகையால் உடனே அங்கு போய்ச் சேரும்படி சொல்லிவிட்டுத் தமது கோயிலுட் சென்றார்.

சுந்தரர் மகிழ்ச்சி சொல்ல அடங்காது! உடனே பரவையின் மாளிகைக்குச் சென்றார். அங்கே அவள் நிறைகுடமும் விளக்கும் வைத்து அலங்கரித்து சுந்தரரை வரவேற்க அவர் தம் பாரியாரின் கையைப் பிடித்து அளவிலாக் காதலுடன் உள்ளே சென்றார்.

* * *

ஊரிலுள்ளவர்கள் அர்ச்சகர்தான் இவர்கள் ஊடலைத் தீர்த்து வைத்தார் என்று நம்பினார்கள். ஆனால் உள்ளுணர்வு வரப்பெற்ற சிவனடியார்களுக்கு இந்த உண்மை தெரியாமலா போகும்? திருப்புன்கூருக்குப் பக்கத்திலே பெருமங்கலத்திலுள்ள கலிக்காம நாயனாரைப் பற்றி நாம் முன்பே குறிப்பிட்டிருக்கிறோமல்லவா? அந்த மனுஷன் திருவாரூர் தேவாசிரிய மண்டபத்திலிருந்த திருக்கூட்டத்தில் ஒருவராயிருந்தவர், இறைவனே தூது நடந்தார் என்பதைத் தெரிந்து கொண்டதும் ஆத்திரப்பட்டார்.

''தலைவரை அடியார்! ஏவும் காரியமா இது? இப்படிச் செய்பவன் ஒரு தொண்டனா? இம்மாதிரிச் செயலைக் காதால் கேட்பதே மகாபாவம். பெண்ணாசையால் மதிமயங்கிய ஒருவனுக்கு இறைவன் தூது போவதாம்! எப்படியிருக்கிறது! இந்தப் பாவிகள் இருக்குமிடத்தில் நாமும் இருக்கலாகாது'' என்று கலிக்காம நாயனார் தேவாசிரிய மண்டபத்தையும் திருவாரூரையும் விட்டுப் பெருமங்கலத்துக்குப் போய்விட்டார்.

இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட சுந்தரர் மிக வருந்தி ஒரு நல்ல நண்பர் கோபித்துக் கொண்டு போய்விட்டாரே என்று இறைவனிடம் முறையிட, இறைவன் இவர்களை எப்படியும் சேர்த்து வைக்க வேண்டும் என்ற கருத்துடன் ஏயர்கோன் கலிக்காம நாயனாருக்கு சூலநோய் ஏற்படச் செய்தார். இந்த நோய் உற்றதும் கலிக்காமர் இறைவனைத் தொழ, அவர், ''இந்த நோயை வன்றொண்டனால்தான் தீர்க்க முடியும்'' என்று சொல்லி மறைந்தார். உடனே கலிக்காமர், ''எம்பெருமானே! எங்கள் மூதாதையரிலிருந்து வழிவழியாக நாங்கள் நீரே எமது இறைவர் என்று கொண்டு வாழும் எமக்கு, புதிதாக வந்த ஒருவன் குணப் படுத்துவான் என்பது வேடிக்கையாயிருக்கிறது. அவன் தீர்ப்ப திலும் எனது நோய் தீராமல் நான் அவஸ்தைப்படுவதே மேல்'' என்று மறுத்தார். இருந்தபோதிலும் இறைவன் சுந்தரரிடம் போய், ''ஏயர்கோனுக்கு சூலநோய் ஏற்படச் செய்திருக்கிறேன். நீ போனால்தான் குணமாகும் என்று சொல்லி வைத்திருக்கிறேன். உடனே பெருமங்கலத்துக்குப் போய் அந்த அடியாரைப் பார்'' என்று சொல்லியருளினார்.

சுந்தரர் பெருமங்கலம் போய்த் தமது வரவை ஏயர் கோனுக்குச் சொல்லியனுப்பினார். இதைக்கேட்ட ஏயர்கோன், ''இறைவனையே தூதனுக ஏவிய இந்தப் பாவி வருவதற்குமுன் என் சூலநோயை வருத்தும் வயிற்றைக் கிழித்து நோயையும் உயிரை யும் ஒரேயடியாய்ப் போக்கிக் கொள்வேன்'' என்று எண்ணிய வராய் உடைவாளினால் வயிற்றைக் கீறினார். குடர் சரிந்துவிழ அவரும் மடிந்தார். இந்தச் சம்பவத்தையறிந்ததும் ஏயர்கோனின் மனைவி பதைபதைத்து ''இனிமேல் நான் இருந்தும் என்ன பயன்'' என்று சொல்லிக் கொண்டே தம் உயிரையும் போக்கத் துணிந்து எழுந்தபோது, சுந்தரர் வந்தார் என்று காவலாளிகள் சொன்னார் கள். உடனே அந்த அம்மையார், ''அப்படியானால் இங்கு நடந்ததை அவர் அறிய வேண்டாம். வாசலில் பூரணகும்பமும் தீபமும் வைத்து அவரை வரவேற்க முன்செல்லுங்கள்'' என்று பணித்தார். சுந்தரமூர்த்தி அங்கு எழுந்தருளியதும் ஏயர்கோன்

மனைவியார் இன்முகத்தோடும் வரவேற்று ஆசனத்தில் உட்காரச் செய்தார். சுந்தரர், ''ஏயர்கோனுக்குச் சூலைநோய் ஏற்பட்ட தென்று அறிகிறேன். அதை நீக்கி அவருடன் இருக்கவேண்டும். தாமதமாகிறதற்கு வருந்துகிறேன்'' என்றார். ஏற்கெனவே அம்மையார் சொல்லி வைத்தது போல வேலைக்காரர் ''இங்கே அப்படியான கெடுதி ஒன்றுமில்லை. அவர் தூங்கிக் கொண்டு இருக்கிறார்'' என்றார்கள். இதைக் கேட்ட சுந்தரர், ''என் மனம் கேட்கவில்லை. அவரை நான் பார்க்க வேண்டும்'' என்று சொல்ல வேறு வழியில்லாமல் வேலைக்காரர் சுந்தரரை அழைத்துக் கொண்டுபோய் ஏயர்கோன் கிடந்த நிலையைக் காண்பித்தனர்! சுந்தரர் திகைத்துப்போய், ''எனது நண்பனைப் பிரிந்து நான் இருக்க மாட்டேன். நானும் செல்கிறேன் அவரிடம்'' என்று சொல்லிக்கொண்டு அங்கு கிடந்த வாளை எடுக்கமுயன்றார். அந்தச் சமயம் இறைவன் அருளால் கலிக்காமனார் உயிர்பெற்றெழுந்து ''நண்பா! என்ன செய்யத் துணிந்தாய்?'' என்று சொல்லிக் கொண்டு சுந்தரர் கையிலிருந்து வாளைப் பற்றினார். உடனே சுந்தரரின் காலில் விழுந்தார். பின்னர் இருவரும் பழைய நட்பினை நினைந்து ஒருமித்துச் சென்று திருப்புன்கூர் இறைவனை வணங்கினர் என்று சொல்லப்படுகிறது. பரவையிடம் இறைவனைத் தூது அனுப்பிய சுந்தரருக்கு வேறு என்னதான் வெற்றிகரமாகச் செய்யமுடியாது.

* * *

இந்தச் சம்பவமெல்லாம் முடிந்து சுந்தரரும் பரவையாரும் இன்ப வெள்ளத்தில் திளைத்திருக்கும்போதுதான் சேரமான் பெருமாள் நட்புக் கிடைத்தது. இவரைப் பற்றி நாம் முன்பே கேட்டிருக்கிறோம். மதுரையிலிருந்து சென்ற பாணபட்டருக்குப் பொருள் கொடுத்தனுப்பிய கழறிற்றறிவார் என்ற அரசன் இவரே. திருநீற்றிலே அதிகம் பற்றுக் கொண்ட இவர் ஒருநாள் பட்டத்து யானை மீதமர்ந்து நகர் வலம் வரும்போது ஒரு வண்ணான் உவர்மண் பொதி சுமந்து எதிர்வந்தான். அந்த மண் மழையிலே கரைந்து வண்ணான் உடம்பிலே படிந்து காய்ந்திருந்தது, விபூதியைப் பூசியது போல் காட்சியளித்தது. இதைக் கண்ட சேரமான் இவர் ஒரு சிவனடியார் என்று எண்ணிக்கொண்டு உடனே யானையை விட்டிறங்கி வந்து வண்ணான் முன் விழுந்து நமஸ்கரித்தார். கண்டவர் யாவரும் திகைத்து நின்றனர். கலங்கிப் போன வண்ணான் ''அரசே! இது என்ன? நான் அடி வண்ணான்'' என்றான். உடனே சேரன், ''நான் அடிச்சேரன். அடியேன் திருநீற்றின் வேடத்தை எனக்கு நினைவூட்டினாய். வருந்த வேண்டாம். போய்வா'' என்று சொல்லியனுப்பினார்!

இந்தச் சேரமான் எப்பொழுதும் தான் பூசை முடித்து உணவருந்துவதற்கு முன்பு திலலை நடராஜரைத் தியானித்து அந்தக் கூத்தரின் சிலம்பொலி கேட்ட பின்னரே உணவருந்துவார். ஒருநாள் இவர் பூசை முடிக்கும்போது அந்தச் சிலம்பொலி கேட்க வில்லை. அதனால் வருந்திய சேரமான், தான் ஏதோ பிழை செய்து விட்டதாக நினைத்துக்கொண்டு இனிமேல் உயிருடன் இரேன் என்று சொல்லி உடைவாளை எடுத்தபோது சிலம்பொலி கேட்டு மகிழ்ந்தார். அந்தச் சமயத்தில் அசரீரி, ''வன்தொண்டன் இன்று நம்மன்றிலே கூத்தைக் கண்டு வணங்கி நின்றான். நின்று அவன் இன்னிசையுடன் பாடினான். அதனால் அங்கிருந்து வரத்தாமதமாகி விட்டது'' என்று சொன்னது. அதைக் கேட்ட சேரமானுக்கு உடனே திலலைக்குப் போய் நடராஜப் பெருமானை வணங்கிவிட்டு அந்த வன்றொண்டர் என்ற சுந்தரரையும் பார்க்கவேண்டும் என்று ஆசை பிறந்தது. தமது மெய்காப்பாளருக்கு, ''பெரிய யாத்திரையில் புறப்படப்போகிறோம். சகல ஏற்பாடுகளையும் செய்யுங்கள்'' என்று கட்டளையிட்டார். அரசன் யாத்திரையில் போகிறான் என்றால் சொல்லவும் வேண்டுமா? குடை கொடி ஆலவட்டம், குதிரை வீரர், காவலர்கள் என்று ஒரே அமர்க்களம். யானையின் மீது வீற்றிருந்து சேரமான் திலலை வந்து சேர்ந்தார். அங்கே இறைவன் திருநடம் கண்டு போற்றி பொன்வண்ணத் தந்தாதி என்ற ஒரு திருமுறைப் பாசுரத்தைப் பாடி அன்பளித் தார்.

பொன்வண்ணத்தந்தாதி என்பது சேரமான் பெருமாள் பாடிய அருட்பாவாகப் பதினேராம் திருமுறையில் சேர்க்கப்பட்டி ருக்கிறது. இது திலலையம்பலப் பெருமான்மீது பாடியது. இதைத் தவிர திருவாரூர் மும்மணிக் கோவை, திருக்கயிலாய ஞானவுலா என்ற இருநூல்களும் பதினேராம் திருமுறையில் சேர்க்கப் பட்டுள்ளன. பொன்வண்ணத்தந்தாதி அகத்துறைப்பாட்டு. சிவபெருமானைக் கண்டு காமுற்று அவனையடையப் பொருமையாற் பசலை நிறம் கொண்டு உடல் வேறுபட்ட தலைவி, தானும் தான் காதலிக்கும் சிவனும் ஒரே பொன்னிறமாயிருப்பதைப் பெருமை யோடு சொல்வதாக அமைந்தது இந்தப் பொன்வண்ணத்தந்தாதி என்ற நூறு பாட்டுக்கள் கொண்ட பிரபந்தம்.

''பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி
பொலிந்திலங்கும்
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் வீழ்சடை
வெள்ளிக்குன்றம்

தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மால்விடை
தன்னைக் கண்ட
எவ்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணமாகிய
ஈசனுக்கே

தில்லையிலிருந்து சீர்காழி முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு சேரமான் திருவாரூர் வந்து சேர்ந்தார். அவர் வருவதை யறிந்த திருவாரூர் மக்கள் தமது ஊருக்கு சேரமகாராஜா வருகிறார் என்ற மகிழ்ச்சியில் வீதியெல்லாம் அலங்கரித்தனர். விழாக் கொண்டாடினர். சுந்தரர் வசிக்கும் மாளிகையின் முன்னர் சேரமான் வந்து யானையிலிருந்து இறங்கியதும் சுந்தரர் எதிரே வரவும் சேரமான் குனிந்து வணங்கினர். சுந்தரரும் எதிர் வணக்கம் செய்தவுடன் பலகாலம் நெருங்கிப் பழகியவர்கள் போல் ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் கொண்டனர். ஏற்கெனவே தம்பிரான் தோழர் என்ற பெயர் சுந்தரமூர்த்திக்கு இருக்கிறது. இப்போது சேரமானுடன் கூடிய நட்பைப் பார்த்த பலர் சேரமான் தோழர் என்று அழைக்க ஆரம்பித்தனர். உடனே சுந்தரர் இவரை யழைத்துக்கொண்டு திருவாரூர் பூங்கோயிலுக்குச் சென்று, தேவாசிரிய மண்டபத்திலுள்ள அடியார்களை வணங்கி, கோயில் பிராகாரத்தை வலம்வந்து, இருவருமாக மூலட்டானத் தேவர்முன் விழுந்து நமஸ்கரித்து வணங்கினர்கள். பெரும் புலவராகிய சேரமான் இந்தச் சமயத்தில் திருவாரூர்ப் பெருமான் மீது 'திருவாரூர் மும்மணிக் கோவை' என்று நாம் முன்னரே சொல்லிய பிரபந்தத்தைப் பாடினர்.

இங்கிருந்து வழிபாடுகள் செய்த பின்னர் சுந்தரர் தமது பரவையார் மாளிகைக்கு அழைத்துச் சென்றார். விருந்தினரை உபசரிப்பதில் பரவையார் கைவந்தவர். குத்து விளக்கும் நிறை குடமும் பூமாலைகளும் அகிற் புகையும் பல பெண்கள் எடுத்துவரத் தாமும் எதிர்வந்து சேரமன்னனை வரவேற்றார். உள்ளே அழைத்துப் போய் பொற்கால் அமளிமீது பெருமானை உட்கார வைத்து, பக்கத்திலே சுந்தரர் வீற்றிருக்க, பரவையார் தமது ''கொழுநனுக்கும் தோழருக்கும்'' பலவித உபசாரங்களைச் செய்தார். சுந்தரர் தமது காதலியின் சேவையைப் புகழ்ந்து, சேரமானுக்கு விருந்தளிக்க ஏற்பாடெல்லாம் செய்யச் சொன்னர். பரவையாரும் அரசனுக்கும் அடியாருக்கும் ஏற்றவிதமாகப் பலவகைச் சமையல் செய்து இருவருக்கும் விருந்தளித்தார். பின்னர் சேரமானுடன் வந்த பரிவாரங்கள் யாவர்க்கும் விருந்தளித்தார்.

சேரமானுக்கும் சுந்தரருக்கும் பரவையார் அளித்த விருந்தைப் பற்றியும் விருந்தின்பின் செய்த உபசாரங்களைப் பற்றியும் சேக்கிழார் மிக அற்புதமாக வருணிக்கிறார். தோழிகள் பலர் உதவி கொண்டு பனிநீர், சந்தனக் கலவை, முதலிய வாசனைத் திரவியங்களை அள்ளி இறைத்தார்கள். கஸ்தூரிச் சாந்தைப் பூசினார்கள். நறும்பூக்கள் தொடுத்த மாலைகளை அணிவித்தார்கள். ஐந்துவிதமான வாசனைப் பொருள்கள் சேர்த்து வெற்றிலை மடித்துக் கொடுத்தார்கள்.

அடிக்கடி சேரமான் திருவாரூர் வந்து சுந்தரரோடு மிக நெருங்கிப் பழகினார். இருவருக்கும் உயிரும் உடலும் ஒன்றே போல் இணைபிரியாத நட்பு ஏற்பட்டது. இதைக் கண்ட பரவையாரும் அரசனை உபசரிப்பதில் மிகுந்த அக்கறை காட்டினார். ஒரு அரசனை விருந்தாளியாகக் கொண்டால் அவனுக்கு என்னென்ன வகையான விருந்து படைக்க வேண்டும், விருந்துக்குப் பின் என்னென்ன பொழுதுபோக்கு விளையாட்டுக்கள் நடத்த வேண்டும் என்ற சம்பிரதாயங்களையெல்லாம் நன்கு தெரிந்து வைத்து, அதற்கேற்றாற்போல உபசரிக்கும் திறமை பரவையாருக்குண்டு. திருவாரூரிலிருந்து சுந்தரரும் சேரமானும் புறப்பட்டுச் சில தலங்களைத் தரிசித்துக்கொண்டு மீண்டும் திருவாரூருக்கு வந்த போது பரவையார் அவர்களுக்கு விருந்துபசாரம் செய்தபின், அன்று மாலை சில பொழுதுபோக்கு விளையாட்டுகளுக்கும் ஏற்பாடு செய்தாராம். பூம்பந்து எறிதல், 'பரிச்செண்டு' என்ற குதிரை மேலிருந்து பந்தடித்து வீளையாடுதல் (இது 'போலோ' என்ற மேல் நாட்டு விளையாட்டை ஒத்தது!), சேவற்சண்டை கோட்டான் கவுதாரிச் சண்டை என்ற இப்படியான பொழுதுபோக்குக் காட்சிகளையெல்லாம் ஏற்பாடு செய்து பரவையார் சேரமானை உபசரித்தார். சேரமானும் சுந்தரரும் பல நாட்கள் ஒன்றுயிருந்து மகிழ்ந்தார்கள்.

சோமாசிமாற நாயனார் சுந்தரரின் நட்பைப் பெற விரும்பி தூதுவிளங்கிரையைக் கொண்டுவந்து பரவையாரிடம்கொடுப்பார் என்ற கதையை முன்னரே சொல்லியிருக்கிறோம். ஒருநாள் இந்தக் கிரையைப் பரவையார் திருத்தும்போது அவர் கணவன் சுந்தரரும் தோழர் சேரமானும் கூட உட்கார்ந்து கிரையைக் கிள்ளித் திருத்தினார்களாம். மூவரும் பேச்சுக் கொடுத்துக் கொண்டே இப்படிக் கிரை திருத்தும்போது, மற்றிருவரும் கவனிக்காத முறையில் பரவையார் சுந்தரர் திருத்தும் கிரையை ஒரு பாகமாக்வும், சேரமானும் தானும் திருத்துவதை வேறொரு பாகமாகவும் வைத்துவிட்டு, சமைக்கும் போது இரண்டையும் வெவ்வேறு

கறியாக, ஆனல் ஒரே பக்குவமாகச் சமைத்தார். இவ்வாறு பக்குவம் பண்ணி, கணவனும் தோழரும் சாப்பிட உட்காரக் கலத்திலே பரிமாறும்போது, சேரமான், ''இதென்ன ஒரே கறியை இரண்டு இடங்களில் பரிமாறுகிறீர்?'' என்று கேட்டார். பரவையார் புன்னகை செய்து, ''ஒன்று என் கணவர் திருத்திய கீரை, மற்றது நீங்களும் நானும் திருத்தியது. என் கணவர் தம் வாழ்க்கையில் செய்யும் லௌகீக விஷயங்கள் எல்லாவற்றையுமே இறைவனுக்காகச் செய்வதாக மதிக்கிறவர். தூதுவிளங்கீரை திருத்தும் போதும் இறைவனுக்கு அர்ச்சனை செய்வதாகப் பாவிப் பார். ஆகையால் அவர் திருத்திக் கொடுத்த கீரை இறைவனுக்குச் சாத்தியபின் கிடைத்த நிர்மாலியம். அதனுலேதான் நான் இதை இரண்டு பாகமாகப் பக்குவம் பண்ணி வைத்தேன்'' என்ருர். இந்தக் கதை பெரிய புராணத்திலில்லை. கர்ணபரம்பரையாகச் சிலர் சொல்லக் கேள்வி. இதில் உண்மையில்லையென்ருலும், அடங்கிய பெரிய தத்துவத்தின் அழகை நாம் ரசிக்கத்தான் வேண்டும்.

திருவாரூரிலே சில நாட்கழித்தபின் சேரமானும் சுந்தர மூர்த்தியும் பரவையாரிடம் சொல்லிக் கொண்டு பல தலங்களைத் தரிசிக்க யாத்திரையில் போனுர்கள். ஒருவர் அரசர். மற்றவர் அரசால் வளர்க்கப்பட்டவர். (பெரும்பாலான சுந்தரமூர்த்தி உற்சவ விக்கிரகங்களிலெல்லாம், அரசர்க்குரிய மகுடம் இருப்பதைக் காணலாம்). ஆகையால் இருவரும் பார்வைக்கும் அழகாயிருப்பார்கள். பலவித பரிவாரங்களோடு இவர்கள் இருவரும் தலம் தலமாகச் சென்றவிடமெல்லாம் வரவேற்புக்கும் உபசாரங்களுக்கும் குறைவில்லை. திருவாரூரிலிருந்து தெற்கே போய் வேதாரணியம் முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு மதுரைக்கு வந்தார்கள். மதுரையில் இவர்களிருவரும் சோமசுந்தரக் கடவுள் சந்நிதியில் வந்து வணங்கி நிற்கும்போது பாண்டிய மன்னன் இதைக் கேள்வியுற்று உடனே மாளிகையி லிருந்து புறப்பட்டு வர, அவனுடன் அவன் மகளை மணம்புரிந்த சோழ இளவரசனும் சேர்ந்து, இருமன்னருமாகச் சேரனையும் சுந்தரரையும் வரவேற்ருர்கள். சேரனும் சோழனும் பாண்டியனு மாக மூவேந்தரும் ஒன்றுகூடினுல் சொல்லவும் வேண்டுமா? அத்துடன் முனைப்பாடி அரசனிடம் வளர்ந்த செல்லப்பிள்ளை சுந்தரரும் சேர்ந்து கொண்ட அந்தக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாய் இருந்தது. மதுரை நகரே அதிசயித்தது. என்றும் காண முடியாத இந்த அற்புதக் காட்சி இறைவனின் மகத்துவமே என்று யாவரும் வாழ்த்தினர். மதுரை மாநகரம் அன்று விழாக் கொண்டாடியது.

மதுரையில் சொக்கநாதரையும் மீனாட்சியையும் வணங்கி விட்டு மூவேந்தரும் தம்பிரான் தோழரும் திருப்பரங்குன்றத்தில் போய் அங்கு வணங்கியபோது சுந்தரர் ஒரு பதிகம் பாடினார். ''கோத்திட்டையும் கோவலும்'' என்று ஆரம்பிக்கும் முதல் பாடலைப் பாடிய பின், பல தலங்களிலிருக்கும் பரமனைத் துதித்து, முடிவில் தமது பதிகத்தின் திருக்கடைக் காப்பாகிய பதினோராவது பாடலில், ''முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே மொழிந்-தாறும் ஓர் நான்கும் ஒரொன்றினையும், படியா இவை கற்று வல்ல அடியார் பரங்குன்றம் மேய பரமன் அடிக்கே, குடியாகி வானோர்க்கும் ஓர் கோவும் ஆகிக் குலவேந்தராய் விண்முழு தாள்பவரே'' என்று மூவேந்தரும் ஓரிடத்தில் சந்தித்த வரலாற் றைக் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு மதுரையின் பக்கத்திலுள்ள பல தலங்களையும் தரிசித்த பின்னர் பாண்டியனும் சோழனும் தங்க, சுந்தரரை அழைத்துக் கொண்டு சேரமான் திருவஞ்சைக்களத்துக்குத் தம் அரண்மனையில் அவரை வைத்து உபசரிக்கச் சென்றார்.

61. வேடுபறி

கோடுங்கோளூர் என்ற திருவஞ்சைக் களத்திலே சேரமான் சுந்தரமூர்த்திக்கு அளவற்ற உபசாரங்களையெல்லாம் செய்தார். பரவையார் செய்த உபசாரங்களுக்கு இரட்டிப்பு உபசாரம் செய்யவேண்டுமென்ற ஆவலாலும், அரசன் என்ற கௌரவத்தினால் தூண்டப்பெற்றும் சேரமான் ஊரையே திரண்டெழுந்து வரவேற்க ஏற்பாடு செய்துவிட்டார். பந்தர்கள், தோரணங்கள், மேளவாத்ய கோஷங்கள், யானை குதிரை முதலிய படைகளின் அணிவகுப்பு, இப்படியான சூழலில் சுந்தரர் வரவேற்கப் பெற்றார். மறையவர்கள் வாழ்த்தினர்கள். மங்கையர்கள் ஆடிப்பாடி ஆரத்தி எடுத்தார்கள். முதலிலே இருவரும் திருவஞ்சைக்களத்து அப்பர் என்ற இறைவன் கோயில் சென்று வழிபட்டு, பின் இருவரும் யானையிலேறி சேரர் மாளிகைக்கு வந்தார்கள். மாளிகையில் ஒரு சிங்காசனத்திலே சுந்தரரை இருத்தி, அவர் திருப்பாதங்களை சேரர் மனைவியர் கழுவினர்கள். சுந்தரர் உடனே தம் பாதங்களை மறைத்து, ''இது கொஞ்சமும் தகாது. வேண்டாம்'' என்று மறுத்தபோது சேரர், ''இந்த அரண்மனையில் தாங்கள் விருந்தாளி. ஆகையால், நாங்கள் செய்யும் உபசாரங்களுக்கெல்லாம் தாங்கள் இசையவே வேண்டும்'' என்று வற்புறுத்தியதும் சுந்தரர் புன்னகை புரிந்து உடன்பட்டார்.

சேரன் அரண்மனையில் சில நாள் தங்கியிருந்தார் சுந்தரர். அந்த நாட்களெல்லாம் இந்திரலோகத்திலிருப்பது போன்று சகல விதமான இன்பங்களும் அனுபவிக்க சேரன் ஏற்பாடு செய்து வைத்தான். பாடல் பாடுவோர், ஆடல் மகளிர், விநோதங்கள் காட்டும் வீரர்கள் ஆகியோரின் செயல்கள், பூப்பந்து விளையாட்டு, நீர் விளையாடல், மற்போர் விளையாட்டு, முதலிய எத்தனையோ வகையான கேளிக்கைகளையெல்லாம் ஏற்படுத்திக் கொடுத்தார் சேரமான். இப்படியிருக்கும் நாளில் பொழுது போனதே தெரியவில்லை. சேரனின் நட்பு வெள்ளத்தில் அமிழ்ந்த சுந்தரர்

ஒரு நாள் திடீரென்று திருவாரூரை நினைத்தார். ''ஐயையோ, ஆரூரானை மறந்து விட்டேனே'' என்று வருத்தப்பட்டு,

பொன்னும் மெய்ப்பொருளுந் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னை என் பிழையைப் பொறுப்பானைப
பிழையெலாம் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்றறி வொண்ணு
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற் பழனத்தணி
ஆரூரானை மறக்கலுமாமே

என்று பதிகம்பாடி, சேரனிடமிருந்து தாம் திருவாரூருக்குப் போக விடை கொடுத்தருளுமாறு வேண்டிக்கொண்டார். சேரமானுக்குத் தம் இனிய நண்பரை விட்டுப் பிரியக் கொஞ்சமும் மனமில்லை. ஆகையால், வருந்தினார். அதற்கு சுந்தரர், ''அரசே உமது நாட்டையும் மக்களையும் காத்து அரசாள வேண்டியது உமது கடமை. நானே ஆரூரனைவிட்டு நெடுநாள் பிரிந்திருக்க முடியாது. ஆகையால் நீர் இங்கேதான் இருந்து ஆட்சியை நடத்தும். எனக்கு விடைகொடுத்தருளும்'' என்றார். சேரமான் சுந்தரரைத் தடுத்து நிறுத்துவதற்கஞ்சி, ''தாங்கள் சுகமே போய் வாருங்கள். கூடிய விரைவில் பரவையாரிடம் விடைபெற்று மறுபடியும் எனது மாளிகைக்கு வந்து சில நாள் தங்கவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். சுந்தரரும் சரி என்று வாக்களித்தவுடன் சேரமான் தமது மந்திரியை அழைத்து, ''நமது பண்டாரத்திலுள்ள பொன்னும் மணியும் இழைத்த ஆபரணங்களிலும், மற்றும் பொருள்களிலும் சிலவற்றை எடுத்து ஓர் ஆளின் தலையில் சுமந்து கொண்டு வரச் சொல்லும்'' என்றார். சிறிது நேரத்தில் ஒரு வேலையாளின் தலையில் பெரிய மூட்டையொன்று வந்தது. விலையுயர்ந்த ஆபரணங்களும் மற்றும் பரிசுப்பொருள்களும் அதில் இருந்தன. இந்த வேலையாளும் மற்றும் பரிசனங்களும் புடைசூழ, சுந்தரர் சேரமானிடம் விடை பெற்றுக்கொண்டு காடும் மலையும் தாண்டி, திருமுருகன்பூண்டி என்ற தலத்துக்கு வரும் வழியில் இரவைக் கழிக்க ஒரு சோலையில் தங்கினார்.

இந்தச் சமயத்தில் பார்த்துத்தான் இறைவனும் ஒரு திருவிளையாட்டில் இறங்கினார். எப்போது பார்த்தாலும் சுந்தரர் தமக்கு வேண்டிய பொன்னையும் மணியையும் மற்றும் பொருள்களையும் தமது தோழர் தம்பிரானிடம் கேட்டு வாங்குவார். இப்போது புதிதாக ஒரு சேரமான் தோழராக வந்தது தம்பிரா

னுக்குப் பிடிக்கவில்லை. ''நான் இருக்க இவர் தைரியமாகப் போய் இன்னொருவரிடம் பரிசுப் பொருள் வாங்கி வருவதா? இவருக்கு ஒரு பாடம் படிப்பிக்கிறேன் பார்'' என்று இறைவன், தமது பூதகணங்களை ஏவி விட்டார். அந்தப் பூதங்கள் வழிப்பறி கொள்ளை செய்யும் வேடுவராக வந்து அம்பும் வில்லும் தாங்கி, ''இந்த இடத்தை விட்டு அசையாதே. கொன்று போடுவோம்'' என்று பயமுறுத்தினர்கள். சுந்தரருடன் வந்தவர்கள் தாம் கொண்டு வந்த எல்லாப் பொருள்களையும் பறிகொடுத்தனர். சேரமான் கொடுத்தனுப்பிய பரிசுப் பொருள்களையெல்லாம் வேடுவர் எடுத்துச் சென்றனர். சுந்தரருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. உடனே பக்கத்திலுள்ள திருமுருகன்பூண்டி ஈசுவரனிடம் சென்று முறையிட்டார். ''நீர் இந்தக் காட்டிலே உட்கார்ந்திருக்கிறீரே, என்ன பிரயோஜனம்? எங்கு பார்த்தாலும் திருடரும் கொள்ளைக்காரரும் வேடரும்! வழியிலே போகும் அப்பாவி மனிதரிடம் சூறையாடும் இந்தக் கொடிய வேடர் இருக்க, நீர் எதற்காக இருக்கிறீர்?'' என்று திட்ட ஆரம்பித்தார்.

வில்லைக்காட்டி வெருட்டி வேடுவர் விரவலாமை சொல்லிக்
கல்லினுல் எறிந்திட்டும் மோதியும் கூறை கொள்ளுமிடம்
முல்லைத்தாது மணம் கமழ் முருகன் பூண்டி மாநகர்வாய்
எல்லை காப்ப தொன்றில்லையாகில் நீர் எத்துக்கிங்கிருந்தீர்

எம்பிரானிரே

ஆத்திரம் கொண்ட சுந்தரர் சரமாரியாகப் பொழிந்தார். வழக்கமாக இவர் இறைவனே வேண்டுவார். ஆனால் இந்த இடத்தில் வேடுவர் வந்து வில்லைக் காட்டி வெருட்டிப் பறித்துக் கொண்டு போனதும், ''நீர் எதற்காக ஐயா இங்கே உட்கார்ந் திருக்கிறீர்? போய் உமது தொழிலாகிய பிச்சை எடுக்க வேண்டியதுதானே'' என்று கோபக்கனல் பொழியத் தொடங் கினர். உடனே திருமுருகன் பூண்டி இறைவன் மனமிரங்கி, வேடர் கவர்ந்த பொருள்களையெல்லாம் அன்றிரவில் தானே கோயில் வாசலில் கொண்டு வந்து குவித்துவிடச் செய்தார். சுந்தரரும் மகிழ்ந்து, தம்முடன் வந்தவர்களிடம் அவற்றை எடுத்துக்கொண்டு திருவாரூருக்குப் போகச் சொல்லி தாம் பக்கத்திலுள்ள அவிநாசியை நோக்கி நடந்தார்.

திருப்பூரிலிருந்து ஐந்து மைல் வடமேற்கில் இருக்கிறது பூண்டி என்ற ஸ்தலம். இதிலிருந்து அவிநாசி மேலும் மூன்று மைல் போகவேண்டும். கொங்கு நாட்டிலே வேடுவர் வசித்த காடாக ஒரு காலத்தில் இருந்திருக்கலாம். இந்தக் கோயில்

மேற்குப் பார்த்த சந்நிதி. கோபுரம் கிடையாது. உள்ளே போகப் போகப் பள்ளத்திலிறங்கி மண்டபத்தையடைய வேண்டும். மிகப் பழைய கோயில் என்ற காரணத்தாலும், இங்கு பழைய கல்வெட்டு சாசனங்களும் சிற்பங்களும் இருப்பதனாலும் அரசாங்கத்தின் ''பாதுகாக்கப்பட்ட'' சின்னமாக காவல் போட்டு வைத்திருக்கிறார்கள். நாங்கள் போன சமயத்தில் வடக்குப் பிராகாரத்தில் கைதிக் கூண்டு போல் கம்பியால் அடைக்கப்பட்ட பகுதியில் சிலர் தலைகளைத் தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். இவர்கள் மனநோயால் பாதிக்கப்பட்ட வர்களென்றும் இந்த ஸ்தலத்திலே வந்து தினமும் பக்கத்திலுள்ள பிரம தீர்த்தத்தில் முழுகி வந்தால் நோய் தீரும் என்றும் அறிந்தோம். பிராகாரத்தில் ஒருவர், கையிலும் காலிலும் சங்கிலி மாட்டப்பட்டு அங்குமிங்கும் அசைந்து நடந்தார். ஆங்கிலத்திலே சொற்பொழிவு செய்தார். தமிழிலே பாடினார். தமக்குப் பைத்தியம் என்று சொல்லித் தம் இனத்தவர்கள் இங்கே கொண்டு வந்து வைத்துவிட்டார்கள் என்று குறைபட்டார். இவ்வளவு புத்திசாலி எப்படி இங்கு வந்தார் என்று ஆச்சரியப்பட்டோம். இங்குள்ள மூலவரின் பெயர் முருகநாதர். முருகன் வழிபட்டதால் முருகன் பூண்டி என்ற பெயர் வந்ததாகச் சொல்வர். லிங்கத்தின் மீது உத்தராயனத்திலும் தக்ஷிணாயனத்திலும் சூரியனின் கதிர்கள் படுவதாக நம்புகின்றனர். சந்நிதிக்கு வலப்புறத்தில் முருகனுக்கும் ஒரு சந்நிதியுண்டு.

கோயிலுக்குள்ளே ஒரு பாறையில் இறைவன் வேடரூபத்தில் ஒரு சிலை செதுக்கப்பட்டிருக்கிறது. பக்கத்திலே சுந்தரர் பொருளைப் பறிகொடுத்ததாக ஒரு வடிவமும், இழந்த பொருளைத் திரும்பப் பெற்று மகிழ்ந்ததாக இன்னொரு வடிவமும் காணப்படு கின்றன. திருமுருகன் பூண்டியிலிருந்து அவிநாசிக்குச் செல்லும் வழியில் அரைமைல் தொலைவில் ஒரு பாறையின்மேல் விநாயகருக்கு ஒரு கோயில் கட்டி வைத்துள்ளார்கள். இந்த விநாயகருக்கு ''கூப்பிடு பிள்ளையார்'' என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். சுந்தரர் தமது நிதியையெல்லாம் பறி கொடுத்துத் தவித்தபோது, ''அதோ இருக்கிறார் ஆசாமி,' என்று காட்டிக் கொடுத்தாராம் இந்த விநாயகர்!

இந்தத் திருமுருகன் பூண்டியிருக்கும் இடம் தமிழ் நாட்டுக்கும் கருநாடகத்துக்கும் இடைப்பட்ட தேசம். படகநாடு என்று சொல்வார்கள். வேடுவர் உண்மையில் கர்நாடக தேசத்திலிருந்து தெற்கே வந்து கொள்ளைத் தொழிலில் ஈடுபட்டவர்கள் என்று சரித்திரத்தில் காணப்படுகிறது. கன்னடம், வடுகு, தெலுங்கம்

என்று மூன்று இடப் பெயர்களில் வடுகு என்பது படக நாடு, திருமுருகன் பூண்டிப் பகுதி. நீலகிரிப் பகுதியில் வாழும் படகரும் மைசூர் மாநிலத்திலிருந்து வந்தவர்களே.

திருமுருகன் பூண்டியில் ஒரு நடராஜர் சந்நிதியுண்டு. இந்த நடராஜரின் தாண்டவம் பிரம்ம தாண்டவம் என்று சொல்லப் படும். சுந்தரரின் திரவியத்தை அபகரித்த சம்பவம் ''சுந்தரர் வேடுபறி'' என்ற ஒரு திருவிழாவாக இங்கே வருடாவருடம் கொண்டாடப்படுகிறது.

திருமுருகன்பூண்டியி லிருந்து அவிநாசிக்குப் போவோம். இந்தக் கோயிலும் அரசாங்க தொல்பொருள் இலாகாவின் பாது காப்பிலிருக்கிறது. ஆனால் இப்படியான மற்றைய ''பாதுகாப்பு'' கோயில்களைப்போலல்லாமல் நித்திய காலப் பூசைகளும் திருவிழாக் களும் ஒழுங்காக நடந்து வருகின்றன. நிர்வாக அதிகாரி எங்களை அழைத்துப் போய் எல்லா இடங்களையும் காண்பித்து பல விளக்கங்களும் கூறினார்.

திருமுருகன் பூண்டியிலிருந்து சுந்தரமூர்த்தி திருப்புக் கொளியூர் என்ற அவிநாசி ஸ்தலத்துக்கு வந்தபோது ஒரு அற்புதம் நிகழ்ந்தது. அவிநாசி அக்கிரகாரத்தில் கங்காதரன் என்னும் ஓர் அந்தணருக்குப் பல காலம் பிள்ளைப் பேறில்லாமல் பின்னர் ஆண் குழந்தையொன்று பிறந்தது. அதற்கு அவிநாசிலிங்கம் என்ற பெயரிட்டு வளர்த்தார்கள். இக்குழந்தைக்கு ஐந்து வயதான போது ஒரு நாள் காலை எதிர் வீட்டுப் பிராமணச் சிறுவன் அவிநாசிலிங்கத்தை விளையாட அழைக்க, இருவரும் விளையாடிக் கொண்டு தாமரைக் குளத்திற் குளிக்கச் சென்று நீரில் விளையாடினார்கள். அப்பொழுது அந்தக் குளத்திலிருந்த முதலை யொன்று அவிநாசிலிங்கம் என்ற பையனைப் பிடித்திழுத்து, நீரினுள்ளே சென்று விட்டது. இவனுடன் விளையாடிய பையன் பயந்து ஓடிப்போய்த் தன் வீட்டில் சொல்லவும் அவன் பெற்றோர் இதைக் கேள்விப்பட்டு குய்யோ முறையோ என்று கதற ஆரம்பித்தார்கள். குளத்தில் போய்த் தேடிப்பார்த்தார்கள். நீருக்கு வெளியே ஒன்றும் தெரியவில்லை. உள்ளே இறங்கித் தேடவும் யாருக்கும் தைரியம் வரவில்லை. கடைசியாய், பறிகொடுத்த பெற்றோர், அருமையாகப் பெற்று வளர்த்தவர்கள் தாங்கமுடியாத துயரத்துக்குள்ளானார்கள்.

மேலும் மூன்று ஆண்டுகள் கழிந்தன. கங்காதர ஐயரின் புத்திரன் அவிநாசிலிங்கத்தோடு விளையாடிய பையனுக்கு வயது ஏழாகியது. அவனுக்கு அவன் பெற்றோர், உபநயனம் செய்ய ஏற்பாடாகி ஒரு நல்ல நாளில் தம் வீட்டிலேயே பெரிய அமர்க்கள

மாக விழா நடத்தினர்கள். இதையறிந்த அவிநாசிவிங்கத்தின் தாயார், எதிர்வீட்டு அம்மாள், தன் மகன் இருந்தால் அவனுக்கும் இன்று உபநயனம் நடந்திருக்குமே என்று புலம்பியழத் தொடங்கினள். அந்தச் சமயத்தில்தான் திருமுருகன் பூண்டியிலிருந்து வந்த சுந்தர மூர்த்தி நாயனர் அவிநாசிக்கோயிலுக்கு எழுந்தருளினர். அக்கிரகாரத்தில் ஒரு வீட்டிலே மங்கல ஒலியும் எதிர்வீட்டிலே அழுகைக் குரலும் கேட்பதையறிந்து, இது என்ன விபரீதம் என்று அங்குள்ளவர்களிடம் விசாரித்தார். சுந்தரரை வணங்கிய ஒருவர், ''மூன்று ஆண்டுகளுக்கு முன்னே இந்த இரண்டு வீட்டுப் பையன்களும் ஒன்றுகச் சேர்ந்து தாமரைக் குளத்தில் குளிக்கும்போது ஒரு பையனை முதலை பிடித்து விழுங்கிவிட்டது. மற்றப் பையன் தப்பிவிட்டான். அவனுக்கு இன்று இந்த வீட்டில் உபநயனம் நடக்கிறது. எதிர் வீட்டிலுள்ளவர்கள் தங்கள் பையனை நினைத்து அழுகிறார்கள்'' என்றார்.

இந்தச் செய்தியைக் கேட்ட சுந்தரர் மனமிரங்கி ஐயோ பாவம் என்று சொல்லிக்கொண்டிருந்த சமயத்தில் அழுகைக் குரல் கேட்ட வீட்டிலிருந்து முதலையுண்ட பாலனின் தாயும் தந்தையும், சுந்தரமூர்த்தி நாயனர் எழுந்தருளி வந்தார் என்று கேள்விப் பட்டவுடன் ஓடோடியும் வந்து அவர் பாதங்களில் விழுந்து வணங்கினர்கள். சுந்தரர் அவர்களை நோக்கி, ''உங்கள் பிள்ளை தான் முதலைக்குப் பலியானனை?'' என்று கேட்டார். அவர்கள் மீண்டும் வணங்கி, ''ஆம். அது நிகழ்ந்தது மூன்று ஆண்டுகளுக்கு முன்னே. போன பிள்ளை இனி வரப்போகிறதா? இருந்தும் இன்று அவன் ஞாபகம் வரவே அழுகை வந்துவிட்டது. தேவரீர் இங்கே எழுந்தருளியது எங்கள் பாக்கியம். தங்களைத் தரிசிக்கக் கிடைத்தது இறைவனின் செயலே'' என்றார்கள். சுந்தரமூர்த்தி அவர்கள் பக்தியைக் கண்டு அவர்கள் மேல் இரங்கி, ''அந்தத் தாமரைக் குளத்தை எனக்குக் காண்பியுங்கள்'' என்று சொல்லவும் அவர்கள் அழைத்துச் சென்று காண்பித்தார்கள்.

சுந்தரர் அந்தக் குளக்கரையில் நின்று இறைவனைப் பிரார்த்தித்து ஒரு பதிகம் பாடினர். ''எற்றுன் மறக்கேன்'' என்று ஆரம்பிக்கும் இந்தத் திருப்பதிகத்தில் அவிநாசியிலுள்ள அப்பனே, இந்தக் குளத்தில் குளித்த குழந்தையைத் தரச் சொல் என்ற பொருள்பட ஒரு பாட்டு பாடினர்.

உரைப்பார் உரை உகந்துள்க வல்லார் தங்கள் உச்சியாய்
அரைக்காடரவா ஆதியும் அந்தமும் ஆயினாய்
புரைக்காடு சோலைப் புக்கொளியூரவி நாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச் சொல்லு காலனையே

என்ன அதிசயம்! அந்த யமனே முதலையைத் திருப்பிக் கொண்டு வரச் செய்து, மூன்று ஆண்டுகளுக்கு முன்னே விழுங்கிய பாலனை, அந்த மூன்றாண்டு வளர்ச்சியுடன் கரையில் கொண்டு வந்து உமிழ்ந்தது முதலை. பெற்றோர்கள் இந்த அற்புதத்தைக் கண்டு மனம் பூரித்து, மகனை எடுத்து அணைத்து, யாவரும் சுந்தர மூர்த்தியின் பாதங்களில் விழுந்து வணங்கினர். ஆரூரர் மன மகிழ்ந்து, ஆசீர்வதித்ததோடு நில்லாது, அந்தப் பிள்ளைக்கு அதே நல்ல நாளில் உபநயனச் சடங்கு நடத்தி ஜாம் ஜாம் என்று ஊரே திரண்டு வந்து கொண்டாட வைத்துவிட்டுத் திருவாரூருக்குச் சென்றார்.

திருப்புக் கொளியூர் என்ற அவிநாசி ஸ்தலத்தில் கோயிலுக்குத் தென்புறத்திலே ஒரு குளம் இருக்கிறது. இதனை முதலைமடு என்று சொல்கிறார்கள். குளத்தின் பக்கத்திலே இப்போது சுந்தரருக்குத் தனியாக ஒரு சிறு கோயில் கட்டி வைத்திருக் கிறார்கள். முதலை வாய்ப்பிள்ளை என்பதைக் குறிக்க சிலையும் வைத்திருக்கிறார்கள். பங்குனி உத்திரத்தில் அவிநாசியப்பரை இந்தக் குளக்கரைக்கு எழுந்தருளச் செய்து முதலையுண்ட பாலனை மீட்டுக் கொடுக்கும் காட்சி ஒரு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அவிநாசியின் கோயில் பெயர் தேவாரங்களில் திருப்புக் கொளியூர் என்றுதான் காணப்படுகிறது. மிகவும் பழமையான கோயில். தக்ஷிண காசி யென்றும் பாராட்டப்படுகிறது. அவிநாசி நகரிலிருந்து வயற்புறத்தில் திரும்பிச் சென்றால் மொட்டைக் கோபுரம் ஒன்று எதிர்ப்படும். அதைக் கடந்தால் கோயில். கோயிலைச்சுற்றி வீதியில்லை. விழாக் காலங்களில் நகரைச் சுற்றித்தான் ஊர்வலம் வருவது வழக்கம். அம்பாளுக்குத் தனியாக ஒரு சந்நிதியிருக்கிறது. பொதுவாக எல்லாச் சிவன் கோயில்களிலும் அம்மன் சந்நிதி இறைவனின் இடது பக்கத்தி லிருக்கும். இங்கே அம்மன் வலது பக்கத்திலிருக்கிறார். வேதாரணியம், மயிலாப்பூர் முதலிய சில கோயில்களில் மாத்திரம் அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் செப்பு விக்கிரகம் வைத்திருக்கிறார்கள். அதுபோல் அவிநாசியிலும் இந்த உற்சவ விக்கிரகங்களுண்டு. மையிலாப்பூரில் போல இங்கேயும் அறுபத்து மூவர் உற்சவம் கொண்டாடுவதாகச் சொன்னார்கள். கொங்கு நாட்டுக் கோயில்களில் சந்நிதியில் துவஜஸ்தம்பம் போல உயரமான தீபஸ்தம்பங்கள் இருக்கக் கண்டோம். இது இந்தப் பிரதேசத்துக்கு ஒரு தனி அமைப்பு என்று தெரிகிறது.

சுந்தரமூர்த்தி நாயனாரின் கடைசி அற்புதம் இந்த முதலை வாய்ப்பிள்ளையை மீட்டுக் கொடுத்ததுதான். இனி அவருடைய நீண்ட யாத்திரைகளும் முடிவுக்கு வருகின்றன. ''மணக்கோலத்தோடு இந்த உலகில் விளையாடுவாய்'' என்று இறைவனே அனுமதி கொடுத்தாரல்லவா? எல்லா விளையாட்டுக்களும் ஓரளவு நிறைவேறிவிட்டன. பரவையுடன் வாழ்ந்தார்; சங்கிலியுடன் குடும்பம் நடத்தினார். பின் பரவையாரிடமே வந்தார். இதற்கிடையில் எதிர்பாராத விதமாக ஒரு நண்பர் சேரமான் பெருமாள் என்ற பெயரில் இவருக்குக் கிடைத்தார். இவர்களிருவரும் ''ஓர் உயிரும் ஓர் உடலும்'' போல நண்பர்களானார்கள் என்று சேக்கிழார் சொல்கிறார். இருவரும் நெருங்கிப் பழகியதால் சுந்தரர் தமது இறுதிக் காலத்தில் திருவாரூரிலேயும் இருக்கப் பிடிக்காமல், நேரே திருவஞ்சைக் களத்துக்கே சேரமானைக் காணப்போகிறார். பாவம், சங்கிலியாரைத் தவிக்க விட்டுச் சென்றார், இப்போது பரவையாரிடமும் சொல்லாமல் தான் புறப்பட்டு மலைநாட்டுக்குப் போகிறார். முன் வினையின் பயன் வந்து கூடுகிறது என்ற பொருளில் ''முடிவிலாத சிவபோகம் முதிர்ந்து முறுகி விளைந்தது'' என்று அழகாகச் சொல்கிறார் நமது வழிகாட்டி சேக்கிழார். ஆகையால் நாமும் திருவஞ்சைக்களம் செல்வோம் வாரீர்.

62. அஞ்சைக்கள யாத்திரை

சேக்கிழார் அடிச்சுவட்டில் வந்து கொண்டிருக்கும் நாம் நமது யாத்திரையின் முடிவைச் சமீபித்துவிட்டோம். இனி, சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூரிலிருந்து கேரளத்திலுள்ள திருவஞ்சைக் களத்துக்குப் போய் அங்கிருந்தே திருக்கயிலாயத்துக்குப் போன செய்தியை அறிய நாம் சென்னையிலிருந்து வெகுதூரத்துக்கப்பாலுள்ள கேரளக்கரைக்குப் போய்த் திரும்ப வேண்டிய ஒரு பயணம் மாத்திரமிருக்கிறது. தமிழ்நாட்டுப் பல கோயில்களையும் சுற்றிப் பார்ப்பதற்கு நாம் இதுவரை ஏற்படுத்திக் கொண்ட மோட்டார் சாரதி ராதாகிருஷ்ணனுக்கும் காரியதரிசி வேணுவுக்கும் இந்த சந்தர்ப்பத்தில் நாம் பிரியா விடை கூறவேண்டிய நிலை ஏற்படுகிறது. ராதாகிருஷ்ணனின் தெய்வ பக்தியும், இரவு பகல் பாராமல் எந்தச் சமயத்திலும் எங்கள் கட்டளைகளுக் கெல்லாம் தலை சாய்த்து முகங்கோணுமல் கார் செலுத்திய ஒத்துழைப்பும் இந்த யாத்திரையில் ஒரு மறக்க முடியாத அம்சம். ராதாகிருஷ்ணனுக்கு ஒரு கும்பிடு போட்டு அனுப்புகிறோம்.

காரியதரிசியாகவும் கணக்கப்பிள்ளையாகவும் கடமை பார்த்ததோடு மற்றும் சில்லறை எடுபிடி வேலைகளையும் உற்சாகத்தோடு செய்த வேணுவுக்கும் பிரியாவிடை கூறுகிறோம். உத்தியோக விஷயமாக அவர் வெளியூருக்குப் போக வேண்டி யிருப்பதால் எம்மோடு வர முடியவில்லை. வேணுவுக்கும் ஒரு பெரிய கும்பிடு.

நண்பர் சிட்டிக்கோ எனக்கோ மலையாளம் தெரியாது. கேரளத்துக்குப் போனால் முக்கியமாகக் கிராமப் புறங்களில் எப்படிச் சமாளிப்பது என்று ஒரு பிரச்சினை. அப்பொழுது தான் உத்தியோகத்திலிருந்து இளைப்பாறிய நண்பர் கணபதி சுப்பிரமணியம் எமது உதவிக்கு வந்தார். பேச்சுத் துணைக்கு இவர் ஒரு கதைக் களஞ்சியம். கையுதவிக்கு ஒரு சிறந்த பண்பாளர். (இந்த அருமையான நண்பரைச் சில

மாதங்களுக்கு முன் இழந்துவிட்டோம் என்பதை மிகுந்த அனுதாபத்துடன் இங்கு குறிப்பிட வேண்டியிருக்கிறது). நாங்கள் மூவரும் சென்னையிலிருந்து ரெயில் மார்க்கமாகத்தான் புறப் பட்டோம். சுந்தரமூர்த்தி நாயனாரும் சேரமான் பெருமாளும் இறைவனுடன் இரண்டறக் கலந்த நாள் ஆடி மாதம் சுவாதி நட்சத்திரம். ஆகவே அந்தக் காட்சியை நேரில் காண முடியா விட்டாலும், திருவஞ்சைக்களத்தில் நடைபெறும் விழாவின் மூலமாகவாவது கண்டு மனக்கண்ணால் தரிசிக்கத் திட்டம் போட்டு நாங்கள் புறப்பட்டது அந்த ஆடிச் சுவாதிக்கு இரண்டு நாட் களுக்கு முன்பு.

கேரளத்திலுள்ள திருச்சூருக்கு நாங்கள் போய்ச் சேர்ந்த போது பிற்பகல் இரண்டு மணி. சாதாரணமாக ரெயில்வே கால அட்டவணையின்படி காலை ஏழரை மணிக்கே சேர வேண்டிய வண்டி இடையிலே ஏற்பட்ட சில தடைகள் காரணமாக ஏழு மணி நேரம் தாமதமாகப் போய்ச் சேர்ந்தது. திருச்சூரிலிருந்து திருவஞ்சைக்களம் என்ற ஸ்தலமுள்ள கொடுங்களூர் இருபத்து நான்கு மைல். வாடகை மேட்டார் ஒன்றை மைலுக்கு ஒரு ரூபா வீதம் பேசி அதிலேறிப் பிற்பகல் மூன்று மணிக்கெல்லாம் கொடுங்களூர் போய்ச் சேர்ந்தோம். எங்கள் அதிர்ஷ்டம் அன்று கொடுங்களூர் பயணிகள் விடுதியில் வசதியான அறை ஒன்று கிடைத்தது. அங்கு உடனேயே குளித்துவிட்டு, அங்கிருந்து ஒன்றரை மைல் தூரத்திலுள்ள திருவஞ்சைக்களத்துக்கு இருபது பைசா செலவில் பஸ்ஸிலே போய்ச் சேர்ந்தோம்.

கொடுங்களூர்தான் பழைய தமிழ் இலக்கியங்களில் பேசப் படும் முசிரி என்ற துறைமுகப்பட்டினம். சேரர்கள் தங்கள் தலைநகரை இங்கே வைத்திருந்தார்கள். இப்போது கடற்கரை யிலுள்ள அழிகோடு என்ற கிராமமே முசிரியின் துறைமுகமா யிருந்ததென்று சொல்கிறார்கள். திருவஞ்சைக்களம் இந்தத் துறை முகத்திலிருந்து ஆறு மைல் தூரத்திலிருக்கிறது. இந்த ஸ்தலத்தி லுள்ள சுயம்பு லிங்கம் அரை வட்ட வடிவில், பன்னிரண்டு அங்குல அகலத்தில், நிலத்திலிருந்து நான்கு அங்குல உயரம் மாத்திரம் கொண்டதாய், ஆவுடையார் இல்லாமல் காணப்படுகிறது. திருவானைக்காவின் அப்புலிங்கம் போல இந்த லிங்கத்தின் நாற் புறமும் எப்பொழுதும் நீர் தங்கி யிருக்கும். இதைப்பற்றி ஒரு கர்ணபரம்பரைக் கதையுண்டு. ஒரு காலத்தில் நெல்வயல்களா யிருந்த ஸ்தலத்திலே உமாமகேஸ்வர லிங்கமாக இறைவன் தோன்றியபோது, இந்த லிங்கத்தையும் அடியிலுள்ள விலை மதிக்க முடியாத புதையலையும் நாகராஜனாகிய ஆதிசேடன் படம்

விரித்துக் குடை கவித்துக் காப்பாற்றி வந்ததாம். ஒரு நம்பூதிரிப் பிராமணர் அவ்வழியாக வந்தவர் தனது கையிலிருந்த பனை யோலைக் குடையில் ஆதிசேடனை எடுத்துத் தனது இல்லத்துக்குக் கொண்டு போய்விட்டாராம். திருவஞ்சைக்களத்து ஈசன் வஞ்சுலேசனே இந்த அருளைக் கொடுத்தார் என்று சொல்லப் படுகிறது. ஆதிசேடனை எடுத்துச் சென்ற நம்பூதிரி குடும்பம் இப்போது கேரளத்தில் 'பாம்பு மேக்காடு இல்லம்' என்ற குடிப் பெயருடன் வாழுகின்றது. இவர்கள் நாக வழிபாட்டினுல் மேல் நிலை யடைந்ததாக நம்பப்படுகிறது. இவர்கள் இல்லம் அல்லது மனை திருவஞ்சைக்களத்திலிருந்து ஆறு மைல் தூரத்திலிருக்கிறது. அஞ்சைக்களத்து சுயம்புலிங்கத்தின் முடியில், இடது பக்கமாக, ஒரு வெட்டுக்காயம் காணப்படும். இதற்கும் ஒரு விளக்கம் சொல்வார்கள். அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம் வேண்டித் தவம் செய்யும்போது இறைவனும் இறைவியும் கிராதன் கிராதியாகத் தோன்ற, அர்ச்சுனன் தன் வில்லால் இறைவன்மீது அடித்தபோது இந்தக் காயம் ஏற்பட்டதாம்.

கொச்சி தேவஸ்தான சபையின் அதிகாரத்திலுள்ள இந்தக் கோயிலுக்கு ஏராளமான நிலச் சொத்துக்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனல் கோயில் நிர்வாகம் அவ்வளவாக மேன்மை யடையவில்லை. முன்னுளி லிருந்த கொச்சி மன்னர்கள் இங்குள்ள மகேஸ்வரரைத் தமது பரதேவதையாகப் பாவித்து வணங்கி, மிகச் சிறப்பாகக் கவனித்து வந்தார்கள். சாதாரண வழிபாடு என்றும், விசேஷ வழிபாடு என்றும் பல பூசை முறைகள் இருந்தன. சாதாரண வழிபாட்டில் தினந்தோறும் ஆறு பறை அரிசி பொங்கி நைவேத்தியம் படைக்கப் பட்டதாம். இப்போது அஞ்சைக்களத்தப்பர் ஒரு பிடி அரிசி, பிடி பொரியோடு காலம் தள்ளுகிறார். கொச்சி ராஜ குடும்பமே இந்தக் கடவுளை மறந்து விட்டது. அவர்களில் யாரும் இப்போது இங்கு தரிசிக்க வருவதில்லை.

பழைய நாட்களில் கொச்சி ராஜாக்கள் பட்டம் பெற்று ஆட்சி பீடத்திலேறு முன் திருவஞ்சைக்களத்தப்பனை வழிபடுவது சம்பிரதாயமா யிருந்தது. இது, சேர அரசர்கள் நடைமுறையி லிருந்து வந்த ஒரு வழக்கம். சந்தனத்தால் ஒரு யானை செய்து, ஈஸ்வரன் பாதத்தில் சமர்ப்பித்து ''களபம்'' என்ற ஒரு பூசை எடுப்பார்கள். இதை மூப்புக் கிட்டி எழுந்தருளுதல் என்பார்கள். கோயிலுக்கு மூத்த முதல்வர் என்று சொல்லப்படும் ஊராளன் குடும்பத்தின் தலைவர், பூசை முடித்து அரசன் சிரசில் அட்சதை தூவி, ''மாடமஹேச வஞ்சுலேச பாலக, கங்காதர திருக்கோயில்

அதிகாரிகள்'' என்று மூன்று முறை பிரகடனம் செய்த பின்னரே கொச்சி மகாராஜா பதவி பெறுவார்.

இந்தச் சம்பிரதாயமான சடங்கைச் செய்து வந்த மூத்தத்து நம்பி என்ற குடும்பத்தாரே முன்பெல்லாம் திருவஞ்சைக்களத் தப்பருக்குப் பூசை முதலியன செய்து வந்தார்கள். பின்னர் எப்படியோ நம்பூதிரிப் பிராமணர்கள் கைக்கு வந்துவிட்டது. உற்சவ விக்கிரகங்களை எடுத்துச் செல்லும் உரிமை மாத்திரம் நம்பிகளுக்கு இருந்து வருகிறது. இவர்கள் முகமண்டபத்துக்கு மேலே செல்லமாட்டார்கள்.

இந்த ஸ்தலத்தில் நாள்தோறும் நடக்கும் பள்ளியறை விழா மிகவும் முக்கியமானது. கேரளத்தில் சிவன் கோயிலே மிகக் குறைவு. அதிலும் பள்ளியறைப் பூசையென்பது இந்தத் திருவஞ்சைக் களத்தில் மாத்திரமுண்டு. இது பழைய தமிழ் சம்பிரதாயமென்று சொல்கிறார்கள். அர்த்தசாமப் பூசை முடிந்ததும், சிவனையும் பார்வதியையும் பல்லக்கில் வைத்து ஆரோகணித்து, உட்பிராகாரத்தை மூன்று தரம் மேளவாத்தியங் களுடனும் வேதகோஷத்துடனும் வலம் வந்தவுடன் கர்ப்பகிருகத் துக்கு வடமேற்கிலுள்ள பள்ளியறையில் கொண்டு வந்து சேர்ப் பார்கள். இந்தப் பள்ளியறைக்கு எதிரிலே சக்தி பஞ்சாக்ஷி என்ற சந்நிதி இருக்கிறது. இங்கே தமது இடது மடியில் உமையை உட்கார வைத்து சிவன் பரமானந்தமாக வீற்றிருக்கிறார். சில ஆண்டுகளுக்கு முன்னர் பள்ளியறை உற்சவத்தின்போது மங்கள யாத்திரை என்ற வீதியுலாவில் தேவதாசிகள் நடனமாடி இறைவனையும் தேவியையும் அழைத்து வருவார்களாம். பெரிய கோயிலி லிருந்து சுவாமி புறப்பாடு ஆரம்பிக்கும்போது நம்பூதிரி, ''அஞ்சைக்களா, அஞ்சைக்களா'' என்று மூன்று முறை குரல் கொடுக்க சங்கு வாத்தியம் ஒலிக்கும். வஞ்சுலேசரும் பார்வதியும் பள்ளியறைக்கு எழுந்தருளுகின்றனர் என்பதை யாவருக்கும் அறிவிக்கும் சின்னம் இது. பள்ளியறையில் வாசனைப் புஷ்பங்கள், வெற்றிலை பாக்கு, குங்குமம், திராக்ஷை, வாழைப்பழம் முதலிய பொருள்கள் விசேஷ நைவேத்தியமாக வைக்கப்படும். பள்ளி யறையில் உமாமகேஸ்வர பூசை முடிந்தவுடன் திருப்பள்ளி கொள்ளும் கட்டிலில் அவர்களை இருத்தி, பள்ளியறைக் கதவுகளை மூடிவிடுவார்கள். இதன் பின்னர் எவரும் கோயிலில் நடமாடு வதோ அல்லது சப்தம் செய்வதோ தடை செய்யப்படும்.

ஏகாதச ருத்ரம், சங்காபிஷேகம், மிருத்யுஞ்சய ஆஹ்வானம் முதலிய வைபவங்கள் இந்தக் கோயிலில் விசேஷமாக நடைபெறும். இங்குள்ள மிகச் சடைத்து வளர்ந்த கொன்றை விருக்ஷம்தான்

ஸ்தல விருக்ஷம். எப்போதும் பொன்னிறமான பூக்கள் சொரிந்து கொண்டே யிருக்கும். கிழக்குச் சந்நிதியில் மாத்திரம் ராஜகோபுர முண்டு. இதனடியில் சேரமான் குதிரையிலும், சுந்தரர் யானை யிலும் திருக்கயிலாயம் போவதைக் காண்பிக்கும் இரு சிற்பங் களுள்ளன. பள்ளியறைக்குச் சமீபமாக நடராஜர் சந்நிதி யிருக்கிறது. ஒரு பழைய நடராஜவிக்கிரகம் ''திருவஞ்சிக்குளம் சபாபதி'' என்ற பெயர் பொறிக்கப்பட்டு இங்கு பிரதிஷ்டை செய்யப்பெற்றிருக்கிறது. வழிபடுவோர் ''கனகசபாபதி'' என்று சொல்வார்கள். பக்கத்திலே சந்திரசேகரும் பார்வதியும் வீற்றி ருக்கின்றனர். இந்த விக்கிரகங்கள், பக்கத்திலுள்ள சேரமான் பறம்பு என்ற இடத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. சேரமான் பறம்பு என்ற இடத்திலிருந்து தான் அந்த நாட்களில் சேரமான் என்ற பட்டத்தையுடைய சேர அரசர்கள் ஆண்டார்கள். இவர்களில் ஒருவரே சேரமான் பெருமாள் நாயனார். இவர் தில்லை நடராஜர்மீது நீங்காத பற்றுடையவர் என்பதையும், பூசையில் நடராஜர் சிலம்பொலி கேட்ட பின்னரே உணவருந்தும் வழக்க முடையவர் என்பதையும் நாம் முன்னரே சொல்லியிருக்கிறோம். தில்லை நடராஜர் தொடர்பு இங்கு அதிகமா யிருந்த காரணத்தால் திருவஞ்சைக்களத்தை கேரளத்திலுள்ளவர்கள் மேலைச் சிதம்பரம் என்று சொல்வார்கள்.

கேரளத்து மரவேலைப்பாடுகளின் சிறப்பை இங்குள்ள சில சிற்பங்களில் கண்டு ரசிக்கலாம். சப்த மாத்ருக்கள் என்ற பிரஹ்மி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராஹி, இந்திராணி, சாமுண்டி ஆகிய படிமங்களும், இருபக்கமும் வீற்றிருக்கும் வீரபத்திரர் கணபதி விக்கிரகங்களும் மிகச் சிறந்த மர விக்கிரகங்கள்.

மூலஸ்தானத்துக்குத் தெற்கில் விநாயகர் சந்நிதி யிருக்கிறது. இதற்குத் தென்புறத்தில் ஒரு மேடையிலே சேரமான் பெருமாளும் சுந்தரமூர்த்தி நாயனாரும் ஒரே பீடத்தில் வீற்றிருக்கும் சந்நிதி யிருக்கிறது. பலகாலமாகத் தேடுவாரற்றுக் கிடந்த இந்த இரு படிமங்களையும் உள்ளூர் மக்கள் சேரன் சேரத்தி என்று தவறுதலாக வணங்கி வந்தனர். சேரமானுக்கு கிரீடமிருக்கிறது. சுந்தரர் விக்கிரகத்தின் தலையில் கிரீடமில்லை. சேரமானின் துணைவியார் ஒரு நாயர் பெண்மணியென்பது உள்ளூர் மக்களின் நம்பிக்கை. எனவே இவர்கள் சுந்தரர் விக்கிரகத்தை சேரத்தி அம்மா என்று சொல்லி வணங்கி வந்தனர். சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் கொச்சி சமஸ்தானத்தின் திவானாக இருந்தபோது இந்தக் கோயிலில் தரிசனம் செய்த சமயத்தில் அவர்தான் இந்த

விக்கிரகம் சேரத்தியல்ல, சுந்தரமூர்த்தி என்ற விளக்கத்தைக் கொடுத்தார். அவரது பெரு முயற்சியாலேயே இப்போது திருவஞ்சைக்களத்தில் ஆடி சுவாதியின்போது பெரிய உற்சவம் நடைபெற ஏதுவா யிருக்கிறது. இதனைக் கோயம்புத்தூரிலுள்ள சேக்கிழார் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களே நடத்தி வருகிறார்கள்.

இந்த ஸ்தலத்திலே மாசி மாதம் நடக்கும் பிரம்மோற்சவம் மிகச் சிறப்பாயிருக்கும். கிருஷ்ணபட்ச அட்டமியில் கொடியேற்றி சிவராத்திரிக்கு மறுநாள் அமாவாசையில் தீர்த்தவாரி நடக்கும். திருவஞ்சைக்களத்தி லிருந்து நான்கு மைலுக்கப்பாலுள்ள கடலிலே தீர்த்த மெடுக்க இறைவன் செல்வார். இந்த இறைவன் கொடுங்களூரிலுள்ள பத்திரகாளி யம்மனின் தந்தை என்று கருதப்படுவார். ஆகையால் கொடுங்களூர் பகவதி விக்கிரகத்தைக் கொண்டு வந்து திருவஞ்சைக் களத்தில் பத்து நாள் உற்சவத்திலும் வைத்திருந்து தீர்த்தவாரி உற்சவம் முடிந்த பின் திருவஞ்சைக் களத்தப்பரே பகவதியைத் திருப்பியழைத்துச் செல்வது மிக அற்புதமான காட்சியா யிருக்கும்.

திருவஞ்சைக்களத்திலே கீழிடத்து வாசுதேவன் நாயர் என்ற ஆசிரியரோடு பேசிக்கொண்டிருந்த போது நாம் இதுகாறும் சொன்ன செய்திகளையெல்லாம் அழகான ஆங்கிலத்தில் அவர் விளக்கினார். சேரமான் சேரத்தி பற்றிய உண்மையைத் தெரிந்து கொள்வதற்கு முன்னுல் கோபாலகிருஷ்ண மேனன் என்ற வக்கீல் ஒருவர் சேரமான் சேரத்தி விக்கிரகங்களை வைத்து கற்பனையில் ஒரு மலையாள நாவல் எழுதியிருக்கிறார் என்று சொன்னார்.

திருவஞ்சைக்களம் கோயிலோடு சேரமான் என்ற அரசர்கள் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். சிலப்பதிகாரத்தைப் பாடிய இளங்கோ தமது ஒப்பற்ற காவியத்தைப் பாடிய சமயத்தில் சைவராகவே இருந்தார் என்றும், திருவஞ்சைக்களக் கோயிலி லேயே அவர் இருந்து காப்பியம் செய்தார் என்றும், தமது சகோதரர் சேரன் செங்குட்டுவன் ஆட்சிப்பதவியை விட்டு விலகிய சமயத்தில் இளங்கோ சமணத் துறவியாக மாறினார் என்றும் கேரளத்திலே நம்புகிறார்கள். கொடுங்களூருக்குப் பக்கத்திலுள்ள திருக்ணமதிலகம் என்ற இடத்திலே ஒரு மடத்தில் அவர் வசித்ததாக வரலாறு. இதன் சமீபத்திலேதான் குலசேகர ஆழ்வாரின் குலசேகரபுரமும் இருக்கிறது.

கொடுங்களூரி லுள்ள பகவதி கோயிலுக்கும் கண்ணகிக்கும் தொடர்பிருக்கிறதாகச் சொல்வார்கள். பகவதி சந்நிதிக்கு வலப்

பக்கத்தில் ரகசிய அறை ஒன்றிருக்கிறது. இங்குதான் கண்ணகி யின் பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டிருப்பதாக நம்புகின்றனர். கோயிலின் பின் புறத்தில் மேற்குத் திசையில் வைசூரிமாலா என்ற பெயரில் ஒரு கோயில் இருக்கிறது இது கண்ணகிதேவி என்றும், வைசூரி முதலிய தொற்று நோய்களை நீக்குபவளென்றும் நம்பி, மக்கள் இங்கு மஞ்சளை நைவேத்தியமாகப் படைத்து வழிபடுகிறார்கள்.

முன்னொரு காலத்தில் கொடுங்களூர் பகவதி கோயில் பௌத்தக் கோயிலாக மாறியிருந்த தென்றும், ஆதி சங்கரரின் முயற்சியால் சக்தி வழிபாடு கொண்டுவரப்பட்ட தென்றும் சொல்வார்கள். பௌத்தர்களுடன் சண்டையிட்டு அவர்களை ஊரை விட்டு ஓடச்செய்து பகவதி கோயிலைக் கைப்பற்றியதாக ஒரு கர்ணபரம்பரைக் கதை யுண்டு. இதை அடிப்படையாக வைத்து, காவுதீண்டல் என்ற ஒரு உற்சவமும் இங்கு நடை பெறுகிறது.

திருவஞ்சைக்களத்துக்கும் முஸ்லிம்களுக்கும் ஒரு தொடர் புண்டு. இங்குள்ள ஒரு பள்ளிவாசல்தான் இந்தியாவிலே முதன் முதல் கட்டப்பட்ட பள்ளிவாசல் என்று சொல்லப்படுகிறது. இது ஆதியில் ஒரு சிவன் கோயிலா யிருந்ததென்றும், பிறகு முஸ்லிம் பள்ளியாக மாறிற்றென்றும் சொல்லுவார்கள். இப்பொழுது இந்தக் கட்டிடம் சைவக்கோயில் முறையிலேயே கட்டப்பட்டிருப்பதைக் காணலாம். இது சேர அரசரால் இனமாகக் கொடுக்கப்பட்டதால் 'சேரமான் மஜ்லிஸ்' என்ற பெயராலேயே வழங்குகிறது. இந்தப் பள்ளியின் கிழக்குப் புறத்தில் முஸ்லிம்கள் குடியிருந்தால் அவர்கள் ஆயுள் குறையும் என்ற ஒரு நம்பிக்கை அவர்களிடையே நிலவுகிறது. அதனால் பெரும்பாலான முஸ்லிம் மக்கள் இங்கே வசிப்பதில்லை.

63. பிரியா விடை

திருஞானசம்பந்தர் தமது வாழ்நாளில் பல அற்புதங்களைச் செய்திருக்கிறார். திருநாவுக்கரசர் அப்பூதியடிகளின் பிள்ளையைப் பிழைக்க வைத்தார். சுந்தரமூர்த்தி நாயனார் தமது விளையாட்டு உலகத்தில் சுற்றித் திரிந்துவிட்டு, கடைசி நாட்களில் அவிநாசியிலே முதலையாய்ப் பிள்ளையை மீட்டுக் கொடுத்ததை மகா பெரிய அற்புதமாக ஊரெல்லாம் பேசிக்கொண்டது. இறுதியாக இவர் திருவாரூரைவிட்டு மலைநாடாகிய திருவஞ்சைக்களத்தை நோக்கிச் செல்லும்போது கொங்கு தேசத்திலும் கேரளத்திலும், போகுமிடமெல்லாம், ''முதலையுண்ட பாலனை யெழுப்பிக் கொடுத்த அற்புத மனிதர் வருகிறார்'' என்ற பேச்சே பரவியது. சேரமான் பெருமாள் காதில் இந்தச் செய்தி விழுந்ததும் அந்த நண்பனுக்கு இருக்கை கொள்ளவில்லை. அரண்மனை வேலைக்காரரை ஏவினார், படைகளை ஏவினார், வஞ்சிமா நகரையே ஆரவாரித்தெழ ஏவினார். எங்கும் முரசறைந்து பறை சாற்றி, ''தம்பிரான் தோழர் வருகிறார். அவரைத் தக்கவாறு எதிர் சென்று வரவேற்று நகர வீதிகளிலெல்லாம் பவனி வர அழைத்து வர வேண்டும்'' என்று அரச கட்டளை பிறந்தது. அவ்வளவுதான், கொங்கு நாட்டைக் கடந்து மலைநாட்டில் சுந்தரர் கால் வைத்ததுதான் தாமதம் குடை கொடி ஆலவட்டங்களோடு ஒரு பட்டாளமே காத்திருந்தது. மங்கல வாத்தியங்கள் முழங்க, அரச மரியாதைகளுடன் சுந்தரமூர்த்தி நாயனார் வஞ்சிமாநகரத்துக்கு அழைத்து வரப்பட்டார். ஒவ்வொரு ஊராகக் கடந்து செல்லும் போதும் அந்தந்த ஊர் மக்கள் தோரணங்கள் அமைத்துப் பூவும் பொரியும் சொரிந்து பனி நீர் தெளித்து ஆரத்தி எடுத்து வரவேற்றனர். இது வரவேற்பா அல்லது பிரியாவிடையா என்று எண்ணினார் சுந்தரர். நாவலூர் மன்னன் பிறந்த ஊரை மறந்தார், பரவை சங்கிலி இருவரையும் மறந்தார். சிந்தனையும் மனமும் எங்கோ வெகு தொலைவில் சென்று கொண்டிருந்தன.

வஞ்சிமாநகர் என்ற சேரமான் பெருமாளின் தலைநகர் எல்லையில் அந்தச் சேரனே பட்டத்து யானையுடனும் மந்திரி

பிரதானிகளுடனும் காத்து நின்றான். தேவேந்திரனே பூமியில் எழுந்தருளியது போன்று தமது உயிருக்குயிரான நண்பன் மந்த காசத்துடன் வருவதைக் கண்டவுடன் சேரமான் ஓடோடியும் போய்த் தழுவி ஆலிங்கனம் செய்து கொண்டான். இருவரும் ஒருவரையொருவர் அள்ளி அணைத்தனர். அரசன் என்பதை அவன் மறந்தான், அடியார் என்பதை இவர் மறந்தார். பின்னர், சேரமான் பட்டத்து யானையை அருகில் வரச் செய்து, சுந்தரர் ஏறி அம்பாரியில் வீற்றிருக்கச் செய்து, தானும் பின்னல் ஏறி உட்கார்ந்து சந்திரவட்ட வெண்குடை ஒன்றைத் தன் கையாலேயே பிடித்தான். சேரமான் பெருமாளின் சேனையும் சுந்தரரின் திருநீற்றுத் தொண்டர்களும் மற்றும் அமைச்சர்களும் பிரதானிகளும் எல்லோரும் ஜே ஜே என்று ஆர்ப்பரிக்க வெற்றி நடை நடந்தது பட்டத்து யானை.

வேத கோஷம் முழங்கியது. மங்கல வாத்தியங்கள் ஒலித்தன. நடன மங்கையர் காற்சிலம்புகள் கிண் கிணி நாதம் பெருக்கின. இந்த அழகு புருஷர்களைப் பார்த்துக் களிக்க நெருங்கிய பெண்கள் கூட்டத்தில் வளையல்கள் ஆர்ப்பரித்தன. எங்கும் கோலாகலம். எல்லோரும் களித்தனர். சேரமான் திருமாளிகை முன் பட்டத்து யானை நெருங்கியதும் பூவும் பொரியும் அறுகும் தூவி, நான் மறை யோதி, நண்பர்களை வரவேற்றனர். யானையிலிருந்து இறங்கிய இருவரும் அரண்மனையுள்ளே புகுந்ததும், சுந்தரரைத் தக்கதோர் ஆசனத்தில் உட்கார வைத்துக் கவரி வீசிப் பணிவிடை புரிய ஏற்பாடுகள் செய்தபின் அவருடன் வந்த பரிசனங்களுக்கெல்லாம் அவர்கள் உள்ளம் நிரம்புமாறு நிதி கொடுத்தனுப்பினர் சேரமான். தமது நண்பன் தம்மிடம் வந்து விட்டார் என்று பூரித்தார் அவர். மகோதை என்ற திருவஞ்சைக் களத்தின் இறைவனை வணங்கிக் கொண்டு இருவரும் சிலநாள் கழித்தனர்.

இப்படியிருக்கும்போது ஒரு நாள் சேரமான் நீராடப் போன சமயம் தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தி தனித்திருந்து சிந்தித்த போது முன்னை வினைப்பயன் வந்து உருத்தியது. திடீரென்று எழுந்தார். திருவஞ்சைக்களத்து இறைவன் கோயிலில் நுழைந்தார். ''அப்பனே, வெறுத்தேன் மனை வாழ்க்கையை. பொறுக்கேன் இனி இவ்வுலகில். ஆகையால் இறைவா, என்னை ஆண்டருள்வாய்'' என்று வேண்டினர்.

வெறுத்தேன்மனை வாழ்க்கையை விட்டொழிந்தேன்
விளங்குங்குழைக் காதுடை வேதியனே
இறுத்தாய் இலங்கைக்கிறை யாயவனை
தலைபத்தொடு தோள்பல அற்றுவிழக்

கறுத்தாய் கடல் நஞ்சமு துண்டு கண்டம்
கடுகப்பிர மன்தலை யைந்திலும் ஒன்று
அறுத்தாய் கடலங்கரைமேல் மகோதை
அணியார் பொழில் அஞ்சைக்களத் தப்பனே

இங்ஙனம் சுந்தரமூர்த்தி, இதுவரை கொண்டிருந்த பற்றுக் கோடெயெல்லாம் மறந்து, உணர்வு நிலை மாறி, உள்ளுருகி நின்று ஆலாலசுந்தரராக அன்று கயிலையில் சேவித்த காட்சியை நினைந்து, ''அண்ணலே எனை ஆண்டு கொண்டருள்'' என்று கசிந்துருகி வேண்டினர். இறைவன் இதைக் கேட்டதும் கண் திறந்தார். பக்கத்திலிருந்த உமையம்மையைப் பார்த்தார். ''தாங்கள் நினைப்பது எனக்குப் புரிகிறது. அப்படியே செய்யவும்'' என்பது போல அம்மையும் தலையசைத்தாள். உடனே பிரம தேவர் முதலியவர்களை அழைத்தார் சிவன். ''ஒன்றிய சிந்தையுடன் திருவஞ்சைக்களத்தில் நின்றுருகும் நம் ஆரூரனைப் போய் வெள்ளை யானைமீதிருத்தி இங்கு அழைத்து வருக'' என்று அருள் புரிந்தார். அரி பிரமேந்திராதி தேவர்கள் அந்த க்ஷணமே அஞ்சைக்களத்து வாயிலில் வெள்ளை யானை சகிதம் காத்திருந்தார்கள். அன்று ஆடி மாதம், சுவாதி நட்சத்திரம். இறைவனை வேண்டித் தொழுது வெளிவந்த ஆரூரரைத் தேவர்கள் தொழுது, ''கயிலையங்கிரிவாசர் கட்டளை தங்களை உடனே அழைத்து வர வேண்டுமென்பது. இதோ வெள்ளை யானை காத்திருக்கிறது'' என்றனர். சுந்தரர் மெய்மறந்து புளகாங்கிதராகி, ''இறைவா, உன்னருள் இருந்தவாறென்னே!'' என்று துதித்து யானையின் மீதமர்ந்தார். தேவதுந்துபி முழங்கியது. யானை ஆகாயத்தில் கிளம்பியது. அந்தச் சமயத்தில் சுந்தரர் கீழே பார்த்தார். சேரமான் நினைவு வந்தது. அந்த நினைவுடன் கயிலை சென்றார்.

சுந்தரமூர்த்தி இப்படித்தம்மை நிர்க்கதியாக விட்டுச் சென்றதையுணர்ந்த சேரமான், அவரது நண்பர் நினைவில் தம்மை இருத்திக் கொண்டுதான் செல்கிறார் என்பதை உள்ளுணர்வால் அறிந்து தமது பஞ்சகல்யாணிக் குதிரையை வரவழைத்து, அதன் காதில் பஞ்சாட்சரத்தை ஓதியவுடன் அந்தக் குதிரை மனோ வேகத்தில் பறந்தது. வெள்ளையானையின் மேற்செல்லும் சுந்தரரை ஒருதரம் பிரதக்ஷணம் செய்துவிட்டு அதற்கு முன்னால் சென்றது. இவ்வுலகை நீத்துக் கயிலைக்குச் செல்லும் வழியிலும் சுந்தரமூர்த்தி அற்புதமான ஒரு பதிகம் பாடினர். போகும் வழியில் நொடித்தான் மலை என்ற கயிலையை நோக்கிப் பாடிய இந்தப் பதிகத்தை வருணபகவான் மூலமாகத் திருவஞ்சைக்களத்திலே கொண்டு போய்ச் சேர்க்கச் சொன்னர்.

தானெனே முன் படைத்தான் அதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனே வந்து எதிர்கொள்ள மத்த யானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறு செய்தான் நொடித்தான் மலை உத்தமனே

சேரமான் பெருமாள் முன்னே செல்ல, பின் சென்ற சுந்தரமூர்த்தி திருக்கயிலாயத்தில் இறைவன் இருப்பிடம் சேர்ந்ததும் இருவரும் இறங்கிச் சென்று பல வாயில்களையெல்லாம் கடந்து அணுக்கன் திருவாயில் என்ற மூலஸ்தான வாயிலையடைந் தார்கள். அங்கே நின்ற காவலாளிகளுக்கு சுந்தரரைத் தெரியு மாகையால் அடையாளம் கண்டு அவரை உள்ளே அனுமதித் தார்கள். சேரமான் பெருமாளுக்கு அனுமதி கிடைக்கவில்லை. அவர் அங்கேதானே நிற்க, சுந்தரர் உள்ளே போய், சுவாமி சந்நிதானத்திலே விழுந்து நமஸ்கரித்து நின்றார். உடனே சுவாமி அவரை நோக்கி, ''சுந்தரா, வந்தாயோ?'' என்று வினவினர். அதற்கு சுந்தரமூர்த்தி, ''அடியேன் செய்த பிழையைப் பொறுத்து, பந்தத்திலிருந்தும் நீக்கித் திருவருள் தந்த பெருமையை எப்படிப் போற்றுவேன்'' என்றார். சுவாமி புன்னகை புரிந்து ஆசீர்வதித்ததும் சுந்தரர் ஒரு விண்ணப்பம் செய்தார். ''சுவாமி, தேவரீருடைய திருவடிகளையடையும் பொருட்டுச் சேரமான் பெருமாள் அணுக்கன் திருவாயிலில் காத்து நிற்கிறார்'' என்றதும், இறைவன் நந்திதேவரை அனுப்பிச் சேரமானை உள்ளே அழைத்து வரச் சொன்னார். சேரமான் பெருமாள் உள்ளே வந்ததும் இறைவன் கழல்களில் விழுந்து நமஸ்கரித்தார். உடனே சிவபெருமான், ''இங்கு நாம் அழைக்காம லிருக்க நீ எப்படி வந்தாய்?'' என்று கேட்டுப் புன்னகை செய்தார். சேரமான் அஞ்சலி செய்து, ''அடியேன் ஆரூரர் பாதங்களைத் தொழுது அவர் எழுத்தருளிய யானை முன்னே சேவித்து வர, தேவரீர் கருணை வெள்ளம் இங்கு என்னைக் கொண்டு வந்து தள்ளி விட்டது. தங்களிடம் ஒரு விண்ணப்பம்'' என்று பணிந்து நின்றார். இறைவன் மகிழ்ந்து புன்னகை செய்து, ''சரி, சொல்'' என்றார். சேரமான், ''தேவரீர் மீது உலா ஒன்று பாடினேன். அதை அங்கீகரித்தருள வேண்டும்'' என்றார். சிவபிரான் கேட்க, சேரமான் பெருமாள் தாம் பாடிய 'திருக்கயிலாய ஞான உலா' என்ற நூலை அங்குதானே அரங்கேற்றினார். பின்னர் அதனை மகாசாஸ்தா மூலமாக அனுப்பித் திருப்பிடவூர் என்ற ஸ்தலத்தில் வெளியிடுமாறு பணித்தார்.

சுந்தரமூர்த்தி நாயனார் தாம் முற்பிறவியில் பெற்றிருந்த ஆலாலசுந்தரர் பதவியில் அமர்ந்தார். சேரமான் பெருமாள் சிவகணங்களுள் ஒருவராய்ச் சேவை செய்யப் பதவி பெற்றார்.



திருவேற்காடு - பக். 314

திருவாலங்காடு - பக். 326



காளஹஸ்தி - பக். 333

திருவெண்பாக்கம் (பூண்டி) - பக். 323



திருவெண்பாக்கம் (பூண்டி) - பக். 323

திருவெண்பாக்கம் (பூண்டி) - பக். 323

கைலாசநாதர், காஞ்சி - பக். 349

திருக்குறிப்புத் தொண்டர் (தாராசுரம்) — பக். 352



சாக்கிய நாயனார் கோயில், காஞ்சி - பக். 345

சாக்கியர் – பக். 345



அமர்நீதி (நல்லூர்) - பக். 158

நாகை நீலாயதாக்ஷி கோயில் – பக். 203

வேதாரண்யம் சரஸ்வதி - பக். 211 சம்பந்தர் திருவீழி மிழலை - பக். 167

புகழ்ச்சோழர், எறிபத்தர், பக். 244

நேசர் - பக். 103



திருமுருகன் பூண்டி - பக். 368



அவிநாசி - பக் 370

திருவஞ்சைக்களம் - பக். 274

இதற்கிடையில், சுந்தரர் சாபம் நீங்கிய அதே வேளையில், பரவையும் சங்கிலியும் கமலினி அநிந்தை என்ற பழைய பிறவியில் வந்து தோன்றி மலைமகள் கோயிலில் தம் பணிகளை மேற் கொண்டனர்.

என்று மின்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்

இவ்வாறு புராணத்தை நிறைவேற்றுகிறார் சேக்கிழார். "உலகெலாம்" என்ற காப்புச் செய்யுளுடன் தொடங்கிய சேக்கிழார், அதே "உலகெலாம்" என்ற வார்த்தையுடன் தமது காப்பியத்தை முடிக்கிறார்.

திருவஞ்சைக்களம் சுந்தரரும் சேரமானும் முத்தி யடைந்த க்ஷேத்திரமாயிருந்தும் பன்னெடுங்காலமாகக் கேரள தேசம் இவ்விருவரது சிறப்பை யுணராமல் மறந்திருந்தது. கொச்சி சமஸ்தானத்தின் ஆதிக்கத்திலிருந்த இந்தத் தலம் அவர்கள் பரம்பரையினர் ஆட்சி பீட மேறும் பொழுதெல்லாம் ஆசி கொடுத்து வந்தும், கொச்சி மன்னர்கள் சிறிதும் அக்கறை காண்பிக்கவில்லை. 1935ம் ஆண்டிலே சர் ஆர். கே. சண்முகம் செட்டியார் கொச்சி சமஸ்தான திவானாக இருந்த சமயத்தில், கோவை சி. கே. சுப்பிரமணிய முதலியார் பெரு முயற்சி எடுத்து, சேக்கிழார் திருக்கூட்டம் என்ற சபையார் உதவியோடு திருவஞ்சைக்களத்தில், சுந்தரரும் சேரமானும் முத்தியடைந்த ஆடி சுவாதியில் உற்சவம் நடத்த வேண்டு மென்று கொச்சி சமஸ்தானத்துக்கு விண்ணப்பித்தனர். சண்முகம் செட்டியார் வற்புறுத்தலின் பேரில் இந்த உற்சவத்தை நடத்த மகாராஜா ஒப்புதல் கொடுத்தார். ஆனால் ஒரு நிபந்தனையும் போடப்பட்டது. ஒவ்வொரு முறையும் உற்சவம் முடிந்தவுடன் பிராயச்சித்தம் செய்ய ஆயிரம் ரூபா செலவு தர வேண்டும். இதற்கு முன்பண மாக பத்தாயிரம் ரூபா கட்டி வைத்துவிட வேண்டும். சண்முகம் செட்டியாருக்கு இந்த நிபந்தனை ஆத்திரத்தை மூட்டி விட்டது. மகாராஜாவிடம், "இந்த உற்சவம் நடத்துவதில் தங்களுக்கு இஷ்டம் உண்டா?" என்று நேரடியாகவே கேட்டார். மகாராஜா தமக்கு இஷ்டம்தான் என்று சொன்னதும், "நீங்கள் செய்யத் தவறிய ஒரு காரியத்தை மற்றொருவர் வலிய செய்து தர முன் வந்தால் அவர்களுக்கு அபராதம் விதிக்கவேண்டு மென்று சொல் வதில் என்ன நியாயமிருக்கிறது?" என்று கேட்டுவிட்டார். இதன்

பின்னரே கொச்சி மகாராஜா உத்தரவின்படி ஆண்டு தோறும் ரூபா நூறு இந்த ஆடி சுவாதி உற்சவத்துக்காகக் கொடுக்கப்பட்டு வந்து, இன்னும் அதே பிரகாரம் கேரள அரசு அத்தொகையைக் கொடுத்து வருகிறது. அந்த நாட்களில் அது போதுமானதா யிருந்தது. பின்னர், காசி மடம் என்ற திருப்பனந்தாள் மடம் ரூபா முப்பதினாயிரம் அறக்கட்டளை செய்து வைத்ததில், அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு கோயம்புத்தூர் சேக்கிழார் திருக்கூட்டத்தினர் தேவாரப் பரிசளிப்பு, ஆடிச் சுவாதி யில் மகேசுர பூசை, முதலிய பணிகளுக்கெல்லாம் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்து வருகின்றனர். இவர்கள் ஆதரவில் ஒரு சத்திர மும் வாசகசாலையும் திருவஞ்சைக்களத்தில் இயங்கி வருகின்றன.

திருவஞ்சைக்களத்தில் நாங்கள் போய்ச் சேர்ந்தது ஆடிச் சுவாதிக்கு முதல் நாள் பிற்பகல் என்று சொன்னேமல்லவா? முதலில் சுவாமி தரிசனம் செய்துகொண்டு சேக்கிழார் திருக் கூட்டத்தாரின் உற்சவ ஏற்பாடுகளைப்பற்றி விசாரித்தோம். அன்று மாலை கொடுங்களூர் பகவதி கோயிலிலிருந்து நாயன்மார் இருவரும் புறப்பாடு என்றும், திருவஞ்சைக்களத்துக்கு எழுந் தருளிய பின் மறுநாள் சுவாதியில் அபிஷேக ஆராதனைகள் என்றும் அறிந்ததும், கொடுங்களூருக்கு வந்து பகவதி கோயிலில் நடந்த வைபவத்தைக் கவனித்தோம். சுந்தரர் சேரமான் உற்சவ விக்கிரகங்களை வைத்து முதலில் அபிஷேகம் செய்தார்கள். பின்னர் நைவேத்தியம் தீபாராதனை முதலியவைகள் முடிந்ததும், சுந்தரரை வெள்ளையானை வாகனத்திலும், சேரமானை குதிரை வாகனத்திலும் வைத்து அலங்காரம் செய்து, எழுந்தருளச்செய்து, தமிழ் நாட்டிலிருந்து அழைத்து வந்த நாதஸ்வர மேளத்துடன் வீதிவலம் வந்து திருவஞ்சைக்களத்துக்கு எடுத்துச் சென்றார்கள். இங்கு நடந்த அபிஷேகம் பூசை முதலியன யாவும் சேக்கிழார் திருக்கூட்டத்தைச் சேர்ந்த ஒரு முதலியாரே நல்ல வைதிகப் பந்தாவுடன் நடத்தி வைத்ததைப் பார்த்தோம்.

மறுநாட்காலை சுவாதி நட்சத்திரத்தில் திருவஞ்சைக்களத்து மூல மூர்த்திக்கும், விநாயகர், கனகசபாபதி மூர்த்திகளுக்கும், சுந்தரர் சேரமான் நாயனார்களின் மூல விக்கிரகங்களுக்கும் அபிஷேகம், அலங்காரம், ஆராதனை முதலிய வழிபாடுகள் முறைப்படி ஒரு நம்பூதிரி பிராமணரால் செய்யப்பட்டன. புராண படனமும் மகேசுர பூசையும் தொடர்ந்து நடைபெற்றன. இந்தக் காட்சிகளையெல்லாம், நமது பிரதம கதாநாயகன் சுந்தர மூர்த்தி முத்தியடைந்த அதே க்ஷேத்திரத்தில் அதே திருநட்சத்திரத் தில் நேரில் கண்டு களிக்கக் கிடைத்த வாய்ப்பை இறைவன்

திருவருள் என்றுதான் சொல்ல வேண்டும். அஞ்சைக் களத்தப்பரை மீண்டும் கடைசியாக ஒருதரம் தரிசித்து வணங்கி விட்டு, கொடுங்களூர் வந்து உலக மாதாவாகிய பகவதியையும் வணங்கிவிட்டு, பஸ் ஏறி வரும் வழியில் குருவாயூரப்பனையும் தரிசித்து, பாலக்காட்டிலே கேரளத்தின் ஞாபகார்த்தமாக நேந்திரங்காய் வறுவலும் வாங்கிக்கொண்டு கோயம்புத்தூர் வழியாகச் சென்னை வந்து சேர்ந்தோம்.

• • •

சிவதொண்டர்களாகிய அறுபத்து மூவரைத் தேடி அவர்கள் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட சிவஸ்தலங்களையெல்லாம் தரிசிக்க சேக்கிழார் அடிச்சுவட்டில் சென்றோம். அந்தப் புனித யாத்திரை ஒரு முடிவுக்கு வந்து விட்டது.

சிவன் ஒருவனையே தமது சிந்தையில் வைத்து, அவன் திருவடி நீழலே வாழ்வின் இலட்சியம் என்றும், சிவ சின்னங்களாகிய விபூதி ருத்திராக்கமே வாழ்வை உய்விக்கும் மருந்தென்றும், அதை யணிந்த அடியார்க்கு அடியவர்களாவதே மோட்ச சாதன மென்றும் பிடிவாதமான நம்பிக்கையுடன் வாழ்ந்து, அந்த வாழ் வின் பயனாகப் பிறப்பு இறப்பற்ற பேரின்ப நிலையைப் பெற்றார்கள் நமது அறுபத்து மூவர்.

அந்த அடியார்களைத் தேடிச் சென்றோம். அவர்களை மானசீகமாகச் சந்தித்து அவர்கள் வரலாற்றையும் கர்ண பரம்பரையாக வளர்ந்த ஐதிகங்களையும், தெரிந்தவர்கள் வாயிலாகக் கேட்டு மகிழ்ந்தோம். அவர்களோடு சம்பந்தப்பட்ட புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசித்து, அவற்றின் சரித்திரம், பண்பாடு, சிற்பக் கலை முதலியன வளர்ந்த மகிமையைக் கண்டு கேட்டுப் பெருமிதமடைந்தோம்.

இப்போது நாம் அந்தத் திருத்தொண்டராகிய அறுபத்து மூவரிடமிருந்தும் விடைபெற வேண்டிய சமயம் வந்துவிட்டது. ''அடியார்க்கும் அடியேன்'' என்று பாடி மற்றைய அறுபத் திருவரையும் அறிமுகப்படுத்திய நமது பிரதம கதாநாயகன் சுந்தரமூர்த்தியிடமிருந்து விடை பெறுகிறோம். இவர்களின் சரித்திரத்தைச் சொல்லி எமக்கு வழிகாட்டி நாம் திருநாவலூரி லிருந்து திருவஞ்சைக்களம் வரை, எண்பத்தைந்து க்ஷேத்திரங் களுக்கும் சென்று தரிசிக்க வாய்ப்புத் தந்த அந்தத் ''தொண்டர் சீர் பரவுவார்'' என்ற பெயரைப் பெற்ற குன்றத்தூர் சேக்கிழார்

பெருமானிடமும் விடை பெறுகிறோம். இவர்களிடமெல்லாம் நாம் வேண்டுவதாவது:

''சிவபுண்ணியச் செல்வர்காள்! உங்கள் திருத்தொண்டின் மகிமையை உணர்ந்தோம். பக்திப் பெருக்கில் நீங்கள் செய்த செயற்கரிய செயல்களைக் கண்டு வியந்தோம். உங்கள் அன்பில், பக்தியில், தியாக சிந்தையில், வழிபாட்டில், கோடியில் ஒரு பங்காயினும் இந்தச் சேக்கிழார் அடிச்சுவட்டில் சென்ற புனித யாத்திரையின் பயனை எமக்குக் கிடைக்கப்பெறின், அதுவே நாம் செய்த பூர்வ புண்ணியத்தின் பலன் என்று திருப்திப்படுவோம்.''

தில்லைவா ழந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழா ரடிபோற்றி.

தொண்டர் சீர் பரவுவார்

சென்னை நகரத்திலிருந்து பதினைந்து மைல் தூரத்திலிள்ளது குன்றத்தூர் என்ற சிறிய ஊர். மிகப் பழைய நாளிலேயே இந்த ஊர் கல்வி கேள்வி நிறைந்த வேளாளப் பெருமக்களைக் கொண்டிருந்தது. இங்கேதான் கடந்த பன்னிரண்டாம் நூற்றாண்டிலே பிறந்து வளர்ந்தவர் சேக்கிழார். இது அவர் மரபுப் பெயர். இயற்பெயர் அவருக்கு அருள்மொழித்தேவர் என்பது. அந்தக் காலத்தில் சோழ மண்டலத்தின் அதிபதியாயிருந்த அநபாயச் சோழன் என்ற இரண்டாம் குலோத்துங்கன் சேக்கிழாரின் கல்வி அறிவு ஒழுக்கங்களைக் கேள்விப்பட்டு, அவரைத் தனது தலைநகராகிய பழையாறைக்கு வரவழைத்து, தமக்கு முதன் மந்திரியாக நியமித்து, உத்தம சோழ பல்லவர் என்ற பட்டமும் கொடுத்து வைத்திருந்தான். பழையாறைக்கு சமீபத்திலுள்ள திருநாகேஸ்வரத்து இறைவன் பேரில் ஈடுபாடு கொண்ட சேக்கிழார் பிற்காலத்தில் தமது சொந்த ஊராகிய குன்றத் தூரிலேயே திருநாகேச்சுரம் என்று ஒரு கோயிலைக் கட்டி வைத்தார்.

அந்தக் காலத்திலே வெளிவந்த தமிழ்க் காப்பியமாகிய சீவகசிந்தாமணி தமிழ் உலகில் சிறந்த வரவேற்பைப் பெற்றிருந்தது. சோழமன்னன் அநபாயனும் அந்தக் காப்பியத்தை ரசித்துப் படித்ததைக் கண்ட மந்திரி சேக்கிழார், சைவனுகிய தமது அரசர் சமண இலக்கியமான சீவகசிந்தாமணியில் ஈடுபாடு கொண்டிருப்பதில் மிகவும் கவலைகொண்டு, ''அரசே, சைவ சமயத்தவராகிய தாங்கள் வேதத்தையும் இறைவனையும் பழிக்கும் சமண இலக்கியத்தைப் படிப்பது பொருத்தமல்லவே'' என்று சொன்னார். அநபாயனுக்கு அது தெரியாததல்ல. ஆனால், புதிய மரபில் வந்த சீவகசிந்தாமணி போன்ற காப்பியம் சைவத்தை விளக்க அப்போது ஒன்றும் கிடைக்காததால், ''சமணர்கள் செய்தது போல நமது சைவர்கள் ஒன்றும் செய்யவில்லையே. அப்படியான சிவ சரிதம் ஏதாவது உண்டா?'' என்று கேட்டான். சேக்கிழார் சொன்னார், ''சிவனது பெருமையைப் பேசும் தொண்டர்களைப்பற்றி தேவார நாயன்மார்களில் ஒருவராகிய சுந்தர மூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகை என்ற பதிகத்தைப் பாடியிருப்பதைத் தாங்கள் கேள்விப்பட்டதில்லையா? அந்தப் பதிகத்தில் அறுபத்து மூன்று தனி அடியார்களைப்பற்றியும் மற்றும்

சில தொகையடியார்களைப்பற்றியும் அவர் பாடியுள்ளாரே. அதனை அறியமாட்டீர்களா?'' என்றார். அதைக் கேட்ட அரசன் அந்த வரலாற்றிலடங்கிய செய்திகளைச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்ள, சேக்கிழார், திருத்தொண்டர் திருவந்தாதியில் சொல்லப்பட்ட செய்திகளையெல்லாம் சொன்னதோடு, கர்ண பரம்பரையாகவும், தாமே அறிந்தும் வைத்திருந்த அடியார்களின் வரலாறுகளையெல்லாம் அரசனுக்கு விளக்கமாகச் சொன்னார். அருள்மொழித்தேவர் என்ற சேக்கிழார் மந்திரிப் பதவி பெற்றிருந்த வாய்ப்பில் சிவஸ்தலங்கள் எல்லாவற்றுக்கும் போய் கோயில் வரலாறு, அடியார் வரலாறு எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்து வைத்தாராகையால், சிவனடியார் வரலாற்றை பக்தி ரசம் பிறக்கத்தக்கதாக விளக்க முடிந்தது. அதனைச் செவிமடுத்த அநபாயச் சோழன், மெய்ம்மறந்து அனுபவித்து, ''இந்த அற்புத மான அடியார் சரிதங்களையெல்லாம் இலக்கிய நயம்பட ஒரு பெருங்காப்பியமாக அருளினால் தமிழ் மக்கள், சிறப்பாகச் சைவ நன்மக்கள், படித்து ரசிக்க வாய்ப்பளிக்கும். இலக்கிய விற்பன்ன ராகிய தாங்களே அதைச் செய்யவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டான். அருள்மொழித் தேவராகிய சேக்கிழார் மகிழ்ந்து அந்த அன்புக்கட்டளையை ஏற்றுக்கொண்டு பெரிய புராணம் என்ற பெருங்காப்பியத்தைப் பாடினார்.

அநபாயச் சோழனின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட சேக்கிழார் அரசனின் பொருளுதவி பெற்று, நேரே சிதம்பரத்துக்கு வந்து, கனகசபையில் எழுந்தருளியிருக்கும் நடராஜப் பெருமானை வணங்கி, தாம் ஒப்புக் கொண்ட காப்பியத்தைப் பாட அதற்கு மங்கலமான முதல் அடி எப்படி உதயமாகும் என்று சிந்தித்தபோது, இறைவனே முன் வந்து, உலகெலாம் என்ற வார்த்தையுடன் ஆரம்பிக்கச் சொன்னதாக உமாபதி சிவாசாரியார் தெரிவிக்கிறார். அதன்படியே சேக்கிழார் ''உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்'' என்று தொடங்கும் காப்புச் செய்யுள் செய்து, சிதம்பரம் பொற்சுமரை வாவிக்குப் பக்கத்திலுள்ள ஆயிரக்கால் மண்டபத்திலிருந்து, அற்புதமான தமது பெரிய புராணத்தைப் பாடி முடித்தார். இந்தப் புராணத்தில் திருத்தொண்டத் தொகை பாடிய சுந்தரமூர்த்தி யையே பாட்டுடைத் தலைவனாக வைத்தார்.

திருக்கைலாயத்திலே ஒருநாள் வியாக்கிரபாத முனிவருடைய புத்திரராகிய உபமன்ய முனிவரோடு மற்றும் பல முனிவர்கள் அமர்ந்திருந்த சமயத்தில் திடீரென அங்கு என்றுமில்லாத வகையில் ஒரு பெரிய சோதி தோன்றியது. அதைக்கண்ட முனிவர்கள் ஆச்சரியப்பட்டிருக்க, உபமன்ய முனிவர் ஆனந்த பரவசத்தராக எழுந்து நின்று அந்த சோதியைப் பார்த்து,

சிரசின்மீது கைகளை எடுத்து வணங்கினர். ''சிவபிரானையன்றி வேறு ஒன்றையும் வணங்கியறியாத தாங்கள் இந்த சோதியை வணங்கும் காரணமென்ன?'' என்று முனிவர்கள் உபமன்யரை வினவ அவர், ''பூலோகத்துக்குப் போன ஆலாலசுந்தரர் அங்கே தமது திருவிளையாடல்களை முடித்துக் கொண்டு மறுபடியும் இங்கே கைலாயத்துக்கு எழுந்தருளி வருகிறார்'' என்று சொன்னதும் முனிவர்கள் அந்த வரலாற்றைக் கேட்க, உபமன்யர் பின்வருமாறு சொன்னார்: ''ஆலாலசுந்தரர் முன்காலத்தில் இங்கே கைலாயத்தில் சிவபெருமானுக்குப் புஷ்பமாலை தொடுத்துச் சாத்துதலும், விபூதி பாத்திரம் தாங்குதலுமாகிய திருத்தொண்டு பூண்டவர். அந்தச் சமயத்தில் இங்கே உமாதேவியாருக்குத் தொண்டு செய்த சேடியர் கமலினி அநிந்தை என்ற அழகிகளை மோகித்த காரணத்தால் பூமியில் நம்பி ஆரூரன் என்ற பெயரில் பிறந்து, இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்டு, மீண்டும் இங்கு அந்தச் சுந்தரர் எழுந்தருளி வரும் காட்சிதான் இது'' என்று சொல்லி வணங்கவும் மற்றைய முனிவர்களும் வணங்கினர்கள் என்ற ஒரு பின் நோக்குக் காட்சியுடன் ஆரம்பிக்கிறது சேக்கிழாரின் பெரியபுராணக் காப்பியம். சோழரின் ராஜ பீடமாகிய திருவாரூர்ப் பெருமையைச் சொல்லி, திருநாவலூரில் சுந்தரர் பிறந்து வளர்ந்து, திருமணத்தின்போது தடுத்தாட் கொள்ளப்பட்டு, பின்னர் தேவாரம் பாடித் தல யாத்திரை செய்த வரலாற்றுடன், மற்றைய அறுபத்திரண்டு தனி அடியார் வரலாற்றையும், தொகை அடியார் பலர் வரலாற்றையும் சொல்லி, முடிவில் சுந்தரமூர்த்தி முத்தியடைந்தது வரை சேக்கிழார் தமது காப்பியத்தில் விளக்குகின்றார்.

சிதம்பரத்தில் ஆயிரக்கால் மண்டபத்திலிருந்து பெரிய புராணத்தைப் பாடி வருகையில் காப்பியம் எப்பொழுது முற்றுப் பெறும் என்று அநபாயச் சோழன் அடிக்கடி விசாரித்துக் கொண்டிருந்தான். காப்பியம் பாடி முடிந்தவுடன் சோழ மகாராஜா தாமே நேரில் சென்று தமது பட்டத்து யானையில் சேக்கிழாரையும் பெரிய புராணக் காப்பிய ஏட்டையும் அமர்த்தி, புலவர் பின்னால் தாம் உட்கார்ந்து சாமரம் வீசி ஊர்வலம் வந்தான்.

மந்திரிப் பதவி பெற்றிருந்த சேக்கிழார், பதவியைத் துறந்து, சிதம்பரத்தில்தானே வீற்றிருந்து இறைபணி செய்து வந்தார். அநபாயச் சோழன் அவருக்கு தொண்டர்சீர் பரவுவார் என்ற பட்டம் சூட்டி வாழ்த்திவிட்டு, சேக்கிழாரின் தம்பியாகிய பாலறுவாயரை குன்றத்தூரிலிந்து வரவழைத்து அமைச்சர் பதவி கொடுத்துப் பெருமைப் படுத்தினன்.

சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய
திருத்தொண்டத் தொகை

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே யென்னுத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையர் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தற் கடியேன்
ஏனாதி நாதன்றன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனன்மங்கை ஆனையற் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே

மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவாற்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதையை மழுவினு லெறிந்த
வம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே

வம்பரு வரிவண்டு மணநாற மலரு
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணு
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே

வார்கொண்ட வனமூலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கு மடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவாற்கும் அடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே

பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர் கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றும் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேனம்பி முனையடுவாற் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே

கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனும் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்

புடைசூழ்ந்த புலியதண்மேல் அரவாட வாடி
பொன்னடிக்கே மனம் வைத்த புகழ்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
மூப்போதும் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையாண் மானிக்கு நேசனுக்கும் அடியேன்
தென்னவனு யுலகாண்ட செங்கணூற் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனுர்க் கடியேன்
என்னவனும் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனும் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
ஆரூரில் அம்மானுக் கன்பரா வாரே

திருச்சிற்றம்பலம்

துணை நூல்கள்

இராமநாதபுரம் மாவட்டம் — சோமலெ

செங்கற்பட்டு மாவட்டம் — ,,

தென்னற்காடு மாவட்டம் — ,,

சேக்கிழார் — சி. கே. சுப்பிரமணிய முதலியார், சென்னை, 1954

சைவசிகாமணிகள் இருவர் — சோமசுந்தர தேசிகர், சென்னை, 1930

தமிழ் இலக்கிய வரலாறு — மு. அருணாசலம், சென்னை

திருத்தொண்டர் புராண உரை — சி. கே. சுப்பிரமணிய முதலியார், கோவை

நாயன்மார் வரலாறு — திரு. வி. க., சென்னை

நாயன்மார் கதை — இ. வா. ஜகந்நாதன், சென்னை

பெரிய புராண வசனம் — ஆறுமுக நாவலர், சென்னை

பெரிய புராண ஆராய்ச்சி — மா. இராசமாணிக்கனார், சென்னை

பெரிய புராணச் சொற்பொழிவுகள் — கழகம், சென்னை

வாருங்கள் பார்க்கலாம் — இ. வா. ஜகந்நாதன், சென்னை

பன்னிரு திருமுறை வரலாறு — வெள்ளைவாரணனார், அண்ணாமலை நகர், 1969

The Grand Epic of Saivism — Yogi Suddhananda Bharati, Madras 1970

Origin & Early History of Saivism in South India — C. V. Narayana Iyer, Madras 1936

Some Contributions of South India to Indian Culture — S. K. Ayyangar, Calcutta

The Pandyan Kingdom — K. A. Nilakanta Sastry, London 1929

The Cholas — ,, Madras 1955

The Pallavas of Kanchi — R. Gopalan, Madras 1928

Administration and Social life under the Pallavas — C. Meenakshi Madras 1938

Origin of Saivism — K. R. Subramanian, Madras 1929

Saiva Samayachariyas — K. S. Ramaswami Sastri, Madras 1927

South Indian Shrines — T. V. Jagadisa Iyar, Madras 1922

Religion and Philosophy of Tevaram — M. A. Dorai Arangaswamy, Madras 1959

Sekkilar's Periyapuranam — J. M. Nallasami Pillai 1924

A Study on the Cultural Developments of the Chola Period — S. R. Krishnamurthi 1966

பெயர் அகரவரிசை

அட்டவீரட்டம் 23
அதிசூரன் 164
அதிபத்த நாயனார் 202
அதியரைய மங்கை 39
அநபாயன் 56
அநிந்தை 17
அப்பூதியடிகள் 227
அபிராமிபட்டர் 89
அம்பர் மாகாளம் 171
அமர் நீதி நாயனார் 158
அமுதகடேஸ்வரர் 96
அயவந்தி நாதர் 192
அரநெறி 117
அரிசிற்கரைப்புத்தூர் 161
அருணசலக் கவிராயர் 71
அருள்துறை 18
அவிநாசி 370
அவிநாசி லிங்கம் 370
அழகாபுத்தூர் 161
அழிகோடு 375
அஜபா நடனம் 121
ஆக்கூர் 100
ஆச்சாபுரம் 293
ஆடிசன் பேட்டை 353
ஆண்டான் கரை 165
ஆண்டிப் பந்தல் 113
ஆதனூர் 75
ஆயிரங்காளியம்மன் 190
ஆயிரத்திலொருவர் 100
ஆவுடையார் கோயில் 7
ஆனதாண்டவபுரம் 105
ஆனந்தகுமாரசுவாமி 53
ஆனய நாயனார் 240
இசைஞானியார் 19
இடங்கழி நாயனார் 253
இயற்பகை நாயனார் 85
இரத்தின தேசிகர் 109
இளங்கோ 379
இளமையாக்கினார் 62
இளையான் குடி 259
இளையான்குடி மாற நாயனார் 261
இறையூர் 140
உமாபதி சிவாசாரியார் 56
உருத்திர பசுபதி நாயனார் 170
உன்மத்த நடனம் 181
எச்சதத்தன் 145
எயினனூர் 163
எருக்கத்தம்புலியூர் 134
எறிபத்த நாயனார் 246
ஏமப்பேறூர் 117
ஏயர்கோன் கலிக்காம நாயனார் 78, 359
ஏன நல்லூர் 163
ஏனாதிநாத நாயனார் 163
ஐயடிகள் காடவர் கோன் 346
ஓதவந்தான் குடி 295
ஓமகுளம் 64
ஓலமிட்ட விநாயகர் 222
கங்கா 120
கங்கை கொண்ட சோழபுரம் 143
கண்டியூர் 220
கண்ணப்ப நாயனார் 333
கணநாத நாயனார் 68
கணபதி சுப்பிரமணியம் 374
கணபதீச்சுரம் 199
கணம்புல்ல நாயனார் 63
கண மங்கலம் 215
கத்யகர்ணமிர்தம் 10
கபாலி கோயில் 290
கபிலக்கல் 22
கமலினி 17
கருமாரியம்மன் 315

கருவூர் ஆனிலை 245
கருவூர்ச்சித்தர் 249
கருவூர்த் தேவர் 249
கரூர் 245
கரையேறவிட்ட குப்பம் 42
கலிக்கம்ப நாயனார் 141
கலிக்காமர் 106
கலிப்பகையார் 34
கழறிற்றறிவார் 360
களப்பால் 213
களப்பிரர் 280
காஞ்சி 342
காடவர்கோன் கழற்சிங்கன் 120, 318
காரிக்கோவை 97
காரிநாயனார் 97
காரைக்கால் 185
காரைக்காலம்மையார் 125, 325
காவிரிப்பூம்பட்டினம் 84
காளிங்கராயன் 57
குங்கலியக்கலய நாயனார் 94, 149
குண்டையூர் 123
குணபரவீச்சரம் 45
குருசாமி ஓதுவார் 276
குலச்சிறை 209
கூற்றுவ நாயனார் 213
கைலாசநாதர் கோயில் 349
கொடிக்கவி 57
கொடுங்களூர் 375
கொடுக்களூர் பகவதி 379
கொடும்பாளூர் 253
கொர நாடு 103
கொல்லி மழவன் 238
கோச்செங்கட்சோழன் 241
கோட்புலி நாயனார் 126
கோப்பெருஞ்சிங்கன் 10
கோவிந்த தீக்ஷிதர் 218
கோவிந்தராஜப் பெருமாள் 54
கோனேரிக்குப்பம் 345
சங்கர சுப்பையர் 329
சங்கிலி 302
சட்டைநாதர் 67
சடையனார் 19
சண்டேசுர நாயனார் 144
சண்முகம் செட்டியார் 385
சத்திநாயனார் 206
சந்தன நங்கை 196
சந்திரசேகரேந்திர சரஸ்வதி 353
சப்தஸ்தானம் 220
சபாபதி தேசிகர் 326
சம்பந்த சரணாலயர் 57
சம்பந்தம்பிள்ளை 49
சரபோஜி 219
சாத்தமங்கை 191
சாத்தனூர் 151
சாய்க்காடு 90
சாயாவனம் 88
சிங்கடி 127
சித்தவட மடம் 30
சிதம்பரநாத முனிவர் 71
சிதம்பரம் 49
சிதம்பரேஸ்வரம் 30
சிவகாமியாண்டார் 245
சிவகேசரி முனிவர் 335
சிவநேசர் 286
சிவானந்த ஞானதேசிக சுவாமி 263
சிறப்புலி நாயனார் 101
சிறுத்தொண்ட நாயனார் 196
சீர்காழி 66
சீராளன் 196
சீனிவாச ஐயங்கார் 72
சுப்பிரமணியக் குருக்கள் 278
சுவாட்ஸ் 219
செங்காட்டங்குடி 194
செங்காட்டன் தெரு 64
செருத்துணை நாயனார் 120
சேக்கிழார் திருக்கூட்டம் 386
சேந்தமங்கலம் 8
சேய்ஞலூர் 144
சேரமான் பறம்பு 378
சேரமான் பெருமாள் 221, 282
சேரன் சேங்குட்டுவன் 379
சொர்க்க பிரதக்ஷணம் 352
சோமாசிமாற நாயனார் 172
ஞானானந்தகிரி சுவாமிகள் 25
ஞாயிறு கிழார் 302
தண்டலை 216
தண்டி 351
தண்டியடிகள் 118
தத்தன் 21
தத்துவப்பிரகாசர் 131
தபஸ்வாமி 214
தர்மசம்வர்த்தனி 226

தருமசேனர் 36
தருமபுரம் 184
தழுவக்குழைந்த நாதர் 341
தக்ஷிணாமூர்த்தி 109
தாகந்தீர்த்த ஈஸ்வரர் 140
தாடகேச்சுரம் 149
தாராசுரம் 155
திங்களூர் 230
திண்ணன் 333
திருக்கச்சூர் 298
திருக்கடவூர் 95
திருக்கணமதிலகம் 379
திருக்களஞ்சேரி 56
திருக்களந்தை 213
திருக்காளத்தி 333
திருக்குருகாவூர் 297
திருக்குவளை 125
திருக்கோலக்கா 67
திருச்சித்திர கூடம் 55
திருச்சூர் 375
திருத்தலையூர் 170
திருத்துருத்தி 355
திருத்தெளிச்சேரி 188
திருத் தொண்டீச்சரம் 8
திருநள்ளாறு 179
திருநாவலூர் 6
திருநின்றவூர் 319
திருநீலகண்டர் 60
திருநீலகண்ட யாழ்ப்பாணர் 70, 133, 173
திருநீல நக்கர் 191
திருநெல்வாயிலரத்துறை 141
திருப்பழனம் 227
திருப்பனந்தாள் 149
திருப்பாச்சிலாச்சிராமம் 238
திருப்பாதிரிப்புலியூர் 42
திருப்பிடவூர் 384
திருப்புக்கொளியூர் 370
திருப்புகலூர் 177
திருப்புலீச்சரம் 60
திருப்புன்கூர் 74
திருப்பூந்துருத்தி 222
திருப்பைஞ்ஞீலி 234
திருமங்கலம் 240
திருமண நல்லூர் 293
திருமந்திரம் 152
திருமருகல் 193
திருமலைராயன் பட்டினம் 190
திருமாளிகைத் தேவர் 153
திருமுதுகுன்றம் 136
திருமுருகன் பூண்டி 368
திருமுல்லைவாயில் 320
திருமூலநாயனார் 151
திருவஞ்சைக்களம் 375
திருவட்டத்துறை 141
திருவதிகை 39
திருவாசி 238
திருவாப்பாடி 146
திருவாமூர் 33
திருவாரூர் 115, 129
திருவாலங்காடு 326
திருவாவடுதுறை 150
திருவாஞைக்கா 243
திரு. வி. க. 6
திருவீழிமிழலை 166
திருவெண்காட்டடிகள் 89
திருவெண்ணெய் நல்லூர் 17
திருவெண்பாக்கம் 323
திருவேற்காடு 314
திருவையாறு 225
திருவொற்றியூர் 308
திருவோத்தூர் 285
தில்லை மூவாயிரவர் 50
திலகவதி 34
தின்னனார் 344
தூங்கானை மாடம் 142
தேவர் சிங்கன் 327
தேவர் மலை 255
தேனம்பாக்கம் 353
நம்பியாண்டார் நம்பி 58
நமிநந்தியடிகள் 117
நரசிங்க முனையர் 19
நல்லூர் 158
நல்லூர்ப் பெருமணம் 293
நனிபள்ளி 82
நாகபட்டினம் 202
நாகைக் காரோணம் 203
நாட்டியத்தான்குடி 126
நீடூர் 104
நீலாயதாக்ஷி 203
நெடுமாறன் 209
நேசநாயனார் 103
நொடித்தான்மலை 383
பக்தஜனேஸ்வரர் 8
பஞ்சவடி 105
பட்டினத்தார் 89, 312

பட்டீச்சரம் 156
பரமதத்தன் 185
பரவை 111
பல்லவனீச்சரம் 85
பழையாறை 157
பழையனூர் நீலி 330
பாடலிபுரம் 42
பாணபத்திரர் 283
பிச்சுக்குருக்கள் 118
பிருங்க நடனம் 211
பிள்ளைக்கறி 199
புகழ்ச்சோழர் 245
புகழ்த்துணை நாயனார் 162
புனிதவதியார் 185
பூசலார் நாயனார் 317
பூம்பாவை 286
பூம்புகார் 84
பெண்ணைகடம் 142
பெருமிழலை 255
பெருமிழலைக் குறும்பர் 256
பேரையூர் 255
பொய்யடிமையில்லாத புலவர் 282
பொன்வண்ணத்தந்தாதி 361
போதி மங்கை 188
மகாலிங்கக் குருக்கள் 295
மகேந்திரவர்மன் 45
மங்கையர்க்கரசி 209
மணம் வந்த புத்தூர் 12
மத்தியானப் பறையர் 174
மதங்கசூளாமணி 70
மதுரை 275
மயிலாப்பூர் 288
மருள் நீக்கியார் 34
மறைஞான சம்பந்தர் 56
மாறவிஜயதூங்க வர்மன் 204
மாறன்பாடி 140
மானக்கஞ்சாற நாயனார் 105
முசுகுந்த சகஸ்ரநாமம் 116
முத்திநாதன் 20
முருகநாதர் 369
முருகநாயனார் 175
மூனையாடுவார் நாயனார் 104
மூர்க்கநாயனார் 313
மூர்த்தி நாயனார் 279
மெய்ப்பொருள் நாயனார் 20
மேலா நல்லூர் 75
யாழ்மூரி 185
ரங்கபதாகை 120
ராமகிருஷ்ணபிள்ளை 6
ராமாமிர்தக் குருக்கள் 122
ராஜமாணிக்கம்பிள்ளை 205
ராஜ ராஜப் பெரும்பள்ளி 204
ராஜு 6
ராஜேந்திரப் பட்டினம் 134
லலிதாலயன் 351
வண்டாம்பாலை 114
வரிஞ்சையூர் 206
வழக்குவென்ற திருவம்பலம் 18
வனப்பகை 127
வாசுதேவன் நாயர் 379
வாதாபி 199
வாயிலார் நாயனார் 289
விசாரசருமர் 145
விருத்தாசலம் 135
விறன் மிண்டர் 112
வேதாரணியம் 210
வேளாங்கன்னி 207
வைத்தீஸ்வரன் கோயில் 72
ஜயசந்திரன் 195
ஜெயச்சந்திரன் 277